சுவடிப் பதிப்புகளில் உரைவேறுபாடுகள்

தொகுதி
2

பதிப்பாசிரியர்

முனைவர் கோ. விசயராகவன்

முனைவர் தி. மகாலட்சுமி

T.17733

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள்

(தொகுதி-2)

பதிப்பாசிரியர்

முனைவர் கோ.விசயராகவன்

முனைவர் தி.மகாலட்சுமி

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

INTERNATIONAL INSTITUTE OF TAMIL STUDIES

இரண்டாம் முதன்மைச் சாலை

மையத் தொழில்நுட்பப் பயிலக வளாகம்

தரமணி, சென்னை – 600 113

நூல் விவரக் குறிப்பு

நூல் தலைப்பு	:	சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள்
பதிப்பாசிரியர்	:	முனைவர் கோ. விசயராகவன் இயக்குநர் முனைவர் தி. மகாலட்சுமி ஆய்வுஅலுவலர்
வெளியீட்டாளரும் பதிப்பு உரிமையும்	:	உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் இரண்டாம் முதன்மைச் சாலை தரமணி, சென்னை-600 113 தொலை பேசி எண் 044 - 22542992
வெளியீட்டு எண்	:	750
மொழி	:	தமிழ்
பதிப்பு	:	முதற் பதிப்பு
பதிப்பு ஆண்டு	:	2012
பயன்படுத்திய தாள்	:	18.6 கிகி டிஎன்.பி.எல் வெள்ளை மேப்லித்தோ
நூலின் அளவு	:	1/8 டம்மி
எழுத்தின் அளவு	:	10 அளவு
பக்க எண்ணிக்கை	:	viii + 304
அச்சுப்படிகளின் எண்ணிக்கை	:	1200
விலை	:	ரூ. 140/- (ரூபாய் நூற்று நாற்பது மட்டும்)
அச்சகம்	:	லட்சுமி ஏஜென்சிஸ் 23/11, பெருமாள் முதலி தெரு, இராயப்பேட்டை சென்னை-600 014
பாடம்	:	பதிப்பு உரைவேறுபாடுகள்

முனைவர் கோ. விசயராகவன் எம்.ஏ., எம்.ஃபில், பி.எட்., பிஎச்.டி.
இயக்குநர்
உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்
சென்னை 600 113

அணிந்துரை

அண்மைக்காலத் தமிழாய்வுகள் அனைத்தும் செம்மொழித் தமிழ்ப் படைப்புகளை மையப்படுத்தியே அமைந்துவருகின்றன. தமிழிலக்கியப் பரப்பில் பழந்தமிழ்ப் படைப்புகளை நன்கு ஆராய்வதற்குத் தொடர்புடைய வேறு நூல்களையும் ஆய்வுகளையும் பயில வேண்டிய தேவை உள்ளது. அவ்வாறு ஆய்வில் ஈடுபடும் தமிழ்த்துறை மாணவர்களும் ஏனைய ஆய்வாளர்களும் பயன்பெறும் பொருட்டு, **சுவடிப்பதிப்புகளில் உரைவேறுபாடுகள்** என்னும் இந்நூல் இரு தொகுதிகளாக வெளிவந்துள்ளது. இத்தொகுப்பு நூல்,

1. தொல்காப்பிய ஆய்வுகள்
2. சங்க இலக்கிய ஆய்வுகள்
3. காப்பிய இலக்கிய ஆய்வுகள்
4. பக்தி இலக்கிய ஆய்வுகள்
5. சிற்றிலக்கிய ஆய்வுகள்
6. மருத்துவ, சோதிட, ஆவண ஆய்வுகள்

எனும் பகுப்புகளைக் கொண்டிலங்குவதன் மூலம் தமிழிலக்கிய வரலாற்றினை உள்ளடக்கியதாக அமைந்துள்ளமை பாராட்டுக்குரியது. மேலும், இத்தமிழிலக்கியப் பரப்பு அனைத்தையும் உள்ளடக்கிய ஓலைச்சுவடிக் கட்டுரை ஆய்வுகளைக் கொண்டு திட்டமிட்டுள்ளமை சிறப்பானதாகும்.

மிகவும் குறுகிய காலத்தில் திட்டமிடப்பட்டு, கட்டுரைகள் பெறப்பட்டு, நடத்தப்பெற்றுள்ள இப்பன்னாட்டு ஓலைச்சுவடிகள் பயிலரங்கமும் அதன் இரு தொகுப்பு நூல்களும் எதிர்கால ஆய்வாளர்களுக்குப் பயனளிக்கும்.

இந்நிறுவன மேனாள் இயக்குநர் பேராசிரியர் முனைவர் ச.வே. சுப்பிரமணியன் அவர்கள் தொடக்கமாக, தமிழகப் பல்கலைக்கழகத் தமிழ்ப் பேராசிரியர்கள், பிற மாநிலத் தமிழறிஞர்கள், பன்னாட்டுத் தமிழ் வல்லுநர்கள் மற்றும் இளந்தலைமுறைத் தமிழாய்வாளர்கள் பலரும் பங்களித்துள்ள இப்பன்னாட்டுக் கருத்தரங்கம் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் 2013 மார்ச்சு 6,7 ஆகிய நாள்களில் சிறப்புற நடந்தேறியமை தமிழுலகுக்கு வளம் சேர்ப்பதாகக் கருதப்படுகிறது.

இதுகாறும் தெரியவந்துள்ள ஓலைச்சுவடிகளுக்கு மேலாக, இடம்பெயர்ந்த தமிழர்களிடத்தும் தமிழ் ஓலைச்சுவடிகள் உள்ளன என்பதையும் அவற்றுள் தமிழாய்வுகள் நடந்துவருகின்றன என்பதையும் இந்நூல் மூலம் அறிய வருகின்றமை மேலும் தமிழுக்கு வளம் சேர்ப்பதாக அமைகின்றது.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் தமிழிலக்கியம் மற்றும் சுவடிப்புலத்தின் சார்பில் நடத்தப் பெற்ற இக்கருத்தரங்கிற்கும் வெளியிடப்பெற்றுள்ள இத்தொகுப்பு நூலுக்கும் தம் முழுஉழைப்பை நல்கிய இப்புலத்தின் ஆய்வு அலுவலர் பேராசிரியை முனைவர் தி. மகாலட்சுமி அவர்கள் பாராட்டுக்குரியவர். துணையாய் நின்ற அனைத்து ஆய்வாளர்களையும் நிறுவனக் கல்விப் பணியாளர்களையும் நிருவாகப் பணியாளர்களையும் பாராட்டுகிறேன்.

தமிழ், தமிழர், தமிழ்நாடு உயர்வுதனை நாளும் சிந்தித்து அல்லும் பகலும் உழைத்துவரும் உலகத் தமிழினத் தலைவி **மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் புரட்சித் தலைவி அம்மா** அவர்களுக்கு உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தின் சார்பில் நன்றிகளைப் பதிவு செய்கின்றேன்.

இந்நிறுவன வளர்ச்சிக்கு ஆக்கமும் ஊக்கமும் அளித்து வருவதோடு தம் தனிப்பட்ட அக்கறையைக் காட்டிவரும் **மாண்புமிகு பள்ளிக்கல்வி, விளையாட்டு(ம) இளைஞர் நலத்துறை அமைச்சர் முனைவர் வைகைச்செல்வன்** அவர்களுக்கு எமது இதயங்கனிந்த நன்றி.

நிறுவனச் செயல்பாட்டுக்கு உறுதுணையாக இருந்துவரும் தமிழக அரசின் **தமிழ் வளர்ச்சி மற்றும் செய்தித் துறைச் செயலாளர் முனைவர் மூ.இராசாராம் இ.ஆ.ப.** அவர்களுக்கும் எமது மனமுவந்த நன்றி.

இந்நூல் வெளியீடு தொடர்பான அனைத்து ஏற்பாடுகளையும் செய்த நிறுவனப் பணியாளர்கள் மற்றும் ஒளிக்கோர்வை செய்த இளநிலை உதவியாளர் மற்றும் தட்டச்சர் திருமதி பா. கௌசல்யா, திருமதி எ.ம.லட்சுமி ஆயியோருக்கும், தட்டச்சர் செல்வி ல. தீபிகா ஆகியோருக்கு எம் பாராட்டுகள். இந்நூலை அழகுற அச்சிட்டுத் தந்த இலட்சுமி ஏஜென்சிஸ் அச்சகத்தாருக்கு எம் பாராட்டுகள்.

இயக்குநர்

பதிப்புரை

தமிழ் இலக்கிய, இலக்கண, மருத்துவ, சோதிடப் பனுவல்களைப் பதிப்பித்தல் என்பது தமிழ்ச் சமூகத்தின் அறிவுத் திரட்சியை ஆவணப்படுத்துதலாகும். 'பதிப்பித்தல்' என்னும் தொழிற்பாட்டை நவீனத்துவத்தின் ஒரு கூறாகப் புரிந்துகொள்ள இயலும்.

இத்தகைய பதிப்பு முறை, பதிப்பு நுட்பம், பாடவேறுபாடு, இடைச்செருகல், உரையாசிரியர் வரலாறு, உரை நுட்பம் இவையாவும் இருபதாம் நூற்றாண்டுத் தமிழ் இலக்கிய ஆய்வுப் போக்கில் குறிப்பிடத்தக்க பொருண்மையாக அமைந்தன. இந்த நேரிய வரலாற்றில் அடுத்தக்கட்ட ஆய்வுக் கண்ணியாக அமைவது ஏற்கெனவே பதிப்பிக்கப்பட்ட பதிப்புகளை மறு ஆய்வு செய்தலாகும்.

இதனை நோக்கிய முயற்சியாகவே இக்கருத்தரங்கம் அமைகின்றது. இதிலமைந்துள்ள கட்டுரைகள் சுவடிகள்-பதிப்புகளோடு வெவ்வேறு கோணங்களில் தொடர்பு கொண்டவை என்பதைப் புலப்படுத்துகின்றன. பதிப்பிக்கப்பட்ட இலக்கிய, இலக்கண, மருத்துவ, சோதிட நூல்களின் சரியான பாட ஏற்பு குறித்த விவாதத்தை இக்கட்டுரைகள் முன்வைக்கின்றன.

சங்ககாலம் தொட்டு ஓலைகளிலும், தாள்களிலும் வந்துள்ள இலக்கண இலக்கியப் பதிப்புகளைத் தொகுத்துச் செம்மைப்படுத்தி சான்றோர் உரை கண்டுள்ளனர். அவற்றைக் கணிக்கும் வகையில் நுட்பமான மதிப்பீடுகளைக் கொண்டு இந்நூல் தொகுப்பு அமைகிறது. இதில் பல அறிஞர் உரைவேறுபாடுகளைக் கண்டறிந்து செம்மையுற, பிழைகள், உரைவேறுபாடுகள், இடைச்செறுகல்கள் போன்றவற்றை நுட்பத்துடன் வெளிப்படுத்தியுள்ள கட்டுரைகள் இடம்பெற்றுள்ளன. இவை செம்பதிப்பு கொணரும், சிந்தனை மேலோங்கி இருக்கும் இந்தக் காலத்திற்கு உதவியாக இருக்கும்.

மூலநூல் ஆசிரியர்களின் மூலபாடச் சொற்களைக் காட்டிலும் பதிப்பாசிரியர்கள் மற்றும் உரையாசிரியர்கள் தந்துள்ள பாடவேறுபாடு களிலுள்ள சொற்களும் உண்மைப்பாடமாக இருக்க வாய்ப்புண்டு. அதுமட்டுமல்ல இவற்றுக்கான வேறு புதிய மூலபாடச் சொற்களையும் வல்லுநர்குழு அமைத்துக் கண்டறிய வாய்ப்புள்ளது. இது போன்ற சிந்தனையைத் தூண்டும் கட்டுரைகள் பல இந்நூலில் அமைந்துள்ளன.

முதல் தொகுதியில் 29 கட்டுரைகளும், இரண்டாம் தொகுதியில் 35 கட்டுரைகளும் அமைந்துள்ளன. இவற்றைச் சிங்கப்பூர், மலேசியா, தில்லி, கேரளா, புதுச்சேரி மற்றும் தமிழகத்தின் பல்வேறு பல்கலைக் கழகத் தமிழ் அறிஞர்கள் தந்துள்ளனர். இந்நூல் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குப் பெரிதும் பயன்படக்கூடிய நூல் தொகுதி எனலாம்.

ஐரோப்பிய நாடுகளில் தொல் இலக்கியப் பாடத்தை அறுதி செய்யும் பயில்வு முறையாகவே மூலபாடத் திறனாய்வை (Textual Criticism) உருவாக்கியுள்ளனர். இதனடிப்படையில் சமய நூல்களையும் (Theology Texts), பழம் இலக்கியப் பனுவல்களையும், புதிய பொருள் கோடலுக்கு (Hermenautious) உட்படுத்தி உரைகாண்கின்றனர். இவ்வகையில் தமிழில் வரப் பெற்றுள்ள பதிப்புகள் அனைத்தும் பாடவேறுபாட்டு நோக்கிலும், உரைவேற்றுமை நோக்கிலும், மூலபாடத் திறனாய்வு நோக்கிலும், வரலாற்றுச் சமூகவியல் தளத்தில் இருந்து ஆராயப்பட வேண்டும். இந்த ஆராய்வுகள் நூலாக்கம் செய்யப்படவும் வேண்டும். இதனை முன்வைத்து உருப்பெறும் விவாதங்கள் ஒவ்வொரு நூற்கும் செம்பதிப்பு ஒன்றை உருவாக்கிடத் துணைபுரியும்.

இந்நூலில் அமைந்துள்ள கட்டுரைகள் தொல்காப்பியம் தொடங்கி மருத்துவ, சோதிட, மந்திர நூல்கள் எனப் பல்வேறு பொருண்மை சார்ந்தன. தமிழாய்வுப் பரப்பில் தொடர்ந்த ஆய்வுப் பொருளாக 'பதிப்பும்' 'சுவடியும்' இருந்து வருகின்றது. இதனை ஒட்டியே மார்ச்சு 6, 7ஆகிய நாட்களில் நடைப்பெற்ற சுவடியியல் பன்னாட்டுக் கருத்தரங்கம் நடத்தப்பெற்றது. இது தொடர்ந்த பல நல்ல ஆய்வுகளுக்கு நம்மை இட்டுச் செல்லும் என்று நம்புகிறேன்.

இந்நூல் ஆக்கம் பெறுவதற்கு உரிய நேரத்தில் கட்டுரைகளை அனுப்பிய அறிஞர் பெருமக்களுக்கும், நூல் தொடர்பான பணிகளுக்கு ஒத்துழைப்பு நல்கிய முனைவர் ஆ. தசரதன் அவர்களுக்கும், உற்றுழி உதவிய ஆய்வு மாணவர்களுக்கும் என் அன்பான நன்றி.

தி. மகாலட்சுமி

7

பொருளடக்கம்

பக்கம்

1. தலபுராணப் பதிப்புகள்
முதுமுனைவர் மா.சா. அறிவுடைநம்பி 1

2. திருவாசகச் சிவபுராணப் பாடல்களில் சுவடிநோக்கு
முனைவர் ஆ. சிவபெருமான் 16

3. திருவாசக உரைவேறுபாடுகள்
முனைவர் க. முருகேசன் 21

4. திருமந்திரம் எட்டாம் தந்திரம் பாட, உரைவேறுபாடுகள், இரு உரை ஒப்பாய்வு
புலவர் பூவை.சு. செயராமன் 28

5. பெரியபுராணமும் பதிப்பும்
முனைவர் சி. வீரமணி 38

6. திருவருட்பா உரைவேறுபாடுகள்
முனைவர் மகா. பாண்டியன் 47

7. பெரியவாச்சான்பிள்ளை உரைவேறுபாடுகள்
முனைவர் த. பூமிநாகநாதன் 58

8. தனிப்பாடல் பதிப்புகள்
முனைவர் வே. நெடுஞ்செழியன் 69

9. தூது நூல்களில் உ.வே.சா. வழங்கிய பதிப்பு முகவுரைகள்
திரு. ஆ.இரா.பாரதிராஜா 83

10. மீனாட்சியம்மை குறம்-சித்தர் பதிப்பு
திரு. க.நா. தினகரன் 100

11. விநாயகர் அகவல் பதிப்பில் காணப்படும் மாறுபாடு
முனைவர் மணிமாறன் 112

12. சுந்தரர் தேவாரத்தில் உரைவேறுபாடுகள்
முனைவர் ரெ. சொர்ணபிரபா 120

13. சுவடிகளில் பனுவலாக்கம்
முனைவர் டி. உமாதேவி 132

14. வடமொழிச் சுவடிகளைத் தமிழ்ப்படுத்தல்
முனைவர் சந்திரமோகன் 137

15. சரசுவதி மகால் நூலக வடமொழிச் சுவடிகள்
திரு. ஸ்ரீ சுதர்சன் 149
திருமதி. நா. ஜெயலட்சுமி

16. சித்த மருத்துவ ஓலைச்சுவடிகள்
முனைவர் முகைதீன் அப்துல்காதர் 154

17. வில்லும் விசையும் சூத்திரம் ஓர் அறிமுகம்
முனைவர் காஞ்சனா 157

18. அகத்தியர் குழம்பு - பாடவேறுபாடுகள்
செல்வி மீ. அபிதகுஜாம்பாள் 164

19. ஓலைச்சுவடியும் தந்ராவும்
திரு. கு.கு.ரவி 170

20. சோதிடச் சுவடி பதிப்புகள்
முனைவர் மு. பிரபாகரன் 176

21. சுவடியியல் சோதிடத்தின் புதிய பரிணாமம்
முனைவர் டி. சரவணன் 181

22. சாதக அலங்காரத்தில் உரைவேறுபாடுகள்
முனைவர் மு. இராஜதுரை 195

23. சாதக அலங்காரம் - புத்திர பாவத்தில்
உரைவேறுபாடுகள்
முனைவர் தி. கல்பனாதேவி 201

24. மனை சாத்திரத்தில் அறிவியல் கூறுகள்
திரு. ஏ. ஜெயக்குமார், திரு. ப. கல்விராயன் 208

25. மந்திரச்சுவடிகள்
திரு. டி.சி. சந்திரசேகர் 215

26. சிவவாக்கியத்தில் உரைவேறுபாடுகள்
முனைவர் இளமதி ஜானகிராமன் 223

27. ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பதில்
மலேசியத் தமிழர்களின் பங்களிப்பு
திரு. கோவி. சிவபாலன் 233

28. பாரம்பரிய அறிவுப் பேணுகை
முனைவர் சீதாலட்சுமி 244

29. ஓலையும் மின்ஓலையும்
திரு. இளங்குமரன் சிவநாதன் 255

30. ஓலைச்சுவடிகள் மின்படிமவாக்குதலும் பயன்களும்
முனைவர் கோ. சக்கரபாணி 262

31. ஓலைச்சுவடிக்குக் கணினியின் பங்களிப்பு
முனைவர் சு. சாந்தி, திரு. சி. கமலநாதன் 267

32. இணையத்தில் கணினியின் பங்களிப்பு
திரு. பகலவன், செல்வி த. பிரியா 274

33. ஆவணச் சுவடிப் பதிப்பு வரலாறு
முனைவர் த. கலாஸ்ரீதர் 281

34. சுவடி நாடகப் பதிப்பு
செல்வி பா. மனோன்மணி 290

35. நாயக்கர் கால ஓலை ஆவணங்கள்
முனைவர் கோ. உத்திராடம் 295

தலபுராணப் பதிப்புகள்

முனைவர் ம.சா. அறிவுடைநம்பி

'புராணம்' என்றால் 'பழங்கதை' என்பது பொதுவான ஒரு கருத்து. 'புராணம்' என்ற வடசொல்லின் அடியாகப் பிறந்த இச்சொல்லுக்குப் 'பழமை' என்பது பொருள். அதாவது பழமைக்குப் பழமையாகவும் புதுமைக்குப் புதுமையாகவும் உள்ளது புராணம். பழமையாக உள்ளவற்றைப் புதுக் கருத்துகளோடு சேர்த்துச் சொல்வது என்பது இதன் கருத்து.

"முன்னைப் பழம் பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியனே"
(சிவபுராணம்)

என்பது மணிவாசகர் வாக்கு.

வடமொழியில் வேதங்களுக்கு அடுத்த நிலையில் புராணங்கள் ஐந்தாவது வேதமாகவே கொண்டாடப்பட்டு வருகின்றன. இப்புராணங்களும் சமய இலக்கியமாகக் கருதப்பட்டு வந்துள்ளன. மேலும் வடமொழியில் நூல்களை மூன்று வகையாகப் பிரித்துள்ளனர். அவை :

தலைவன் ஆணையிடுவதுபோல வேதங்களையும், நண்பன் அறிவுரை கூறுவதுபோலப் புராண இதிகாசங்களையும், மனைவி, கணவன் அருகிருந்து அவன் உவப்புறுமாறு இதமாக நல்லுரைகளை வழங்கி நல்வழிப்படுத்துமாறுபோலக் காவியங்களையும் வகுத்துள்ளனர்.

பரம்பொருளை இப்பூவுலகில் வாழும் மக்கள் உணர்ந்து வழிபடச் சான்றோர்கள் அமைத்துத் தந்தவையே ஆலயங்கள். ஆலயங்களை அமைப்பதற்குத் தேர்ந்து கண்ட இடங்களே தெய்வத் தலங்கள் ஆகும். ஆலயத்தின் மையப் பொருளாகிய மூர்த்தியைச் சரியை, கிரியை, யோகம், ஞானம் ஆகிய நெறிகளில் நின்று வழிபடுவதற்கேற்ற சூழ்நிலைகளையும் இயற்கை வாய்ப்புகளையும் கொண்ட தலங்களே சிறப்புடையவாகும். ஆதலின் நீர்நிலைகளும் சோலைகளும் வளமலைகளும் இயல்பாக அமைந்த இடங்களில் தத்தம் கொள்கைகளுக்கேற்ற மூர்த்திகளைத் தோற்றுவித்து ஆலயங்களை அமைத்தனர். இதனால் ஒரு தலத்தின் சிறப்பு

மூர்த்தியாலும் தீர்த்தத்தாலும் விளக்கமுறுதலின் "மூர்த்திதலந் தீர்த்தம் முறையாற் றொடங்கினர்க்கோர் வார்த்தை சொலச் சற்குருவும் வாய்க்கும் பராபரமே!" என்று தாயுமானவர் கூறிச் சென்றார்.

இம்முறையினால் இந்தியத் திருநாட்டில் அதுவும் தென்னகத்தில் தெய்வத் திருத்தலங்கள் மிகுதியாக விளங்குகின்றன. சோழவள நாட்டின் குருதி ஓட்டமாக விளங்கும் காவிரியின் இரு கரைகளிலுமே பெரும்பாலான தெய்வத் திருத்தலங்கள் அமைந்துள்ளன.

"கோயில் இல்லா ஊரில் குடியிருக்க வேண்டாம்"; "பாங்கினொடு பல தளிகள் இல்லாத ஊர்கள் அடவி காடே" (அப்பர் தேவாரம்) என்பன போன்ற மொழிகள் கோயில்களுக்குச் சிறப்பும் முக்கியத்துவமும் கொடுத் திருப்பதைக் காணமுடிகின்றன.

பல்வேறு தலங்களிலும் தேவார மூவரால் நேரடியாகச் சென்று பாடப்பெற்ற தலங்கள் 'பாடல் பெற்ற தலங்கள்' என்றும், மூவரால் தலங்களுக்கு நேரடியாகச் செல்ல இயலாமல் அத்தலம் பற்றிய குறிப்பைத் தேவாரத்தில் குறிப்பிட்டுள்ளமையை 'வைப்புத் தலங்கள்' என்றும் ஆன்றோர் கூறிச் சென்றுள்ளனர். மூவர் தேவாரத்தில் ஒரு தலம் குறித்த பாடல்களைத் தொகுத்துத் தலமுறைப் பதிப்பாகவும் வெளியிட்டுள்ளனர். அந்தந்தத் தலங்களின் சிறப்பை வலியுறுத்தும் வகையில் தொன்மங்களும், வழக்காறு களும் மக்களிடையே வழங்கப்பட்டு வந்ததன் அடிப்படையில் அந்தந்தத் தலங்களுக்குப் புராணங்களும் உருவாயின; இவற்றைத் 'தலபுராணம்' என அழைத்தனர். அதாவது தலங்களின் பழைய வரலாறுகளைக் கூறுவன தலபுராணம் எனப்படும்.

ஒரு தலத்தைப் பற்றி மக்களிடையே வழங்கப்பெறும் பழங்கதைகள், வரலாற்று நிகழ்வுகள் முதலானவற்றைப் புலவர்கள் தங்கள் கற்பனையாலும் நாவன்மையாலும் விரித்து, யாவரும் விரும்பும் வண்ணம் தொடர்நிலைச் செய்யுட் காப்பியமாக இயற்றினர்.

தமிழில் தலபுராணங்கள் நூற்றுக்கும் மேற்பட்டுக் கிடைக்கின்றன. முதலில் வாய்மொழியாகச் சொல்லப்பட்டு, செய்யுள் வடிவில் பெருகி ஏட்டில் எழுதி வைக்கப்பட்டன. பிற்காலத்தில் உரைநடை வளர்ச்சியின் காரணமாக வசன

நடையிலும் இப்புராணங்கள் மலர்ந்தன. இவ்வகையில் கி.பி.12ஆம் நூற்றாண்டு தொடங்கி இக்காலம் வரை ஏறத்தாழ 400 செய்யுள் நடையிலான தமிழ்த் தலபுராணங்களும், 500க்கும் மேற்பட்ட உரைநடையிலான தலபுராணங்களும் எழுந்துள்ளன.

தலபுராணங்கள் பெரும்பாலும் தமிழ்நாட்டு இடங் களையும், தமிழ் நாட்டு ஒழுக்கங்களையும் பெரிதும் சிறப்பித்துக் கூறுவன.

பொது அமைப்பு

தலபுராணங்களைச் சுவடிகளிலிருந்து பதிப்பித்தோர் சில குறிப்பிட்ட அமைப்புகளைக் கொண்டு அச்சிட்டுள்ளனர். குறிப்பிட்ட தலத்திற்குரிய தேவாரப் பாடல்களை முதலில் பதிப்பித்தல் பெரும்பாலான தலபுராணப் பதிப்புகளில் காணப்படுகின்றன. அடுத்துச் சிறப்புப் பாயிரத்தில் நூலாசிரியர் சிறப்பு, சோதனாசிரியர் சிறப்பு, பதிப்பாசிரியர் சிறப்பு, பிரதி தந்தோர் சிறப்பு ஆகியன புலவர்களால் பாடப்பெற்றுச் சேர்க்கப்பட்டுள்ளன.

கிருஷ்ண ஐயங்கார் என்ற புலவரின் கனவில் இறைவி தோன்றி,

> **தண்டபாணி சுவாமிகளைக் கொண்டு திருவாமாத்தூர்ப்**
> **புராணத்தைப் பாடி முடிக்கச் செய்**

என்று கட்டளையிட்டதை இப்புலவர் உடனே தண்டபாணி சுவாமிகளிடம் கூறிப் புராணத்தைப் பாடி முடிக்கச் செய்தார் என்பதை இந்நூலின் சிறப்புப் பாயிரம் தருகிறது.

சில நூலாசிரியர்கள் தற்சிறப்புப் பாயிரம் பாடி, அதில் தன் வரலாறும், நூல் எழுந்த வரலாறும் கூறப்பட்டிருப்பதைக் காணமுடிகின்றன.

தலபுராணங்களின் பாயிரப் பகுதியில் கடவுள் வாழ்த்து, அடியார் வணக்கம் கூறுவது ஒரு மரபாக உள்ளது. சைவ சமயக் குரவர்களையும், சமய ஆசாரியர்களையும், அடியார்களையும் வணங்குவது நூலாசிரியரின் பண்பாகவே அமைந்திருக்கிறது.

இதற்கு அடுத்த நிலையில் வருகின்ற பகுதி அவையடக்கம். தாம் இயற்றும் நூலில் பல குற்றம் குறைகள் இருப்பினும் அவற்றைப் பொறுத்தருளி அறிவுடைய பெருமக்கள் தம்முடைய நூலை இகழாமல் ஏற்றுக் கொள்ளல் வேண்டும் என்று வேண்டிக்

கொள்ளும் முறையில் நூலாசிரியர்கள் பல பாடல்களை இப்பகுதியில் அமைத்திருப்பர்.

அதன்பிறகு நூல் தொடங்குகிறது. முதலாவதாக அமைகின்ற நைமிசாரண்யச் சருக்கத்தில் நாட்டுச் சிறப்பு, நகரச் சிறப்பு, மூர்த்தி, தலம், தீர்த்தப் பெருமைகள் சுருக்கமாகக் கூறப்படுகின்றன.

நூலாசிரியர்கள்

முதல் தமிழ்த் தலபுராணமாக வீரைத் தலைவன் பரசமயக்கோளரி என்பார் எழுதிய 'கன்னிவன புராணம்' என்பதாகும். கி.பி. 12இல் எழுதிய இந்நூல் இன்றுவரை கிடைக்கவில்லை. ஆயின் கி.பி. 13இல் பெரும்பற்றப் புலியூர் நம்பி எழுதிய 'திருவாலவாயுடையார் திருவிளையாடற் புராணம்' என்ற பழமையான தலபுராண நூலே இன்று கிடைத்துள்ளது.

தமிழ்ப் புராண வரலாற்றில் கி.பி. 16இல்தான் 22 ஆசிரியர்களால் எழுதப்பெற்ற 41 புராணங்கள் கிடைக்கின்றன. சைவ எல்லப்ப நாவலர், சிவப்பிரகாசர், பரஞ்சோதி முனிவர், சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர், மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை முதலான புலவர்கள் தலபுராண வரலாற்றில் குறிப்பிடத்தக்கோராவர். இவர்களுள் மீனாட்சிசுந்தரம் பிள்ளை 22 தலபுராணங்களை இயற்றியுள்ளார். எனவே, இவர் 'பத்தொன்பதாம் நூற்றாண்டின் கம்பர்' என்று அழைக்கப்பெறுகின்றார்.

சுவடிகள்

தமிழ்த் தலபுராணங்கள் யாவும் அக்காலப் புலவர்களால் ஓலைச் சுவடிகளில் எழுதப்பெற்றுப் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. கோயில்களிலும் மடங்களிலும் தலபுராணங்கள் நாள்தோறும் படிக்கப்பட்டதால் அவ்விடங் களிலும் தலபுராணச் சுவடிகள் மிகுதியாக வைத்துக் காப்பாற்றப் பட்டன.

சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் (170 சுவடிகள்), டாக்டர் உ.வே. சா. நூல்நிலையம் (140 சுவடிகள்), சரசுவதி மகால் நூலகம் (50 சுவடிகள்), தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித்துறை நூலகம் (160 சுவடிகள்), கேரளப் பல்கலைக்கழச் சுவடி நூலகம் (140 சுவடிகள்) போன்ற சுவடிக் காப்பகங்களில் தலபுராணச் சுவடிகள் உள்ளன.

பதிப்புகள்

"தமிழில் தலபுராணங்கள்" என்ற நூலில் வே.இரா.மாதவன், 1995ஆம் ஆண்டு வரை வெளிவந்த செய்யுள் வடிவிலான தலபுராணங்கள் 382 நூல்களையும், உரைநடை வடிவிலான தலபுராணங்கள் 484 நூல்களையும் நூல், ஆசிரியர், பதிப்பாண்டு எனும் வைப்பு முறையில் பதிப்பிக்கப் பட்டுள்ளதாக ஒரு நீண்ட பட்டியலை அகரவரிசையில் தந்துள்ளார். தமிழ் இலக்கிய வரலாற்றில் தலபுராணப் பதிப்புகள் மிக அதிக அளவில் வந்திருப்பதையே இப்பட்டியல் காட்டுகிறது. ஆயின் இப்பகுதியில் ஒருசில தலபுராணப் பதிப்புகள் மட்டும் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்படுகின்றன.

மருதவனப் புராணம்

தஞ்சை மராத்திய மன்னர் இரண்டாம் சரபோஜியின் அவைக்களப் புலவரான கொட்டையூர் சிவக்கொழுந்து தேசிகர், மன்னர் கேட்டுக் கொண்டதற்கிணங்க 'மருதவனப் புராணம்' என்ற நூலை இயற்றினார். இந்நூலை 1893இல் கி.சாமிராவ் காடே சாகிப் என்பார் முதன் முதல் பதிப்பித்தாகத் தெரிய வருகிறது. இப்பதிப்பில்,

> **"சோழ நாட்டிற் திருவலஞ்சுழி, குருகிரி முதலிய திவ்விய ஸ்தலங்களை விநாயகர் சுப்பிரமணியர் முதலிய பரிவார தேவதா ஸ்தலமாகக் கொண்ட மத்தியார்ச்சுன க்ஷேத்திரத்தில் எழுந்தருளியிருக்கும் சர்வலோக நாயகராகிய ஸ்ரீ மகாலிங்கப் பெருமானை அவரது சத்திரூபமாகிய சுப்பிரமணியப் பெருமான் கங்கையை யழைத்து அதனால் அபிடேகித்து அருச்சித்த சரித்திரத்தை, இம்மருதவனப் புராணத்தால் உணர்ந்தகாலந் தொடங்கி, அம் முறையை உற்சவமாக நடத்த வேண்டி, ஆசையோடு அச்சுப்பிரமணியப் பெருமானைப் பிரார்த்தித்து, அப்பெருமானது கருணையால், நாம் எமது அன்பர் அம்மாபேட்டைக் கந்தசாமிச் செட்டியார், திருமாந் துறைச் சபாபதிப் பிள்ளை, திருப்பணிப்பேட்டை கோவிந்தசாமிப் பிள்ளை ஆகிய இவர்களுடன் சர்வசித்து வருட முதல் உற்சவமாக நடத்தி வருகிறோம். அவ்வாறு நடத்தி**

வருவதற்குக் காரணம் இப்புராணத்தை முன் உணர்ந்திருந்தமையே யாகலாம். குமார பூசையின் மகிமை, மூர்த்தி, தல, தீர்த்த விசேடம், சிவனருளால் நற்கதி அடைந்தோர் சரித்திரம் முதலிய இவைகளனைத்தும் யாவர்க்கும் நன்குத் தெரிந்தாலன்றி, அம்மகாலிங்கப் பெருமானிடத்துப் பக்தி செய்ய முடியாதாகலான், அவற்றை யாவரும் வெளிப்படவுணர்ந்து பக்தி செய்துய்யும் பொருட்டு, இம் மருதவனப் புராணத்தை அச்சிட்டு வெளிப்படுத்தினோம்"

என்னும் செய்தியைக் காணமுடிகின்றது.

இம் மருதவனப் புராணத்தை 1964இல் குறிப்புரையுடன் த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை பதிப்பித்துள்ளார். திருவாவடுதுறை ஆதீனத்தைச் சேர்ந்த திருவிடைமருதூர் ஸ்ரீ மகாலிங்கசுவாமி தேவஸ்தானம் இந்நூலை வெளியிட்டுள்ளது.

இப்பதிப்பில் முகவுரை, நூலாசிரியர் வரலாறு, சருக்க அகராதி, நூல், பாட்டு முதற்குறிப்பு அகராதி ஆகியவை அமைந்துள்ளன.

'மருதவனம்' என்பது சோழ நாட்டில் தேவாரம் பெற்று விளங்கும் சிவதலங்களுள் 'திருவிடைமருதூர்' எனும் தலமாகும். இத்தல விருட்சம் மருதமரம் ஆகலின் இது மருதவனம் எனப் பெயர் பெற்றது. காவிரி நதி பாயும் வளமான மருதநிலத்தைச் சார்ந்தது. இது காவிரியின் தென்பாலுள்ள தலங்களுள் ஒன்று. கயிலை மலையே ஒருகாலத்தில் இத்தலத்தில் மருதமரமாய் நின்று சிவபெருமானும் உமையவளும் மனமகிழ்ந்து வீற்றிருக்கும்படி நிழலைத் தந்து நின்றது. இத்தலம் 'மத்தியார்ச்சுனம்' எனும் வடமொழிப் பெயருடையது.

திருவாவடுதுறை ஆதீனத்தில் 1882இல் எழுதப்பட்ட தாள் சுவடி ஒன்று, மூலம் மட்டும் 1896இல் அச்சிடப்பட்ட பிரதி ஒன்று ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு இந்நூலைப் பதிப்பித்துள்ளார்.

தணிகைப் புராணம்

கச்சியப்ப முனிவர் இயற்றிய தணிகைப் புராணத்தைக் குறிப்புரையுடன் 1960இல் த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை திருவாவடுதுறை ஆதீனம் வழியாகப் பதிப்பித்துள்ளார். இதில் முகவுரை (ஆராய்ச்சி முதலியவற்றுடன்), நூலாசிரியர் வரலாறு,

தணிகைப்புராணம் மூலமும் குறிப்புரையும், குறிப்புரை அநுபந்தம், செய்யுள் முதற்குறிப்பகராதி ஆகியவை அமைந்துள்ளன.

இப்புராணச் செய்யுள்நடை சங்க இலக்கியங்களைப் போலவே கம்பீரமான நடையுடன், கவின்மிகவுடைத்தாக மிளிர்கிறது. செவ்வியல் இலக்கியங்களில் காணும் சொற்கள், சொற்றொடர்கள், கருத்துகள், திருக்குறள் கருத்துகள், மெய்கண்ட நூல்களின் செய்திகள் ஆங்காங்கே இடம்பெற்றுள்ளன.

இந்நூலைப் பதிப்பித்தமை தொடர்பாகப் பதிப்பாசிரியர் முகவுரையில்,

"இத்தணிகைப் புராணத்தை முதன் முதலாக யாழ்ப்பாணத்து ஸ்ரீ வை. தாமோதரம் பிள்ளை அவர்கள் 1883-ஆம் ஆண்டிலே அச்சிட்டார்கள். அவர்கள் விண்ணப்பத்தின் படியே அப்போது இவ்வாதீன நூல்நிலையத்திலுள்ள தணிகைப் புராண ஏட்டுச் சுவடிகளையும், மதுரை - இராமசாமிப் பிள்ளை அவர்கள் இவ்வாதீனத்தில் பாடங் கேட்டுள்ளபோது குறித்து வைத்திருந்த இப்புராணக் குறிப்பையும் அநுப்புவிக்கும்படி 16-வது குருமகா சந்நிதானம் மேலகரம் ஸ்ரீ சுப்பிரமணிய தேசிக மூர்த்திகள் கட்டளையிட்டருளினார்கள். அச்சிட்ட பிள்ளையவர்கள் எக்காரணத்தாலோ அவற்றுள் குறிப்புரையை அச்சிடாமல் புராண மூலத்தைமட்டும் அச்சிட்டு வெளிப்படுத்தினார்கள். பின்பு, சில (30 ஆண்டு கட்குமுன் ஸ்ரீ கா. நமச்சிவாய முதலியார் அவர்கள் தணிகைப் புராணத்தை அச்சிட்டனர். அப் பதிப்பிலே ஈசானிய மடம் ஸ்ரீ இராமலிங்க சுவாமிகள் தமது கையால் எழுதி வைத்துள்ள குறிப்பையும், செந்தமிழ் முதல் தொகுதியில் பாலவநத்தம் ஸ்ரீ பாண்டித்துரைசாமித் தேவரவர்கள் எழுதியுள்ள இருபொருட் சிலேடை முதலிய சிலேடைகளின் உரைக் குறிப்பையும், சுன்னாகம் - ஸ்ரீ குமாரசாமி பிள்ளையவர்கள் எழுதி வெளியிட்டுள்ள ஆராய்ச்சிக் குறிப்பையும் சேர்த்துப் பதித்துள்ளார்கள்"

என்று குறித்துள்ளார்.

இதில் தணிகைப் புராணப் பதிப்பு தொடர்பாக ஒரு சிறு வரலாற்றையே பதிப்பாசிரியர் தந்திருப்பதைக் காணமுடிகின்றது.

திருநல்லூர்ப் புராணம்

கி.பி. பதினேழாம் நூற்றாண்டைச் சேர்ந்த கமலை வைத்தியநாத தேசிகர் இயற்றிய திருநல்லூர்ப் புராணத்தை ச.பாலசுந்தரம் குறிப்புரையுடன் 1979இல் சரசுவதி மகால் நூலகத்தின் வழியாகப் பதிப்பித்துள்ளார்.

இந்நூல் வெளியிடுவோர் உரை, சருக்கங்களின் அடைவு, முன்னுரை, நல்லூர்ப்புராண ஆசிரியர் வரலாறு, சருக்கங்களின் பொருட் சுருக்கம், கோயில் வரைபடம், நூல், நல்லூர்ப் புராணச் செய்யுள் முதற் குறிப்பு அகரவரிசை, சருக்கங்களின் அகரவரிசை ஆகியவற்றைக் கொண்டு பதிப்பிக்கப் பட்டுள்ளது. சரசுவதி மகால் நூலகச் சுவடி, கையெழுத்துப்பிரதி ஆகியவற்றைக் கொண்டு யாப்பமைதியையும் ஓசை இலக்கணத்தையும் கருவியாகக் கொண்டு நன்றாக ஆராய்ந்து மூலபாடத்தைச் செப்பம் செய்து இந்நூலைப் பதிப்பித்திருப்பதாகப் பதிப்பாசிரியர் குறிப்பிடுகின்றார். திரிசொற்களுக்கும் வடசொற்களுக்கும் பொருள் எழுதி அடிக்குறிப்பில் சேர்த்துள்ளார். புராணக் கருத்தைச் சுருக்கமாக எழுதி நூல் முன்பகுதியில் சேர்த்துள்ளார். படிக்கின்ற வர்களுக்குத் துணைபுரியும் வகையில் பொருள் தொடர்ச்சிக்கு ஏற்ப ஆங்காங்கே சிறுசிறு தலைப்புகள் எழுதப்பட்டுச் சேர்த்து விளக்கத்தை அடைப்புக் குறிகளுக்குள் தந்துள்ளார். 27 சருக்கங்களில் 1014 பாடல்கள் உள்ளன.

திருநாகைக் காரோணப் புராணம்

மகாவித்துவான் மீனாட்சிசுந்தரம் பிள்ளை இயற்றிய 'திருநாகைக் காரோணப் புராணத்'தை 1970இல் த.ச. மீனாட்சிசுந்தரம் பிள்ளை குறிப்புரையுடன் திருவாவடுதுறை ஆதீனம் வழி பதிப்பித்துள்ளார்.

இந்நூல் முகவுரை, குருமரபு வாழ்த்து, நூலாராய்ச்சிக் குறிப்புகள், நூலாசிரியர் வரலாறு, திருநாவுக்கரசு நாயனார் தேவாரம், இந்நூல் உரையில் எடுத்தாண்ட மேற்கோள் நூற்பெயர் அகராதி, சுந்தரமூர்த்தி நாயனார் தேவாரம், படல அகராதி, நூல், செய்யுள் முதற்குறிப்பகராதி, பிழையும் திருத்தமும் ஆகியவற்றால் அமைந்துள்ளது. 2506 பாடல்களைக் கொண்டு 'கடவுள் வாழ்த்து'த் தொடங்கி 'நைமிச முனிவர் பூசித்த படலம்' ஈறாக 63 படலங்களாக இந்நூல் உள்ளது.

'நாகை' என்பது 'நாகபட்டினம்' என்பதன் மரூஉ, 'காரோணம்' என்பது 'காயாரோகணம்' என்பதன் மரூஉ. 'நாகைக் காரோணம்' என்றது கச்சிக் காரோணம், குடந்தைக் காரோணம் என்னும் தலங்களை நோக்கியது.

> *"1868 ஏப்ரல் (விபவ ஆண்டு) தொடக்கத்திலே நாக பட்டினத்தில் ஓவர்ஸியராக இருந்த அப்பாத்துரை முதலியார் முதலிய உத்தியோகஸ்தர்களும், தேவாரத் திருக்கூட்டத் தலைவராகிய வீரப்ப செட்டியார் முதலியோர்களும் கேட்டுக்கொள்ள இப்புராணத்தைப் பாடத்தொடங்கினார். இத் தலத்திற்குரிய வடமொழிப் புராணத்தை அப்பொழுது அங்கே இருந்த திருச்சிராப்பள்ளி ஸ்ரீ மகாதேவ சாஸ்திரிகள் என்பவரைக் கொண்டு தமிழில் வசன நடையாக மொழிபெயர்ப்பித்து எடுத்துக்கொண்டு மாயூரம் வந்தார்."*
>
> *"நாகையிலுள்ள அன்பர்களில் சிலர், நீங்கள் செய்யும் இப்புராணம் காஞ்சிப்புராணத்தைப் போல் இருக்க வேண்டும். அதில் சுகரகரீசப் படலத்தில் மந்தர கிரியின் வளத்தைக் கூறப்புகுந்த சிவஞான முனிவர் பல சித்திர கவிகளை அமைத்தது போல நீங்களும் இப்புராணத்தின்கண் ஏற்ற இடத்தில் அவற்றை அமைக்க வேண்டும் என்று கேட்டுக் கொண்டனர்."*
>
> *(உ.வே.சா., பிள்ளையவர்கள் சரித்திரம், ப. 314)*

மேற்கண்ட கூற்றிலிருந்து பிள்ளையவர்கள் இப்புராணத்தை இயற்றியதற்குரிய காரணங்கள் தெரிய வருகின்றன. ஏறத்தாழ ஓராண்டுக் காலம் இத்தலபுராணம் அரங்கேற்றம் செய்யப்பட்டுப் பொழிவு நடைபெற்றது. விபவ ஆண்டு பங்குனித் திங்கள் (1869) அரங்கேற்றம் தொடங்கியது. இப்புராணம் அரங்கேற்றி முடிவதற்குள்ளாகவே அச்சில் பதிப்பிக்கப்பட்டது. இதனை உ.வே.சா.,

> *"இந்நூலாசிரியர் மாணவர் சோடசாவதானம் சுப்பராயச் செட்டியாருடைய மேற்பார்வையில் மாயூரப் புராணமும், இந்த நாகைக் காரோணப் புராணமும் சென்னையில் அச்சிடப்பெற்று நிறைவேறின"*

என்பார். பிள்ளை இயற்றிய புராணக் காப்பியங்களுள் இத் திருநாகைக் காரோணப்புராணம் மிகச் சிறந்ததாகக் கருதப்படுகிறது. சிவஞான முனிவர், கச்சியப்ப முனிவர் ஆகியோருடைய நூல்களில் இவருக்குள்ள அனுபவ முதிர்ச்சியும், கவி இயற்றுவதில் இவருக்குள்ள பேராற்றலும், வியக்கத்தகும் கற்பனை சக்தியும் இந்நூலில் நன்றாக வெளிப்பட்டு நிற்கின்றன. இந் நூலிலுள்ள ஒவ்வொரு பகுதியும் ஒவ்வொரு வகையில் சிறப்புற்று விளங்குகிறது.

"தமிழ்க் காப்பியங்களிற் பரந்து கிடக்கும் பலவகை அணிநயங்களும் இதன்கண்ணே ஒவ்வோரிடத்தில் அமைந்து இலங்கும். சொல்லணி, பொருளணி, தொடைநயம், பொருட் சிறப்பு, சுவைநயம், நீதி, சிவபத்திச் சிறப்பு, சிவஸ்தலச் சிறப்பு, நாயன்மார் பெருமை முதலிய பலவும் இதன்கண் நிரம்பியுள்ளன. தமிழ்க் காப்பியத்தின் இலக்கணம் முழுவதும் உள்ளதாய்ப் பலவகையிலும் நயம் சிறந்து, சுவைப்பிழம்பாக விளங்கும் இக் காப்பியத்தைப் பெறுதற்குத் தமிழ்நாடு தவம் செய்திருத்தல் வேண்டும். பல பழைய புலவர்கள் வாக்கினை ஒருங்கே பார்த்து மகிழவேண்டுபவர் இந்நூலைப் படித்தாற் போதும். அந்த அச்சுப் புலவர்களின் நடை நயமும் பொருளின்பமும் இடையிடையே இப் புராணத்தில் விளங்கித் தோன்றும். இந்நூலைப்பற்றி எவ்வளவு பக்கம் எழுதினாலும் இதன் பெருமையை ஆராய்ந்து கூறி விட்டதாக ஆகாது. யார் யாருக்கு எந்த எந்த நயங்களில் விருப்பமோ அந்த அந்த நயங்களை இதன்பாற்கண்டு இன்புறலாம்"

(உ.வே.சா., பிள்ளையவர்கள் சரித்திரம், பக். 322-323)

என்று இந்நூல் குறித்து உ.வே. சாமிநாதையர் கூறுகின்றார்.

திருநாகைக் காரோணப் புராணம் 1869இல் அச்சிடப்பெற்ற நூல் ஒன்று, அதனைப் பார்த்துச் சிலர் செய்திருந்த காகிதப் பிரதி ஒன்று ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்டு த.ச. மீனாட்சி சுந்தரம் பிள்ளை குறிப்புரை எழுதி இந்நூலைப் பதிப்பித்துள்ளார்.

கும்பகோணப் புராணம்

தஞ்சையைத் தலைநகராகக் கொண்டு ஆட்சி செய்த மராத்திய மன்னர்களுள் இரண்டாம் சகசி மன்னர் காலத்தில் (கி.பி. 1684-1712) வாழ்ந்த சொக்கப்பப் புலவர் இயற்றிய 'கும்பகோணப் புராணம்' (குடந்தைப் புராணம்) மன்னரவையில் அரங்கேற்றம் செய்யப்பட்டுள்ளது. இந்நூலை மு. சடகோப ராமானுஜம் பிள்ளை 1971இல் முதன் முதலாகப் பதிப்பித்துள்ளார்.

இந்நூல் ஆங்கில முன்னுரை, பதிப்பாசிரியர் முகவுரை, வரலாற்றுச் சுருக்கம், கும்பகோணப் புராணம் நூல், அருஞ்சொற்பொருள், செய்யுள் முதற் குறிப்பகராதி, பிழை திருத்தம் ஆகியன கொண்டு அமைந்துள்ளது. இந்நூல் எழுதிய சுவடி பழமையானது; பூச்சிகள் அரித்துச் சிதைந்துள்ளது. ஒரேயொரு சுவடி மட்டும் உள்ளது. இச்சுவடியிலுள்ள பாடங்கள், எழுத்துப்

பிழையாக இருக்குமென்று கருதியவற்றைத் திருத்தப் பாடமாக அமைத்தும், பிழையான பாடங்களை அடிக்குறிப்பில் கொடுத்தும், கூடியவரையில் சிதைந்த பகுதிகளை இருநகக்குறிக்குள் அமைத்தும், படிப்பவர்கள் செய்திகளைத் தெரிந்து கொள்ளுவதற்கேற்ற வகையில் வரலாற்றுச் சுருக்கம் கொடுத்தும் பதிப்பிக்கப் பட்டுள்ளது.

இந்நூல் கும்பேசர் கோயில், நாகேசர் கோயில், மகாமகக்குளம் ஆகிய மூன்றின் சிறப்புகளை விரிவாகக் கூறுகிறது. 'குடமூக்கு' என்பது திரிந்து கும்பகோணமாயிற்று என்று பொதுவாகக் கூறுவதுண்டு. ஆயின் யாகம் செய்தபோது, யாகத்தில் வைத்திருந்த கும்பம் சாய்ந்ததால் 'கும்பகோணம்' என்ற பெயர் வந்தது என்பதை இந்நூல் கூறுகிறது.

இந்நூலாசிரியர் தொடர்பான குறிப்புகள் மிகக் குறைவாகவே காணப்படுகின்றன. இவர், சின காஞ்சி சென்று கிருத கம்பளப் பூசை (நெய்யால் நனைந்த கம்பளத்தை இறைவனுக்குச் சார்த்தி வழிபாடு செய்தல்) செய்தால் பயன் உண்டு என்று கூறுவதாலும், தொண்டைநாட்டு அரசூர் சொக்கன் என்று தன்னைக் கூறிக் கொள்வதாலும், இவர் தன் நாட்டுப் பற்று மிக்கவர் என்பது தெரிகின்றது. இவர் பாடிய இத்தலபுராணத்தில் சைவ சித்தாந்தக் கருத்துகள், திருநீறு, உருத்திராக்கம், வில்வம், இலிங்க வழிபாடு முதலானவற்றை இருபத்தைந்து அத்தியாயங்களில் கூறியுள்ளார். இலிங்கம் நாவற்பழம் போன்றிருக்க வேண்டும். அது நருமதை ஆற்றில்தான் கிடைக்கும் என்கிறார்.

விநாயகர் வணக்கம், நால்வர் துதி போன்றவற்றை நூலின் இறுதியில் கூறியுள்ளார். வணக்கத்துள் சுந்தரரை,

> **"செந்தமிழ்ப் பெருமை காட்டும் செல்வனைச்**
> **சிந்தை செய்வாம்"**

என்று சிறப்பாகப் போற்றிக் கூறியுள்ளார்.

இந்நூலால் அறியப்படுவனவற்றுள் ஒருசில வருமாறு : சிவ இரகசியம் என்ற நூல் சிறந்தது. கயிலை மலையிலுள்ள நாகணப்புள் ஆகமத்துக்குப் பொருள் கூறுகிறது; அதனைக் காகங்கள் கேட்டு உவக்கின்றன. உலக உயிர்கள் வினையிலிருந்து நீங்கிப் பேரின்ப வீடு அடைவதற்குரிய தலம் கும்பகோணம். வேள்வியில் எழும் புகை, பெண்கள் தங்கள் கூந்தலுக்கு ஊட்டும் புகை ஆகிய இரண்டும் சேர்ந்து வானில் முகில் கூட்டத்தோடு கலந்தன. அதனால் புகை எது? முகிற்கூட்டம் எவை? என்று வேறு அறியலாகாதனவாயின. வில்வம் முதலானவற்றைக் கொண்டு சிவலிங்கத்தை வழிபடுவது

நன்று; வெள்ளெருக்க மலரால் வழிபடுதல்; ஆலயத்தில் நெய் விளக்கேற்றல்; அடியாரிடத்து அன்பாயிருத்தல்; ஆலயத்தில் அலகிட்டு மெழுகிட்டு உழவாரத் தொண்டு செய்தல்; மகேசுரர்கட்கு (சிவனடியார்) உணவளித்தல்; பரம்பொருள் ஒருபக்கம் செம்மேனி, ஒருபக்கம் நீலமேனியாக உள்ளது; நீராடினால் உடலிலுள்ள அழுக்குப் போகும், நீராடினால் உள்ளத்திலுள்ள அழுக்குப் போய்த் தூயனாவான்; நோய் வாய்ப்பட்டபோது உத்தூள நீறாடுவது நன்று; சிவ வழிபாடு ஒன்றே பிறவிப் பிணி அகற்றும் மருந்து; பூசைக்குரிய புண்ணியன் இயல்பும், முற்பிறவியிற் செய்த தவப்பயனால் கிட்டுமே ஒழிய வேறொன்றால் கிட்டாது; உள்ளம், உரை, செயல் ஆகிய மூன்றும் தூய்மையானதாய் வில்வம் முதலான பொருள் கொண்டு அண்ணலடித் தாமரையில் இட்டால் முத்தி அடையலாம். இந்நூலின் பதிப்பாசிரியர் நூல் இறுதியில்,

> **"குற்றங் களைந்து குணம்பெய்து வாசித்தல்**
> **கற்றறிந்த மாந்தர் கடன்"**

என்று பதிப்பித்துள்ளார்.

> **"சிவரகசியம் என்னும் நூல் 'கும்பகோணப் புராணம்' எனத் தவறுதலாகப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது. தலபுராணப் பதிப்பில் நிகழும் சிக்கல்களுக்கு இஃது ஓர் எடுத்துக்காட்டாகும்"**

என்று கூறிய வே.இரா. மாதவன் கும்பகோணப் புராணமே இந்நூலல்ல என்பதற்குப் பின்வரும் சான்றுகளையும் தந்துள்ளார்.

> **"ஓலைச்சுவடியிலே முதலில் இருக்கவேண்டிய ஏடுகள் தவறாகக் கடைசியில் சேர்க்கப்பட்டுவிட்டன. எனவே சுவடியின் முதலில் பெயர் முதலியன இல்லை. முதலாவது நைமிசாரணியச் சிறப்புரைத்த அத்தியாயம் எனச் சுவடி தொடங்கி இருபத் தேழாவதாகப் பூசைக்கு உபகரணங் கூறிய அத்தியாயம் வரைக் குழப்பமில்லாமல் தொடர் கிறது. இவ்வத்தியாயத்தின் இறுதி ஏடு இல்லாத தால் நூல் முடிவைப் பற்றிய குறிப்பு சுவடியில் காணப் பெறவில்லை. முதலில் இருக்க வேண்டிய பாயிரப் பகுதியடங்கிய ஏடுகள் தவறுதலாகப் பின்னால் சேர்க்கப்பட்டுள்ளன. அதிலும் முதல் ஏடு இல்லாததால் ஐந்து பாடல்கள் கிடைக்காமல் ஆறாம் பாட்டிலிருந்து உள்ளன. இச்சுவடியைப் படி யெடுத்தவர், அதனைத் திருத்தியவர், பதிப்பாசிரியர்,**

அவருக்கு ஒப்பு நோக்குதல் முதலியவற்றிற்கு உதவியவர் ஆகிய எவரும் அது பாயிரம்தான் எனத் துணிவாக அறியாதது வியப்பாக உள்ளது. மேலும், பதிப்பாசிரியர் தம் முகவுரையில், 'எல்லா நூலாசிரியரும் விநாயக வணக்கம், நால்வர் துதி முதலியன நூன்முகத்துரைத்துப் போயினர்; இவர், நூலின் இறுதியிற் கூறுகின்றார். அங்ஙனம் அமைந்தது யாது காரணத்தாலோ தெரியவில்லை' என்று கூறி இது ஒரு புதுமை என்று குறிப்பிட் டிருப்பதும் வேடிக்கையானது."

உ.வே.சா. பதிப்பித்த தலபுராணங்கள்

உ.வே. சாமிநாதையர் 1883 முதல் 1940 வரை 13 தலபுராணங்களைப் பதிப்பித்துள்ளார். இந்த வகையிலும் ஐயரவர்களே 'தமிழில் மிகுதியான தலபுராணங்களைப் பதிப்பித்தவர்' என்ற சிறப்புக்கும் உரியவராகிறார்.

திருக்குடந்தைப் புராணம் (1883), திருப்பெருந்துறைப் புராணம் (1892), வீரவனப் புராணம் (1903), சூரைமாநகர்ப் புராணம் (1904), தியாகராச லீலை (1905), திருவாலவாயுடையார் திருவிளையாடற்புராணம் (1906), தனியூர்ப் புராணம் (1907), மண்ணிப்படிக்கரைப் புராணம் (1907), திருக்காளத்திப் புராணம் (1912), விளத்தொட்டிப் புராணம் (1934), ஆற்றூர்ப் புராணம் (1935), தணிகாசல புராணம் (1939), வில்லைப் புராணம் (1940) ஆகியவையாகும். இத்தலபுராணப் பதிப்பில் இடம்பெற்றுள்ள குறிப்புரை, அரும்பதவுரை, முகவுரை போன்றன மிகவும் குறிப்பிடத்தக்கன. முகவுரையில் தலம் இருக்குமிடம், தலத்தின் வேறு பெயர்கள், தல இறைவன் இறைவியின் பெயர்கள், தீர்த்தம், விருட்சம், வழிபட்டுப் பேறு பெற்றோர்கள் வரலாறு, நூல் நுவலும் முக்கியச் செய்திகள் என்று அனைத்துச் செய்திகளையும் ஒருசேரத் தொகுத்துத் தந்துள்ளார். தலபுராண நூல் முழுமையையும் படிப்பதற்கு முன்னர் ஐயர் எழுதிய முகவுரைப் பகுதியை மட்டும் படித்தாலே அந்த நூலைப் படித்த மனநிறைவு ஏற்படும். ஐயரவர்கள் பதிப்பித்த ஏனைய நூல்களில் காணப்படும் முன்னுரைப்பகுதி அமைந்தது போலவே தலபுராணப் பதிப்பு முன்னுரையும் அமைந்திருப்பது இவண் குறிப்பிடத்தகும்.

ஐயரவர்கள் தலபுராணப் பதிப்பில் மிகுந்த ஆர்வமும் ஈடுபாடும் கொண்டிருந்தமையை கி.வா. ஜகந்நாதன் கூறும் பின்வரும் கூற்றைக் கொண்டு அறிந்து கொள்ள முடிகிறது.

"தல தரிசனம் என்பது அவருக்கு மிகவும் விருப்பமான செயல். தலங்களைப் பற்றிய செய்தி களைச் சேகரிப்பதில் பேரார்வம் உடையவராக இருந்தார். ஏதேனும் தலத்திற்குச் சென்றால் அந்தத் தலத்தைப் பற்றிய வரலாறு, வடமொழி, தென் மொழியில் வழங்குகின்ற அந்தத் தலத்திலுள்ள பெருமான் பெயர், அம்பிகை பெயர், அந்தத் தல சம்பந்தமான நூல்கள் முதலியவற்றைப் பல பேரிடம் விசாரித்துத் தெரிந்து கொள்வார். அவற்றையெல்லாம் குறிப்புக்களாக எழுதி வைப்பார். இவ்வாறு சேகரித்த குறிப்புக்கள் மிக அதிகமாக இருக்கின்றன. தேவாரத்தைச் சமயம் கிடைக்கும் போது அச்சிடவேண்டுமென்ற ஆசை ஆசிரியப் பெருமானுக்கு இருந்தது. தேவாரத்தில் வரும் சொற் பொருள் களைத் தொகுத்து இரண்டு அகராதிகளை எழுதி வைத்துக் கொண்டார். தலங்களின் சம்பந்தமான செய்திகளை அப்போது பயன்படுத்திக் கொள்ளலாம் என்று எண்ணினார். அதுமட்டு மன்றித் தலபுராணங்களை ஆராயும் போது அந்தச் செய்திகள் எல்லாம் பயன்பட்டன. பல தலபுராணங்களை அவர் அச்சிட்டிருக்கிறார். அந்தப் புராணங்களின் குறிப்புரையில் தாம் கேட்டறிந்தும் நூல் வாயிலாக அறிந்துகொண்டும் தொகுத்த செய்திகளைப் பயன்படுத்திக் கொண்டிருக்கிறார்."

(கி.வா. ஜகந்நாதன், என் ஆசிரியப்பிரான், பக். 22-23)

தவிர, ஐயர் 1909ஆம் ஆண்டில் திருவாவடுதுறை சென்றிருந்தபோது அங்கிருந்த தேதியூர் மகாதேவசிவன் என்ற பெரியவரிடம் பல தலங்களைப் பற்றியும், தீர்த்தம், விருட்சம், மூர்த்தி போன்றவற்றைக் கேட்டறிந்து குறித்துக் கொண்டமை குறித்தும், பிற்காலத்தில் முத்து என்றும் வண்ணாரப் பரதேசி என்றும் வழங்கிய ஒருவரிடம் இத்தகைய குறிப்புகளை அவர் கேட்டு எழுதிக் கொண்டது குறித்தும் கி.வா. ஜகந்நாதன் குறிப்பிடுகின்றார் (மேலது, பக். 81-82, 218).

தம் ஆசிரியரின் முதல் தலபுராணப் படைப்பான தியாகராாச லீலையை ஐயர் பதிப்பித்துள்ளார். 1905இல் பதிப்பிக்கப் பட்ட இந்நூல் முகவுரையில், "சங்க நூல்களைப் பதிப்பித்ததை விடத் தம்மாசிரியர் இயற்றிய முதல் தலபுராண நூலைப் பதிப்பித்ததைப்

பெறும் புண்ணியமாகவே கருதினார்" என்பதை அறிந்து கொள்ள முடிகிறது.

நிறைவாக

1) ஒரு தலபுராணம் பலரால் பதிப்பிக்கப் பட்டுள்ளது; ஒரு தலபுராணம் பல பதிப்புகளையும் பெற்றுள்ளது.

2) ஒரு தலத்திற்குப் பல புராணங்கள் எழுதப்பட்டுள்ளன.

3) தலபுராணத்தைப் பதிப்பித்தவர்கள் அத்தல புராணத்திற்கு உள்ள அனைத்து ஏடுகளையும் கையெழுத்துப் பிரதி களையும் அச்சான பிரதிகளையும் சேகரித்து அவற்றைச் சரிபார்த்து அந்நூலைப் பதிப்பித்துள்ளனர்.

4) மூலம் மட்டும் உள்ள தலபுராண நூல்கள்; மூலமும் குறிப்புரையும் உள்ளவை; மூலம், குறிப்புரை, விளக்கவுரை உள்ள பதிப்புகள் கிடைக்கின்றன.

5) பெரும்பாலான தலபுராணங்கள் காப்பிய அமைப்பில் அமைந்துள்ளன.

6) தலபுராணச் சுவடிகளில் காணப்பட்ட எழுத்துப் பிழைகள், பாட வேறுபாடுகள் முதலானவற்றைப் பதிப்பாசிரியர்கள் நீக்கிச் சரியான வடிவத்தில் தந்திருப்பதாக அந்தந்த நூலின் முன்னுரை அல்லது பதிப்புரையில் பதிவு செய்துள்ளனர்; ஆயின் அந்நூற்பதிப்பில் எந்தவோர் இடத்திலும் பாட வேறுபாடுகளைக் குறிக்கவில்லை.

7) தலபுராணச் சுவடிப் பதிப்பிற்கு உறுதுணையாக இருந்தவர்களைப் பதிப்பாசிரியர்கள் தம் பதிப்புரைகளில் நன்றியுடன் நினைவு கூர்ந்துள்ளனர்.

8) பொதுவாகத் தலபுராணப் பதிப்பில் அக்காலப் பதிப்பாசிரியர்கள் கொண்டிருந்த விழிப்புணர்வு, நேர்மை, உழைப்பு, நுணுகி ஆராயும் பண்பு போன்றவை சிறந்து விளங்குவதைக் காண முடிகின்றன.

9) பத்தொன்பதாம் நூற்றாண்டில் மீனாட்சிசுந்தரம் பிள்ளை 22 தலபுராணங்களைப் பாடித் தமிழ் இலக்கிய உலகில் மிகுதியான தலபுராணங்களைப் பாடியவர் என்ற பெருமைக்குரியவராக விளங்குகிறார்.

10) உ.வே. சாமிநாதையர் செவ்வியல் இலக்கியங்களைப் பதிப்பித்தமை போன்றே தலபுராணங்களையும் மிகுதியான அளவில் பதிப்பித்திருப்பதையும் காணமுடிகின்றது.

திருவாசகச் சிவபுராணப் பாடல்களில் சுவடி நோக்கு

முனைவர் அ. சிவபெருமான்

முன்னுரை

எட்டாந்திருமுறையாக விளங்கும் திருவாசகத்தை அருளியவர் மாணிக்கவாசகப்பெருமான். அத்திருவாசகத்துள் முதல்வாசகமாக விளங்குவது சிவபுராணம். சிவபுராணம், "நமச்சிவாய வாழ்க ; நாதன்தாள் வாழ்க" எனத் தொடங்கி, "பல்லோரும் ஏத்தப் பணிந்து" என்னும் தொண்ணூற்று மூன்றாம் அடியுடன் முடிகின்றது.

திருவாசகச் சிவபுராணப் பகுதிக்கு என் தந்தையார் பேரா. மூதறிஞர் திரு. அடிகளாசிரியரவர்கள். "சிவபுராணச் சிற்றுரை" என்ற பெயரில் உரையெழுயுள்ளார். அவ்வுரையின் முதற்பதிப்பு 1986ஆம் ஆண்டில் தந்தையரால் பதிப்பிக்கப் பெற்றது. அப்பதிப்பிற்குப் பிறகு அந்நூலின் இரண்டாம் (1996) மூன்றாம் பதிப்பினை (2007) யான் பதிப்பாசிரியனாக அமர்ந்து பதிப்பித்துத் தமிழுலகிற்கு வழங்கியுள்ளேன். தற்பொழுது நான்காம் பதிப்பைப் பதிப்பிக்க முயன்று கொண்டுள்ளேன்.

சிவபுராணச் சிற்றுரையைப் பதிப்பிக்கும் பேறு பெற்றதால் சிவபுராணப் பாடல்களில் காணப்பெறும் பாட வேறுபாடுகளை அறிந்தவன் என்ற முறையில் இக்கட்டுரையை எழுதியுள்ளேன். இக்கட்டுரை எழுதுவதற்குத் தந்தையாரின் சிவபுராணச் சிற்றுரை நூலே அடியாக அமைந்துள்ளது.

சிவபுராணப் பயன்

சிவபுராணப் பாடவேறுபாடுகளை நோக்கும்முன் சிவ புராணப் பயனை இவ்விடத்தில் நோக்குதல் நன்று. அடிகளாசிரியர்,

> **மனித முயற்சியால் நீக்கமுடியாத துன்ப நிகழ்ச்சி ஏதாவது ஏற்பட்டால் அப்பொழுது தூய இடத்தில் தூய்மையாயிருந்து சிவபுராணத்தைப் பொருளு ணர்ச்சியுடன் மனம் உருகி ஓதுவேன். அப்பொழுது அத்துன்பம் எவ்வாறோ நீங்கி விடும். இது யான் கண்ட உண்மையாகும்[1]**

என்று குறித்துள்ளார். இச்செய்தியால் திருமுறையின் பெரும் பயனை உணர்ந்து கொள்ள முடிகின்றது.

சிவபுராணத்தில் காணப்பெறும் பாட வேறுபாடுகள்

அடிகளாசிரியர் சிவபுராணப் பாடற் பகுதிக்குக் குறித்துள்ள இருபது பாட வேறுபாடுகள் வருமாறு.

வ. எண்	அச்சு நூல்களில்	அடிகளாசிரியர் பதிப்பில்
1.	ஆகமுமாகி நின்ற (அடி - 4)	ஆகமம் ஆகி நின்ற
2.	பிஞ்ஞகன்றன் (அடி - 6)	பிஞ்சகன்றன்
3.	புறத்தார்க்குஞ் (அடி - 8)	புறத்தார்க்குச்
4.	வணங்கி (அடி - 18)	வணங்ங்கி
5.	{ய (அடி - 20)	மோய
6.	கண்ணுதல்யான் (அடி - 21)	கண்ணுதலான்
7.	மிக்கா (அடி - 23)	மிக்காய்
8.	எண்ணிறைந்து (அடி- 24)	எண்ணிறந்து
9.	பன்மிருக (அடி - 27)	பல்விருகம்
10.	தாபர (அடி - 30)	தாவர
11.	உள்ளத்தின் (அடி - 35)	உள்ளத்துள்
12.	மெய்யே (அடி - 34)	மெய்யா
13.	ஐயாய் (அடி - 35)	ஐயா
14.	ஆற்றத்தின் நேரியாய் (அடி-44)	நாற்றத்தின் நேரியாய்
15.	வாசற் குடிலை (அடி -	வாயிற்குடிலை
16.	கசிந்துள்ளுருகி (அடி - 57)	கசிந்துள்ளுருகும்
17.	\ாரியனே (அடி - 64)	ஆரியனே
18.	சிந்தையுள் (அடி - 82)	சிந்தனையுள்
19.	போற்றிப் புகழ்ந்திருந்து (அடி-86)	போற்றிப் புணர்ந்திருந்து
20.	கட்டழிக்க வல்லானே (அடி-88)	கட்டவிழ்க்க வல்லானே

மேற்கூறப் பெற்ற இருபது பாடவேறுபாடுகளில் ஒரு சிலவற்றை ஆய்வு நோக்கில் சிந்திப்போம்.

பிஞ்சகன்

சிவபுராணத்தில் ஏழாவது அடி, **"பிறப்பறுக்கும் பிஞ்சகன்றன் பெய்கழல்கள் வெல்க"** என்பதாகும். இவ்வடியுள்

வந்துள்ள **பிஞ்சகன்** என்னும் சொல் பலப் பதிப்புகளில் **பிஞ்ஞகன்றன்** என்றே பதிப்பிக்கப் பெற்றுள்ளது. அடிகளாசிரியர்,

> **.........என்னிடம் உள்ள திருவாசகச் சுவடியில் 'பிஞ்சகன்' என்றே பாடம் உள்ளது. அச்சுப் பிரதிகளில் 'பிஞ்ஞகன்' என்றே பாடம் உள்ளது. 'பிஞ்ஞகம்' என்பது தலைக்கோலத்திற்கு வழங்கும் பெயராகும். திவாகரநிகண்டு 'பிஞ்ஞகம் தலைக்கோலம்' என்று கூறும்[2]**

என்று எழுதியுள்ளார்.

பிஞ்சகன் என்பது சரியா? பிஞ்ஞகம் என்பது சரியா? என்ற வினாவிற்கு விடையாக பிஞ்சகன் என்பது சரியாகும் எனக் கொள்ளலாம். அடிகளாசிரியர் திவாகர நிகண்டைச் சான்றாகக் கொண்டு தலைக் கோலம் எனப் பொருள் கொண்டுள்ளார். அதாவது, பெண்கள் தலையில் அணியும் அணிகலன்களுள் ஒன்று தலைக்கோலமாகும். இக்கருத்தினை மேலும் உறுதியளிக்க அடிகளாசிரியர்,

> **......இது பெண்கள் தலைக் கோலத்திற்குரிய பெயராகும். இறைவன் பாதிப்பெண்மேனி யனாதலால் அப்பெண் வடிவத்திற்குள்ள தலைக்கோலமுடையான் என்று பொருள் கொள்ளலும் ஆம்"[3] என்று குறிப்பிட்டுள்ளார்.**
>
> **மேற்கருத்தோடு, "அன்றியே ஞானோபதேச காலத்தில் ஆசிரியன் தலைப்பாகையாகிய தலைக்கோல மணிந்தும், வீரக்கழலணிந்தும் அருள் புரிதலின், "பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க" என்றார் எனலுமாம்.[4]**

மேற்குறித்த விளக்கத்தோடு **சித்பவாநந்தர், கா.சு.பிள்ளை** ஆகியோர் உரைகளையும் குறிப்பிட்டுள்ளார். இவ்வாறு பிஞ்சகன் என்னும் பாடவேறுபாட்டுச் சொல்லை உறுதியாக்க அடிகளாசிரியர் கொடுத்துள்ள ஆய்வுக் குறிப்புகள் அவரது அறிவின் நுட்பத்தை உணர்த்துகின்றன.

கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அவிழ்க்க வல்லானே

திருவாசகச் சிவபுராணத்துள் எண்பத்து எட்டாவது அடி, **"கள்ளப் புலக்குரம்பைக் கட்டு அவிழ்க்க வல்லானே"** என்பதாகும். பல திருவாசகப் பதிப்புகளில் இவ்வடி, **"கட்டு**

அழிக்க வல்லானே" என்ற பாடத்தில் உள்ளது. கட்டு அவிழ்க்க வல்லானே என்பது சரியா? கட்டு அழிக்க வல்லானே என்பது சரியா? என்பதைச் சிந்திப்போம்.

புறஉடம்பாகிய தூலஉடம்பு மின்னலைப் போலத் தோன்றிநின்று மறைந்திடும். சூக்கும உடம்போ அவ்வாறு சிலகாலத்துள் அழிவதில்லை. அதுபடைப்புக் காலம் தொடங்கித் தோன்றிப் பிரளயகாலம் வரை அழியாதிருக்கும். இதற்குக் கள்ளப்புலக் குரம்பை புரியட்ட காயம் என்பன பெயராகும். இக்கருத்தைத்தான் மாணிக்கவாசகர், **"கள்ளப் புலக்குரம்பைக் கட்டவிழ்க்க வல்லானே"** என்று குறிப்பிட்டுள்ளார். புலன் ஐந்துடன் புத்தி, மனம், அகங்காரம் என்னும் மூன்றையும் சேர்த்து எட்டாக்கி இவ்வெட்டினையே புரியட்ட காயம் என்றும், கள்ளப்புலக் குரம்பை என்றும் அழைக்கின்றனர்.

உடம்பின் அழிவிற்குப் பின் அவ்வுடம்பு மீண்டும் இவ்வுலகில் வந்து வினைக்கு ஏதுவான பிறப்பில் சாராமல் கள்ளப்புலக்குரம்பை என்னும் சூக்கும உடம்போடு அவரைப் பிணைத்திருக்கும் முடிச்சினை அவிழ்த்துவிடும் பணியை வல்லமை படைத்த இறைவன் செய்வான் என்க. ஆதலால்தான் அடிகளாசிரியர், "கட்டுஅவிழ்க்கும் வல்லவன் இறைவன் ஆவான் என்பதை உணர்ந்த கட்டுஅவிழ்க்க வல்லானே என்ற பாடமே சிறந்தது எனக் கூறியுள்ளார். கட்டி அவிழ்த்திடும் வல்லமை உடையவன் இறைவன் என்பதைத் திருமூலர்,

> **"ஒட்டிய பாசம் உணர்வது ஆகவே**
> **கட்டி அவிழ்த்திடும் கண்ணுதல்**
> **காணுமே"[5]**

என்றவாறு உணர்த்தியுள்ளார்.

> **"கட்டவிழ்க்க வல்லானே என்றும் கட்டழிக்க வல்லானே என்றும் இவ்வடிகட்குள்ள இரண்டு பாடங்களில் முதற்பாடம், "ஒட்டிய பாசம் உணர்வது வாகவே, கட்டி அவிழ்த்திடும் கண்ணுதல் காணுமே" (2124) என்னும் திருமந்திரப் பாடலுக்கு ஒத்திருத்தலை அறிக என்று அடிகளாசிரியர் எழுதியுள்ள கருத்தும் சிந்திக்கத் தக்கதாம்."[6]**

முடிவுரை

திருவாசகச் சிவப்புராணத்துள் தொண்ணூற்றிஐந்து அடிகளுள் இருபது பாடபேதங்கள் அடிகளாசிரியரால் குறிக்கப் பெற்றுள்ளன. அவற்றுள் இரண்டு பாடபேதங்களை மட்டும்

சிந்தித்தோம். மாணிக்கவாசகர் கூறியவாறு, **"சொல்லிய பாட்டின் பொருள் உணர்ந்து சொல்ல,"** சுவடிநோக்கு மிகவும் துணை செய்கின்றது.

குறிப்புகள்

1. திரு. அடிகளாசிரியர், சிவபுராணச் சிற்றுரை, ப. 70.
2. மேலது, ப. 34.
3. மேலது, ப. 34
4. மேலது, ப. 34
5. திருமந்திரம், செய்யுள், 2124
6. திரு. அடிகளாசிரியர், சிவபுராணச் சிற்றுரை, ப. 94

முதன்மை நூல்

திரு. அடிகளாசிரியர்
சிவபுராணச் சிற்றுரை,
(அ.சிவபெருமான் - பதிப்பாசிரியர்)
திருவருள் நிலைய வெளியீட்டகம்,
குகையூர் - அஞ்சல்
விழுப்புரம் மாவட்டம் - 606 306
இரண்டாம் பதிப்பு - 1996.

திருவாசக உரைவேறுபாடுகள்

முனைவர் க.முருகேசன்

வான் கலந்த மாணிக்கவாசக நின் வாசகத்தை
நான்கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே
தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை கலந்து
ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே

(திருவருட்பா:5–12–7)

நெஞ்சகக் கனகல்லும் நெக்குருக வைத்து எந்நாட்டவர்க்கும் இறைவனாகியப் பரம்பொருளைப் பக்திச் சுவையால் அடைந்து உளம் மகிழ்ந்து கரைந்து கரைந்து உருகித் திளைத்த ஆனந்த அனுபவத்தின் பிழிவாகிய திருவாசகத்திற்கு உரையெழுதுவது தீங்கெனச் சிந்திக்கப் பெற்ற காலகட்டத்தைக் கடந்து, மணிவாசகர் பெற்று உகந்த பேரின்பத்தைத் திருவாசகத்தைக் கற்றுணரும் கல்மனமுடையோர் களிபேருவுவகை கொண்டு–யர வேண்டுமெனும் கருணை மனமுடைய அருளாளர்கள் வழங்கியுள்ள உரைகள் எண்ணிறந்தவை. அவற்றில் ஜி.வரதராசப்பிள்ளை, கா.சுப்பிரமணியப்பிள்ளை, அ.ச.ஞானசம்பந்தன் போன்ற முப்பெரும் புலவர்களின் உள்ளத்தில் ஊறித் திளைத்தெழுந்துள்ள உரை நூல்களை முன்னிறுத்தி, சிவபுராணம், கீர்த்தி திருஅகவல், திருஅண்டப்பகுதி ஆகிய மூன்று பகுதிகளுக்கு வழங்கப்பட்டுள்ள உரை வேறுபாடுகளைக் கண்டறிந்து வெளிப்படுத்துவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கல்லைப் பிசைந்து கனியாக்கிச் சைவரசம்
புல்லைப் பிழிந்து புதுமை செயும் பொல்லாத
தொல்லைக் கடற்பிறவித் துன்பகல ஈதென்ன
மல்லற் கரை காட்டும் வான் சோதி வாசகமே

வாசகம் வழங்கும் பொருள்

இறைவன் புகழைச் சொல்லாதோரை நெஞ்சுருகச் சொல்ல வைக்கும் தன்மையதாய், இறைநெறியில் நில்லாதோரை அந்நெறியில் நிற்கச் செயும் வன்மையதாய், பொல்லா வழிகளைப் போக்கறுத்து நல்வழியாக்கி வாழவைக்கும் பான்மையதாய திருவாசகத்தை, வல்லாளனின் வாமலரினின்று ஊறிச் சொறிந்த நறுந்தேனாக உருவகித்து மகிழ்வர் அன்பர். வீடு விரும்புவாரது உள்ளத்தைக் கவரும் பேரழகுடைய அருள்மொழி நூலாகிய திருவாசகத்தின் முதலாவதாக அமைந்துள்ள சிவபுராணம் சிவனது அநாதி முறைமையான பழமையைப் பாடுவதாகும்.

'நமச்சிவாய வாழ்க' எனத் தொடங்குவதில், "திருவைந்தெழுத்தின் வடிவமாகவும், கண் இமைக்கும் நேரமுங்கூட மனத்தினின்றும் நீங்காதவனாகவும், ஆகம வடிவமாகி நின்று இனிமையைத் தருபவனாகவும், ஒன்றாயும் பலவாயும் திகழ்பவனாகவும் அருட்காட்சி தரும் இறைவனின் திருவடி வாழ்க" என்று ஜி. வரதராசப்பிள்ளை உரை எழுதுகின்றார்.

சித்தாந்த நூல் முறைப்படி 'நமச்சிவாய' என்பதற்கு எழுத்துப் பொருள் கொள்ளுமிடத்து, 'நகரம்' உயிர்கள் உலகியலில் செல்லுதற்குத் துணைபுரிந்து நிற்கும் கடவுளது மறைப்புச் சக்தியைக் குறிக்கும். 'மகரம்' மலமாகிய உலக பாசத்தைக் குறிக்கும். 'சிகரம்' சிவமாகிய கடவுளைக் குறிக்கும். வகரம் வீடடைவதற்குத் துணைபுரியும் அருட்சக்தியைக் குறிக்கும். 'யகரம்' உயிரைக் குறிக்கும். ஆணவத்துள் கிடக்கும் உயிரினைப் பிறவிக்கட்டினுட்படுத்தி, உலகியலில் செலுத்தியும், ஆணவம் நீங்குவதற்குரிய பக்குவம் வந்தபோது கட்டுக்களை ஒழித்து அருட்சக்தி வாயிலாகத் தன்பால் வீடு பெறுவித்தும் உயிருக்கு நன்மை புரியும் கடவுளின் பெருந்தன்மையைத் திருவைந்தெழுத்து விளக்குகின்றது" என்று கா.சு.பிள்ளை உரை வகுத்துள்ளார்.

இப்பகுதிக்கு, "தொழிற்படாது இருக்கும்போது அதனுள் அடங்கி யிருக்கும் ஆற்றல் அடங்கு ஆற்றல் (potential energy) என்றும், அது தொழிற்படும்போது வெளிப்படுவது இயங்கு ஆற்றல் (kinetic energy) என்றும் சொல்லப் பெறும். சிவசக்தி சொரூபம் இத்தகையது. நமச்சிவாய என்ற சொல்லின் ஒலி வடிவம் ஆற்றலின் சேர்க்கையாகும். ஒவ்வொரு எழுத்தையும் உச்சரிக்கும்போது ஒவ்வோர் எழுத்துக்குமுரிய அதிர்வுகள் (vibrations) வெளிப்படுகின்றன. தோற்றத்தை ஆராயும்போது பேரொலியில் இருந்து இவ்வண்டம் தோன்றியிருக்க வேண்டுமென்ற ஒரு தத்துவத்தைப் 'பெரும் பேரொலித் தோற்றம்' (ஃஷபை ஃஷயபே) என்ற கொள்கையால் வலியுறுத்துவது இறைவனுடைய ஆதி நாத சொரூபத்தையே யாகும்" என்று அ.ச." ஈ. தரும் விளக்கத்தின் வழியாக (ப.23–25) இன்றைய விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்பு களுக்கு ஒப்ப, பல்லாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே தமிழர் அண்டத்தைப் பற்றிய நுண்ணறிவு பெற்றிருந்த செய்தி பெறப்படுகின்றது.

பிஞ்கம்–தலைக்கோலம். பிஞ்ஞகம்=பின்னகம்=பின்+நகம் (தலையின்) பிற்பகுதியில் விளங்கும் அணி என்று கா.சு.பிள்ளை குறிப்பிட்டுள்ளார். பிஞ்ஞகன் – பிறை, கங்கை, அரவம் முதலிய தலைக்கோலங்களை உடையவன் என்று ஜி.வரதராஜப்பிள்ளை உரை வகுத்துள்ளார்.

'பிஞ்ஞகன்' என்பது 'பிஞ்சம்' எனப் பொருள்படும். 'அறுக்கும்' என்ற வினைச்சொல்லுக்கு வினை முதலாக இருப்பவன் என்று பொருள்கொண்டாலும், அபயகரமோ, கண்களோ, ஊன்றிய திருவடியோ பிறப்பை அறுக்க உதவுவதில்லை.

அவனுடைய தூக்கிய திருவடிதான் பிறப்பை அறுக்கப் பயன்படும். எனவே 'அறுக்கும் பிஞ்ஞகன்' என்று கூறுவதைவிட, 'பிறப்பை அறுக்கும் பெய்கழல்கள்' என்று பொருள் கொள்வது பொருத்தமாக இருக்கும் என்று அ.ச.ஞா. குறிப்பிடும் உரை விளக்கம் மனங்கொள்ளத்தக்கது.

இறைவனது ஞானத்தைப் பெறுவதற்கு முன்பே சரியை, கிரியை, யோகம் என்னும் நற்றவ வழியில் நிற்றற்கு அவன் திருவருள் வேண்டப்படுமாதலின் 'அவனருளாலே அவன்தாள் வணங்கி' எனப் பாடினார் மணிவாசகர். எல்லாப் பொருள்களையும் இறைவன் திருவருளாலே அறிந்து வரும் உயிர், இறைவனை அறிவதும் அவனுடைய அருளின் வலிமையால்தான்.

ஐம்பூதங்களில் கலந்து நின்றும், அதற்கு அப்பாலும் வியாபித்து விளங்கும் இறைவன் விண்ணிறைந்து மண்ணிறைந்து உள்ளான் என இறைப்பெருமையைக் காட்டும் மணிவாசகர், உயிர்களின் சிறுமையைப் 'பொல்லா வினையேன்' என்ற தொடரால் சுட்டுகின்றார். 'எண் இறந்து எல்லை இலாதானே' என்று இரண்டு தொடர்களைப் பயன்படுத்துவதன் நோக்கம் யாதெனில் எண்ணும் அளவை நீண்டுகொண்டே சென்றால் இறுதியில் எண்ணிலி (ஐடே-கமைவெல) என்று கூறும் அறிவியல் சொல்லைத்தான் அடிகளார் 'எண் இறந்து' என்று கூறுகிறார். மேலும் ஞ'யஉந என்னும் பரப்பளவைக் கடந்தவன் ஆதலால் 'எல்லை இலாதானே' என்று பாடினார்.

உலகத் தோற்றத்தில் கற்பாறை அணுக்களில் அடங்கிக் கிடந்து, பின் புல்லாகியும், அடர்ந்த புற்செடிகளாகியும், மரங்களாகியும் படைக்கப்பட்டு நிகழ்கின்ற பலகோடி நிலையியற் பொருள்களுள்ளும், புழு, பாம்பு முதலிய ஊர்வனாவாகியும், பறப்பனவாகியும், விலங்குகளாகியும், மக்களாயும், பேயினங்களாயும், பூதகணங்களாயும், வல்ல அசுரராயும், முனிவராயும், விண்ணவராயும் படைக்கப்பட்டு இயங்குகின்ற பல்கோடி பிராணிகளுள்ளும், எல்லா வகையான பிறப்பினும் உடலெடுத்து இறந்து உழன்று அலுத்தேன் என உயிர்த்தோற்ற முறை உரைக்கப்பட்டது. டார்வினுடைய கூாநடிசல டிக நுளடி-டரவடிைே மேற்கண்ட பாடல் வரிகளில் பதிவாகி இருப்பதாக அ.ச.ஞா. குறிப்பிடுகின்றார்.

எட்டாம் நூற்றாண்டில் தோன்றிய மாணிக்கவாசகரை ஒரு மாபெரும் விஞ்ஞானியாகக் கருத, சிவபுராணத்தில் 26 முதல் 31 வரை அமைந்துள்ள அடிகள் இடந்தருகின்றன.

இதன் வரிசை அமைப்புமுறையைப் பின்வருமாறு மாற்றிக் கொண்டால் கூர்தல் அறத்தை அறியமுடியும். கல், புல், பூடு, மரம், புழு, பாம்பு, பறவை, பல்வேறு வகைப்பட்ட மிருகம், மனிதர் என்று உயிர் வளர்ச்சி முறையை வரிசைப்படுத்திக் காணவேண்டும். இது இன்று விஞ்ஞானம் ஏற்றுக்கொள்ளும் அமைப்புமுறை என்ற விளக்கம் புதிய சிந்தனையைத் தோற்றுவிக்கின்றது.

சிவபுராணத்தில் காணப்படும் 'ஓங்காரமா நின்ற' என்ற தொடருக்குக் கா.சு.பிள்ளை, எனது நெஞ்சத்துள் (ஐந்தொழிற்கும் காரணமான) ஓம் என்ற முதுமொழி வடிவா நின்றவன் என உரைவிளக்கம் தந்துள்ளார். இவரது உரையால், இறைவன் உயிர்களின் பொருட்டுச் செயும் படைத்தல் முதலான ஐந்தொழிற்கும் ஓங்காரமாகிய நாததத்துவமே முதலாக விளங்குவதை அறியமுடிகின்றது. இச்சொல்லை ஆதிநாதம் (Pri-mordial sound) என்று குறிப்பிட்டுள்ளார் அ.ச.ஞா. அசுத்தமாயா காரியமாகிய இப்பிரபஞ்சத்தில் தோன்றும் எந்த ஒலியும் தோன்றி மறையும் இயல்புடையது. ஆயின், ஆதிநாதமாகிய ஓங்காரம் என்றைக்கும் மறைப்பில்லாதது என்னும் சித்தாந்த செம்பொருள் இவர் உரையால் விளக்கம் பெறுகின்றது. ஓம் என்ற ஒலி அ,உ,ம் என்ற மூன்று ஒலிகளாப் பிரியும் என்றும், அம்மூன்றும் முறையே படைத்தல், காத்தல், அழித்தலாகிய முத்தொழில்களைக் குறிக்கும் என்றும் ஜி.வரதராஜப்பிள்ளை உரை வகுத்துள்ளார். கா.சு.பிள்ளை ஐந்தொழிற்கும் காரணமாக பிரணவ ஒலி அமைவதாகக் குறிப்பிட, ஜி.வரதராஜப்பிள்ளை மறைத்தல் அருளல் ஆகிய இரண்டையும் மூன்றினுள் அடக்கி நயமாக உரைசெ–துள்ளார்.

இறைவன் மிக நுட்பமானவன் ; அங்கும் இங்கும் எங்கும் நீக்கமற நிறைந்திருப்பவன். நுண்பொருளுக்குத்தானே எங்கும் நிறைந்திருக்கும் தன்மையுண்டு. அதைக் குறிப்பிட 'ஆழ்ந்தகன்ற நுண்ணியனே' என்று மணிவாசகர் பாடியதாக ஜி. வரதராஜப்பிள்ளை உரைகாட்டுகின்றார்.

இதற்கு முற்றிலும் மாறுபாடான உரை விளக்கத்தை அ.ச.ஞா. காரணத்துடன் எடுத்துரைக்கின்றார். வேதங்களால் காணமுடியாத, அறியமுடியாத அப்பொருளை வேறு வகையில் விளக்க முடியாதா என்று சிந்திக்கின்றார். விஞ்ஞானி ஆதலால், மனித மனத்தின் எல்லைக்குள் அகப்படுகின்ற நான்கு பரிமாணங்களையும் ஒருசேரப் பேசுகின்றார். ஓங்கி, ஆழ்ந்து, அகன்று என்று கூறும்போது முப்பரிமாணங்கள் (three dimensions) வெளிப்படுகின்றன. அடுத்து வருகின்ற 'நுண்ணியனே' என்ற சொல் மூன்று பரிமாணங்களும் தோன்றி மறைவதற்குக் காரணமாயுள்ள நான்காவது பரிமாணமாகிய காலத்தத்துவத்தைக் குறிப்பதாகும் என்ற உரை சற்று சிந்திக்கத்தக்கது. இவர் மணிவாசகரை இறையடியார் என்பதைவிட விஞ்ஞானி என்னும் நிலையிலேயே வைத்தெண்ணும் போக்கும், அதன்வழி வெளிப்படும் உரைநயங்களும் இன்றைய காலகட்டத்திற்கு ஏற்புடைய வகையில் அமைந்துள்ளது.

கீர்த்தி என்ற வடசொல் பழைய இலக்கியங்களில் காணப்பெறவில்லை. எனவே எட்டாம் நூற்றாண்டில் வாழ்ந்த அடிகளார் இப்பெயரை இட்டிருப்பாரோ என்பது சிந்தனைக்குரியது என்று அ.ச.ஞா. குறிப்பிட்டுள்ளார். கீர்த்தித் திருஅகவல் – இறைவன் அன்பர்க்கருள் புரிந்த செதிகளைக் கூறுவதன்

வாயிலாக அவன் புகழினை இயம்பும் அகவற்பா என்று கா.சு.பிள்ளை எழுதுகின்றார். திருப்பெருந்துறையில் அமைச்சராகப் பரிவாரங்களுடன் வந்த ஒருவர் குருநாதரைக் கண்ட பிறகு அடிகளாராக மாறிய 'மடைமாற்றம்' நிகழ்ந்தமையை கீர்த்தித்திரு அகவல் விளம்புகின்றது என்கின்றார் ஜி.வரதராஜப்பிள்ளை.

'நள்ளிருளில் நட்டம் பயின்றாடும்' என்ற தொடரிலுள்ள 'நள்ளிருள்' என்ற சொல்லுக்கு ஜி.வரதராஜப்பிள்ளையும், கா.சு.பிள்ளையும் 'சங்கார காலம்' என்று பொருளுரைத்துள்ளனர். ஆனால் அ.ச.ஞா., 'நள்ளிருள்' என்பது அஞ்''ானமாகிய இருள் ; சோதி வடிவினனாகிய இறைவன் பேரொளியைப் பரப்பி நின்று நடனமாடி, அஞ்''ானத்தை நீக்குகின்றான் என்று வேறுபாடான உரை நயத்தைக் காட்டுகின்றார்.

'கோகழி' என்னும் சொல்லிற்கு அ.ச.ஞா அவர்களும் ஜி. வரதராஜப்பிள்ளையும் 'திருப்பெருந்துறை' என்று பொருள் கூறியுள்ளனர். கா.சு.பிள்ளை 'கோகழி' என்னும் சொல் திருப்பெருந்துறை மற்றும் திருவாடுதுறை ஆகிய இரண்டையும் குறிக்கிறது என்கிறார். மேலும், அவரே உரிய விளக்கத்தையும் தந்து தெளிவுபடுத்தியுள்ளார். 'கோ' என்னும் ஓரெழுத்தொரு மொழிக்கு பசு என்பது பொருள். பசு ஆன்மாவைக் குறிக்கும். கழி-என்பது நீக்கம் ; பசுத்தன்மை நீக்கிய இடம் எனக் கொண்டால், அது திருவாடுதுறைக்குப் பொருந்தும் என்று காரணம் காட்டுகின்றார். 'கோ' என்பதற்குப் 'பெரிய' எனவும், 'கழி' என்பதற்குத் 'துறை' எனவும் பொருள் கொண்டு, 'பெரியதுறை' அதாவது 'பெருந்துறை' என்றும் விளக்குகின்றார்.

'நந்தம்பாடியில்' என்னும் சொல்லிற்குத் திருப்பதியில் வேதியனா முடிவற்ற ஆசிரியனா எழுந்தருளினான் என்று ஜி. வரதராஜப்பிள்ளை எழுதுகின்றார். நமது பாடி எனப் பிரித்து பொருள் விளக்கம் செகின்றார் கா.சு.பிள்ளை. பாடி என்னும் சொல்லிற்கு ஊர் என்பது பொருள். சான்றாக,

கோடி காவனைக் கூறாத நாளெல்லாம்
பாடி காவலிற் பட்டுக் கழியுமே (5:78:6)

என்னும் அப்பரடிகளின் அருள்வாக்கில் பாடிகாவல் என்பது ஊர்க்காவல் என்னும் பொருளையே தருகின்றது. எனவே தாம் பிறந்த ஊரான (நமதுபாடி) திருவாதவூரை இச்சொல் குறிக்கும் என்னும் கா.சு.பிள்ளையின் சிந்தனையும், சொல்லாராச்சியும் கற்போருக்கு உரை விருந்தா அமைந்துள்ளது.

தேனமர் சோலைத் திருவாரூரில்
ஈனந் தன்னை நல்கிய நன்மையும்
இடைமரு ததனில் ஈண்ட விருந்து
படிமம் பாதம் வைத்தவப் பரிசும் (73–76)

என்ற நான்கு அடிகளுக்குப் பொருள் விளங்கவில்லை என்று அ.ச.''ா குறிப்பிட்டுள்ளார். இதற்கு ஜி. வரதராஜப்பிள்ளை, "தேன் பொருந்திய மலர்ச்சோலை சூழ்ந்த திருவாரூரில் "ஈனத்தைக் கொடுத்த நன்மையும் ; திருவிடைமருதூரில் மிக இருந்து பரிசுத்தமான திருவடியை வைத்த அந்தத் தன்மையும்" என்று உரை எழுதுகின்றார். இக்கருத்து கா.சு.பிள்ளையின் உரை விளக்கத்துடன் ஒத்துச் செல்கின்றது.

'ஏல என்னை ஈங்கு ஒழித்து அருளினான்' என்ற அடியில் வரும் 'ஏல' என்ற சொல்லிற்குப் பிற உரையாசிரியர்கள் கூறுவது போல 'வினைக்கு ஏற்ப' என்று பொருள் கொள்வது பொருந்தாது. 'ஏல' என்ற சொல்லுக்குப் 'பொருந்துமாறு' என்று பொருள் கொள்வதே சரியானது. இறைவனுடைய எண்ணத்திற்குப் பொருந்துமாறு எனக் கொள்வதே சரியானது என்று அ.ச.ஞா கூறும் உரைநயம் சுட்டத்தக்கது.

திருஅண்டப் பகுதியின் முதல் ஆறு அடிகள் பத்தொன்பதாம் நூற்றாண்டில் விரிவடைந்த வானியல் அறிவைப் புலப்படுத்திக் காட்டுகின்றது. வானவியலாளர் ரளைநசளந என்று குறிப்பிடுவதைத் தமிழர் அண்டம் எனக் குறிப்பிட்டனர். பால்வெளி மண்டலத்தில் உள்ள பல்லாயிரம் மண்டலங்களும், அவற்றின் திசைவிரிவுகளும், பரிதிவட்டமும்(circumference)இ ஒளிக்கற்றையும், ஒளியின் வேகமும், அண்டத்தின் விரிவடைவும் (Expanding universe) அறிவியலாளர்களால் கண்டறியப்பட்டு அறிவுறுத்தப்பட்டுள்ள வானியல் கருத்தை மணிவாசகர் வெளிப்படுத்துவதாக அ.ச.ஞா. குறிப்பிடு கின்றார்.

கதிரவனைச் சுற்றியுள்ள உலகங்களின் தொகுப்பை ஒரு அண்டம் எனலாம். உலகங்கள் அண்டத்தின் பகுதிகளாக உண்டை வடிவினவாக அமைதல் காண்க. 'நூற்றொரு கோடி' என்பது அளவின்மையைப் பெரிதாகக் குறித்து நின்றது என்று கா.சு.பிள்ளை உரை விளக்கம் தருகின்றார்.

அண்டம் என்பது முட்டை வடிவமானது. பூவுலகம், மேலுலகம் ஏழு, கீழ் உலகம் ஏழு அவற்றிற்கு மேல் அண்டச்சுவர் ஆகிய எல்லாம் ஓர் அண்டமாகும். அண்டங்களின் அளவை முழுவதும் காணமுடியாது. ஆகையால் அது 'அளப்பெருந்தன்மை' என்ற சொல்லால் சுட்டப்படுகின்றது என்று ஜி. வரதராஜப் பிள்ளை உரை விளக்கம் தருவதோடு பரஞ்சோதி முனிவர், "அண்டங்கள் எல்லாம் அணுவாக அணுக்களெல்லாம் அண்டங்களாகப் பெரிதாச் சிறிதாயினும்" என்று திருவிளையாடற்புராணத்தில் இறைவனது பெருமையை வியந்து உரைப்பதாகச் சான்று காட்டுகின்றார்.

ஒன்றைக் கூர்ந்து கவனித்தால் மட்டுமே கட்புலனாகும் சிறு துகள்

ஒன்று; கற்பனைக்கு அடங்காமல் விரிந்து நிற்கும் பேரண்டம் இரண்டு ; சொல், கண், மனம், கற்பனை ஆகிய அனைத்தையும் கடந்து இப்பேரண்டத்தைத் தனக்குள் ஒரு சிறு துகளாக வைத்துக் கொண்டிருக்கும் இறைவடிவம் மூன்று ; ஒளிக்கற்றையில் காணப்படும் மிக நுண்ணிய துகளை விட இப்பேரண்டம் சிறுத்து விடுகிறது என்று அறிவியல் நோக்கில் அ.ச.ஞானசம்பந்தன் தரும் உரை விளக்கம் நோக்கத்தக்கது. விண்வெளியில் காணப்படும் கோள்களாகிய உண்டைகள் (ள'ாநசந) விரிந்து கொண்டே செல்கின்றன என்ற கருத்தைப் 'பிறக்கம்' என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார்.

அண்டங்களின் விரிவாக்கம் என்பது ஒரு உண்டையை அடுத்து அதைச் சுற்றியுள்ள மற்றொரு உண்டை ஏதோ ஒரு கோணத்தில் விரிவதாகவும், அக்கோணம் மாறாமல் இருக்கும் அழகு நோக்கத்தக்கது என்பதையும் அறிவுறுத்த 'நின்று எழில்' எனும் சொல்லை மணிவாசகர் பயன்படுத்துவதாக உரையாசிரியர்கள் சுட்டுகின்றனர்.

நிறைவுரை

திருவாசகத்திற்கு உரை எழுதிய சான்றோர் பெருமக்களில் ஜி.வரதராஜப்பிள்ளை, கா.சு. பிள்ளை, அ.ச.ஞானசம்பந்தன் ஆகிய அடியார் பெருமக்களின் உரையென்பது பரந்து விரிந்த கடல் போன்றது. அக்கடலில் முத்தைத் தேடுவதுபோல அவர்களுடைய உரைநயங்களையும் உரைவேறுபாடு களையும் கண்டறிய இக்கட்டுரை முயற்சி செதுள்ளது. ஒரு சொல்லுக்குப் பொருளுரைப்பதிலும், பாடலோடு இயைபுபடுத்திக் காட்டுவதிலும், மூவருக்கு மிடையே சில ஒற்றுமைகள் காணப்பட்டாலும், அவரவருடைய நுண்மான் நுழைபுலமைக்கு ஏற்ப உரைவேற்றுமையும், பாடபேதங்களும் காணப்படுகின்றன. அணுவில் உள்ள அணுவாக இருக்கும் பரமாகிய சிவம் இவர்களின் உள்ளக் கோயிலில் வீற்றிருந்து உணர்த்தியதைத் தாங்கள் உணர்ந்துகொண்டு பதிவு செய்திருக்கிறார்கள் என்றுதான் சொல்ல வேண்டும். இறைவனின் அளப்பறிய தன்மையைப் போல இவர்களின் உரை சிறப்பும் விரிந்தே செல்கிறது என்றால் அது மிகையன்று.

துணைநூல்கள்

1. ஜி.வரதராஜப்பிள்ளை, திருவாசக உரை.
2. கா.சுப்பிரமணிய பிள்ளை, திருவாசகம், கழக வெளியீடு, 1997
3. அ.ச.ஞானசம்பந்தன், திருவாசகம் சில சிந்தனைகள்–நான்கு அகவல்கள் கங்கை புத்தக நிலையம், சென்னை, இரண்டாம் பதிப்பு–2000.

திருமந்திரம் எட்டாம் தந்திரம் பாட, உரை வேறுபாடுகள், இரு உரை ஒப்பாய்வு

புலவர். புவை. சூ. செயராமன்

முன்னுரை

கல்தோன்றி மண் தோன்றாக் காலத்தே முன்தோன்றிய மூத்த குடியினரின் இனிய மொழியே தமிழ் ஆகும். காலத்தால் அழியாது விளங்கும் அரிய கருத்துக்களை உடைய நூற்கள் பலவற்றைத் தன்னகத்தே கொண்டு விளங்கும் நூற்கடலும் தமிழே. சங்கம் வைத்தும் சுவடிகளைப் புதுக்கியும் மொழிகாத்த பெருமை தமிழர்க்கே உண்டு. பல சமயங்களைத் தோற்றி, காத்து விளங்கிய பெருமையும் தமிழர்க்குண்டு. அவர் காத்து வழங்கிய அரிய சைவத் திருமுறை நூலாம் திருமந்திரத்தின் எட்டாம் தந்திரத்தே அமைந்துள்ள பாட, உரை வேறுபாடுகளைத் ஜீ. வரதராசனார் விரிவுரை வழியும், அடிகளாசிரியர் மூலமும் உரை வழியும் ஒப்பாய்ந்து உரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

திருமூலர்

திருமூலர் அறுபத்து மூன்று நாயன்மாரில் ஒருவராவார். பதினெண் சித்தருள் முதன்மைச் சித்தர். இவரைத் திருத்தொண்டர்த் தொகையில் சுந்தரர்,

நம்பிரான் திருமூலன் அடியார்க்கும் அடியேன்

என்பார். நம்பி ஆண்டார் நம்பியால்,

குடிமன்னும் சாத்தனூர் கோக்குல மேய்ப்போன்; குரம்பைபுக்கு,
முடிமன்னு கூனற் பிறையாளன் றன்னை முத்தமிழின்
படிமன்னு வேதத்தின் சொற்படி யேபர விட்டெனுச்சி
அடிமன்ன வைத்த பிரான் மூல னாகிய அங்கணனே,

(திருத்தெண்டர் திருவந்தாதி - 36)

எனப் பகரும் சிறப்பினர்.

சதாசிவத் தத்துவ முத்தமிழ் வேதம் படைத்த தத்துவர்.
செந்தமிழ் ஆதி தெளிந்து வழிபடு நந்தி
நந்தி யிதனை நவமுறத்தந் தானே (திருமந்திரம் - 1089)

செந்தமிழ் ஆதியைத் தெளிந்து வழிபடும் நந்தி இதனைப் புதுமையாய் உரைக்க உரைத்ததாக அவர்தம் அகச்சான்றும் இவர்பற்றி கூறக் காண்கின்றோம்.

திருமந்திரம்

பன்னிரு சைவத் திருமுறைகளுள் பத்தாம் திருமுறையாக விளங்குவது திருமந்திரம். இஃது மந்திரமாலை, திருமந்திர மாலை எனவும் வழங்கப்படுகின்றது. இது,

என்னை நன்றாக இறைவன் படைத்தனன்
தன்னை நன்றாகத் தமிழ்செய்யு மாறே! (திருமந்திரம்-81)

என்னும் திருமூலரால் படைக்கப்பட்டதாம்.

மந்திரம் என்பது மனதில் இருத்திப் பயன் தருவது,' என்பார் அடிகளாசிரியர். மனத்தில் இருத்திப் பயன்தரும் இந்நூல் முழுமைக்கும் ஜீ.வரதராசனார் விரிவுரை கண்டுள்ளார்.

அடிகளாசிரியர் எட்டாம் தந்திரம் முழுமைக்கும் உரை கண்டுள்ளார். திருமந்திர உணர்வு, திருமந்திரத் திரட்டு முதலாகப் பல பாக்களுக்கும் விளக்கம் கண்டுள்ளார். இவ்விருவரின் எட்டாம் தந்திர விளக்க நூற்களே ஒப்பாய்வுக்கு உரிய பகுதிகளாம். இது

மூலன் உரைசெய்த மூவாயிரம் தமிழ் (திருமந்திரம் - 99)

என்று கூறப்பட்ட போதும் காப்பு பாயிரம் முதலாக மூவாயிரத்து நாற்பத்தெட்டு (3048) பாக்களும், சுவடிகளில் காணப்படும் பதினொரு (11) பாக்களும், சைவசித்தாந்தப் பதிப்பில் வெளியிட்ட பதினேழு (17) பாக்களும், முத்தி நிச்சயப் பேருரையில் எடுத்தாளப்பட்ட முப்பது (30) பாக்களுமென மூவாயிரத்து நூற்று ஆறு (3106) பாக்களுடன் திருமந்திரம் விளங்குகின்றது. மூவாயிரத்திற்கு மேற்பட்ட மிகு பாக்கள் போலச் செய்தலால் அமைந்த இடைச்செருகலாகும் என்பர்.

பாடவேறுபாடுகளின் ஏதுக்கள்

இலக்கியங்களுள் பாட வேறுபாடுகள் தவிர்க்க முடியாதனவாகவே கருதப்படுகின்றன. இனி பாடவேறுபாடுகளுக்கான ஏதுக்களைக் (காரணங்களைக்) காண்போம். பாடவேறுபாட்டிற்கான ஏதுக்கள்.

- ஏடு பெயர்த்து எழுதுவார் குறைபாடு.
- ஏடு எழுதுவதில் புள்ளியிட்டு எழுத முடியாத தன்மை.
- எழுத்துரு அமைப்பின் சிக்கல்.
- ஏடு எழுதுவாரின் யாப்பறிவின்மை;
- ஏடு பயில்வாரின் யாப்பறிவு;
- உரையாசிரியரின் தற்கருத்து ஏற்றம்;
- நூலாசிரியரின் கருத்தினும் செம்பொருள் சேர்க்க விழையும் உரையாசிரியரின் உள்ளம்;

- எழுத்துப் பிறப்பியல் அறியார் மொழிகேட்டு எழுதுதல்;
- பழஞ்சொற்பொருள் அறியாமை;
- தம்பொருள் இழந்த பழஞ்சொற்கள்;
- தற்கருத்து விளக்க பாடவேறுபாடு கொள்ளல்;
- சொல்லப்பட்ட கருத்தோடு இயைந்து செல்ல பாட வேறுபாடு கொள்ளுதல்;
- பிழையற வேறுபாடு கொள்ளுதல்;

முதலானவை பாடவேறுபாடு அமைய ஏதுக்களாகின்றன.

உரைவேறுபாட்டின் ஏதுக்கள்

- பெரும்பாலான பாட வேறுபாடுகள் உரை வேறுபாட்டிற்கு ஏதுக்கள் ஆகின்றன.
- பிழையான பாடங்கள் பொருளை வேறுபடுத்துகின்றன.
- மயங்கொலிப் பிழைகள் உரைவேறுபாட்டிற்கு ஏதுக்களாகின்றன.
- சொற்பொருள் நுண்மை அறியாதபோதும் உரை வேறுபடுகின்றன.
- சொற்பிரித்துப் பொருள் காணும் வகையுளிகளும் உரையை வேறுபடுத்துகின்றன
- கொண்டு கூட்டு முதலான நிலைகளும் உரையை வேறுபடுத்துகின்றன.
- இலக்கணம், மரபு இவற்றாலும் உரைகள் வேறுபடுகின்றன.
- படைப்பாளியின் காலமும் உரைப்பாளியின் காலமும் வேறுபடுவதால் உரை வேறுபடுகின்றன.
- பயில்தோறும் நூல் நயமும் உரையை வேறுபடுத்துகின்றது.

இன்னும் பல ஏதுக்களினால் உரைகள் வேறுபட விளங்குகின்றன.

சி.வரதராசனார் விரிவுரையில் பாட வேறுபாடுகள்

திருக்குறள் வேள், செந்தமிழ்ப் புரவலர் திருமிகு சி.வரதராசனாரின் பதப்பொருள் விளக்கம் கருத்து நிறைந்த திருமந்திரம் (ஏழு, எட்டு, ஒன்பது தந்திரங்கள் கொண்ட மூன்றாம் தொகுதி) நான்காம் பதிப்பு (2002) எமக்குக் கிடைக்கப் பெற்றது. இந்நூலில் எட்டாம் தந்திரம் ஐந்நூற்று இருபத்து ஏழு பாடல்களில் பாடவேறுபாடுகளை நிரல்படுத்துகையில் நாற்பத்து மூன்று (43) செய்யுட்களில் நாற்பத்து எட்டு (48) பாட வேறுபாடுகளைத் தந்துள்ளவற்றைக் காண முடிந்தது. அவற்றுள் சில

வ.எ.	செய்யுள் பாடவேறுபாடு	செய்யுட்சீர்
1	2146	ஐந்தாளும் ஐந்தும்
2	2169	சொல்லும் செல்லும்
3	2191	அனல்வித்தை நல்வித்தை
4	2238	சிவஞ்சித்தி சிவஞ்சத்தி
5	2249	மூடவே மூன்றுடன்
6	2285	கனாஇடர்வீட்டுக் கனாவிட்டு மேவும்
7	2339	திருந்தனர் திருத்தினர்
8	2402	சென்றடங்கு சென்றடங்க
9	2423	பதிபர பதிபசு
10	2571	வந்து வந்நு

இப்பாட வேறுபாடுகள் பாடப் பொருளை வேறுபடுக்கச் செய்வன அங்கையில் நெல்லியாம்.

திரு அடிகளாசிரியர் உரையுள் பாடவேறுபாடு :

பேராசிரியர் முனைவர் அ.சிவபெருமானைப் பதிப்பாசிரியராகக் கொண்டு 2005 வெளியிடப்பெற்ற அடிகளாசிரியரின் திருமந்திரம் எட்டாம் தந்திரம் உரை என்ற நூலுள் காணக்கிடக்கும் பாட வேறுபாடுகளைக் குறித்துக் காண்போம்.

அடிகளாசிரியர் தம் நுண்மாண் சீர்புலத்தால் நூற்றுப் பத்தொன்பது (119) செய்யுட்களுள் நூற்று நாற்பத்தெட்டு (148) பாட வேறுபாடுகளைத் தந்துள்ளார்.

சில பாடவேறுபாடுகளைத் துணிந்து பிழையென மறுத்துள்ளார். எடுத்துக்காட்டாகச் செய்யுள் 2172-இல் நான்கும் என்ற சொல்லிற்கு ஐயைந்தும் என்ற பாடம் கொள்ளப்பட்டது. இதனை அடிகள் பிழையான பாடம் என்பார். செய்யுள் 2513 -இல் கருந்தண் என்பதற்கு கருந்தாள் என பாடம் கொள்ளல் பிழை என்பார். 2514-ஆம் செய்யுளில் புல அறிவாண்மை என்பதற்குப் புல்லறிவாண்மை என்று பாடங் கொள்ளுதல் பிழை என்பார்.

இவர் காட்டிய பாடவேறுபாடுகளுள் சிலவற்றைக் காண விழைவோம்.

வ.எ.	செய்யுள்	செய்யுள் பாடவேறுபாடு
1	2153	சாக்கிரகம் வியாக்கிரகம்
2	2161	அருள்பெற அருள்பெற்ற
3	2175	இளங்கிளை இலங்கிழை
4	2196	கனவில் நனவில்
5	2249	மூன்றுடன் மூடவே
6	2256	இறையால் அறி இறைபால் அறி
7	2339	திருந்தினர் திருத்தினர்
8	2371	அறியார் மலத்தார் அறிவார் அமலத்தார்
9	2443	நலநான்கு நலமைந்து
10	2646	சேதிப்பன் சோதிப்பண்

என்பன அவற்றுள் சிலவாம்.

அடிகள் பல இடங்களில் பாவேறுபாட்டிற்குச் சித்தாந்த நூல்களை எடுத்துக் காட்டி நிறுவியுள்ளார்.

2159-ஆம் செய்யுளில் பரிய புரவியும் என்ற பாடம் உள்ளதைத் தவிர்த்து பரிய பிறவியும் என்ற பாடம் கொள்ளுவார்.

துரியம் இருப்பதும் சாக்கிரத் துள்ளே
நரிகள் பதினாலு நஞ்சுண்டு செத்தன
பரிய பிறவியும் பாறிப் பறந்தன
துரியம் இறந்திடஞ் சொல்லஒண் ணாதே (திருமந்திரம் 2159)

இதன்கண் உள்ள பாட மாற்றத்திற்குப் பெருந்திரட்டு நூலுள் உள்ள பாடலை எடுவாகக் காட்டுவார்.

துரியம் இருப்பதும் சாக்கிரத் துள்ளே
நரிகள் பதினாலும் நஞ்சுண்டு செத்தன
பரிய பிறவியும் பாறிப் பறந்தன
துரியம் இறந்திடம் சொல்ல ஒண்ணாதே

(பெருந்திரட்டு பக்: 393)

என்ற திரட்டுப் பா(ட)ல் வழி விருந்தாய் ஊட்டுவார்.

பாட வேறுபாடும் பொருள் வேறுபாடும்.

திருமிகு அடிகளாசிரியரும், ஜீ.வரதராசனாரும் கொண்ட பாட வேறுபாடுகளில் சில கண்போம். இப்பாட வேறுபாட்டால் இருவரும் கொண்ட உரை பொருள் வேறுபாடுகளில் சிலவற்றைக் காண்போம்.

இளங்கிளையோனா? இலங்கிழையோனா?

ஏவன செய்யும் இளங்கிளை யோனே. (திருமந்திரம் 2175)

என்ற செய்யுட்கு இளங்கு + இளையோன் என்ற பொருளை அடிகள் கூறுவார்.

இலங்கிழை யோனே என்ற பாடத்தைக் கொண்டு வரதராசனார்

தக்கவாறு செய்யும் கருணையாளன்

என்னும் பொருள் கொள்வார். அடிகளாசிரியர் இதனைப் பிழையான பாடம் என்பார்.

கணவா? கனவா?

கணவாம் நனவில் கலந்தது இவ்வாறே (திருமந்திரம் 2187)

இத்தொடருள் அடிகள் கணவாம் என்ற பாடம் கொண்டு *கூட்டமான* நனவு என்பார். வரதராசனாரோ *கனவா* என்ற பாடம் கொண்டு சாக்கிரத்தில் கனவு போல என்ற பொருளுரையைத் தருவார்.

கனவிலா? நனவிலா?

நனவில் கனவில்லை ஐந்து கனவில் (திருமந்திரம் 2196)

எனும் மந்திரத் தொடரில் கனவில் என்ற பாடம் கொண்டு அடிகளாசிரியர் பொருள் உரைப்பார்.

வரதராசனாரோ நனவில் என்ற பாடம் கொண்டு பொருள் உரைப்பார்.

தானுமா? தாணுவா?

மலக்கலப் பாலே மறைந்தனன் தானும் (திருமந்திரம் 2213)

என்னும் தொடருள் அடிகள் தானும் என்ற பாடம் கொண்டு திருவருள் ஞானத்திற்கு முதலாகிய இறைவனும் (தானும்) மறைந்து விட்டான் என்பார்.

வரதராசனாரோ *தாணு* என்ற பாடங்கொண்டு சிவனும் என்ற பொருளைக் காட்டுவார்.

நல்லைந்தா? நாலைந்தா?

நனவகத்தே ஒரு நல்லைந்தும் வீடக் (திருமந்திரம் 2216)

என்னும் மந்திரத்துள் நல்லைந்தும் என்ற பாடங்கொண்டு ஐம்பொறி உணர்வுகள் ஐந்தும் அழிய என்று அடிகள் பொருள் கொள்வார்.

வரதராசனாரோ நாலைந்தும் என்ற பாடங்கொண்டு இருபது என்னும் பொருளில் ஞானேந்திரியம் கன்மேந்திரியம் பத்தும் அவற்றின் விடயங்கள் பத்துமென உரை காண்பார்.

அண்டமுமா? தண்டமுமா?

அண்டமும் தானாய் அகத்தினுள் ளானே (திருமந்திரம் 2219)

இத்திருமந்திரச் செய்யுள் அடியுள் அடிகள் அண்டமும் என்ற பாடங் கொண்டு,

அண்டமெல்லாம் தானாகப் பாவித்து அதனுள் அடங்கி நிற்பான்

என்ற பொருளை உரைக்கின்றார்.

வரதராசனாரோ தண்டமும் என்ற பாடம் கொண்டு கீழ் ஆகத்து அண்டமாகப் பொருள் உரைக்கின்றார்.

கட்டு மலமா? காட்டு மலமா?

காணும் சகலர்க்குக் கட்டு மலங்களே! (திருமந்திரம் 2241)

எனும் திருமந்திரத் தொடருள் கட்டு என்னும் பாடத்தை அடிகள் கொண்டு சகலர்க்கும் கட்டும் மலம் ஆணவம், மாயை, கன்மம் என உரை காண்பார்.

வரதராசனாரோ *காட்டும்* மலங்கள் என்ற பாடங் கொண்டு சகலரின் மலக் குற்றம் காட்டும் என்றும் உரைகாண்பார்.

நீக்குதலா? நோக்குதலா?

நோக்கம் மலங்குணம் நீக்குதல் ஆமே (திருமந்திரம் 2254)

எனும் திருமந்திரத்தில் அடிகள் நீக்குதல் என்ற பாடம் கொண்டு ஐந்து மலங்களையும் தாமசம் முதலான குணங்களையும் நீக்குதல் என்னும் பொருள் உரைப்பார்.

வரதராசனாரோ நோக்குதல் என்னும் பாடம் கொண்டு *நாத தத்துவத்தைப் பற்றி நிற்கும் ஆன்மா மலங்களையும் அவற்றால் விளையும் குணங்களையும் நோக்குதல் ஆகுமா? நோக்காது* எனப் பொருளுரைப்பார்.

உயர் மாயையா? உயிர் மாயையா?

உயிர்க்குக் கிரிபை, உயர்மாயை சூக்கம். (திருமந்திரம் 2333)

அடிகள் இத்தொடரில் உயர்மாயை என்னும் பாடங்கொண்டு உயர்ந்த மாயா காரியம் என்னும் பொருளை உரைப்பார்.

வரதராசனாரோ உயிர்மாயை என்னும் பாடங்கொண்டு உயிரின் செயல் உயிரோடு பிணைக்கப்பட்ட மாயையின் அளவாகும் என்னும் உரையை வகுப்பார்.

போதாதி போதமா? போதமும் நாதமும்மா?

போதம் புணர்போதப் போதாதி போதம் (திருமந்திரம் - 2343)

இம்மந்திரத் தொடரில் போதாதி போதம் என்ற பாடத்தை அடிகள் கொள்வார். போதம், புணர்போதம், போதாதி போதம் என்ற பொருளைக் கூறுவார்.

வரதராசனாரோ போதமும் நாதமும் என்ற பாடம் கொள்வார்.

ஆட்டுமா? நாட்டுமா?

ஆவியை ஆட்டும் அரன்அரு ளாளே (திருமந்திரம் 2344)

எனும் திருமந்திரப் பாவடியில் அடிகள் ஆட்டும், அரண் என்ற பாடம் கொண்டு அரன்அருள் ஆவியை ஆட்டும் என்று கொண்டு கூட்டி; இறைவனுடைய திருவருள் உயிர் வர்க்கங்களை இவ்வாறு இயக்கும் (ஆட்டும்) என்பார்.

வரதராசனாரோ நாட்டும் என்ற பாடம் கொண்டு உயிரை நிலைபெறச் செய்யும் சிவன் அருட்சத்தி எனும் பொருளை உரைப்பார்.

அவ்வந்தமா? நாதாந்தமா?

ஆகும் கலாந்தம் இரண்டந்தம் அவ்வந்தம் (திருமந்திரம் 2399)

என்னும் திருமந்திரத் தொடருள் அடிகள் அவ்வந்தம் என்ற பாடம் கொள்வார். நிவர்த்திக்கலை மந்திரக்கலை எனக் கலை இருவகையதாம். அவற்றை அவ்வந்தம் என்று பொருள் காண்பார்.

வரதராசனாரோ நாதாந்தம் என்ற பாடங்கொண்ட பொருள் உரைப்பார்.

உள்ளிலா? உன்னிக்கா?

கூசஞ்செய் உள்ளில் குறிக்கொள்வன் எவ்வண்ணம் (திருமந்திரம் 2408)

எனும் திருமந்திரத் தொடருள் உள்ளில் என்ற பாடம் கொண்டு உள்ளத்தில் என்ற பொருளை அடிகளாசிரியர் கொள்வார்.

வரதராசனாரோ உன்னிக் குறிகொளல் என்ற பாடம் கொண்டு எண்ணுதல், நினைத்தல் எனும் பொருளில் உரை காண்பார்.

நல நான்கா? நலமைந்தா?

நந்திய மூன்றிரண்டு ஒன்று நல நான்கு (திருமந்திரம் 2443)

எனும் திருமந்திரத் தொடரில் அடிகள் நல நான்கு என்ற பாடங்கொண்டு பத்து (3+2+1+4=10) என்னும் பொருளில் முப்பது ஆராய்ச்சியில் தோன்றும் பத்து அவத்தை எனக் கூறுவார்.

நலமைந்து என்ற பாடங்கொள்ளும் வரதராசனார் நீங்குதல் என்ற பொருளை விளங்கச் தந்துள்ளார்.

துலங்குமா? தொலைக்குமா?

சுத்திரும் முத்தீ துலக்கும் சுகானந்த சத்திரும்... (திருமந்திரம் 2477)

இத்தொடர்க்கு அடிகள் துலங்கும் என்ற பாடம் கொண்டு விளங்குமென்ற பொருளுரைப்பார்.

வரதராசனாரோ தொலைக்கும் என்ற பாடங்கொண்டு முத்துன்பங்களைத் தொலைக்கும் சுகானந்த சத்தி என்பார்.

புல அறிவாண்மையா? புல்லறிவாண்மையா?

பொருதலைச் செய்வது புலவறி வாண்மை. (திருமந்திரம் 2514)

என்னும் திருமந்திரத் தொடரில் *புலவறி வாண்மை* என்னும் பாடம் கொண்ட அடிகள் இதன் பொருளுரையாக ஐம்புல ஆண்மை என்பார்.

வரதராசனாரோ *புல்லறி வாண்மை* என்னும் பாடங்கொண்டு அற்ப அறிவோர் செய்யும் ஆண்மைத்திறன் என்ற பொருளைக் கூறுவார்.

அடிகளாசிரியர் இப்பாடம் பிழையானது என்று தெளிந்து துணிந்து கூறுவார்.

ஆறும்மா? ஐந்தும்மா?

ஆவியின் நியமன மாதிகள் ஆறும் (திருமந்திரம் 2589)

இத்திருமந்திரத் தொடரில் அடிகள் ஆறும் என்ற பாடம் கொண்டு, *செவி, மெய், வாய், கண், மூக்கு, மனம்* எனும் இந்தரியங்களும் என்னும் பொருளைக் கொள்வார்.

வரதராசனாரோ ஐந்து என்ற பாடம் கொண்டு புருடன் முதலான ஐந்தும் என்பார்.

தங்குமா? தயங்குமா?

தலைவனை நாடித் தங்கும்என் உள்ளம் (திருமந்திரம் 2632)

அடிகள் இத்தொடரில் தங்கும் என்ற பாடம் கொண்டு, இறை உள்ளத்தில் தங்குதலைப் பொருளாகக் கொள்வார்.

வரதரோ *தயங்கும் என்* என்ற பாடம் கொண்டு *ஒளிபெற்று விளங்கும்* என்ற பொருளை உரைப்பார்.

சேதிப்பனா? சோதிப்பானா?

சேதிப்பான் இங்கே சுவடு படா வண்ணம் (திருமந்திரம் 2616)

என்னும் திருமந்திர அடியுள் அடிகள் *சேதிப்பன்* என்ற பாடம் கொண்டு, (பந்தங்களை, கட்டுக்களை) வெட்டி எறிபவன் என்னும் பொருளுரை அளிப்பார்.

வரதமன்னரோ *சோதிப்பன்* என்ற பாடம் கொள்வார். *சோதனை செய்வன்* என்ற பொருளும் உரைப்பார்.

இருந்தவா? இருத்தியா?

நிரையொத்து என்னுடல் நீங்கா திருந்தப் புரையற்ற... (திருமந்திரம் 2648)

எனும் திருமந்திரத் தொடருள் நீங்காது இருந்த எனும் பாடம் கொண்ட அடிகள் *நீங்காது இருந்த காயக் கடவுள்* என்று பொருளுரை செய்வார்.

வரதராசனாரோ நீங்காது இருத்தி என்ற பாடம் கொண்டு உடலை அழியாது இருக்கச் செய்து. என்னும் பொருளும் தருவார்.

மேலும் பாட வேறுபாடுகளை விரிப்பின் விரியுமென்று, விரிவஞ்சி இவற்றுடன் நிறைக்கின்றோம் மற்றய வேறுபாடுகளைச் சுவடிகளுடன் ஒப்பிட்டு கண்டு மகிழ்க.

முடிவுரை

நிறைமொழி மாந்தராம் திருமூலர் படைத்த திருமந்திரம் என்னும் சைவத் திருநூல் நமக்கு மறை மொழியாக, தமிழ்மறையாக விளங்குகின்றது.

நிறைமொழி மாந்தர் பெருமை நிலத்து
மறைமொழி காட்டி விடும். (குறள் 28)

என்பது பொதுமறையோன் வாக்கன்றோ.

தமிழ் செய்த தமிழ் மூலனை-திருமூலனை-ஏற்பதும், ஏற்றுவதும், போற்றுவதும் நமது கடன்.

சீவனைச் சிவனாக்கும் சித்திதரும் இந்நூலைப் போற்றுவோம். புகழ் பெறுவோம்.

பெரியபுராணமும் பதிப்பும்

முனைவர் சி. வீரமணி

முன்னுரை

உலகில் தோன்றிய ஒவ்வொரு மொழிக்கும் இலக்கியங்கள் உண்டு. அவ் இலக்கியங்கள் ஒவ்வொன்றும் தனித்தனிச் சிறப்புக்களைக் கொண்டுள்ளன. இவையாவும் தத்தம் துறையில் விஞ்சி நிற்கின்றன. கிரேக்கத்தை இசையின் மொழி என்றும், இலத்தீனைச் சட்டங்களின் மொழி என்றும், ஜெர்மன், பிரெஞ்சு மொழிகளைத் தத்துவங்களின் மொழி என்றும், ஆங்கிலம் வணிகமொழி என்றும் போற்றப்படுகின்றன. இவை போன்ற தமிழ்மொழி "சமயங்களின் மொழி'' என்று சிறப்பிக்கப்படுகின்றன. தமிழ்மொழி சமயங்களை வளர்த்தது. சமயங்களும் தமிழை வளர்த்தன. பக்தி இலக்கியங்கள் வாயிலாகப் புதிய புதிய இலக்கிய வடிவங்களைத் தமிழுக்கு அறிமுகம் செய்த பெருமையும் சிறப்பும் உண்டு. அவ்வகையில் பெரியபுராணம் எனும் திருத்தொண்டர் புராண வரவு தமிழ்கூறும் நல்லுலகில் சைவ நெறி தழைத்தோங்க வகை செய்தது.

சைவ சமய வளர்ச்சியின் ஒரு பகுதியாகத் திருத்தொண்டர் புராணம் தோன்றியது. இதனை உருவாக்கிய தெய்வப் புலவர் சேக்கிழார் "பக்திச்சுவை நனி சொட்டச் சொட்ட'' இவ்வுலகில் வாழ்வாங்கு வாழ்ந்த மெய்யடியார்களின் உலகியல் வாழ்வினைப் பாடி அருளினார். இத்திருத்தொண்டர் புராணம் பல பதிப்புப்புகளாகப் பல்வேறு காலகட்டங்களில் வெளிவந்துள்ளன. இப்பதிப்புகளில் சிற்சில வேறுபாடுகளும் காணமுடிகின்றன. அவை பற்றி விரிவாகக் காண்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

பெரியபுராணம்

பெரியபுராணம் என்ற பெயரமைவு பிற்கால வழக்காகும். சேக்கிழார் பெருமான் அருளிய நூலுக்கு அவரால் வழங்கப்பட்டப் பெயர் "திருத்தொண்டர் புராணம்'' என்பதாகும். ஆயினும் இன்றைக்கு எல்லோராலும் பெரியபுராணம் என்று வழங்குவதே பெரும் வழக்காயிற்று. சைவ சமய நெறிமுறைகள் அதன் ஒழுகலாறு மேன்மைகள் ஆகியவற்றின் உரைப் பொருள் முற்றிய முழுநூலாகத்

திகழும் இந்நூல் இரண்டு காண்டங்களாகவும் பதின்மூன்று சருக்கங்களாகவும் பகுக்கப்பட்டிருக்கின்றன. சேக்கிழார் புராணத்தின் படி நூலின் மொத்தப் பாடல் 4,253 ஆகும். தொண்டை மண்டல சதகத்தின்படி மொத்தப்பாடல் 4,283 ஆகும். ஆனால் பல பதிப்புகளில் 4,286 பாடல்கள் பதிவு செய்யப்பட்டிருக்கின்றன. சேக்கிழார் புராணத்தின்படி 4,253 பாடல்கள் என்று கொள்வதே பொருந்தும். மற்றைய பாடல்கள் இடைச் செருகல் என்றுக் கூறப்படுகின்றன.

பெரியபுராணப் பதிப்பும் பதிப்பாசிரியர்களும்

"தம்மின் பெரியார்'' எனப் போற்றப்படும் பெரும் மகான்கள் திருத்தொண்டர் மாக்கதை எனும் பெரியபுராணத்தைப் பலரும் பதிப்பித்து தமிழ்மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் முன்நின்றனர். அவர்களுள் காஞ்சிபுரம் சபாபதி முதலியார் 1860இல் பெரியபுராணம் முழுவதையும் முதன்முதலில் அச்சிலேற்றி நூலாகப் பதிப்பித்தார். இவர் திருவாரூர், சிதம்பரம் போன்ற ஊர்களிலுள்ள ஏடுகளைப் பார்த்துப் பதிப்பித்ததாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன. அதனைத் தொடர்ந்து ஏறத்தாழ பத்தாண்டுகள் கழித்து 1870இல் திருமயிலை சுப்பராய ஞானியாரும், 1879இல் சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளையும் பதிப்பித்து வெளியிட்டனர். இவர்களின் பதிப்புகளில் புராணத்தில் கூறப்படும் தேவாரப் பதிகங்களும் கதைச் சுருக்கமும் இடம் பெற்றிருந்தன.

1860இல் பெரியபுராணம் பதிப்பிக்கப்பட்டதாகக் கூறப்பட்டிருப்பினும் ஏறத்தாழப் பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பே அதாவது 1845, 46 இல் மணவை மகாலிங்க ஐயர், கோவிந்த நாயக்கர் ஆகியோரைப் பதிப்பாசிரியராகத் கொண்டு சரஸ்வதி விலாச அச்சுக்கூடம் பெரியபுராணம் (ஆனாய நாயனார் புராணம் வரை) பதிப்பித்து வெளியிட்டனர். அதேபோல் மேற்சொல்லப்பட்ட இருவரையும் திரும்பவும் பதிப்பாசிரியராகக் கொண்டு சரஸ்வதி விலாச அச்சுக்கூடம் 1847இல் காரைக்கால் அம்மையார் புராணம் வரை பதிப்பித்து வெளியிட்டனர். இவ்வெளியீடுகள் முழுமையாக வெளிவராத காரணத்தால் அதைப் போற்றுவார் இன்றிப் போயின.

யாழ்ப்பாணத்து நல்லூர் ஆறுமுக நாவலர், அருணாசல முதலியார் ஆகிய இருவரையும் பதிப்பாசிரியராகக் கொண்டு பெரியபுராணம் முதற்காண்டத்தை 1859இலும் இரண்டாம் காண்டத்தை 1861லும் கல்வி விளக்க அச்சுக்கூடம் வெளியிட்டது. இவை இரண்டும் முதற்பதிப்பாக வெளிவந்தன. அதன்பின் ஆறுமுக நாவலர், சதாசிவ பிள்ளை பதிப்பாசிரியாகக் கொண்டு பெரிய புராணம் இரண்டாம் பதிப்பு 1888இல் கல்வி விளக்க அச்சுக் கூடம்

வெளியிட்டது. இவ் அச்சுக்கூடம் 1905இல் மூன்றாம் பதிப்பை சதாசிவ பிள்ளையை பதிப்பாசிரியராகக் கொண்டும், 1910 இல் பொன்னம்பலம் பிள்ளையை பதிப்பாசிரியராகக் கொண்டு நான்காம் பதிப்பையும், 1916–ல் ஐந்தாம் பதிப்பையும் வெளியிட்டது. அதன்பின் 1928 இல் தியாகராஜ பிள்ளையை பதிப்பாசிரியராகக் கொண்டு ஏழாம் பதிப்பை சிதம்பர சைவப் பிரகாச வித்தியாநு சாலை வெளியிட்டது. இவர்களே 1951 இல் ஜி. சுப்பிரமணியம் அவர்களைக் கொண்டு எட்டாம் பதிப்பை வெளியிட்டு பெரியபுராணத்திற்கு சிறப்பு சேர்த்தனர்.

பெரியபுராணம் பல்வேறு அச்சுக்கூடங்களால் பதிப்பித்து வெளியிடப்பட்ட நிலையில் பெரியபுராணம் முழுமைக்கும் சிறப்பானதோர் உரை வளத்தோடு வழக்கறிஞர் சிவக்கவிமணி சுப்பிரமணிய முதலியார் 1937இல் தொடங்கி 1992 வரை மறுபதிப்பு முடிய கோவைத் தமிழ்ச் சங்கம் கோயமுத்தூர் பதிப்பித்து மக்களிடம் செல்வாக்கு மிக்க இலக்கியமாக பதியச் செய்தது என்பதில் கிஞ்சிற்றும் சந்தேகமில்லை.

பெரியபுராணம் பதிப்பித்தோர்

பெரியபுராணத்தைப் பல்வேறு அறிஞர் பெருமக்கள் பல நிலைகளில் பதிப்பித்து வெளியிட்டுள்ளனர். இவர்களுள் ஆறுமுக நாவலரின் பதிப்பு வெகுவாகப் பாராட்டப்பட்டது. இவர் பன்மொழிப் பயிற்சிப் பெற்று விளங்கியதால் அவர் பதிப்பில் பல விடங்களில் அவரின் புலமையை வெளிப்படுத்தினார். பதிப்புத் துறையில் மிகுந்த ஈடுபாடு கொண்ட நாவலர் ஓலைச்சுவடிகளை அச்சு வடிவில் கொணர்வதற்கும், பிழையற்ற நல்ல தமிழ் நூல்களை வெளிக் கொணர்வதற்கும் தமக்கென்று ஓர் அச்சுக்கூடம் தேவை என்பதை உணர்ந்து இலங்கையில் வண்ணாரப் பண்ணையில் சைவப் பிரகாச அச்சு இயந்திர சாலையையும், சென்னையில் வித்தியாநுபாலன் என்ற அச்சு இயந்திர சாலையையும் தொடங்கினார். தாம் பதிப்பித்த நூல்கள் அனைத்தையும் இவ்விரு அச்சு இயந்திர சாலையின் மூலமே பதிப்பித்து வெளியிட்டார்.

நாவலர் சுவடிகளைப் பதிப்பிக்கும்போது சில நெறி முறைகளைக் கையாண்டுள்ளார். இந்நெறிமுறைகள் பதிப்புத்துறையில் ஈடுபடுபவர் களுக்கு வழிகாட்டியாக அமைந்தன இவர் தகுந்த சான்றுகள் இல்லாமல் எந்த நிலையிலும் எப்போதும் திருத்தமாட்டார். பாடவேறுபாடுகளை அச்சிட மாட்டார், பெரியோரின் துணையின்றித் தாமாக எதையும் எழுதமாட்டார் தம் பதிப்பில் ஐயங்கள் நேர்ந்தால் அவற்றைப் பலவாறு நுனுகி ஆராய்ந்த பின் சரியானவற்றை தேர்ந்தெடுத்துப் பதிப்பிப்பார். இவர் பதிப்பித்த

நூல்களில் எழுத்துப் பிழையோ, சந்தி விகாரப் பிழையோ காணுதல் அரிது. போதிய கல்வியறிவு பெறாத பாமரரும் படித்துப் பொருள் புரியுமாறு சொற்கள் பிரிக்கப்பட்டுச் செம்மையாக வெளியிட்டிருப்பார். இதனால் தமிழ் மக்களிடையே நாவலர் பதிப்புக்கு நல்ல வரவேற்று இருப்பதைக் காணமுடிகின்றன. இவர் பல நூல்களைப் பதிப்பித்ததோடு, உரைநடையிலும், வசன நடையிலும் வெளியிட்டுத் தம் இருப்பை நிலைப்படுத்திக் கொண்டார்.

பெரியபுராணம் – அறுபத்து மூன்று நாயன்மார் சரித்திரம் என்ற நூலைக் களத்தூர் வேதகிரி முதலியார் உரையுடன் இலக்கணக் களஞ்சிய அச்சுக்கூடம், 1879இல் வெளியிட்டது. பி. கிருஷ்ணசாமி முதலியார், ஏ.ஆர். நாகலிங்க முதலியார் உரையுடன் பெரியபுராணம் நான்கு தொகுதிகளாக ஜீவரஷாமிர்த அச்சுக்கூடம் 1883, 1886, 1889, 1892 ஆகிய ஆண்டுகளில் வெளியிட்டனர். மேலும் பெரியபுராண உரையுடன் என்று ஆறுமுகத்தம்பிரான், பி. கிருஷ்ண சாமி முதலியார் உரையுடன் ஆதிகலாநிதி அச்சுக்கூடம் 1890லும், இதே ஆண்டில் ஸ்ரீநிகேதன அச்சுக்கூடம் திருத்தொண்டர் புராணமெனும் பெரியபுராணம் இரண்டு தொகுதிகளாக ஸ்டார் ஆப் இந்தியா அச்சுக்கூடம் 1893லும், திருத்தொண்டர் புராணம் எனும் பெரியபுராணம் என்ற தலைப்பில் சூ. சுப்பராய நாயக்கர் உரையுடன் சைவ சமய ஆச்சாரிய பக்த ஜனசபை 1896லும், சதாசிவப் பிள்ளையைப் பதிப்பாசிரியராகக் கொண்டு திருத்தொண்டர்புராணம் இரண்டு பாகமாக வித்தியாலு பாலன யந்திர சாலை 1898லும், 1900ஆம் ஆண்டு இந்நிறுவனமே பச்சையப்ப முதலியாரை உரையாசிரியராகவும், அருணாசல முதலியாரைப் பதிப்பாசிரியராகவும் கொண்டு திருத்தொண்டர்புராணம் எனும் பெரியபுராணத்தை வெளியிட்டனர். இப்பதிப்புகளில் எல்லாம் சிறந்து விளங்குவன நாவல் பதிப்பாகும்.

நாவலர் பதிப்பை அடியொற்றி 1886–87இல் பக்தஜன சபை பெரியபுராணத்தை, "கையடக்கப் பதிப்பாக'' வெளியிட்டு சிறப்புச் செய்தனர். இதனைத் தொடர்ந்து 1903 இல் திருமயிலை செந்தில்வேலு முதலியார் நாவலர் பதிப்பில் இருப்பதையும், நாவலரால் விடுபட்ட தேவார மேற்கோள் கதைச்சுருக்கம் முதலியனவற்றைச் சேர்த்து வெளியிட்டுத் தமிழ் வாசகர்களை வெகுவாகக் கவர்ந்தார்.

திருவாவடுதுறை ஆதினம், தருமபுர ஆதினம், திருப்பனந்தாள் காசிமடம், சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம், சைவசித்தாந்த மகாசமாசம், சைவ சமயாச்சாரிய பக்தஜன சபை போன்ற நிறுவனங்கள் திருத்தொண்டர் புராணம் எனும் பெரியபுராணத்தை மூலத்துடன் பதிப்பித்து வெளிக்கொணர்ந்தனர். ஒருசில பதிப்புகளில் அரும் பொருளகராதி, நாயன்மார் ஆராய்ச்சித் தொகுப்பு போன்ற

குறிப்புரைகளுடனும் வெளியிட்டனர். ஆறுமுக நாவலர் பதிப்பைப் போன்ற ஒருசில பதிப்புகளும் வந்துள்ளன. இச்சிறப்பு வாய்ந்த பதிப்புகள் அனைத்தும் 1934இல் தொடங்கி 1950, 1970, 1974, 1988ஆம் ஆண்டில் வெளிவந்து பெரியபுராணத்திற்கு பெருமை சேர்த்தன.

பெரியபுராணம் பதிப்பித்தவர்களுள் குறிப்பிடத்தக்கவர் களாகக் கருதப்படுபவர்கள் காஞ்சிபுரம் சபாபதி முதலியார், அருணாசல முதலியார், திருமயிலை சுப்பராய ஞானியார், சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை, ப. இராமநாதபிள்ளை ஆகியோர் ஆவார்.

பெரியபுராணம் பதிப்பு வேறுபாடு

திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடாக 1950ல் வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவாரைக் கொண்டு பதிப்பித்து வெளியிடப்பட்ட செய்யுள் வடிவான நூலுக்கும், 2009ஆம் ஆண்டு அதே ஆசிரியரைக் கொண்டு திருப்பனந்தாள் ஸ்ரீகாசி மடம் வெளியிட்ட வசன நூலுக்கும் வேறுபாடு இருக்கின்றன. முந்தையது செய்யுள் வடிவமுடையது. பிந்தையது பாமரரும் படித்து இன்புறும் வண்ணம் வசனநடையில் எளிமையான முறையில் வெளியிடப்பட்டது. இவ்வெளியீட்டில் மேலும் ஒரு சிறப்பு ஆராய்ச்சி மாணவர்கள் படித்துப் பயன்பெறும்படி இந்நூலின் முற்பகுதியில் திருப்பனந்தாள் செந்தமிழ்க் கல்லூரி முன்னாள் முதல்வர் கே.எம். வேங்கடராமையா எழுதிய நாயன்மார்களின் ஆராய்ச்சித் தொகுப்பு ஒன்று கொடுக்கப்பட்டிருக்கிறது. இத்தொகுப்பு வேறு எந்தப் பதிப்பிலும் வெளிவரவில்லை என்பது கவனிக்க வேண்டிய ஒன்றாகும். இவ்வாராய்ச்சித் தொகுப்பும் காலவரிசை முறைப்படி கொடுக்கப்பட்டிருப்பது சிறப்பாகும்.

சைவ சித்தாந்த மகா சமாஜம் 1950ஆம் ஆண்டு பெரியபுராணம் எனப்படும் திருத்தொண்டர் புராணத்தை மூன்றாம் பதிப்பாக சாது அச்சுக்கூடம் வெளியிட்டது. இந்நூலின் முற்பகுதியில் 'அரும்பொருளகராதி' ஒன்றை மா. பாலசுப்பிரமணிய முதலியார் தொகுத்து வெளியிடப்பட்டுள்ளார். இவ்அரும் பொருளகராதி தொகுத்ததன் நோக்கம்,

> இவ்வகராதியிற் பற்பல அருள்பொருள்கள் தொகுக்கப் பெற்றுள்ளன. சிலவற்றிற்கு எல்லாக் குறிப்புகளும், ஏனையவற்றிற்கு எடுத்துக்காட்டுகளாகச் சில குறிப்புகளும் தரப்பட்டுள்ளன. இவ்வகராதியைத் தொகுத்ததன் நோக்கம், அன்பர்களைப் புராணம் முழுவதையும் பலமுறை படித்துணர ஊக்குவிப்பதற்கே யன்றிப் புராணத்தைப் பயிலாமலே அதிற் காணப்படும்

செம்பொருள்களை அறிய வசதியளிப்பதற்கன்று. இதை அடிப்படையாகக் கொண்டு ஒவ்வொருவரும் ஆராய்ச்சி செய்து இவ்வகராதியைப் பெருக்கிக் கொள்ளவேண்டும். இவ்வகராதியில் ஒவ்வொரு குறிப்பிற்கும் செய்யுள் எண்கள் தரப்பட்டுள்ளன. இவ்வகராதியிலுள்ள குற்றங்குறைகளையும் அதில் இன்றியமையாது சேர்க்கப்படல் வேண்டும் என்று கருதப்படுபவைகளையும் அறிஞர்கள் தெரிவிப்பின் அடுத்த பதிப்புக்கு உதவியாயிருக்கும்.

(திருத்தொன்மம் புராணம் – சைவ சித்தாந்த மகாசமாஜம் வெளியீடு, மூன்றாம் பதிப்பு, 1950, ப. 09)

என்பனவாகும். இவரின் நோக்கம் நிறைவேறியதா என்று தெரிய வில்லை. ஏனெனில் இவர்களின் அடுத்த பதிப்பிலும் அவ்அரும் பொருளகராதி எவ்வித மாற்றமும் இன்றி பதிப்பிக்கப்பட்டுள்ளது.

திருத்தொண்டர் புராணம் – சைவ சித்தாந்த மகாசமாஜம் பதிப்பித்து வெளியிட்ட மேற்சொல்லப்பட்ட நூலின் இறுதியில் "யாப்பு குறிப்பட்டவணை" ஒன்றை மா. துரைசாமி முதலியார் அவர்கள் தொகுத்ததை வெளியிட்டுள்ளார்கள். மேலும் இந்நூலில் மொத்தப் பாடல்களாக 4,286 பாடல்களையும் பகுத்து விளக்கியுள்ளது போற்றத் தக்கது. அவை பாடல்களின் வகை தொகை விவரங்களாக,

அறுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்	1805
எழுசீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்	75
எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்	280
தரவு கொச்சகக் கலிப்பா	1207
கலிநிலைத்துறை	545
கலிவிருத்தம்	368
வஞ்சிவிருத்தம்	6
மொத்தம்	4,286

என்பதாகும் (சைவ சித்தாந்த மகாசமாஜம் வெளியீடு, மூன்றாம் பதிப்பு, 1950, ப. 615). இவ்வாறு பெரியபுராணப் பதிப்பில் சிற்சில வேறுபாடுகள் இருப்பதைக் காணமுடிகின்றது.

பதிப்பும் குறிப்பும்

நூல்களைப் பதிப்பிக்கும்போது தாம் எடுத்துக்கொண்ட முயற்சி, அப்போது ஏற்பட்ட இடையூறு, உதவி செய்தோர், பதிப்பிக்கக் கிடைத்த பிரதியின் விவரம் ஆகியவற்றைப் பதிப்புரையில்

குறிப்பிடுவது மிகவும் அவசியமான ஒன்றாகும். பெரியபுராணப் பதிப்புகளில் இத்தகைய பதிப்புக் குறிப்புகள் இடம்பெறாதது ஏமாற்றமே. ஒரு நூல் இரண்டாவது முறையாக மறுபதிப்பு செய்யும்பொழுது அந்தப் பதிப்பில் மாற்றங்கள், மூல திருத்தம், புதிய பாடல்கள் அல்லது மறுபதிப்பிற்கான அவசியம் என்ன என்பனவற்றையாவதும் குறிப்பிட வேண்டும். இக்குறிப்புரைகள் பெரும்பாலான பெரியபுராணப் பதிப்புகளில் இடம்பெறவே இல்லை என்பது எண்ணத்தக்க ஒன்றாகும்.

பதிப்புரை என்ற பகுதியில் இந்த நூல் எதற்காகப் பதிப்பிக்கப்படுகிறது என்றும் இதற்குமுன் எத்தனை பதிப்புகளை இந்நூல் பெற்றுள்ளது என்றும் அவற்றை யார்யார் எந்தெந்தக் காலக் கட்டங்களில் பதிப்பித்து வெளியிட்டனர் என்ற குறிப்புகள் இடம்பெற வேண்டும். மாறாக இப்பதிப்புப் பகுதியில் அந்நூல் வெளிவருவதற்கு அல்லது பதிப்பிப்பதற்குப் பெருந்தொகை கொடுத்த கொடையாளரின் புகழ் மட்டுமே பேசப்படுகின்றது. இதனால் எதிர்காலத்தில் இந்நூலைப் படிப்பவர்க்கும், பதிப்பிக்க முன்வருபவருக்கும் இந் நூலின் பதிப்பு வரலாறு தெரியாது முதல்பதிப்பை மூன்றாம், நான்காம் பதிப்பாகப் பிறழ எண்ணத்தோன்றும். ஆகவே அவற்றிற்கு இடம் கொடுக்காது கூடுமானவரை பதிப்புரையில் பதிப்புக் குறிப்புகளைப் பதிவு செய்தால் பதிப்பில் பயன்மேலும் சிறப்படைந்து எல்லோருக்கும் பயன்படும் வகையில் அமையும்.

ஓலைச்சுவடிகளில் பெரியபுராணம்

தெய்வப் புலவர் சேக்கிழார் அருளிச் செய்த நூல் திருத்தொண்டர் புராணம், பெரியபுராணம், பெரியபுராணசாரம், பெரியபுராண திரட்டு, பெரியபுராண வசனம் எனப் பலப் பெயர்களில் ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்து வைத்திருப்பதைக் காணமுடிகின்றது. செய்யுள் வடிவிலும், உரைநடை வடிவிலும், செய்யுளும் உரைநடையும் என்ற நிலையில் இச்சுவடிகள் முழுமையாகவும் குறைவுடையன வாகவும் காணப்படுகின்றன. சுவடிகளின் மொத்த எண்ணிக்கை 135 ஆகும். இவற்றின் 42 சுவடிகளே முழுமை பெற்று விளங்குகின்றன.

சென்னையில் உள்ள அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் மூலமும் உரையுமாக '3' சுவடிகள் உள்ளன. அம்மூன்று சுவடிகளில் ஒரு சுவடி மட்டும் முழுமையாகக் காணப்படுகின்றது. இந்நூலகத்தில் 'பெரியபுராணசாரம்' எனுந் தலைப்பில் 'எட்டு' சுவடிகளும், உமாபதி சிவாச்சாரியார் எழுதியதாக 'அறுபத்து மூவர் மரபு அடைவு' எனுந் தலைப்பில் ஒரு சுவடியும், நம்பியாண்டார் நம்பி எழுதிய "திருத்தொண்டர் திருவந்தாதி" என்ற தலைப்பில் முழுமையான ஒரு சுவடியும் உள்ளன.

பெரியபுராணம் மூலத்தை மட்டும் கொண்ட சுவடிகள் உலகின் பல்வேறு நாடுகளில் காணப்படுகின்றன. தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைகக்கழகத்தில் 'ஒன்பது' சுவடிகள் காணப்படுகின்றன. அவற்றுள் முழுமையானவை 'ஏழு'. குறைபாடுடையவை இரண்டு ஆகும். திருப்பதி அருள்மிகு வெவங்கடேசுவரா பல்கலைக்கழகத்தில் 'ஆறு' சுவடிகள் உள்ளன. இவற்றுள் முழுமையானவை இரண்டும், குறைபாடுடையவை நான்கும் ஆகும். சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகத்தில் பதினெட்டு சுவடிகள் உள்ளன. அவற்றுள் முழுமையான சுவடி பத்து, குறைபாடுடையது எட்டு ஆகும். அதேபோல் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் சென்னையில் ஆறு சுவடிகள் உள்ளன. அவற்றுள் முழுமையான நிலையில் மூன்றும் குறைபாடுடைய நிலையில் மூன்றும் உள்ளன. சென்னையில் பதிப்புத்துறையில் புகழ்பெற்று விளங்கும் டாக்டர் உ.வே.சா. நூலகத்தில் பதினெட்டு சுவடிகள் உள்ளன. அவற்றுள் ஒன்பது சுவடிகள் முழுமை நிலையிலும் ஒன்பது சுவடிகள் குறைபாடுடைய நிலையிலும் காணப்படுகின்றன. இதேபோன்று தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தில் பதினான்கு சுவடிகள் காணப்படுகின்றன. அவற்றுள் ஐந்து முழுமையானதாகவும் ஒன்பது குறைபாடுடைய தாகவும் காணப்படுகின்றன.

வெளிநாடுகளிலும் பெரியபுராணச் சுவடிகள் பாதுகாக்கப்படு கின்றன. இலண்டன், பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தில் முழுமையான ஒரு சுவடியும் இலண்டன் இராயல் ஏசியாடிக் சொசைட்டி நூலகத்தில் 'ஏழு' சுவடிகளும் உள்ளன. அவற்றுள் முழுமையான நல்ல நிலையில் மூன்று சுவடிகளும், குறைபாடுடைய நிலையில் நான்கு சுவடிகளும் காணப்படுகின்றன. உலக அளவில் மொத்தம் நூற்று முப்பத்தைந்து சுவடிகள் இருப்பதாகக் கணக்கிடப்படுகின்றன. இவற்றுள் முழுமை யான நல்ல நிலையில் நாற்பத்திரண்டு சுவடிகளும், குறைபாடுடைய நிலையில் தொண்ணூற்று மூன்று சுவடிகளும் காணப்படுகின்றன. இவை தவிர பெரியபுராணத்தின் சில பகுதிகள் மட்டும் மூலத்துடன் ஓலைச்சுவடிகளில் பதிவு செய்யப்பட்டுள்ளன.

பெரியபுராணம் என்னும் திருத்தொண்டர்புராணம் பதிப்புகளாகவும், சுவடிகளாகவும் பல்வேறு கட்டங்களில் வெளிவந்து சிறப்பு செய்துள்ளது. இவற்றுள் பெரியபுராணம் பதிப்புகள் நாளொருமேனியும் பொழுதொரு வண்ணமுமாகப் பல்கிப் பெருகி வருவதைக் காணமுடிகிறது. பா. சத்தியமோகன் பெரியபுராணப் 'புதுக்கவிதை' வடிவில் இலாவண்யா வெளியீட்டகத்தாரைக் கொண்டு அக்டோபர் 2010ஆம்ஆண்டு வெளியிட்டனர். இந்நூல் முழுவதும் புதுக்கவிதை வடிவிலே அமையப்பட்டிருப்பது சிறப்பு. இதனால் கவிதைப் பிரியர்களிடம் பெரியபுராணம் எளிதில் சென்றடையும் என்று நம்பலாம்.

இவ்வாறு பெரியபுராணத்தின் பதிப்பு பல்வேறு காலக்கட்டங்களில் பல்வேறு அறிஞர் பெருமக்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டிருப்பது தமிழுக்கும் தெய்வச் சேக்கிழாருக்கும் கிடைத்த பெருமையாகவே கருதவேண்டும். இதனால் சேக்கிழாரின் புகழும் பெரியபுராணத்தின் பெருமையும் என்றென்றும் நிலைத்திருக்கும்.

உதவி புரிந்த நூல்கள்

1. பெரியபுராணம் என வழங்கும் திருத்தொண்டர்புராணம், சைவசிந்ததாந்த மகாசமாஜம், (மூன்றாம் பதிப்பு), 1950.
2. திருத்தொண்டர்புராணம் (பன்னிரண்டாந் திருமுறை), பதிப்பாசிரியர் வித்துவான் தி. பட்டுச்சாமி ஓதுவார், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடு, 1950.
3. திருத்தொண்டர் புராணம் (உரைநடை), நான்காம் பதிப்பு, ஆக்கியோர் வித்துவான், தி. பட்டுச்சாமி ஓதுவார், திருப்பனந்தாள் ஸ்ரீகாசிமடத்து வெளியீடு, 2009.
4. தெய்வக்கவி சேக்கிழார் அருளிய பெரியபுராணம் (புதுக்கவிதை வடிவில்), ஆசிரியர் பா. சத்தியமோகன், இலாவண்யா வெளியீடு, வடலூர், 2010.
5. திருத்தொண்டர் வரலாறு அல்லது பெரியபுராண வசன காவியம், ஆசிரியர்: ஆறுமுக நாவலர், சரசுவதி மகால் நூலகம், 2000, தஞ்சாவூர்.
7. பெரியபுராண ஆய்வு மாலை, தொகுதி 1–2. பெரியபுராண இலக்கிய ஆய்வு மாலை, குமாரசுவாமித் திருமடம், வாரணாசி, 2001.

திருவருட்பா உரைவேறுபாடுகள்

மகா. பாண்டியன்

"திருவருட்பா உரைவேறுபாடுகள்" 19ஆம் நூற்றாண்டின் ஈடு இணையற்ற தமிழ்ப் பெருங்கவிஞராக-சித்தராக-சுத்த சன்மார்க்கச் சுகநிலையாம் நெறிவகுத்தவராகத் திகழ்ந்தவர் அருட்பிரகாச வள்ளலார் எனும் சிதம்பரம் இராமலிங்க அடிகளார். ஜீவகாருண்யத்தை ஒழுக்கநெறியாக, வாழ்க்கையில் நடைமுறைப் படுத்தியவர். அருட்பெருஞ்ஜோதி வழிபாட்டை அருளிய அருளாளர் ஆன்மநேய ஒருமைப் பாட்டுரிமைக் கொள்கைக்கு வடிவம் கொடுத்த அன்புருவர். உலக வாழ்க்கையில் சிக்கி அழியாமல், மயங்கும் மனித இனத்திற்கு ஆன்ம லாபம் கொடுத்த தகைமையாளர். தமிழில் நூற்றுக்கு மேற்பட்ட சிற்றிலக்கியங்களைக் கையாண்டு, பற்பல புத்திலக்கியங்கள் கண்ட புதுமையாளர். ஆறு திருமுறைகளாக வகுக்கப்பட்ட 5818 பாடல்களாக 'அருட்பாவை' வழங்கிய வள்ளல்.

திருவருட்பாவின் ஆறு திருமுறைபாடல்களுக்கும் உரை கண்டவர் பல்லோராவர். அவ்வுரையாசிரியர்களின் உரை வேறுபாடுகள் குறித்து ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

தெய்வமணிமாலை

இது சென்னை, கந்தகோட்டத்தில் உள்ள முருகனின் மீது பாடப்பெற்றது. வள்ளலார் பாடிய-முதன்முதலில் இயற்றிய பாடற் தொகுதி இத்தெய்வமணிமாலைப் பாடல்களே என்பர். இதன் முதற் பாடலில்,

திருவோங்கு புண்ணியச் செயலோங்கி யன்பருள்
திறலோங்கு செல்வ மோங்க . . . அருட்பா-1

எனும் பகுதியில் 'திருவோங்கு' என்பதற்கு அருட்செல்வம் எனவும், புண்ணியச் செயலோங்கினாலன்றித் திருவருட் செல்வம் ஓங்காது எனப் பொருள் கண்டுள்ளார் ஔவை சு.துரைசாமி. இதற்கு, ஞானச் செல்வத்தைப் பெருகச் செய்ய (திருவோங்கு) புண்ணிய உபகாரச்செயல்கள் தழைக்கவும், இறைவனை இடைவிடாது நினைக்கும் அன்பர்கள் இடத்தில் ஆற்றல் (திறல்) மிகவும்

அருட்செல்வம் பெருகி வளர்ந்து அடக்கம் பெறவும் (செறிவு) வேண்டும் என க.கிருஷ்ணமூர்த்தி உரைக்கின்றார். இதற்கு, முருகன் யாவருக்கும் விரும்புதலையுடைய நல்வினைகளைச் செய்தலையுடையராதலால் அன்பும் அருளும் திறலும் மிக்க செல்வம் சிறக்கவும் அடக்கம் அமையவும் அறிறவு மேன்மையுற நிறைந்த இன்பம் மிக்கு விளங்கவும் திருவருளை வழங்க வேண்டுமெனத் துரை. தண்டபாணி உரைவகுத்துள்ளார். சென்னைக் கந்த கோட்டத்தை வள்ளலார் சுவாமிகள் பாடிய பின்பு, அது பொன்னும், நவமணியும் கொழிக்கும் செல்வத் திருக்கோட்டமாகத் திகழ்கிறது, என மணி. திருநாவுக்கரசு முதலியார் எழுதியதாக ஊரன் அடிகள் உரைக்கின்றார். இதனின்று 'பணச்செல்வம் செழிக்க' எனும் பொருள்பட உரைத்துள்ளார் என அறிய முடிகிறது.

அவ்வை சு. துரைசாமி	-	அருட்செல்வம்
க. கிருஷ்ணமூர்த்தி	-	ஞானசெல்வம்
துரை.தண்டபாணி	-	பொருட்செல்வம்
ஊரன் அடிகள்	-	பொருட்செல்வம்

என உரை செய்துள்ளமை அறிய முடிகிறது.

வள்ளலார் தம் வாழ்நாளில் பொன்னும் மணியுமாகிய பொருட்செல்வத்தைக் கருதியவரல்லர். எனவே அருட்செல்வம் எனப் பொருள் கோடல் சிறப்புடைத்து.

இதே தெய்வமணிமாலையின் 8ஆவது பாடலான,

ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்....

எனும் பாடலில்

மருவு பெண்ணாசைசயை மறக்கவே வேண்டும்

எனும் அடிகளுக்கு சு. தருமராசு, பெண்ணாசையை மறக்க வேண்டும் என்கிறார். ஔவை. சு.துரைசாமி, உடல் வளரும் போதே உடன்வளர்ந்து அறிவை மயக்குவது காமமாகலின் 'மருவு பெண்ணாசையை மறக்கவே வேண்டும்' எனப் பொருள் கூறுமுறை சிறறப்புடைத்து. ஆயினும் குற்றமற்ற பெண்டிதர் தம் உறவை வெறுத்தல்லர் வள்ளலார். குற்றமுடைய (மருவு) பெண்டிரை வெறுத்து, சிறப்புடை இல்லற மாண்பினை ஏற்றவர் வள்ளலார் எனப் பொருள் இறுத்தல் நலம் எனக் கொள்ளல் நன்று.

இங்கித மாலை

இது திருவொற்றியூர் தியாகராசப் பெருமான் மீது வள்ளலார் பாடியது. இங்கித மாலையின்கண் (குறிப்பு) வரும் பாடல்கள் யாவும் திருவொற்றியூர் இறைவனைப் புகழ்ந்தும், கவர்பொருள்பட அவன் உரையாடியதை வியந்தும் மகளிர் தமக்குள் உரையாடுவதாகப் பொருள்பட அமைந்திருப்பதால், பொருள் இலக்கணத்துப் புறப்பொருள் வகையிற் புறத்திணைப் பாடாண் பாடல்களாகும். இந்த இங்கித மாலையில் மகளிரால் நயந்துரைக்கப்படுபவன் இறைவன் எனவே இவை கடவுள் மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கம் எனக் குறிக்கப்படுகின்றன. இவ்விங்கித மாலையில்,

பொன்னோர் மணிமன் றுடையீர்நீர்
புரிந்த தெதுவெம் புடைவென்றே
னின்னே யுரைத்தற் கஞ்சுதுமென்றே
றாரென் னென்றே னியம்புதுமேன்
மின்னே நினது நடைப்பகையா
மிருக பறவை தமைக்குறிக்கு
மென்னே யுரைப்ப தென்கின்றா
ரிதுதான் சேடி என்னேடி (அருட்பா, 1928)

எனும் பாடற்குப் பொருளுரைக்கும் வகையில் ஔவை சு. துரைசாமி பொருள் கூற, சு. தருமராசு, அதுதருணம் இறைவன் பிச்சாண்டிக் கோலத்தில் நிற்கும் இறைவனைப் பார்த்துத் தலைவி கேட்டதாகப் பொருள் கொண்டமையாற் பாடற்பொருண்மை எளிதில் புலப்பட அமைந்துள்ளது.

திருவடிப் புகழ்ச்சி

'வள்ளலாரை தவிர வேறுயாரும் திருவடிப் புகழ்ச்சிப் போன்ற செய்யுளை இயற்றியது இல்லை. ஒரு அடிக்கு 224 சீர்களுடன் 4 அடிகளால் ஆனது. ஒவ்வொரு அடியிலும 7 சீர்களையுடைய 8 பாடல்கள் அமைந்துள்ளன. ஆக 4 அடிகளில் 32 பாடல்கள் உள்ள ஒரே பாடல் எனலாம். புவனம் என்ற சொல் அனுபவ உலகத்தைக் குறிக்கும். புவனபோகம் என்ற தத்துவத்தில் 'அனுபவ உலகங்கள் 224 உள்ளன என்று குறிக்கப்படுகின்றன' எனத் திருவடிப் புகழ்ச்சி பாடற் கட்டமைப்பை வ.மு. இராமலிங்கனார் விளக்க, இதன் கட்டமைப்பை அவ்வை சு. துரைசாமி, 192 சீர்களைக் கொண்ட கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் என உரைத்துள்ளார். சீர் பிரிப்பில் உரையாசிரியர்கள்

வேறுபடுவதனை இதன் மூலம் காணமுடிகிறது. திருவடிப் புகழ்ச்சியின் (அருட்பா 1960) 7ஆம் அடிகள்,

''படனவே தாந்தாந்த மாகமாந் தாந்ததிரு
பாதிகம் பரமசாந்தம் . . .''

ஆகும். படன வேதாந்த அந்தம் : ஓதப்படுகின்ற நன்கு வேதங்கட்கும் அந்தமான உபநிடதங்களின் உச்சியில் உணரப்படும் பரம்பொருள் என அவ்வை சு. துரைசாமி உரைகாண, படன வேதாந்த அந்தம்: வேதாந்தம் முதலிய ஆறு அந்தங்களையும் கடந்த இறை நுகர்வு நிலை என வ.மு. இராமலிங்கனார் உரை கண்டுள்ளார். வேதங்களின் விரிவாக்கங்களே உபநிடதங்களாகும். எனவே இவ்விருவர் உரை வேறுபாடுகள் மேற்கூறிய வண்ணம் இருப்பினும் இறை நுகர்வு நிலை-அனுபவநிலை என்னும் உரை செம்மையுறக் காண முடிகிறது.

மகாதேவ மாலை

வித்தாகி முளையாகி விளைவதாகி
விளைவிக்கும் பொருளாகி மேலுமாகிக்
கொத்தாகிப் பயனாகிக் கொள்வோனாகிக்
குறைவாகி நிறைவாகிக் குறைவிலாத
சத்தாகிச்ச சித்தாகி இன்பமாகிச்
சதாநிலையாய் எவ்வுயிர்க்கும் சாட்சியாகி
முத்தாகி மாணிக்கமாகித் தெய்வ
முழுவயிரத் தனிமணியாய் முளைத்த தேவே

(அருட்பா, 2073)

இப்பாடலில் வருகிற 'கொத்தாகி' என்பதற்கு எம்.ஏ. கந்தசாமி 'உணவாகி' எனப் பொருள் கொண்டுள்ளார். மு. பாலசுப்ரமணியன், 'மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் எனும் பஞ்ச பூதங்களும் நெருங்கி இருப்பதனைக் 'கொத்து' எனவும், அவ்வை சு. துரைசாமி, 'உலகத்துப் பொருள்களாக அமைந்து' எனவும் பொருள் கொண்டுள்ளமை காணமுடிகிறது. மு. பாலசுப்ரமணியனின் உரை அடுத்த பாடலுக்குரிய முதன்மையதாக இது அமைந்துள்ள தன்மையை உளப்படுத்தும் பாங்கில் காணமுடிகிறது.

இதே மகா தேவமாலையின், ''சுழியாத அருட்கருணைப் பெருக்கு. . .'' (அருட்பா 2109) எனும் அடிக்கு, பெருகிவரும் ஆற்று நீர்ப் பெருக்கில் காணப்படும் நீர்ச்சுழி இங்கு நினைக்கப்படுவதாக அவ்வை சு. துரைசாமி உரை வகுக்க, துன்புறுத்தும் சுழலில்லாத அருட்கருணை வெள்ளம் என உரைத்துள்ளார். இதனை, துன்பத்தை அளிக்கிற சுழி இல்லாத அருளாகிய கருணை வெள்ளம்

என மு. பாலசுப்ரமணியன் உரை வகுத்துள்ளார். தெளிவான சுழியற்றற நீர் போன்ற அருட்கருணை எனல் பொருந்துவதாகிறது. மேலும், மு. பாலசுப்ரமணியனின் உரையில் இப்பாடல் 39ஆம் எண்ணிடப்பட்டும், எம்.ஏ. கந்தசாமி உரையில் 43ஆம் பாடலென எண்ணிட்டும் பதிகப்பட்டுள்ளது.

அத்துவிதானந்த அனுபவ இடையீடு

இப்பகுதியினை அவ்வை சு. துரைசாமி, அத்துவிதானந்த அனுபவ இடையீடு எனப் பெயரிட, அத்வைத ஆனந்த அனுபவ இடையீடு என மு. பாலசுப்ரமணியன் தலைப்பிட்டு உரை கண்டுள்ளதனை இவ்விரு நூல்கள் வாயிலாக அறிய முடிகிறது.

இதற்குரிய அவ்வை. சு. துரைசாமியின் விளக்கமான, ஆன்மா சிவத்தோடு கூடிப் பெறும் அத்துவித தொடர்புகளால் எய்தும் இன்பத்திற்கு இடையீடாக வந்து தடை செய்வனவற்றை விளக்குவதாம். சிவத்தோடு ஆன்மா பெறும் தொடர்பை அத்துவிதச் சம்பந்தம் என்பர் என்னும் உரையே இத்தலைப்பிற்கு ஏதுவாகிறது.

இத்தலைப்பில் அருட்பா 3377ஆம் பாடலின் 3ஆவது அடியிலுள்ள 'மரணமெலாம்' எனும் சொல்லுக்கு, தூல சூக்கும கரணதேக மரணங்கள் என மரணம் பலவாதலின் 'மரணமெலாம் தவிர்த்து' எனப் பன்மையுடன் பொருளுரையை அவ்வை. சு. துரைசாமி வகுக்க, மரணமெலாம் தவிர்ந்து என்பது உடம்பில் மூப்பு நெருங்குகின்றபோது, வயது ஏற ஏறக் கண்பார்வை மங்கிவிடுகிறது. காது கேட்பது கொஞ்சம் கொஞ்சமாகக் குறையத் தொடங்கு கின்றது. நினைவாற்றல் கொஞ்சம் கொஞ்சமாக இழந்து போகிறது. கை, கால்கள் எல்லாம் முன்புபோல் செயல்பட முடிவதில்லை. இப்படி ஒவ்வொரு அங்கமாகப் பழுதடைவதைத் தான் 'மரணமெலாம்' என்று சொல்கிறார்கள் என மு. பால சுப்ரமணியன் உரை வகுத்துள்ளார். இதனை நோக்குங்கால் அவ்வை. சு. துரைசாமி உரை செப்பனிடப்பட்டதாகக் காணமுடிகிறது.

சற்குரு மணிமாலை: இம்மணிமாலையில் வரும் 7ஆம் பாடல்,

பன்னெறிச் சமயங்கள் மதங்கள் என்றிடு மோர்
பவநெறி இதுவரை பரவியது. . . (அருட்பா 3696)

என்பதற்கான உரையில், வள்ளற் பெருமான் வேதாந்தம், சித்தாந்தம், நாதாந்தம், போதாந்தம், யோகாந்தம், கலாந்தம் ஆகிய

ஆறையும் மதங்களாக வள்ளலார் அறிவிக்கின்றார் என மு. பாலசுப்பிரமணியன் உரைகண்டுள்ளார். பலவகை நெறிகளை யுடைய சமயங்கள் மதங்கள் என வழங்கும் பிறவிக்கேதுவாகிய பவநெறி என அவ்வை சு. துரைசாமி பொருள்கண்டுள்ளார்.

மதம்	-	இந்துமதம்
சமயம்	-	சைவம், வைணவம், போன்றவை 6.
மதம்	-	பௌத்தம்
சமயம்	-	ஹீனயானம், மகாயானம்
மதம்	-	கிருத்துவம்
சமயம்	-	கத்தோலிக்கம், பிராட்டஸ்டென்ட் ஆங்கலின்

எனவாகும். மதம் என்பதற்கும் சமயம் என்பதற்கும் மேற்கண்ட விளக்கத்தை ந. சுப்புரெட்டியார் உரைத்துள்ளார். இத்தகு விளக்கம் மேற்கண்ட இருவர்தம் உரைகளிலும் இடம் பெறாமையாக உள்ளதனை கண்டறியப்படுவதுடன், அவ்வை சு. துரைசாமி உரையே செப்பனிடப்பட்டதாக அறிய முடிகிறது.

அருட்பெருஞ்ஜோதி அகவல்

அருட்பெருஞ் ஜோதி அகவல் 1596 அடிகள் கொண்டது. இது திருவருட்பாவின் 4615ஆவது பாடலாகும். இதன் உட்பிரிவு களுக்கான உரையாசிரியர்தம் வளத்தினையும் வேறுபாட்டினையும் இங்கு விளக்கப்படுகிறது.

அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி
அருட்பெருஞ் ஜோதி அருட்பெருஞ் ஜோதி

எனும் மகாமந்திரத்திற்கு, 'எல்லா வகையான செயல்களும், கணக்கிட முடியாத உருவத் தோற்றமும், பேரொளியும் கொண்ட காரண காரிய உருவ அருட்பெருஞ் ஜோதியே! எனது இந்திரியம், கரணம், ஜீவன், ஆன்மா ஆகிய சுதந்திர உருவ தோற்றத்தால் நெகிழ்ந்து உணர்ந்து தொழுது வணங்குகின்றேன் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரே' என ம. கோவிந்தசாமி உரை வகுக்க,

'பெருந்தயவும் பேரறிவும் உடைய பேரின்பமே
பேரின்பமும் பெருந்தயவும் உடைய பேரறிவே
பெருந்தயவும் பேரறிவும் உடைய பேரின்பமே
பேரின்பமும் பெருந்தயவும் உடைய பேரறிவே

எனச் சீனி, சடையப்பனும், 'திருவருளாகிய பெருமை சான்ற ஒளிப் பொருளாகிய சிவபெருமானே! அருள் நெறியாகிய சிவநெறியைச் சார்ந்து திருவருளின்ப நிலையமாகிய பெருநிலையில் எழுந்தருளுகின்ற திருவருளுருவாம் சிவமுதற் பொருளாகிய அருட்பெருஞ் ஜோதி யாண்டவனே' என அவ்வை. சு. துரைசாமியும், 'முன்னால் தோன்றிய மகான்கள் எந்த அடிப்படையில் தெய்வ உருவங்களைக் கற்பனை செய்தார்கள் என்று திருவருட் பிரகாச வள்ளலார் ஆய்வு செய்து சிற்சபையில் தவம் செய்வோர் முடிவாகத் தங்களுடைய அனுபவத்திலே கண்ட பேரொளியையே புறத்திலே பலப்பல வடிவங்களில் இறைவனாகக் காட்டினார்கள் என்ற உண்மையை வள்ளலார் விளக்குகின்றார். அதாவது சைவம் முதலாக விளக்குகின்ற ஒவ்வொரு சமயமும் தன் தெய்வம், என்று தனித்தனியாகக் காட்டுவது சிற்சபை ஒளி தவிர வேறில்லை' என மு. பாலசுப்ரமணியம் உரைக்கின்றார். இந் நால்வரில் அவ்வை சு. துரைசாமி, மு. பாலசுப்ரமணியம் இருவரும் சைவ சமயஞ் சார்ந்த உரையையும், ம. கோவிந்தசாமி, சீனி. சடையப்பன் இருவரும் சமயங் கடந்த உரையையும் வழங்கியுள்ளனர் என அறிய முடிகிறது. மேலும் இவ்வகலின்,

கற்பனை முழுவதும் கடந்தொளி தரும்ஓர்
அற்புதம் சிற்சபை அருட்பெருஞ் ஜோதி (106)

எனும் அடிகளுக்கு சீனி. சடையப்பன், இல்லாததை இருப்பதாய்ச் சொல்லுகிற இம்மை இன்ப, மறுமை இன்ப கற்பனைகள் யாவையும் கடந்து (பேரின்ப நிலையில்) விளங்கி அருட் பிரகாசம் ஈந்தருள்கின்ற ஓர் அற்புத சத்திய ஞான சபையின் அருட் பெருஞ்ஜோதி' என, 'ஞானிகள், அருளாளர்கள், பேரறிவாளர்கள் யாருடைய கற்பனை எவ்வளவு நீண்டாலும் அவற்றிற்கெல்லாம் அடங்காது அவைகட்கு அப்பாற்பட்டுப் பிரகாசிக்கின்ற ஓர் ஒளியைத் தருகின்ற மிக அற்புதமான சிற்சபையில் விளங்கும் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரே' என்று மு. பாலசுப்ரமணியம் உரைகாண, 'எங்கும் கல்வித்திறத்தால் ஏற்படும் சிந்தனை, நினைப்பு, எண்ணம் முதலியவை மூலம் எங்கெங்கு எதை எதை யோசிக்கும் வகை தொகைகள் அத்தனைக்கும் பேரொளிப் பிரகாசித்துக் கொண்டேயிருக்கும் அதிசயிக்கத்தக்க ஆற்றலால் ஞானசபை மூலம் ஒப்புயர்வற்ற ஆட்சி நடத்தும் அருட்பெருஞ் ஜோதி ஆண்டவரே' என ம. கோவிந்தசாமி உரைவிளக்க, 'மனத்தின் கற்பனையெல்லையெல்லாம் கடந்து அதற்கு

அப்பாலாய் நின்று ஞானஒளி பரப்பும் அற்புதமான சபையின்கண் விளங்குவது அருட்பெருஞ்ஜோதி' என அவ்வை சு. துரைசாமி பொருளுரைக்க, ஞானிகள், அருளாளர்கள், பேரறிவாளர்கள் யாருடைய கற்பனைக்கும் எட்டாதது என்பதைக் காட்டிலும் பொதுவாக இம்மை, மறுமை கற்பனைகட்கு எட்டாததென்பது பொருந்துவதாகிறது. மேலும் எளிய நடையிலுள்ள அவ்வை சு. துரைசாமி உரை தெளியக் காண முடிகிறது. இங்ஙனம் அவ்வவர் கற்பனைக் கேற்பப் பொருள் கொண்டுள்ளமை அறியப்பட்டுள்ளது.

திருப்பள்ளி எழுச்சி

திருப்பள்ளி எழுச்சி என்பது சிற்றிலக்கிய வகைமை சான்ற ஒன்று. இதற்குண்டான பாடலின் உரை வேறுபாடுகள் கீழ்கண்டவாறு காணப்படுகிறது.

இருமையும் அளித்தயென் அருஞ்பெருஞ் ஜோதி
என்அர சேபள்ளி எழுந்தருள் வாயே (அருட்பா. 4890)

'இந்தப் பிறவியை இம்மை என்றும், மறுபிறவியை மறுமை என்றும் சித்தாந்திகள் சொல்லுவார்கள். தூல உடல் அழியாத நித்திய உடலாக மாற்றியதால் இம்மையிலேயே இருமையும் பெற்றார்' எனச் சரவணானந்தா உரை செய்ய, இதனை, 'இம்மையிலும் மறுமையிலும் நலமே புரிகின்ற அருட்பெருஞ்ஜோதி' என்று பொருளுரைத்துள்ளார் அவ்வை சு. துரைசாமி. இங்கு இம்மையும் மறுமையும் ஒருங்கே பெற்ற இருமை எனக்கூறாது இம்மை, மறுமை என பிரித்துப் பொருள் கண்டுள்ளமை அறிய முடிகிறது. இதனை, உடல், உள்ளம், உயிர் மூன்றும் ஒருமையில் நிற்பது இருமை என்பது (இரும்பு+ஐ=நித்தியமாய் இருக்கச் செய்யும் தலைவன்) நித்திய வாழ்வு பெறுவதாகும் என க. கிருஷ்ணமூர்த்தி உரைத்துள்ளார். மறுமைக்கு-அடுத்து மீண்டும் பிறப்பிற்கு வள்ளலார் வாழ்வில் இடமில்லையாதலால் அவ்வை. சு. துரைசாமி உரையைக் காட்டிலும் சரவணானந்தர் உரை சிறப்புறக் காணமுடிகிறது.

அனுபவமாலை

அனுபவமாலை வள்ளலார் இறைமைத் தன்மையை அடைந்த அனுபவநிலையை உணர்த்துவது. இதன் முதல் பாடலிலுள்ள,

"நம்புறுபார் முதல்நாத வரையுளநாட் டவரும்
நண்குமுகந் தணிவியந்தா நன்மணம்ஈ தெனவே" (அருட்பா 5714)

என்னும் அடிகளுக்கு, நிலம் முதல் நாத தத்துவம் ஈறாக உரைக்கப்படும் தத்துவங்களுக்குக் கலையும் புவன போகமும் கூறப்படுவதுப்பற்றி, நம்புறுபார் முதல்நாத வரையுள நாட்டவர் வரை என வள்ளலார் நவில்வதாக அவ்வை சு. துரைசாமி உரைத்துள்ளார். மு. பாலசுப்ரமணியன், உலகியலில் உள்ளவர்கள் முதல் நாத அனுபவ எல்லை கண்டவர் வரையில் மேற்கூறிய வழி நடந்து இந்த மலர் மணத்தை நன்கு முகர்ந்து வியந்தனரே எனப் பொருள் கொண்டுள்ளார். பார்(புவன) நாட்டவர் வேறு நாதவரை நாட்டவர் வேறு எனினும் பொருளில் அவ்வை. சு. துரைசாமி பொருள்கொள்ள, புவன நாட்டவரே நாதநிலை வரை சென்ற அனுபவ நிலையினை உடையவர் மு. பாலசுப்ரமணியன் உரை வகுத்துள்ளார். இவ்வாறு உரை வேறுபாடு அறியமுடிகிறது.

ஞானசரியை (மரணமிலாப் பெருவாழ்வு)

ஞான சரியையானது சரியை, கிரியை, யோகம், ஞானம் எனும் இரக்க வழிபடி மார்க்கத்தில் 16 படிகள் உள்ளன. இதில் ஞானத்தில் சரியை என்பது 13ஆவது படி 'திரை யோதசம்' எனப்படுவதாகும். ஞானசரியை 28 பாடல்கள் கொண்டு அந்தாதித் தொடரில் பாடப்பட்டது.

துணிந்து வந்த வேதாந்த சுத்த சித்தாந்தமாய்த்
துரியமுடி அனுபவமே . . . . (அருட்பா 5578)

என்னும் ஞான சரியையின் 3ஆவது பாடலின் அடிகளுக்கு ஒருமுகத்தியான நிலையில் இறைச் சிந்தனை நெகிழ்வால் நெகிழுங்காலை, சுத்த சித்தாந்த துரியமுடி அனுபவ ஞானத்தைப் பெற்று காணாத காட்சிகளை எல்லாம் காணமுடியும் என வள்ளலார் அருளுகின்றார்' என ம. கோவிந்தசாமி உரைகாண இதனை, 'துரியமலைமேல் என்றது துரியாதீதம் அதனையே இங்குத் துரிய முடி அனுபவமே என வள்ளலார் உரைக்கின்றார்' என மு. பாலசுப்ரமணியன் உரைகண்டுள்ளார். தியானத்தைத் துரிய நிலையில் இயற்றும்போது துரியமுடி அனுபவம் ஏற்படும் எனக்கொள்வது ஏற்புடையது. இதனை, துரியத்தின் மேல் நின்ற அனுபவமே சிந்தாந்த நிலையை மறுத்துக் கடந்த சுத்த சித்தாந்தமாய் நின்று மலவெம்மை நீக்கித் தணிந்த பெருஞ்சுகமே என ச.சு.ச.ச. சங்க சேலம் வெளியீடு பகர்கின்றது. சிததாந்தத்தை மறுத்துக் கடந்தது சுத்தசித்தாந்தம் என்பது ஏற்படையதன்று. மேலும், தக்க எடுத்துக்காட்டுகளால் தூய்மை உண்மைப் பொருளைச் சுத்த சித்தாந்தம் என வள்ளலார் உரைத்துள்ளார் என்பர் அவ்வை. சு. துரைசாமி. இது ஏற்கத் தக்கதாக அமைந்துள்ளது.

முடிவுரை

வள்ளலார் இயற்றிய பாடலின் சொற்களை அப்படியே உரையாகக் கொண்டும் அவரவர் அறிந்த நெறிகளின் படிக்கான உரையாகச் சொற்களைக் கண்டுரை செய்து உள்ளனர். மேலும் அருட்பாவிற்கு உரை வகுத்த உரையாசிரியர்களின் தன்மைகளைக் கீழ்கண்டவாறு இக்கட்டுரையில் காண முடிகிறது.

1. சைவ நூற்படிகளின் அடிப்படையில் பிற சைவப் பாடல்களை மேற்கோள் காட்டி சைவ நெறியில் (அவ்வை. சு. துரைசாமி)
2. பிறர்கண்ட சைவ நெறியுடன் சுத்த சன்மார்க்க நெறி கலந்தவாறு (ம. கோவிந்தசாமி)
3. சுத்த சன்மாக்க நெறியை வற்புறுத்தக் கருதி (சரவணானந்தா, சீனி. சடையப்பன்)
4. திருவருட்பாவில் கண்டுள்ள சைவநெறியுடன் சன்மார்க்க நெறி கலந்தவாறு (மு.பாலசுப்ரமணியன்)

என்னும் அளவில் உரையாசிரியர் தம் படிநிலைகள் கண்டறியப் பட்டுள்ளன. இவ்வாறான உரைவேறுபாடுகள் அருட்பாவிற்கு அறியப்பட்டுள்ளன.

துணைநூல்பட்டியல்

அவ்வை. சு. துரைசாமி

1. திருவருட்பா மூலமும் உரையும், 1-10 தொகுதிகள், அண்ணாமலை பல்கலைக் கழக வெளியீடு, சிதம்பரம் 1983.
2. திருவருட்பா மூலமும் உரையும், 1-10 தொகுதிகள், சுத்த சன்மார்க்க நிலையம் வெளியீடு, வடலூர் 607 303, ம.ப. 2006.

க. கிருஷ்ண மூர்த்தி

1. அருட்பிரகாச வள்ளலார் அருளிய தெய்வமணி மாலை, திருவருள் பதிப்பகம், திருவள்ளூர், 2007.

ஊரன் அடிகள்

1. இராமலிங்க அடிகள் வரலாறு, சமரச சன்மார்க்க ஆராய்ச்சி நிலையம், 1971.

அ. தருமராசு

1. வாழ்வில் மேன்மைபெற வள்ளலாரின் பாதை, மணிமேகலை பிரசுரம், சென்னை, 2005.

எம்.ஏ. கந்தசாமி

1. மகாதேவமாலை, மாப்பிள்ளை விநாயகர் பதிப்பகம், மதுரை 1, 1955.

ந. சுப்பு ரெட்டியார்

1. முக்திநெறி, வாசுதேவன் வெளியீடு, பாரிநிலையம், சென்னை, 1982.

சீனி சடையப்பன்

1. அருட்பெருஞ் ஜோதி அகவல் (எளிய உரை) வெளியீடு, தயா மூலம், மதுரை-1, 2009.

சரவணானந்தா

1. திருப்பள்ளி எழுச்சி, வானதி பதிப்பகம், சென்னை-17, 1992.

ம. கோவிந்தசாமி

1. அருட்பெருஞ்ஜோதி அகவல் மூலமும் இனிய எளிய நல்லுரையும், பாரதி பிரிண்டர்ஸ், மயிலாடுதுறை.
2. வள்ளலார் உணர்த்தும் சாகாக் கல்வி, பாரதி பிரிண்டர்ஸ், மயிலாடுதுறை, 2010.

மு. பால சுப்ரமணியன்

1. மகாதேவ மாலை, வடலூர் ஜோதி இராமலிங்க சுவாமிகள் சமரச சன்மார்க்க சங்கம், பெங்களூர்.
2. அத்வைத ஆனந்த அனுபவ இடையீடு, வெளியீடு சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், சென்னை.
3. சற்குரு மணிமாலை, வெளியீடு சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், சென்னை.
4. அருட்பெருஞ்ஜோதி அகவல் (எளிய உரை) வெளியீடு சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம், சென்னை.

சமரச சுத்த சன்மார்க்க சத்திய சங்கம்

1. ஞானசரியை, உரைவெளியீடு, சேலம், 2005.

பெரியவாச்சான்பிள்ளை திருப்பாவை – உரை ஒரு மதிப்பீடு

முனைவர் த. பூமிநாகநாதன்

உலகளாவிய அளவில் இந்தியத் துணைக் கண்டத்தில்தான் வரலாறு, பண்பாடு, நாகரிகம் போன்றன மதத்தின் (சமயத்தின்) அடிப்படையிலேயே செல்வாக்கு பெற்று இன்றும் நிலவி வருகின்றன. பாரத தேசத்தின் இறையாண்மை என்பது வைதிக சமய நெறிகளின் வழியேதான் உணரப்படுகின்றன. இறை நம்பிக்கை தொடங்கிய காலத்திலிருந்தே ஆன்றோர்களாலும், சான்றோர்களாலும் அன்று ஒன்று கூடித் தாங்கள் தங்கள் மன இயல்பிற்கேற்ப இறைக் கோட்பாடுகளை வகுத்துக் கொண்டு அக்கோட்பாடுகளுக்கான அடித்தளமாக வேதத்தை அமைத்துக் கொண்டனர். அதன் வெளிப்பாடாகத்தான் சைவம், வைணவம், சாக்தம் ஆகிய மதங்களும் இவற்றிற்கும் பிற்காலத்திலே எழுந்த கௌமாரம், காணாபத்தியம், சௌரம் போன்ற சமயங்கள் இந்திய சனாதன மதத்தின் பல கூறுகளாகச் சமையப் பெற்று அவ்வச் சமயத்திற்கேற்ப வழிபாட்டுமுறைகளும் சடங்கு முறைகளும் இலங்கி வரலாயின.

தமிழகத்தில் வைணவம் திருமாலை முழுமுதற் கடவுளாகக் கொண்டு அதே வேளையில் வேதத்தைப் புறந்தள்ளிவிடாமல் அதனைப் பற்றுக்கோடாகக் கொண்டு எழுந்தது. அத்தகைய சமயத்தின் சிறப்புகளை எடுத்துக் கூறும் பனுவலாக நாலாயிர திவ்விய பிரபந்தம் என்ற பன்னிரு ஆழ்வார்கள் அருளிய பாசுரங்களின் தொகுப்பு அச்சமயத்தின் முக்கிய நூலாக, புனிதப் பனுவலாக இன்றும் விளங்கி வருகிறது. அத்தகைய பிரபந்தத்திற்கு எழுந்த உரைகள் பல. மணிப்பிரவாள நடையில் அமைந்த அவ்வுரைகள் வைணவ உலகம் கண்ட புதிய பாதை. அப்பாதையில் சிறந்து விளங்கிய பெரிய வாச்சான்பிள்ளை செய்த திருப்பாவை உரையை ஆய்வதே இக்கட்டுரை நோக்கமாகும்.

ஸ்ரீ வைஷ்ணவர்கள் எல்லாரும் பெரியவாச்சான் பிள்ளை சம்பந்தம் பெற்று அவருக்குச் சிஷ்ய கோடியாய் இருப்பார்கள்:[1] திவ்வியப் பிரபந்தம் முழுமையும் பெரியவாச்சான் பிள்ளையின் உயிர்நாடி துடிக்கின்றது என்று புகலுவர் ஈடு அறிந்தோர்.

பெரியவாச்சான் பிள்ளை இயற்றிய நூல்களும் மூவாயிரப்படியும்

இவர் இயற்றிய நூல்களாக 21 நூல்கள் அறியப்படுகின்றன. அவை வருமாறு: கத்யத்ரய வியாக்கியானம் ஆளவந்தார் தோத்திர ரத்தின வியாக்கியானம், சதுஸ்லோகி வியாக்கியானம், சுபயப்ரத வியாக்கியானம், திரிமத சித்தாந்த வியாக்கியானம், பாசுரப்படி இராமாயணம், கலியின் அருளப்பாடு, மாணிக்கமாலை, நவரத்தின மாலை, உபகார ஸ்மருதி, சரம ரகசியம், அறுசந்தான ரகசியம், நிகமனப்படி, பிரபந்த ரகசியம், ரகசிய த்ரயதீபிகா, ரகசிய தர்ம விவரணம் போன்ற நூல்களைக் கூறுவார் மு.வை.அரவிந்தன்.[2]

மூவாயிரப்படி

ஈண்டு பெரியவாச்சான் பிள்ளையின்திறன் குறித்த ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட நூல்தான் ஆண்டாள் அருளிய திருப்பாவை. திருவாய்மொழிப் பாசுரத்திற்கு அமைந்ததுபோல திருப்பாவைக்கு அமைந்த வியாக்கின உரை 3000 படிகளைக் (கிந்தங்களை) கொண்டது.

நாலாயிர திவ்வியப் பிரபந்தம்

வைணவ சமயத்தின் தலைக் கடவுளாக விளங்கும் பாம்பணையிற் பள்ளிகொண்ட பரந்தாமனந்த கோபாலன், கொம்பனார்க்கெல்லாம் கொழுந்து என்று பாராட்டப்படும் திருமாலுக்கு அவன் அடியார்களாய் விளங்கிய பன்னிரு ஆழ்வார்கள் அணிவித்த சொல்மாலை. ஏறத்தாழ நாலாயிரம் தீஞ்சுவைப் பண்ணிசைப் பாடல்களின் தொகுப்பே இந்த நாலாயிர திவ்வியப் பிரபந்தம்.

திவ்விய பிரபந்தத்தைத் தமிழ்மறை எனப் பாராட்டுவர். இப் பாரங்களைப் பாட வல்லாரை "அரையர்" என்ற அழைப்பது வைணவ மரபு. நாதமுனிகளின் முயற்சியாலேயே இப் பனுவல் உருவானது. ஏட்டில் பதிவு செய்த பெருமை உடையவரைச் சாரும் என்பர்.

"நாலாயிரம்" தமிழில் புனையப்பட்ட பக்திப் பனுவல். நாலாயிரத்தின் தமிழ்ப் பற்றையும், தமிழின் இனிமையைப் பற்றியும் இறையன்மை பற்றியும் உணர்ந்த அறிவுத் திருக் கூட்டமே பல்வேறு உரைகளை இயற்றி பெரு உரை கொண்ட பக்தி இலக்கியப் பெட்டகம் என்ற சிறப்புக்குரியதாக இதனை ஆக்கினர்.

வைணவப் புனித நூலான (Horly Doctrine) திவ்விய பிரபந்தமும், சைவ சமயப் பெரு நூலாம் பன்னிரு திருமுறையும் சமயக் கோட்பாட்டால் முரண்பட்டாலும் அவை கண்டு சொன்ன புதுமையான இந்திய வகைமைகள் வாழ்வியற் கோட்பாடுகள் சமூக மனித

நேயத்திற்கான நெறிமுறைகள் என்பன என்றும் நின்று நிலவக் கூடியன.

இறைவன் அருளிச் செயலில் முக்கியமானதாக உன்னதமானதாகக் கருதப்படும் அறம் பிறழ்ந்த சமூகத்தை நேர்ப்படுத்த இறைவனே எழுந்தருள்வான் (அவதாரம் கொள்வான்) என்ற உன்னதக் கோட்பாட்டை உணர்த்தும் இலக்கியமாக இந்நாலாயிரத் திவ்விய பிரபந்தம் விளங்கும் தன்மையது. இவ் அடிப்படைக் கோட்பாட்டைக் கருத்திற் கொண்டே, பிரபந்தத்தின் நுண்பொருளை நன்குணர்ந்து, சரணாகதி, தத்துவத்தை கண்டறிந்து, அதனைத் தாமும் திளைத்து அதன் பயனாய் விளைந்த வாழ்வியற் பட்டறிவு மட்டுமன்றி இறையனுபவத்தையும் தங்கள் பாசுரத்தின் ஊடே தந்துள்ளனர்.

ஆழ்வார்களின் அனுபவ நிலை அளப்பரியது. முதலாழ்வார்கள் மூவரும் ஒரே நிலையில் திருமாலை உணர்ந்தவர்கள். திருமழிசையாழ்வாரின் இறையனுபவம் அன்பு நிலையை வெளிப்படுத்துவதாக அமையப்பெற்றது. பெரியாழ்வார் திருமாலைக் குருவாக எண்ணி வியந்து வியப்பதாக அமையப் பெற்றது. ஆண்டாளின் இறையனுபவம் கனவாக மலர்ந்தது. திருமாலை அரசனாகக் கருதியது குலசேகர ஆழ்வாரின் இறையனுபவம், தன்னை இறையடியவனாக, எளிய தொண்டனாகத் திருமாலுக்கு அர்ப்பணித்துக் கொண்ட தன்மையைக் கூறுவது தொண்டரடிப் பொடியாரின் இறையனுபவம். திருமாலின் அழகின், ஈர்ப்பில் மெய் மறந்த நிலையைத் திருப்பாணாழ்வார் தன் அனுபவமாகச் சித்திரிக்கிறார். திருமாலை மனத்தாலும் பொறிகளாலும் உணர்ந்த அனுபவம் திருமங்கை ஆழ்வாரைச் சாரும்.

இத்தகைய ஆழ்வார்களின் பாடற் பனுவலுக்குப் பெருமை சேர்க்கும் வகையில் அடியவர்கள் இறை இன்பத்திற் திளைப்பதற்குப் பிற்காலத் தெழுந்த வைணவ உரையாசிரியர்கள் உற்ற துணையாக விளங்கினர் என்றால் மிகையாகாது.

திருவாய் மொழிக்கு, பிள்ளை அவர்கள் 24000 படியில் உரை கண்டிருந்தாலும் 3000 படியில் அமைந்த படியே இவருக்குப் பெருமையும் புகழும் ஏற்படக் காரணமாயிற்று என்பார் மு.வை.அரவிந்தன்.[3]

திருப்பாவையும் திவ்விய பிரபந்தமும்

திருப்பாவையின் சிறப்புக் குறித்து எண்ணற்ற விளக்கங்கள் இருந்தாலும் "இளையவல்லி ஸ்ரீ நிவாச கோபாலாசாரியர்" தரும் கருத்து ஈண்டு நினைவுக் கூரத்தக்கது. ஆழ்வார்களில் ஸ்ரீ

ஆண்டாலுக்கு ஏத்தம் ஏன் என்று வினாவினை எழுப்பிவிட்டு அவர்தரும் விளக்கம் வருமாறு:

"ஸம்சாரத்தில் தோன்றின ஆழ்வார்கள் எம்பெருமானால் ஞானத்தைப் பெற்றுத் தம்குறைகளை விண்ணப்பம் செய்தார்கள். இவள்தானே ஸர்வேச்வரனைத் திருப்பள்ளி விண்ணப்பம் செய்தது கொண்டாடத்தக்கது. ஆழ்வார்கள் ஸ்திரித்வத்தை ஏறிட்டுக் கொண்டு அந்த பகவானை அனுபவித்தார்கள். ஆண்டாள் ஸ்திரியாகவே இருந்ததால் விஷேச ரசத்தோடும் பாவானை அனுபவித்துப் பள்ளமடையில் தண்ணீர் பாய்வது போல் இயற்கை யாதலால் மிகவும் கொண்டாடத்தக்கது தானே" எனப் பாராட்டுவார்.

கீதையும் திருப்பாவையும்

பெரியவாச்சான் பிள்ளை திருப்பாவையின் சிறப்பைக் கூறவருங்காலை அதனைக் கீதையோடு ஒப்பிட்டு இரண்டுக்கும் உள்ள தன்மையை விளக்கிச் செல்லும் விழியில் திருப்பாவையின் மாண்பை, புனிதத்தைப் புலப்படுத்துவார். அதுவருமாறு:

கண்ணபிரான் பார்த்தனுக்கு உபதேசித்த ஸ்ரீ கீதையினும் இப்பிரபந்தம் மேம்பட்டது.

1. அது (கீதை) பார்த்தன் ஒருவனுக்காக ஓதியது.

   இது (பாவை) உலகினர்க்கு கோதை ஓதுவது.

2. தருமம் - அதர்மம் இன்னது என்று ஓராமல் கலங்கிய பார்த்தனுக்குக் கண்ணபிரான் ஓதியது-கீதை.

   கர்மம், ஞானம், பக்தி முதலியவற்றை விவரித்து அதனூடே தருமம்-அதர்மம் என்பதன் பொருளை உய்த்துணரவைத்து இறுதியில் இறைவனே உபாயமாகப் பற்றுவது சிறந்ததாகக் கூறுவது திருப்பாவை.

3. முதற் பாரம் தொடங்கி இறுதிப் பாசுரம் வரை இறைவனே உபாயம் என்று கூறுவது பாவை. கீதையில் இறைவன் (கண்ணன்) தன்படிகளைத் தானே பார்த்தனுக்கு ஓதினான்.

பாவையில் ஆயர் சிறுமியர் அந்த இறைவனை ஏந்தி திருப்பாவைப் பாசுரத்தின் சிறப்பைக் குறிப்பிடும்போது, "பெரியாழ்வார் அருளிய திருப்பல்லாண்டும் அவர்தம் திருமகளாகிய ஆண்டாள் அருளிய திருப்பாவையும் ஓதாமல் சந்நிதிகளிலும் இல்லங்களிலும் பெருமானுக்குத் திருவாராதனம் நிகழ்வதில்லை" என்பார் கவிரத்ன செஞ்சொற்கவி - அபிநவ பட்டர் பிரான் (5)

காலை திருவாராதனத்திலே "திருப்பாவை ஓதுவது மிகவும் அவசியம். சர் வேச்சுவரனை எழுப்பி அவனது திருவடிவினிலே கைங்கரியம் செய்வதே வேண்டுவது என்று இதில் ப்ராத்திப்பதாலே பக்தர்கள் தங்களது ஸ்ருபத்தை நன்கறிந்து நல்வாழ்வு வாழ உதவுவது இப் பிரபந்தம் (6) எனப்பாராட்டுவார்.

ஆண்டாளின் பாசுரங்களில் திளைத்த பெரியவாச்சான் பிள்ளை முழு உரையில திருப்பாவை பாசுரத்தில் சிறப்புறு பாசுரமாக ஆண்டாளின் இலக்கிய வீச்சுக்கு எடுத்துக்காட்டாக விளங்கும் பாசுரம்: 23 மற்றும் பாசுரம்: 8 ஆகியன ஈண்டு விரிவாக நோக்கப்பட்டது.

ஆச்சாரியாரின் உரை போக்கு

"பெரியவாச்சானின் உரையை நோக்குங்கால் இவர் உரையில் பிரதிபதார்த்தம் தாத்பிரியார்த்தம், விஷேஷார்த்தம் ஸ்வாப தேசார்த்தம், இலக்கணக் குறிப்பு முதலியவை மிகவும் எளிதாயும் தெளிவாயுமுள்ள நடையில் எழுதப்பட்டிருக்கின்றன. மிக்க ஆராய்ச்சியுடன் விடுபடுகின்ற இவருரை ஸம்ஸ்கிருதத்தில் மிகப் பயிற்சியில்லாத தமிழர்களும் பொருளுணருமாறு எழுதப் பட்டிருப்பதால் ஆத்திகர் அனைவருக்கும் ஆவச்யகமேயாம். (7) என இந்நூலின் பதிப்புரையில் காணும் மதிப்புரை பாராட்டுகிறது.

வியாக்கியானம் என்பது அகல உரையுடன் அமைவதாகும். பெரியவாச்சானின் உரை ஒவ்வொரு பாசுரத்திற்கும் ஒரு நிலைகளில் அமையப் பெற்றதாகும். அதாவது தொடக்கத்தில் அவதாரிகை என்னும் தருக்கவுரை கூறி அடுத்து அதனையே வியாக்கியானம் என்ற நிலையில் பல்வேறு விளக்கங்களுடன் உட்கருத்துகளுடன் கூடிய வகையில் வெளிப்படும்படியாக அமையப்பெறுவதாகும்.

பொதுவாக பெரியவாச்சான் தமது 24000 ஈடுதனில் ஒவ்வொரு பத்துப்பத்து பாசுரங்களின் கருத்தினை ஒன்று திரட்டி முன்னுரைபோலக் கூறுவார். இதனைப் ப்ரவேசம் என்று கூறுவர். ஆயின் இம்முறை 3000 படியில் பின்பற்றவில்லை எனலாம்.

அவதாரிகையில் காணும் உத்திகள்

1. பாடல்களின் பாசுரங்களின் பொருள் மாறாமல், சிதையாமல், மயக்கம் தராமல் உரிய முறையில் செறிவுடன் பொருள் உணர்த்துதல்.
2. இதிகாசம், புராணம் இவற்றிலிருந்து மேற்கோள் காட்டி விளக்குதல்.

3. எட்டுத் தொகை, பதினெண் கீழ்க்கணக்கு இறையனார் களவியலுரை, சிலப்பதிகாரம் யாப்பருங்கலக்காரிகை, நிகண்டுகள் போன்ற தமிழ் நூல்களைப் போலும் பயன்படுத்துதல்.
4. சிறந்த சொல்லாட்சி நடையைப் பின்பற்றுதல்.
5. தாம் எண்ணியதை, தமக்கு உகந்ததை வெளிப்படையாக எடுத்துரைத்தல்.

இவ்வாறாக இவரது உரையானது அமையப்பெற்றிருக்கும்.

திருப்பாவை குறித்து பெரியவாச்சான் வியப்பு

சமய தத்துவங்களைத் திரட்டி மாத்திரம் கூறுவதாக யிருந்தால் ஓர் இலக்கியம் பரிமளிக்க முடியாது. அது வெறும் அட்டவணையாகத்தான் ஆகும். அப்படிக்கு அல்லாமல் அத் தத்துவங்களை இனிய சொற்களால் மூடி அற்புதமான இசைக்கு உள்ளாக்கி ரஸ ஆவிர் பாவங்கள் கொந்தளிக்கும்படி செய்வது எவ்வளவு அழகு! கோதுமை தானியத்தைத் தின்பதைவிட, அதைப்பாலில் பக்குவம் செய்து தேன்கூட்டிக் குழைத்துத் த்ராட்சை, சர்க்கரை முதலிய உபபதார்த்தங்களைச் சேர்த்துக் கிளறிக் கொடுத்தால் அது எப்படியிருக்கும், அதுவே ஆண்டாளின் திருப்பாவை பாசுரங்கள். ஸ்ரீ வால்மீகியின் வாக்குப் போல ஸ்லபமும் அர்த்த கற்பிதமும் ஆயது எனப் பாராட்டுவதாக அரவிந்தன் தமது நூலில் குறிப்பிடுகிறார் (10).

மேற்சொன்னவாறு திருப்பாவையை எண்ணி வியந்த பெரியவாச்சான், பாவை பாசுரத்தில் மிகவும் ஏற்றம் மிக்கதாக கற்றோரும் வைணவ சமய நெறியாளர்களும் இலக்கியச் சுவைஞர்களும் போற்றும்படியாக அமைந்த பாசுரம்-23க்கு தரும் உரையின் சிறப்பைக் காணலாம்.

"சத்ருக்கள் (பகையவர்கள்) தங்கள் கர்வம் (ஆணவம்) போய் உன் சரணார விந்தங்கள் (அரவணைத்து உய்விக்கும் மலர்ப் பாதங்கள்) படுகாடு கிடப்பதுபோல் நாங்களும் உனக்கு தாஸர்களாக (இறையடியோராக) வந்திருக்கிறோம், கிருபை (அருள்) செய்ய வேண்டும் - என்று கிருஷ்ணனைக் (கண்ணனை) பிரார்த்திக்கிறார்கள் (இறைஞ்சுகிறார்கள்) (பாசுரம்:21).

நானே உலகத்தை ஒரு நாயகமாக ஆள்கின்றவன் என்ற அபிமானம் போய் (மதிப்புவிட்டு) மன்னர் உன் திருப்பள்ளிக் கட்டிலின் கீழ்க் கிடப்பவர்கள்போல் நாங்களும் அக்ர"ாரம் (அந்தணர் குடியிருப்பு) போய் உன் திருவடிகளின் கீழ் வந்திருக்கிறோம். உன்

தாமரைக் கண்களால் கடாசித்தால் (அருள்பாவித்தால்) எங்கள் பாவம் (எங்கள் கரும வினை) போகும் என்று விண்ணப்பம் (முறையீடு) செய்கிறார்கள் (பாசு-22).

ஸிம்மம் (அரிமா) குகை" (மலைக்குடை வரை) நின்றும் வெளிவருமாப் போல நீயும் உன் திருப்பள்ளிக் கட்டிவிலிருந்து ஸபாமண்டபத்திற்கு (அத்தாணி மண்டபத்திற்கு) எழுந்தருளி எங்கள் விண்ணபத்தைக் (கோரிக்கையை) கேட்டருள வேண்டு மென்கிறார்கள் (பாசு-23).

இவ்வாறாக முன்பாடல்களுடன் எடுத்துக்கொண்ட ாசுரத்தை இணைத்துக் காண்பது அவதாரிகையில் பெரிய வாச்சான் பிள்ளை கையாளும் உத்தி என இளைய வல்லிஸ்ரீ நிவாச கோபாலாசாரியார் ஆறங்க மாநாடு திருப்பாவை விஷயங்கள் என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றும் போது குறிப்பிடுவது ஈண்டு நோக்கத்தக்கது.

மூலபாடலும் பதவுரையும்

மாரி மலைமுழைஞ்சில் மன்னிக் கிடந்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்றுத் தீவிழித்து
வேரி மயிர்பொங்க எப்பாடும் போந்துதறி
மூரி நிமிர்ந்து முழங்கிப் புறப்பட்டு
போதருமாப் போலே நீபூவைப் பூவண்ணா! உன்
கோயில்நின்றும் இங்ஙனே போந்தருளி கோப்புடைய
சீரிய சிங்கா சனத்து இருந்து யாம்வந்த
காரியம் ஆராய்ந்த ருளேலோ ரெம்பாவாய்

(திருப்பாவை பாசு-23)

மாரி மலை முழைஞ்சில்	-	மலைக் காலத்திலே மலைக் குகையில்
மன்னிக்கிடந்துறங்கும்	-	பொருந்திப்படுத்துறங்கும்
சீரிய சிங்கம் அறிவுற்று	-	சிறப்பு வாய்ந்த சிங்கம் உறக்கம் தெளிந்தது
தீ விழித்து	-	நெருப்புப் பொறி பறக்கக் கண்களை விழித்துக்கொண்டு
வேரிமயிர் பொங்க	-	ஒரு வகை மணமுள்ள உணர்வு மயிர் பொங்கும் படி
எப்பாடும் போர்த்துதறி	-	எப்பக்கமும் புடை பெயர்ந்து அதாவது அசைந்து கொடுத்தும் உடம்பை உதறிக் கொண்டும்

மூரி நிமிர்ந்து முழங்கி	-	சோம்பல் முறித்துப் பெருமை தோன்ற நிமிர்ந்து கர்ஜித்து
புறப்பட்டுப் போதருமா போலே	-	குகையிலிருந்து வெளிப்பட்டு வருவது போல
பூவைப் பூ வண்ணா நீ	-	காயாம்பூவைப் போன்ற நீல நிறத்தையுடைய நீ
உன் கோயில் நின்று	-	உன்னுடைய இருப்பிடத்திலிருந்து நாங்கள் இருக்கும் இவ்விடத்திற்கு எழுந்தருளி
கோப்புடைய சீரிய சிங்காதனத்து இருந்து	-	அழகிய வேலைப்பாடுகள் அமைந்த சிறந்த உயர்ந்த சிங்காதனத்தில் வீற்றிருந்து
யாம் வந்த காரியம் ஆராய்ந்தருள	-	நாங்கள் வந்த காரியத்தை விசாரித்து அருள் செய்வாயாக

என்று பதவுரை அமைப்பில் ஆசிரியர் எளிய, பழகிய சொற்களை நிரலப்பட் பெய்து ஆர்வலரும் அடிப்படைக் கல்வியுடையாரும் புரிந்து கொள்ளும்படி பதவுரை அமைந்துள்ளதைக் காணலாம்.

உள்ளுரை என்ற பகுதியில் பகவானே உபாயம் என்று அதி தீவிர நிலையில் உள்ள பாகவதர்களின் விருப்பத்தை நிறைவேற்ற, இறைவன் கம்பீரமாகத் தானே முந்தி வந்து அருள்வான் என்னும் பொருள் உள்ளுரையாக இப்பாசுரத்தில் ஊடாடிக்கிடப்பதாக உரையாசிரியர் கூறுவதைக் காணலாம்.

சிறப்பு நிலை விளக்கம்

ஏழுலகும் தொழில் வகுப்புண்டதாய் நிர்ணயிக்கப்பட்ட காரியம் தலைக்கட்டும் படியான சீர்மையையுடைய ஸிம்“ாசனம் என்பது வியாக்கியானம் அதாவது தர்மம்-அதர்மம், ஞானம்-அஞ்ஞானம், வைராக்கியம்-அதைவைராக்கியம், ஐசுவரியம்-அதைவைசுரியம் என்கிற எட்டுக் கால்களையுடைய தர்மாதி பீடம் என்னும் ஆசனம் பரமபதத்தில் உள்ள தென்றும் அதே ஆசனம் இங்கே கண்ணனுக்குச் சிங்காசனமாக (அரியணையாக) அமைந்துள்ள தென்றும் கூறுவார்.

அடுத்து திருப்பாவை ஐந்தாம் பாசுரத்திற்கு பெரிய வாச்சான் பிள்ளை விதந்துகூறும் கருத்து எண்ணியின்புறத்தக்கது. ஆயர்குல மகளிர் கண்ணனின் பக்தியிற் கொண்டு, நோன்பு ஏற்க அந்நோன்பிளால் எவர்களின் மெய்ப்பாடு எவ்வாறெல்லாம் அமைகிறது என்பதனை ஆசிரியர் பின்வருமாறு விளக்குவதைக் காணலாம்.

ஆழ்பொருள்

நோன்பிற்கு அங்கமாகப் பெண் பிள்ளைகள் கண்ணபிரானுடன் சேர்ந்து யமுனைக்குச் சென்று நீராட வேண்டும். இவ்வாறு செல்லும்போது, பாறை ஒலிக்கும், சங்கு முழங்கும், பெண்கள் கொடி, மேற்கட்டி, மங்கள தீபம் இவை ஏந்துவர்.

பறை முதலியன நீராட்டத்திற்கான உபகரணங்கள். இப்பெண்கள் கண்ணபிரானோடு நெடுங்காலமாகச் சேராததால் விரகத்தால் வாடுபவர்கள். இந்தத்தாபம் தீருவதற்கு இவர்கள் கண்ணபிரானோடு கொள்ளும் கலவி நீராட்டம் எனப் பெறுகிறது. இவர்கள் சிறந்த ஞானம் வாய்ந்தவர்கள். கண்ணபிரானைப் பெறுவது பேறு, அதாவது உபாயம். அவனைப் பெறும் வழி, அதாவது உபாயம் அவனே இப்பெண்கள் தங்கள் பக்தியின் விளைவால் பரபக்தி, பரஞானம், பரமபக்தி வாய்ந்தவர்களாய்க் கண்ணனோடு சேர்வது, இப்பிரபந்தத்தின் கருத்து இறைவன் ஒருவனே புருஷன், உயிர்கள் யாவும் பெண்பாலர் போன்றவர்கள் என்று வேதம் அறிவிக்கும். ஆதலால் இப்பிரபந்தத்தின் ஆழ்பொருள், ஆன்மாக்கள் பரம்பொருளோடு சேருவது பரம்பொருளே உபாயமும், உபேயமும் என்ற திண்ணிய கருத்தே இப்பிரபந்தத்தில் இலங்குவது.

உள்ளீடு

கன்னியர் யாவரும் திரண்டு, கண்ணபிரானை எழுப்பி, அவனுடன் நீராடி, நோன்பு நோற்பது இப்பிரபந்தத்தின் கருத்து.

நிறைவுரை

உரையாசிரியர்கள் பொதுவாகப் பலநூல்களைக் கற்றுத் தெளிந்த பின்னர், ஏதேனும் ஒரு நூலைத் தமக்குரியதாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டு அந்நூலில் மூழ்கினர்: வாழ்நாள் முழுதும் அதில் தோய்ந்து தம் புலமைத்திறன் முழுதும் காட்டி உரைகண்டார். “மிக விரைவாக ஓடிச்செல்லும் ஒரு பேரியாற்றை எதிர்த்து நீந்தி, அந்நீரோட்டத்தின் வன்மையை கற்றென உரை முற்படுவோர் போல, தாம் உரை எழுத மேற்கொண்ட சான்றோர் செய்யுட்களில் உள்ள சொற்களின் செலவை எதிர்த்து ஆராய்ந்து உண்மைப் பொருள் கண்டு உலகிற்கு உதியவர் உரையாசிரியர்களே” என்ற மு.வை.அரவிந்தனின் கூற்று முற்றிலும் பெரிய வாச்சான் பிள்ளைக்குப் பொருந்தும்.

ஆசான் என்ற சொல்லே “ஆச்சான்” என மறுவி பெரிய ஆசான் என்ற பெயரே பெரிய வாச்சான் எனத் திரிந்து இன்றைக்கு நிலவி வருகிறது.

பெரியவாச்சானின் பெருமையைச் சொல்வதைவிட, மதக்கருத்தில் எதிர் அணியாய் விளங்கிய சைவர்கள் எவ்வாறு

பாராட்டினர் என்பதை மு.வை.அரவிந்தன் பின்வருமாறு குறிப்பிடுகிறார். "பண்டிதமணி கதிரேசன் செட்டியார் இந்நூல்களை (வியாக்கியானங்களை)ப் போலத் தேவாரம் முதலிய சைவ நூல்களுக்கு வியாக்கியானம் எழுத யாராவது முன்வருவார்களானால் அது வரவேற்கத்தக்க இலக்கியப்பணியாகும்" என்றும்

நாயன்மார்களின் வரலாற்றைத் தெள்ளு தமிழில், பக்திச் சுவை நனி சொட்டச் சொட்டப் பாடிய சேக்கிழார் வைணவ உலகத்தில் தோன்றி ஆழ்வார்களின் வரலாற்றை எழுதிப் பரப்பவில்லையே என்றகுறை வைணவர்க்கு உண்டு.

ஆழ்வார்களின் பாடல்களுக்கு வியாக்கியானங்கள் எழுதி வைணவத்தைச் செழிக்கச் செய்த பெரியவாச்சான் பிள்ளை, சைவ உலகில் தோன்றித் திருமுறைகளுக்கு விளக்கங்கள் எழுதவில்லையே என்ற குறை சைவர்களுக்கு இருந்து வருகின்றது. வைணவத்திற்கு ஒரு சேக்கிழாரும் சைவத்திற்கு ஒரு பெரிய வாச்சான் பிள்ளையும் இல்லை என்ற பண்டித மணியன் கூற்றை நினைவு கூரும் மு.வை.அரவிந்தன் கருத்து ஈண்டு எண்ணிப் போற்றுதற்குரியது.

தோழமை நெறி காட்டும் ஆண்டாளின் பாசுரங்கள் தனிமனித ஆற்றாமையை அகற்ற வல்லது. தனி மனித மனத்தை அரவணைத்துப் பாம்பணையில் பள்ளி துயிலும் திருமாலின் தாமரைப் பாதங்களில் கொண்டு சேர்த்து நீங்காப் பேற்றைத் தந்தருளுவது.

அத்தகைய பாசுரங்களுக்குப் பேருரை (வியாக்கிரையானம்) கண்ட பெரியவாச்சான் பிள்ளையின் சிறப்பு போற்றுதற்குரியது. செம்மொழி என்ற பெயரில் இன்றைக்கு, சங்க நூல்களுக்கு முக்கியத்துவம் தந்து, பக்திப் பனுவல்களைப் பின்தள்ளிவிட்ட போக்கை மாற்றிப் பக்தியுகத்தின் மாண்பையும் அவற்றிற் அமைந்த குறிப்பாக, வைணவ பக்திப்பனுவல்களுக்கு உண்டாகிய வியாக்கியானங்களின் இலக்கிய பேற்றை இனிவரும் இளையவர் உணர, அவர்களுக்கு விழிப்புணர்வும், இது சார்ந்த நூல்களை மீட்டுருவாக்கம் செய்தல் வேண்டும் என்ற அவசியமானது.

குறிப்புகள்

1. மு.வை.அரவிந்தன், உரையாசிரியர்கள், ப 498
2. வ.சொ.சொக்கலிங்கம், மூவாயிரப்படி ஓர் ஆய்வு, ப 32
3. மு.வை. அரவிந்தன், உரையாசிரியர்கள், ப 496
4. திருவெம்பாவை - திருப்பாவை - திருமறை ஆறங்க மகாநாடு திருப்பாவையின் விஷயங்கள்-இளையவல்லி ஸ்ரீ நிவாஸ

   கோபாலாசாரியார், ப 81

5. திருவெம்பாவை - திருப்பாவை - திருமறை ஆறங்க மகாநாடு முதல் பதிகக் கருந்துரை - R.சேஷாத்திரி ஐயங்கார், ப 87

6. திருவெம்பாவை - திருப்பாவை - திருமறை ஆறங்க மகாநாடு இளையவல்லிஸ்ரீ நிவஸா கோபாலாசாரியர், ப 8

7. தெ.ஞான சுந்தரம் - வைணவ உரை வளம், ப 117

8. தெ.ஞான சுந்தரம் - வைணவ உரை வளம், ப 117

9. உரையாசிரியர்கள், மு.வை.அரவிந்தன், ப. 481

10. உரையாசிரியர்கள், மு.வை.அரவிந்தன், ப. 481

துணை நூல்கள்

1. அரவிந்தன். மு.வை. உரையாசிரியர்கள், மணிவாசகர் பதிப்பகம், சென்னை. மு.ப.1968

2. ஞானசுந்தரம். தெ. வைணவ உரைவளம் கந்தசாமி நாயுடு கல்லூரி, 1989-மு.ப.

3. திருப்பாவை, திருவெம்பாவை, திருமறை ஆறங்க மகாமாநாடு-நிகழ்வு (28.12.1950) திருவரங்கம்.

தனிப்பாடல் பதிப்புகள்

முனைவர். வே. நெடுஞ்செழியன்

முன்னுரை

முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளாய்ப், பின்னைப் புதுமைக்கும் பேர்த்துமப் பெற்றியதாய்த் திகழ்வது தமிழ். ஈராயிரம் ஆண்டுகால நெடிய வரலாற்றில், கருத்து வளமும் கற்பனை நலமும் பண்பாட்டுச் செழுமையும் கொண்ட இலக்கியங்களை இடையறாது பெற்றுத் திகழ்வது. சங்க இலக்கியத்தைத் தொடர்ந்து, அற இலக்கியங்களும் சமயப்பாடல்களும் காப்பியங்களும் சிற்றிலக்கியங்களும் எனத் தொடர்ந்துவந்த இலக்கியச் சூழலில், தொடக்கம் முதலே தனித்தனியான பாடல்களும் இடையறாது தொடர்ந்து பாடப்பெற்றன. சங்க இலக்கியத்துள் பெரும்பான்மை பண்டை இலக்கியத் தேடலின் வழிக் கிடைத்த தனிப்பாடல்களைப் பொருண்மை அளவு பாவடிவு ஆகியவற்றைக் கருத்தில்கொண்டு தொகுக்கப் பெற்றது என்பது குறிப்பிடத்தக்கது. ஆயின் பொருள்தொடர்போ, தொகையியல்போ இல்லாது பல்வேறு புலவர்கள் காலந்தோறும் பாடியனவற்றை அவற்றின் சமுதாயத்தேவை மற்றும் இலக்கியவளமை கருதித் தொகுக்கும் முயற்சி மேற்கொள்ளப்பெற்ற நிலையில் அத்தொகுப்பினை அவற்றின் இயல்பு கருதி, **"தனிப்பாடல் திரட்டு"** என்ற பெயரிலேயே அமைத்தனர் தமிழ்ச்சான்றோர்.

தனிப்பாடல்கள்

காலந்தோறும் தமிழ் இலக்கியக் களத்தை ஆராயுங்கால், தொடர்நிலை இயல்பினதாகிய நெடும்பாடல்களினூடே தனிப்பாடல்களும் பாடப்பெற்று வந்துள்ளன. அவ்வகையில், இடைக்கால இலக்கிய உருவாக்கம் ஒருநிலை இயல்பினதாக இல்லாது, பன்முக இயல்பில் அமைந்துள்ளதைக் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தினுள்ளேயே பத்துப்பாட்டுப் பாடிய நக்கீரர் கபிலர் போன்றோர் பெயரில் தனித்தனிப் பாடல்களும் அமைந்திருப்பதையும், அவை தொகைநூல்களுள்ளும் தொகுக்கப் பட்டிருப்பதையும் காணலாம். சீவக சிந்தாமணி பாடிய திருத்தக்கதேவர் நரி விருத்தம் எனச் சிறுநூலும் யாத்துள்ளார். கம்பர் இராமாயணத்தோடு நில்லாது, ஏரெழுபது, திருக்கைவழக்கம், சரசுவதி அந்தாதி, எனச் சிறுநூல்களும் படைத்துள்ளார். இவ்வாறு பெரும் புலவர்களும் ஒருமை உணர்வின் பாற்பட்ட குறிக்கோளுடன் பேரிலக்கியங்களை உருவாக்கியுள்ளமையோடு, வேறுபட்ட சூழ்நிலை களில், வேறுபட்ட தத்தம் உணர்ச்சி நிலைகளுக்கு ஏற்ப, தனித்தனியே

பாடியனவாகப் பாடல்கள் காணப்படுகின்றன. இடைக்காலத்தில், சங்ககால நக்கீரர், ஔவையார், சங்கம் மருவிய காலத் திருவள்ளுவர், காப்பிய காலக் கம்பர், ஒட்டக்கூத்தர் என்றவாறு பலரும் தத்தம் உணர்ச்சிக்காட்பட்ட நிலையில், பாடியனவாகஅவர்தம் தொகை மற்றும் தொடர்நிலைப் பாடல்களினின்று வேறுபட்டுநின்று, தனிப்பாடல்கள் பல சிதறிக் கிடக்கின்றன. ஓரே பெயரில் வேறுபட்ட புலவர்கள் பாடியவை என்ற வகையில் இவற்றை ஒதுக்கிவிடுதலைக் காட்டிலும் அப்புலவர்கள் குறித்த மக்கள் கதையாடல் வெவ்வேறாக இருத்தலையும் ஆராய வேண்டியுள்ளது.

ஓரே வழி இதனைத் தொடர்ந்தமைந்த பிற்காலத்தில், பேரரசின் வீழ்ச்சியிலான சிற்றரசு மற்றும் நிலப்பிரபுத்துவச் சூழலில், தம்து வறுமை தீர்க்கும் வளமான புரவலரின்மை காரணமாகப் பல்வேறு சிறுசிறு வள்ளல்களிடத்தும் மடங்களிடத்தும், சார்ந்து சோர்ந்த புலமைச்சூழல், பேரிலக்கியங்களான காப்பியங்களுக்கு இடம்தராது, சிற்றிலக்கியங் களையே பெருக்கியதோடு, தனிப்பாடல்களின் பெருக்கத்திற்கும் இடம்தந்து நின்றது. எனவே, பிற்காலத்தில் தனிப்பாடல்கள் தனியே தமக்கென முதன்மை பெறும் வகையில், சிறுசிறு அவைக்களங்களில் அரசர்கள், பாளையக்காரர்கள், அமைச்சர்கள், வள்ளல்கள், மடாதிபதிகள் முன்னிலையில், கேட்போர் முன்னிலையில், அந்த அவையைச் சுவைமிக்க தாக்குதற்கும், தம் புலமைத்திறத்தை உடனடியாக நிறுவுதற்கும், தத்தம் சிறுசிறு தேவைகளை நிறைவேற்றிக்கொள்ளுதற்கும் எனப் பல தனிப்பாடல்கள் பாடப்பெற்றன.

தமிழில் பதிப்பு முயற்சி

ஐரோப்பியர் வரவின் உடன்வரவான அச்சுக்கருவி, தமிழர்தம் வாழ்வில் மறுமலர்ச்சியை ஏற்படுத்தியது. உரைநடை நோக்கிய இலக்கிய மாற்றம், மக்களாட்சி நோக்கிய அரசியல் மாற்றத்திற்கு அழைத்துச்சென்ற நிலையில், மறுபுறம், நமது பண்டையச் சமுதாய வரலாற்றை மீட்கும் முயற்சியாகப் பழந்தமிழ் இலக்கியங்கள் அச்சேறின. அவற்றின்வழியே, நமது புதைந்துகிடந்த பண்டைய வரலாறும் பண்பாடும் மீட்டெடுக்கப் பெற்றன. காலந்தோறும் அவ்வக் காலத்தின் சமுதாயநிலை, பொருளாதார நிலை, அவற்றின்வழிக் கட்டமைக்கப்பெற்ற வாழ்வியல் நிலை, அவற்றின் வழி அறியலாகும் அன்றைய வரலாறு ஆகியவற்றை இலக்கியங்கள் காலத்தின் சாட்சியாக நின்று எடுத்துரைக்கலாயின. தமிழ் இலக்கியப் பதிப்புகள் வழியே, தமிழக வரலாறு புதுமை மிளிரத் தொகுக்கப்பெற்றது.

1812இல் முதன்முதலாகத் தமிழ் இலக்கியக் களத்தில், திருக்குறள் பதிப்பிக்கப்பெற்றது. தொடர்ந்து, தாண்டவராய முதலியார், விசாகப்பெருமாளையர் முதலானோரால் தமிழ் இலக்கண இலக்கியங்கள் பதிப்புப்பணி தொடர்ந்த நிலையில், மழவை மகாலிங்கையர், ஆறுமுக நாவலர் சி.வை.தாமோதரம்பிள்ளை, உ.வே.சாமிநாதையர் ஆகியோர்தம் தேடலுடன்கூடிய பதிப்புமுயற்சியில் தொல்காப்பியம் முதற்கொண்டு சங்க இலக்கியம். காப்பியம் முதலான தமிழின் முதன்மையான இலக்கிய

இலக்கணங்கள் உரை விளக்கங்களோடு பதிப்பிக்கப்பெற்றன. இவ்வாறு, பழந்தமிழ் இலக்கியங்களைத் தொகுத்துப் பதிப்பிக்கும்போது, அவற்றிடையே தனிநூலியல்பைப் பெறாதனவும் எந்தத் தொகையிலும் இடம்பெறாதனவுமாகிய தனித்தனிப் பாடல்கள் தனித்துக் கிடப்பது கண்டறியப்பெற்றது. தனித்தனிப் பாடல்களை அவற்றின் தனித்தன்மை கெடாது ஒருங்கே தொகுத்தலின்வழிப்-பெருநூல்களிலும் தொகை நூல்களிலும் சிறுநூல்களிலும் அறிய இயலாத தமிழ்ச்சமுதாயத்தின் மறுபக்கத்தை - கம்பர் ஔவையார் ஒட்டக்கூத்தர் புகழேந்தி முதலான பேரியல் மாந்தர்களின் பதிவாகாத தனிப்பட்ட வரலாறுகளை அல்லது வரலாற்றுக் கற்பனைகளை – காளமேகப்புலவர் இரட்டைப்புலவர் படிக்காசுப்புலவர் முதலான பிற்காலப்புலவர் கால சமுதாயச் சூழலை – அப்பாடல்களில் புதையுண்டிருக்கும் அன்றைய வாழ்வியலை அறிவதற்கும் தமிழக வரலாற்றை முழுமையாகத் தொகுப்பதற்கும் வழி ஏற்படும் என்பதனால் பல்வேறு ஊர்களில் பல்வேறு ஏடுகளில் சிதறிக்கிடக்கும் அவற்றைத் தொகுத்தல் காலத்தின் தேவையாக உணரப்பெற்றது. எனவே, தனிப்பாடல்களின் பதிப்பைப் பொறுத்தவரை, முதற்கண் திரட்டுதல் பின்னர் பதிப்பித்தல் என்ற இருமுனைச் செயல்பாடு இன்றியமையாததாயிற்று.

தனிப்பாடல்தொகுப்பு

ஐரோப்பியர் வரவில், தமிழக அரசியல் களத்தில் குழப்பங்களும் மாற்றங்களும் வீழ்ச்சிகளும் ஏற்பட்டன. ஆனால், இலக்கிய உலகிலோ புதுமையும் மலர்ச்சியும் மாற்றமும் ஏற்றமும் நிகழ்ந்தன. ஆங்கிலேய ஆளுநர்களும் கிறித்தவ மதபோதகர்களும் ஒருபுறம் பழந்தமிழ்ப் பண்பாடு சார்ந்த இலக்கியத் தடங்களைச் சேகரித்தனர். சரபோசி மன்னர், சேதுபதி மன்னர் போன்ற அரச ஆதரவுகளும் ஒருபுறம் இலக்கிய வரலாற்றுத் தடங்களைத் தேடிச்சேகரித்தலை மேற்கொண்டன. எனவே, திரட்டலும் தொகுத்தலும் இருகண்களாகக் கொண்டு, தமிழ் ஏடுகளும் தரவுகளும் நூலுருப் பெறுதற்கு முற்பட்டன. இத்தகு சூழலின் தொடர்ச்சியாகவே தனிப்பாடல்களின் திரட்டலும் தொகுப்பு முயற்சியும் அமைந்தன.

முதன்முதல் தனிப்பாடல் தொகுப்பு முயற்சியாகத் தமிழ்நாவலர் சரிதை குறிப்பிடப்படுகிறது. இதன்காலம் பதினாறாம் நூற்றாண்டாக இருக்கலாம் எனக் கருதப்படுகிறது. புலவர்களின் வரலாறுகளை அவர்தம் பாடல்களோடு தொகுத்துச்சுட்டும் இந்நூலின் ஆசிரியர் பெயர் தெரியவில்லை.

தமிழ் நாலவர் சரிதையைத் தொடர்ந்து, இராமநாதபுரம் மன்னர் பொன்னுசாமித்தேவர் தனிப்பாடல்களைத் திரட்டித் தொகுக்கும் முயற்சியை மேற்கொண்டார். அவரது வேண்டுகோளுக்கு இணங்க, தில்லையம்பூர் சந்திரசேகர கவிராஜ பண்டிதர் தமிழகமெங்கும் பல்வேறு ஊர்களில் தேடிச்சென்று திரட்டித் தொகுத்துக் கொடுத்தார். அவற்றைக் காஞ்சிபுரம் கச்சபாலையர் பரிசோதித்து அதன்பின்னர் **தனிப்பாடற்றிரட்டு** பதிப்பிக்கப்

பெற்றது. தனிப்பாடல் பதிப்பு வரலாற்றில் முதலில் நிகழ்ந்த தொகுப்பும் பதிப்புமான முயற்சி இதுவே என்பர். இப்பதிப்பையே அடிப்படையாகக் கொண்டு, அதனோடு மேலும் புதிய பாடல்களைத் தேடிச்சேர்த்து, **தனிப்பாடற்றிரட்டு முதற்பாகம், இரண்டாம் பாகம்** என முறையே இருதொகுதிகளாகப் புஷ்பரத செட்டியார் பதிப்பாக வெளியிடப்பெற்றது.

பொன்னுசாமித் தேவரின் தொகுப்பு முயற்சியைத் தொடர்ந்து பழ.சித. சண்முகம்செட்டியார் என்ற வள்ளல், கருப்பையாப்பாவலர் என்பாரின் முயற்சியில் தனிப்பாடல்களைத் தொகுக்கும் முயற்சி மேற்கொண்டார். கருப்பையாப்பாவலர் பொன்னுசாமித்தேவரின் தனிப்பாடற்றிரட்டை அடிப்படையாகக் கொண்டு, அவற்றில் சிலவற்றைத் தள்ளியும் சிலவற்றைப் புதிதாகச் சேர்த்தும் **தனிச்செய்யுட் சிந்தாமணி** எனும் பெயரில் பதிப்பித்தார். மேலும் புதிதாகத் தேடித் தொகுக்கும் முயற்சியை கருப்பையாப்பாவலர் மரணத்தைத் தொடர்ந்து மு.ரா.கந்தசாமிக் கவிராயர் மேற்கொண்டதன்பேரில் மேலும் தனிப்பாடல்கள் புதிதாகத் திரட்டப்பெற்று மூவாயிரத்து எண்ணூற்றுப் பதினைந்து பாடல்கள் கொண்டதாகத் **தனிச்செய்யுட் சிந்தாமணி** என்ற பெயரிலேயே மற்றுமொரு பதிப்பு பதிப்பிக்கப்பெற்றது.

மு.இராகவையங்காரின் தொகுப்பு முயற்சியில் **பெருந்தொகை** என்ற பெயரில் மற்றுமொரு தனிப்பாடல்தொகுப்பு உருவாக்கப்பெற்றது. முன்தொகுக்கப்பெற்ற நூல்களான தமிழ்நாவலர் சரிதை மற்றும் தனிப்பாடல்திரட்டுகள் பற்றி இராகவையங்கார் "அவை பின்னோரான புலவர் பாடல்களையே பிறழ்ந்த சரிதக் கூறுகளுடனும் பாடங்களுடனும் வெளியிடுவனவாகவும் உள்ளன. ஆதனால் அறிஞர்களது ஆராய்ச்சிக்குரிய பிரமாண நூல்களென்று அவற்றைச் சொல்வதற்கில்லை. இங்ஙனமாக மத்திய காலம் பிற்காலங்களுக்கு உரியதாய்ப் பழைமையான குறிப்புகளுடனும் பாடல்களுடனும் இயல்பெற அமைக்கப்பட்ட தனிச்செய்யுட்கோவை தக்கதாக இதுவரை கிடைத்திலது என்றே சொல்லலாம். இக்குறையை ஓரளவில் நீக்குதற்கெழுந்ததே இந்நூல்" என்று முன்னுரையில் குறிப்பிட்டுள்ளமை நோக்க, தனிப்பாடல்களின் வரலாற்றுத்தேவை மற்றும் நம்பகத்தன்மை முன்னிட்டு மேற்கொள்ளப்பெற்ற பதிப்பாக இதனைக் கொள்ளலாம்.

ச.வையாபுரிப்பிள்ளை முந்தையத் தொகைநூல்களில் இடம்பெறாத தனிப்பாடல்களையும் உரையாசிரியர்தம் உரைகளில் காணலாகும் தனிப்பாடல்களையும் தொகுத்து **புறத்திரட்டு** என்ற பெயரில் வெளியிட்டுள்ளார்.

1950களையொட்டி மாநில அர சுமைய அரசு ஆகியவற்றின் நிதியுதவிகளின் வழியே, சுவடிகளில் புதைந்துகிடக்கின்ற இலக்கியங்களைப் பதிப்பிக்கின்ற செயல் நிறுவனமயமானது. சென்னைக் கீழ்த்திசைச் சுவடி நூலகம், தஞ்சை சரசுவதி மகால் நூலகம், உ.வே.சாமிநாதையர் நூலகம் ஆகியவற்றிலிருந்து வல்லுநர்

குழுவைக்கொண்டு பதிப்பிப்பதற்குரிய சுவடிகள் தேர்ந்தெடுக்கப் பெற்றுப் பதிப்பிக்கப்பெற்றன. அவ்வகையில், டி.சந்திரசேகரனைப் பதிப்பாசிரியராகக் கொண்டு தனிப்பாடல் சுவடிகள், **தனிப்பாடற்றிரட்டு** என்ற பெயரில் இரு தொகுதிகளாகப் பதிப்பு மேற்கொள்ளப்பெற்றன. அவ்வாறே, தஞ்சை சரசுவதிமகால் நூலகத்தின் சுவடிகளின் வழியே, மேலுமொரு தனிப்பாடற்றிரட்டு இருதொகுதிகளாகப் பதிப்பிக்கப் பெற்றது. ஆயின், சுவடி நிறுவனங்களின் பதிப்பின்கண், ஓரே நூலின் இருவேறு பதிப்புகளாக அமைந்துவிடக் கூடாது என்பதற்காகத் தஞ்சை சரசுவதிமகால் பதிப்பின்கண், ஏற்கெனவே அச்சான பாடல்களை விடுத்து, அச்சாகாதவற்றை மட்டும் பதிப்பிக்கும் பணி மேற்கொள்ளப்பெற்றுத் **தனிப்பாடற்றிரட்டு** பதிப்பிக்கப் பெற்றது. "இந்நூல் நிலையத்தில பலதுறைச் சுவடிகளுக்கிடையே தனிப்பாடல் திரட்டு ஓலைச்சுவடிகளும் பல இருந்தமைகண்டு அவற்றை ஆய்ந்த பண்டித எல். உலகநாதப் பிள்ளையவர்கள் அச்சுவடிகளிற் கண்ட பாடல்களில் சில அச்சாகியும் பல அச்சாகாமலும் உளவெனக் குறித்திருந்தார்கள். ஆதலின் அவற்றுள் அச்சாகாத பாக்களைத் தொகுத்து வெளியிடும் பணியைத் தற்போது பொறுப்பிலிருக்கும் சரசுவதிமகால் நூல்நிலையத்தார் எனக்களித்தனர்" என்று பதிப்பாசிரியர் ச. பாலசுந்தரம் தெரிவிப்பது மனங்கொளத் தக்கது.

எந்தவொரு இலக்கியமும் பதிப்பிக்கப்பெற்ற நிலையில், அதன் பயன்பாட்டு மதிப்பறிந்து பதிப்பிக்கும் சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், 'தனிப்பாக்கள் சொல்லின்பம். பொருளின்பம், அமையத்திற்கேற்ற சொல்லாற்றல், பலவகைக் கற்பனை அலங்காரம் அமைந்தவைகளாகக் காணப்படுவதால் அவற்றிற் பலவற்றை ஆய்ந்து நல்லன தொகுத்து நம் கழக வாயிலாக வெளியிடக் கருதினம். கருப்பக்கிளர் திரு சு.அ. இராமசாமிப் புலவர் அதற்குத் தகுதியுடையவரெனத் தெரிந்து தொகுத்துத் தருமாறு கூறினம்' என்ற கூற்றுக்கேற்ப பழைய பாடல்களோடு புதிதாகக் கிடைத்த பாடல்களையும் இணைத்துத் **தனிப்பாடல் திரட்டு** என்ற பெயரில் ஐந்து பாகங்களாகப் பதிப்பித்து வெளியிட்டுள்ளது.

இதன் தொகுப்புமுறை பற்றிக் கூறுமிடத்து "திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்கழக ஆட்சிப் பொறுப்பாளர் உயர்திரு வ. சுப்பையா பிள்ளையவர்கள், தனிப்பாடல் திரட்டு, தனிச்செய்யுட்சிந்தாமணி ஆகியவைகளில் இடம்பெறாமல், திங்களிதழ் முதலியவற்றில் வெளியாகியுள்ள பாடல்களையும் தற்காலப் புலவர் பெருமக்களின் சிறந்த பாடல்களையும் தொகுத்து, மேற்படிப் பாடல் திரட்டுகளோடு இணைத்துத் தனிப்பாடல் திரட்டின் ஒன்றிரண்டு பாகங்களோடு, மூன்று நான்கு பாகங்களையும் வெளியிட வேண்டுமென்றும், நூல் விரியாவாறு பதவுரையின்றிப் பாடல்கள் விளங்கும் அளவுக்கு மட்டும் இன்றியமையாக் குறிப்புரையோடு வெளியிட வேண்டும் என்றும் விரும்பினார்" என்று கூறுவதன் மூலம், ஏற்கெனவே வெளிவந்துள்ள தனிப்பாடல் தொகுதிகளோடு மேலும் இதுவரை தொகுக்கப் பெறாதவற்றையும் சேர்த்துத் தாமே முழுமையாகப் பதிப்பிக்க வேண்டும்

என்ற தன்முனைப்பைக் கழகப்பதிப்பு கொண்டிருந்தமை புலனாகிறது. ஆயினும் தனிப்பாடல்களில் சிறந்த கருத்துக்களமைந்த பாடல்களும் அறநெறியை விளக்குவனவாகிய பாடல்களுமே இப்பகுதிகளில் அமைந்துள்ளன. பொருளற்ற பல பாடல்களைப் பயனின்மை கருதி நிறுத்திவிட்டதாகப் பதிப்பாசிரியர் கூறுவதனால், விடுபட்ட பாடல்களும் உள என்பது பெறப்படுகிறது. முதற்பகுதியின்கண் 1113 பாடல்களும், இரண்டாம் பகுதியின்கண் 998 பாடல்களும், மூன்றாம் பகுதியின்கண் 915 பாடல்களும், நான்காம் பகுதியின்கண் 951 பாடல்களும், ஐந்தாம் பகுதியின்கண் 1110 பாடல்களும் தொகுக்கப்பெற்றுள்ளன.

இவையேயன்றி, புதுக்கோட்டை மீனாட்சி பதிப்பகத்தின் வெளியீடாக, 1960இல் கலைச்செல்வி என்பாரை உரையாசிரியராகக் கொண்டு **தனிப்பாடல் திரட்டு** என்ற நூல் வெளியிடப்பெற்றது. இதற்கு அணிந்துரை வழங்கியுள்ள அகிலன், இதற்குத் தனிப்பாடல் சுருக்கம் என்ற பெயரையே அளித்துள்ளார். இடைக்காலப் புலவர்களின் பாடல்களை எல்லாம் தொகுத்து, பல ஆண்டுகளுக்கு முன்பே 'தனிப்பாடல்திரட்டு' என்று இரண்டு தொகுதிகளாகத் தமிழ் அறிஞர்கள் வெளியிட்டுள்ளனர். "ஆயிரத்திற்கு மேற்பட்ட அப்பாடல்களை முறையாக இக்காலத் தமிழ் மக்களால் படித்துப் பயன்பெற இயலாத காரணத்தினால், அவற்றுள் எளிமையும் இனிமையும் தெளிவும் சொல்நயமும் பொருள்நயமும் வாய்ந்த பாடல்கள் பலவற்றைத் தேர்ந்தெடுத்து, அவற்றிற்குரிய பொழிப்புரையும் விளக்கவுரையும் நயமும் தக்க இடத்தில் அமையுமாறு தனிப்பாடல் திரட்டின் சுருக்கமாக இந்நூலினை யாத்துள்ளேன்" என்று பதிப்பாசிரியர் குறிப்பிட்டுள்ளமையால், இது சுருக்கநூல் என்பதும், முந்தைய நூல்களினின்று தேர்ந்தெடுக்கப் பெற்ற பாடல்களைக் கொண்டது என்பதும் பெறப்படுகிறது. அடுத்து, பூம்புகார் பிரசுரத்தின் வாயிலாக, 1977இல் தனிப்பாடல் திரட்டுப் பதிப்பு ஒன்று வெளியிடப்பட்டுள்ளது. **தனிப்பாடல் திரட்டுப்** பதிப்புகளான முந்தைய நூல்கள் யாவுமே இன்று தமிழக மக்களுக்குக் கிடைப்பனவாக இல்லை என்ற காரணத்தாலும் அனைவரும் வாங்கிப் படிக்கவேண்டும் என்ற காரணத்தாலும் குறைந்த விலையில் வெளியிடப்படுவதாகப் பதிப்பாசிரியர் புலவர் அ. மாணிக்கம் கூறியுள்ளார். நல்லறப் பதிப்பகத்தின் வாயிலாக, கா.சு. பிள்ளையின் **பல வித்வான்கள் பாடிய தனிப்பாடற்றிரட்டு** தலைப்பில் மாற்றம் பெற்றுத் **பல புலவர்கள் பாடிய தனிப்பாடல் திரட்டு** என்ற பெயரில் வெளியிடப்பெற்றுள்ளது.

பதிப்பு முறை

தனிப்பாடல் தொகுப்புமுறையைப் பொறுத்தவரை உ.வே.சா., போன்றே பல்வேறு ஊர்களுக்கும் தேடிச்சென்று திரட்டும் முயற்சி முதற்கண் மேற்கொள்ளப்பட்டுள்ளது. கிடைத்த பாடல்களுள் முழுமையும் பொருண்மைச் சிறப்பும் யாப்புநலமும் அமைந்தவை தொகுக்கப் பெற்றன. சிறுபான்மை யாப்புப் பிறழ்ந்தனவும், சிறப்பிலாப் பொருண்மை உடையனவும் தொகுப்பினுள் ஒரோவழி இடம்பெற்றன. அவற்றைப் புலவர்கள் வரிசை அல்லது பொருண்மைப் பகுப்பு முறையில் வகைப்படுத்தல்

மேற்கொள்ளப்பெற்றது. பாடங்கள் இருப்பின் பாடவேறுபாடுகளும் ஆராயப்பெற்றன.

பிரதிகள் பலவாறு பரிசோதிக்கப்பெற்ற பின்பே பதிப்பு உருவாக்கப்பெற்றது. ஆயின் பெரும்பாலும் பாடவேறுபாடுகள் குறிப்பிடப் பெறாமல் தமக்குச் சரியான பாடமென்று தோன்றியவற்றையே பிரதிக்கண் மேற்கொண்டதாகக் குறிப்பிடுகின்றனர். சான்றாக, தஞ்சை சரசுவதி மகால் பதிப்பின்கண் "...ஓலைச் சுவடிகளையும் கையெழுத்துச் சுவடிகளையும் ஆராய்ந்தேன். ஆயுங்கால், பாக்களின் வடிவு தெரியாமல் சிதைந்தும், சொற்சீர்கள் பிறழ்ந்தும், சொல்வடிவங்கள் திரிந்தும், எழுத்துப்பிழைகள் மலிந்தும் காணப்பெற்றன. பொருட்டொடர்ச்சியில்லாத் தனிப்பாக்களாதலின் முன்னும் பின்னும் ஒப்பிட்டுப் பார்க்கவும் இயலாத நிலையில், பல பாக்கள் ஒரு நூலுக்கு எடுத்துக்கொள்ள வேண்டிய முயற்சியையும் துன்பத்தையும் அளித்தன. செம்மை பெற்று அமையும்போதெல்லாம் எல்லையற்ற இன்பத்தையும் அளித்தன. மேலும், அவற்றுள் அச்சானவை எவை எவை என ஆய்ந்தபோது முயன்று திருத்தப் பெற்றவையுள்ளும், பல கழிந்தன. அவ்வாறு அச்சானவற்றை நீக்கி, என் பார்வைக்குத் தப்பி ஒருசிறிது இந்நூலில் கலந்திருக்கவும் கூடும். எஞ்சியவற்றை மீண்டும் ஆராய்ந்து செப்பம் செய்தேன். ஆவற்றோடு அச்சான பாடல்களில் சிறந்த பாடவேறுபாடுள்ள பாக்களையும் தனியே குறித்து வைத்துள்ளேன்" என்று குறிப்பிட்டுள்ளமையின்வழி இதனை உணரலாம். அவ்வாறே, கா.சு. பிள்ளை, தமது பதிப்பில், "இதன்கண் சரித்திர முறைக்கேற்றவாறு புலவர்களின் வரிசை ஒழுங்குபடுத்தப் பட்டுள்ளது. புலவர்களின் பால்கள் திருத்தம்பெற வேண்டிய இடங்களில் திருத்தமான பாடபேதங்களே தழுவப்பெற்றுள்ளன" என்று குறிப்பிட்டுள்ளமையின் மற்ற பதிப்புகளைப்போல் பாடம்போற்றுதல் ஆசிரியரின் தனிப்பட்ட உரிமையாக எடுத்துக்கொள்ளப்பெற்றுள்தேயன்றி, வேறுபட்ட பாடங்களை எடுத்துரைக்க முயலவில்லை என்பது பெறப்படுகிறது. திரட்டல், தொகுத்தல் ஆகியவற்றுக்குக் கொடுத்த முதன்மையை முறையாக் பதிப்பித்தலுக்கு வழங்கவில்லை என்பது தெளிவு.

தனிப்பாடல் திரட்டின்கண் மேற்கொண்டு பதிப்பு முயற்சிகள் நடைபெற்ற நிலையில், முதன்மைப் பதிப்பாகிய பொன்னுசாமித்தேவர் ஆதரவில் வெளிவந்த பதிப்பை முன்வைத்து அதற்கு மேலும் பாடல்களைப் புதிதாகச் சேகரித்து, அடுத்த பதிப்புகளைக் கொண்டுவரும் முயற்சி நடைபெற்றது. பூம்புகார் பிரசுரம் மாணிக்கம் அவர்களின் பதிப்பும் மீனாட்சி பதிப்பகத்தின் பதிப்பும் முதன்மைப் பதிப்பாகிய பொன்னுசாமித்தேவரின் பதிப்பின் பணியிலிருந்தே தமது வரலாற்றைத் தொடங்குகின்றன.

சங்கத் தன்னுணர்ச்சிப் பாடல்களும் பிற்காலத் தனிப்பாடல்களும்

தனித்தனிப் பாடல்களாகக் கிடைத்தவற்றை ஒரு தொகையாக உருவாக்க, அகம் புறம் என்ற பாகுபாட்டுக் கோட்பாடு சங்க காலத்தில் நிலவியது. இன்பமும் பொருளும் அறத்தின் வழிப்பட்டதென வாழ்வியல் வரையறை முன்னிறுத்தப் பட்டமையால், சங்கச் சான்றோர்கள் விழுமிய

கருத்துகளை உள்ளத்தில் பதியும் வண்ணம் தெளிவாகப் பாடுவதைக் கடமையாகக் கொண்டனர். எனவே கருத்தழகிற்கு முதன்மை கொடுத்தனர். ஆனால் அத்தகைய கோட்பாட்டுப் பார்வைகள் ஏதும் வலிமையாக நிலைபெறாத, இடைக்கால - பிற்காலப் புலவர்கள் வெறும் சொல் அலங்காரத்தில் மூழ்கித் திளைத்தனர். சுட்டி ஒருவர் பெயர்கொளப் பெறாத உன்னதக் காமத்தைப் பாடிய சங்கப்புலவருக்கு மாறாக, தனிப்பாடல் புலவர்கள் பெரும்பாலும் சிற்றரசர்களையும் வள்ளல்களையும் சுட்டிப் பெயர்கொண்டு அவர்தம் உள்ளங்களில் காமக்கனல் மூட்டி, படிப்போர் உள்ளங்களில் உணர்வுக் கிளர்ச்சியை ஏற்படுத்தும் பாடல்களை வரன்முறையின்றியும் வரம்பறியாதும் சமுதாயக் கவலையின்றிப் பாடியுள்ளனர்.

சங்கப் பாடல்களின் சமயங்களின் செல்வாக்கு ஆளுமையில் இல்லை. பக்தி ஓர் இயக்கமாக வளராத காலத்தின் வெளிப்பாடு சங்க இலக்கியம் என்பதனால், கோயில்கள், மடங்கள் சங்க இலக்கித்தின்கண் ஆதிக்கம் செலுத்தவில்லை என்பதை விடப், பெரிதும் இடம்பெறவில்லை எனலாம். ஆனால் தனிப்பாடல்களின் காலம், மதங்களின் போட்டிமிகு ஆதிக்கக் காலம் என்பதால் சமயங்கள் மடங்கள் கோயில்கள் அவற்றின்கண் ஆளுமையோடு இடம்பெற்றுள்ளன.

தனிப்பாடல்களின் தோற்றப் பின்புலம்

தமிழகத்தில் காப்பியங்களும் புதுமையான பிரபந்தங்களும் உருவாவதற்குக் களம் அமைத்த பிற்காலச் சோழர்காலம் கி.பி. 13ஆம் நூற்றாண்டில் முடிவுற்ற நிலையில், தொடர்ந்து ஏற்பட்ட பிற்காலப் பாண்டியராட்சியும் கி.பி.14ஆம் நூற்றாண்டில் முடிவுக்கு வந்தது. சுல்தான்கள் ஆட்சியின் வரவும், அதனைத் தொடர்ந்து அமைந்த விஜயநகர படையெடுப்பும், அடுத்து நிலைபெற்ற நாயக்கராட்சியும், சிற்றரசு மற்றும் நிலப்பிரபுத்துவ ஆட்சி சூழலை உருவாக்கின. சிற்றரசர்களும் பாளையத்தார்களும் நிலக்கிழார்களும் ஆங்காங்கே தோன்றினர். அதே நேரம், அயல்நாட்டவர் அரசியல் நுழைவும் குறுக்கீடுகளும் பெருகின. படையெடுப்புகளும் போர்களும், மக்கள் வாழ்வில் நிலையின்மையையும் அலைக்கழிப்பையும் இயல்பாக்கின. ஆட்சி மொழியாகிய தமிழ்மொழி தலைமை குன்றி நிற்க, வடமொழியும் தெலுங்கும் கன்னடமும் அவ்விடத்தைப் பகிர்ந்துகொண்டன.

தனிப்பாடல்கள் தோன்றிய களங்கள் குறித்து ஆராயுமிடத்து, அவை பெரும்பாலும் அரசரையோ, மக்களையோ, இறைவனையோ, அடியார்களையோ. பார்வையாளராக அல்லது கேட்போராக முன்னிறுத்தி இயற்றப்பெற்ற அரங்கப்பாடல்களாக அமைந்துள்ளன. குறிப்பாக. வேந்தர், சிற்றரசர், நிலப்பிரபுக்கள் ஆகியோரின் அவைக்களங்கள், கோயில்கள், மதசார்புடைய மடங்கள் ஆகிய இடங்களிலேயே அவை பாடப்பெற்றனவாக அறியக்கிடக்கின்றன. தமது வறுமை தீர்க்கப் பொருள் கிடைக்காத

சூழ்நிலையில், தன் கவியாற்றல் கேட்போரால் புகழப்பெறும் மதிப்புண்மை கருதியும், திறனறிபோட்டித் தேர்வுக்களங்களாக அரசவைகள் மாறியபோது, தம் புலவர் பட்டத்தை நிலைநிறுத்திக்கொள்ளும் போராட்டம் கருதியும், ஒரேவிதமான எதிர்பார்ப்புகளைக் கொண்ட பல்வேறு அரசவைகளைத் தமது பாடல்கள் வழியே நிறைவு செய்ய வேண்டிய தேவை கருதியும், உள்ளத்தின் தொடர்பின்றி உதடுகளின் உச்சரிப்பான வடிவ முதன்மை கொண்ட பாடல்களாக உருக்கொள்ள வேண்டிய காலத்தேவை தனிப்பாடல்களின் தோற்றத்திற்குக் களம் விரித்தது. பேராதவு நல்கிய பேரரசுகளின் வீழ்ச்சியில், புரவலர்கள் இன்றிப் புலவர்கள் பிழைப்புக்குத் தடுமாறிய நிலையில் தமிழ் இலக்கியப் போக்கில் தேக்கம் ஏற்பட்டதைத் தனிப்பாடல்கள் சான்றாக்குகின்றன. பிரபந்தங்கள் வலுவிழந்து வழக்கற்றுப்போன நிலையில், தனிப்பாடல்கள் முதன்மை பெறலாயின. அவ்வகையில் தனிப்பாடல்கள் பலவும் தோன்றியதற்கான காரணங்களை ஆராய்ந்தவிடத்துக் கீழ்க்காணும் முடிபுகள் கிடைக்கின்றன. அவை

1. புலவர்தம் வறுமையும் அவ்வறுமை போக்கும் பெரும்வள்ளல்கள் இன்மையும்
2. எனவே நிலையற்ற வாழ்வியல் சூழலில் அவ்வப்போது ஏற்படும் இன்ப துன்ப உணர்ச்சிகள்
3. நேரங்களும் நிகழ்வுகளும் உருவாக்கிய உள்ளத்தூண்டல்கள்
4. உடனடிக் கவித்திறனை ஆராயும் அவைக்களத்தின் கண் தன் ஆற்றலை நிறுவுகின்ற கல்வித்தறுகண்ணும் புலமைச் செறுக்கும்
5. தகுந்த திறமையில்லாத சூழ்நிலையிலும் பொய்யாகவேனும் புகழ்ச்சியை விரும்பும் வள்ளல்களின் ஆர்வம்
6. நிறுவன மயமான இறைபக்தியும், மடங்களின் ஆளுமையும்
7. தமது பாடல்கள் மக்களிடம் நேரடியே உடனுக்குடன் போய்ச் சேர்வதால் ஆர்வமுற்று மக்களுக்கு நலம் தருவனவற்றைக் கூறும் நாட்டம்
8. பாட்டை வாழ்வனுபவமாகப் படைக்காது விளையாட்டு ஆக்குதல்
9. விழுமியம் கருதாது எதை வேண்டுமானாலும் பாடலாம் எப்படி வேண்டுமானாலும் பாடலாம் என்ற நிலையில் பாடுபொருள்களில் கட்டுப்பாடின்மை
10. குழப்பம் மிக்கதும் நிலையற்றதும் சிதறலுக்குட்பட்டதுமான அரசியல் சூழலில் கிடைத்ததைக் கொண்டு வாழும் மக்கள் இயல்பும் அலைவுறு வாழ்க்கையில் புலவர்கள் பெறும் உயர்வல்லாத அனுபவங்களும் என்பன.

தனிப்பாடல் அமைப்பு

வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, ஆசிரிய விருத்தம், கலிவிருத்தம். வஞ்சிவிருத்தம்,கொச்சகம். கட்டளைக் கலித்துறை எனப் பல்வேறுவகை

யாப்புகளிலும். அறம் பொருள் இன்பம் வீடு ஆகிய நால்வகைப் பொருண்மைகளிலும் வெவ்வேறு நிலைகளில் தனிப்பாடல்கள் கிடைத்துள்ளன. தனிப்பாடல்களை சொந்த அனுபவத்தில் பாடியவை என்றும் பிறர் சொல்லப் பாடியவை என்று வகைப்படுத்துவர். சொந்த அனுபவத்தில் பாடியவற்றை நோக்கும்போது, குறிப்பிட்ட சூழ்நிலையில் அமைந்த குறிப்பிட்ட மனநிலையில் பெறப்பட்ட அனுபவத்தின் அல்லது எண்ணத்தின் வெளிப்பாடாகப் பாடப்பெற்றவையாக அவை விளங்குகின்றன. மேலைநாட்டினர் குறிப்பிடும் லிரிக் எனப்படும் தன்னுணர்ச்சி இயல்பினவாக அவற்றைக் கொள்ளலாம். ஆனால், அதே நேரம், விழுமிய இயல்பினவாகவன்றி, சமுதாயத்தின் பண்பாடு குறைந்த சூழ்நிலைகளில் அமைந்த கீழான உணர்வில் புலவரின் தாழ்ந்த மனவியல்பின் வெளிப்பாடாக இலக்கியத் தரமற்றனவாகக் கருதத் தக்க பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

அகத்தூண்டல் வழி எழுதப்பெறாமல் பிறர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கேட்போரையும் சூழலையும் கருத்தில்கொண்டு பாடப்பெற்றன பிறர் சொல்லிப் பாடியவை என்ற வகையின் பாற்படும். தன் ஆற்றலை வெளிப்படுத்தும் பெருமிதத்தையும் பரிசில்களையும் பாராட்டுகளையும் பிறரை உயர்த்துதல் அல்லது தாழ்த்துதலையும் கருதியமை, அரசர்களும் வள்ளல்களும் வெகுமக்களும் புலவர்களின் கவிப்பொருண்மையைக் காட்டிலும் கவியாற்றலையும் கால ஆளுமையையும் கவிதையின் புறக்கூறுகளான சொல்லாடல் அணிநயம் முதலான நுட்பத்திறன்களின் மீதான சுவைகளையும் விரும்பியமை, புலவர்களின் செய்நேர்த்தியாலும் பாடல்களின் சுவை முதலியவற்றாலும் அவை வாய்மொழி வழக்கினவாக உலவியமை, என்ற சூழல்களில் அவை உருவாகியுள்ளன. சொல்லிப் பாடிய வகையின் உட்பிரிவுகளாக, அ சொல்லிய பொருளைப் பாடியவை ஆ சொல்லிய முறையில் பாடியவை இ சொல்லிய பொருளைச் சொல்லிய முறையில் பாடியவை ஈ வினாவிற்கு விடையாகப் பாடியவை உ வினாவும் விடையுமாகப் பாடியவை ஆகியவை கூறப்படுகின்றன.

தனிப்பாடல் பண்புகள்

காலந்தோறும் தனிப்பாடல்கள் பல்வேறு புலவர்களால் பாடப்பெற்று வருதல் இயல்பு. தமிழ் இலக்கிய வரலாற்றின் தொடக்கம் தனிப்பாடல்களாகவே அமைந்தது என்று கூறுமளவிற்குச் சங்கப்பாடல்கள் தன்னுணர்ச்சிப் பாக்களாகவே கிடைத்துள்ளமை கருதத்தக்கது. ஆயின் சங்கம் மருவிய காலம் முதற்கொண்டு, நமக்கு நெடுங்கதைகளைப் பாடும் காப்பியம் மற்றும் ஒருபொருள் பற்றிப் பலத்தனிப்பாக்களை இணைத்துப்பாடும் பதிகம், பல்வேறுபட்ட பாடல்களை ஒரு நாரில் தொடுக்கும் மாலைபோன்று அமைக்கும் சிற்றிலக்கியம் என ஒருமுகப்பட்ட பாடல் இணைவுகளாலான இலக்கியத் தொகுப்புகள் உருவாக்கம் பெறத் தொடங்கிய நிலையில், தன்னுணர்வு நிலையிலும் அவைக்கள நிலையிலும் சூழ்நிலைக்கேற்பத் தனித்தனிப் பாடல்களைப் பாடும் மரபு தொடர்ந்ததாயினும், பேரியல்

இலக்கியச்சூழலின் முன்னே அவற்றுக்கான முதன்மை உணரப்பெறாமையால், அவை காலத்தைப் போக்கும் பாடல்களாக ஒதுக்கப்பெற்று முதன்மை இழந்தன.

ஒருசிலப் பாடல்கள் ஏற்கெனவே தொகுக்கப்பெற்ற நிலையிலும், அவற்றின்கண் அமைந்த பாடுபொருண்மை. பின்புலம், காலச்செல்வாக்கு முதலிய காரணங்களால் அவை தமக்கெனத் தனிமுதன்மைப்பெற்று மக்களிடையே உலா வருங்கால், அவற்றின் மூலத் தொகுப்பாக்கம் மறக்கப்பட்டு தனிப்பாடல்களாகவே வெவ்வேறு கதையாடல்களுக்கு இடம்தந்து தனித்து நின்றன. சான்றாக, சங்க இலக்கியத்தில் குறுந்தொகையுள் தொகுக்கப்பெற்றுள்ள **‘கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி’** என்ற பாடல், இயற்கைப்புணர்ச்சியின்கண் தலைவன் நலம்பாராட்டல் என்ற மூலப்பொருண்மையைச் சமயகாலத்தில் இழந்தது. பாண்டிய மன்னன், ஊடிக்கிடக்கும் தன்தேவியின் வாட்டம் போக்க மேற்கொண்ட தேடலின் விடையாக அப்பாடல் கிடைத்தநிலையில், அதுவே வினாவையும் எழுப்பியது. இறைத் திருவிளையாடலின் அங்கமாக நிலைபெற்ற கதையாடலின்வழியே, மீண்டும் தனிப்பாடலாகி தருமியின் இயலாமையும் இறைபக்தியும் பாண்டியனின் ஐயமும் பரிசு அறிவிப்பும் இறைவன் தருமிக்கு அருளுதலும் கவிதை தந்து உதவுதலும் இறைவன் - நக்கீரன் வாதமும் சாபமும் என விரிந்துநின்ற ஒரு புராணக்கதையின் தொடக்கப்புள்ளியாகப் பொருள்மாறியது. எனவே சங்கம் தவிராது தனிப்பாடலிலும் இடம்பெற்றது.

தனிப்பாடல் திரட்டில், சங்ககாலக் குறுந்தொகைப் பாடல் முதலாக, பத்தொன்பதாம் நூற்றாண்டின் எல்லீஸ் துரையைக் கடந்து, வேதநாயகம்பிள்ளை முதலானோரால் இருபதாம் நூற்றாண்டில் இயற்றப்பட்ட பாடல்கள் வரை, பல்வேறு காலங்களில் புனையப்பட்ட பாடல்கள் இடம்பெற்றுள்ளன. ஆயினும், காலநிலையில் தனிப்பாடல்கள், காப்பிய காலத்திலிருந்தே கி.பி.10,11,12ஆம் நூற்றாண்டுகளில் பேரிலக்கியம் பாடுநரின் தன்னுணர்ச்சி வெளிப்பாட்டுத் தேவையில் அரும்பின.

தெளிவுபொருந்திய தொடர்ச்சியான காவியங்களைப் படைத்த புலவர்கள், அவை தவிர்த்து தனிப்பட்ட நிகழ்வுகளுக்கும் தத்தம் சமய நோக்கங்களுக்கும் எழுத முற்பட்டனர். பெரிய நூல்களை இயற்றிய புலவர்கள், தற்சார்பை நீக்கிக்கொண்டு, இலக்கு நோக்கிய காப்பியம் பிரபந்தம் முதலியவற்றைப் பாடிய நிலையில், அவற்றிலிருந்து விலகிய மனநிலையில், இயல்பான தத்தம் சொந்த விருப்புவெறுப்புகள் வாழ்வியல் நிலைகளை வெளிப்படுத்தும் விருப்பில் பாட எண்ணியபோது தனிப்பாடல்களுக்கான களங்கள் அமைந்தன. அவை பேரிலக்கியங்களை விரும்பும் அறிவாற்றல் மிக்க அவைக்குப் பொருந்தாது, அன்றாட வாழ்வில் உழலும் வெகுமக்களுக்கு அவர்தம் உணர்வுநிலைகளுக்கு விருந்தாக அமைந்தன. ஆகவே ஆற்றல் வாய்ந்த புலவர்கள் தம்முடைய வீறார்ந்த

நிலையிலிருந்து கீழிறங்கிவந்து, வெகுமக்கள் ரசனைக்கேற்ப விளையாட்டாகப் பாடும் நிலை உருவாகியது. இத்தகைய தனிப்பாடல்கள் கடினமான இலக்கணப் பயிற்சியோ, தரமுயர்ந்த சங்கப் பாடல்களின் அறிமுகமோ, காப்பியத் தேர்ச்சியோ இல்லாதவர்களின் இலக்கிய ஈடுபாட்டுக்குப் போதுமானவையாக அமைந்தன.

நுட்பமான தத்துவத் தேடல், ஆழ்ந்த பக்திநோக்கு என்று இல்லாமல், எளிதான இலக்கியச்சுவை, கதைத்தன்மை, சுவையான பின்புலம் ஆகிய பண்புகள் நோக்கி விரும்பப்பட்டன. பாடலின் சொல்நயம், பொருள்நயம், அணிநயம் ஆகியன சுவை ஊட்டவல்ல கூறுகளாக அமைந்தன. எளிமை, சுருக்கம், இனிமை இவற்றோடு புதிர்த்தன்மை, உணர்வுக்கிளர்ச்சி ஆகிய காரணங்களால் மீண்டும் மீண்டும் படிக்கப்பட்டு வந்தன. அதன்வழியே, அன்றாட வாழ்வின் பேச்சு வழக்கில் பயன்கருதி ஆளப்பட்டன.

தொகுப்புரை

1 தமிழ் இலக்கிய வரலாற்றில், திணைப்பாடல்கள், நெடும்பாடல்கள், பதிகப்பாடல்கள், காப்பியங்கள், சிற்றிலக்கியங்கள் போலவே தனிப்பாடல்களும் தனித்தன்மையோடு மதிக்கத்தக்க வரலாற்று முதன்மை வாய்ந்தவை.

2 பிற இலக்கியங்கள் அவ்வக்காலத்தில் தோன்றியவையாக விளங்க, தனிப்பாடல்கள் காலந்தோறும் இடையறாது தோன்றியவையாக விளங்குகின்றன. எனினும், பெருவாரியான உருவாக்கம் என்பது இடைக்காலம் பிற்காலம் என்ற காலக்கூறுகளைப் பின்புலமாகக் கொண்டது.

3 பிற இலக்கியங்கள் சுவடிகளிலிருந்து தம் இயல்பான வடிவங்களிலேயே தேடிப் பதிப்பிக்கப் பெற்ற நிலையில், தனிப்பாடல்கள் காலங்களினூடே சிதறிக்கிடந்த நிலையில், முதற்கண் திரட்டல் அடுத்து தொகுத்தல் பின்னரே பதிப்பித்தல் என்றவாறு படிநிலையில் உருவாயின. எனவே இம்முயற்சியைப் பதிவுசெய்யும் வகையில் தனிப்பாடல்கள் திரட்டு என்ற பெயரால் வழங்குதல் குறிப்பிடத்தக்கது.

4 ஒவ்வொரு பெருமாந்தரும் அடிப்படையில் தனிமனிதரே. அவரது தனிப்பட்ட உணர்வுகளும் சிந்தனைகளும் பேரிலக்கியத்திற்கு இணையான மாற்றுக் கதையாடல்களையும் சிந்தனைகளையும் வழங்கி, பன்முகத்தன்மை கொண்ட சமுதாயத் தேவையை நிறைவு செய்வதோடு, பேரிலக்கிய ஒளியின் நிழல்வெளிகளில் அடையாளமிழந்து கிடக்கும் மக்கள் வரலாறுகளின் மீது தனிப்பாடல்கள் பதிப்பு வெளிச்சம் பாய்ச்சுகிறது. பாரி ஓரி என்றவாறும் சடையப்பவள்ளல் சீதக்காதி என்றும் சங்க இலக்கியமும் காப்பியங்களும் சுட்டிக்காட்டிய நிலையில் தனிப்பாடல்கள் அவர்போல்

புலவர்களை ஆதரித்த சிறுசிறு அரசர்களையும் சமீன்தார்களையும் கொண்ட 18,19ஆம் நூற்றாண்டுகளின் காலவரலாற்றைக் காட்டி நிற்கின்றன.

5 தனிப்பாடல்கள் பதிப்பு, முடிவுற்ற இலக்கியத்தின் தேடித் தொகுத்த பதிப்பாக இல்லாது, மாறாக. நடப்பிலும் தொடர்ந்து உருவாகும் பாடல்களையும் உள்ளடக்கியதன்வழி முடிவுறா இலக்கியப் பதிப்பாகத் தொடர்ந்துள்ளமை அதன் வாழும்காலத் தொடர்ச்சியைப் பெருமையுற எடுத்துரைக்கிறது.

6 சுவடிகளைத் தேடிப் பதிப்பிக்கத் தொடங்கிய முயற்சி, படிப்படியே சான்றோர் மனப்பதிவுகளைத் தேடிப் பதிவுசெய்த தாள்பயன்பாட்டுக் காலத்ததாகத் தொடர்ந்து, அஞ்சல் வழியிலும் பெற்ற ஊடகப் பயன்பாட்டுக் காலத்தின் அடையாளத்தோடு இனிஒரு பதிப்பு வருமாயின், பாரதி பாரதிதாசன் முதற்கொண்டு பெயரறியா நம் சமகாலக் கவிஞர்களின் அறியப்பெறாத அல்லது அவையேறாத அல்லது அச்சேறாத பாடல்களையும் இணைத்த பதிப்பாக அமையும் என்ற புதுமையுறல் பண்பைப் பெற்று விளங்குகிறது.

7 பொன்னுசாமித்தேவர், சண்முஞ்செட்டியார், முதற்கொண்டு கழகப் பதிப்பு வரை நோக்க தனிப்பாடல்களைத் தொகுக்கும் எண்ணம் புரவலர் சிந்தனையாகவே அமைதலும், தொகுக்கும் முயற்சி புலவருடையதாக அமைதலும் ஆராயத்தக்கது. பாடும் புலவனுக்கு அப்பாடலைத் தன்னுடையதாகவே சுமக்க வேண்டிய முதன்மை பாடிய புலவனுக்கு இல்லாத இயல்பினவாக அப்பாடல்கள் நிலவின. ஆயின் பாடப்பெற்ற புரவலனுக்கோ, தன்புகழைக் காலங்கடந்து காப்பாற்ற வேண்டிய கடப்பாடுண்மையால், மக்கள் நடுவே நிலவச்செய்யவும், ஏடுகளில் இருக்கச் செய்யவுமான தேவை நிலவியது. ஆகவே பொருள்தந்து சுவைமிக்க பதிவுகளை உருவாக்கிப் பாதுகாக்கும் புரவலர்தம் புகழ்விரும்பும் மனத்தொடர்ச்சி, தம்மைப் பாடும் பாடல்களை வரலாற்றுத் தொடர்ச்சியாகப் பதிவுசெய்ய விரும்பிய மனநிலையும், தொகுத்தலும் பதிப்பித்தலும் ஆகிய அச்சு வசதியும், புரவலர் சார்பில் நின்று தனிப்பாடல் பதிப்புகளை உருவாக்கின. அதன் தொடர்ச்சியில், தமது பாடல்களும் முந்தைய வரலாற்றின் தொடர்ச்சியில் பதிவு பெறவேண்டும் என்ற உந்துதலில் புலவர்கள் சார்பில் தொகுக்கப்பெற்றன. இலக்கிய வரலாற்றுப்பதிவு, பாடத்திட்டத்தேவை, ஆய்வுப்பெருக்கம் ஆகிய நுகர்வுக்களத்தில் சந்தைப்பொருளாக இலக்கியப்பதிப்புகள் கடைவிரிக்கப் பெற்ற நிலையில், பல்சுவை சார்ந்த நுகர்வு மனங்களுக்கு விருந்தாகத் தனிப்பாடல்கள் அமைதலின் அவற்றின் பதிப்பு மூலப்பதிப்புகளாகவும் உரை இணைந்தனவாகவும் பெருகின.

தூது நூல்களில் உ.வே.சா. வழங்கிய பதிப்பு முகவுரைகள்

திரு. ஆ. இரா. பாரதராஜா

முகவுரை

தமிழ் மக்களால் 'தமிழ்த்தாத்தா' உ.வே.சா. என அன்புடன் அழைக்கப் பெறுபவர் உ.வே.சாமிநாத அய்யர். அவர் ஆற்றியுள்ள தமிழ்த் தொண்டு, உலகத் தமிழர்களின் உள்ளங்களில் என்றென்றும் அழியாது, பதிந்து நிலைத்து நிற்கும். தனி ஒரு மனிதராகத் தளரா நெஞ்சோடு அஞ்சாது அல்லும் பகலும் அல்லல்களை மறந்து, தடைகள் பல கடந்து-நடந்து, மாட்டு வண்டியில் அமர்ந்து அருந்தமிழ்ச் சுவடிகளை அள்ளித் திரட்டிப் பகுத்து, வகுத்து, தொகுத்துப் பதிப்பித்த சாதனைச் சரித்திரமே, இன்று தமிழன்னைக்குப் புகழ் மகுடம் புனைந்து மகிழச் செய்கிறது; நெஞ்சை நெகிழச் செய்கிறது; தமிழரைத் தலை நிமிர்த்தி ''எங்களுக்கும் ஈடு இணையற்ற இலக்கிய, இலக்கண வரலாறுகள் உண்டு'' என உலக மொழியியல் அரங்குகளில் முழங்குகின்ற அரிய வாய்ப்பினை அளித்திருக்கிறது. ஐயா, உ.வே.சா.வுடைய பதிப்புகள் தமிழ்-தமிழர் வளமான வரலாற்றைப் பதிப்புகள் தமிழ்-தமிழர் வளமான வரலாற்றைப் பேசும்; அப்பதிப்புரைகளுக்கு அவர் வழங்கியுள்ள பதிப்புக் குறுவிளக்க முகவுரைகள் தென்றலாய் வீசும். அவை போற்ற வேண்டிய வழிகாட்டியுரை மட்டுமன்றி, அம் முகவுரைகளிலேயே நூலின் முழுமையையும் முத்தாய்ப்பாக உரைத்திருக்கும் 'உத்தி' முகவுரைகளின் மணிமுடியெனத் திகழ்கிறது. அடிகுறு தமிழில் பழகிடும் பதிப்புரை-முகவுரைகளின் சிறப்புகளைக் குறு ஆய்வுரையாகக் காணலாம்.

முகவுரையே அகவுரை

அகத்தின் அழகு முகத்தில் தெரியும் என்ற முதுமொழிக் கேற்ப, உ.வே.சா. அவர்களின் அகவுரையே முகவுரையாய்

மிளிர்கிறது. **''உ.வே.சா. அவர்கள் பதிப்பித்த தூது நூல்கள்-7''** என்ற தலைப்பில், டாக்டர் உ.வே.சா. நூல்நிலையம் (வெளியீட்டெண் : 217) வெளியிட்டுள்ளது. இந்நூலில் ஏழு தூது நூல்கள் பாடல்கள் வடிவில் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. அவை,

1. குழந்தைக் கவிராயர் இயற்றிய ''மான்விடுதூது'' (பக்.1-46; முகவுரை பக்.1-4)
2. பலபட்டடைச் சொக்கநாதப் பிள்ளை இயற்றிய, 'ஸ்ரீ பத்மகிரிநாதர் தென்றல் விடுதூது' (பக்.47-74; முக. பக்.49-55).
3. பலபட்டடைச் சொக்க நாதப் பிள்ளை இயற்றிய, ''திருமாலிருஞ் சோலை மலை அழகர் கிள்ளைவிடுதூது'' (பக்.75-146; முக. பக்.77-78)
4. சீனிச் சர்க்கரைப் புலவர் இயற்றிய, ''பழனிமாலை ஸ்ரீ பாலசுப்பிரமணியக் கடவுள் புகையிலை விடு தூது'' (பக்.147-162; முக. பக்.149-154)
5. ஸ்ரீ கச்சியப்ப முனிவர் இயற்றிய, ''கச்சிஆனந்த ருத்திரேசர் வண்டு விடு தூது'' (பக்.163-266; முக. பக்.166-172)
6. மதுரைச் சொக்கநாதர் ''தமிழ் விடுதூது'' (பக்.267-332; முக. பக்.269-280)
7. மகாவித்துவான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை அவர்கள் இயற்றிய, ''திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் நெஞ்சுவிடுதூது'' (பக்.333-356) (இந்நூலுக்கு மட்டும் முகவுரை வழங்கப் பெறவில்லை)

மேற்கண்ட எழுபழம்பெரும் நூல்களுக்குப் முகவுரை அழகுற வழங்கியுள்ளார் உ.வே.சா.

முதல் நூலாக இடம்பெறும் ''மான்விடுதூது'' நூலில் 'உ' என்ற பிள்ளையார் சுழிஇட்டு, முகவுரை எனத் தொடங்கியுள்ளார். இம் முகவுரையில், முதல் தூது நூல் என்பதால், தூதின் இலக்கணமும் அது கூறப்பெற்றுள்ள நூல்களும் சான்றாதாரங் களும் தந்து தெளிவுபடுத்தப் பெற்றுள்ளன.

முகவுரையில்-தூதுரை விளக்கம்

தூதுபற்றிய உ.வே.சா. அவர்களின் முகவுரை ஆய்வுரை நிகர்த்துக் காணப்பெறுகிறது.

''தூதென்பது ஒருவர் தம்முடைய கருத்தை வேறு ஒருவருக்கு இடைநின்ற ஒருவர் வாயிலாகக் கூறி விடுப்பது. அரசர்கள் பகையரசர்கள் பாலும், புலவர்கள் உபகாரிகளின் பாலும், தலைவி தலைவன் பாலும், தலைவன் மணத்தின் பொருட்டுத் தலைவியைச் சார்ந்தோர் பாலும், ஊடலை நீக்கும் பொருட்டுத் தலைவன் தலைவியின் பாலும் தூதுகளை அனுப்புதல் மரபு.

நூல் சான்றுகள்

இராமாயணத்தில் உள்ள 'அங்கதன் தூது', பாரதத்தில் உள்ள விதுரன்தூது, சஞ்சயன் தூது, கிருஷ்ணன் தூது, கோவை நூல்களில் தூதிற்ற பிரிவென்னும் விளவியிற் சொல்லப்படும் தூது முதலியன பகையரசர்கள் பால் விடுவித்த தூதுகளாகும். திருக்குறளில் 'தூது' என்னும் அதிகாரத்தில், இவ்வகைத் தூது செல்வாரின் இலக்கணங்கள் கூறப்பெற்றுள்ளன (இவற்றைப் ''பகைவிடுதூது'' எனக் கொள்ளலாம்)

பிசிராந்தையார் கோப்பெருஞ்சோழன் பால் அன்னச் சேவலை விடுத்ததாகப் புறநானூற்றில் கூறப்படும் தூது, புலவர் உபகாரியின் பால் விடுத்ததற்கு உதாரணமாகும். குணமாலை சீவகனுக்குக் கிளியைத் தூது விடுவித்து போன்றவை தலைவி தலைவனுக்குத் தூது விட்டனவாம். தலைவன் மணப்பொருட்டாகத் தூது விடுதல் கோவை நூல்களாற் புலனாகும். சுந்தர மூர்த்தி நாயனார் சிவபிரானைத்தூது விட்டதும் பிறவும் தலைவியின் ஊடலை நீக்கத் தலைவன் தூது விட்டனவாம். இவ்வாறு பல நூல்களில் உள்ள சான்றுகளும், குறிப்புகளும் மேற்கோள்களுடன் உ.வே.சா.வால் விளக்கமாகத் தூதுபற்றிக் கூறப்பெற்றுள்ளன. மேலும் தூதுவிடுவதற்குரிய பொருள் இவைதாமென்று வரையறையில்லை. இரத்தினச் சுருக்கத்துச் செய்யுள் ஒன்று - அன்னம், மயில், கிள்ளை, மேகம், நாகண வாய்ப்புள், பாங்கி, குயில், நெஞ்சு, தென்றல், வண்டு எனும் பத்துப் பொருள்களைக் கூறுகின்றது. இந்தப் பத்துப் பொருள்கள் அல்லாத வேறு பல தூதுப் பொருள்கள் அமைந்த நூலும் தமிழில் உண்டு. பல்வேறு புலவர்களால் பாடப்பெற்ற தூது நூற்கள், கலிவெண்பாவால் செய்யப்படுதல் வேண்டுமென்பது தூது நூல் இலக்கணம். இவற்றுள் புலவர் தம் தம் கற்பனைத் திறத்திற்கேற்பத் தூதுப் பொருள்களைத் தேர்ந்து தூதுப் பிரபந்தங்களை இயற்றியுள்ளார்.

இவ்வாறாகத் தூதுவிடு பொருள்கள் பற்றித் தம்முகவுரையில் உ.வே.சா. விளக்கியுள்ளார்.

1. மான்விடுதூது

தூது இலக்கணங்களை உள்ளடக்கிய 'மான்விடு தூது' என்பது மிதிலைப் பட்டியில் வாழ்ந்த குழந்தைக் கவிராயர் என்பவரால் அவர் காலத்தே வாழ்ந்த சிவகங்கை ஸமஸ்தானத்தில் பிரதானியாக இருந்த முல்லையூர்த் தாண்டவராயப் பிள்ளை யென்னும் வேளாள குலதிலகர்மீது இயற்றப்பெற்றது. "குழந்தை சொன்ன தென்றோ" என இந்நூலில் வரும் தொடர் நூலாசிரியரின் பெயரைப் புலப்படுதுதுகிறது. இந்நூலில் தூதுப் பொருட்கள் பத்து அல்லாது, மானைத் தூதுவிடக் காரணம், பாட்டுடைத் தலைவர் சிறப்பு, அவர் செய்த தர்மங்கள், பிற பெருமைகள்யாவும் பேசப்பெறுகின்றன இந்நூலில் தலைவனிடம் மான் தூது சென்று மாலை வாங்கி வரும்படி, தலைவி தூது அனுப்புவதாகச் செய்தி அமைந்துள்ளது. இந் நூல்காப்புச் செய்யுள், இறுதி வாழ்த்துச் செய்யுள் என இரண்டோடு மொத்தம் 301 கண்ணிகளால் ஆக்கப் பெற்றுள்ளது என உ.வே.சா. குறிப்பிட்டுள்ளார்.

மேலும், "சொன்னயம் பொருணயம் செறிந்த இத்தூதின் ஏட்டுப் பிரதியொன்று சற்றேறக் குறைய 50 வருஷங்களுக்கு முன்பு (1936இல் எழுதப்பட்டது) மிதிலைப்பட்டி அழகிய சிற்றமபலக் கவிராயரவர்கள் வீட்டிலிருந்து எனக்குக் கிடைத்தது. அதன் இறுதியில், குழந்தையன் மானை விடுதூது" முற்றும் என்று எழுதப் பெற்றிருந்தது குறிப்புரை எழுதப்பெற்று இந்நூல் பதிப்பிக்கலாயிற்று. இதனுள் வந்துள்ள 'மான்றேயம்' (கண்ணி-27), 'புல்வாய் மாது முதலியவற்றைப் பற்றிய செய்திகள் விளங்காமையால் குறிப்புரை எழுதக்கூடவில்லை. நாளடைவில் விளங்கும் என்றெண்ணுகிறேன்.

தமது 'கலைமகள்' பத்திரிகை வாயிலாக இதனை வெளிவரச் செய்த அப்பத்திரிகையின் ஆசிரியர் மகா-ர-ர-ஶ்ரீ-ரா நாராயணசாமி ஐயரவர்கள்பால் நன்றியறிவுடையேன். இவர்கள் இவ்வாறு செய்விப்பது பலபிரபந்தங்களை நான் வெளியிடு வதற்குத் தூண்டுகோல் ஆகின்றது. இந்நூலை ஆராயும்போதும் ஒப்புநோக்குபோதும் உடனிருந்து உதவி செய்தவர்கள் சிரஞ்சீவி வித்துவான் வி.மு. சுப்பிரமணிய ஐயரும், சிரஞ்சீவி வித்துவான் கி.வா. ஜகந்நாத ஐயரும் சிரஞ்சீவி வித்துவான் ச.கு. கணபதி ஐயரும் ஆவர்".

'தியாகராஜவிலாசம்' — இங்ஙனம்
திருவெட்டீசுவரன்பேட்டை — வே. சாமிநாதையர்
12.02.1936

என உ.வே. சா. முகவுரை எழுதியுள்ளார். 1936ஆம் ஆண்டு எழுதப்பட்ட இம்முகவுரையில் சுவடிப் பிரதி கிடைத்த செய்தியில் கொடுத்தோர் பெயர், கலைமகள் பத்திரிகை உதவி, ஒப்பாய்வுக்கு உதவியோர் பெயர் யாவற்றையும் மறைக்காது (கண்ணி-27 புல்வாய்மாது) போன்றவற்றிற்குப் பொருள் விளங்கவில்லை எனக் குறிப்பிட்டிருப்பதும் அய்யாவின் நன்றிப்பெருக்கும், பெருந் தன்மையும் அகந்தையின்மையும் வெளிப்படுகிறது. இந்த முகவுரை அவர் அகவுரையாகவே மிளிர்கிறது.

2. தென்றல் விடுதூது

தேவாரம், திருச்சிற்றம்பலம், "பொடியார் மேனியனே. . . எனத் தொடங்கும் பாடலுடன், தூதிலக்கண விளக்கமும் மான்விடுதூது - நூலில் தந்ததுபோல் தரப்பெற்றுள்ளன. தூதுச் செய்திகள் வந்துள்ளதாகத் தனிப்பாடல்கள், இரட்டை மணிமாலை, மும்மணிக் கோவை, நான்மணிமாலை, கலம்பகம், அந்தாதி, தேவாரம், திருவாசகம் மற்றும் திவ்யப்பிரபந்தங்கள் ஆகியவற்றைச் சுட்டியுள்ளார்.

தமிழில் மட்டுமன்றி வடமொழி முதலிய பிறமொழி களிலும் தூதுப் பிரபந்தங்கள் உள்ளன. மகாகவி காளிதாசரின் மேகஸந்தேசம், ஸ்ரீ வேதாந்த தேசிகரின் ஹம்சஸந்தேசம், பிகஸந்தேசம், மயூரஸந்தேசம், சுகஸந்தேசம், காகஸந்தேசம், பிரமரஸந்தேசம், மனஸ்ஸந்தேசம், பவனதூதம் யாவும் வடமொழி ஸந்தேசங்கள் ஆகும் எனக் கூறியுள்ளார் உ.வே.சா. (ஸந்தேசம்-தூது).

இவ்வாறே தெலுங்கு, கன்னடம், மலையாளம் முதலிய மொழிகளில் பலஸந்தேசங்கள் உள்ளன எனவும், மலையாள மொழியில் 'மயூரஸந்தேசம்' சுவையான நூல் எனவும் கூறுவர். சிங்கள மொழியில் சேவல் பெந்தேசம், சேலாலி வறினி ஸந்தேசம் என்பன போன்ற தூதுநூல்கள் உள்ளதாகச் சம்பந்தமான நூல்கள் உள்ளன என்பர்'' எனக் கூறும் உ.வே.சா. தூது நூல்கள் முற்காலத்தில் பெரிதும் போற்றப்பெற்றதை மேற்கூறிய செய்திகளால் அறிய முடிகிறது'' எனத் தூது நூற்சிறப்பைக் கூறியுள்ளார்.

'ஸ்ரீபத்மகிரிநாதர் தென்றல் விடுதூது' என்பது பத்மகிரி (திண்டுக்கல்) என்னும் தலத்தில் திருக்கோவில் கொண்டு

எழுந்தருளியுள்ள ஸ்ரீபத்மகிரிநாதர் பவனி வரும் பொழுது அவரைத் தரிசித்து, அவர் பால் அன்புற்றுமையல் கொண்ட தலைவி ஒருத்தி, தென்றலை அவர்பால் தூதுவிட்டதாகப் பலபட்டடைச் சொக்கநாதப் பிள்ளை என்னும் புலவர் பெருமானால் இயற்றப் பெற்றது; இதிலுள்ள கண்ணிகள் 123. இந்நூல் பாடாண் திணையில், கடவுளிடத்து மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்தின் பாற்படும். மேலும் தென்றலைத் தூது விடுவதாக வேறு நூல்கள் இப்பொழுது கிடைக்கவில்லை எனவும் பத்மகிரி. திண்டுக்கல்லின் வேறு பெயர் எனவும் அதன் தோற்றச் சிறப்புபற்றியும் தெளிவுபடுத்தியுள்ளார். மேலும் வேறுபல நூல்சான்றுகளையும் ஒப்ஹபமைகளையும் அவற்றில் உள்ள அணி நயங்களையும் ஆய்ந்து கூறியுள்ளார் உ.வே.சா.

மேலும் ''இந்நூலின் ஏட்டுப்பிரதி ஒன்று இன்றைக்கு 47 வருஷங்களுக்கு (1932இல் எழுதப்பெற்றது) முன்பு திருநெல்வேலித் தெற்குப் புதுத்தெரு வக்கீல் ஸ்ரீசுப்பையா பிள்ளையவர்கள் வீட்டிற் கிடைத்தது. அப்பிரதி ஊர்க்காட்டு, சாமிநாத வாத்தியார் என்பவருடையது. இந்நூலுடன் 'அழகர் கிள்ளை விடுதூதும் சேர்ந்து இருந்தது. கிடைத்த பிரதி சிதையாததாக இருந்தமையின் அவ்வாறே பதிப்பிக்கலாயிற்று

திண்டுக்கல் சம்பந்தமான சில செய்திகளை அவ்வூர் வக்கீல் மகா.மகா.ஸ்ரீ எல்.ஏ. வெங்குசாமி ஐயரவர்கள் எனக்கு அன்புடன் தெரிவித்தார்கள். இந்நூலைக் 'கலைமகள்' என்னும் பத்திரிகையில் வெளியிடும்படி என்னைத் தூண்டி, அங்ஙனமே செய்வித்துதவிய அப்பத்திரிகையின் அதிபர் மகா-மாக-ஸ்ரீஆர். நாராயணசாமி ஐயரவர்களுக்கும் பத்திரிகாசிரியர்களுக்கும் என் நன்றி உரியதாகுக'' - என முடித்து தேவாரம், திருச்சிற்றம்பலம், முன்றில்வாய். . .எனத் தொடங்கும் பாடலுடன் திருச்சிற்றம்பலம்- என நிறைவு செய்து 'தியாகராஜ விலாசம்'; திருவேட்டீசுவன் பேட்டை 10.6.32 இங்ஙனம் வே.சாமிநாதையர் என நிறைவு செய்துள்ளார்.

இந்த முகவுரை மூலம் தென்றல்விடு தூதுச் சிறப்பு, கிடைத்த வரலாறு உ.வே.சா. அவர்களின் நன்றி மறவாமையாவும் தெளிவாகின்றன. அக்கால வழக்கப்படி நிறைய வடமொழிச் சொற்கள் விரவிக் கிடக்கின்றன. இவை உ.வே.சா. முகவுரையின் சுருக்கமே.

3. அழகர் கிள்ளைவிடுதூது

பலபட்டடைச் சொக்கநாதப் பிள்ளை இயற்றிய ''திருமாலிருஞ்சோலை மலை அடிகர் கிள்ளை விடுதூது'' (இரண்டாம் பதிப்பின் முகவுரையாக இஃது எழுதப் பெற்றுள்ளது)

அழகர் கிள்ளை விடுதூதென்பது திருமாலிருஞ்சோலை மலையில் திருக்கோவில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஸ்ரீ சௌந்தரராஜப் பெருமாளைக் காமுற்ற ஒருத்தி அவர்பால் ஒருகிளியைத் தூது விடுத்ததாகப் பலபட்டைச் சொக்க நாதப் பிள்ளையென்னும் புலவர் இயற்றியது. இக்காப்பு வெண்பா ஒன்றையும், 239 கண்ணிகளையும் உடையது.

''இந்நூலின் மூலம் 1905 ஆம் வருடம் மு.வேணுகோபால் சாமி நாயுடு என்பவரால் அச்சிடப்பெற்றது. அதிற்பல கண்ணி களில் வேறுபட்ட பாடமும் பிழையும் இருந்தன இன்றைக்கு 56 வருடங்களுக்கு முன்பு (1885க்கு முன்) திருநெல்வேலித் தெற்குப் புதுத்தெரு வக்கீல் ஸ்ரீ சுப்பையா பிள்ளையவர்கள் வீட்டில் இந்நூலின் ஏட்டுப் பிரதி ஒன்று கிடைத்தது அதன் இறுதியில், ''அழகர் பேரில் கிள்ளை விடுத்து, பலபட்டடைச் சொக்கநாதப் பிள்ளை பாடல் எழுதி முடிந்தது, பண்ணி 239. தேவிசகாயம்- என்பன எழுதப்பட்டிருந்தன. இந்நூலுடன் பத்மகிரிநாதர் தென்றல் விடுதூதும் இருந்தது. பிறகு எனக்குக் கிடைத்த பிரதிகள் வருமாறு:

1. திருவாடுதுறை ஆதீனத்துப் பிரதி ஒன்று
2. களக்காடு ஸ்ரீ சாமிநாத தேசிகர் பிரதி ஒன்று
3. மேலகரம் திரிகூட ராசப்பக் கவிராயரவர்கள் வீட்டுப்பிரதி ஒன்று. இவற்றின் உதவியினால் இந்நூல் இப்பொழுது செப்பஞ்செய்யப்பெற்றுக் குறிப்புரையுடன் வெளிவரலா யிற்று. அழகர் கோவில் சம்பந்தமான சில செய்திகளை நான் அறிய விரும்பிய போது மதுரைத் தமிழ்ச் சங்கத்து உதவிக் காரியதரிசியும் அட்வொகேட்டுமாகிய (வழக்கறிஞர்) ஸ்ரீமான் என்.ஆர். கிருஷ்ணசாமி ஐயங்காரவாக்ளும் செந் தமிழ்ப் பத்திரிகையின் உதவி ஆசிரியராகிய ஸ்ரீமான் கி.இராமாநுஜ ஐயங்காரவர்களும் விசாரித்து எழுதி யனுப்பினார்கள்.

இந்நூலின் முதற்பதிப்பு வடபாதி மங்கலம் ஸ்ரீமான் ராவ்பகதூர் வ.சோ. தியாகராஜ முதலியாரவர்கள் பொருளுதவியால் 1938ஆம்

வருடம் வெளியாயிற்று. இவ்வெளியீடு சம்பந்தமான மற்ற விஷயங்களை முதற்பதிப்பின் முகவுரையில் காணலாம்.

இந்நூலை ஆராய்ந்த போதும், பதிப்பித்த போதும் உடனிருந்து உதவி செய்தோர் சென்னைக் கிறித்துவக் கல்லூரி உயர்நிலைப்பள்ளி தமிழ்ப்பண்டிதர் சிரஞ்சீவி வித்துவான் வி.மு. சுப்பிரமணிய ஐயரும், 'கலைமகள்' ஆசிரியர் சிரஞ்சீவி வித்துவான் கி.வா. ஜகந்நாதையரும் ஆவர்'' என எழுதி முடித்துள்ள உ.வே.சா. இங்ஙனம் வே. சாமிநாதையர், 'தியாகராஜ விலாசம்', திருவேட்டீசுவரன் பேட்டை, 20.07.41 என முகவுரையை நிறைவு செய்துள்ளார். இதன் மூலம் நூல் பிரதிகள் யார் யார் மூலம் கிடைத்தன என்ற வரலாறு, கிடைத்த ஆண்டுகள், உதவி செய்தோர் பெயர்கள், சென்று நூற்பிரதி பெற்ற திருநெல்வேலி, திருவாடுதுறை, களக்காடு, மேலகரம், குற்றாலக் குறவஞ்சியை இயற்றிய மேலகரம் திரிகூடராசப்பக் கவிராயர் வீட்டில் ஒரு பிரதி பெற்றுள்ளார் உ.வே.சா.) மற்றும் வடபாதி மங்கலம் ஆகிய ஊர்களில் அலைந்து திரட்டிய நூல் வரலாறுயாவும் உ.வே.சா. அவர்களின் முகவுரை மூலம் அறிய முடிகிறது. மேலும் அக்கால வழக்கப்படி பிறமொழித் தாக்கத்தால் வரும் வடசொற்களன்றி ஆங்கிலச் சொற்களையும் அப்படியே பயன்படுத்தியுள்ளார் உ.வே.சா. சான்றாக அட்வொகேட்டு, கிறிஸ்டியன் காலேஜ் ஹைஸ்கூல் போன்ற சொற்கள் இடம் பெற்றுள்ளன. இஃது இரண்டாம் பதிப்பின் முகவுரை என்பதால் அதில் உள்ளபடியே செய்திகள் எடுத்தாளப்பெற்றுள்ளன.

''ஸ்ரீபத்மகிரி நாதர் தென்றல் விடு தூது'' நூலும், ''திருமாலிருஞ் சோலைமலை அழகர் கிள்ளைவிடுதூது'' நூலும் ஒன்றாகக் கிடைத்தசெய்திகளை இம்முகவுரையால் அறிய முடிகிறது.

4. புகையிலை விடுதூது

சீனிச் சர்க்கரைப் புலவர் இயற்றிய ''புகையிலை விடுதூது'' என்னும் நூல் திருமாலுக்கும் புகையிலைக்கும் சிலேடை, சிவபெருமானுக்கும் புகையிலைக்கும் சிலேடை, பிரம்ம தேவருக்கும் புகையிலைக்கும் சிலேடை, புகையிலையின் வரலாறு, பழனியாண்டவர் பெருமை, புகையிலையைத் தூது சென்று வர வேண்டுதல் எனும் நோக்கில் இந்நூல் அமைந்துள்ளது எனக் கூறி, தூது நூல்களின் சிறப்பையும் கூறியுள்ளார் உ.வே.சா.

தூதுப்பொருட்கள் பத்தென்பது பழைய வரையறை; அதனைக் குறிக்கும் இரத்தினச் சுருக்கச் செய்யுளைக் குறிப்பிட்டுள்ளார். அது,

இயம்புகின்ற காலத் தெகினமயில் கிள்ளை
பயம்பெறுமே கம்பூவை பாங்கி-நயந்தகுயில்
பேதைநெஞ்சற் தென்றல் பிரமரமீ ரைந்துமே
தூதுரைத்து வாங்குந் தொடை

எனும் பழம் பாடல்

முந்தைய முகவுரைகளில் கூறப்பெறவில்லை. இம் முகவுரையில் இத்தனிப் பாடலை உ.வே.சா. சுட்டியுள்ளார்.

''ஒருவரைப் புகழ்ந்து பாடுவதற்குத் தூதுப் பிரபந்தங்களைப் புலவர்கள் பயன்படுத்துவதைப் போல், இகழ்ந்து பாடுவதற்கும் இப்பிரபந்தம் ஒரு கருவியாவதுண்டு. மிதிலைப்பட்டிக் கவிராயர்களுள் ஒருவர், தமக்கு இடையூறு செய்த ஒருவர் மீது ''கழுதைவிடுதூது'' என ஒரு பிரபந்தம் இயற்றியுள்ளார். அத்தூது ஒரு வகைப் பிரபந்தம்'' என உ.வே.சா. குறிப்பிடுகிறார்.

நூல்கருத்து

''புகையிலை விடுதூது'' என்னும் இது சீனிச்சர்க்கரைப் புலவரென்பவரால் பழனிமலையில் கோவில் கொண்டு எழுந்தருளியுள்ள ஸ்ரீபாலசுப்பிரமணியக் கடவுள் மீது இயற்றப் பெற்றது; ஒரு தலைவி புகையிலையை அக்கடவுள் பால் தூது அனுப்புவதாக அமைந்தது. இது 59 கண்ணிகளை உடையது. இத்தூதில் புகையிலையின் பெருமைகளே முதல் 53 கண்ணிகளில் சொல்லப்படுகின்றன. தூதுவிடும் செய்தி ஏனைய ஆறு கண்ணிகளில் மட்டுமே சுருக்கமாக அமைந்துள்ளது. இதனால் இதைப் பாடிய புலவர் புகையிலையைச் சிறப்பிப்பதற்காகவே இதனைப் பாடியிருக்க வேண்டுமெனத் தெரிகிறது'' எனக் கூறும் உ.வே.சா. ''பாட்டுடைத் தலைவவரான பழனியாண்டவருக்குப் புகையிலைச் சுருட்டு நிவேதன முண்டென்று சிலர் சொல்லக் கேட்டதுண்டு. விராலி மலையில் அத்தகைய நிவேதனம் உண்டென்று தெரிகிறது. இந்தப் புலவருக்கும் புகையிலை போடும் வழக்கம் இருக்கலாம். அதனால் இதனைப் பாடியிருப்பார் போலும் எனத் தெரிவிக்கிறார்.

இந்நூலின் ஆசிரியர் சீனிச் சர்க்கரைப்புலவர் பரம்பரைப் புலமை வாய்ந்த குடும்பத்தில் உதித்தவர். இராமநாதபுரம் ஸமஸ்தான வித்துவானாக விளங்கிய சர்க்கரைப் புலவரின் குமாரர்; மயூரகிரிக் கோவை இயற்றிய சாந்துப் புலவரின் தம்பியார் இவருடைய காலம் 18ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியும் 19ஆம் நூற்றாண்டின் முற்பகுதியுமாகும். இவர் 'திருச்செந்தூர்ப்பரணி' என வேறொரு பிரபந்தமும் இயற்றினாரென்று கூறுவர்.

இப்பிரபந்தத்தில் புகையிலையின் பெருமையும், புகையிலையினாற் செய்யப்படும் சுருட்டு, சாராயம், பொடி என்னும் பொருள்களைப் பற்றிய பாராட்டும் காணப்படும். புகையிலைக்குத் திருமாலும், சிவபெருமானும், பிரமதேவரும், தமிழும், முருகக் கடவுளும், சிலேடை வகையில் உவமை கூறப்படுகின்றனர். தமிழுக்கும் புகையிலைக்கும் சிலேடையமைந்த பகுதியில் கோவை, வளமடல், சந்தப்பா, பரணி என்பன குறிக்கப் பெறுகின்றன.

புகையிலைவரலாறாக இப்பிரபந்தத்திலே கூறப்படும் கற்பனைக் கதை ஒன்று உண்டு. ஒருமுறை சிவபெருமான், திருமால், பிரமதேவர் மூவர்க்குள்ளும் வந்த வழக்கை தேவர்கள சபையில் உரைத்தனர் அதில் பிரமதேவர் புகையிலையால் வெற்றிபெற்றதாக கூறுவர். அது இந்நூலாசிரியரால் கற்பனை நயமுறப் பாடல்களில் புகலப்பெறுகின்றன என்பதாக ஒரு கதைச் சுருக்கத்தைத் தந்துள்ளார் உ.வே.சா. புகையிலையின் சிறப்பைக் கூறும் பல கண்ணிகளை எடுத்தாண்டுள்ளார். புகையிலையால் செய்யப்பெறும் பொடியின் மகிமை,

''வாடைப் பொடிகதம்ப மானவெல்லா முன்னுடைய சாடிப் பொடிக்குச் சரியுண்டோ'' என்ற கண்ணியிலே உள்ளதைக் குறிப்பிட்டுள்ளார். மேலும் புகையிலையைப் பாராட்டியுள்ள தனிப்பாடல் ஒன்று வருமாறு: ''நாலெழுத்துப் பூடு நடுவே நரம்பிருக்கும் காலுந் தலையும் கடைச்சாதி - மேலாக ஒட்டு முதலெழுத்து மோதுமூன் றாமெழுத்தும் விட்டாற் பரமனுக்கு வீடு'' என்று கூறப்பெற்றுள்ள பழம்பாடலையும் சான்று காட்டி நிறுவுகிறார். மேலும் ஒருதனிப்பாடல், புகையிலையால் செய்யப்பெறும் பொடிபற்றிக் கூறும் செய்தியினை,

ஊசிக் கழகு முனைமழுங் காமை யுயர்ந்தபர
தேசிக் கடிகிந்திரிய மடக்க றெரிகலன் சேர்
வேசிக் கழகின்னிசைபல நூல்கற்ற வித்வசனர்
நாசிக் கழகு பொடியெனக் கூறுவர் நாவலரே

எனச் சுட்டியதோடு மேலும் சில தனிப்பாடல்களையும் நூலில் உள்ள கண்ணிகளையும் சான்று தந்து,

''இவற்றைப் போல வேறுசில செய்யுட்களும் உண்டு. அவை இப்போது கிடைக்கவில்லை'' எனக்கூறி,

இந்தச் சிறுபிரபந்தத்தைக் 'கலைமகள்' வாயிலாக வெளியிடுவதற்கு இடமளித்த ஸ்ரீமாள் ரா. நாராயணஸ்வாமி ஐயரவர் களுடைய அன்பு பாராட்டுதற்குரியது. இங்ஙனம், உ.வே.சாமிநாதையர், 'தியாகராஜவிலாசம்', திருவேட்டீசுவரன் பேட்டை, 14.8.39 என்று நிறைவு செய்துள்ளார்.

இம்முகவுரை மூலம் பல்வேறு சான்றுகளைத் தந்து புகையிலைச் சிறப்பு, தேவை போன்றவைபற்றி ஆசிரியர் செய்யுள்வடிவாகச் சொன்னதை முகவுரை படித்தாலே நூலின் சாரத்தை உணர்கின்ற அளவிற்குச் செய்திகளைச் செப்பமுறத்தந்து முகவுரைக்கு ஓர் இலக்கணம் வகுத்துள்ளார். புகையிலை விளையும் இடங்களாகக் காகேயம், யாழ்ப்பாணம், அழகன்குளம், பரத்தைவயல் என்பனவும், கானக் கறுப்பனென்னும் புகையிலைச் சாதியும் புலவரால் உணர்த்தப் பெறுகின்றன. எல்லாவற்றிலும் பரத்தை வயலில் விளையும் புகையிலையே சிறந்ததென்று இவர் கூறுகின்றார்.

''புகையிலைக்கு இவ்வளவு சிறப்புக்கூறும் இப் புலவருக்கு அது, 'தமிழ்போல் நாவிலே விளையாடியது' என்று கொள்வதிற் பிழையொன்றுமில்லை'' என்று உ.வே.சா. கூறியுள்ளார். இது புகையிலைப் பெயரால் அழகியநூல் ஒன்று உருவாகியுள்ளது. எனவே புகையிலையை 'தமிழ்போல' எனக் கூறலாம் என எண்ணியிருப்பது அவருடைய முகவுரை மூலம் தெளிவாகிறது. இச் செய்திகள் உ.வே.சா. முகவுரையின் சுருக்கமே.

5. வண்டு விடுதூது

கச்சி ஆனந்தருத்திரசேர் இயற்றிய ' வண்டுவிடுதூது எனும் இந்நூலின் முகவுரையில் 'உ' கணபதி துணை-முகவுரை-தேவாரம்-திருச்சிற்றம்பலம் எனத் தொடங்கி,

''தாயவன்காணுலகிற்குத் தன்னொப் பில்லாத்

தொடங்கும் பாடலைத் தந்து, தொடர்ந்துள்ளார் உ.வே.சா.

எகினமயில் கிள்ளை யெழிலியொட பூவை
சகிருயினெஞ் சந்தென்றல் வண்டு-தொகைபத்தை
வேறுவே றாகப்பிரித்து வித்தரித்து
மாலைகொண்டான் பூறிவா வென்ற தூது''

என்ற பிரபந்தத்திரட்டுப் பாடலாலும், இலக்கண விளக்கம் 874ஆம் சூத்திரத்தாலும் அதன் உரையாலும் அறிய முடிகிறது. தூதுப்பொருள் பத்து என்பதும் கலிவெண்பாவால் இயற்றப்பட வேண்டும் என்பதும் இதன்மூலம் உணரமுடியும்.

ஸ்ரீ காஞ்சிபுரத்தில் உள்ள சிவத் தலங்கள் பல; அவற்றுள் ஆனந்த ருத்திரசம் என்பது ஒன்று. அஃது உருத்திரர் நூற்றுப் பதின்மருள் (110) முதல்வராகிய ஆனந்த உருத்திரரால் பூசிக்கப் பெற்றது. அத்தலத்தில் கோவில் கொண்டிருக்கும் ஸ்ரீ ஆனந்த ருத்திரேசர் என்னும் மூர்த்தியின் திறத்தில், இந்தக் 'கச்சி ஆனந்தருத்திரேசர் வண்டு விடு தூது' என்னும் நூல் திருக்கைலாய பரம்பரைத் திருவாவடுதுறை ஆதீனத்து மகாவித்வான் ஸ்ரீகச்சியப்ப முனிவரால் இயற்றப்பெற்றறது.

ஆனந்த ருத்திரேசர் விஷயமாக இந்நூலையன்றி இந்நூலாசிரியர் 'பதிற்றுப் பத்தந்தாதி' ஒன்றும் 'கழிநெடில்' ஒன்றும் இயற்றியுள்ளார். மேலும், 1. விநாயக புராணம், 2. திருத்தணிகைப் புராணம் 3. திருத்தணிகையாற்றுப்படை, 4. திருத்தணிகைப் பதிற்றுப் பத்தந்தாதி 5. காஞ்சிபுராணத்தில் இரண்டாம் காண்டம் 6. ஆனந்த ருத்திரேசர் பதிற்றுப் பத்தந்தாதி 7. ஆனந்த ருத்திரேசர் கழிநெடில் 8. பிரமீசர் பதிற்றுப்பத்தந்தாதி 9. திருவானைக் காப்புராணம் 10. பூவளூர்ப் புராணம் 11. பேரூர்ப் புராணம் மற்றும் தனிப்பாடல்கள் பல இந்நூலாசிரியர் கச்சியப்ப முனிவரால் இயற்றப்பெற்றுள்ளன எனப் பட்டியளிட்டுள்ளார் உ.வே.சா.

கவிஞர் பெருமான், கவிராட்சஸன் என்று பெயர் பெற்றதனால் கச்சியப்ப முனிவரின் பெருமை விளங்கும். இஃது ஒரு சிறிய நூலாக இருப்பினும் இதனுள் பொதிந்துள்ள உயர்ந்த கருத்துகளும் சரித்திரங்களும் சொற்பொருட் பிரயோகங்களும் அணிவகைகளும் மற்றும் நடை நயமும் மிகப் பெரிய நூலில் அமைந்துள்ளன போலவே விளங்குகின்றன. ''கடுகைத் துளைத் தேழ் கடலைப் புகட்டிக் குறுகத் தரித்தது'' என்றால் இதற்கும் அமையும் என உ.வே.சா. பாராட்டியுள்ளமை இந்நூலின் சிறப்பை எடுத்துரைக்கிறது.

"இந்நூலில் உள்ள கண்ணிகள் 504. சங்கச் செய்யுட்கருத்துகளும் தேவாரம் முதலிய திருமுறைப் பிரயோகங்களும் ஆங்காங்கே அமைந்துள்ளன. சிவபெருமான் திருவிழாச் சிறப்பையும் பூசை முதலியவற்றையும் சைவா கம முறைக்கு ஏற்ப ஒழுங்கு பட அமைத்து விளக்கியுள்ளார். ஆனந்த ருத்திரேசர்-காஞ்சியிலுள்ள ஏனைய சிவத்தலங்களில் உள்ள மூர்த்திகளிற் சிறந்தவர் என்பதற்கும், வண்டு ஏனைய பொருள்களில் சிறந்ததென்பதற்கும் பல காரணங்களைக் கூறியுள்ள புலவர், சிவனைப் பூசித்தால் நன்மை பலவிளையும், பிழை பொறுத்து ஆட்கொண்டருள்வார் எனவும் அதற்குச் சான்றாகத் 'தக்கன்' முதலியோரைக் காட்டியும் தம் அடியார்களுக்குச் சிவன் உடலையும் உயிரையும் கொடுத்தருள்வார் என்று கூறிச் சிறப்பித்திருக்கும் கருத்துகளும் அவருடைய அறிவு வண்மையைப் புலப்படுத்தும்"

என உ,வே.சா. நிறுவியுள்ளார்.

"இந்நூலை ஆராய்ச்சி செய்வதற்கு, பெரியபுராணத்தில் உள்ள திருக்குறிப்புத் தொண்ட நாயனார் புராணமும் கந்தபுராணத் திலுள்ள திருநகரப் படலமும், ஸ்ரீ காஞ்சி ஏகாம்பரநாதருலாவும், பழைய காஞ்சிப்புராணமும் காஞ்சிக்கட்டளைக் கலித்துறைப் புராணமும், ஸ்ரீ சிவஞானயோகிகளும், இந்நூலாசிரியராகிய ஸ்ரீ கச்சியப்ப முனிவர் இயற்றிய காஞ்சிப்புராணம் முதலிய நூல்களும் உதவியாக இருந்தன" என உ.வே.சா. குறிப்பிட்டுள்ளமை உ.வே.சா அவர்களின் நூல் ஆராய்ச்சியும், நுண்மான் நுழைபுலப் பேரறிவும் நன்றிமறவாமையும் நன்கு வெளிப்படுகிறது. மேலும், "திருவாடுதுறையாதீனத்து மகாவித்வானும் என்னுடைய தமிழாசிரியருமான திரிசிரபுரம் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளை யவர்கள் இந்நூல் ஆசிரியர் ஸ்ரீ கச்சியப்பமுனிவரிடத்திலு, இவர் இயற்றிய நூல்களிலும் மிகுந்த ஈடுபாடு உடையவர்கள் ஸ்ரீ கச்சியப்ப முனிவரையே தம்முடைய வித்யா குருவாகவும் வழிபடு தெய்வமாகவும் எண்ணி ஒழுகி வந்தார்கள். "நூல்கள் இயற்றும் போதும், பாடஞ்சொல்லுகையில் பொருள் கூறும்பொழுதும் முட்டுப்பாடு நேர்ந்தால் இம்முனிவர் பிரானைத் தியானித்தால் அது நீங்கும்" என அவர்கள் சொல்ல உடன் கற்ற அன்பர்களும் நானும் கேட்டிருக்கிறோம்" என உ.வே.சா. தம் ஆசானை நினைவு கூர்கிறார்.

''இந்நூல் மூல மட்டும் ஸர்வ ஜித்து வருடம் பங்குனி மாதம் (1888 மார்ச்சு மாதம்) என்னால் அச்சிடப்பெற்றது. நீண்டகால விருப்பமான குறிப்புரை எழுதி இப்பதிப்பு வெளியிடப்பெறுகிறது. இந்நூலாசிரியரின் கருத்து இன்னதென்று அறிய இயலவில்லை. இந்நூலாசிரியர் தொடர்பாக இவர்மாணாக்கர் ஒருவரால் ''நெஞ்சுவிடுதூது' ஒன்றுண்டு. அதனள் இவர் இயற்றிய நூல்களைப் புலப்படுத்தும் பகுதி இந்நூலின் பின்னர் சேர்த்துப் பதிப்பிக்கப் பெற்றுள்ளது.

இந்நூற் பதிப்புக்குப் பயன்பட்ட மூலப் பிரதிகள்

1. திருவாவடுதுறையாதீனப் புத்தக சாலை ஏட்டுச்சுவடி 1
2. மேற்படி ஆதீனத்து மகாவித்வான் ஸ்ரீ மீனாட்சி சுந்தரம் பிள்ளையவர்கள் கடிதப்பிரதி 1
3. மதுரை இராமசாமிப் பிள்ளையென வழங்கும் திருஞான சம்பந்தப் பிள்ளையவர்கள் கடிதப் பிரதி 1
4. காஞ்சிபுரம் ஸ்ரீமான் தெய்வசிகாமணி முதலியாரவர்கள் தந்த ஏட்டுப் பிரதி 1
5. காஞ்சிபுரம் ஸ்ரீமான் கங்காதர முதலியாரவர்கள் ஏட்டுப் பிரதி 1

எனத் தொகுத்துரைத்துள்ளார் உ.வே.சா.

மேலும் 'திருவாவடுதுறை ஆதீனத்தின் 19ஆம் பட்டத்தின் ஆதீன கர்த்தராக எழுந்தருளியிருக்கும் ஸ்ரீலஸ்ரீ வைத்தியலிங்க தேசிகரவர்களின் பேருதவியால் இப்பதிப்பு வெளியிடப்பெற்றது. இந்த ஆதீனத்தின் சம்பந்தம் எனக்கு ஏற்பட்டு 60 வருடங் களாகின்றன. ஆரம்பம் முதல் இவ்வாதீனத்தின் ஆதரவு வரவரப் பெருகி வருதல் என் மனத்திற்கு ஊக்கத்தை விளைவிக்கிறது.

ஸ்ரீ கச்சியப்ப முனிவரியற்றிய பிரபந்தங்கள் எல்லா வற்றையும் ஒரு தொகுதியாகக் குறிப்புரை, நூலாசிரியர் சரித்திரம் முதலியவற்றுடன் வெளியிட எண்ணியுள்ளேன் அதனை நிறைவேற்றி வைக்கும் வண்ணம் தமிழ்த் தெய்வத்தை இறைஞ்சகிறேன்.

இந்நூலைப் பதிப்பிக்கும் போதும் ஆராயும் போதும் உடனிருந்து உதவியவர்கள் என்னுடைய சகோதரர் சிரஞ்சீவி வே. சுந்தரேச ஐயரும், சிரஞ்சீவி வித்வான் சு. கோதண்டராம ஐயரும், சிரஞ்சீவி வித்வான் வி.மு. சுப்ரமணிய ஐ- ரும், சிரஞ்சீவி

கி.வா. ஜகந்நாத ஐயரும் ஆவர்''. இங்ஙனம், வே.சாமிநாதையர், திருவேட்டீசுவரன் பேட்டை, 20.01.31 என நிறைவு செய்துள்ளார்.

இவரது தளரா முயற்சியும், 'தமிழ்த் தெய்வம்' எனத் தமிழன்னையை வணங்கும் உயர்நெஞ்சமும், தமிழ்ப் பற்றும் நன்றியுணர்வும் முகவுரை மூலமாகத் தெரிந்து தெளிய முடிகிறது.

6. தமிழ் விடுதூது

ஒவ்வொரு முகவுரையிலும் தெளிந்த சிந்தையும் தூது விளக்கச் சான்றுப் பாடல்களும், வடமொழி, அயல்மொழிச் சொற்கள் கலப்புத் தவிர்ப்பும் உ.வே.சா. அவர்களால் கடைப்பிடிக்கப் படிருப்பது தெரிகிறது. அவ்வகையில், ''மதுரைச் சொக்கநாதர் தமிழ் விடுதூது' எனும் இந்நூல் பதிப்பு முகவுரையில் 'உ' எனப் பிள்ளையார் சுழியிட்டு, முகவுரை, திருச்சிற்றம்பலம், திருவாலவாய்த் திருத்தாண்டகம் என எழுதி,

''வாயானை மனத்தானை மனத்துள் நின்ற
கருத்தானைக் கருத்தறிந்து முடிப்பான் தன்னைத். . .''

எனும் பாடலைக் குறிப்பிட்டுத் தொடங்கியுள்ளார். முந்தைய முகவுரைகளில் கூறியது போலவே 'தூது நூல்களின் இலக்கணத்தைச் சுருக்கமாகக் கூறியுள்ளார். இந்நூல் கலிவெண்பாவால் இயற்றப்படவேண்டும் என்ற இலக்கணம் பொதிந்த,

''பயிறருங் கலிவெண் பாவி னாலே
உயர்திணைப் பொருளையும் அஃறிணைப் பொருளையும்
சந்தியில் விடுத்தல் முந்துறு தூதெனப்
பாட்டியற் புலவர் நாட்டினர் தெளிந்தே ''

(இ.வி. சூ. 874) என்ற பாடலை மேற்கோள் காட்டியுள்ளார். மேலும் பல்வேறு தூது நூற்சான்றுகளைக் காட்டியுள்ள உ.வே.சா., ''தமிழ் விடுதூதென்பது, மதுரைச் சொக்கநாதக் கடவுள் பாற்காதல் கொண்ட ஆரு தலைவி, விரகத்தால் துன்புற்றுத் தமிழை அவர்பால் தூதுவிடுத்ததாக இயற்றப்பெற்றுள்ளது. இது புறத்திணைத் துறைகளுள் கடவுண்மாட்டு மானிடப் பெண்டிர் நயந்த பக்கத்தின் பாற்படும்.

''இருந்தமிழே உன்னால் இருந்தேன் இமையோர்
விருந்தமிழ்தம் என்றாலும் வேண்டேன்''

என்ற இந்நூல் அடிகள் தலைவி வாயிலாகக் கூறும் தமிழ்விருது ஆசிரியரின் தமிழ்ப்பற்று போற்றற்குரியது. ''இதனை இயற்றிய

ஆசிரியர் இன்னாரென்று விளங்கவில்லை. ஆயினும் தமிழின்பால் ஆழ்ந்த புலமையும், பற்றும் பரந்த கேள்வி ஞானமும், சிவபெருமானிடத்தும் நாயன்மார்களிடத்தும் அன்பு கொண்டவ ரென்பதும் ஸ்ரீ சோமசுந்தரக் கடவுளின் திருவிளையாடல்களில் ஈடுபட்டு மனம் உருகுபவர் என்பதும், வடமொழியில் புலமை பெற்றவரென்பதும் இந்நூலை ஆராயுமிடத்து விளங்குகிறது'' என உ.வே.சா. போற்றியுள்ளார்.

இந்நூலில் 268 கண்ணிகள் உள்ளன. இந்நூலின் முதன் நான்கு கண்ணிகளில் சிவபெருமான், தடாதகைப் பிராட்டியார், விநாயகக் கடவுள், முருகவேள் பற்றியும் 5ஆம் கண்ணி முதலியவற்றில் சைவசமய ஆசாரியார்கள் நால்வரையும் 9ஆம் கண்ணி முதலியவற்றில் அகத்தியர், தொல்காப்பியர் முதலா னோரையும் 20ஆம் கண்ணி முதல் தமிழை அரசாக உருவகஞ் செய்து புகழ்ந்தும், '28ம் கண்ணி முதல் செயல், பொருள், யாப்பு அணி முதலியனவற்றை உருவகித்தும், 30ஆம் கண்ணி முதல் இசை, நாடகம் என ஒன்பது சுவைகளையும் பிள்ளைகளாக உருவகித்தும் பல நிலைகளில் சிறப்புறும் வகையில் சிலேடைகளாகவும் உருவகங்களாகவும் ஆசிரியர் அமைத்துள்ளார்.

50ஆம் ஆண்டு முதல் தேவார, திருவாசகங்கள், பிற திருமுறைகள் தமிழ் இலக்கியங்கள் யாவும் தமிழரசின் ''வீரயஞ் செய்து வினையொழிய வேராச காரியஞ் செய்யுங் கவிதையே'' என்கிறார். 79ஆம் கண்ணிமுதல் தமிழின் பாக்கள், பாவின் உறுப்புகள் பற்றியும் 85 முதுல் பொருட் செல்வத்திலும் தமிழ் உயர்ந்தது என்பதை தமிழ் நூல்களைக் கொண்டும் விளக்கி யுள்ளார். 91 முதல் தெய்வங்களுக்கும் தமிழ் நாட்டம் உண்டு என்பதை விளக்க சிவபெருமான், கலைமகள், திருமால், முருகவேள் பற்றிய அரிய நிகழ்வுகள் உணர்த்தப் பெற்றுள்ளன. இவ்வாறாக 96ஆம் கண்ணி முதல் தமிழ்ப் பெருமையும், தூது செல்லற்குத் தகுதியும், இலக்கிய, இலக்கண வளமும், பெருமை யுடன் கூறி, பின் ''இந்தமொழியெல்லாந் திருச் செவியிலேறும் படியுரைக்க உன்போல் எவர்க்கு வாய்க்கும்?'' எனத் தமிழைப் புகழ்ந்து ''சொக்கநாதக் கடவுள் நின்சொற்படியே வந்து எனக்கு மகிழ்வையளிக்கும் வண்ணம் நீ சென்று தூது சொல்லி வருவாயாக'' என்று ஆசிரியர் பூர்த்தி செய்கிறார் எனச் சுருக்க விளக்கமாக உ.வே.சா. தந்த முகவுரை ஆய்வெல்லை கருதிச் சுருக்கித் தரப்பெற்றுள்ளது.

“இந்நூலின் மூலப்பிரதி எனக்குக் கிடைத்தது ஒன்றே யான் பெற்ற பேறு. நான் கும்பகோணம் கல்லூரியில் வேலையில் இருந்தபோது, மாணவராக இருந்த ம-ளி-ளி-ஸ்ரீ சாம்பசிவ செட்டியார் (அட்வகேட்டாக இருப்பவர்கள்) 1900ஆம் ஆண்டு மே மாதம் 2 என்னிடம் சேர்ப்பித்தார்கள். அந்நூல்களுள் ஒரு பழஞ்சுவடியின் இறுதியில் இது காணப்பட்டது. மேற்படி செட்டியார் அவர்கள், நூல் சொந்தக்காரர் இருவரின் அன்பு என் மனதிற் குடிகொண்டிருக்கின்றன. (இவ்வரலாற்றின் விரிவை ‘இன்னும் அறியேன்’ நல்லுரைக் கோவை-3-ஆம்பாகம் எனும கட்டுரையில் காணலாம்) எனக் குறிப்பிட்டுள்ளார் உ.வே.சா. ‘இது போன்று வேறு சுவடிப் பிரதிகளும் கிடைக்கவில்லை. இது சிறந்த பொருள் நயமிக்கது என்றறிந்து பதிப்பித்தேன். அந்த ஏட்டுச் சுவடியில் “பச்சைமுத்து உபாத்தியாயர் விகிதம் சீரணமாயிருந்து, கரவருடம் மாசி மாதம் 6ஆம் தேதி புதவாரமும் சதுர்த்தியும் கூடிய திருவோண நட்சத்திரத்தில் மேற்படியார் பேரன் சுந்தரேசன் விகிதம் நிறைவேறிற்று” என்பது எழுதப்பட்டுள்ளது. திருப்பனந்தாட் காசிமடாலயத் தலைவர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி, ஸ்வாமி நாதஸ்வாமியவர்கள் தமிழின் பால்கொண்ட பற்றாலும், இந்நூலின் சிறப்பு அறிந்தாலும் தம் வழிபடுதெய்வமாகிய ஸ்ரீ சொக்கநாதப் பெருமான் கருணையை இந்நூல் புலப்படுத்தலையும் அறிந்து 1930ல் முதல் முதலில் பதிப்பிக்கச் செய்தார். நான் சிறிதும் பொருட்கவலை அடையாதபடி உதவி புரிந்தார்கள் அவர்களுக்கு என் மனமார்ந்த நன்றியைச் செலுத்துகிறேன்.

இதன் இரண்டாம் பதிப்பு 1932ஆம் வருடம் வெளியாயிற்று. எப்போதும் போல் உடனிருந்து ஒப்புநோக்கி உதவிகளைச் செய்தவர்கள் சென்னை, கிறிஸ்டியன் காலேஜ், ஹைஸ்கூல் தமிழ்ப் பண்டிதர் சிரஞ்சீவி வித்வான் வி.மு. சுப்பிரமணிய ஐயரும், ‘கலைமகள்’ ஆசிரியர் சிரஞ்சீவி வித்வான் கி.வா. ஜகந்நாத ஐயரும் ஆவர்”, என நிறைவு செய்து இங்ஙனம் வே.சாமிநாதையர், திருவேட்டீசுவரன் பேட்டை 24.4.41 எனப் பூர்த்தி செய்துள்ளார்.

மேற்கண்ட யாவும் உ.வே.சா அவர்கள் தமிழ் மீது கொண்டபற்றையும் நன்றியுணர்வையும் வெள்ளிடை மலையாகத் தெளிவுறுத்துகின்றன.

இந்நூலின் இறுதியில் பதிப்பிக்கப்பெற்றுள்ள திருவாவடுதுறை ஆதீனத்து ஸ்ரீ சுப்பிரமணிய தேசிகர் இயற்றிய

'நெஞ்சுவிடுதூது' பதிப்பு நூலுக்கு ஏனோ முகவுரை வழங்கப் பெறவில்லை. பிற பதிப்புகளில் வழங்கப்பெற்றிருக்கலாம்.

நிறைவுரை

தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாதையர் அவர்கள் தமிழுக்கும், தமிழருக்கும் கிடைத்த மணிமகுடம். அவரில்லையேல் தமிழிலக்கியங்கள் பல அழிந்து ஒழிந்திருக்கும். மேற்கண்ட தூதுநூல்களின் முகவுரைகள் மூலம் உ.வே.சா. அவர்களின் தளராத தமிழ்ப்பற்று, தளராத தமிழ்நெஞ்சம், ஓயாத உழைப்பு, உற்று நோக்கும் உயராய்வு, தமிழையே குடும்பமாகப் போற்றிய தகைமை, நன்றி மறவாமை, தகுதியுடையோரைப் போற்றும் மாண்பு, அகந்தையின்மை, தமிழ் நுண்ணறிவு, நினைவாற்றல், கூறவந்ததைக் குறையின்றிக் கூறல், இறைபக்தி என அத்தனைக் குணங்களையும் அறிதல் மட்டுமன்றி, நூலைப் படிக்க வேண்டுமென்கிற வேட்கையையும், நூலில் உள்ள கருத்துகளை சுருங்கக் கூறிப் புரிய வைக்கும் திண்ணமையையும், உண்மையையும் தமிழ்த்தாத்தா உ.வே.சா. அவர்களின் தமிழ் வண்மையையும், தமிழின் தண்மையையும் இம் முகவுரைகள் கட்டியம் கூறுகின்றன.

“மீனாட்சியம்மை குறம்” - சித்தர் பதிப்பு

திரு. தினகரன்

முன்னுரை

சிற்றிலக்கிய யாப்பிலக்கணத்தின்படி ஒரு குறத்தி குறி கூறுவதாக அமையும் பிரபந்தம் குறமென்று கூறப்படும். “இறப்பு நிகழ்வு, எதிர்வு என்னும் முக்காலத்தையும் உரைப்பதே குறத்திப்பாட்டு” என்பது பன்னிரு பாட்டியற் சூத்திரமாகும். அருளாளரும் மகாசித்தருமான குமரகுருபர சுவாமிகள் இந்தப் பிரபந்த இலக்கணத்திற்கிணங்க “மீனாட்சியம்மை குறம்” என்னும் இச்சிற்றிலக்கியப் பனுவலைச் சமைத்திருக்கிறார். இது இசைப் பாட்டோடு இயைந்து காணப்படுகிறது. இச்சிற்றிலக்கியத்தின் நூலமைப்பு, நகரச்சிறப்பு, மலைவளம், உவமை நயம், மீனாட்சி சொக்கநாதர் தம் அருட்சிறப்பு பாடலில் மண்டிக் கிடக்கும் சோதிடக் கூறுகள், இசை நயம், விருந்தோம்பல் சிறப்பு, சொல்மாட்சி, திருத்தலச் செய்திகள் ஆகியவற்றை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

சுவடி அமைப்பு

37x4 செ.மீ. நீள அகலமுள்ள இச்சுவடி, கல்வெட்டு மற்றும் சுவடி ஆய்வாளர் திருச்செந்தூர், முன்னவர் த. தவசிமுத்துவிடம் உள்ளது. மிகப் பழமையான இச்சுவடி மிகச்சிறிய அளவில் பூச்சி அரிப்புக்கு ஆளாகியிருந்தது. சுவடி, புறஅமைதி, அகஅமைதி, உரிய எண்கள், குறியீடுகள், எழுத்தமைதி, உட்தலைப்பு அமைதி ஆகிய சிறப்புகளோடு அமைந்துள்ளது. ஆயினும், உரையாசிரியர் பெயர் காணப்படவில்லை. ஏட்டின் பாடல்கள் அறுசீர்க்கழி நெடிலடி ஆசிரிய விருத்தம், சிந்து, கொச்சகக் கலிப்பா, எண்சீர்க் கழிநெடிலடி ஆசிரிய விருத்தம் நடையில் அமைந்திருந்தன. பதினைந்தாவது பாடலில்,

“மந்த மாருதம் வளரும் மலை எங்கள் மலையே . . . .
கந்தவேவள் விளையாடும் மலை எங்கள் மலையே
கனக நவவமணி விளையும் மலை எங்கள் மலையே . . .

இடையிடையே ஐந்து வரிகள் செல்லரித்துப்போயிருந்தன. உரையாசிரியர் ஒவ்வொரு அடியையும் யாப்பிலக்கண மரபுக்கேற்ப சீர்பிரித்து, வரியாய்ந்து செப்பனிட்டு வகைப்படுத்தியுள்ள பாங்கு வாழ்த்துதற்குரியது, ஏட்டின் செய்தி கடுகளவும் திரிபு இன்றி அமைந்துள்ளது.

3. ஆசிரியர் குறிப்பு

ஊமையாக இருந்து, திருச்செந்திலாதிபன் பேரருட் கருணையால் ஐந்து வயதில் வாய் பேசவும், கந்தர் கலிவெண்பா, மீனாட்சியம்மை குறம் போன்ற கணக்கற்ற இலக்கியச் செல்வங்களை எடுத்து வீசவும் ஒருவரால் இயலுமெனில் அவர் யாராக இருக்கமுடியும்? அவர்தான் மகாசித்தரான குமரகுருபர சுவாமிகளாவா. குமரகுருபரர் துறவறம் பூண்டு புனித வழிச்செலவினை மேற்கொள்ளும்போது, மதுரை மீனாட்சியம்மை அந்நாளில் மதுரையை ஆண்டு வந்த திருமலை நாயக்கர் கனவில தோன்றி ''குமரகுருபரரை என்மீது பிள்ளைத்தமிழ் பாடச்சொல்க'' என்று பணித்தருளினார். அம்மையின் ஆணைவழியே திருமாலை மன்னரும் அருள்மிகு மீனாட்சியம்மை ஆலயத்திற்கு அவரை அழைத்து வந்து பிள்ளைத்தமிழ் பாடச் சொன்னார். நாயக்கரின் வேண்டுகோளை ஏற்று சித்தரும் பிள்ளைத்தமிழ் பாடினார்.

வருகைப்பருவத்தில் ''தொடுக்கும் கடவுள். . . '' என்ற பாடலைப் பாடி பொருள் கூறிக்கொண்டிருக்கும்போது, மீனாட்சியம்மையே சிறுபெண்ணாக வந்து மன்னர் மடியில் அமர்ந்து, செவிமடுத்து இன்பமுற்று, மன்னர் கழுத்திற்கிடந்த முத்து மாலையைக் கழற்றி குமரகுருபரர் கழுத்திலிட்டு மறைந்தருளினார் என்பர். தென்திசைத் திருச்செந்தூர் முதல் வடநாட்டுக் காசிவரை இவர் கால்பட்டுச் சிறந்தன; காவிரியும் கங்கையும் இச்சித்தரின் வாய்பட்டுச் சிறந்தன. காசியில் திருமடம் அமைக்க எண்ணி டில்லி சென்று பாதுசாவைக் காணச்சென்றார். மன்னருக்கோ தமிழ்மொழி தெரியாது. எனவே கலைமகளை வேண்டி ''சகலகலாவல்லி மாலை'' என்றும் பாடற் தொகுப்பைப் பாடி இந்திமொழியில் இணையற்ற புலமை பெற்றார். முகலாய மன்னர் முன் வெங்கனல் இருப்பைத் தம் இரு கைகளால் தூக்கி சித்துவிளையாடிக் காட்டினார். கருடன் பறவாத காசிமாநகரில் கருடனை வரவழைத்து அது வட்டமிட்டுக் காட்டிய இடத்தை மன்னரிடம் மானியமாகப் பெற்றுத் தமிழ் வளர அங்கே ''குமாரசாமி மடம்'' என்ற ஒரு மடத்தை அமைத்து அழியாப் புகழ்பெற்றார்.

4. நூலமைப்பு

பாட்டுடைத் தலைவனைக் காமுற்ற தலைவி ஒருத்தியைக் கண்டு குறத்தி குறி கூறுவது மரபாகும். இங்குப் பாட்டுடைத் தலைவி மீனாட்சியம்மை, சொக்கலிங்கப் பெருமாள் மேல் மையல் கொண்ட தலைவியாகப் பேசப்படுகின்றாள். மீனாட்சியம்மையின் திருப்பெயரும், புகழும் சார்த்து வரியாற் கூறப்படுகின்றன. காப்பு நீங்கலாக மொத்தம் ஐம்பத்தொன்று பாடல்கள் காணப்படுகின்றன.

5. மதுரை நகரச் சிறப்பு

காப்புச் செய்யுளின் தொடக்கமே மதுரை நகரத்தைப் போற்றுவதாக வருகிறது. ''கார் கொண்ட பொழில் மதுரைக் கர்ப்பூர வல்லி மணங்கமழும்'' என்ற வரிகள் மேகம் தவழ்கின்ற சோலைகளால் சூழப்பெற்ற மதுரையின் மேன்மையைப் போற்றுகின்றன. மலர்கள் பூத்துக்குலுங்கும் சோலைகளைக் கொண்ட மதுரை என்பதனை ''பூ மருவிய பொழில் திகழ் மதுராபுரி மருவிய'' என்னும் வரியும் செந்நெல் தரும் முத்தினாலும், கரும்பில் விளை முத்தினாலும் ஒளிபெற்று விளங்கும் மதுரை என்பதனை ''செந்நெல் முத்தும் கன்னல் முத்தும் ஒளிதிகழ் மதுரை'' என்ற வரியும் புலப்படுத்துகின்றன.

6. பொதிகை மலைவளமும், சித்தரின் ஒருமைப்பாட்டு உணர்வும்

தென்னாட்டின் பொதிகை மலை அகத்தியர் வாழும் அழகான இடமாகும். அதன் பெருமையும் வளமும் இந்நூலின்கண் பல இடங்களில் பேசப்படுகின்றன.

திங்கள் முடிசூடு மலை தென்றல் விளையாடுமலை
தங்கு புயல் சூழ்மலை
தமிழ் முனிவன் வாழுமலை (மீ.குறம்)

என்ற அடிகள் பொதிகையின் பெருமையைப் பூரிப்புடன் மொழி கின்றன. அழகும் இனிமையுங் கொண்ட தமிழ் இளந்தென்றலாய் இளங்குழவியாகத் தவழ்ந்து நடைபோடும் மலை பொதிகை மலை என்ற ஆசிரியரது வர்ணனை அவரது தன்னிரகற்றற தமிழ்ப் பற்றையும் பொதிகை மலையின் சிறப்பையும் ஒரு சேர உணர்த்துகிறது. ''வடமலை தென்கலை பயிலும் மலை எங்கள் மலையே'' என்ற அடி வடமொழியான சமஸ்கிருதமும், தமிழும் ஒருசேர பேணப்படும் ஒருமைப்பாட்டைக் காட்டுகிறது.

குமரகுருபரர் சீவராசிகளின் ஒருமைப்பாட்டை வளர்க்க எண்ணிய ஓர் உத்தமச் சித்தர் என்பதனை,

சிங்கமும் வெங்களிறுமுடன்
விளையாடும் ஒருபால்
சினப்புலியும் மடப்பிணையும்
திளைத்திடும் அங்கொருபால்
வெங்கரடி மரையினொடும் விளையாடும் ஒருபால்
விடஅரவும் மடமயிலும் விருந்தயரும் ஒருபால்
(மீ.குறம். பாடல் 16)

என்ற வரிகள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெள்ளத்தெளிவாக உணர்த்துகின்றன.

மேலும், குறவன், குறத்தியரின் வாழ்க்கை நிலையையும், பொதிகையின் வளத்தையும் கீழ்க்கண்ட வரிகள் தெளிவுபடுத்து கின்றன.

பழம் பிழிந்த கொழும் சாறும் தேற்றும் வாய் மடுப்போம்
பசுந்தழையும் மரவுரியும் இசைந்திடவே உடுப்போம்
செலுந்திணையும் நறுந்தேனும் விருந்தருந்தக்
கொடுப்போம்.
சினவேங்கைப் புலித்தோலின் பாயலின்கண் படுப்போம்''
(மீ.குறம் பாடல் 19)

7. சரித்திரச் செய்திக்குறிப்பு

குறத்தி தம்மை அறிமுகப்படுத்தும் பாங்கில் பல வரலாற்றுச் செய்திகளை வெளிப்படுத்துகிறாள். ''கரிகாற் சோழன் வடதிசை சென்றபோது இமயமலையில் தன் செண்டால் அடித்த அடையாளம் இமயமலையில் இருக்கும். அம்மலையில் மீன் இலட்சணையைப் பொறித்து ஆட்சி புரிந்திடும் பாண்டியன் பயந்த அங்கயற்கண்ணியின் திருவடிகளை நெஞ்சிற்கொண்டு வாழும் அகத்திய முனிவர் வாழும் மலை எங்கள் மலை'' என்கிறாள்.

''செண்டிருக்கும் வடவரையில் சேலிருக்கும்
அரசருக்கும் தென்னர் ஈன்ற
கண்டிருக்கும் மதுரமொழிக் கனியிருக்கும்
துவரிதழ் அங்கயற்கண் பாவை
வண்டிருக்கும் நறைக்கடல் மலரிருக்கும்
பரிபுரத்தாள் மனத்துள் வைத்துக்

கொண்டிருக்கும் தமிழ்முனைவன் குடியிருக்கும்
பொதியமலைக் குறத்தி தானே'' (மீ.குறம் பாடல் 3)

8. புராணச் செய்திகள்

திருவிளையாடற் புராணம் தடாதகைப்பிராட்டியாகிய மதுரை மீனாட்சி திருமணத்திறகு முன் திக்விஜயம் செய்த செய்தியைக் கூறுகிறது.

அன்னை பின்னை நீ இரங்கல்யான்போய்
திசைகளும் பெருநீர் வெற்பும்
என்னவன் கொற்றம் நாட்டி மீள்குவன் (தி.வி.பு.)

திக்கயங்கள் புறங்கொடுப்பத்
திசையெட்டும் திறைகொண்ட
கைக்கயத்தை மேற்கொண்டாள்
பேரைச் சொல்லாய் பாடநான் (மீ. குறம்)

மேலும் மன்மதன் தவமிருந்த பரமசிவன் மீது ஐந்து கணைகளை விடுத்து மீன் கொடி கொண்ட மீனாட்சி மீது மையலுறச் செய்தான் என்ற புராணச் செய்தியை,

ஆன் ஏற்றுங்க கொடிய யானை
ஐங்கணையான் வென்றிட அம்
மீன் ஏற்றின் கொடியுயர்த்தாள்
பேரைச் சொல்லாய் பாட நான்'' (மீ.குறம். பா. 38)

என்ற பாடலின் வழி குமரகுருபரர் விளக்குகிறார்.

9. உவமை நயம்

உவமை இல்லாத பாடல்
ஒன்றுக்குதவாத தேடல்

என்ற புலவர்கள் கூறுவர். உவமை நயம் செய்யுளுக்குச் செறிவூட்டத்தக்கதாகும். குமரகுருபரர் தமது நான்காவது பாடலை உவமை நலம்பட அமைத்துள்ளார்.

மங்கை குங்குமக் கொங்கை பங்கயச்
செங்கை அங்கயற் கண்ணினாய் மறை பண்ணினாள்
பங்கனைக்கழல் அங்கனைச் சொக்க
லிங்கனைக் கூடி மேவுவாய்
கொல்லிப் பாவையே '' (மீ.குறம்.பா.4)

கருத்து

"கொல்லிப் பாவையைப் போன்றவளே! (சேலம் மாவட்டம், கொல்லிமலையில் இந்தப் பாவை உள்ளது. இது காண்போரைக் கவரும் வண்ணம் கவினுறு தோற்றங்கொண்டது என்பார்கள்) செஞ்சாந்து போல் (செஞ்சந்தனம்) உன் கொங்கைகள் விளங்குகின்றன. உன் கரங்கள் தாமரைப்போல் உள்ளன. விழிகள் கயல் மீனைப் போன்றது. நான்கு வேதங்களும் போற்றும் உன்னைத் தம் இடம் பாகத்தில் கொண்டு சுழலும் சொக்கேசப் பெருமானைக் கூடி நீ இன்புறுவாய்"

அன்னம் பயிலும் பொழிற்கூடல்
அலறங் கூந்தல் பிடியாண்ட
பொன்னங் குடுமித் தடஞ்சாரல்
பொதிய மலையென் மலையம்மே" (மீ.குறம்.பா. 14)

எனும் பாடல் "அன்னம் நடைபயின்றிடும் சோலைகளையுடைய மதுரையில் கருமணல் அன்ன அழகான கூந்தலை உடைய பிடிபோன்ற மீனாட்சியம்மை ஆட்சி நடத்திடும் பொன் போற் அழகிய மகடுகளையும், அகன்று விரிந்து பரந்த சாரல்களையும் உடையது எங்கள் பொதிய மலையாம்" என்ற கருத்தை உணர்த்துகிறது. இச்செய்யுளில் பயின்றுவரும் உவமை நயம் நம்மை வியக்கவைக்கிறது.

10. யாதும் ஊரே ! என்னும் மனப்பாங்கு

யாதும் ஊரே
யாவரும் கேளிர்

என்று கூறிப் பரந்துப்பட்ட இந்த நிலவுலக மக்கள் ஒற்றுமைக்கு வழிவகுத்தார். சங்கத்தமிழ் புலவர் கணியன் பூங்குன்றனார் அவரைப்போல் குமரகுருபரருடைய உயர்ந்த குறிக்கோளை மக்களுக்கு எடுத்தியம்புகிறார்.

அங்கயற்கண் ஆண்ட தமிழ்ப்
பாண்டி நன்னாடும் பிறநாடும்
என் நாடதாகக் காடுமலையும் திரிந்து (மீ.குறம்.பா.21)

குறத்தி பாண்டி நாட்டையும், பிற நாடுகளையும் தம் நாடாகக் கருதி காடும் மலையும் அலைந்து திரிந்து குறிகூறும் தன்மையை புலப்படுத்தும் நிலை சிந்திக்கத்தக்கது. மனிதர்கள் பகுத்தறிவு

உடையவர்கள். ஆனால் ஆறாவது அறிவாகிய நுண்மாண் நுழைபுலம் அற்ற சீவராசிகள் கூட ஒற்றுமையாக நடக்கும் ஒரு உயர்ந்த நிலையைக் குமரகுருபரர் செப்புகிறார்.

புல்வாயின் பார்வையை
வெம்புலிப் பார்வை இணங்கும்
புதுத்தினை கல்லூரற் பாறை
முன்றில் தொறும் உணங்கும்
கல்லிடரில் வரிவேங்கை கடமானோடு உறங்கும்
கருமையில் வெள்ளருவி
கறங்கி வழிந்து இறங்கும்
சில்வலையும் பல்வாரும் முன் இறப்பில் தூங்கும்
சிறுதுடியும் பெருமுரசும் திசைதொறும் நின்றேங்கும்
கொல்லையின் மான்பிணையும் இளம்பிடியும்
விளையாடும்
குறித்தி எங்கள் குறச்சாதி
குடியிருப்பது அம்மே (மீ. குறம். பா. 19)

புல்வாய் என்னும் மானின பார்வையோடு வெம்புலியின் பார்வை இணங்கி இருப்பதும், புலி காட்டு மானோடு சேர்ந்து உறங்குவதும் வீட்டின் பின்புறத்தில் பெண்மானும், இளைய பிடியும் சேர்ந்து விளையாடுவதும் முரணான ஒன்றாகும். எனினும் அது சீவஒற்றுமையை வெளிக்கொண்டும் சீரிய செய்யுளாகும்.

11. தற்குறிப்பேற்ற அணி

இயல்பாக நடக்கும் ஒரு நிகழ்வில் கவிஞர் தம் கற்பனையை ஏற்றிக்கூறுவது தற்குறிப்பேற்ற அணி. திருமகள் திருமால் மார்பில் உறைவதும், கலைமகள் நான்முகனின் நாவில் இருப்பதும் இந்திரனின் தோளை இந்திராணி அணைவாள் என்பதும் இயல்பான புராணச் செய்தி. இவையெல்லாம் நடக்கு மெனத் தமது மூதாதையர்கள் குறிகூறியதாகவும், அவையெல்லாம் அப்படியே நடந்ததாகவும் குறத்தி கூறுவது தற்குறிப்பேற்ற அணியாகும்.

12. குறிகூறுதலும், நிமித்தம் பார்த்தலும் - சோதிடக்கூறுகள்

பதினெண்கீழ்க்கணக்கு நூல்களில் ஒன்றாகிய நாலடியாரில் 'சோதிடம்' என்ற சொல் காணப்படுகிறது. இவ்விலக்கியத்தில்தான் இச்சொல் முதன்முதலில் காணப்படு

கிறது. கோள்கள் ஒளிமிக்கவையாக இருப்பதாலும், ஒவ்வொரு கோலும் ஒரு வண்ணத்தைப் பெற்றிருப்பதாலும் அதன் ஒளியின் அடிப்படையில் இச்சொல் பிறந்திருக்க வேண்டுமென வடமொழியாளர் கருதுகின்றனர். சோதி என்னும் சொல்லின் அடியாகச் சோதிடம் என்ற சொல் தோன்றியது எனக் கொள்ளலாம். கோள்கள், விண்மீன்கள் இயக்கத்தின் வழி உலகில் பருவ மாறுபாடுகள் மழை, பனி, புயல் போன்ற இயற்கை மாற்றங்கள் உண்டாகின்றன. இந்தக் காலமாற்றங்களை அறிந்து கொள்வதற் காகவே சோதிடக்கலை தோன்றியதாகக் கூறுவர். இவ்வாறு சோதிடக்கலை கால மாற்றத்தையும் கூறுவதால் அக்கலைக்கு ''காலக்கணியம்'' என்ற பெயர் ஏற்பட்டது. இரட்டைக் காப்பியங் களான சிலப்பதிகாரமும், மணிமேகலையும் 'காலக்கணிதம்' என்ற பெயரை ''ஆயுள்வேதருங் காலக்கணிதரும்'' ''மாலைக்காரமுங் காலக்கணிதரும்'' என்ற தொடர்கள் வழி குறிப்பிடுகின்றன. (சிலப். 5: 44 & மணி. 28 கச்சிமாநகர் புக்ககாதை 40)

மீனாட்சியம்மை குறத்திலும் நிமித்தம் பார்த்தல், குறிச் சொல்லுதல், குறி சொல்லும் முன் செய்யப்படும் பூசை, அங்க சாத்திரம், கைரேகை சாத்திரம் கோப்ற பல சோதிடக் கூறுகள் மலிந்து கிடக்கின்றன.

நம்பிக்கைகளும் ஒருவகை நிமித்தங்கள் ஆகும். மனிதன் ஆற்றப்புகும் செயல்களுக்கும், இயற்கையில் நிகழும் நிகழ்வு களுக்கும் ஒருவிதத் தொடர்பு இருப்பதாக மனித மனம் கற்பித்துக் கொண்ட நிலையில் நிமித்தக்கூறுகள் உருவாகத்தொடங்கின. தொடர்ந்து நிகழ்ந்த நிகழ்ச்சிகளோடு அவ்வியற்கை நிகழ்வுகள் இயைத்து நோக்கப்பட்ட நிலையில் அவை நிமித்தங்களாக நிலைபெற்றன. தலைவனைப் பிரிந்த தலைவி துயறுரும்போது அவன் வருவானோ அல்லனோ என்பதைக் குறிப்பாக்கும் ஒரு முறையே ஆழியிழைத்தல் இதனைக் கூடலிழைத்தல் என்பர்.

வீங்கிழை நெகிழ விம்மி - யிங்கே
ஏறிகட் பேதறு வாய் கோடிட்டுச்
சுவர்வாய் பற்றுநின் படர்சேணிங்க
வருவேமென்ற பருவ முதுக்காண் (குறுந்தொகை)

என்று தலைவி, தலைவன் வரவைக் கோடிட்டுக் காண்பதாக இலக்கியம் காட்டுகிறது.

செய்குறி ஆரி வைகறோறெண்ணி
எழுதுசுவர் நனைந்த அழுதுவார்
மழைக்கண் (Tamil Lexilon, Vol. IV.P.2254)

என்று கழிவரைதலை அகப்பாடல் காட்டுகிறது.

பொரிப்புறப் பல்லி சினை ஈன்ற புன்னை
வரிப்புறுவார் மணல்மேல் ஏறி, தெரிப்புறத்
தாழ்கடல் தண் சேர்ப்பன் தார் அகலம் நல்குமேல்
ஆழியால் காணாமே யாம் (பாடல் 43:1-4)

என ஐந்திணை ஐம்பது ஆழியிழைத்தலைக் கூறுகின்றது.

மேலும் மாந்தர் எதிர்ப்படுதல் (நல்லவர்கள், கெட்டவர்கள்) பயணத் தொடக்கத்தின்போது பூனை குறுக்கிடுதல், கண்துடித்தல் போன்றவையும் செயலைப் பாதிக்குமென மக்கள் நம்புகின்றன. கண் இமைத்தல் என்பது இயல்பான ஒரு நிகழ்ச்சி, ஆனால் கண்ணிமை துடித்தல் எப்போதேனும் நிகழ்வது பெண்களுக்கு இடக்கண் துடித்தல் நன்மையைத் தரும். வலக்கண் துடித்தல் தீமையைத்தரும் என்ற மக்கள் நம்பிக்கையை இலக்கியங்கள் குறிக்கின்றன. பிரிவுத்துன்பத்தில் உழலும் தலைவிக்கு ஆறுதல் கூறும் தோழி,

''இடக்கண் துடிக்கின்றது தலைவன் வருவது உறுதி'' என்று நிமித்தங்கூறி ஆற்றுவிக்கின்றமையை,

இணை நலமுடைய கானஞ் சென்றோர்
புனைநலம் வாடுநரல்லா மனைவயிற்
பல்லியும் பாங்கொத் திகைத்தன்
நல்லொழி லுண்கணு மாடுமாலிடனே (கலி, பா.11:19-22)

எனும் கலித்தொகைப்பாடல் காட்டும்.

மாதவிலக்குப் பிரிவும், கண்ணகிக்குக் கூடுதலும் நிகழும் என்பதை நிமித்தக் குறிப்பால் உணர்த்தும் வகையில்

. . . .
கண்ணகி கருங்கணும் மாதவி செங்கணும்
. . . .
எண்ணுமுறை இடத்திலும் வலத்தினுத் துடித்தன

என்று சிலம்பின் அடிகள் உரைக்கின்றன.

அதைப்போல் தும்முதல் எனும் செயல் மூலம் தன்மை விரும்புவார்கள் நினைக்கிறார்கள் என்று தமிழ் மக்கள் நம்பினர்.

"...................................

உள்ளிய தன்மையர் போலும் - அடுத்து அடுத்து

ஒள்ளிய தும்மல் வரும் (ஐந்திணை எழுபது பாடல் 40:3-4)

எனும் பாடல் தலைவன் தலைவியை நினைக்கத் தலைவிக்குத் தும்மல் வரும் எனும் நம்பிக்கை நிலைமைக்குச் சான்று பகரும். ஒருவர் தும்மினால் தும்மியவரை அவருக்கு நெருங்கியவர்கள் நினைக்கிறார்கள் எனும் கருத்துவரும்.

வழுத்தினாள் தும்மினேனாக அழித்தழுதாள்

யாருள்ளித் தும்மினிரென்று

இந்நம்பிக்கை இன்னும் வாழ்கிறது.

13. பூசையும், குறிகூறலும்

குறிசொல்லும்முன் குங்குமத்தைச் சந்தனக் குழம்பிற் குழைத்து, தரையை மெழுகி, மாக்கோலமிட்டு, குங்கிலியப் புகை காட்டி, ஒன்பது வகையான மணிகளை நான்கு திசைகளிலும் பரப்பி (மாணிக்கம், முத்து, பவளம், மரகதம், கனகபுட்பராகம், வைரம், நீலம், வைடூரியம், கோமேதகம்) தென்மேற்கு மூலையில் பிள்ளையாரை வைத்து, நறுமணப் பூக்களை அருகம்புல்லுடன் சேர்த்துப் பிள்ளையாருக்குச் சாத்தி புனுகும் நெய்யும் கலந்த திருவிளக்கினை ஏற்றி, மதுரை மீனாட்சியை மனத்தில் இருததி குறத்தி குறி கூறிய செய்தி இச்சிற்றிலக்கியத்தில் காணப்படுகிறது.

மேலும் குறிபார்க்க கொண்டுவரப்பட்ட நெல்லைக் குறத்தி கடவுளை வணங்கிப் பல கூறுகளாகப் பிரித்து இறுதியில் எண்ணிட ஒற்றைப் படையாக வந்தால் எண்ணியது நிச்சயம் நடைபெறும் என்ற கருத்து இந்நூலின் கண் காணப்படுகிறது.

"முத்தாழி முச்சிறங்கை நெல் அளந்து கொடுவர

....

இந்நாழி நெல்லையும் முக்கூறு செய்தோர் கூற்றை

இரட்டை பட எண்ணினபோது ஒற்றைப்பட்ட தம்மே

....

உனக்கினி யெண்ணின கருமம் இமைப்பினில் கைகூடும்

(மீ.குறம்.பா.20)

14. நிமித்தக்கூறு

நெல்லை அளக்கும்போது சுற்றிச்சூழ இருப்பவர்கள் கூறும் சொற்களும் ஏனைய நிகழ்வுகளும் நிமித்தங்களாகக் கொண்டு குறி கூறப்படும்.

நெல்லளந்திடப்பட்ட போது
நிமித்ததன்று இடத்தெழுந்த
பல்லியும் வலத்தே சொல்லும்
பத்தினிப் பெண்கள் வாயால்
சொல்லிய வாய்ச்சொல் அன்றித்
தும்மலும் நல்லதே காண்
அல்லது கிளை கூட்டும் புற்று
ஆந்தை வீச்சு அழகிது அம்மே (மீ.குறம்.பா. 27)

நெல்லை அளந்தபோது நல்ல நிமித்தங்கள் தோன்றின. இப்பக்கமிருந்த கெவுளி எனப்படும பல்லியும் நன்மை நிகழ்ப்பேவதைக் கூறிற்று. உடனிருந்த பத்தினிப் பெண்களின் சொல்லும், அவர்கள் தும்மிய தும்மலும் நன்மையையே காட்டின. இது தவிர ஆந்தையின் அலறலும் நன்மை நடக்கப் போவதையே காட்டிற்று எனக் குறத்தி கூறினாள்.

அடுத்து குறத்தி 'அத்தரேகை சாத்திரம்' எனப்படும் கைரேகைக் கலை விதிப்படி கைரேகைக் குறிகளைக் கண்டு ஆய்வு செய்வதற்காக மீனாட்சி அம்மையின் கையைக் கேட்கிறாள்.

தமிழ் முறைப்படி அமைந்துள்ள சிறப்பான கைரேகைச் சுவடி முனிவர் ரேகைச் சாத்திரநூல்'', ஆகும். இது முற்றிலும் சீரோ எனப்படும் மேனாட்டு இரேகை நிபுணர் கோட்பாட்டுக்கு முரண் ஆனது.கமலமுனிவர் விதிப்படி ஒருவரின் கை தாமரை வண்ணத்தைக் கொண்டிருப்பது சிறப்பானது ஆகும். மேலும் கையாவது புனுகு, சவ்வாது, நெய் போன்ற மணமுடன் காணப் பட்டால் மேம்பட்ட அரசயோகத்தையுடையவர் என்பதைக் காட்டும்.

''புண்டரிகம் பூத்தழகு பொலிந்திடும் உன்கையே'' (மீ.குறம்.பா.28-வரி 5) என்று மீனாட்சியம்மைக் குறம் இதனைக் கூறுகிறது.

சோதிடத்தில் 'அங்க வித்யாசாத்திரம்' என்பது ஒரு பிரிவு உள்ளது. அதன் விதிகளுக்கு உட்பட்டு குறத்திபலன் கூறுகிறாள்.

''குறிகேட்கும் மீனாட்சி தமது கையைத் தம் தலத்தில் வைத்தால் சொக்கநாதர் அவரை வந்து கூடுவார் என்றும், மீனாட்சி மேற்கு திசை நோக்கி கையைத் தூக்கியதால் இன்று மாலைப் பொழுதுக்குள் வந்து சேர்வாரென்றும், கைமேல் கையைக் கட்டியதால் எண்ணிய காரியம் எளிதில் நடைபெறுமென்றும்,

அழகிய வயிற்றில் அவள் கை வைத்தமையால் பதினாறும் பெற்றுப் பெருவாழ்வு வாழ்வாய் எனவும் குறத்தி அங்க சாத்திரப்பலன் கூறினாள்.

இதனைக் குறம் 29ஆவது பாடல் கூறுகிறது

"அம்மே நின் செங்கையை
நின் கொங்கையில் வைத்துதான்
அபிடேகச் சொக்கருனை அணைவரென்று குறிகாண்
இம்மேலைத் திசையற் கை எடுத்ததுவும் அவர்தாம்
இன்றிருந்த பொழுதினில் வந்து எய்துவரென்றது (காண்)
கைம்மேல் கை கட்டியதும் தப்பாமல் உனக்குக்
கைகூடும் நீ நினைத்த காரியம் என்றது காண்
செம்மேணி மணிவயிற்றில் கை வைத்து இனி நல்
சிறுவர் பதினறுவரையும் பெறுவை என்றுதம்

மீ.குறம்.பா.20

மேலும் கங்கண மேட்டிலிருந்து சூரிய மேடு நோக்கிச் செல்லும் செல்வரேகை தெளிவாக இருப்பதா அளவற்ற செல்வத்திற்கு அதிபதியாக இருப்பாள் என்றும், சிவந்த கையின் நாடித் துடிப்பு சொக்கேசரை அடைவாள் என்பதையும், களத்திர மேட்டில் காணப்படும் சந்தானரேகை நல்ல மக்களைப் பெறும் யோகத்தையும், தோளில் இலங்கும் மச்சம் சொக்கேசனுடன் இருக்கும் அரசவாழ்வு யோகத்தையும் உணர்த்துவதாகக் குறத்தி குறிசொல்லும் செய்யுள்:

"அங்கைத் தலத்துத் தனரேகை
அளவில் செல்வம் தரும் உனது
செங்கைத்துடி தென் மதுரேசர்
செம்பொற் புயத்தில் சேர்க்குமால்
இங்கிப்படி புத்திர ரேகை
எவர்க்கும் இவை இப்படித் தோளில்
தங்கும் மறு அங்கயற்கண் அம்மை
தன்னோடிருக்கத் தரும் அம்மே (மீ.குறம். பா.30)

விநாயகர் அகவல் பதிப்பில் காணப்படும் மாறுபாடு

முனைவர் மணிமாறன்

ஆதியுலாவினைச் சிவபெருமான் உறையும் கயிலாயத்தில் அரங்கேற்றம் செய்யும் பொருட்டு குதிரை மீதேறி சேரமான் பெருமான் நாயனாரும், வெள்ளானை மேலேறி சுந்தரமூர்த்தி நாயனாரும் செல்கின்றனர். செல்லும் வழியில் சேரமான் பெருமான் ஔவையாரை அழைக்காமல் வந்துவிட்டோமே என்று எண்ணுகிறார். அவர் எண்ணிய உடனே விநாயகரைப் பூசித்துக்கொண்டிருந்த ஔவையாரின் மனத்தில் இச்செய்தி தெரிந்து, தானும் அவர்களுடனே கயிலைக்குப்போக விருப்பம் கொண்டு விநாயகர் பூசையை வேகவேகமாகச் செய்யத் தொடங்கினார். அதனைக் கண்ட பிள்ளையார், ஔவையாரைப் பார்த்து நிங்கள் நியமப்படி பூசை செய்யுங்கள், நான் உங்களை அவர்களுக்கு முன்னதாகவே கயிலாயம் கொண்டு சேர்க்கிறேன் என்று கூற, ஔவையாரும் அவ்வாறே பூசை செய்து முடித்தார். உடனே விநாயகர் தன் துதிக்கையால் எடுத்துவிட ஔவையார் கயிலாயத்தை அடைந்தார். தங்களுக்கு முன்னரே கயிலை வந்தடைந்த ஔவையைக் கண்டு சேரமான் பெருமான் ஆச்சரிய அடைந்தார்.

ஔவையார் விநாயகரைப் போற்றிப் பாடிய அகவலே விநாயகர் அகவல் என்று போற்றப்பெறுகின்றது. இப்பாடல் எழுபத்து நான்கு அடிகள் அடிகள் கொண்ட நிலைமண்டல ஆசிரியப்பாவால் அமைந்துள்ளது. அகவல் என்ற சொல்லுக்கு அழைத்தல் என்னும் பொருள் உண்டு. திருவருள் புரியுமாறு வேண்டி விநாயகரைப் பரவிப் பணிந்து அழைத்தல் என்றும் பொருள் கொள்ளலாம்.

தொன்றுதொட்டு விநாயகர் வழிபாடு நடைபெற்று வருகின்றது. இவ்வழிபாட்டை மேற்கொள்பவர்களுக்குத் தோத்திர நூலாக விளங்கி வருவது விநாயகர் அகவலே ஆகும். இத்தகு நூல் சுவடி வடிவிலிருந்து அச்சு நூலாகப் பதிப்பிக்கப்பெற்று இன்றைக்கு ஏறக்குறைய இருநூறு ஆண்டுகள் ஆகியிருக்கலாம்.

கி.பி. 1854ஆம் ஆண்டு நல்லூர் ஆறுமுக நாவலர் சிதம்பர சைவப்பிரகாச வித்தியாசாலைத் தருமபரிபாலகர் பொன்னம்பலம் பிள்ளையால் சென்னை வித்தியாநுபாலயைந்திர சாலையில் அச்சில் பதிக்கப்பெற்று வெளிவந்த விநாயகர் அகவலை அடிப்படையாகக்

கொண்டே, தொடர்ந்து 1939ஆம் ஆண்டு சென்னை, திருவொற்றியூர் டி.ஆர். பாலகிருஷ்ண முதலியாரால், கலைமகள் விலாச பிரஸில் பதிப்பிக்கப்பெற்ற நூலும், 1988இல் திருவாவடுதுறை ஆதீனம் வெளியிட்ட பதிப்பிலும், 2002இல் தஞ்சாவூர் மானாம்புச்சாவடி, அருள்மிகு கற்பகவிநாயகர் திருக்கோயில் சிவனடியார்கள் வார வழிபாட்டுக்குழு வெளியிட்ட பதிப்பிலும், மேலும் பல பதிப்புக்களிலும் பாடலடிகள் ஒன்றாகவே காணப்படுகின்றன. மூலச்சுவடியினை ஒப்புநோக்காமல் முதல் பதிப்பினை அடியொற்றியே அடுத்தடுத்த பதிப்புகள் வெளிவந்துள்ளதைக் காணமுடிகிறது.

தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகத்தின் தமிழ்த்துறையில் (எண்:2349) இடம்பெற்றுள்ள விநாயகர் அகவல் சுவடியில், முன்னர் வெளிவந்த அச்சுநூல்களில் இடம்பெறாத நான்கு அடிகள் காணப்பெறுகின்றது. மேலும் பல சொற்களும் அச்சுவடியில் மாறுபட்டுள்ளன. அவை இப்பதிப்பில் அடிக்குறிப்பிட்டுக் காட்டப் பெற்றுள்ளது. இந்நூலகச் சுவடியில் இடம்பெறாமல் அச்சு நூல்களில் மட்டுமே காணப்பெறும் இரண்டு அடிகள் தனியே கிழே கொடுக்கப் பெற்றுள்ளன. முதல் அச்சுநூல் வெளிவந்த பின்னர் மூலச்சுவடியினை ஒப்புநோக்காமல் முதல் நூலினைக் கொண்டே அடுத்தடுத்த பதிப்புகள் வெளிவந்ததே இத்தகு விடுபாட்டிற்குக் காரணமாய் இருத்தல் கூடும். முதல் பதிப்பின்போது மூலச்சுவடியில் இவ்வடிகள் சிதைந்து போயிருத்தலும் கூட, அவ்வடிகள் அச்சு ஏற இயலாமல் போயிருக்கக்கூடும்.

இந்நூலகத்தின்கண் உள்ள மூலச்சுவடியினை ஒப்புநோக்கி, திருந்திய பதிப்பாகப் பதிப்பிக்கப்பெறும் விநாயகர் அகவலானது, விநாயகர் வழிபாடு செய்வோருக்கும், தமிழாய்வாளர்களுக்கும், புதிதாகச் சுவடியியல் பதிப்பில் ஈடுபடும் மாணவர்களுக்கும் பேருதவி புரியும்.

ஔவையார் அருளிய விநாயகர் அகவல்

(பிள்ளையார் பேரில் அகவல்)

*சீதக் களபச் செழுந்தா மரை*ப்பூம்*
பாதச் சிலம்பு பல இசை பாட
***காரணத் தண்டை கணைக்கால் சிலம்பும்*[1]**
***பூரணக் கதலியைப் போற்றுடை யழகும்*[2]**
பொன்னரை ஞாணும் பூந்துகில் ஆடையும்

வன்ன மருங்கில் வளர்ந்தழ கெறிப்பப்
*பேழை வயிறும் பெரும்பாரக் கொம்பும்**
*வேழ முகமும் வெண்ணுதற்செந் தூரமும்**

அஞ்சு கரமும் அங்குச பாசமும்
நெஞ்சிற் குடிகொண்ட நீல மேனியும்

நான்ற வாயும் நாலிரு புயமும்
மூன்று கண்ணும் மும்மதச் சுவடும்
இரண்டு செவியும் இலங்குபொன் முடியும்
திரண்டமுப் புரிநூல் திகழும்பொன்* மார்பும்
அற்புதம் நின்ற கற்பகக் களிறே !

தற்பரமான சதா சிவங் காட்டி[3]
முப்பழம் நுகரும் மூஷிக வாகன
இப்பொழு தென்னை ஆட்கொள வேண்டித்
தாயாய் எனக்குத் தானெழுந் தருளி மாயாப் பிறவி மயக்கம்
அறுத்துத்

திருந்திய முதல்ஐந் தெழுத்தும் தெளிவாய்ப்
பொருந்தவே வந்தென் புந்தியிற்* புகுந்து
குருவடி வாகிக் கூறுதல் செய்து*
திருவடி வைத்துத் திறம்இது பொருள் என
வாடா வகைதான் வந்தெனக் கருளி*
கோடா யுதத்தாற் கொடுவினை களைந்தே
உவட்டா வுபதேசம் புகட்டிஎன் செவியில்
தெவிட்டாத ஞானத் தெளிவையும் காட்டி
ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்
இன்புறு கருணையின் இனிதெனக் களித்து*
கருவிகள் ஒடுங்குங் கணக் கறிவித்து*
இருவினை தன்னை அறுத்திருள் கடிந்து
தலம்ஒரு நான்கும் தானெனக் கருளி*
மலம்ஒரு மூன்றின் மயக்கம் அறுத்தே
ஒன்பது வாயில் ஒருமந் திரத்தால்

அன்புறு கதவால்* அடைப்பதும் காட்டி
ஆறா தாரத்து அங்குச நிலையும்
பேறா நிறுத்திப் பேச்சுரை அறுத்தே
இடைபிங் கலையின் எழுத்தறி வித்துக்
கடையிற் சுழிமுனைக் கமலங் குறித்து*

மூன்றுமண் டலத்தின் முட்டிய தூணின்
நான்றுஎழு பாம்பின் நாவில் உணர்த்திக்
குண்டலி யதனிற் கூடிய அசபை

விண்டெழு மந்திரம் வெளிப்படச் சொல்லி*
மூலா தாரத்தின் மூண்டெழு கனலைக்
காலால் எழுப்பும் கருத்தறி வித்தே
அமுத நிலையும் ஆதித்த வாரமும்*
குமுத சகாயன் குணத்தையுங் காட்டி*
இடைச்சக் கரத்தி னெட்டு* நிலையும்
உடற்சக் கரத்தின் உயிர்ப்பையுங்* காட்டி

சண்முக தூலமும் சதுர்முக சூக்கமும்
எண்முக மான தோரென்பத்தோ ரட்சரம்*
புரியட்ட காயம் புலப்பட எனக்குத்
தெரிஎட்டு நிலையும் தெரிசனப் படுத்திக்
கருத்தி லிருத்தி கபால வாசல்*

இருத்தி முத்தி இனிதெனக் கருளி
என்னை அறிவித்து எனக்கருள் செய்து
முன்னை வினையை முதலே* களைந்து
வாக்கும் மனமும் இல்லாமனோலயம்
தேக்கியே என்றன் சிந்தை தெளிவித்து

இருள்வெளி இரண்டுக்கு ஒருவளி யாக்கி*
கருவளி வரா கணக்கறி வைத்து*
எல்லை இல்லா ஆனந்தம் அளித்து
அல்லல் களைந்தே அருள்வழி காட்டிச்
சத்தத்தி னுள்ளே சதாசிவங் காட்டிச்

சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் பூட்டி*
அணுவிற்கு அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய்க்
கணுமுற்றி நின்ற கரும்புள்ளே நாட்டி*
வேடமும் நீறும் விளங்க முன்னிறுத்திக்*
கூடுமெய்த் தொண்டர் குழாத்துடன் கூட்டி

அஞ்சக் கரத்தின் அரும்பொருள் தன்னை
நெஞ்சக் கரத்தின் நிலை தெளிவைத்துத்*
தத்துவ நிலையைத் தந்தெனை ஆண்டருள்*
வித்தக விநாயக விரைகழல் சரணே.

சீதக்களபம்-குளிர்ந்த கலவைச் சாந்தணிந்த; செழுந்தாமரைப்பூ-செழுமையான தாமரை மலர் போன்ற; பாதச் சிலம்பு-திருவடிகளில் அணியப்பெற்ற சிலம்புகள்; பல இசைபாட-பலவகை ஓசை கொண்டு ஒலிக்கவும்; காரணத்தண்டை கணைக்கால் சிலம்பும்- கணைக்காலில்

அணிந்துள்ள தண்டை எனும் சிலம்பும்; பூரணக் கதலியை-கதலி-வாழைப்பழம்; போற்றுடை யழகும்-மிகுந்த அழகும்; வன்னமருங்கில்-அழகிய இடையில்; பொன் அரைஞாணும்-பொன்னால் செய்யப்பெற்ற அரைக்கொடியும்; பூந்துகில் ஆடையும்- மெல்லிய வெண்பட்டாடையும்.

அழகு வளர்ந்து எறிப்பவும்-கண்டார்க்குப் புதிது புதிதாய் அழகு தோன்றி விளங்கவும்; பேழை வயிறும்-பெட்டி போன்ற வயிறும்; பெரும் பாரக் கொம்பும்-பெரிய பருத்த ஒற்றைக்கொம்பும்; வேழ முகமும் - யானை முகமும்; வெண்ணுதற் செந்தூரமும்- நெற்றியில் விளங்குகின்ற சிவந்த பொட்டும்; அஞ்சு கரமும்-ஐந்து கைகளும்; அங்குச பாசமும்-துதிக்கையில் உள்ள அமிர்த கலசமும், ஓரிரண்டு கைகளில் தங்கிய மோதகமும், ஒடிந்த கொம்பாகிய எழுத்தாணியும் தவிர, வேறிரண்டு கைகளில் விளங்கும் யானைத் தோட்டியும், பாசக் கயிறும் ஆகிய படைக்கலங்களும்.

நான்ற வாயும்-கீழே தொங்குகின்ற வாயும்; நால் இரு புயமும்-நான்கு பெரிய தோள்களும்; மூன்று கண்ணும்-மூன்று கண்களும்; மும்மதச் சுவடும்-கன்னமதம், கை மதம், கோச மதம் ஆகிய மும்மதம் பொழிதலாகிய தழும்பும்; இரண்டு செவியும்-இரண்டு காதுகளும் இலங்கு பொன்முடியும்-தலையில் விளங்குகின்ற அழகிய கிரீடமும்; திரண்ட முப்புரிநூல்- மூன்று புரிகள் சேர்த்து முறுக்கப்பெற்ற பூணூலானது; திகழும் பொன் மார்பும்-விளங்குகின்ற ஒளியுள்ள மார்பும்; நெஞ்சில் குடிகொண்ட-அடியவர்களது நெஞ்சினில் எப்பொழுதும் நிலைத்திருக்கிற. நீலமேனியும்-நீலநிறமுள்ள உடம்பும்.

தற்பரமான சதாசிவங்காட்டி-ஆன்மாவிற்கு அதீதமாகிய சிவத்தைக் காட்டி; அற்புத கற்பகக் களிறே-எவரும் அதிசயிக்கும் வல்லமையுள்ள கற்பக விநாயகக் கடவுளே; முப்பழம் நுகரும்- வாழை, மா, பலா ஆகிய மூன்று கனிகளையும் உண்கின்ற; மூஷிக வாகன - பெருச்சாளியை வாகனமாகக் கொண்டவரே; என்னை - எளியேனை; இப்பொழுது- இச்சமயத்தில்; ஆட்கொள வேண்டி-அடிமையாகக் கொள்ளுதற்கு விரும்பி இந்நிலவுலகில்; எனக்குத் தாயாய்-என்மேல் பேரன்பு செலுத்தும் தாய் போலானவன்.

குருவடிவாகி எழுந்தருளி-அருட்குரவராய் முன்னே தோன்றி; கோடு ஆயுதத்தால்- நின் கையிலுள்ள கொம்பாகிய கருவியால்; கொடுவினை களைந்தும்-உலக இன்பங்களைத் தேடுதலின்றி என்னை நீக்கியும்; திருந்திய முதல் ஐந்தெழுத்தும்-ஒளியோடு விளங்கும் வேத ஆகமங்கள் முதலான வேட்டிப் பிரணவ ஐந்தெழுத்துக்களையும்; என் உளந்தனில் தெளிவாய்ப் பொருந்தவே வந்து புகுந்து-மல இருள் நீங்கிய அருள் ஒளியுடன் என் மனத்தில் தெளிவாய்ப் பதியுமாறு வந்து கலந்தும்; ஐம்புலன் தன்னை அடக்கும் உபாயம்-செவி, மெய், கண், வாய், மூக்கு ஆகிய ஐம்புலன்களையும், ஓசை, ஊறு, ஒளி, சுவை, நாற்றம் என்ற புலன்களில் செல்லாது தடுக்கும் வழியை.

இன்புறு கருணையின் இனிது எனக்கு அளித்து-யான் பேரின்பம் அடைவதற்கு ஏதுவாகிய தனது பேரருளினாலே இனிமையாக எனக்கு அறிவித்தும்; கருவிகள் ஒடுங்கும் கணக்கறிவித்து-நிலம் முதல் நாதம் ஈறாகிய முப்பத்தாறு தத்துவக் கருவிகளும் ஒன்றன்பின் ஒன்றாய் ஒடுங்கிப் பின் தூவெளியிலும், அருளிலும், சிவத்திலும் ஒடுங்கிப் பேரின்பம் அடையும் கருத்தினைத் தெரிவித்தும்;அன்புறு கதவால் அடைக்கும்-அன்பெனும் கதவினால் அடைத்து.

ஒன்பது வாயிலையும்-கண் இரண்டு, காது இரண்டு, மூக்கு இரண்டு, வாய் ஒன்று, குதம் ஒன்று, குறி ஒன்று ஆகிய ஒன்பது உறுப்புக்களின் வழிகளையும்; ஒரு மந்திரத்தால்- ஒப்பற்ற ஓங்கார மந்திரத்தால்; அடைப்பது காட்டியும்-புருடனாகிய சீவன் புறத்தே போகாது தடுப்பதைக் காண்பித்தும்; ஆறு ஆதாரத்து-மூலாதாரம், சுவாதிட்டானம், மணிபூரகம், அநாதகம், விசுத்தி, ஆக்கிணை ஆகிய ஆறு ஆதாரங்களிலும்; அங்குச நிலையும்- சுழிமுனை வழியே பிராணவாயு செல்லுமாறு யானைத் தோட்டி போல் அதனை அடக்கும் நிலையினையும்; பேறா நிறுத்தி-நிலை பெயராமல் இருக்கச்செய்து; பேச்சு உரை அறுத்து- பேசுகின்ற பேச்சை முற்றிலும் நீக்கி மௌனமாகச் செய்தும்; இடை பிங்கலையின் எழுத்து அறிவித்து-இடைக்கலைக்கு உரிய ஓர் எழுத்து மந்திரத்தையும், பிங்கலைக்கு உரிய ஓர் எழுத்து மந்திரத்தையும் அறிவுறுத்தி.

சுழிமுனை கடையில் காட்டியும்-சுழிமுனை நாடி முடிவில் அடையும் தலை ஓட்டில் உள்ள ஏழாம் சக்கரமாகிய சகஸ்ர சக்கரத்தைக் காண்பித்தும்; மூன்று மண்டலத்தின் முட்டிய தூணின்-சூரியன், சந்திரன், அக்னியாகிய மூன்று மண்டலங்களையும் சேர்ந்துள்ள வீணாத்தண்டிலிருந்து; நான்று எழுபாம்பின்-தொங்குகின்ற பாம்பைப் போன்ற; குண்டலி அதனில் கூடிய அசபை-குண்டலி சக்தியோடு சேர்ந்திருக்கிற; நாவில் உணர்த்தி-நாவில் எழுதி அறிவித்தும்; விண்டு எழு மந்திரம்-வெளிப்பட்டு எழுகின்ற உரைக்கக் கூடிய ஓர் எழுத்து மந்திரத்தை; வெளிப்பட உரைத்தும்-வெளியே எனக்குக் கூறி உணர்த்தியும்.

மூலாதாரத்தில்- ஆறு ஆதாரங்களில் அடிச்சக்கரமாகிய மூலாதாரத்திலிருந்து; மூண்டு எழு கனலை-பற்றி எழுகின்ற விந்து அக்னியை; காலால் எழுப்பும்-பூரக, ரேசக, கும்பக, வாயுக்களினாலே எழுப்பும்; கருத்து அறிவித்தும்-கருத்தை எனக்கு உணர்த்தியும்; இடைச்சக்கரத்தின் எட்டு நிலையும்- சக்கரத்தின் எட்டு நிலையினையும்.

உடற் சக்கரத்தின் உயிர்ப்பையும் காட்டி-உடலாகிய இயந்திரத்திலுள்ள அவயங்கள், ஒன்று வேறு ஒன்றைச் செலுத்தி நிற்கும் நிலையை யான் அறியக் காண்பித்தும்; அமுத நிலையும் - அமுதத்தை ஆக்கும் நிலையினையும்; ஆதித்தன் வாரமும் - சூரியன் இயங்கு தலையும்; குமுத சகாயன் குணத்தையும்-ஆம்பல் பூவிற்குத் தோழனாகிய சந்திரன் குணத்தையும்; கூறியும்-அறிவித்தும்; தூல சண்முகமும்-நீ ஆறுமுகங்களுடன் பருப்

பொருளாய் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையும்; சூக்க சதுர்முகமும்-நீ நான்கு முகங்களுடன் கூடி நுண்பொருளாய் எங்கும் நிறைந்திருக்கும் தன்மையும்; எண்முகமாக-யான் நினைக்கிற முகங்களோடு கூடிய உருவங்களாக; எனக்கு இனிது அருளி-எனக்கு இனிமையாக உரைத்து அருளியும்; புரியட்ட காயம் எனக்குப் புலப்பட-மிக்க நுண்பொருளான உடலின் தன்மை எனக்கு நன்கு விளங்குமாறு; தெரி எட்டுநிலை தெரிசனப்படுத்தியும்-எட்டுத் தொகுதி உறுப்புகளின் நிலையையும் பிரித்துக் காண்பித்தும் (உடலை ஆக்குவனவாகிய ஸ்தூலபூதம், சூக்குமபூதம், ஞானேந்திரியம் ஐந்து, கன்மேந்திரியம் ஐந்து, அந்தக்கரணம் நான்கு, குண தத்துவம் ஒன்று, மூலப்பகுதி ஒன்று, கலாதி ஐந்து ஆகியவை)

மலம் ஒரு மூன்றின் மயக்கம் அறுத்து-ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களின் பிணிப்பை முற்றிலும் நீக்கியும்; மாயாப் பிறவி மயக்கம் அறுத்து- மாயா காரியங்களால் ஆகிய உலகில் வந்து பிறக்கும் ஆசையை அகற்றியும்; தலம் ஒரு நான்கும் எனக்குத் தந்தருளியும்-நான்கு இடங்களிலும் பெறத்தக்க மெய்ஞ்ஞானத்தை உணர்த்தியருளியும், (சரியையாகிய உருவம், கிரியையாகிய அருவுருவம், யோகமாகிய அருவம், ஞானமாகிய அகண்டவெளி)

சத்தத்தினுள்ளே சதாசிவம் காட்டி-அச்சத்தத்துள் பரந்திருக்கும் சதாசிவ மூர்த்தியை எனக்குக் காண்பித்தும், (அண்டமாகிய உலகில் சூக்கும பூதமாகிய சத்தத்தை இயக்கு); சித்தத்தி னுள்ளே சிவலிங்கம் காட்டியும்-அடியார்கள் உள்ளத்தில் நிறைந்து விளங்கும் சிவலிங்கமாகிய சதாசிவ மூர்த்தியைக் காண்பித்தும்; என் செவியில்-என் காதுகளில்; உவட்டா உபதேசம் புகட்டி- இனிய உபதேச மொழிகளை அறிவுறுத்தியும்; தெவிட்டாத ஞானத் தெளிவைக் காட்டியும்- பேரின்பம் அடைவதற்கு ஏதுவாகிய தெளிந்த அறிவை யான் அறியக் காண்பித்தும்; திறம் இது பொருள் என-உறுதியாக நீயே உண்மைப் பொருள் என்று கூறி; திருவடி வைத்து-நின் திருவடிகள் இரண்டையும் என் தலை மீது வைத்துத் தீட்சை செய்து.

வாடா வகைதான் மகிழ்ந்து எனக்கு அருளி-பிறவித்துன்பத்தால் நான் வருந்தா வண்ணம் மகிழ்வுடன் எனக்குக் கருணை செய்து; அணுவிற்கு அணுவாய்-அணு ஓர் அண்டம் என்னும்படி, அவ்வணுவிற்கு அணுவாகப் பரந்து வீற்றிருந்து; அப்பாலுக்கு அப்பாலாய்- அண்டம் ஓர் அணு என்னும்படி ஏழு அண்டங்களையும் கடந்து அதற்கும் அப்பால் பெரிதாய்ப் பரந்து வீற்றிருந்து; கணு முற்றி நின்ற கரும்பு-கணுக்கள் முற்றி நன்கு விளைந்த கருப்பஞ்சாறு போலும் பேரின்பத்தை; உள்ளே காட்டியும்-என்னுள்ளே அத்துவிதமாய் நின்று உணரச்செய்தும்; கருத்தினில்-என் உள்ளக் கருத்தின் கண்; கபால வாயில் காட்டி-தலை ஓட்டுத்துவாரத்தின் வழியே மேல் உள்ள துவாதசாந்த வெளியைப் புலப்படுமாறு காண்பித்து; இருத்தி-என்னைத் துவாதசாந்தத்தில் இருக்கச் செய்து; எனக்கு முத்தி இனிது அருளியும்- எனக்குச் சாலோக இன்பத்தை இனிமையாக நல்கியும்.

இருள் கடிந்து இருவினை தன்னை அறுத்து-ஆணவம், கன்மம், மாயை என்ற மும்மலங்களையும் போக்கி நல்வினை தீவினைப் பயன்களை முற்றிலும் கெடுத்து; முன்னை வினையின் முதலே களைந்து-முன் செய்த நல்வினை தீவினைகட்குக் காரணமாயிருந்த ஆணவமலப் பிணிப்பினை அகற்றி; என்னை அறிவித்து எனக்கு அருள் செய்து- என்னை அறிவு வடிவினன் என்று அறிவித்து எனக்குச் சாமீப இன்பத்தை நல்கியும்; வாக்கும் மனமும் இல்லா-பாசஞான, பசு ஞானங்களால் அறியப்படாது பதி ஞானத்தாலேயே இறைவன் அறியப்படுதலின்; மனோலயம் தேக்கியே-என் மனவெளியில் நீ நிறைத்திருந்து; என்றன் சிந்தை தெளிவித்து-அதனால் என் மனம் தெளிவித்து;

இருள் வெளி இரண்டுக்கும் ஒன்று இடம் என்ன-இருட்டைச் சார்ந்த போதும் வெளியாகிய ஒளியைச் சார்ந்த போதும் அவற்றின் மயமாய் அவ்விரண்டற்கும் கண் இடமானாற் போல; என் செவியில் அருள் தரும் ஆனந்தத்து அழுத்தியும்-என் செவியில் ஞானம் உணர்த்திச் சாரூப இன்பத்தில் என்னைத் திளைக்கச் செய்தும்; அருள்வழி காட்டி-அருள் வழியாகிய சன்மார்க்க நெறியை எனக்குக் காண்பித்து; அல்லல் களைந்து-அதனால் என் பிறவித்துயரை அகற்றி; எல்லை இல்லா ஆனந்தம் அளித்து- இறவாத சாயுச்சிய இன்ப உணர்வினை எனக்கு வழங்கியும்.

வேடமும் நீறும் விளங்க நிறுத்தி-மெய்யடியாரது திருவேடத்தையும், திருநீற்றையும் உலகில் நிலைத்திருக்கச் செய்து; கூடும் மெய்த்தொண்டர் குழாத்துடன் கூட்டி-ஒன்றுகூடி ஆனந்தக் களிப்படையும் மெய்யடியார் கூட்டத்தில் என்னையும் சேர்ந்தருளி; அஞ்சு கரத்தின் அரும்பொருள் தன்னை-அஞ்செழுத்தில் அடங்கியுள்ள அறிதற்கரிய பதிபசு பாச உண்மைகளை; நெஞ்சக் கருத்தின் நிலை அறிவித்து-எளியேனுடைய மனக்கருத்தில் நிலையாக விளங்குமாறு உணர்த்தியும்; தத்துவ நிலையைத் தந்து-உண்மையான நிலையை விளக்கி; எனை ஆண்டருள்-என்னை அடிமையாக ஆட்கொண்டருளிய; வித்தக விநாயகா-பேராற்றல் வாய்ந்த விநாயகக் கடவுளே! விரைகழல் சரணே-அருள் மணமுடைய நின் திருவடிகளே எனக்குப் புகலிடமாக உள்ளது.

தமிழ்ப் பண்பாட்டில் சுவடிகள்

முனைவர் ரெ. சொர்ணபிரபா

மானுடத்தின் வாழ்வியற் சிறப்புகளை எடுத்துக்கூறும் பெட்டகமாக அமைவது பண்பாடாகும். தமிழர் தம் பண்பாட்டின் ஊடுபொருளாக விளங்குவது அவர்கள் இயற்கையோடு ஒன்றிய வாழ்க்கையில் கண்ட பல்துறைச் சிந்தனைகளின் வெளிப்பாடாகப் பண்பாடு அமைகிறது. அத்தகைய பண்பாட்டைப் பெறுவதற்குக் கல்வி அடிப்படைக் களன் ஆகிறது. அக்கல்வி விரிவுபட அமைதற்கு ஊடகமாக அக்காலத்தில் பனை ஓலைச் சுவடிகள் அமைந்தன.

“யாதும் ஊரே யாவரும் கேளிர்” என்ற உலகளாவிய ஒருமைப்பாட்டுத் தத்துவத்தைக் கண்ட தமிழன் கல்வி அறிவு இல்லாதவனாய் இருந்திருந்தால் இத்தகைய கோட்பாட்டைக் கண்டிருக்க முடியாது. கல்வியின் பயன் அறிந்ததனாலேயே, தமிழன் தொன்மைமிகு பண்பாடுகளில் ஒன்றாகத் தமிழர் பண்பாட்டை நிறுவியிருக்கிறான். அதற்குக் கல்விச் சாலைகள் தோன்றத் துணையாக இருந்து பெரும்பணி செய்துள்ளன.

வரலாற்று ஆசிரியர்கள், கல்வி நிறுவனங்கள் கல்வி போதனை முறைகள் பற்றித் தமிழ் இலக்கியத்தில் முழுமைகயாகக் காண முடியவில்லை என்றாலும் கல்வி கேள்விகளில் தமிழர் சிறந்து விளங்கினர் என்பதற்குச் சங்க இலக்கிய நூல்களான மேற்கணக்கு நூல்கள், சங்கம் மருவிய நூல்களான கீழ்க்கணக்கு நூல்கள் அதனை அடுத்து எழுந்த ஐம்பெருங் காப்பியங்கள், தமிழர் மொழி அறிவை உலகறியச் செய்யும் தொல்காப்பியம் எனும் இலக்கண நூல் ஆகியன சான்றாக அமைவதோடு தமிழர் கல்வித் துறையில் மேம்பட்டும் ஆழங்காற்பட்டும் விளங்கினர் என்பதற்கும் வரலாற்று ஆவணங்களாக இன்றும் திகழ்கின்றன.

19ஆம் நூற்றாண்டில் மேலையரின் வருகைக்குப் பின்னர் அச்சுக்கலை, தமிழகத்தை ஆளுமை செய்ய அதற்கு முன்னே கல்வித் துறை சார்ந்த எவ்வகை நூலானாலும் அவை பனைஓலைச் சுவடிகளிலேயே பதிவு செய்யப்பட்டு, காலம் காலமாகக் கற்பிக்கப்பட்டு வந்தள்ளன. கல்வி எனும்போது இலக்கியம், இலக்கணம், கலை, நுண்கலை, மருத்துவம், மந்திரம், மாந்திரீகம், இரசவாதம் என எத்தனையோ துறைகள் அடங்கும்.

மானுட வாழ்க்கையில் தனிமனிதன் தன்னை உயர்த்திக் கொள்ள அவன் குடிச்சிறப்பு மட்டும் தேர்ந்த தகுதி ஆகிவிடாது. எந்த அளவு கல்வியில் சிறப்புற்று விளங்குகிறானோ அக்கல்வியில் அவன் எந்தத் துறையில் மேம்பட்டு விளங்குகிறானோ, எந்தப் பாடத்தில் தன்னிகரற்றவனாகப் போற்றப்படுகிறானோ, அவனே சமுதாயத்தில் போற்றுதற்குரியவனாக அறிவுச் சுற்றத்தாரால் சுட்டப்படக் கூடியவனாக விளங்குதற்குரியவன் ஆகிறான். பாண்டியன் நெடுஞ்செழியனின் புறநானூற்றுப் பாடல். இதனை உறுதி செய்யும். பொன்முடியார் தமிழ்ச் சமூகம் பற்றி சுட்டும் பொழுது,

ஈன்று புறந்தருதல் என்றலைக் கடனே
சான்றோ னாக்குதற் றந்தைக்கிக் கடனே
வேல்வடித்துக் கொடுத்தல் கொல்லர்க்குக் கடனே
நன்னடை நல்கல் வேந்தர்க்குக் கடனே
ஒளிறுவாள் அருஞ்சமர் முருக்கிக்
களிறெறிந்து பெயர்தல் காளையர் கடனே! (பா. 312)

என்ற பாடலிலே கல்வி என்பது ஒவ்வொரு குடிமகனுக்கும் உரியது. தந்தையாக விளங்கும் ஒவ்வொரு இல்லறத்தானும் அவன் மகனை அவையத்து முந்தி இருப்பச் செய்வதற்கு அவனுக்குக் கல்வி அறிவு தர வேண்டும். அவ்வாறு நோக்கும்போது கல்வி என்பது அரிச்சுவடி கல்வி தொடங்கி பெரும் படைப்புகள் படைப்பதற்கான ஆற்றல்வல்ல அறிவுத்திறம் தரக்கூடிய கல்வி வரை பல நிலைகளில் விரிந்து கிடப்பதைக் காணலாம்.

தமிழர் பண்பாட்டில் சங்க காலம் தொடங்கி இன்று வரை கல்வி கற்றல் என்பது வற்புறுத்தப்பட்டே வருகிறது. வள்ளுவர் கல்விச் செல்வத்தைக் கேடில் விழுச்செல்வம் என்பார். அவ்வை, 'பிச்சை புகினும் கற்கை நன்றே என்பார். நாலடி, 'எல்லா அழகும் அழகல்ல, சான்றோர்க்குக் கல்வி அழகே அழகு எனப் பேசும். வேத கால மக்கள் கல்விக் கடவுளாகக் கலைமகளைக் காட்டுவார். பண்டைக் காலத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் அரசர்கள் தங்கள் மைந்தரைக் குருகுலவாசம் அதாவது ஐந்து வயது முடியப் பெற்ற மகனைத் தக்க குருவிடம் அனுப்பி அவரோடு இருந்து பல்வேறு விதமான குறிப்பாக விற்பயிற்சி, வாட்பயிற்சி, தர்க்க பயிற்சி, இலக்கியப் பியற்சி, இலக்கணப் பயிற்சி, மேலாண்மைப் பயிற்சி (ஹனஅளைளைவசயவடைே), நுண்ணறிவுப் பயிற்சி போன்ற பயிற்சிகளைக் கிட்டத்தட்ட 16 ஆண்டு காலம் தங்கிக் கற்று வந்துள்ளனர் என்பதைப் பாரத, இராமாயண, இதிகாசங்கள்வழி அறியலாம்.

இன்றைய காலகட்டத்தில் புரட்டாசி மாதத்தில் வரும் தசமி, திதி ஆகிய விஜயதசமி நன்னாளில் பிள்ளைகளைக் கல்விப் பயிற்சிக்கு அனுப்புவது மரபாக உள்ளதைக் காணலாம். ஓலைச் சுவடிகளிலே எழுத்தாணி கொண்டு அன்று எழுதப் பழக்குவர்.

அரிச்சுவடி ஓலைகள்

பொதுவாக இவ்வோலைகளில் நரம்பு பிரிக்கப்படுவ தில்லை. நீண்ட ஓலைகளாக இவை இருக்கும் தாளிப்பனை ஓலைகள் இவ்வரிச்சுவடி படிப்பிற்குப் பயன்படுவது இல்லை.

குழந்தை பிறந்த ஐந்தாண்டுகள் கழித்து அக்குழந்தையைப் பள்ளிக்கு அனுப்புவது தமிழர் வழக்கம். வேத காலத்தின் சிறப்புற நூல்களாகிய நான்கு வேதங்களின் ஆளுமை தமிழகத்தில் நிலைபெறத் தொடங்கிய நாளிலிருந்து வடவர் போற்றிய கல்வி தெய்வமாகிய சரசுவதி தமிழில் கலைமகள் என்ற பெயரில் கல்வித் தெய்வமாக வழிபாட்டிற்கு உரியவளாகப் போற்றப்பட்டாள். கலைமகளின் கணவனாகப் பிரமன் பாராட்டப் பெற்றான். பிரம்மனே கல்வியில் ஐமுல ஆசானாக விளங்கத் தகுந்தவன் என வேதம் கூறுகிறது. பிரமன் தாமரையிலும் அவன் துணைவி கல்வி தெய்வமாகிய சரசுவதி வெள்ளைத் தாமரையில் வீணை இசைத்தபடி கையில் ஏடு தாங்கி அருள் பரவிப்பதாக வடநூல் கூறும்.

பொதுவாகத் தமிழகத்தில் கல்விக்குத் தெய்வம் கலைமகள் என்றாலும் குழந்தைகளுக்குக் கல்வியை மனம் உவந்து நல்கும் பேற்றினைப் பெற்றவர் பிள்ளையார் என்பது நாட்டுப்புற இலக்கியவழி அறியலாம். பொரி, அவல், கொழுக்கட்டை, தேங்காய், பழம் ஆகியன படைத்த அவரை வணங்கி அரிச்சுவடி கல்வியைத் தொடங்குவது இன்னும் மரபாக உள்ளதைக் காணலாம். (எண் சுவடி, அரிச்சுவடி) அட்டவணை இன்றைக்கு அச்சில்ஒரே அட்டையில் கிடைக்கப் பெறுகிறது. ஆனால், அன்று குழந்தை கற்பதற்கு ஏற்ப ஒவ்வொரு ஏட்டிலும் ஓர் எழுத்தை எழுதி அதை மீண்டும் மீண்டும் எழுதச் செய்து அவ்வெழுத்தின் வரிவடிவத்தைக் குழந்தையின் மதியில் பதியச் செய்வர்.

இந்த ஏடுகள் அரிச்சுவடி ஏடுகள் எனப்படும். ஐந்து ஆண்டுகளிலிருந்து எட்டு அல்லது ஒன்பது ஆண்டுகள் வரை அமைந்த இவ்வடிப்படைக் கல்வி அன்றைக்கு ஏட்டுச்சுவடி மூலமாக நடைபெற்று உள்ளதைக் காணலாம். உயிரெழுத்துகள், உயிர்மெய் யெழுத்துகள், மெய்யெழுத்துகள் என எழுத்து வகைகளும் அடுத்து சொற்பயிற்சிக்கான அவ்வையின் ஆத்திசூடி, கொன்றைவேந்தன், மூதுரை வாக்குண்டாம். நீதிநெறி விளக்கம் போன்ற நூல்கள் போன்றன குழந்தைக் கல்வியில் இடம்பெற்ற முக்கியப் பாடங்களாகும். இவை அனைத்தும் ஓலைச் சுவடியிலேயே எழுதப்பட்டுப் புத்தகமாக அன்று மாணவர்க்குத் தரப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

பிறந்தநாள் குறித்தல்

ஒவ்வொரு தாய் தந்தைக்கும் பெற்றோர் என்ற சிறப்பினை நல்குவது குழந்தைப் பேறே ஆகும். அவ்வாறு பிறக்கும் குழந்தைக்குப்

பெயரிட்டு அதன் எதிர்காலம் எவ்வாறாக அமையும் என்பதைச் சோதிடர் மூலம் அறிவர். அவர் அச்சோதிட கணக்கையும் தனது கணிப்பையும் ஓலைச்சுவடிகளில் எழுதிக் கொடுப்பார். இதற்குச் சாதகம் எழுதுதல் என்று பெயர்.

குழந்தை பிறந்த பின் அவரவர் சமூகச் சடங்குமுறைக்கு ஏற்ப 11, 16, 30 என்ற வகையில் நாளைத் தேர்வு செய்து குழந்தைக்குப் பேரிடுவர். இதனை வடமொழியில் 'நாமகரணம் என்றும் தமிழில் 'பெயர் சூட்டுவிழா என்றும் கூறுவர்.

கல்வியில் சுவடி

பெரும்பாலும் திண்ணைப் பள்ளிகளிலேயே அடிப்படைக் கல்வி கற்றுத் தரப்பட்டது. ஆசிரியர் தன் கையில் வைத்துள்ள சுவடியை மூலபாடச் சுவடி எனலாம். மாணவர்கள் அதனைப் பார்த்து எடுக்கும் பிரதியைப் பிரதிபாடம் எனலாம். இந்தச் சுவடியை எழுதுவதற்கும் சரியாக எழுதப்பட்டனவா என்பதற்கும் வகுப்பறையில் சிறந்து விளங்கும் தேர்வு மாணவன் ஒருவன் தேர்வு செய்யப்பட்டு, அவன் மாணவர் சுவடிகளில் காணும் குற்றங்களைக் களைவான். இவனே 'சட்டாம்பிள்ளை எனப்படுவான். இதற்குப் பயன்படும் சுவடி நரம்பு நீக்கப்படாத ஓலைகளாக விளங்கும்.

இலக்கிய சுவடிகள் கூடுமானவரை ஒரே அளவினதாக (நீள அகலம்) இருக்கும். அக்காலத்தில் எண்ணும், எழுத்தும் என இரு நிலைகளில் கல்வியைப் பகுத்துக் கண்டனர். எண் எனப்படுவது கணிதம், அறிவியல், வானியல், சோதிடம் போன்ற இன்றைய அறிவியல் துறை சார்ந்த அனைத்துப் பாடங்களையும் குறிப்பதாகும். எழுத்து என்பது இலக்கியம், இலக்கணம், காப்பியம், பக்தி இலக்கியம், சிற்றிலக்கியம், பிரபந்தம் எனப்படும். இவற்றோடு அவ்விலக்கியத்திற்கான இலக்கண வரையறைகளையும் கற்றுத் தருவர். பொதுவாக மேல்வகுப்பு மாணவர்களுக்குத் தொல்காப்பியம், யாப்பருங்கலம், இறையனார் களவியல் உரை போன்ற நூல்கள் கற்றுத் தரப்படும்.

மேல்நிலைப்பள்ளி மாணவர்களுக்கு இலக்கியத்தோடு யாப்பருங்கலக் காரிகை, புறப்பொருள் வெண்பாமாலை, நன்னூல் மற்றும் தனிப்பாடல்கள் போன்றன கற்றுத்தரப்பட்டுள்ளன. ஆண்டிற்கு ஒரு முறை வரும் சரசுவதி, ஆயுத பூசை அன்று மாணவர் ஆசிரியர் ஒன்று திரண்டு கலைமகளோடு விழா எடுப்பர். இன்றும்கூட அரசுகள் (மைய, மாநில) அந்நாளை விடுமுறை நாளாக அறிவித்துச் சிறப்பு செய்துள்ளதை அறியலாம்.

கல்வியின் சிறப்பு பெற்றோரை மதித்தல், இறைவனை வணங்குதல் என்பது ஒழுக்கக் கோட்பாட்டின் உயர்தரு அடிப்படைக்

கோட்பாடாக அமைவதாலேயே மாதா, பிதா, குரு, தெய்வம் என ஒரு மரபுத் தொடர் வழங்கி வருவதைக் காணலாம். 'இளமையில் கல்', 'கற்கை நன்றே கற்கை நன்றே பிச்சை புகினும் கற்கை நன்றே' எனவும் குழந்தைகளுக்குச் சுட்டிக் காட்டியிருப்பதோடு கற்றோருக்குச் சென்ற இடமெல்லாம் சிறப்பு எனவும், குரங்கேற்று கொள்ளாத கொம்பும் உண்டோ எனவும் எத்திசைச் செல்லினும் அத்திசைச் சோறே எனவும் கல்வியின் பெருமையைச் சொல்லுமிடத்து இக்குறிப்புகளெல்லாம் ஓலையில் எழுதப்பட்டன என்ற வகையில் ஓலையின் சிறப்பை உணரலாம்.

தமிழைப் பொறுத்தவரையில் இலக்கியம் என்று நோக்கும்போது சங்க இலக்கியம், சங்கம் மருவிய கால இலக்கியம், காப்பியங்கள், சைவ சமய இலக்கியங்கள், சமய பௌத்த நீதி நூல்கள், பிரபந்த நூல்கள், சிற்றிலக்கிய நூல்கள் என கி.மு. 3ஆம் நூற்றாண்டு தொடங்கி கி.பி. 19ஆம் நூற்றாண்டுவரை ஆயிரக்கணக்கான சுவடிகள் இன்றைக்குத் தமிழகத்தில் புழக்கத்தில் உள்ளதை உணர முடிகிறது. இந்த ஏட்டு இலக்கியங்கள் எல்லாம் ஆங்கிலேயரின் வரவுக்குப் பின்னர் இவை எல்லாம் மெல்ல மெல்ல அச்சு நூல் ஆயின.

இலக்கிய நூல்கள்

தமிழைப் பொறுத்தவரை இலக்கிய நூல்கள் மூன்று வகைமையில் அமையும். ஒன்று இலக்கியம் சார்ந்தன. இரண்டு இலக்கணம் சார்ந்தன. மூன்று சமயம் சார்ந்தன. இலக்கியம் சார்ந்த நூல்கள் அத்தனையும் வாழ்வியல் கோட்பாடுகளை உணர்தற்கும் மொழியின் இலக்கிய வளர்ச்சிக்கும் துணை செய்வன ஆகும்.

இலக்கணம் சார்ந்த நூல்கள் முழுக்க முழுக்க மொழியின் கட்டமைப்பிற்குப் பயன்படுவன ஆகவும் பிறமொழி தாக்கம் இம்மொழிக்கு எவ்வகையிலும் சிதைவை ஏற்படுத்தி விடாமல் காக்கும் கவசமாகவும் விளங்கவல்லதாக அமையும். மேற்சொன்ன இரண்டும் சடங்கு முறையில் சிறப்பினைப் பெறாவிட்டாலும் மூன்றாவதாகப் பேசப்படும் சமய நூல்கள் முற்றிலும் அவ்வச்சமயம் சார்ந்த சிறப்புகளைப் பெற்று திகழ்வனவாகும்.

சைவ சமயம்

தமிழகத்தின் தொன்மைமிகு சமயங்களில் சைவமும் ஒன்றாகும். சிவ பரம்பொருளைத் தனது கடவுளாகக் கொண்டது இச்சமயம். ஆகவே சிவபிரானைப் பற்றி எழுந்த தோத்திரங்கள், சாத்திரங்கள், தத்துவார்த்த நூல்கள், பூசாவழிமுறைகள் ஆகியன பூசைக்குரிய நூல்களாகப் போற்றப்படுகின்றன.

இந்நூல்களை ஏனைய நூல்களைப்போல் பராமரித்தல் கூடாது. தூசி, குப்பை, அழுக்கு இடங்கள், தீட்டுக்குரிய இடங்கள் போன்ற இடங்களுக்குச் சமயம் சார்ந்த இந்நூல்களைக் கொண்டு செல்லக் கூடாது. திருக்கோயில்களில் சிவபிரானை புகழ்ந்து பாடும் தேவாரம், திருவாசகம் உள்ளிட்ட பன்னிரு திருமுறைகள் வழிபாட்டுப் பொருளாக இன்றைக்கும் இடம்பெற்றுள்ளதைக் காணலாம்.

தேவாரம் பாடப்பெற்ற திருத்தலத்தில் அத்தலத்திற்குரிய பாடல்கள் இன்றும் ஆகம பூசையோடு தொடர்ந்து பாடப்படுவதைக் காணலாம். இப்பாடல்களைப் பாடுபவர்கள் ஓதுவார்கள் எனப்படுகின்றனர். இவ்வோதுவார்கள் முறையாகத் தமிழிசை கற்றவர்கள். ஆகவே நாளும் நல்ல தமிழில் இன்னிசையில் பாடி இறைவனைப் பரவுவதைக் காணலாம். ஒவ்வொரு சிவன் கோவிலிலும் அக்கோயிலின் தலபுராணமும், அக்கோயிலுக்கான தேவாரப் பாடல்களும் ஓலைச்சுவடியில் எழுதப்பட்ட அழகிய சுவடிப் பலகையில் அடுக்கப்பட்டு அவற்றிற்கும் தூப தீப பூசைகள் செய்யப்பட்டு வழிபாடு நடத்தப்படுவதை இன்றும் நடைமுறையில் காணலாம்.

வீர சைவர் என்ற வகையினரும் சிவபிரானிடத்து நீங்கா அன்புடையோரும் தங்களுக்கு ஏதேனும் துன்பம் ஏற்பட்டாலும் அல்லது ஏதேனும் ஒரு காரியம் நடத்தலாமா வேண்டாமா என்ற ஐயம் ஏற்பட்ட காலத்தும், ஒரு பயணத்தை மேற்கொள்ளலாமா வேண்டாமா என்ற சிந்தை தடுமாறும் காலத்தும் ஒரு பெண்ணின் பெயர் இராசி குறித்தும் திருமண முடிவெடுக்கும் காலத்தும் பன்னிரு திருமுறைகளில் அமைந்த தேவாரம் அல்லது பெரியபுராணம் ஆகிய நூல்களில் கயிறிட்டுப் பார்த்து ஆரூடம் பார்க்கும் பழக்கம் இன்று நடைமுறையில் இருப்பதைப் பார்க்கலாம்.

இதுபோலப் பூக்கட்டி பார்க்கும் பழக்கமும் உண்டு. ஒரு நூலில் பூவைக் கட்டி இறைவன் திருமுன் போட்டு எடுப்பதற்கு திருஉளச்சீட்டு என்பர். அதாவது திரு என்பது இறைவனைக் குறிக்கும். அந்த இறைவனின் உளநோக்கு எவ்வாறு உள்ளது என்பதைப் பூக்கட்டி பார்த்தல் முறையில் மக்கள் அறிவதை இன்றும் நடைமுறையில் உள்ளதைக் காணலாம்.

இந்த உலகத்தைச் சிவபிரான்தான் ஆள்கிறார் என்பது சைவ சமயக் கருத்து. ஒவ்வொரு ஆண்டும் தமிழ் வருடப் பிறப்பு அன்று அந்தந்த தலத்தில் எழுந்துள்ள இறைவனுக்கு முன்னே அக்கோயில் நிர்வாகக் கணக்கு வழக்குகளைச் சமர்ப்பிப்பதைப் பஞ்சாங்கம் கேட்டல் என இன்றும் ஒரு விழா நிகழ்வதைத் திருக்கோயில்களில் காணலாம்.

ருது ஜாதகம்

ஒரு குடும்பத்தில் பெண் குழந்தை பிறந்த அது வளர்ந்து பருவம் எட்டிய பொழுது அப்பெண்ணுக்குச் செய்யும் சடங்கை பூப்பெய்தல் விழாவாகக் கொண்டாடுவர்.

ஒரு பெண் குழந்தை வார நாளில் எந்தத் திதியில் எந்த நேரத்தில் பூப்பெய்தது என்பதை அறிந்து அதற்கான எதிர்கால வாழ்க்கை எவ்வாறாக இருக்கக்கூடும் என்பதற்கான சோதிடத்தை ருது சோதிடம் என வடநூல் கூறும். தமிழகத்தில் பொதுவாக இச்சடங்கு தாய் வீட்டுச் சடங்காகத் தாய்மாமன் தலைமையேற்று நடப்பதாக அமையும். இந்நிகழ்வு அவரவர் பொருளாதார அமைப்பிற்கேற்ப 7, 11, 16 ஆகிய வரையறைக்குட்பட்ட நாட்களில் நடைபெறும். இக்காலகட்டத்தில் பூப்பெய்த பெண்ணுக்கு ஒரு நாளைக்கு ஒரு அலங்காரமாக கலைமகள், திருமகள், மலைமகள் மற்றும் ஆண்டாள் போன்ற இறைவர்களை ஒப்பனையாகப் புனைந்து காட்டுவர். இந்நிகழ்வு நடைபெறும் பொழுது பெண்கள் பாட்டுப் பாடியும், ஆட்டம் ஆடியும் மற்றவர்களை மகிழ்விப்பர். இவ்விழா நடைபெறும் வேலையில் அப்பெண்ணுக்குத் தேவையான ஊட்டச்சத்தும் நல்ல உணவும் பெற்றோர் தருவர்.

நிகழ்வைக் காண வருபவர்கள் பல அன்பளிப்புகளையும் நல்குவர். ஆகவே ஒரு குடும்பத்தில் ஒரு பெண்ணுக்கு அமையும் சிறப்பான நிகழ்வுகளில் பூப்பெய்தல் என்பது முதலாவதாகவும், முக்கியமானதாகவும் அமைகிறது. தாய் வீட்டில் நடைபெறும் தனிப்பெரும் நிகழ்வாக இதனைக் கருதலாம். ஆகவேதான் இந்நிகழ்வை மஞ்சள் நீராட்டல் என்ற பெயரில் இன்றும் கொண்டாடி வரப்படுகிறது.

பொதுவாகப் பூப்பெய்திய பெண் அக்காலகட்டத்தில் இருந்து மூன்று அல்லது ஏழு ஆண்டுகளுக்கு உள்ளாக அப்பெண்ணுக்கு ஏற்ற வரனைப் பார்த்துத் திருமணம் செய்து தருவர். இத்திருமணம் என்பது பெண் வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் இணைந்து நடத்தும் பெருவிழாவாகும். ஆகவேதான் இவ்விழாவை மணவிழா என்கின்றனர். இம்மணவிழா உறுதி செய்வதற்கு முன்னர் இரு வீட்டாரும் அமர்ந்து தங்களுக்குள் ஓர் ஒப்பந்தம் செய்து கொள்வர். இதற்கு நிச்சயதாம்பூலம் எனக் கூறுவர். இந்த நிச்சயதாம்பூலத்தை நடத்தும்போது கல்யாண நாளை உறுதி செய்து கொண்டு அதனை அப்பத்திரத்தில் பதிவு செய்வர். இதனை அக்காலத்தில் மண ஓலை எழுதுதல் என்பர். இம்மணவோலை எழுதப்பட்ட பின்னர் அதனை இரண்டு பிரதிகள் எடுத்துப் பெண் வீட்டாரும், மாப்பிள்ளை வீட்டாரும் ஐயரை முன் வைத்து தங்களுக்குள் அந்த ஓலையை ஒருவருக்கு ஒருவர் மாற்றிக் கொள்வர். இதனை நடைமுறை வழக்கில் கல்யாண ஓலை எழுதுதல் என்பர். திருவிளையாடற் புராணத்திலும், பெரிய புராணத்திலும் தடுத்தாட்

கொண்ட புராணம் என்ற பகுதியில் சுந்தரமூர்த்தி நாயனார் திருமண நிகழ்வு பெரிதாகப் பேசப்பட்டுள்ளதைக் காணலாம்.

நடுகல் குறிப்பு

இறந்துபட்ட வீரர்களுக்கு ஈமக்கடன் ஈந்து கல் நட்டு வழிபடுவது பண்டைத் தமிழ் மரபு. இவ்வாறு நடப்பட்ட கற்களையே நடுகல் என்று பொதுப்படையாக அழைக்கப்படுகிறது. வீரர்களுக்காக ஊன்றிய கற்களே அதிகமாகக் காணக் கிடைப்பதாலும், புகழ் நிறுத்தி இறந்துபட்ட வீரனுக்குக் கல் நடுவது இலக்கியங்களில் குறிக்கப்படுவதாலும் பொதுவாக இதனை வீரவழிபாடு என்பர்.

பெரும்பாலும் நடுகற்கள் ஊர்களின் புறத்தே காணப்படுகின்றன. ஒரே இடத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நடுகற்கள் காணப்படுவதும் உண்டு. ஒரே போரில் இறந்த இரண்டு வீரர்களுக்கு நடுகற்கள் ஒரே இடத்தில் காணப்படுவதும் உண்டு. ஒரே போரில் இறந்த இரண்டு வீரர்களின் உருவமும் பெயரும் ஒரே நடுகல்லில் பொறிப்பதும் உண்டு. ஒரு போரில் இரண்டு ஊர்களில் வீழ்ந்த மறவர்களுக்கு அங்கங்கே நடப்பட்ட கற்களும் உண்டு.

வட ஆற்காடு மாவட்டத்தில் சாத்தனூர் அய்த்தான் பாளையம் என்னும் ஊர்கள் அருகில் உள்ளன. பராந்தகச் சோழனுடைய நான்காம் ஆட்சி ஆண்டில் ஆநிரைகளைக் கவர்ந்து சென்றனர். அவற்றை மீட்கும் பொழுது அய்த்தான் பாளையத்தில் ஒரு வீரன் வீழ்ந்தான். சாத்தனூரில் மற்றொரு வீரன் வீழ்ந்தான். அய்த்தான் பாளையத்தில் ஒன்றும் சாத்தனூரில் ஒன்றுமாக இரு நடுகற்கள் கிடைத்துள்ளன. தவிர சாத்தனூரில் முதலாம் மகேந்திரவர்மன், முதலாம் நரசிம்மவர்மன், இரண்டாம் நரசிம்மவர்மன், பராந்தகன் ஆகிய மன்னர்கள் காலத்தில் வீழ்ந்த மறவர்களுக்கு நடப்பட்ட கற்கள் ஒரே இடத்தில் காணப்படுகின்றன. அதிலிருந்து ஊரின் புறத்தே தேர்ந்தெடுத்து ஈமக்காடுபோல் பாவித்து அங்கு வீழ்த்துபட்ட வீரர்களுக்கெல்லாம் நடுகல் எடுத்தனர் என்று கொள்ள இடமிருக்கிறது.

பெயர்கள்

நடுகற்கள் வட ஆற்காடு, தென் ஆற்காடு, சேலம், தருமபுரி மாவட்டங்களில் வேடியப்பன் என்று அழைக்கப்படுகின்றன. இவை இருக்கும் இடத்தை வேடியப்பன் கோயில் என்று அழைப்பர். வேடர், கிருஷ்ணாரப்பன், மீனாரப்பன், சன்யாசியப்பன் என்ற பிற்காலப் பெயர்களிலும் பல நடுகற்கள் காணப்படுகின்றன.

இந்நடுகற் கோயில்களுக்குச் சில சிறப்புப் பெயர்களும் உண்டு. சிறைமீட்டான் கோயில் என்பது அவ்வகையில் ஒன்று. சிறைமீட்டான் என்பது 'நிறைமீட்டான் என்ற சொல்லின் திரிபோ என ஐயமுறுவர்

தொல்லியல் அறிஞர் நாகசாமி, ஊமை வேடியப்பன், இரட்டை வேடியப்பன், சாவு மேட்டு வேடியப்பன், நத்தமேரி வேடியப்பன் எனப் பல பெயர்கள் குறிப்பிடப்பட்டுள்ளன.

அமைப்பு

நடுகல்லில் வீரனுடைய உருவம் சமர்புரியும் நிலையில் காண்பிக்கப்பட்டிருக்கும் கரங்களில் வில்லும் - அம்பும் ஏந்தியோ அல்லது வாளும் - கேடயமும் ஏந்தியோ வீரன் காட்டப்பட்டிருப்பான். சிலவற்றில் ஒரு கரத்தில் வில்லும், மறுகரத்தால் இடையில் உள்ள குறுவாளை உருவும் நிலையிலும் காட்டப்பட்டிருக்கும். வீரன் எதிர்த்து நின்று வீழ்ந்துபட்டான் என்னும் வகையில் முன்புறத்திலிருந்தே அம்பு பாய்வதுபோல் காட்டப்பட்டிருக்கும்.

நடுகற்களில் மன்னன் ஆட்சி ஆண்டு வீழ்ந்த வீரனின் பெயர் அவனைப் பற்றிய செய்திகள், போர், ஆனிரைகள் கொண்டது, ஆநிரை மீட்டது ஆகியவற்றில் எதனால் வீழ்ந்தான் முதலியன பொறிக்கப் பட்டிருக்கும்.

நடுகல் நடும் முறை

தொல்காப்பியம் புறப்பொருள் வெண்பாமாலை ஆகிய நூல்களிலிருந்து நடுகற்கள் எவ்வாறு நடப்பட்டன என்பதற்கான குறிப்புகள் உள்ளன. தொல்காப்பியம் பின்வருமாறு குறிப்பிடுகிறது.

காட்சி கால்கோள் நீர்ப்படை நடுதல்
சீர்த்தகு மரபில் பெரும்படை வாழ்த்த லென்று
இருமூன்று மரபிற் கல்லொடு புணர (தொல். 66)

இதைப் புறப்பொருள் வெண்பாமாலை கற்காண்டல், கற்கோநிலை, கல்நீர்ப்படுத்தல், கல் நடுதல், கலமுறைப் பழிச்சல், இல்கொண்டு புகுதல் என்று குறிக்கிறது.

காட்சி

கல் உள்ள இடம் சென்று கல்லைத் தேர்ந்தெடுப்பதும் (காண்டலும்) கொண்டு வந்து செய்வன செய்து நாட்டி, பின் கடவுளாகக் காண்பது காட்சியாகும்.

கல் தேர்ந்தெடுக்கச் செல்லும்போது மறவர் அனைவரும் சேர்ந்து செல்வர். அவருடன் பாணரும் கூத்தரும் செல்வர். உரிய கல்லைத் தேர்ந்தெடுத்து அவ்விடத்தில் மாலையும், மலரும், மதுவும் அளித்துக் கல்லைக் கொள்வது வழக்கம். அப்பொழுது புகை எழுப்பிட, மணி இசைத்து, இறந்துபட்ட வீரனுக்குத் தக்க கல் இதுவென்று பறை ஒலிப்பக் கல் கொள்வர். இவ்வாறு கொணர்ந்த கல்லை வண்டியில் ஏற்றி, பிறகு அனைவரும் சூழ வந்து அதை முறையாகக் கழுவி வாசனை உடைய

மஞ்சள் நீராட்டி நீர்வாவியில் இடுவது வழக்கம். இதை நீர்ப்படை செய்தல் என்பர்.

பின்னர் மலரும், மதுவும் செம்மறி ஆட்டுப் பலியும் கொடுத்து மயிற்பீலி சூட்டி, படலை சாற்றி, பில்லியம் இயம்ப விழா எடுத்து நடுவது நடுதலாகும். அவன் பெயர் குறித்துக் கவின் பெற நட்டுதல் என இதைக் குறிப்பர். இந்நிலையில்தான் இறந்துபட்ட வீரனின் உருவமும் பெயரும் அக்கல்லில் பொறிக்கப்படுவதாகும். இவ்வாறு நடப்பட்ட கல்லுக்குக் கோயில் பெரும்படை என்று தொல்காப்பியம் கூறுகிறது. இவ்வாறு நாட்டப்படும் கல்லுக்கு, கோயிலும் மதிலும் வாயிலும், ஏனைச் சிறப்புகளும் படத்தல் பெரும்படை என்று நச்சினார்க்கினியரும் கூறுகிறார்.

வழிபாடு

இன்றும் இந்நடுகற்களைக் கடவுளாக நினைத்து மக்கள் வழிபட்டு வருகின்றனர். ஆண்டுதோறும் இவற்றிற்குச் சிறந்த வழிபாடுகள் விழாக்கள் நடக்கின்றன. இவற்றின் முன்னே கரும்பாலான தலமும் என்று நட்டு வைக்கப்பட்டிருக்கின்றன. அவற்றிற்கும் எண்ணெய் பூசி, மாலை அணிவித்து வழிபடுகின்றனர். இவ்வாறு படைக்கலன்களையும் நட்டு அவற்றையும் வழிபடுவது பண்டைய மரபு என்று புறப்பொருள் வெண்பாமாலை பாடும்.

வாட்புகா வூட்டி வடிமணி நின்றியம்பக்
கோட்புலி யன்ன குருசில் கல்

ஆட்டைப் பலி கொடுப்பதும் மது அளிப்பதும் விழாக் காலங்களில் நடைபெறுகின்றன.

நாரறி சிறுகலத்து உருப்பவும்
கொள்வன் கொள்ளோ

என்று புறப்பாட்டு இம்மரபைக் குறிக்கிறது. நடுகற்களில் பெரும்பாலும் வீரன் காலருகே காணப்படும் 'கெண்டி மதுக்குடத்தின் சாயலாகத் தோன்றுகிறது. இந்நடுகற்களின் முன் சுட்ட களிமண்ணால் ஆன குதிரைகள் ஆண்டுதோறும் வைக்கப்படுகின்றன. வீரனுக்கு எடுக்கப்பட்ட கல் ஆதலின் குதிரையின் உருவத்தைப் பெரிதாகச் செய்து வைத்து வணங்குவர் போலும்.

இது தவிர சிறு அளவில் சுட்ட களிமண்ணால் ஆன ஆண், பெண் குழந்தைகள் உருவச் சிலைகளும் வைக்கப்பட்டுள்ளன. நோய் வாய்ப்பட்டோர் சுகம் வேண்டி விரதம் முடித்ததன் நினைவாக இவற்றை அளிப்பது மரபு என்பர். இந்நடுகற்களை வழிபடுவதால் நாடு வளம்பெறும் என்றும், குடிமக்கள் சிறப்பெய்துவார் எனவும் மக்கள்

கருதுகின்றனர். மழை பெய்யாது நாடு வறண்டபோது இந் நடுகற்களுக்குச் சிறந்த வழிபாடு என்றும் நடத்துகின்றனர்.

துன்பியல் நிகழ்வில் ஓலைச் சுவடிகள்

பொதுவாக ஒரு வீட்டில் மகிழ்ச்சி தரும் காரியங்களும் அல்லது இன்பத்தை விளைவிக்கும் துயரமான காரியங்கள் ஏற்படும்போது அவற்றையும் ஓலைச்சுவடிகளில் குறித்து வைக்க தமிழர்கள் தவறுவதில்லை. எடுத்துக்காட்டாக ஒரு வீட்டில் யாரேனும் ஒருவர் இறந்துபட்டால் அச்செய்தியை அக்காலத்தில் மற்றவர்களுக்குத் தெரிவிக்க ஓலைச்சுவடிகளில் எழுதியே அனுப்புவர். அதேபோல அவருக்கு நடக்கும் இறுதிச்சடங்கு அதாவது 14ஆம் நாள் சடங்கு குறித்து இந்த நாளில் இந்த இடத்தில் இன்ன திதி நட்சத்திரத்தில் அச்சடங்கு நடைபெற உள்ளதை ஓலையில் குறித்து அனுப்புவர். இதனை வடமொழியில் உத்தரக்கிரியை என்று குறிப்பிடுவர்.

இன்பியல் நிகழ்வில் ஓலைச் சுவடிகள்

இதேபோல நன்னிகழ் வாழ்விலே திருமணம் பற்றியும் ஈண்டு குறிப்பிடுவது தகும். ஒருவருக்குத் திருமணம் நிச்சயிக்கப்படுமேயானால் அந்நிகழ்வை குறித்து எழுதப்படும் கல்யாண ஓலைக்கு வடமொழியில் விவாக முகூர்த்தப் பத்திரிகை என அழைக்கப்படும். இப்பத்திரிகையில் வரும் செய்திகள் அந்த அந்த குடும்பத்தின் சடங்குமுறை சார்ந்ததாக அமையும். பத்திரிகையில் தங்கள் குலதெய்வப் பெயரை முன்னே சுட்டி அடுத்தபடியாக மணமகன், மணமகள் பெயருக்கு முன்னே திருமண நாள், திதி, நட்சத்திரம், ஓரை முதலியவற்றைக் குறிப்பிட்டுவிட்டு அதன் பின்னர் மணமகன், மணமகள் பாரம்பரியத்தை உணர்த்தும் வகையில் தந்தை, பாட்டன் பெயரை சுட்டிக்காட்டி அவர்தம் வழிவந்த மாப்பிள்ளையின் பெயரைச் சுட்டுவது இன்றும் மரபாக உள்ளது.

பூப்பெய்தலில் தாய்மாமனுக்குத் தரும் முக்கியத்துவம் இங்கு திருமண அழைப்பாளர் என்ற வகையில் தந்தை தாயோடு தாய்மாமன் பெயரும் இடம் பெறும். சில குடும்பங்களில் பங்காளிகள் என அமையும் சிற்றப்பன், பெரியப்பன் பெயர்களும் இடம்பெறும். இப்படியான அமைப்புடைய திருமண நிகழ்வு குறித்த செய்தி பழக்கம் சிலப்பதிகாரத்திலேயே காணப்படுகிறது. அச்சு இயந்திரம் வந்த பின் ஓலைக்கு இணையாக காகிதம் பயன்படுத்தப்படுகிறது. இன்றைக்கு வண்ண வண்ண திருமண அழைப்பிதழ் அட்டைகள் அங்காடிகளில் கிடைப்பதைக் காணமுடிகிறது.

குடும்பம் தொடர்பானவை (புதுமனைப் புகுவிழா)

இது அக்காலத்தில் புதிதாகக் கட்டப்பட்ட வீட்டில் குடியேறுவதற்கான சடங்கு ஆகும். இந்நிகழ்வைத் தமிழர்கள் விருந்தோடு கொண்டாடி வருகின்றனர். அவரவர் மத நம்பிக்கைக்கு ஏற்ப வழிபாடுகளும் அவரவர் சமூகக் குழு அமைப்பிற்கு ஏற்ப சடங்குகளும் இணைந்து புதுமனைப் புகுவிழாவாக நடத்தப்படும். இதனை வடமொழியில் கிரஹப்பிரவேசம் என்பர். தமிழில் மனை புகுதல் என்ற முறையில் ஓலை எழுதப்பட்டு, தகவல் தரப்பட்டுள்ளதை அறிய முடிகிறது.

ஆன்மீகம் (இறை வழிபாடு)

பொதுவாக இறைவனை நாளும் வழிபடுதல் என்பது பொதுநிலை. ஆயின் துன்பம் ஏற்படுங்காலை அல்லது பிறரால் துன்பம் ஏற்பட்டகாலை அக்கொடிய துன்பத்தை முறியடிப்பதற்கு அக்காலத்தில் இறைவனை மையமாக வைத்து மந்திரம், மாந்திரீகங்கள் வழி தீர்வுகள் காணப்பட்டன.

நிறைவுரை

இதுவரை சமுதாயத்தில் பல்வேறு நிகழ்வுகளில் ஓலையின் பயன்பாடு குறித்து அறியப்பட்டது. நாகரிகத்தின் வேராக விளங்குவது கல்வி. அக்கல்விக்கு ஊடகமாக விளங்குவது அதாவது எழுதுபொருளாக விளங்குவது தமிழ்நாட்டில் பனை ஓலையே சிறந்த சாதனமாக விளங்கியுள்ளது. ஓலை (தவிர) செப்பேடு, கல்வெட்டு, துணி, மரப்பட்டை போன்றனவெல்லாம் பயன்பட்டுள்ளன. ஆனால் பனை ஓலைதான் பெரும்பாலான சமூக நிகழ்வுகளில் பேராளுமை பெற்றுள்ளதை இக்கட்டுரை மூலம் தெள்ளிதின் உணரலாம்.

துணைநூல்

தமிழில் ஆவணங்கள், பதிப்பாசிரியர்கள்: முனைவர் ஆ. தசரதன், முனைவர் தி. மகாலட்சுமி, முனைவர் சூ. நிர்மலாதேவி, திரு. த. பூமிநாகநாதன். உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், தரமணி, சென்னை.

சுவடிகளின் பனுவலாக்கம்

தி. உமாதேவி
தில்லி பல்கலைகழகம்

சுவடிகள் பற்றிய ஆய்வுகள் பெரும்பாலும் உள்ளடக்கத்தைக் கொண்டே அமைகின்றன .அவ்வாறு ஆய்வு செய்யும்போது பல்வேறு கருத்துகளை கவனத்தில் கொள்ளவேண்டியது அவசியம்.

சுவடிகள் பற்றிபல்வேறு ஆய்வுகள் வெளிவந்துள்ளன. அவை சுவடிகளின் உள்ளடக்கங்கள், பாதுகாப்பு முறைகள், படியெடுத்தல், சமுகப் பண்பாட்டு செய்திகள் ஆகியன பற்றியே நிகழ்த்தப்பட்டுள்ளன. ஆனால் சுவடிகள் வாய்மொழியிலிருந்து எழுத்துநிலையாக்கம் செய்யும் முறை குறித்து இதுவரை ஒரு சில ஆய்வுகளே நிகழ்ந்துள்ளன. இவ்வாய்வு வாய்மொழியிலிருந்து எழுத்தாக்கம், பனுவலாக்கம் (Textualization) முறை பற்றியும், அதற்குஅடிப்படையாகச் செயல்பட்ட சாதி, சமய அரசியல் பின்புலம் பற்றி அறிமுக ஆய்வாகஅமைகிறது

கல்வியறிவு உள்ளவர்கள் எல்லோரும் சுவடியில் எழுது வதில்லை. சுவடியில் எழுதியவர்கள் எல்லோரும் நிரம்ப படித்தவர்களும் இல்லை. ஓரளவு கல்வியறிவு கொண்டவர்களாக இருந்தால் அவர்கள் சுவடி எழுதுவதைத் தொழிலாகக் கூட மேற்கொள்ளுவார்கள். தேவையான அளவுக்கு கல்வியறிவு இல்லாதவர்கள் சுவடி எழுதியதால் தான் பல பிழைகள் ஏற்பட்டுவிட்டன. இப்படித்தான் பழைய இலக்கியங்களில் பல பாடல்களுக்குப் பாடபேதம் நிறைய ஏற்பட்டது. புலவர் எழுதியதற்கு மாறான சொல் உள்ள பாடல்களைப் பாடபேதம் உள்ளதாகக் குறிப்பிடுவார்கள்

சங்ககாலத்திலும் அதற்குப் பிறகும் சமணசமயத்தைச் சேர்ந்த துறவிகள் சுவடியில் இலக்கியங்களை எழுதுவதை ஒரு கடமையாகச் செய்து வந்தார்கள். அந்தச் சுவடிகளைப் பணமோ பொருளோ கொடுத்துத் தனவந்தர்கள் வாங்குவார்கள். அப்படி அவர்கள் எழுதியதெல்லாம் பெரும்பாலும் நீதி நெறிமுறைகளைப் போதிக்கும் அறநூல்கள்தான்.

தங்கள் வீட்டில் நடக்கும் சுபகாரியங்கள் போன்ற நிகழ்ச்சிகளில் அல்லது நீத்தார் நினைவு நாட்களில் இச்சுவடிகளை தனவந்தர்கள் தானமாகக் கொடுப்பது வழக்கம். இதைக் கிரந்த தானம் என்று கூறுவார்கள்.

சாஸ்திரதானம் என்றும் சொல்வதுண்டு. கிரந்த தானம் என்பது பழங்காலத்தில் சமணர்களால் கடைப்பிடிக்கப்பட்டது. பிறகு சைவ சமயத்தாரும் இந்த வழக்கத்தை மேற்கொண்டனர். நீத்தார் நினைவு நாட்களில் நிலையாமையைப் பற்றி குறிப்பிடும் தேவாரம், திருவாசகம் போன்ற நூல்களிலிருந்து சில பாடல்களை அச்சிட்டு சிறிய நூலாக விநியோகம் செய்யும் பழக்கம் பலவிடங்களில் உண்டு. இலங்கையில் வாழும் சைவ வெள்ளாளர்கள் மத்தியில் கிரந்த தானம் செய்யும் வழக்கம் பெரிய அளவில் இன்றும் உண்டு.

சுவடியை எழுதுவதும் எழுதிய சுவடியை காப்பாற்றுவதும் கடினமாக இருந்ததால்தான். கல்வி என்பது அந்த நாட்களில் மனப்பாடம் செய்யும் முறையைச் சார்ந்து இருந்தது. சுவடி எழுதியவர்கள் எத்தனை தவறு செய்திருக்கிறார் எத்தனை சொற்களை விட்டிருக்கிறார் என்று தெரியாது. பல புலவர்கள் எழுதிய சொற்களை திரித்தும், தவறாகவும் எழுதப்பட்டது. பல நூற்றுக்கணக்கான நூல்கள் அழிந்துபோய்விட்டன. தப்பித் தவறி சைவமடங்களில் அகப்பட்டுக் கொண்ட மாற்றுச் சமய நூல்கள் கவனிப்பாரின்றி அழிந்துபோயின. மிகச் சிறிய அளவிலான சுவடிகள் மட்டுமே காப்பாற்றப்பட்டன. அந்த நாட்களில் யாரிடமாவது நூல் ஒன்றின் சுவடிப்பிரதி இருப்பதாக அறிந்தால் பலர் அவரை நாடி வந்து கையால் எழுதி பிரதி எடுத்துச்செல்வார்கள.

பனுவலாக்கம்

வாய்மொழி வழக்காறுகள் எழுத்தில் கொண்டு வருவது மிகவும் கடினமான காரியம். அதுவும் பனை ஓலைகளில் எழுதுவது மிகவும் கடினமான ஒன்று. அதற்குப் பயிற்சியும், பொறுமையும் மிகவும் முக்கியம். ஓர் எளிய மனிதனால் அதனை எழுதமுடியாது. பழைய காலங்களில் பனை ஓலைகளில் எழுதுவதற்கென்றே பயிற்சி பெற்ற எழுத்தாளர்கள் இருந்தனர். இவர்கள் எழுத்தர்கள், லிபிகர்கள், (copyist) எனப்பட்டனர், பனை ஓலைகளில் எழுதுவதே தொழிலாகக் கொண்ட பல குடும்பங்கள் இருந்ததாக டி. கணேசன் குறிப்பிடுகிறார். ஒரு குறிப்பிட்ட குடும்பத்தைச் சார்ந்த மக்கள் பனை ஓலையில் படியெடுத்தல் பயிற்சி பெற்று அதனை தொழிலாகச் செய்து வந்தனர். அவர்கள் எழுத்தறிவு பெற்றவர்களாகத் திகழ்ந்தனர். அது மட்டுமன்றி யுவான் சுவாங் என்ற சீனத் துறவிக்கு 7ஆம் நூற்றாண்டில் 20 லிபிகாரர்கள் உதவியால், சீனாவிற்கு கொண்டு செல்ல வேண்டிய நூல்களை எழுதியதாக ஆய்வுகள் குறிப்பிடுகின்றன து. நல்ல எழுத்தர்களுக்கு அதிக தேவை (demand) இருந்தது. ரச்சுகா என்ற பெண் எழுத்தர் காதல் கடிதங்கள் எழுதும் பணியில் இருந்து வந்துள்ளார். சோம தேவ சூரி என்ற பெரிய சமண அறிஞர் 10ஆம்

நூற்றாண்டைச் சேர்ந்தவர். தனது என்ற புகழ் பெற்ற யஷாதிலகா காப்பியத்தை எழுத அவரின் உதவியை பெற்றதாகக் குறிப்புகள் காணப்படுகின்றன.

மகாபாரதம், இராமாயணம், பாகவதம் போன்ற புராணங்கள் மக்களிடம் பரப்பப்படுவதற்காக எழுதி வழங்கப்பட்டன. இதன் வாயிலாகக் கல்வி கற்பிக்கும் முறையாகக் கருதப்பட்டது. கிராம மக்கள் தங்கள் வாழ்வியல் தொடர்பான செய்திகளை (சாதகம்) ஏடுகளில் எழுத்தர்களைக் கொண்டு எழுதினர். இதன் வாயிலாக அறிஞர்களுக்குத் தங்கள் வட்டார பற்றிய குறிப்பாகக் கொடுத்தனர். இக்குறிப்புகளின் உதவியால் மாணவர்களுக்குப் பண்பாட்டு ஒழுக்கங்களை அவர்கள் பயிற்றுவித்தனர். பெண்கள் சுவடி எழுதுதலில் ஈடுபாடு கொண்டு இருந்தனர் அப்புமாபி என்ற பெண் பொன்னாவின் சாந்தி புராணத்தையும் சமணத் தீர்த்தங்கரின் சாந்தி நதாவின் சமய வாழ்வியல் செய்திகளையும் ஆயிரம் பனை ஓலைகளில் எழுதி வழங்கியதாகக் குறிப்பு தெரிவிக்கிறது. பல்வேறு சமய பெரியோர்களின் சமயம் சார்ந்தக் குறிப்புகளை பெண் எழுத்தர்கள் உதவி செய்துள்ளனர். அவர்கள் அது மட்டுமின்றி சமய பனுவல்களை பலர் முன்னிலையில் படிப்பதற்கும் தமது சொந்த பயன் பத்திற்கும் ஏடுகளை எழுதியுள்ளனர். எழுத்தர்கள் சமூகத்திடம் மிகப் பெரிய மரியாதை பெற்றிருந்தனர். அரசர்களும், அறிஞர்களும், குடிமக்களும், அவர்களை மிகவும் மதித்தனர். உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்தவர்கள் தாங்கள் எழுத்தறிவையும், அழகாக எழுதுவதற்கும் பயிற்சி பெற விரும்பினர். கவிஞர்கள் தங்கள் கைகளில் எழுத்தாணியும், ஏடும் எப்போதும் வைத்திருந்தனர். ஏனெனில் அவர்கள் நினைத்ததை உடனடியாக எழுதுவதற்கு அவர்களது கையெழுத்து சிறப்பாக அமையாது என்று நினைத்ததால், இதற்காக எழுதுவதற்கென்றே பயிற்சி பெற்றவர்களைக் கொண்டு எழுதினர். எழுத்தர்கள் இதனை மிகச் சிறப்பான கருத்தில் கொண்டு தங்கள் இஷ்ட தெய்வத்தின் பெயரை முதலில் எழுதுவர். மேலும் இவர்கள் ஊர்ஊராகச் சென்று எழுதும் தொழிலை செய்தனர் ஊர் மக்கள் அவர் வந்திருப்பது தெரிந்தால் மிகவும் விருப்பத்துடன் வரவேற்பர். அந்த பகுதியில் அமர்ந்து எல்லாவற்றையும் பதிவு செய்தனர். காலியான பகுதியில் படங்கள் போன்றவற்றை வரைவர். எழுதுவதில் தேர்ச்சிப் பெற்றவர்கள் வட்டம், அரை வட்டம், பல்வேறு படங்களை பதிவு செய்வர். இவர்களை மூன்று பிரிவுகளாகப் பிரிக்கலாம்.

1. அரசனால் நியமிக்கப்பட்டவர்கள்.
2. தங்களின் பணியாகவே செய்தவர்கள்.
3. பொழுதுபோக்கு மற்றும் சேவை காரணமாகச் செய்தவர்கள்.

முதல் நிலையில் உள்ள எழுத்தர்கள் அரசனாலும், அரசு சார்ந்த அலுவலகங்களிலும் நியமிக்கப்பட்டனர். இவர்கள் அரசு மற்றும் அரசு சார்ந்த புனைவுகளை பதிவு செய்திருக்கலாம். இவை அரசன் பண்டிதன் புலவர்கள் ஆவர் இவர்களால் எழுதப்பட்ட இலக்கியங்கள். செவ்விலக்கியங்கள் எனலாம். இரண்டாம் பிரிவினர் சுயதொழில் செய்பவர்கள். இவர்கள் ஊர்தோறும் செல்வர். சித்தமருத்துவம் ஜோதிடம் நாட்டுப்புற வழக்காறுகள் போன்ற பனுவல்களை ஊர் தலைவர்களால் எழுத சொல்லப்பட்டு பனுவலகம் செய்யப் பட்டிருக்கலாம். நாட்டுப்புற சுவடிகளில் பெரும்பாலானவை கதைப் பாடல்கள் இவை கோயில்களில் நிகழ்த்தப்பட கலைஞர்களுக்கு உதவ பனுவலாக்கம் செய்யபட்டிருக்கலாம். சித்தமருத்துவம் சோதிடம் தொடர்பான சுவடிகள் ஆசிரியர் மாணவர்களால் பனுவலாக்கம் செய்யப்பட்டன. எனவே அவை அதிக எண்ணிகையில் கிடைக்கின்றன. மூன்றாவது பிரிவினர், தங்களின் ஆர்வத்தினால் செய்தவர்கள். இவர்களது படைப்புகளில் மொழி, இலக்கணம் மற்றும் எழுத்துப் பிழைகள் காணப்படும். மேலும் இவர்களே அந்நூலின் அடிக்குறிப்பில், இறுதியில் மிகவும் சிரமத்துடன் எழுதப்பட்டது எனவே கவனத்துடன் பாதுகாக்கவும் என்று எழுதி முடிப்பார். அரசு சார்ந்த பணியின் எழுத்தர்களின் பனை ஓலைகளில் அரசு முத்திரைகள் பதிக்கப்பட்டிருந்தன. ஒரு பெர்சியன் தூதர், அப்துர் ராசக் என்பவர் 1442இல் இந்தியர்களின் வரவு செலவு கணக்குகளை பனையோலைச் சுவடிகளில் எழுதுவதற்கு எழுத்தர்கள் இருந்ததாகக் குறிப்பிடுகிறார். பார் போசா என்ற போர்த்துகீசிய பயணி ஒருவர் பனையோலைகளில் பயிற்சி பெற்ற எழுத்தாளர்கள் அதிக வேகமாக எழுதும் தன்மையினைக் கண்டு ஆச்சரியப்பட்டுள்ளனர். இறுதியாக, சுவடிகள் வாய்மொழி மரபிலிருந்து எழுத்து மரபிற்குப் பனுவலாக்கம் பெறுவதில் அரசு உருவாக்கம் நாட்டுப்புறச் சார்பு சமண பௌத்த சமயங்களின் ஆதிக்க அரசியல் செயல்பட்டிருப்பதை உணரமுடிகிறது. எனவே, சுவடிகளின் எழுத்துருவாக்கம் மொழியியல், பண்பாட்டியல் வரலாற்றியல் சமயவியல் பின்புலன்களுடன் உருவாக்கம் பெற்று இருப்பதை உணர்ந்து ஆய்வு மேற்கொள்ளவேண்டும்.

குறிப்புகள்

1. http://www.kamakoti.org/hindudharma/part14/chap20.htm
2. http://www.asianart.com/articles/tamsuks/
3. http://www.xlweb.com/heritage/asian/palmleaf.htm
4. http://en.wikipedia.org/wiki/Palm-leaf_manuscript
5. http://www.idc.iitb.ac.in/resources/dt-july-2009/Palm.pdf

6. http://www.asha.org/Research/Manuscript-Writing/

7. http://cancer.dartmouth.edu/res/writing_manuscripts.html

8. http://www.tamilheritage.org/thfcms/index.php/

9. http://www.chennaishopping.com/

10. http://en.wikipedia.org/wiki/Mackenzie

11. http://www.keetru.com/index.php

12. http://www.iiap.res.in/archives/pdfs/Perumal.pdf

13. Ritual, State, and History in South Asia: Essays in Honour of J.C. Heesterman - A. W. Van Der Hoek, Dirk H. A. Kolff, M. S. Oort - Google Books.

14. Examination and analysis of the Mackenzie manuscripts deposited in the ... - William Cooke Taylor, Madras Government oriental manuscripts library - Google Books

15. The MacKenzie Collection: A Descriptive Catalogue of the Oriental Colin MacKenzie -

வடமொழிச் சுவடிகளைத் தமிழ்ப்படுத்துதல்

இர.சந்திரமோகன்

முன்னுரை

ஈராயிரம் ஆண்டுப் பழமை கொண்ட தமிழ்நாட்டின் அரசியல், சமுதாய, பொருளாதார, பண்பாட்டு கலை வரலாற்றினைத் தெளிவாக அறிவதற்குச் சுவடிகள் பெரிதும் துணை செய்கின்றன. பல நூற்றாண்டுகளாகத் தமிழகத்தில் தமிழ்மொழியுடன் சமஸ்கிருத மொழியும் ஓர் இலக்கிய மொழியாக வழங்கி வந்தது. தமிழ் இலக்கிய வடிவங்களை சமஸ்கிருத இலக்கியம் தொடர்ந்து பாதித்து வந்தது மட்டுமின்றிச் சமஸ்கிருத மொழியிலேயே தமிழக ஆசிரியர்கள் பலர் இலக்கியங்களையும் படைத்தனர். மேலும் வடமொழியாளர்கள் தமிழ்ச் சொற்களையும் கருத்துகளையும் பழக்கவழக்க பண்பாடுகளையும் ஏற்றுக்கொண்டனர். அவ்வாறு ஏற்றுக் கொண்டமையால் தென்னாட்டவர்க்கே உரிய பரதம், சிற்பம் மற்றும் இசைக் கலையும் வடமொழியாளரால் ஏற்கப்பட்டு நூல்கள் பல வடமொழியில் படைத்தனர். அவ்வாறு படைக்கப்பட்ட பல நூல்கள் சுவடி வடிவில் உள்ளன. எனவே தமிழ்நாட்டின் வரலாற்றைப் பற்றி முழுவதுமாக அறியத் தமிழ் மட்டுமன்றிப் பிறமொழிச் சுவடிகளும் - குறிப்பாக வடமொழிச் சுவடிகளும் பயன்படும்.

வடமொழி பயிற்சியின்மையாலும், காலம் பல கடந்தமையாலும் வடமொழிச் சுவடியிலுள்ள ஆழ்கருத்துகளை அறியாது இடர்ப்படும் நிலை தற்போது ஏற்பட்டுள்ளது. மேலும் வடமொழி அச்சு நூற்களைப் படித்துப் பழகியவர்களுக்கு வடமொழி ஓலைச் சுவடியைப் படிப்பது என்பது கடினமான பணியாக இருப்பதாலும், வடமொழிச் சுவடிப் பதிப்பு பணிகளிலுள்ள பல்வேறு சிக்கல்கள் காரணமாகத் தனிநபர்கள் வடமொழிச் சுவடிப் பதிப்பு பணிகளை மேற்கொள்வது கடினமான செயலாகிவிட்டதால் மத்திய அரசும், பல்கலைகழகங்களும், சுவடி நிறுவனங்களும் இப்பணியில் தற்போது முனைப்பு காட்டத் தொடங்கியுள்ளது. எனவே வடமொழிச் சுவடிகளின் முக்கியத்துவம், அவற்றைப் பதிப்பிக்கும் பணிகளிலுள்ள பல்வேறு சிக்கல்களையும், அவற்றிற்கான தீர்வைக்காண இன்றைய தலைமுறையினருக்குத் தேவையான பயிற்சியை அளிக்க வேண்டிய தேவை எழுந்துள்ளது. மேலாண்மைக் கலையை வடமொழிச் சுவடிப் பதிப்பு பணிகளில் அறிமுகம் செய்வதன் வழியாகத் தற்கால மற்றும் எதிர்காலச்

சுவடியியல் அறிஞர்களின் சுவடிப் பதிப்புத் திறமைகளைப் படைப்பாற்றல் மிக்கதாக மாற்றி, அதன்மூலம் வடமொழிச் சுவடிகளைத் தமிழ்படுத்தும் பதிப்புத் துறைக்குப் புத்துணர்வு மற்றும் எழுச்சியை எவ்வாறு வழங்க இயலும் என்பதை உணர்த்துவதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

1. சமஸ்கிருதமொழியின் சிறப்பு

செம்மொழி தகுதித் பெற்ற ஒரு சில மொழிகளில் ஒன்று சமஸ்கிருதம். சமஸ்கிருதம் என்ற சொல் **'நன்கு செய்யப்பட்டது' 'திருத்தியமைக்கப்பட்டது' 'அழகு செய்யப்பட்டது'** என்ற பொருள்களைக் குறிக்கும். கி.பி. 7ஆம் நூற்றாண்டில் தோன்றிய பாணினி என்ற உலகப் புகழ்பெற்ற மொழியிலக்கண ஆசிரியருக்குப் பிறகு இம்மொழிக்கு இப்பெயர் பிற்காலத்தில் ஏற்பட்டதாகும். இம்மொழியிலிருந்துதான் இன்று வட இந்தியாவில் பேசப்படுகின்ற இந்தி, பஞ்சாபி, வங்காளி, இராஜஸ்தானி, மராட்டி, குஜராத்தி, ஒரியா ஆகிய மொழிகள் தோன்றின. எனவே இம்மொழிகளுக்கெல்லாம் தாய் சமஸ்கிருதமாகும்.

உலக மொழிகள் அனைத்திலும் முதன் முதலாகத் தோன்றிய நூல்வடிவமான கிரந்தங்கள் வேதங்களே என்பதை மேனாட்டவரும் ஒப்புக் கொள்கின்றனர். இவ்வேதங்கள் அனைத்தும் சமஸ்கிருத மொழியிலேதான் எழுதப்பட்டுள்ளன. இம்மொழியில், இராமாயணம், மகாபாரதம் என்னும் இதிகாசங்கள், பதினெண் புராணங்கள், பதினெட்டு ஸ்மிருதிகள், ஆறுவகை சாஸ்திரங்கள், காளிதாசன், மாகன், பாரவி, பாஸன், பவபூதி போன்ற பல மகாகவிகளால் இயற்றப்பட்ட நூற்றுக்கணக்கான காவியங்கள், நாடகங்கள், வான சாஸ்திரம், சோதிடம், மருத்துவம் மற்றும் கட்டிடக் கலை போன்றவைகளைப் பற்றிய நூல்கள் இவையெல்லாம் முதன் முதலாக இம்மொழியில்தான் எழுதப்பட்டன என்பது குறிப்பிடத்தக்கது.

பிற மொழிகளைப் போல் கோடிக்கணக்கான மக்கள் பேசாத மொழியாக இருந்தாலும், இம்மொழி நூல்களின் மூலம் அறியப்படும் ஆன்மீகம், பண்பாடு இவைகளின் சிறப்பைக் கொண்டு உலகெங்கிலும் பாரத நாடு போற்றப்படுகிறதெனில் மிகையாகாது. இக்காரணத்தைக் கொண்டுதான் தேசிய மொழிகளின் வரிசையில் சமஸ்கிருதம் சேர்க்கப்பட்டுள்ளது. இந்நூல்களில் காணப்படும் பல ஆதாரங்களைக் கொண்டு அக்காலத்தில் மக்கள் சமஸ்கிருத மொழியைக் கற்றுப் பேசி வந்தனர். இம்மொழியைக் கற்காத அக்கால மக்களும், இம்மொழியில் எழுதியதையும் பேசியதையும் நன்கு புரிந்து கொண்டிருந்தனர் எனத் தெரிகிறது. வடமொழிகள், தென்மொழிகள் என்ற பாகுபாடின்றி எல்லா மொழிகளிலும் உண்டியில் உப்புபோல்

இன்றியமையாததாகக் கலந்து பரிமளிக்கின்ற சமஸ்கிருத மொழி எல்லோராலும் பேச முடியாவிடினும் இன்றும் நன்கு புரிந்து கொள்ள முடிகிறது.

உலகளவில் சமஸ்கிருதம் 40 நாடுகளில், 250 க்கும் மேற்பட்ட பல்கலைகழகங்களில் உள்ளது. இங்கு 25 ஆயிரம் மாணவர்கள் 16 மரபு வழியான பள்ளி, கல்லூரிகளில் படிக்கின்றனர். தென்னிந்தியாவில் கர்நாடக அரசு, சமஸ்கிருத மொழிக்கெனத் தனி பல்கலைக் கழகம் அமைந்துள்ளது. சமஸ்கிருத வளர்ச்சிக்காகக் குல்பர்கா பல்கலைகழகத்திற்கு ஒரு கோடி ரூபாய் நிதி ஒதுக்கியுள்ளது. சமஸ்கிருதத்திற்கென, விக்கிபீடியா இணையதளம் தொடங்குவதற்கும் முயற்சி எடுத்து வருகிறது. மாண்டியா மாவட்டம் மேலக்கோட்டையில், சமஸ்கிருத ஆராய்ச்சி மையம் அமைக்கப்பட்டுள்ளது. உத்ராஞ்சல் மாநில அரசு சமஸ்கிருத மொழியை மாநிலத்தின் இரண்டாவது மொழியாக அறிவித்து செயல்படுத்தி வருகிறது.

2. இந்தியாவிலுள்ள சமஸ்கிருத சுவடிகளின் வளம்

நாட்டிலுள்ள அனைத்து மொழிச் சுவடிகளையும் ஒன்று திரட்டி, பதிப்பித்து நூலாக வெளியிடுவது மிகவும் அவசியம் என்பதால் புதுதில்லியிலுள்ள தேசியச் சுவடிக் குழுமம் (Nation Mission for Manuscripts) நாட்டின் பல்வேறு பகுதிகளிலுள்ள தனிநபர்கள் மற்றும் சுவடி நிறுவனங்கள் வைத்திருக்கும் சுவடிகள் குறித்த விவரங்களை அறிய புள்ளி விவரங்களைத் திரட்டி வருகிறது. அவ்வகையில் 2003 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் முதல் 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் தேதி வரை இப்புள்ளி விவரங்களைத் திரட்டச் சரியான திட்டமிடுதல், ஒழுங்கமைத்தல், தகுந்த பணியாளர் நியமனம், இயக்குதல் மற்றும் கட்டுப்படுத்துதல் போன்ற மேலாண்மைக் கூறுகளைப் பயன்படுத்தியதால் 32,79,028 ஓலைச்சுவடிகளின் விவரத்தை கண்டறிந்துள்ளது. அதில் சுமார் 10,00,000-க்கு மேற்பட்ட வடமொழிச் சுவடிகள் உள்ளதாகக் கருதப்படுகிறது.

3. தமிழகத்திலுள்ள சமஸ்கிருதச் சுவடிகளின் வளம்

தமிழகத்தில் தஞ்சை, காஞ்சிபுரம் போன்ற பல்வேறு பகுதிகளில் பிறந்து வளர்ந்த வடமொழிப் புலவர்களில் நீலகண்ட தீட்சிதர், அப்பைய தீட்சிதர், சொக்கநாதமகி, வீழிநாதன், சதாசிவ பிரும்மேந்திரர், ஸ்ரீதரவெங்கடேசர் போன்ற புலவர்கள் குறிப்பிடத்தக்கவர்கள். இவர்கள் தமிழகத்தில் பிறந்து வளர்ந்து, சமஸ்கிருத மொழி இலக்கியங்களை வளப்படுத்தியவர்கள் எனில் மிகையில்லை. இவர்களது படைப்புகளில் தமிழகத்தினுடைய கலை, பண்பாடுகளின் தாக்கங்கள் காணப்படுகின்றன.

இந்தியாவிலேயே அதிக அளவில் வடமொழி இலக்கணம் பற்றிய நூல்கள் குறிப்பாகப் பதஞ்சலி இயற்றிய மகாபாஷ்யம் சிதம்பரத்திலும் பாலமனோரமாவை இயற்றிய வைத்தியநாத தீட்சிதர் கும்பகோணத்தை அடுத்த சுவாமிமலையிலும் வாழ்ந்தவர்கள். இவர்கள் இயற்றிய நூல்களை அடிப்படையாகக் கொண்டுதான் வடமொழி இலக்கணங்கள் வளம்பெற்றன. இவை போன்றே, தமிழ் மண்ணில் பிறந்த பல சமஸ்கிருதச் சுவடிகள் தஞ்சை சரஸ்வதி மகால் நூலகம் (சுமார் 40,000) மற்றும் சென்னையிலுள்ள அரசினர் கீழ்திசை ஓலைச்சுவடி நூலகம் மற்றும் ஆய்வு மையம் (சுமார் 49,725), சமஸ்கிருதக் கல்லூரி மற்றும் தமிழகத்தின் பல்வேறு பகுதிகளிலுள்ள தனிநபர்களும் சமஸ்கிருதச் சுவடிகளைப் பாதுகாத்து வருகிறார்கள்.

4. சமஸ்கிருதச் சுவடிகளைத் தமிழ்படுத்துவதிலுள்ள இடர்பாடுகள்

பிற மொழியில் மிகச் சிறந்து விளங்கும் நூல்களைத் தமிழ் மொழியில் மொழிபெயர்ப்பு செய்வது காலங்காலமாக நடந்து வரும் ஒரு வழக்கமாகும். அவ்வகையில் வடமொழியில் சிறப்புற்று விளங்கிய நூல்களைத் தமிழர்களும் உய்த்துணர வேண்டி வடமொழியும் தமிழ் மொழியும் கற்ற வல்லவர்கள் பலர் வடமொழி நூல்களைத் தமிழில் செய்யுள் வடிவமாகவும் வசனமாகவும் மூலமும் உரையுமாகவும் தமிழ்ப்படுத்தியிருக்கின்றனர். அவ்வாறு சமஸ்கிருதச் சுவடிகளைத் தமிழ்ப்படுத்துவதில் பல்வேறு இடர்பாடுகள் உள்ளன. அவற்றில் குறிப்பிடத்தக்க சில இடர்பாடுகள் வருமாறு:-

4.1) எழுத்து வடிவம் தொடர்பான சிக்கல்கள்

எழுத்துருவம் பெற்ற மொழிகளையே நாகரிக மொழி என்றும், சிறந்த மொழி என்று கருதுகின்றோம். கி.பி. 6 ஆம் நூற்றாண்டிலிருந்து இந்தியாவின் வடபகுதியில் சமஸ்கிருத மொழியை எழுத வழங்கப்பட்ட ஒரு வகை எழுத்துகளை 'நாகரி' என்பர். இதை 'தேவநாகரி' என்றும் அழைப்பர். முதலில் நாகரி லிபியையும் (எழுத்து), மொழி யிலக்கணத்தையும் கற்ற பின்பே சமஸ்கிருத இலக்கியங்களையும் சாஸ்திரங்களையும் தமிழ்படுத்துவது எனும் முறை இக்காலத்தவருக்குச் சிரமமாகத் தோன்றுவது.

வடமொழியில் கிரந்தம் எனின் நூல் என்று பொருளாகும். வடமொழி எழுத்துகளைத் தமிழகத்தில் கிரந்தம் என்றனர். தமிழ் எழுத்துகளோடு ஸ, ஷ உற, ஜ, ஶ்ரீ ஆகிய வடமொழி எழுத்துகளைச் சேர்த்துவிட்டால் அவை கிரந்த எழுத்து என்றாகின்றது. தமிழகத்தில் இருக்கக்கூடிய கணிசமான சமஸ்கிருத சுவடிகள் கிரந்த எழுததில் எழுதப்பட்டு இருப்பது.

வடமொழியிலும், வட இந்திய மொழிகளிலும் தமிழில் உள்ள க, ச, த, ப, ட என்னும் ஐந்து முதல் ஒலிகள் ஒவ்வொன்றிக்கும்

நான்கு நான்கு வகை ஒலிகள் உண்டு. ஒவ்வொரு ஒலிக்கும் ஒவ்வொரு எழுத்து உண்டு. ஒவ்வொரு முதல் ஒலிக்கும் அம்மொழிகளில் நான்கு, நான்கு எழுத்துக்கள் உண்டு. தமிழில் ஒரே எழுத்துத்தான் உண்டு. சமஸ்கிருத மொழியில் ஒரே ஒலிக்கு நான்கு எழுத்துக்கள் இருப்பதால் தமிழ்ப்படுத்துதல் இடர்ப்பாடாக இருப்பது.

4.2. இலக்கணம் தொடர்பான சிக்கல்கள்

சமஸ்கிருத்தில் ஒருமை, இருமை, பன்மை என்று மூவகை எண்கள் உள்ளமை. ஒவ்வொரு சமஸ்கிருத சொல்லும் பால், எண், வேற்றுமைகளைக் கொண்டிருப்பது.

சமஸ்கிருதத்தில் பும்லிங்கம், ஸத்ரீலிங்கம், நபும்ஸகலிங்கம் (ஆண்பால், பெண்பால், பலவின்பால்) என்று மூன்று பால்கள் உள்ளன. ஒன்றன்பால், பலர்பால் இல்லை. பெயர்ச் சொற்களின் பால்களை இலக்கணம் மூலமாகவும், அறிஞர்களின் பிரயோகங்கள் மூலமாகவும் அறிய வேண்டியிருப்பது.

தமிழில் வினை முற்றுச் சொல்லில் உள்ள விகுதியைக் கொண்டே வினைச் சொற்களில் தன்மை, முன்னிலை, படர்கை ஆகிய இடங்களையும், ஐம்பால்களையும் ஒருமை, பன்மை எண்ணையும் காண முடியும். ஆனால் வடமொழியாகிய சமஸ்கிருத்தில் "பவதி" என்னும் வினைமுற்று, இருக்கின்றான், இருக்கின்றாள், இருக்கின்றது எனப் பொருள்படும். தமிழில் உள்ளதைப்போல், பவதி என்னும் சொல்லின் ஈற்றைக் கொண்டு பாலைக் காண முடியாது. ஆனால் படர்க்கை ஒருமையைக் குறிக்கும்.

விபக்தி எனப்படும் வேற்றுமைகள் - ப்ரதமா, த்விதீயா, த்ருதீயா **சதுர்த்தீ, பஞ்சமி,** ஷஷ்டீ, ஸப்தமீ, ஸம்போதனம் - எட்டாக இருப்பது. ஒவ்வொரு பெயர்ச் சொல்லுக்கும், உரிச்சொல்லுக்கும் பிரதிப் பெயர்ச் சொல்லுக்கும் எல்லா வேற்றுமைகளையும் நன்கு அறிந்திருக்க வேண்டிய தேவை

வினைச் சொற்களுக்குரிய பகுதி விகுதிகளையும் நன்கறிந்து இருக்க வேண்டிய தேவை

வினைகளுக்கு முன் இணைக்கப்படும் சில சொற்களுக்கு உபஸர்க்கங்கள் என்று பெயர். அவைகளைச் சேர்ப்பதால் சில இடங்களில் வினைகளின் பொருள் அழுத்திக் கூறப்படும்

உதாரணம்:- ச'ம்ஸ் – புகழ்

ச'ஸ்த: – புகழப்பட்டது

ப்ரச'ஸ்த – மிகவும் புகழப்பட்டது

மற்றும் சில இடங்களில் அந்த வினைகளின் இயற்பொருள்கள் மாறுபடும்.

உதாரணம்: உறரு = எடுத்துச் செல். இது வினையின் இயற்பொருள். இந்த ஒரே வினைக்குமுன் சில உபஸர்க்கங்களைச் சேர்ப்பதால் ஏற்படக்கூடிய பல பொருள்களைக் கீழே காண்க

ப்ரஉறார: - அடித்தல்

ஆஉறார: - ஆகாரம்

ஸம்உறார: - கொல்லுதல்

விஉறார - விளையாடுதல்

பரிஉறார - பரிகாரம்

உபஸர்க்கங்களை முன்னே இணைப்பதால் வினைகளின் இயற்பொருள்கள் பலாத்காரமாக வேறொரு பொருளைத் தரச் செய்யப்படுகின்றன. மேற்கண்ட ஐந்து சொற்களும் அதனை எடுத்துக் காட்டுவதை அறியலாம்.

ஒவ்வொரு மொழியும் ஒவ்வொரு அமைப்பைக் கொண்டதாக இருக்கும். உலகத்தில் உள்ள, வளர்ச்சி பெற்ற, இலக்கிய இலக்கணங்கள் உள்ள மொழிகளையெல்லாம் கீழ்காணும் மூன்றுவித அமைப்புகளில் அடக்குகின்றனர்.

1)தனிநிலை 2) ஒட்டுநிலை 3) உட்பிணைப்பு நிலை என்பனவாகும். இதில் சமஸ்கிருதம் உட்பிணைப்பு நிலையைச் சார்ந்ததாகும். இந்நிலை கொண்ட மொழிகள் கற்பதற்குக் கடினமாக இருக்கும். மூன்று நிலைச் சொற்களும் தமிழில் இருந்த போதிலும், ஒட்டுநிலைச் சொற்களே அதிகமாக இருக்கின்றன. ஒரு மொழி ஒட்டு நிலையாக இருந்தால், அம்மொழியை எளிதில் கற்றுக் கொள்ளலாம். தமிழ் எளிமையாக இருப்பதற்கு இதுவும் ஒரு காரணமாகும்.

சமஸ்கிருத மொழியில் செய்வினை, செயப்பாட்டு வினை, இயற்கை நிலை வினை (பாவேப்ரயோகம்) என்று மூவகை வினைகள் பயன்படுத்தப்படுவது.

பெரும்பாலான சமஸ்கிருத சுவடிகள் செய்யுள் வடிவில் சீர் பிரிக்கப்படாமல் இருப்பது. வழக்கு ஒழிந்தமையால் சில சொற்களுக்குப் பொருள் தெரியாது இருப்பது. பல பொருள் ஒரு சொல், எப்பொருளில் சுவடியில் கையாளப்பட்டுள்ளது என்று புரிந்து கொள்ள இயலாமை. சில சுவடிகளில் அக்காலத்திய பேச்சு மொழி எழுத்து வடிவம் பெற்று அதற்குப் பொருள் உணர இயலாத நிலை. சில எழுத்துகள் தன்னுடைய தனித் தன்மையுடன் இல்லாமல் ஒரு மயக்க நிலையில் சுவடிகளில் காணப்படுவது.

4.3) பொதுவான தொழில்நுட்பச் சிக்கல்கள்

சுவடிகளைத் திரட்டி, அச்சிட்டு விற்பனைக்கு வெளிக் கொண்டு வரும் சுவடிப் பதிப்பில் பல்வேறு சிக்கல்கள் உள்ளன. அதில் முதலிடம் பெறுவது சமஸ்கிருதச் சுவடிகள் எல்லாம் அச்சில் வெளிவந்துவிட்டன. இனி அச்சில் வெளிவர வேண்டிய சுவடிகள் எதுவும் இல்லை என்ற தவறான எண்ணமாகும். மேலும் தமிழகத்திலுள்ள அரசுத் துறைகளும், சுவடி நிறுவனங்களும், பல்கலைக்கழகங்களும், தனியாரும் எவ்வித ஒருங்கிணைப்பும் இன்றி தனித்தனியாக சமஸ்கிருத சுவடிகளைத் தமிழ்ப்படுத்தும் பணியை மேற்கொண்டு வருகின்றனர். இதனால் இப்பணி குறிப்பிட்ட வளர்ச்சியைப் பெற இயலாமல் இருந்து வருகிறது. பிற சிக்கல்கள் பலவகையின. அவற்றில் முக்கியமான சில சிக்கல்கள் வருமாறு:-

அ) சுவடி திரட்டுதலிலுள்ள சிக்கல்கள்

1.1) சமஸ்கிருத சுவடிகள் யாரிடம் உள்ளன என்பது குறித்த விவரக் குறிப்பு இன்மை 1.2) தம்மிடமுள்ள சுவடிகளை அன்பளிப்பு அல்லது விலைக்குத் தர சில சுவடி உரிமையாளர்கள் மறுப்பது 1.3) பொருளாதார ரீதியில் சுவடிகளுக்கென ஒரு மதிப்பு வரவே சுவடிகளை வைத்திருப்போர் அவற்றை அதிக விலைக்கு விற்க விரும்பிச் சுவடி திரட்டும் பணிக்கு ஒத்துழைக்க மறுப்பது 1.4) சோதிடம், மருத்துவம், வர்மம் போன்ற தொழில் சார்ந்த சுவடிகளை வைத்திருப்போர் தமது தொழில் இரகசியம் பிறருக்குத் தெரிந்துவிடக் கூடாது என்ற தவறான எண்ணத்தால் அவற்றைக் கொடுக்க மறுப்பது 1.5) சமய நம்பிக்கை காரணமாகப் பொங்கல் மற்றும் ஆடிப்பெருக்கின் போது சுவடிகளைத் தீயிலிட்டுக் கொளுத்துவதும், ஆற்றுநீரில் இடுதலை இன்றும் வழக்கமாக கொண்டிருப்பது 1.6) சமயப் போராட்டப் பூசல் காரணமாக எதிர் சமயத்தைச் சார்ந்த சுவடிகளை மறைமுகமாக அழிப்பது 1.7) பக்தி சார்ந்த சுவடிகளைப் பூசை அறையில் பாதுகாத்து வரும் சிலர் உணர்வுப்பூர்வமான எண்ணத்தால் சுவடி திரட்டும் பணிக்கு ஒத்துழைக்க மறுப்பது

ஆ) சுவடி நிறுவனச் சட்டதிட்டங்களால் ஏற்படும் சிக்கல்கள்

ஒவ்வொரு நூலகமும் தனக்கெனத் தனித்தனியான கொள்கை களையும், சட்டதிட்டங்களையும் கொண்டுள்ளதால் சுவடிகளைப் படம் எடுக்கவோ, பிரதி செய்யவோ இயலாது இடர்ப்பட வேண்டியுள்ளமை.

இ) சுவடிகளின் தன்மையால் ஏற்படும் சிக்கல்கள்

சுவடிகள் சிதைந்துபோய் எழுத்துகள் இல்லாமல் இருப்பது. சில சுவடிக் கட்டில் பணி முழுமை பெறாமல் குறையாக இருப்பது. சுவடிகளில் பக்க எண் மற்றும் செய்யுள்களுக்குத் தொடர் எண்

இருப்பது இல்லை. இதனால் சுவடி வரிசை மாறிவிடும் நிலையில் அதனை ஒழுங்குபடுத்துவது கடினம். சுவடியில் இருக்கும் பிழை, விடுபாடு, விளங்காமை, எழுத்துத் தெளிவின்மை, இடைச்செருகல், ஓலைமுறிவு, செல்லரிப்பு போன்றவற்றால் தோன்றும் ஐயங்களைத் தீர்க்க இயலாமை.

ஈ) சுவடிகளைப் படியெடுத்தவர்களால் ஏற்படும் சிக்கல்கள்

கிடைக்கும் பெரும்பாலான சுவடிகள் படியெடுக்கப்பட்டதால் உருவான சுவடிகள் என்பதால் ஆசிரியரின் உண்மைப் பாடத்தை அறிவது சிக்கலான செயலாக இருப்பது. ஏடு எழுதுவோர் செய்த தவறுகளால் சுவடிகளில் சில சொற்கள், அடி, பக்கங்கள் விடுபட்டு இருப்பது. தம்மால் உணர இயலாது என்று விடுத்த பகுதிகள் இன்னும் உணர இயலாத நிலையில் இருப்பது.

உ) சுவடிப் பயிற்சியின்மையால் ஏற்படும் சிக்கல்கள்

ஊ) ஒப்பிட்டுப் பார்க்க வேறு படிகள் கிடைக்காமல் இருப்பது

எ) எந்தப் பதிப்பு நெறிமுறையைக் கையாள்வது என்பதிலுள்ள சிக்கல்

ஏ) பதிப்பாசிரியர் தாம் பதிப்பிக்க இருக்கும் சுவடி குறித்த செய்திகளை ஒப்பிடவும், பொருள் தெளிவு பெறவும், விளக்கம் பெறவும், மெய்ப்புத் திருத்தவும் பிறரிடம் தரும்போது அவர்கள் அதனைத் தம் படைப்பாக வெளியிட்டுவிடும் வாய்ப்பு உள்ளதால் பிறருடைய உதவியைப் பெறுவதில் சிக்கல் ஏற்படுகிறது.

ஐ) இறுதியாகச் சமஸ்கிருதத்தைத் தமிழாக்கம் செய்யத் தகுந்த மொழிப் புலவர்கள் கிடைப்பது அரிதாக இருப்பது.

5. சமஸ்கிருதச் சுவடிகளைத் தமிழ்படுத்துவதிலுள்ள இடர்ப்பாடுகளுக்கான தீர்வு

20-ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில் மேலாண்மை இயல் தோற்றம் பெற்று நாள்தோறும் வளர்ந்து வருகிறது. இன்று மேலாண்மையியலுக்கு அனைத்துத் துறைகளிலும் மிகுந்த வரவேற்புள்ளது. சுருங்கக்கூறின் மேலாண்மை இயல் தழுவாத துறையே இல்லை எனலாம். மேலாண்மை என்பது தொழிலை நிர்வகிக்கும் பணி மட்டுமல்ல இது எங்கும் பரவிக் காணப்படும் ஒரு வித்தியாசமான மற்றும் ஆட்சி செலுத்துகிற நடவடிக்கையாகும். இதை அனைத்து விதமான சமூக அமைப்புகளுக்கும் தேவையான துணைக் கருவி எனலாம்.

எங்கெல்லாம் மனித நோக்கங்கள் நன்கு அமைக்கப்பட்டுக் கூட்டு முயற்சிகளின் மூலம் அவை அடையப் பெற வேண்டுமோ,

அங்கெல்லாம் குழு முயற்சிகளைப் பொது இலக்கை நோக்கி வழிகாட்டவும், அவற்றை ஒருங்கிணைக்கவும், மேலாண்மை இன்றியமையாததாகி விடுகின்றது. பெரும்பாலான மனித நோக்கங்கள் கூட்டு முயற்சியாலேயே அடையப் பெறுவதால் மேலாண்மையானது உலகளவில் பயன்படுத்தப்படுகிறது. மேலும் எந்த ஒரு பணியையும் தனி நபர் ஒருவர் செய்வதைவிடப் பலர் குழுவாக இணைந்து செய்வதன் மூலம் சிறப்பாகச் செய்ய இயலும் என்பது அண்மைக்காலத்தில் நிருபிக்கப்பட்டுள்ளது.

சுவடிப் பதிப்புப் பணிக்கு மேலாண்மை கலையைப் பயன்படுத்துவது குறித்த ஆய்வுகள் தற்காலத்தில்தான் தோற்றம் பெற்றிருப்பினும்

> "சிந்தாமணியை ஆய்வு செய்யத் தூண்டியவர் சேலம் இராமசாமி முதலியார், விரைந்து வெளியிடத் தூண்டியவர் தாமோதரம் பிள்ளை, சமணசமயக் கோட்பாடுகளைத் தொகுத்துரைத்து விளக்கியவர் சந்திரநாத செட்டியார், பதிப்புக் கொள்கைகளையும் நூல் அமைப்பு முறைகளையும் எடுத்துக்காட்டியவர் தேரமுத்தூர் சக்கரவர்த்தி இராசகோபாலாச்சாரியார், உடனிருந்து ஒப்பு நோக்கித் திருத்தம் செய்து உதவியவர் திருமானூர் கிருஷ்ணய்யர், சுவடிகள் பலவற்றைக் கொடுத்தும், பிறரிடமிருந்து தருவித்துக் கொடுத்தும் உதவியவர் திருவாவடுதுறை ஆதீனத் தலைவர் சுப்பிரமணிய தேசிகர்"

என்றெல்லாம் தொகுத்துரைத்து நன்றி பாராட்டும் உ.வே.சா. கூற்று மூலம் தனிநபர்கள் சுவடிப் பதிப்புப் பணிகளை மேற்கொள்ளும்போது தம்மை அறியாமலே மேலாண்மைக் கூறுகளை இலைமறைகாய்போல் பயன்படுத்தியதை அறியலாம். எனவே மேலாண்மைக் கூறுகளைச் சமஸ்கிருதச் சுவடிகளைத் திரட்டுதல் முதல் தமிழ்ப்படுத்தி விற்பனைக்கு வெளிக்கொண்டு வருவது வரை விரிவுபடுத்துவதன் மூலம் பல அரிய நூல்கள் தமிழ்மொழிக்குக் கிடைக்கும் நல்வாய்ப்பு உருவாகும்.

மேலாண்மை நுட்பத்தை முழு அளவில் சமஸ்கிருத சுவடிகளைத் தமிழ்ப்படுத்தும் பணியில் நடைமுறைப்படுத்த கீழ்க்காணும் முன்னேற்பாடுகளை மேற்கொள்ள வேண்டும்.

அ) ஒருங்கிணைந்த கூட்டமைப்பினை உருவாக்குதல்

கூட்டு முயற்சியின் வழியே மேலாண்மை நுட்பங்களை நன்கு பயன்படுத்த இயலும் என்பதால் அனைத்துச் சுவடி நிறுவனங்களும், பல்கலைக்கழகங்கள் மற்றும் சுவடியியல் துறையில் ஆர்வமும் ஆற்றலும் பெற்ற தனிநபர்கள் அடங்கிய ஒரு கூட்டமைப்பினை முதற்கண் உருவாக்க வேண்டும்.

ஆ) தேவையான நிதி மற்றும் வள ஆதாரங்களை ஏற்படுத்துதல்

மேற்காணும் கூட்டமைப்பு ஆதாய நோக்கத்தோடு நடத்தப்படுவதன்று. எனவே இது செயல்படுவதற்குத் தேவையான வள ஆதாரங்களைத் தமது சொந்த நிதியிலிருந்து அல்லது அரசின் உதவி / மானியத்திலிருந்து உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

இ) வல்லுநர் குழுக்களை அமைத்தல்

ஒரு சுவடிப் பதிப்பாளர் நல்ல சுவடிப் பெயர்ப்பாளராகவும் (Transcriber), எழுத்தமைதியில் அறிவு (Palaeographic Knowledge) கொண்டவராகவும், மொழியியல் சிந்தனை (Linguistic thought) உடையவராகவும், சிறந்த இலக்கண அறிஞராகவும் (Grammarian), சொல்வளம் (Coiousness of Language) கைவரப் பெற்றவராகவும், திறனாய்வாளராகவும் இருக்க வேண்டும். ஏனெனில் பல்துறை திறமைமிக்க வல்லுநர்கள் மூலமே சுவடிப் பதிப்புப் பணிகளைச் சிறப்புறச் செய்து முடிக்க இயலும் என்பதால் சுவடிகளைத் திரட்டுதல் முதல் அச்சிட்டுப் பொது மக்களிடம் கொண்டு சேர்ப்பது வரையிலான பணிகளுக்குத் தேவையான வல்லுநர்களைக் கொண்ட தனித்தனி சிறப்புக் குழுக்களை உருவாக்கி, தேவைப்படும் போது அக்குழுக்களின் சேவையைப் பயன்படுத்திக் கொள்ளும் வகையில் அக்குழுக்களிலுள்ள வல்லுநர்களின் விவரங்களைச் சேகரித்து வைத்துக் கொள்ள வேண்டும்.

மொழிபெயர்ப்பின்போது அகராதியைப் பார்த்துத், தமிழ் சொல்லுக்கேற்ற சமஸ்கிருதச் சொல்லை எடுத்துப் பயன்படுத்திக் கொள்ளலாம் என்பதால் தரமான அகராதியைத் தருவித்துக் கொள்ள வேண்டும். மேலும் சமஸ்கிருத மொழியில் உள்ள சொற்கள் எல்லாம் சில வினைச்சொற்களிலிருந்து தோன்றுகின்றன. அவ்வினைகளைத் 'தாதுக்கள்' என்பர். சமஸ்கிருத மொழியில் சுமார் 2200 தாதுக்கள் உள்ளன. இந்தத் தாதுக்களின் மூலமாகத்தான் சமஸ்கிருத இலக்கண இலக்கிய நூல்களிலுள்ள சொற்களெல்லாம் உருவாகியுள்ளன. மேற்கண்ட 2200 தாதுக்களும் பத்து வகையாகப் பிரிக்கப்பட்டுள்ளன. அவை 'விகரணங்கள்' என்ற பெயரால் அழைக்கப்படுகின்றன. ஓவ்வொரு விகரணத்தைச் சேர்ந்த வினைகளுக்கும் தனித் தனியாக விகரண விகுதிகள் சேர்க்கப்படுகின்றன. இவைகளை முறைப்படி கற்றுக் கொண்டால், சமஸ்கிருத வாக்கியங்களைப் பிழையின்றித் தமிழ்படுத்த இயலும் என்பதால் அவைகளை அட்டவணைப்படுத்தி வல்லுநர் குழுக்களுக்கு அளிக்க வேண்டும்.

மேற்காணும் வகையில் தேவையான முன்னேற்பாடுகளை உருவாக்கிக் கொண்டபின் மேலாண்மை நுட்பங்களைக் கீழ்காணும் படிநிலைகள் வழி நடைமுறைப்படுத்தலாம்.

1) உள்நாடு மற்றும் வெளிநாட்டில் சுவடிகள் கிடைக்குமிடங்கள் குறித்த விவரங்களைத் திரட்ட வேண்டும். அரசு, பொதுநல அமைப்புகள், அரசியல் தலைவர்கள், உள்ளூர்ப் பெரியவர்களின் ஒத்துழைப்புடன் சுவடி உரிமையாளர்களிடமிருந்து சுவடிகளை அல்லது அதன் நகலைப் பெற நடவடிக்கை எடுக்க வேண்டும்.

2) கிடைக்கப் பெற்ற, ஏற்கனவே கைவசமுள்ள சுவடிகளுக்கு விளக்க அட்டவணையைத் தயாரிக்க வேண்டும். இதன் மூலம் சுவடிகளைப் பொருள்வாரியாகப் பகுக்க இயலும்.

3) தமிழ்படுத்தப்பட்ட வடமொழி சுவடிகளை மீண்டும் தமிழ்ப்படுத்தப்படுவதைத் தடுக்க இதுவரை தமிழ்ப்படுத்தப்பட்ட வடமொழி சுவடிகள் குறித்த விவர அட்டவணையைத் தயாரித்துக் கொள்ள வேண்டும்.

4) உருவாக்கப்பட்டுள்ள வல்லுநர் குழு மூலம் தமிழ்ப்படுத்தப்பட வேண்டிய சுவடிகளைத் தேர்வு செய்து, தகுந்த ஆய்வு வழி அதில் எதிர்நோக்கும் சிக்கல்களை அறிந்து அதனைப் பட்டியலிட்டுக் கொள்ள வேண்டும்.

5) அறிவியல் முறையில் தமிழ்ப்படுத்தப்படும் பணிகளைப் பல சிறுசிறு பணிகளாகப் பிரித்துக் கொண்டு இப்பணிகளில் சிறப்பீடுபாடு கொண்ட வல்லுநர்கள் குழு மூலம் சிறுசிறு திட்டங்களை உருவாக்க வேண்டும். இச்சிறு திட்டங்கள் அனைத்தும் ஒன்றாக்கப்பட்டு முழுத் திட்டத்தை உருவாக்க வேண்டும். ஒரு பணியைச் செய்யப் பல மாற்று வழிகள் இருக்கும்நிலையில் சரியான திட்டமிடுதலின் மூலம் மிகச் சிறந்த மாற்று வழியைத் தேர்தெடுக்க வேண்டும். மேற்கூறியவாறு உருவாக்கப்பட்ட திட்டப்பணிகளைச் செயல்படுத்துவதற்கு வள ஆதாரங்கள், பணியாளர்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட வல்லுநர்களைக் கொண்ட சிறப்புக் குழுக்களை உருவாக்க வேண்டும்.

6) இறுதியாக உருவாக்கப்பட்ட திட்டங்களைச் செயல்படுத்துவதற்குத் தகுதி பெற்ற ஒரு வல்லுநர் குழுவிடம் ஒப்படைக்க வேண்டும். இதன்வழி வடமொழிச் சுவடிகளைத் தமிழ்ப்படுத்தும் அனைத்துப் பதிப்புப் பணிகளும் மேலாண்மை நுட்பம் மூலம் எந்தவிதச் சிக்கலுமின்றிப் பிற குழுக்களின் பணிகளுடன் முரண்பாடு இல்லாமல் செம்மையாகச் செய்யப்படுவதற்கு வழி ஏற்படும்.

7) தவிர்க்க இயலாத சூழ்நிலையில் பணிகளிலிருந்து விலகல்கள் / தவறுகள் ஏற்படுமாயின் அதனைக் கண்காணிப்புக் குழு வழி தொடக்க நிலையிலே அறிந்து சரியான மாற்றுத் திட்டத்தின் வழி சரிபடுத்தலாம்.

முடிவுரை

மேலாண்மை நுட்பங்களை முழு அளவில் சமஸ்கிருதச் சுவடிகளைத் தமிழ்ப்படுத்தும் பணிக்குப் பயன்படுத்துவதன் மூலம் கீழ்காணும் வழிகளில் மேலாண்மையானது சமஸ்கிருதச் சுவடிகளைத் தமிழ்ப்படுத்தும் பணியில் வளர்ச்சி மற்றும் முன்னேற்றம் போன்றவற்றை உறுதி செய்யும் என்பதில் ஐயமில்லை.

1) சமஸ்கிருத சுவடிகளை அழிவிலிருந்து காத்து, அச்சு நூல் வடிவில் வெளிக் கொண்டு வந்து பழந்தமிழரின் பெருமைகளை உலகறியச் செய்ய

2) பல்துறை அறிஞர்களின் உதவியை ஒருங்கிணைத்துச் சமஸ்கிருதச் சுவடிகளைத் தமிழ்ப்படுத்தும் பணியிலுள்ள சிக்கல்களைக் களைந்து, தமிழ்ப்படுத்தும் பணி செம்மையான முறையில் நடைபெற

3) சமஸ்கிருதச் சுவடிகளைத் தமிழ்ப்படுத்தும் பணியின் தொழில் நுணுக்க அறிவைப் பெருக்கிக் கொள்ள

4) சுவடியியல் நிறுவனங்களில் பணியாற்றும் பணியாளர்களுக்கு உரிய முறையில் சமஸ்கிருதச் சுவடிகளைத் தமிழ்ப்படுத்தும் பயிற்சி அளிக்க

5) சமஸ்கிருதச் சுவடிகளைத் தமிழ்ப்படுத்தும் பணியின் செலவைக் குறைத்துத் தரமான முறையில் சுவடிகளைத் தமிழ் அச்சு நூலாகக் கொண்டு வர

6) சமஸ்கிருதச் சுவடிகளைத் தமிழ்ப்படுத்தும் பணி தொடர்பான எதிர்கால ஆராய்ச்சியினைப் பெருக்க

துணைநூல்கள்

1) தி.மகாலட்சுமி, நிர்மலாதேவி, த.பூமிநாகநாதன் (பதி), சுவடிச் சுடர், உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 2001

2) ஸ்ரீநிவாஸாச்சாரியர், 30 நாட்களில் ஸம்ஸ்கிருத பாஷை, பாலாஜி பப்ளிகேஷன்ஸ், சென்னை, 2003

3) இர.சந்திரமோகன், சுவடியியல் மேலாண்மை, ராமையா பதிப்பகம், சென்னை, 2008

4) Director, Report of the Eighthn year 2010-2011, National Mission for Manuscripts, New Delhi, 2011

சரசுவதி மகால் நூலக வடமொழிச் சுவடிகள்

திரு. ஸ்ரீ. சுதர்சன் & திருமதி நா. ஜெயலட்சுமி

தமிழகத்தின் நெற்களஞ்சியம் எனப்போற்றப்பெறும் தஞ்சை மாநகரத்தில் உலகப்புகழ் பெற்ற அறிவுக்களஞ்சியமாகவும், அரிய பொருட்களஞ்சியமாகவும், கல்விக் களஞ்சியமாகவும் திகழ்ந்து உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்து இந்தியாவிற்கு வருகின்ற பார்வையாளர்கள் அனைவரையும் கவர்ந்து வரும் பெருமைமிக்கது தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகமாகும். இந்நூலகத்தில் கலை நுட்ப ஆர்வத்துடன் சேகரிக்கப்பட்டுள்ள மதிப்புமிக்க பழம்புத்தகங்களையும், மிகப் பழமை வாய்ந்த பனையோலைச் சுவடிகளையும்; அரிய காகிதச்சுவடிகளையும் பார்வையாளர்கள் வியந்து போற்றுகின்றனர். உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் அறிஞர்கள் தாம் விரும்பிய பொருளில் கருத்துக்களை தன்னகத்தே கொண்டிருப்பதால் இந்நூலகத்திற்கு அறிஞர் பெருமக்கள் வந்த வணணம் இருக்கின்றனர். இந்நூலகத்திலுள்ள பனை ஓலைச்சுவடிகளுக்கு பனை ஓலையிலும்: காகிதச்சுவடிகளுக்கு காகிதத்திலும் அகர வரிசைப்படுத்தப்பட்ட (Catalogue) அட்டவணை உள்ளது. இவற்றை ஆதாரமாகக் கொண்டு ஆங்கில கவர்னர் ஜெனரலின் ஆணைப்படி சமஸ்கிருத அறிஞரும் அந்நாளைய மாவட்ட நீதிமன்ற நடுவருமான முனைவர் ஏ. சி. பர்னல் அவர்கள் தலைமையில் சமஸ்கிருத சுவடிகள் அனைத்தும் பட்டியலிடப்பட்டு 1880-ல் லண்டனில் மூன்று பகுதிகளாக வெளிவந்துள்ளது. அதன்பிறகு 1928 முதல் 1933வரை சமஸ்கிருத சுவடிகள் விவர அட்டவணை (Sanskrit Descriptive Catalogue) என்ற பெயரில் 22 தொகுதிகளாக அச்சிடப்பெற்று விற்பனைக்குரியதாக வெளியிடப்பட்டுள்ளது.

சுவடித் தொகுப்பு

இந்நூலகம் சுமார் 25,000க்கும் மேற்பட்ட தலைப்புகளில் படை ஓலைச்சுவடிகள் மற்றும் 24,000 காகிதச் சுவடிகளுமாக மொத்தம் 49,000க்கும் மேற்பட்ட சுவடிகளைக் கொண்டுள்ளது. இச்சுவடிகள் சமஸ்கிருதம், தமிழ், தெலுங்கு, மராத்தி மொழிகளில் கிரந்தம், தெலுங்கு, தேவநாகரி, நந்தி நாகரி, திகளாரி எழுத்துக்களில் எழுதப்பட்டுள்ளன. இந்நூலகத்தில் பதினோராம் நூற்றாண்டைச் சார்ந்த "பலவதி " என்ற ஓலைச்சவடி உள்ளது. இது ஜைமினிய சூத்திரத்தினுடைய விளக்கமாகும். இச்சுவடியின் முதல் மற்றும் முடிவு ஏடுகள் சிதிலடைந்துவிட்டமையால் எழுத்து

மரபைக்கொண்டு காலம் கணக்கிடப்பட்டுள்ளது. காலக் குறிப்புகளுடன் 1530இல் எழுதப்பட்ட ஓலைச்சுவடியும்; கி. பி. 1476இல் வாசஸ்பதி மிஸ்ரர் என்பவரால் எழுதப்பட்ட "பாமதி" (Bhamati) என்ற காகிதச்சுவடியும் பழமையானவை. இங்குள்ள பல சுவடிகள் அரியவை. வேறு நூலகங்களில் இல்லாதவைகள் என்பதை New Catalogues Catalogurum என்னும் வடமொழிச் சுவடிகளுக்கான ஒருங்கிணைந்த சுவடிகள் பட்டியல் (Union Catalogues) மூலம் அறியமுடிகிறது. இந்நூலகச் சுவடிகள், வேதம், தலபுராணம், இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சிற்ப சாஸ்திரம் போன்ற பல பொருள்களில் உள்ளன.

அரிய சுவடிகள்

இந்நூலகத்தில் வேறு எங்கும் இல்லாத பல சுவடிகள் இங்கு மட்டுமே உள்ளன. அவற்றுள் வடமொழிப்பிரிவில் உள்ள "சப்தார்த்த சிந்தாமணி" என்னும் சுவடியினை வலது பக்கமிருந்து படித்தால் இராமனின் கதையைக் கூறுவதாகவும் (இராமாயணம்), இடது பக்கமிருந்து படித்தால் கிருஷ்ணனின் (பாகவதம்) கதையைக் கூறுவதாகவும் சிதம்பரகவி என்பவரால் படைக்கப் பட்டுள்ளது. "நிரோஷ்ட்ய சீதா கல்யாணமு" என்னும் தெலுங்குச் சுவடி சீதா கல்யாணத்தை இரு உதடுகளும் சேராமல் உச்சரிக்கும் எழுத்துக்களைக் கொண்டு எழுதப்பட்டுள்ளது. "மேகமாலா மஞ்சரி" என்னும் சுவடி மேகக்கூட்டங்கள், விண்மீன்கள் போன்றவைகளைக் குறிப்பிடுவதுடன் மழை பெறும் அளவு, வானிலை போன்ற பல தகவல்களைக் கொண்டுள்ளது. அதுபோன்று "கூப சாத்திரம்" என்னும் தமிழ்ச்சுவடி நிலத்தடி நீர் பற்றியும், "பூமி சல்லியம்" என்னும் மற்றொரு சுவடி நிலத்தடி மூலங்களைப் பற்றியும் கூறுவதாக உள்ளன. மேலும் சில சுவடிகள் தமிழ்மொழியில் தேவநாகரி எழுத்தில் எழுதப்பட்டுள்ளன. குறிப்பாக "பாவப் பிரகாசிகா" என்னும் கண் நோயைப் பற்றிய நூலும், "தாசபோதம்" என்னும் வேதாந்த உபதேச நூல்களும் ஆகும். இது போன்று பல அரிய சுவடிகளைக் கொண்டுள்ளது.

நூல் வெளியிடல்

இந்நூலகத்தின் முக்கியப் பணிகளில் ஒன்று நூல் வெளியிடுதல் ஆகும். இந்நூலகத்தில் உள்ள சுவடிகளில் வெளிவராத மக்களுக்குப் பயனுள்ள சுவடிகளைத் தேர்வு செய்து அப்பொருளில் வல்லுநர்களைக் கொண்டு பதிப்பித்து நூல்களாக வெளியிடும் பணி 1948 முதல் நடைபெறுகின்றது. இதுவரை சுமார் 544 நூல்கள் சுவடிகளிலிருந்து மருத்துவம், சோதிடம், இலக்கியம், இலக்கணம், வரலாறு போன்ற பொருள்களில் வெளியிடப்பட்டு உள்ளன. சுவடிகளில் உள்ள குறுந்தகவல்கள் வருடந்தோறும் பருவ இதழில் வெளியிடப்படுகின்றன.

பாதுகாப்புப்பணி

நூலகப் பொருட்களான ஓலைச்சுவடிகள், காகிதச்சுவடிகள், அச்சுநூல்கள், ஓவியங்கள், வரைபடங்களைப் பாதுகாப்பது என்பது மிகவும்

சிரமமான செயல். ஆனால் இந்நூலகத்தில் உள்ள பொருட்களைக் காலமுறையில், பாரம்பரிய பொருட்களைக் கொண்டு பாதுகாப்பு செய்துள்ளனர். மர அலமாரியில் உள்ள புத்தகங்கள், சுவடிகளை மழை காலங்களுக்குப்பின் சுத்தம் செய்து காற்றோட்டத்தில் வைத்துப் பாதுகாப்பு செய்துள்ளனர். மேலும், வசம்பு, கருஞ்சீரகம், மிளகு, கிராம்பு, லவங்கம் பட்டை போன்ற பொருட்களைப் பொடிசெய்து, ஒரு தேக்கரண்டி பொடியுடன் சிறு சூடக்கட்டியைச் சேர்த்துச் சிறு துணியில் கட்டிப் பூச்சி எதிர்ப்புப் பொருட்களாகப் பயன்படுத்தியுள்ளனர். ஓலைச்சுவடிகளைப் பாதுகாக்கக் கடந்த நூற்றாண்டு காலமாக சிட்ரினிலா தைலம் (எண்ணெய்) பயன்படுத்தப்படுகிறது.

ஓலைச்சுவடிகளை அடிக்கடி கையாளுவதைத் தவிர்க்கவும். ஆய்வாளர்களுக்குப் பிரதி வழங்கவும், வெளியீட்டுப் பணிக்காகவும் தகுந்த நபர்களைக் கொண்டு பிரதி செய்யும்படி செய்யப்படுகிறது. அறிவியல் வளர்ச்சியின் பயனாக 1979 முதல் இந்நூலகச் சுவடிகளை நுண்படமெடுத்து (Microfilm) பாதுகாப்பு செய்யப்படுகிறது. மின்னனுப்பதிவு (Digitilisation 1. lakh pages) இந்நூலக அரிய நூல்கள் மற்றும் வெளியீட்டு நூல்கள் மட்டும் செய்யப்படுள்ளது.

இப்படிப்பட்ட அருமையான தஞ்சாவூர் மகாராஜா சரபோஜியின் சரசுவதி மகால் நூலகத்தை இதுவரை பார்க்காத தமிழுலகம் போற்றும் பேராசிரியர்களும், ஆய்வு மாணவர்களும்-மாணவர்களும் இந்திய கலாச்சாரத்தின் பொக்கிஷத்தை காணவேண்டும் என்ற ஆர்வமுள்ள அனைவரும் தஞ்சாவூர் அரண்மனைக்கு நேரில் வந்து பார்வையிட்டு அனைத்து மொழிச் சுவடிகளையும் நூல்களாக வெளிக்கொணர அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வோம்.

ஓலைச்சுவடிப் பதிப்புமுறையில் ஒரு கண்ணோட்டம்

சரபோஜி மன்னர் துவக்கி பெரும் பணியைத் தொடர்ந்து ஏற்று, இச்சுவடிகளை ஆராய்ச்சி செய்து யாருக்கும் உதவும் வகையில் மலிவு பதிப்புகளாக வெளிவந்துள்ளன,

பொதுவாக நம் நாட்டில் அதிலும் தமிழகத்தில் வடமொழிச் சுவடிகளும், தமிழ்ச்சுவடிகளும் ஏராளமாக இருந்து வந்த நிலையில் அரசாங்கம் முனைவு எடுத்து, மான்யம் கொடுத்துதவி கல்வெட்டு நிலையிலிருந்து ஓலைச்சுவடிகளைம், அச்சுப்பிரதிகளாகவும், ஊடகங்கள் மூலமாகவும் விரைவில் செய்திகளைப் பரப்பி வருவது குறிப்பிடத்தக்கது, இத்தகைய முன்னேற்றங்களுக்கு அடிப்படைக் காரணமாக இருப்பது நம் முன்னோர் காலச்சுவடுக்கான ஓலைச்சுவடிகளின் பதிப்பேயாகும்.

வடமொழி ஓலைச்சுவடிகள்

இவ்ஓலைச்சுவடிகளில் பெரும்பாலும் இராமாயண மகாபாரதக் கதைகளும் (சுலோகங்களாக) எழுதப்பட்டுள்ளன. எந்த ஒரு சுவடியின்

கருத்தரங்கு/தொகுதி 1/1982 முகப்பிலும் சுகல்வமப்ரதர8ம் என்று விநாயகரைத் தொழுது எழுதும் மரபு இருந்ததை அறிய முடிகிறது.

வாழ்வியல்

இச்சுவடியில் பெரும்பான்மையாக கிராமப்புறத்தார்களின் வாழ்வியலின் தாக்கமாகவும் சடங்குகளின் செய்யும் முறைமையும் (சவுண்டி கரணம்) விளக்கப்பட்டிருத்தலை அறியமுடிகிறது,

ஈமச்சடங்குகள் 13 நாள் செய்யும் முறைமை, வகைமை, மற்றும் உபயோகப்படுத்தும் பொருட்களின் அளவு உட்பட்ட கருத்துக்கள் அடங்கியவை காணமுடிகிறது,

பலதரப்பட்ட இடங்களுடன் (யாத்ரையாக) சென்றதன் தாக்கத்தைக் காணமுடிகிறது, மற்றும் தற்போது கணிணியில் பதிவு செய்வது போல் அக்காலத்தினில் சென்ற இடங்களின் அமைப்புமுறை ஆகியவை உணர அரிய பெட்டகமாக் காணமுடிகிறது,

இவ்வடமொழி நூல்களில் ஹரிஹராத்வைதபூஷணம், பகவன்னாம கௌமுதீ, சமத்கார சந்த்ரிகா, பகவந்நாம ரஸாயனம் போவன்ற நூல்களிலிருந்து வடமொழியிலிருந்து தமிழாக்கமும், மற்றும் வடமொழி, ஹிந்தி போன்ற ஓலைச்சுவடிகளிலிருந்து பிரதி யெடுத்து வடமொழி மற்றும் ஹிந்தியில் இருப்பதை தமிழாக்கம் செய்து இத்தமிழ்ப்பணியை தமிழகத்தில் பகவன்னாம பப்ளிகேஷன்ஸ் என்ற நிறுவனம் செய்து வருகிறது.

மொழியியல்

இராமாயணம், கீதை, பாகவத போன்றவற்றிலிருது ச்லோகங்கள் மேற்கோளாக கையாளப்பட்டு வந்துள்ளதை வழக்கு மொழி நிலையாக சான்றாக சுவடியில் உள்ளதை அறிமுடிகிறது,

பதிப்புகள்

நாலாயிரத்திவ்வியப்பிரபந்தம் முழுநூலாவும் தனப்பட்ட சில பதிப்புகளாக வெளிவந்துள்ளதளாகவும், 20ஆம் நூற்றாண்டில் முதன் முதலாக 1908ல் க.வெ.திருகச்சி நம்பிதாஸரால் நாலாயிரத் திவ்வியப்பிரபந்தம் பதிப்பிக்கப் பெற்றுள்ளது என்றும் 1935/36ல் செந்தமிழ் தொகுதி 33ல் டிக்கொடுத்த நாச்சியார் தோத்திரப்பாமாலை மூலமும் உரையும் என்ற தலைப்பில் திருப்பாவையும் 1954இல் பாலூர் கண்ணப்பமுதலியார் திருப்பாவை, திருவெம்பாவை இரண்டையும் சீர்பிரித்துப் பதிப்பித்துள்ளதாகவும் 1956ல் எஸ்.ராஜம் பதிப்பு சீர் பிரித்து பதிப்பித்ததாகவும் க.தேவர் தமது உரையில் கூறுகிறார்,

நாலாயிரத்திவ்வியப்பிரபந்தத்தின் பெரியவாச்சான்பிள்ளையின் உரைகள் அனைத்தும் தஞ்சை சரபோஜி சரஸ்வதி மஹாலிலும், ஈட்டின் உரை கீழ்த்திசை சுவடி அரங்கிலும் காணமுடிகிறது, இவ்வாறு நாலாயிரத் திவ்வியப்பிரபந்த உரையினை (பெரியவாச்சான்பிள்ளையின் வம்சத்தில்) வந்துள்ள அண்ணா,(கிருஷ்ணப்ரேமி)அவர்கள் தனது உரையினை தற்கால வளர்ச்சிக்கேற்ப உரையின் மூலம் நிகழ்த்துவதை கணிணி மற்றும் குறுந்தகடுகள் மூலம் வெளிவருவதற்கு ஏட்டுச்சுவடியின் முன்னேற்றப் பதிப்பே எனவும் கூறமுடிகிறது.

முடிவுரை

இங்ஙனம் பலதிற ஆய்வுக்களமாக அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நுலகம் போன்ற நூலகங்களும் பகவன்னாம பப்ளிகேஷன்ஸ் போன்ற நிறுவனங்களும் சுவடிகளை தரம் பிரித்து ஓலைச்சுவடியிலிருந்து எழுத்து வடிவாகவும், தற்கால நிலையின் உரையாக (பேச்சாக)உள்ளதை மின்னலைகள் மூலம் ஒலி அலைகளை எழுத்துவடிவாக மாற்றவும் ஆய்விற்கு களமாக வாய்ப்புகள் பல உள்ளன.

பார்வை நூல்கள்

1. பகவந்நாம பப்ளிகேஷன்ஸ் நிறுவனத்தாரின் வடமொழி ஓலைச்சுவடிகளின் ஒரு பார்வை (37 ஓலைச்சுவடிகள்)

   e.mail.rama@ramanamabank.org.ramamanthiram@gmail.com.

   தொலைபேசி எண் 044/24893736, 9791749210.

2. பதினான்காவது கருத்தரங்கு/தொகுதி 1/1982,

3. பதினெட்டாவது கருத்தரங்கு/தொகுதி 3/1986,

4. தமிழ்ச்சுவடிகளின் தொகுப்பு (நான்காம் பாகம்)1965, முனைவர் வெங்கட்ராஜன் சரஸ்வதி மஹால், தஞ்சை.

சித்த மருத்துவ ஓலைச் சுவடிகள்

மரு. முனைவர் முகைதீன் அப்துல்காதர்

இந்த உலகத்திற்கு ஈன்ற இணையில்லா செல்வங்களுள் "சித்த மருத்துவமும்" ஒன்று. கலை, இலக்கியம், பண்பாடு, தத்துவ ஆராய்ச்சி, வான சாஸ்திரம் போன்ற மனிதனின் அனைத்துப் பரிமாணங்களிலும் சிறப்புற்றிருந்த தமிழ்ச் சமுதாயம், மனித குலத்தின் உடல், மன பிணியிலிருந்து விடுபட, நோய் வாராது காக்கும் முறைகளைச் தம்முள் கொண்ட சித்த மருத்துவத்தை இவ்வுலகிற்கு அளித்து இன்றளவும் மக்களுக்கு பயன்படக்கூடிய எளிய, நஞ்சற்ற, மக்கள் பண்பாடோடு, இயற்கையோடு இணைந்த மருத்துவமாக நம்முன் நிறுத்தியுள்ளது.

தமிழர்கள் தங்கள் அறிவுப் பொக்கிஷங்களை நெடுங்காலமாக செய்யுள் வடிவில் குரு, சீடனுக்கு உபதேசிக்கும் முகமாக வாய்மொழி வழக்காக வழங்கிவந்தனர். பாடல்களை எதுகை, மோனையோடு மனனம் செய்து அடுத்த தலைமுறைக்கு எடுத்துச் சென்றனர். பின்னர் பானை ஓடுகள், குகைகள் போன்றவற்றில் செதுக்கி ஆவணப்படுத்தினர். பின்னர் உலோகத் தகடுகளில் குறித்துச் சென்றனர். கடந்த ஈராயிரம் ஆண்டுகளாகச் சித்தமருத்துவ அறிவுச் செல்வங்கள் அனைத்தும் பனை ஓலை நறுக்குகளில் எழுதி வைத்தனர். அவற்றை முறையாக சேகரித்தல், படி எடுத்தல், பாதுகாத்தல் போன்ற பல செயல்கள் பல அரசர்களாலும், கோயில் மடாலயக் குழுக்களாலும் செவ்வனே செய்து வரப்பட்டது. அவற்றைப் படிஎடுக்கும்போது, தொடர்ந்து மாறிவிடும் மொழி, நடை மற்றும் சமுதாய மாற்றங்களுக்குப் பொருந்திப் பயன்தருமாறு புதிய கருத்துக்கள் இணைக்கப்பட்டு மீண்டும் மீண்டும் எழுதப்பட்டன.

சித்த மருத்துவச் சுவடிகள்

பல்லாயிரக் கணக்கான மருத்துவச் சுவடிகள் நூலகங்களிலும், ஆவண காப்பகங்களிலும், மடாலயங்களிலும், தனியார் வசமும், வைத்தியர்கள் சிலரிடம் சேகரித்து வைக்கப்பட்டுள்ளது. பல்லாயிரக்கணக்கான தமிழ் ஓலைச்சுவடிகளில் 60–65 விழுக்காடு மருத்துவ ஓலைச் சுவடிகளாக உள்ளது. அவற்றுள் ஆயுர்வேதம், யுனானி மருத்துவச் சுவடிகள் மிகவும் சொற்பம். பெரும்பான்மையானவை சித்தமருத்துவ ஓலைச் சுவடிகளாக உள்ளது. சித்தமருத்துவக் கருத்துக்கள் தமிழ்மொழியில் தவிர்த்துப் பிற திராவிட மொழிகளான தெலுங்கு, மலையாளம், துளு, கன்னடம் போன்ற மொழிகளிலும் காணக் கிடக்கிறது. இச்சுவடிகள் தத்துவம், ஞானம், வைத்தியம், பிணிகளின் வகைப்பாடு, உடற்கூறு, வர்மம், களறி பயிற்று, ஜோதிடம், யோக முறைகள், மந்திரம், தந்திரம் போன்ற மருத்துவத்தின் பல்வேறு பரிணாமங்களை தம்முள் கொண்டதாக உள்ளது.

தமிழ் மருத்துவச் சுவடிகள் அன்றன்றைய காலகட்டத்திற்கு வழக்கில் உள்ள செய்யுள்ளாகவோ, உரைநடை கருத்தோ கொண்டதாக அமையப் பெற்றுள்ளது. அப்பாடல்களைப் புரிந்துகொள்வதற்குத் தனியான பயிற்சியும், ஆழ்ந்தப் புலமையும், மொழியியல் தேர்ச்சியும், அறிவுக் கூர்மையும், சித்தமருத்துவ பின்புலமும் அத்தியாவசியமாகும். இலக்கியத்தினைப் படைப்பதற்குப் பயன்படுத்தப்பட்ட பாவடிவங்கள் மருத்துவ நூலைப் படைப் பதற்கும் பயன்படுத்தப்பட்டுள்ளது. இலக்கியப் படைப்பில் கையாளப்பட்ட உவமை, உருவகம், அணிநலன்கள் மருத்துவ இலக்கியத்திலும் காணப் பெறுகின்றது.

மருத்துவச்செய்யுள்கள் எதுகை, மோனை, அடி, தொடை போன்ற செய்யுள் உறுப்புகளைக் கொண்டு வெண்பா, ஆசிரியப்பா, கலிப்பா, கலிவெண்பா, விருத்தங்கள், உவமை வகை, அணி வகை ஆகியவற்றை வடிவமாகக் கொண்டுள்ளது.

மருத்துவச் சுவடிகள் பெரும்பாலும் மருத்துவத்தின் அடிப்படை கூறுகள், நோய் தீர்வு முறைகள், நோய் வகைகள், நோயணுகா விதி, மருந்து, வகைகள், செய்முறைகள், உணவு ஒழுக்கம், தினஒழுக்கம், கால ஒழுக்கம், வர்ம மருத்துவம் போன்ற மருத்துவத்தின் பலபரிணாமங்களைத் தன்னுள் கொண்டதாக உள்ளது. பெரும்பாலும் சித்த மருத்துவப் பாடல்கள் வாதம், வைத்தியம், யோகம், ஞானம், கற்பம் போன்ற பெரும்பிரிவுகளில் எழுதப்பட்டுள்ளது.

மருத்துவச் சுவடிகள் பாதுகாப்பு

தமிழ் சமூகத்தின் அறிவு செல்வமான இம்மருத்துவச் சுவடிகளைப் பாதுகாக்க அரசுபல நடவடிக்கைகளை எடுத்து வருகின்றது. அதன் முதல் முயற்சியாக 1910ஆம் வருடம் "சுவடி நூல்களின் சுருக்க விளக்கக் குறிப்பேடு தொகுப்பு" 5 தொகுதிகளைத் தமிழக அரசு வெளியிட்டது. 1924ஆம் வருடம் உஸ்மான் கமிட்டியினரால் சித்த மருத்துவ நூல்கள் பட்டியல் தயாரிப்பு தொகுதிகள் வெளியிடப்பட்டது.

பாதுகாக்கப்பட்ட சித்த மருத்துவச் சுவடிகள் வரிசை

1.	தமிழ் பல்கலைக் கழகம் தஞ்சாவூர்	–	5000 சுவடிகள்
2.	சென்னை அரசினர் கீழ்த்திசைச் சுவடி நூலகம்	–	1400 சுவடிகள்
3.	சென்னை அரசினர் கீழ்த்திசைச்சுவடி நூலகம்	–	396 சுவடிகள்
4.	உலக தமிழாராய்ச்சி நிறுவனம்	–	270
5.	சித்த மருத்துவ மேட்பாட்டுக்குழு	–	478
6.	உஸ்மான் சித்த மருத்துவ நூலாய்வுகுழு (1924)	–	594
7.	உ.வே.சாமிநாதையர் நூலகம்	–	15
8.	விருத்தாசலம் குமார வீரசைவ மடம்	–	15
9.	பிரஞ்சு இந்தியக் கலைக்கூடம் பாண்டிச்சேரி	–	80
10.	மதுரை தமிழ்ச்சங்கம்	–	24
11.	திருவனந்தபுரம் கீழ்திசை சுவடிநூலகம்	–	165

விடுதலைக்கு பின் தமிழக அரசு சித்த மருத்துவ ஓலை சுவடிகளைச் சேகரிக்கவும், அட்டவணைப்படுத்தவும் 1966ஆம் ஆண்டு பார்மகோபியா குழுவினரை அமைத்தது. 1973ஆம் வருடம் சித்த மருத்துவ அறிவியல் வளர்ச்சிக் குழு அமைக்கப்பட்டு சுவடிகளை சேகரிக்கவும், பழைய நூல்களை சேகரித்து படியெடுக்கும் பணி தொடர்ந்தது.

சித்த மருத்துவச் சுவடிகளின் பதிப்பு

சித்த மருத்துவச் சுவடிகளின் எண்ணிக்கையை ஒப்பிடும்போது அவற்றினின்று வந்த பதிப்புகளின் எண்ணிக்கை மிகவும் குறைவு. மூல நூட்கள் மற்றும் வழி நூட்களும் இணைந்து சுமார் 3000 நூட்கள் பதிப்பிக்கப் பெற்றுள்ளன. முதல் சித்தமருத்துவ நூல் பதிப்பு 17ஆவது நூற்றாண்டின் இறுதியில் பதிப்பிக்கப்பட்டுள்ளது. தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையம் சார்பாக 45ம் மேற்பட்ட சுவடிகள் பதிப்பிக்கப்பட்டுள்ளது. பழநி தண்டாயுதபாணி சித்தமருத்துவ நூல் பதிப்பு குழு சார்பாக 21ஆம் மேற்பட்ட சுவடிகள் பதிப்பிக்கப்பட்டுள்ளது. இந்திய மருத்துவம் – ஒமியோபதித் துறை, சித்த மருத்து நூல் வெளியீட்டுக் குழுவினரால் 26ஆம் மேற்பட்ட ஓலைச் சுவடிகள் பதிப்பிக்கப்பட்டு நூட்களாக வெளிவந்துள்ளது. சென்னை அரசினர் கீழ்த்திசை சுவடி நூலகத்தினரால் 16ஆம் மேற்பட்ட நூல்கள் வெளிவந்துள்ளது. சென்னை உலக தமிழாராய்ச்சி நிறுவனம், மத்திய ஆயுள்வேதம், சித்த ஆராய்ச்சி கழகத்தினரால் பல நூல்கள் பதிப்பிடப் பெற்றுள்ளது. தாமரை நூலகத்தினரால் 60ஆம் மேற்பட்ட மருத்துவ நூல்கள் வெளியிடப் பெற்றுள்ளது. இதைத் தவிர பல தனியார் நிறுவனங்கள் மூலமாக சித்த மருத்துவ சுவடிகளைப் பாதுகாக்க ஆயுஷ்துறை micro filming மற்றும் digitalization போன்ற கணினி தொழிற் நுட்பங்களைப் பயன்படுத்தி வருகின்றது. இவற்றைப் பயன்படுத்தி அறிவு செல்வங்கள் அழியாவண்ணம் பாதுகாக்கப்பட ஆவணசெய்யவேண்டும்.

சித்தமருத்துவச் சுவடிகள் கொண்டு 3000இத்திற்கும் குறைவான அளவே நூல்கள் பதிப்பிடப் பெற்றுள்ளது. இதனை அடிப்படையாகக் கொண்டே இன்றைய சித்த மருத்துவமும், சித்தமருத்துவக் கல்லூரிப் பாடதிட்டமும் அமைந்துள்ளது. மூலநூல்களைக் கொண்டு விருதை சிவஞானயோகி, சாம்பசிவம் பிள்ளை, முருகேச முதலியார், கண்ணுசாமி பிள்ளை போன்றோர் வழிநூல்களை எழுதி மக்களுக்குச் சித்தர் அறிவை பரவலாக்கிடச் செய்தனர் இன்று. சில நூல்கள் ஆங்கிலத்திலும் மொழிபெயர்ப்பு செய்யப்படுகின்றது.

இன்றைய அடிப்படை தேவையாகச் சித்தமருத்துவ சுவடிகள் அனைத்தும் நூலாக செய்யப்பட வேண்டும். நூல்களாகப் பதிவு செய்யும் போது பாட பேதம், உரை பேதம் களைந்து தரமான பதிவுகள் வெளிவரவேண்டும். அப்போது இவ்வுலகம் சிறப்பான சித்துமருத்துவத்தின் முழுப்பயன் பெற்று விடியலைக் காணும்.

வில்லும் விசையும் சூத்திரம் – ஓர் அறிமுகம்

முனைவர் காஞ்சனா

'வில்லும் விசையும் சூத்திரம்' என்ற ஓலைச் சுவடி மலையாள மொழியில் எழுதப்பட்டுள்ளது. வர்மம் பற்றிய சித்த மருத்துவச் சுவடியாகும். சுவடி கிடைக்கப் பெற்ற இடம் கன்னியாகுமரி மாவட்டத்தைச் சார்ந்த விளவங்கோடு. இதுவரை பதிப்பிக்கப்பட வில்லை. சுவடியிலிருந்து நோட்டுப் புத்தகத்தில் எழுதி வைக்கப்பட்டுள்ளது.

சுவடி ஆசிரியர்

மூன்றாவது பாடலில் போக முனி உரைத்ததாகக் குறிப்பிடப்படுகிறது. மேலும் சுவடியில் இறுதியில் 'அகஸ்திய முனி மரணம்' என்றும் 'குருவே துணை போகமுனி' என்றும் காணப்படுகின்றன. 19–வது பாடலிலும் 'போக முனி விளம்பினார்' என்ற தொடர் உள்ளது.

உலகத்தோர் இந்நூலின் பொருளை ஆய்ந்து
உபதேசம் தன்னை யறிந்து உறுதியாக
கலக்கமில்லா குருபாதம் மனதில் வைத்து
காசினியில் தன்னிலமை கருதி நன்றாய்
நலமுடனே கனம்பொருந்தும் சாத்தியம் சாத்தியம்
நன்மையுடன் போகமுனி உரைத்த தாமே

(பாடல் எண்.3)

தாழ்த்திடுவாய் மூன்று வைப்பு ஆகுமே
குணமாகும் உப்பு புளி முளகாவும்
எட்டத்திடுநீ முருங்கக்கா யதின் பிஞ்சுமாகும்
ஏகிடலாம் அவரக்காய் இன மாதம்
அடுத்ததொரு மர்மமெல்லாம் அகழ்ந்து போகும்
அருமையுடன் போகமுனி விளம் பினாரே

(பா. எண். 19)

அகத்தியமுனிவர் போக முனிவருக்குக் கற்பித்தார் எனவும் போகமுனிவரால் இச்சுவடி எழுதப்பட்டது எனவும் நம்பப்படுகிறது. சுவடியின் காலம் 16ஆம் நூற்றாண்டு என மு. அருணாசலம் எழுதிய இலக்கிய வரலாறு நூலை ஒட்டிச் சொல்லப்படுகிறது.

விளவங்கோட்டில் நிலவிய தமிழ்– மலையாளம் கலந்த மொழிநடை சுவடியில் உள்ளது. வரிவடிவம் மலையாளம் எனினும் பெருவாரியான சொற்கள் தமிழ்ச் சொற்களே பெயர்ச்சொற்கள் வினையெச்சம் என்பனவற்றுள் பல மலையாள மொழிச் சொற்களே. வட்டார வழக்குச் சொற்கள் ஏராளமாக உள்ளன. மருமக்கள் வழிமான்மியம் நாஞ்சில் நாட்டில் மலையாள மொழியே பரவலாக நிலவிய நிலையினைக் காட்சிப்படுத்தியுள்ளது நோக்கத்தக்கது.

கணவரின் மரண காலத்து அங்கு
வந்திருந்தவர் என் மகனை நோக்கி
தம்பி! உன் தந்தை தலைமாட்டிருந்து
திருவா சகத்தில் சிற்சில பதிகம்
படியெனச் சொல்லிப் பண்ணை வீட்டி
லிருந்து ஒருபுத்தகம் எடுத்துக் கொடுத்தனர்
பயலும் அதனைத் திறந்து பார்த்தான்
ஆரே தமிழை அறிபவர் ? என்றான்
பள்ளியில் தமிழும் படித்தேனோ என்றான்
பரீட்சையில் தமிழொரு பாடமோ என்றான்

(யாத்திரைப் பாடல் – 123–134)

முதல் ஐம்பது பாடல்களை மட்டும் மொழி ஆய்வுக்கு உட்படுத்தும்போது தமிழ், மலையாள மொழிகளின் கட்டமைப்புகள் உள்ளன எனினும் சுவடியின் மொழி கட்டமைப்பு பொரிதும் தமிழ் மொழியைச் சார்ந்தது எனத் தெரிகிறது. மலையாளமொழிச் சொற்களன்றி வடமொழிச் சொற்களும் உள்ளன. உடல் உறுப்புக்கள் மலையாள மொழியில் அமைந்துள்ளன.

தமிழ்	–	மலையாளம்	–	பாடல் எண்
மூளை	–	தலச்சோறு	–	6
தலை	–	சிரசு	–	16
கன்னம்	–	கவிள்	–	34
குரல்வளை	–	கொக்கிள்	–	38
அக்குள்	–	கைக்குழி	–	39
குரல்வளை	–	சங்கு	–	42
பெருங்கடல்	–	ஆமாசயம்	–	43
இரத்தம்	–	சோர	–	36
நுரை	–	பத	–	34
விக்கல்	–	இக்கிள்	–	32
மிழி	–	விழி		
எல்லு	–	எலும்பு		

என இரு மொழி வடிவங்களும் உள்ளன. சுவடியில் உள்ள மலையாளத்தில் தரப்பட்டுள்ள பெயர்ச்சொற்கள்

தமிழ்	மலையாளம்	பாடல் எண்
கேடு	சேதம்	9
பக்கம்	வசம்	10
வாழைப்பழம்	கதளிக்கனி	16
வருத்தம்	கேதம்	20
கீழே	தாழே	30
ஓட்டை	துவாரம்	38
சங்கிலி	சங்ஙலி	39
காயம்	முறிவு	41
காய்ச்சல்	பனி	50
பைத்தியம்	பிராந்து	50

வினையெச்சங்கள் சில மலையாள வடிவிலேயே உள்ளன.

தளர்ந்து	அயர்ந்து	11
அரைத்து	சதச்சு	13
குடிக்கும் போது	குடிக்கும்போள்	13
விலகி	அகற்று	19
தவறி	பிசகி	27
பேசாமல்	மிண்டாது	31
நினைவாய்	ஓர்மிச்சு	33
தரையிலிருந்து	தரயில்நிற்று	44

வட்டார வழக்குச் சொற்கள்

ள, ழ வேறுபாடு காணப்படவில்லை. களஞ்சு என்றும் கழஞ்சு என்றும் காணப்படுகிறது.

முழங்கி – முளங்கி – 6

உ, ஒ வேறுபாடு இல்லை

தொகை – துகை – 4

மெய்யொற்று உகரம் சேர்ந்து வருகிறது.

துள் – துளு – 25

பூசுதல் என்பது அப்புதல் என வழங்கப்பட்டுள்ளது.

'அப்பிடு நலசந்தனம்' – 16

சூடாக்கு என்ற சொல் வெதுப்பு என்ற சொல்லாக வந்துள்ளது.

'நேசமுடன் அனைத்ததனை வெதுப்பு நன்றாய்'

வேளை என்பது வைப்பு எனத் தரப்பட்டுள்ளது

'தாழத்திடுவாய் மூன்று வைப்பு ஆகும்

மிளகாய் – முளகா எனக் கூறப்பட்டுள்ளது.

'உப்பு புளி முளகாவும்' – 19

நீக்கிவிடு என்ற பொருள் வர எட்டத்திடு என்ற சொல் கையாளப்பட்டுள்ளது.

குணமாகும் உப்பு புளி முளகாவும் எட்டத்திடு நீ...– 19

எண்ணுப் பெயர்களிலும் வட்டாரத்தன்மை காணப்படுகிறது.

'அரெ விரல்க்கு'	–	50
'களஞ்சு ஒன்ரையாய்'	–	18

மருவி வழங்குதல் வட்டார வழக்கு மொழியின் இயல்பு தன்மைகளுள் ஒன்று

துதுவளை	–	துதளை	– 17
அமுக்கூரன்	–	அமுக்கூடன்	– 27
சூட்சுமம்	–	சூட்சம்	– 40

சுவடியில் வடமொழிச் சொற்கள் அப்படியே தரப்பட்டுள்ளன.

இறைவணக்கம்	–	ஸ்துதி	– 1
கசாயம்	–	கஜாயம்	– 23
பூசை	–	பூஷ	– 26
குருவாக்கி	–	குருவஷனம்	– 29
நெருப்பு	–	அக்னி	– 43
பெண்	–	ஸ்திரீ	– 44

விளிப்பெயர்கள்– ஆசிரியர்

கற்பிப்பது போன்றே சுவடிப் பாடல்கள் அமைந்துள்ளன. மாணவனை நோக்கி உத்தமனே, மைந்தா, பாலகனே என அழைப்பதுடன் 'அடா, அப்பா' எனும் சொற்களும் சில பாடல்களில் வந்துள்ளன. குரு– மாணவர் உறவின் நெருக்கத்தினையே இச்சொற்கள் அனைத்தும் வெளிப்படுத்துகின்றன.

உரைத்த தொரு இந்நூலின் பெருமை
உத்தமனே நாடி மர்ம உலகும் – 4
சேர்ந்த பொய்கை பின்தலையில்திடம் தான்மைந்தா – 5
'பாலகனே உடனிருந்து காட்சி சீரம்' – 6

மொழிமுதல், இடை, கடை போலி மரபு தழுவியும் மீறியும் வந்துள்ளன.

நரம்பு	–	நரம்பு
ஆதாளி	–	ஆசாளி
செண்பகம்	–	செம்பகம்
பிடரி	–	பிடலி
உடல்	–	உடன்

'தவறிடாதே கைக்குழியில் நாடி மூன்று'

தான் துடிக்கும் அரிகுதன்னில் ஞரம்பஞ்சாம் – 48

'உண்டான குணம்தீர ஆசாளி சீரம்' – 46

'கொண்டா நீ செம்பகத்தின் மொட்டு விருட்சம்'– 25

'மிண்டாது சுற்றி யுடன் கோணும்போது' – 31

பாடல்களின் இறுதிச் சொற்களாக வினைமுற்று மட்டுமன்றி ஏவல் வினைமுற்று, பெயர்ச்சொல், ஈற்றசை ஏகாரம், வினையெச்சம், தேற்றேகாரம், அசைநிலைச் சொற்கள் ஆகியன வந்துள்ளன. இவை ஓசை நயத்துக்கும் பொருள்தெளிவுக்கும் ஏற்ப அமைந்துள்ளன.

'ஆகுமடா அடிபட்டால் கண்ணு ரண்டும்
அறியாமல் மூடியே நாகுழறி பேசும்' – 7

பாடலின் பொருள் முற்றுப்பெறும் போது பாடல் வினைமுற்றுடன் முடிகிறது.

'அரைத்தொரு மருந்துதன்னனெ சிரசில் பூசே' – 16

முன்னிலை ஏவல்வினை முற்றினைப் பார்க்கும் போது 'செய்முறை' (Practical) வாயிலாகப் பாடம் கற்பிக்கப்படுகிறது என்று அறியமுடிகிறது.

'சேதமில்லை குளிர்ந்திருக்கும் உளையும் தேகம்'–9

16–ஆம் நூற்றாண்டு மொழிவழக்கில் எழுவாயை இறுதியில் அமைத்துப் பேசுதலும் எழுதுதலும் கையாளப்பட்டிருந்தன என்று தெரிகிறது.

'நன்மையுடன் போகமுனி உரைத்த தாமே' – 3

இங்கு ஈற்றசை ஏகாரம் ஓசைநயம் வேண்டியே வந்துள்ளது.

'மாத்திரையாய் கொம்பரக்கும் சீனி தானும்
மாறாத மேல் பொடியாய் குடிக்கும் போள்' – 18

வினையெச்சம் வருவதால் பாடலின் பொருள் தொடர்ந்து வருகிறது.

'பொல்லாத முகம்தரிப்பும் மற்றும் போமே' – 12

தேற்றேகாரம் தெளிவுப் பொருளைத் தருகிறது.

நோய் நிச்சயமாக விலகிப் போகும் என்பதைத் தேற்றேகாரம் உறுதிப்படுத்துகிறது.

'மெய்யாக தினம் அருந்து ரண்டுநேரம்
மேலான காலமது தீரும் தானே' – 26

இங்கு ஏகாரம் மட்டுமன்றித் 'தான்' என்பதும் அசைநிலையாகவே வந்துள்ளது. இதுவும் ஓசை நயத்தைச் சார்ந்தே நிற்கிறது.

உவமைத் தொடர்

ஐம்பது பாடல்களைப் பார்க்கும் போது இரு பாடல்களில் மட்டுமே உவமைத் தொடர் வந்துள்ளது. மருத்துவச் சுவடி ஆயினமையால் அணிநயம் அருகியே காணப்படுகிறது.

'தொகுத்து இருகைக் குழியில் பற்றினாற்
தோன்றிவரும் இரும்பது சங்கல போல்' – 39

விலா எலும்பு தொகுதி இரும்புச் சங்கிலியுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. வில்லும் விசையும் சேரும் போது ஏற்படும் கடினத் தன்மையை விளக்கவே 'இரும்புச்சங்கிலி' உவமை கையாளப்பட்டுள்ளது.

'உண்டான இடம் சங்கு திரியுமெற்ற
சாதியுடன் பூணெ லும்பில் நரம்பும்
நன்றான பிரிநூலின் பின்னலைப் போல்' – 42

பூட்டெலும்புடன் நரம்பு சேர்தல் நூலின் பின்னலுடன் ஒப்பிடப்பட்டுள்ளது. நூல் மென்மையானது எனினும் பிரிநூல் ஒன்றோடொன்று பின்னி வரும் போது தனியாகத் தெரிவதில்லை. வலிமையும் பெறுகிறது. பொருள் விளக்கத்திற்காகவே இரு உவமைகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

உயிரொலியன்களின் வருகையும் மெய்யொலியன்களின் வருகையும் ஒலியன் மாற்றங்களும் வெடிப்பொலிகளின் வருகையும் மருங்கொலிகளின் வருகையும் யகர வகர உடம்படு மெய்களின் வருகையும் தமிழ்மொழி கட்டமைப்பினைச் சார்ந்தே வருகிறது எனினும் மலையாள மொழி அமைப்பும் சில பாடல்களில் அமைந்துள்ளது.

நாரகம்	+	உம்	–	நாரகவும்
பழம்	+	உம்	–	பழவும்
பத்தியம்	+	உம்	–	பத்தியவும்

என மகர ஒற்றினை உகரம் சார 'வகரம்' தோன்றுவது மலையாள மொழிவழக்கு எனலாம்.

யாப்பு

எண்சீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம், அறுசீர்க்கழிநெடிலடி ஆசிரிய விருத்தம்.

சுவடி தரும் மருத்துவச் செய்தி

நரம்பு முடிச்சுகளில் அடி ஏற்பட்டால் வரும் வர்ம நோய்களும் மருந்துகளும் சுவடியில் விரித்துரைக்கப்பட்டன. வில் எனில் எலும்பு விசை எனில் சுவாசக்காற்று எலும்புகளில் சுவாசக்காற்று நிற்கும் போது பாதிப்பு ஏற்பட்டால் வரும் விளைவுகளை இச்சுவடி விளக்கிய பின் தீர்வுகளும் தருகிறது.

சுவடிகற்கும் தகுதி

இறைபக்தி உடையவராகவும் குருவை மனதில் தியானிப் பவராகவும் உலகநலன் கருதுபவராகவும் அறிவார்ந்து யோசிப்பவராகவும் கருத்தாகக் கவனிப்பவராகவும் இருப்பவரே சுவடியைக் கற்கும் தகுதி உடையவர் எனச் சுவடி பதிவு செய்துள்ளது.

அகத்தியர் குழம்பு - பாடவேறுபாடு

மீ. அபிதகுஜாம்பாள்

முன்னுரை

'அகத்தியர் குழம்பு' என்ற நூலின் மூலபாடத்தைக் கண்டறிய முயன்ற பொழுது உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் மூன்று கட்டுகளும், தஞ்சைப் பல்கலைக்கழக வெளியீடாக அமைந்த சுவடி அச்சு நூல் ஒன்றும் மூலபாட ஆய்வுக்கான தரவுகளாக ஆய்வுக்குட் படுத்தப்பட்டுள்ளது. இதில் எழும் முதற்சிக்கல் அகத்தியர் குழம்பிற்கான பாடல் எண்ணிக்கை என்ன என்று அறிவதில் காணும் சிக்கல் அதாவது, 23 பாடல்கள், 16 பாடல்கள் கொண்ட இரு குறை சுவடிக் கட்டுகளும் 55 பாடல்கள் கொண்ட ஒரு சுவடிக்கட்டும் உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தில் காணப்படுகிறது. தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் சுவடியிலிருந்து அச்சாகிய அச்சுநூலில் 54 பாடல்கள் காணப்படுகின்றன. முழுமையான பல்வேறு கட்டுகள் கிடைத்து அவைகளை ஒப்பிட்டுப் பார்த்தால் இச்சிக்கல்களுக்கான தீர்வு கிடைக்கும். 'அகத்தியர் குழம்பு' என்ற சுவடிகளில் காணப்படும் பாடவேறுபாடுகளை இக்கட்டுரையின் வழி காண்போம்.

பதிவு ஊடகம்

தமி;பி கல்வியைக் கேள்வி, கல்வி என்ற இருநிலைகளில் பகுத்துக் கூறுவர். பிறர் உரைக்க செவியால் கேட்கப்பட்டு உள்ளமும் அறிவும் இயைந்து உள்வாங்கும் கல்வியைக் கேட்டல் என்ற முறையிலும் அதுவே கேள்வி ஞானம் என்ற வகையிலும் அறியப்படும்.

கல்வியியல் நிலை என்பது கேட்டல் மட்டுமல்லாது மாணவர் எழுத்தெண்ணிப் படித்து ஆசான் வழி ஐயம் நீக்கி அறிவுத் தெளிவு பெற்று அவ்வழி ஞானத்தைப் பெறுவதைக் கற்றலால் உண்டாகிய கல்வி ஞானம் என்பர்.

தொல் தமிழகத்தில் பனை ஓலைச் சுவடியைக் கல்விக்கான எழுத்துப் பதிவு ஊடகமாகப் பயன்படுத்தப்பட்டுள்ளதை அறியலாம். பிற்காலத்து மேலை நாட்டினர் வருகையால் அறியப்பட்ட அச்சுக்கருவி தெரிவதற்கு முன்பே ஆசிய கண்டத்தில் குறிப்பாக இந்திய துணைக்கண்டத்தில் பனை ஓலைதான் எண்ண வெளிப்பாட்டிற்கான எழுத்துப் பதிவு ஊடகமாக விளங்கியது.

சங்க காலம் மற்றும் சங்கம் மருவிய காலத்திலேயே மேற்கணக்கு, கீழ்க்கணக்கு நூல்கள், காப்பிய இலக்கியங்கள் இலக்கண நூல்கள், நுண்கலை மருத்துவம், கணிதம், கலை, சார்ந்த ஓவியம் இன்னும் பிற துறைகளுக்கான நூல்கள் ஓலைச் சுவடிகளிலேயே காலம் காலமாகப் பதிவு செய்யப்பட்டு வந்துள்ளன.

படியெடுத்தல் - சிக்கல்

பொதுவாகப் பனைஓலையின் ஆயுட்காலம் குறைவு. நவீன முறைகளைப் பயன்படுத்தி அவற்றின் ஆயுட்காலத்தைக் கூட்டுவிக்க முயன்றாலும் 150 ஆண்டுகளுக்குமேல் அவை நிலைத்திராது என்பது அறிவில் கணிப்பு. இந்த நிலை இருப்பதனால்தான் ஓலைகளில் பதியப்பட்ட நூல்கள் அவற்றின் ஆயுட்தன்மை கருதி வேறு புதிய ஓலைகளில் மாற்றியெழுதும் வழக்கம் தமிழகத்தில் நெடுங்காலமாக இருந்து வந்துள்ளது. இப்படி ஏட்டிலிருந்து பிறிதொரு ஏட்டிற்கு நூலை மாற்றம் செய்யும்பொழுது ஒரு சில சிக்கல்களை நடைமுறையில் காணமுடிகின்றது.

அத்தகைய சிக்கல்களில் தலைமையானதாகச் சொல்ல வேண்டு மென்றால் பாட வேறுபாடு, பாட மாறுபாடு, இலக்கண வழு, படியாளரின் தலையீடு, படியாளரின் எழுத்து தரும் மயக்கம், மூல நூலைக் காண்பதில் ஏடுகள் தரும் குழப்பம், நுண்கலைச் சொற்கள் தரும் மயக்கம், மூலநூல் ஆய்வாளர் தகுதி போன்றவை. இச்சிக்கல்களை முறையாகக் கண்டறிந்து விட்டால் அதற்கான பட்டறிவை ஆய்வாளர் பெற்றிருப்பாரேயானால் சுத்த பாடம் கொண்ட மூலநூலைக் கண்டறிந்து தெரிவிக்க முடியும். அத்தகைய ஆய்வில் காண வேண்டியவற்றை இங்குக் காணலாம்.

திறனாய்வு முறைகளில் கடினமானதும் பொறுப்புள்ளதுமாக அமையும் திறனாய்வு, மூலபாடத் திறனாய்வு என்றால் அது மிகையாகாது. பொதுவாக ஏடுகளில் காணும் நூலைப் பிறிதொரு ஏட்டில் பதிவு செய்தல் என்பது அவை கடினமான பணி அன்று. ஓர் ஓலையில் இருக்கும் செய்தியைப் படித்துணர்ந்து பிரதி செய்வதற்கு படியாளருக்கு ஆய்வுப் புலமை தேவையில்லை. மொழியறிவு இருந்தால் மட்டும் போதுமானது. ஆயின் மூலபாடத்தைச் சுத்த பதிப்பாகக் கொண்டு வர முயலும் ஆய்வாளனுக்குக் கீழ்க்கண்ட சிக்கல்கள் பெரும் சவாலாக அமைந்து, அதில் வெற்றி கண்டாலன்றி சுத்த பாடம் காண்பதென்பது எட்டாக் கனியாய் விடும்.

பாடவேறுபாடு (பிரதி பேதம்)

பாடவேறுபாடு என்பது ஒரு சுவடியைப் படியெடுக்கும் படியாளர் தன்பணி நிறைவுபெற வேண்டுமென்ற நோக்கில் விரைந்து பணியாற்றும் பொழுது சுவடியில் கண்ட சொற்களை விடுத்து அதற்கு இணையாகத் தன் மனத்தில் தோன்றிய சொற்களைக் கொண்டு சுவடிப் பதிவு செய்தல் ஆகும்.

எ.கா.

அகத்தியர் குழம்பு என்ற பாடத்தினைப் பிரதி செய்யும் பொழுது காணும் பிரதிபேதம் வருமாறு.

பொறுமையால் உலகில் வாழும் (தமிழ்ப் பல்கலைக் கழக வெளியீட்டு நூல்) பரமனாா அருளி னாலே

பெருமையாய் உலகில் உள்ள (உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம் கட்டு எண்.509:770)

மேற்சொன்ன அடியில் ஒரு பாடத்தில் 'பொறுமையால்' என்றிருக்க மற்றொரு பாடத்தில் 'பெருமையாய்' என்ற சொல்லைப் பயன்படுத்தியுள்ளதைக் காண முடிகிறது.

பாடமாறுபாடு (பாடபேதம்)

பாடத்தினைப் படிசெய்யும் படியாளர் மூலத்திலுள்ள சொற்களின் தகைமை ஏற்புடையதாக இல்லையென்று தனக்குத் தானே கருதிக்கொண்டு அவ்விடத்தில் அதற்கேற்ப இணையான வேறு சொல்லையோ அல்லது தொடரையோ மாற்றி அமைக்கும் செயலே பாடமாறுபாடு (அ) பாடபேதம் எனலாம்.

காட்டாக

'அகத்தியர் குழம்பி' என்ற சுவடிப் பிரதிகளில் வரும் பாடபேதம் வருமாறு:

பரமனார் அருளி னாலே
***பொறுமையால்** உலகில் வாழும்*
(தஞ்சைப் பல்கலைக்கழக வெளியீட்டு நூல்)

பரமனார் அருளி னாலே
பெரும்பெயர் உலகு தண்ணில்
(உலகத் தமிழாராய்ச்சி நிறுவன கட்டு எண் 549:892)

படியாளர் தன் விருப்பப்படியோ அல்லது பிறரின் தூண்டுதலினாலோ மூலத்திலிருந்த சொல்லை அகற்றிவிட்டு ஒரு புதிய சொல்லைக் கையாண்டிருப்பதைக் காண முடிகிறது.

இலக்கண வழு

யாப்பமைதி தெரியாத படியாளரால் ஏற்படக்கூடிய விளைவுதான் இலக்கண வழு. தமிழ் எழுதத் தெரிந்தால் மட்டும்போதும் என்ற நிலையில் படியாளரை அழைத்து படியெடுக்கச் செய்வர். இதன் விளைவாகத்தான் பல்வேறு பாடல்களில் இலக்கண வழுக்கள் தோன்றுகின்றன.

*பருவதம் **தன் னில்** வாழும்*

பரமனார் அருளி னாலே (த.ப.க. வெளியீட்டு நூல்)

*பர்வத **மத னில்** வாழும்*

பரமனா ரருளி னாலே (உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கட்டு எண். 257:477)

இங்கு முதல்காட்டில் முதலிரு அடியின் இரண்டாவது சீர் முதலில் நேர்நேர் (தேமா) வர, இரண்டாவது காட்டில் முதலடியின் இரண்டாவது சீர் நிரைநேர் (புளிமா) வந்துள்ளதைக் காணமுடிகின்றது.

படியாளர் இடையீடு

படியாளர் படியெடுக்கும் பொழுது வட்டாரச் சொற்களைப் பயன்படுததுவதாலும், எளிய நடையைப் பின்பற்றி எழுதுவதினாலும் மூலபாடத்தினைத் தெரிவு செய்வதில் சிக்கல் எழுகிறது.

*நீரா யெடுக்கும் **நீர்ச்சிறுப்பும்***

நீர்க்கல் லடைப்பு தாழை விழுதில்

(தஞ்சைப் பல்கலைக் கழக வெளியீட்டு நூல், பா.எண்.8

*நேரே யெடுக்கு **நீர்ச்செறிப்பு***

நீர்க்கல் லடைப்பு தாழை விழுதுச்சாறு

(தஞ்சைப் பல்கலைக் கழக வெளியீட்டு நூல், பா.எண்.8

*நேரி யெடுக்கும் **நீர்ச்சொரிப்பு***

நீர்க்கல் பெடைப்பு தாழை விழுதில்

(தஞ்சைப் பல்கலைக் கழக வெளியீட்டு நூல், பா.எண்.8

*உறுபவன **நோவு** வந்தால்*

உண்மையாய்த் தீரு மென்று

(தஞ்சைப் பல்கலைக் கழக வெளியீட்டு நூல், பா.எண்.91

ஒருசில வியாதி வந்தால்

உண்மையாய்த் தீரு மென்று

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கட்டு எண். 549:892)

எழுத்துமயக்கம்

படியாளரின் கவனக் குறைவாலும், ஏட்டிலுள்ள எழுத்துகள் சரியாகத் தெரியாததாலும் எழுத்து மயக்கம் தோன்றுகிறது எனலாம். சுவடி எழுத்து சரியாகத் தெரியவில்லையென்றால் படியாளர் அப்பாடலில் வந்துள்ள ஓசைக்கேற்ப எழுத்தினை மாற்றி எழுத வாய்ப்பு உண்டு.

(எ.கா.) பருவதம் தன்னில் வாழும்

(தஞ்சைப் பல்கலைக் கழக வெளியீட்டு நூல்)

பருபதந் தன்னில் வாழும்

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கட்டு எண். 549:892)

பர்வத மதனில் வாழும்

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கட்டு எண்.257:477)

பருபதத் தண்ணில் வாழும்

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கட்டு எண். 509:770)

மூலநூலைக் காண்பதில் ஏடுகள் தரும் குழப்பம்

நூலுக்குப் பல்வேறு படிகள் கிடைக்கும் நிலையில் மூலநூல் எது என்பதைத் தோர்ந்தெடுப்பதில் சிக்கல் ஏற்படுகிறது. இப்பல்வேறு படிகளில் பெரும்பான்மை ஒற்றுமையுடன் காணப்படுவதை மூலநூலாகக் கொள்ளலாம்.

பருவதம் தன்னில் வாழும்
பரமனார் அருளி னாலே
பொறுமையால் உலகில் வாழும்
புண்ணிய சனங் களுக்கும்
உறுபலன் நோவு வந்தால்
உண்மையாய்த் தீரு மென்று
பிரபல மிகவே நன்றாய்ப்
பேசிய மருந்து கேளே

(தஞ்சைப் பல்கலைக் கழக வெளியீட்டு நூல், பா.எண்.1)

பர்வத மதனில் வாழும்
பரமனா ரருளி னாலே
பொறுமையா யுலகில் வாழும்
புண்ணியர்க் குசனங் களுக்கு
உறுபல வியாதி வந்தால்
ஓடுமென்னு றுநந்தி சொல்ல
பெருபல முனிவர் தாமும்
பேசிய மருந்து கேளே

(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கட்டு எண். 257:477)

பருபதந் தன்னில் வாழும்
பரமனா ரருளி னாலே
பெரும்பெயர் உலகு தன்னில்
புண்ணிய சனங்க ளுக்கு

ஒருசில வியாதி வந்தால்
உண்மை யாய்த்தீரு மென்று
பெருபல முனிவன் தானும்
பேசிய மருந்து கேளே
(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், கட்டு எண். 549:892)

பருபதத் தன்னில் வாழும்
பரமனா ரருளி னாலே
பெருமையா முலகி லுள்ள
புண்ணிய சனங்க ளுக்கு
யொருபல வியாதி வந்தால்
தீருமென் றுண்மை யாகப்
பெருபல னிதுவே யென்று
பேசினார் முனிவர் தானே
(உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம் கட்டு எண். 509:770)

மூல பாட ஆய்வாளன் தகுதி

- எடுத்துக் கொண்ட துறையில் தகுந்த பட்டறிவு வேண்டும் ஏடு படிப்பதில் திறமை வேண்டும்
- இலக்கண அறிவு (யாப்பு) செறிவாக இருத்தல் வேண்டும்
- கலைச் சொற்கள், வழக்குச் சொற்கள் பற்றிய அறிவு பெற்றிருத்தல் வேண்டும்
- நடுநிலைமையோடு விளங்கக் கூடிய மனப்பக்குவம் வேண்டும்

முடிவு

மேற்சொன்ன வகைகளை நினைவிற் கொண்டு, சுவடி ஆய்வு செய்யப்படுமானால், மூல பாடத்தைக் கண்டறிவது எளிமையாவதோடு படியெடுக்கும் பயிற்சியாளர் தகுதி மேம்படும். அவ்வகையில் சிறந்த பதிப்பைக் கொணர்வதற்கு இதுவே தக்க வழிகாட்டுதலாய் அமையும்.

துணைநூல்கள்

1. அகத்தியர் குழம்பு (மூலமும் உரையும்) தொகுப்பாசிரியர் செ.பிரேமா, உரையாசிரியர் ப.வெ. நாகராசன், தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 1986 (முதற் பதிப்பு)
2. உலகத் தமிழாராய்ச்சி நிறுவனச் சுவடி விளக்க அட்டவணை தொகுதி 1 (சித்த மருத்துவம்) (பதி) முனைவர் தி. மகாலட்சுமி, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்,சென்னை, 1998.

ஓலைச் சுவடிகளும் தந்திராவின் அறிவியல் பங்களிப்பும்

கு.கு. ரவி

அனைத்து அறிவியல் மற்றும் தத்துவங்கள் தோன்றி வளர்ந்ததில் தந்திராவின் பங்கு மிக முக்கியமானதாகும். இந்தியாவில் பெண்கள் வேளாண்மையை கண்டுபிடித்ததன் விளைவாக தந்திராவின் கோட்பாடுகள் உருவானது. இத்தந்திரம் பெண்மைக் கோட்பாட்டின் அடிப்படையில் மானிட இனத்தின் உளவியல் உண்மைகளைக் கண்டுபிடித்தது. ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஆண்மைத்தன்மை பெண்மைத்தன்மை இரண்டுமே உள்ளது எனும் உளவியல் உண்மைகளை கண்டுபிடித்ததோடு கற்றலில் பெண் தன்மை முக்கிய பங்கு வகுப்பதை உணர்ந்தது. இதன் தொடர்விளைவாக ஒவ்வொரு மனிதனும் தனக்குள் இருக்கும் பெண் தன்மையை அதிகரித்துக்கொண்டு முழு அறிவை (சித்தநிலை) பெறுவதற்கான, தந்திரப் பயிற்சிகள் உருவாக்கப்பட்டன. இதன்படி பயிற்சி செய்து முழுமையான அறிவினை பெற்றவர்கள் உடலின் முக்கியத்துவத்தைக் கருதி அவ்வுடலைப் பேண மருத்துவம் மற்றும் சோதிடவியலைக் கண்டுபிடித்தனர். இவ்வாறு அறிவியல் துறைகளின் உருவாக்கத்திற்கு வித்திட்டத் தந்திரம் எவ்வாறு வேளாண்மையில் தொடங்கி வளர்ச்சி பெற்றது என்பதோடு அதற்கான ஆதாரங்கள் மற்றும் தமிழ்ச் சித்தர்களின் ஓலைச்சுவடிக் குறித்தும் ஆய்வதாக இக்கட்டுரை அமைகிறது.

பெண்மைக் கோட்பாடும் தந்திராவும்

உணவுக்காக வேட்டையாடுவதைத் தொழிலாக கொண்டிருந்த மாந்தர் இனம். அந்நிலையிலிருந்து முன்னேறி மண்ணில் பயிரிட்டு உணவுப் பொருட்களை உற்பத்தி செய்ய தொடங்கிய வேளாண்மைக்காலச் சமூக அமைப்பே தந்திராப் பின் கோட்பாடுகளை உருவாக்கியது. வேளாண்மையைப் பெண்களே முதன்முதலில் கண்டுபிடித்தனர். அவர்களே நிலத்தில் பயிரிட்டு உணவுக்கான தானியங்களை உற்பத்தி செய்தனர். இதன் காரணமாகத் தாய்வழிச் சமுதாயம் உருவானது. மண்ணின் செழிப்பும், பெண்ணின் கருவுரும் திறனும் ஒரே பண்பாக கருதப்பட்டது. இதனடிப்படையில் துர்க்கா பூஜை முதலான தானிய உற்பத்திச் செயலோடு தொடர்புடைய வேளாண்மை மந்திரங்கள் உருவாகின. நிலத்தைக் குச்சியால் கிளரி உழுவது, விதைப்பது, பயிர் நன்றாக வளரச் செய்வது முதலான உடல் உழைப்பு

சார்ந்த நடவடிக்கை களுக்கு ஊக்கமளிக்கும் உளவியல் காரணமாகப் பெண்கள் மந்திரங்களை உருவாக்கிப் பயன்படுத்தினர். பெண் கருவுற்று குழந்தைப் பெறும் தன்மையோடு, பூமியின் தானிய உற்பத்திச் செயலை ஒப்பிட்டதன் கருத்தியல் வளர்ச்சியில் மனித உடலில் இடம் பெறுபவை அனைத்தும் பேரண்டத்தின் முன் மாதிரி என்னும் கோட்பாடாக உருவானது.

இத்தகையப் பெண்மைக் கோட்பாட்டின் தொடர் வளர்ச்சியின் விளைவாகப் ‘பெண் உடல் மற்றும் உள்ளம் என்பது தன்னுள் முழுமையாக ஏற்றுக்கொள்ளும் தன்மையுடையது அல்லது உள்வாங்கும் தன்மையுடையது; ஆண் உடல் மற்றும் உள்ளம் என்பது முழுமையாக வெளிப்படுத்தும் தன்மையுடையது என்னும் உளவியல் உண்மை கண்டு பிடிக்கப்பட்டது இதன் சுருக்கமாக பெண் மனத்தை உள்வாங்கிக் கற்றுக் கொள்ளும் அறிவு என்றும் ஆண் தன்மையைத் தர்க்க முறையில் வெளிப்படுத்திக் கற்றுக் கொடுக்கும் அறிவு என்றும் எடுத்துக் கொள்ளலாம்.

இப்போது நமக்கு விளக்குவது உள்வாங்கி எதையும் கற்றுக் கொள்ளாமல் எதையும் வெளிப்படுத்திக் கற்பிக்க, முடியாது என்பதாகும். இந்த வகையில் பெண் தன்மை மிக முக்கியமானதாகி விடுகிறது. இதன் அடுத்த கட்ட வளர்ச்சியாக ஒவ்வொரு மனிதனுக்குள்ளும் ஆண் தன்மை மற்றும் பெண் தன்மை இரண்டுமே கலந்திருக்கின்றது என்றும் உணர்ந்தனர்.

இத் தத்துவத்தின் உருவகம்தான் சிவனை பாதி பெண்ணாகக் காட்டும் அர்த்தநாரீஸ்வரர் உருவம் ஆகும். மேலும் உணர்வின் இருப்பிடம் மூளைதான் என்ற கருத்தும் தந்திராவில் உள்ளது. இவைகளை இருபதாம் நூற்றாண்டில்தான் நவீன உளவியல் அறிவியல் கண்டு பிடித்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

தந்திரப் பயிற்சி

ஒவ்வொரு மனிதருள்ளும் ஆசன வாயின் மேல் பகுதி முதல் தலை உச்சிப்பகுதி வரை ஏழு பெண் சக்தி மையங்கள் இருப்பதை அறிந்து ஆசன வாயின்மேல் பகுதியில் சுருண்டு கிடக்கும் குண்டலினி (பெண்மை சக்தி) சக்தியை எழுப்பி முதுகெலும்பின் வழியாக உள்ள பிற பெண் சக்தி மையங்களைத் துளைத்து மூளையை (சகஸ்ர-தாரா) நோக்கிச் செலுத்தி அங்கு ஆண் தன்மை முழுவதையும் தனதாக்கி ஆண் தன்மையும், பெண் தன்மையும் இரண்டென்றில்லாமல் ஒன்றாக்கிக் கலந்து விடுகின்றனர். சுருக்கமாகக் கூறின் பெண்ணாக மாறி அனைத்து அறிவினையும் உள்வாங்கிக் கொள்கின்றனர் எனலாம். உடலிலுள்ள ஒவ்வொரு செல்லும் பேரண்டத்தின் பாகமாகும். பேரண்டத்தை அணுக மூச்சையே பாலமாகப் பயன்படுத்தினர். மூச்சில் உள்ள சில புள்ளிகள்

மூலமாக வேறு ஒரு பரிமாணத்திற்குள் (வேறுபட்ட உணர்வுநிலை) செல்ல முடியும் என்பதே தந்திராவின் இரகசியமாகும். நூற்றி பனிரெண்டு முறைகள் மாந்த இனஅறிவியல் வளர்சிக்காக தந்திராவில் கூறப்பட்டுள்ளது. இதனைப் பயிற்சி செய்த வெற்றி பெற்றவர்கள் சித்தர்கள் எனப்பட்டனர். சித்தர்கள் என்றால் அனைத்து அறிவினையும் பெற்றவர்கள் என்பது பொருளாகும். இத்தகைய அறிவைப் பெற்றவர்கள் வானில் பறப்பது, நீரில் மிதப்பது, நெருப்பில் நடப்பது முதலான அறுபத்து நான்கு கலைகளில் தேர்ச்சி பெற்றிருப்பர். இத் தந்திர பயிற்சி முறைகள் யாவும் சக்தி, சிவாவிடம் வினா விடுப்பதும் சிவா, சக்திக்கு பதிலளிப்பதுமான முறைகளிலே விளக்கப்பட்டுள்ளது.

சித்தர்களின் மருத்துவமும் சோதிடமும்

சித்தர்களின் உச்ச கட்ட நோக்கம் தந்திரப் பயிற்சிகளின் மூலம் அழியாத உடலைப் பெறுவதாகும். ஒவ்வொரு மனிதருக்கும் உடல் முக்கியமானதாகும். உடலைப் பற்றிய ரகசியத்தை அறியும் பொழுதுதான் அமைதி கிட்டும். உடலின் மர்மத்தை அறிந்தவன் விவேகி. எல்லா விதமான உளப்பயிற்சிகளுக்கும் உடல் அடித்தளமாகும். எனவே சித்தர்கள் உடலைப் பேணுவதில் மிகுந்த அக்கரையுடையவர்களாக இருந்துள்ளனர். இங்குக் (உடலில்) கங்கையும், யமுனையும் உள்ளன; காசி, பிரயாகை ஆகியன உள்ளன; இங்கு எல்லாப் புனித இடங்களும் உள்ளன; சூரியனும், சந்திரனும் இங்குள்ளது. பயணம் மேற்கொண்டு பூசை செய்து வழிபடத்தக்க ஆனந்தமான ஓர் இடம் மனித உடலைத் தவிர வேறில்லை என்பது சித்தர்களின் (தந்திரம்) முடிவாகும். இதன் காரணமாகவே உடல் நலமுடன் வாழ்வதற்கான முறைகளையும், நோயுற்ற உடலிலுள்ள நோயினை நீக்குவதற்கான முறைகளையும் முதன் முதலில் கண்டுணர்ந்தனர். இவர்கள் பல்வேறு வகையான உபகரணங்களைக் கொண்டு சோதனைகளும், இரசவாத சாதனைகளும் செய்த உலகின் முதல் அறிவியலார் ஆவர். பரிசோதனை செய்துணராமல் எக் கருத்தையும் வெளியிடும் வழக்கம் இவர்களிடம் எப்போதும் இருந்ததில்லை.

தந்திரத்தின் முக்கியக் கோட்பாடான உடலை கட்டுப்படுத்து வதன் மூலம் பேரண்டத்தில் சக்தியைத் தனக்கு சாதகமாக மாற்ற முடியும்; பேரண்டத்தில் உள்ளவற்றைக் கட்டுப்படுத்துவதன் மூலம் தன்னுள்ளுரையும் சக்தியை வளர்க்க முடியும் என்பதே சோதிடமும், மருத்துவமும் உருவாகக் காரணமாக அமைந்தது. மேற்கண்ட அடிப்படையில் வான் மண்டலத்தைத் (360 பாகை) தலை முதல் கால்வரை உள்ள ஒரு மனிதனாகக் கண்டனர். அவ்வான் மண்டலத்தில் காணும் நட்சத்திரங்கள் மற்றம் கோள்களைக் கணக்கிட்டு மாந்தருக்கு என்ன நோய் வரக் கூடும் என அறிந்தனர். அந்நோயைக் குணப்படுத்த

மருந்துகளை கண்டுபிடித்தனர். இதுதான் பண்டைய சித்த மருத்துவமாகும். மே முதல் பனிரெண்டு இராசிகள், சூரியன் முதலான ஏழு கோள்கள் மற்றும் நிழல் கோள்கள் என அழைக்கப்படும் இராகு, கேது, அசுபதி முதலான இருபத்தேழு நச்சத்திரங்கள், இலக்னம் முதலான பனிரெண்டு பாவகங்கள் ஆகியவற்றிற்குத் தலை முதல் பாதம் வரை உள்ள உடல் உறுப்புக்கள் மற்றும் அவ்வுறுப்புக்களில் ஏற்படும் நோய் வகைகள் ஆகியன சித்தர்களால் அறிந்து கூறப்பட்டுள்ளது. இவ்வாறு சோதிடவியல் உருவானது.

மரபணு (விதி)வியலும் சோதிடவியலும்

மாந்தரின் குணாதிசயம், திறமை, திறமையின்மை, நோயுரும் தன்மை மற்றும் நோயில்லாத் தன்மை அனைத்துமே மரபணுக்களால் ஏற்படுகிறது என்று மரபணு அறிவியல் கூறுகிறது. நோயினைக் குறித்த மரபணு உடலில் இயங்கும் பொழுது அம் மனிதன் நோயுறுகிறான். திறமையைக் குறித்த மரபணுக்கள் உடலில் இயங்கும்பொழுது அம் மனிதன் திறமையாகச் செயல்பட்டு வெற்றி அடைகிறான். சுருக்கமாகக் கூறின் நன்மையான மரபணுக்கள் உடலில் இயங்கு பொழுது வெற்றி, மகிழ்ச்சி முதலான நற்பலன்கள் நடைபெறும். தீமையான மரபணுக்கள் உடலில் இயங்கும் பொழுது துன்பம், தோல்வி, நோய் முதலான தீய பலன்கள் நடைபெறும். இந்நிலைகளையே பன்னிரெண்டு பாலகங்களை ஆய்வு செய்து நன்மையான அல்லது தீமையான பலன்கள் நடைபெறும் காலத்தைச் சோதிடவியல் கூறுகிறது. இதன் காரணமாக மரபணுவின் இயக்கத்தை அறிந்து கொண்டு தற்காத்துக் கொள்ளும் ஒரு தடுப்பு சக்தியாகச் (ஆண்டிபயாடிக்) சோதிடவியல் உள்ளது.

எதிர்ப்புச் சக்தி

மரபணுக்கள் உடலில் இயங்குவதற்கு மரபணு அறிவியல் சில காரணிகளைக் கூறுகிறது அவைகளில் மிக முக்கியமானவை சூழ்நிலை மற்றும் உணவுப் பழக்கமாகும். சிறை கொள்ளச் செய்யும் தன்மையுடைய மரபணுவை உடலில் பெற்ற ஒரு மனிதன் எப்பொழுதும் சினந்து கொண்டிருப்பதில்லை. சின மூட்டும் விதமான ஏதேதும் ஒரு (நிகழ்வு) சூழ்நிலை வரும் பொழுதே அம் மனிதன் தனது சினத்தை வெளிப்படுத்துகிறான். மேலும் சில உணவுப் பொருட்கள் உணர்வுகளைத் தூண்டும் பொழுதும் சினத்தை வெளிப்படுத்துகிறான். இதிலிருநது சூழ்நிலைகளும், உணவுப் பழக்கமும் மரபணுவை இயக்கும் காரணிகள் என்ற மரபணு அறிவியலின் கூற்று புலனாகிறது.

எனவே சோதிடவியல் மூலம் கெட்ட நேரங்களை கணித்தறியும் பொழுது தீமை செய்யும் மரபணுக்கள் உடலில் இயங்கப்போகிறது என்பதைக் கண்டு பிடித்துவிட்டதாகவே கருத வேண்டும். இந்நிலையில் அக்கெட்ட பலன்கள் நடைபெறாமல் இருக்கச் சோதிடவியல் கூறும்

ஆலோசனைகள் சூழ்நிலையை மாற்றவோ அல்லது தவிர்த்து விடக் கூடியதாகவோ இருக்க வேண்டும். மேலும் சரியான உணவு முறைகளையும் தேர்வு செய்து கூறுவதாகவும் இருக்க வேண்டும். இவ்வாறு இருப்பின் தீய பலன்கள் (தீமையான மரபணுக்கள் இயங்காமல்) ஏற்படாமல் தடுக்கும் தடுப்புச் சக்தியாகச் சோதிட அறிவியல் செயல்பட்டு வெற்றி பெறும். இத்தகைய இயக்கவியல் கோட்பாடு களோடு வாழ்ந்தவர்கள்தான் சித்தர்கள் என்பது குறிப்பிடத்தக்கது.

காட்டுகள்

வேளாண்மையில் (பெண்மைக் கோட்பாட்டில்) தொடங்கித் தந்திரமாக வளர்ச்சி பெற்ற இத்தத்துவத்தில் இருந்த சாருவாகம், சாங்கியம், உலகாயதம் ஆகிய இயக்கவியல் தத்துவங்கள் உருவானது. மேலும் உலகில் உள்ள அனைத்துத் தத்துவங்கள் மற்றும் இறைமையியல்களிலும் தந்திராவின் கூறுகள் ஊடுருவியுள்ளது.

இந்தியாவில் இயக்கவியல் தத்துவமாக இருந்த தந்திரம், சாருவாகம், சாங்கியம், உலகாயதம் ஆகியன குறித்த நூல்கள் கி.மு. 150க்கு முன்பிருந்த வார்த்திக சூத்திரத்தின் ஆசிரியரான காத்யாயனரின் காலத்தில் இருந்துள்ளது. இக் காலத்திற்குப் பின்பு இயக்கவியல் கோட்பாடுகளுக்குக் கடுமையான எதிர்ப்புகள் எழுந்துள்ளது. அவ்வெதிர்ப்பின் விளைவாகத் தந்திர நூல்களனைத்தும் திட்டமிட்டு அழித்து விட்டதாகக் கருதப்படுகிறது. இவ்அழிப்பு வேலை கிறித்துவ சகாப்தத்திற்கு முன்பே நடை பெற்று விட்டது. இந்நிலையில் தந்திரத்தின் தத்துவ முக்கியத்துவத்தை அதனை எதிர்த்தவர்களின் நூல்களில் இருந்து திரட்டி, தாஸ்குப்தா தனது இந்திய தத்துவத்தின் வரலாறு என்ற நூலில் தந்துள்ளது குறிப்பிடத்தக்கது. ஆர். பிரிபால்ட் தனது தாய்மார்கள் (mothers) என்னும் நூலில் பெண்மைக் கோட்பாடு உருவாகி வளர்ந்த நிலைகளைக் கூறியுள்ளார்.

சுக்ர நீதிசாரம், கௌடில்யரின் அர்த்த சாஸ்திரம், பாகவத புராணம், மணிபத்ராவின் சத்தரியன சமுச்சயம், மிலிந்தம், பானரின் ஹர்ச சரிதம் ஆகிய நூல்களில் தந்திரிகர்களின் ஆக்கப்பூர்வமான ஒழுக்க மதிப்புகள் குறிப்பிடப்பட்டுள்ளது.

சந்திர கீர்த்தியின் பரஞ்ஞான சாஸ்திரம், ஆரிய தேவருடைய சத சாஸ்திரம், பௌத்த நூலான திவ்ய வதனம் ஆகியவற்றில் தந்திரம் அனைவரும் கற்க வேண்டிய கல்வித்துறை என்று குறிப்பிடப் பட்டுள்ளது. எப். டபில்யு. தாமஸ் என்பவர் 1921ஆம் ஆண்டு பிரகஸ்பதி சூத்திரம் என்னும் நூலைக் கண்டெடுத்துப் பதிப்பித்துள்ளார். இதில் இக்காலத்திய தத்துவக் கருத்துகள் இருப்பினும் மிகப் பழமையான நூலில்

இருந்து எடுக்கப்பட்ட தந்திரம் குறித்த சில மேற்கோள்கள் உள்ளன என்று மகோமாபாத்தியாயா கூறியுள்ளார். இவர் இந்தியத் தத்துவ வரலாற்றில் தந்திர நூல்கள் அழிக்கப்பட்டது ஒரு சோக நிகழ்வு என்கிறார். மேலும் இவர் தமிழ்ச் சித்தர்கள் எழுதிய பல ஓலைச் சுவடிகள் தென்னிந்தியாவின் மடாலயங்களில், ஆவண நூலகங்களிலும் காணப்படுகின்றன. இவற்றைத் தகுந்த முறையில் பதிப்பித்து ஆய்வு செய்தால் இந்திய அறிவியல் வரலாற்றில் மீட்டெடுப்பதற்கான விவரங்கள் கிடைக்கும் என்றும் தமிழ்ச் சித்தர்கள் குறித்து ஆர்வம் காட்டுவதற்குக்கான காரணம் இந்தியாவிற்கும் சீனாவிற்குமிடையே அறிவியல் கருத்துகள் பரிமாற்றம் செய்யப்பட்டன. மற்றொரு காரணம் அறிவியல் மனப்பான்மையை வளர்க்கும் உள்ளார்ந்த பொருள் தந்திராவில் இருந்துள்ளது எனக் கூறியுள்ளார்.

இந்தியச் சரித்திரக் களஞ்சியம் என்ற நூலின் ஆசிரியர் ப. சிவனடி தனது நூலின் இரண்டாம் தொகுதியில் தமிழகத்தில் இருந்து தந்திர நூல்கள் சிந்துவெளி, திபெத், கிழக்கு மற்றும் மேற்காசிய நாடுகளுக்குப் பரவியது என்று கூறியுள்ளார். எஹ்ரன் பெல்ஸ் என்பவர் தொல் பழங்கால வேளாண்மையும், ஒரு வகையான தாய்வழி உரிமைமுறையும் இந்தியாவில் தான் முதன்முதலில் தோன்றியது என்றும், இங்கிருந்து பண்டைக் காலத்தில் உலகின் பல பகுதிகளுக்குப் பரவியது என்றும் கூறுகின்றார்.

முடிவுரை

பெண்மைக் கோட்பாட்டின்படி உருவான தந்த்ரத்தை உருவாக்கியதில் பெரும்பங்கு பெண்களுக்குத்தான் உண்டு. இருபாலினமும் சேர்ந்திருப்பதுதான் ஒவ்வொரு மனிதனும் என்றாலும் இயற்கையில் பெண்களுக்கு பெண்மைத்தன்மை அதிகமாக ஓங்கி இருக்கும். இதன் காரணமாகவே தொடக்க காலக்கட்டங்களில் பெண்களே பெரும்பாலும் தந்திரிகர்களாகவும், தந்திரிக குருவாகவும் இருந்துள்ளனர். பிற்காலத்தில் தான் ஆண்கள் தங்கள் பெண்மைத் தன்மையை அதிகரித்துக்கொண்டு சித்த நிலையை அடையும் பயிற்சியில் ஈடுபட்டிருக்க வேண்டும். தற்போது கிடைப்பது எல்லாம் ஆண் சித்தர்களைப் பற்றிய குறிப்புகளாகவே இருப்பது மிகுந்த ஆராய்ச்சிக்குரியது. பெண்கள் பண்டைய காலத்தில் தந்திரிகளாக இருந்தது குறித்த விவரங்கள் பெரும்பகுதி தெரிந்து விட்டால் தந்திரத்தின் முழுவிவரம் கிடைத்து விடும் என்பது உறுதி. இதற்குத் தென்னகத்தில் உள்ள தமிழகச் சித்தர்களின் ஓலை சுவடிகளைப் பதிப்பித்து ஆய்வு செய்ய வேண்டும்.

சோதிடச் சுவடிப் பதிப்புகள்

முனைவர் மு. பிரபாகரன்

தமிழின் தொன்மைக்குச் சான்றாகக் நமக்குக் கிடைத்துள்ள எண்ணற்ற இலக்கியங்களுக்கும், அறிவுசார் நூல்களுக்கும் காரணம் ஓலைச்சுவடிகளில் எழுதும் பழக்கமே. பனையின் கொடையால்தான் தமிழ்மொழியும் இலக்கியங்களும் சோதிட சுவடிகளும் கிடைத்துள்ளன.

ஏடு என்றால் பனை ஓலைப் புத்தகம் என்று பொருள். இன்று புத்தகம் பதிப்பிக்க காகிதம் பயன்படுத்துகிறோம். அன்று பனை ஓலையைப் பயன்படுத்தினர். இன்றைய காகிதம் கூட மரப்பட்டை களிலிருந்து உருவாவதே! பனை ஓலை, காகிதத்தை விட வலுவான தன்மை 10 அல்லது 20 ஆண்டு புத்தகங்களுக்குக் கூட கிடையாது. ஆனால் முன்னூறு ஆண்டு பனை ஓலைப் புத்தகம் இன்றும் வாசிக்கத்தக்கதாய் உள்ளது. நம்மவரின் பதப்படுத்தும் முறைகளை எண்ணிப் பெருமைப்பட வேண்டும். தமிழர் தம் கலையை,அறிவியலை, கதைகளைப் பனை ஓலையில் எழுதி வைத்தனர்.மேலும் சமண ஒழுக்கத்தில் பனை ஓலையில் எழுதிய புத்தகங்களைப் படி எடுத்து பரிசாகத் தரும் வழக்கமும் இருக்கிறது. இப்படி சேகரித்து வைத்த புத்தகங்களைப் படி எடுத்து பரிசாகத் தரும் வழக்கமும் இருக்கிறது. இப்படி சேகரித்து வைத்த புத்தகங்களைக் கண்டு உ.வே.சா. பதிப்பித்துத் தமிழுக்குப் பெருமை சேர்த்தார். பதிப்பிக்கப்படாத சோதிட மற்றும் அறிவியல் நூல்கள், தமிழ் மருத்துவ நூல்கள், மிருக வைத்திய நூல்கள், கட்டிடக்கலை, தாவரவியல்,வான சாஸ்திரம், கணிதம் வான சாத்திரம் போன்ற பிற துறை நூல்கள் ஆயிரக்கணக்கில் உள்ளன.

இலக்கணம், இலக்கியம், காவியம்,புராணம், சிற்றிலக்கியங்கள், சமயம், சாத்திரம், தோத்திரம், கணிதம், அறிவியல் எனப் பல வகையிற் பல்கி பெருகி உள்ள இந்நூல்கள் எல்லாம் கடந்த நூற்றாண்டின் முக்கால் பகுதி வரை பெரும்பாலும் ஏட்டுச் சுவடியிலேயே எழுதப்பெற்று வந்தன. அக்காலத்தில் பக்தி இலக்கியங்கள், சமய சாத்திர நூல்கள், சிறு பிரபந்தங்கள் என்பனவற்றை மட்டும் தமிழ் மக்கள் உணர்ந்திருந்தனர். சங்க இலக்கியம் என்பதைப் பெயரளவில் அறிந்திருந்தனரேயன்றிப் பார்த்துப் படித்தவர்கள் இல்லை. தொல்காப்பியமும், திருக்குறளும் தனிச்சிறப்பால் உணரப்பெற்றன. எனினும் அவற்றின் தொன்மை மக்களால் காலம்கடந்து அறியப்படுகின்றன. இலக்கண இலக்கியங்களின் நிலையே இவ்வாறெனில் சோதிட சுவடிகளின் பதிப்பு நிலைகள் மிகவும் பின் தங்கியே உள்ளன.

தமிழில் நினைத்துப் பார்க்க முடியாத அறிவுத் துறைகள் எல்லாம் ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டிருக்கின்றன. அழகுக் குறிப்புகள், இராக்கெட் தொழில்நுட்பம், சமையல் குறிப்புகள், ரசவாதம் என்று உலகத்தில் யாருமே யோசித்திராத காலத்தில் முன்னோர்கள் யோசித்து எழுதி இருக்கிறார்கள். அந்த ஓலைச்சுவடிகள் எங்கெங்கே இருக்கிறது என்பதைக் கண்டுபிடித்து அதை அப்படியே புத்தகமாக்க வேண்டும். மஞ்சள், வேம்பு என்று பாரம்பரிய பயிர்கள் எல்லாம் அமெரிக்கர்கள் காப்புரிமை கொண்டாடுகின்றனர். இதை மறுத்து அது நமக்குச் சொந்தமானது என்று போராட வேண்டியிருக்கிறது. அதற்கு பழந்தமிழ் ஓலைச்சுவடி சான்று எடுத்துக் காட்ட வேண்டியிருக்கிறது. பழந்தமிழ் சோதிட ஓலைச்சுவடிகளில் பெருமளவு தஞ்சாவூரில் உள்ள சரஸ்வதி மகால் நூலகத்திலும், சென்னையில் ஓரியண்டல் நூலகத்திலும் உள்ளன. இந்த நிறுவனங்கள் சோதிட ஓலைச்சுவடிகளைப் பாதுகாத்து வருகின்றன.

வரலாறு என்பதன் அவசியம் கடந்து போன காலத்தை மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்ப்பதற்காக மட்டும் அன்று. வரலாற்றின் தேவை நிகழ்காலத்தின் தேவைக்கேற்ப மாறக்கூடியது. சொல்லப் போனால் வாழ்வின் வளர்ச்சியே நாம் புறப்பட்ட இடத்தையும் இதுவரை கடந்து வந்த பாதையை நினைவுபடுத்திக் கொள்வதையும் அதிலிருந்து பாடங்கள் பெறுவதையும் பொறுத்துத்தான் அமைகிறது. வரலாறு எத்தனை ஆழமாகப் பாடங்களை ஒரே ரீதியில் கூறினாலும் அதன் பாடங்களைச் சரிவரப் புரிந்து கொள்ளாதவர்கள் வரலாற்றில் இடம் பெறுவதில்லை.

ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்தைய இத்தாலிய, இலத்தீன் நூல்களை அவற்றைத் தாய்மொழியாகக் கொண்டு வாசிப்பவர் தற்போது இல்லை. ஆயிரம் வருஷத்திற்கு முன் இருந்த ஆங்கில நூல் எதையும் தற்காலத்து ஆங்கிலேயர்களால் படித்துவிட முடியாது.இதில்தான் தமிழர் தம் தொல்லறிவு வெளிப்படுகிறது. தன்னைச்சுற்றி இருந்த இயற்கையின் கொடையான செடி கொடி மரங்கள் இவை களைத் தனது உணவு மற்றும் உடல் நலம் பேணும் மருத்துவ குணங்களைக் கண்டு அவற்றைத் தக்கவாறு பயன்படுத்த அறிந்த தொல் தமிழ் இனம் மன வழி, செவி வழி பெற்ற கருத்துக் கோவைகளை வரி வடிவில் மாற்றுவதற்கு ஏற்ற சாதனம் ஒன்றைத் தங்கள் ஆற்றல்மிகு அறிவால் கண்டனர்.கற்பக விருஷமான பனை மரத்தின் ஓலைகளின் பெரும் பயன்பாட்டைக் கண்டனர்.பனை ஓலைகளில் எழுதப்பட்டவை எவ்விதப் பராமரிப்பு இல்லாத போதும் குறைந்தது 300 ஆண்டுகளாவது இருக்கும் திறன் அறிந்தனர். தொடர்ந்த பராமரிப்பு இருப்பின் ஓலைகளின் ஆயுள் நீடிப்பதையும் கண்டனர். இவ்வாறு பழந்தமிழர் தொல் இலக்கியங்கள் அறிவுச் செல்வங்கள் காலம் காலமாக ஓலைச்சுவடிகளில் எழுதப்பட்டுத்

தொடர்ந்து பாதுகாக்கப்பட்டன. வட இந்தியாவில் பனை ஓலைகள் கிடைக்காத இடங்களில் பத்திரங்கள் எனப்படும் இலைகளில் எழுதும் வழக்கம் இருந்தது.இப்படி எழுதப்பட்ட பல்லாயிரம் ஏட்டுச்சுவடிகள் இன்னும் நூல் வடிவில் பதிப்பிக்கப்படாமல் உள்ளன. இவை நம் நாட்டின் தஞ்சைத் தமிழ் பல்கலைக்கழகம், சரசுவதி மகால் நூல் நிலையம், சென்னைக் கீழ்த்திசைச் சுவடிகள் நிலையம், தமிழ்நாடு ஆவணக் காப்பகம், சென்னை டாக்டர். உ.வே.சாமிநாதையர் நூல் நிலையம், மதுரைப் பல்கலைக்கழகம், மதுரைத்தமிழ்ச் சங்கம், தமிழகத்தில் உள்ள மடாலயங்கள்,பழைய சமீன்தார் வழியினர், பழம் புலவர்களின் வாரிசுகளின் வீடுகள் ஆகிய இடங்களில் உள்ளன.

'சோதிடம்' என்பது காலத்தைப் பற்றி ஆராய்கின்ற நுண்கலையாகும். இக்கலை உணர்ச்சி அறிஞர்கட்கு மிக இன்றியமையாததாகும். அன்றியும் சோதிடம் என்பது கிரகங்களின் நிலையையும் நட்சத்திரங்களின் நிலையையும் கொண்டு மானிட உலக விவகாரத்தைப் பற்றி முன்கூட்டியே அறிய முடியும் என்ற நம்பிக்கையை ஆதாரமாக உடையது. சோதிடச் சுவடிகளின் வானிலையை மையமாகக் கொண்டு மக்களின் எதிர்காலத்தை நிர்ணயம் செய்து கொள்ளப் பயன்படுகின்றன.இஃதன்றி ஒரு நாட்டின் தட்ப வெப்பநிலை, மழை, விளைபொருள்கள் முதலியவற்றைக் கணிப்பதும், சோதிடத்தின் ஒரு பகுதியாகும். கிரகணம், சமாகமம், வால் நட்சத்திரம் முதலியன தோன்றும் நேரத்தைக் கணிப்பதும் இப்பகுதியில் அடங்கும். சாதகத்தின் மூலம் ஒருவனுக்கு உண்டாகும் நோய் முதலியவைகளையும் அவற்றிற்குப் பரிகாரங்களையும் சொல்வது சோதிடத்தின் மற்றொரு முக்கியமான அம்சமாகும்.

சோதிடச்சுவடிகளைப் பதிப்பிப்பது எளிதான காரியமன்று. அதற்குத் தெளிந்த சாத்திர அனுபவ ஞானம் வேண்டும். பல சோதிட நூல்களைப் பயின்றிருக்க வேண்டும். அதன்மீது அளவிடற்கரிய ஆர்வம் இருக்க வேண்டும்.முதலில் ஒரு சோதிட ஓலைச்சுவடினய நூல்வடிவாக வெளியிட நிர்ணயிப்பதற்கு முன்னர் அச்சுவடியின் ஏடுகளைப் படித்து, தற்கால எழுத்தில் பெயர்த்து எழுதிக் கொள்ள வேண்டும். இது சுலபமான வேலை அல்ல. எனினும் அவற்றைத்தற்கால எழுத்தில் பெயர்த்து எழுதிய பிறகே அவற்றின் மதிப்பை நாம் உணர முடியும்.

சோதிடச் சுவடிகளை முதலில் ஊன்றிப் படித்துப் பார்த்தால் பல சொற்கள் உருமாறிக் காணப்படும். இன்னும் சிலவற்றில் எழுத்துப் பிழைகள் மலிந்து காணப்படும். அவற்றை எல்லாம் ஓரளவு திருத்தி எடுத்துக்கொண்டு சோதிட வல்லுநரிடம் காட்டித் திருத்தம் செய்து கொள்ள வேண்டும். பின்னர் சோதிட நூல்கள் பலவற்றை ஒப்பிட்டுத் திருத்தஞ் செய்ய வேண்டும்.சோதிடச் சுவடிகள் படிப்பது பற்றியும்

அவற்றில் உள்ள சிரமங்கள், நுணுக்கங்கள் பற்றியும் பார்த்தால், கடந்த நூற்றாண்டின் முக்கால் பகுதி வரை (கி.பி. 1875) தமிழ் நூல்கள் பெரும்பாலும் ஏட்டுச் சுவடியிலேயே எழுதப்பெற்று வந்தன. ஆசிரியர் சொல்ல மாணவர்கள் அதனை ஏட்டில் எழுதி வந்தனர். அவர்கள் செவிவழிக்கேட்டு எழுதியதால் பிழைகள் மிகுந்து காணப்பட்டன. சிலர் இவற்றை அவசர அவசரமாகப் பதிப்பிடும்போது நூல்கள் பல பிழைகளுடன் காணப்படுகின்றன. சுவடியாக இருந்தால் இப்பிழைகளை ஒருவாறு ஊகிக்கலாம். ஆனால் அச்சில் வந்தபின் அவ்விதம் ஊகிக்கவும் இயலாது.

இச்சோதிடச் சுவடிகளில் குறியீடுகள் எதுவும் இராமல், பாடல்கள் சீர் பிரித்து எழுதவும் பெறாமல், ஒரே சங்கிலித் தொடராகவே எழுதப்பெற்றிருக்கும். எனவே சுவடிகளில் உள்ள சந்தி, குறில், நெடில், மெய், உயிர்மெய், கொம்பு கால் இவற்றை உணர யாப்பியலும் இலக்கணமுமே கைகொடுத்து உதவுகின்றன. இவ்விலக்கண நூல்களைப் பயில்வதோடு, சோதிடக்கலை நூல்களையும் கற்றுச் சிறந்த புலமையும் இருந்தால்தான் முறையாகச் சரியான வடிவில் பிழையின்றிப் பதிப்பிக்க முடியும்.

இந்த காலகட்டத்தில் தான் சோதிடச் சுவடிகள் சில தனித்தனியே பிரதி செய்யப்பட்டு குறிப்புரை, முன்னுரை, சொற்பொருளகராதியுடன் பதிப்பிக்கப்பட்டுள்ளன. எடுத்துக்காட்டாக, தஞ்சை சரசுவதி மகால் நூல் நிலையத்தின்

1. காலச்சக்கரம் (1969) என்னும் நூலையும்
2. வராகர் ஓரா சாஸ்திரம் (1981) என்னும் நூலையும் கூறலாம்.

மேலும் அதற்கு முன்பே சென்னை அரசினர் கீழ்த் திசைச் சுவடிகள் நூல்களை வெளியிட்டன. அவைகளின் விபரம் வருமாறு:

சப்தரிஷி நாடி சோதிடம்..

மேஷ லக்னம் ...1951

ரிஷபம் லக்னம்...1953

மிதுனம் லக்னம்..1954

கடகம் லக்னம்..1955

சிம்மம் லக்னம்...1956

கன்யா லக்னம்...1961

மாங்காடு வடிவேலு முதலியார் சென்னை கிறிஸ்தவக் கல்லூரித் தமிழாசிரியராகப் பணியாற்றிய இவர். சூதக அலங்காரம்-1897, எனும் நூலை முதலில் பதிப்பித்தார்.

இவ்வாறு பதிப்பிக்கப்பட்டுள்ள சோதிட நூற்கள் குறைவே. ஆகவே இன்னும் பதிப்பிக்கப்பட வேண்டிய சோதிடச் சுவடிகள் ஏராளமாக உள்ளன. சோதிட நூல்களைப் பொறுத்தமட்டில் வராகர் ஓராசாத்திரம், காலச் சக்கரம் ஆகிய இரண்டு நூல்களும், பழைய உரை,, விரிவான தெளிவுரை, முன்னுரை காலச்சக்கர தசை முறைப்படி பலன் கூறும் விதம் ஆகியவற்றுடன் அச்சாகியுள்ளன.வடமொழியிலும் தமிழிலும் அருமையான சோதிட நூல்கள் ஏராளமாக உள்ளன. ப்ருஷத்ஜாதகம், சாராவளி, ஜாதகத்துவம் முதலிய வடமொழி நூல்களும், சாதகாலங்காரம், குமாரசாமியம், வீமேசுர உள்ளமுடையான் போன்ற தமிழ் நூல்களும் மிகப் புகழ் பெற்றவை. இந்த நூல்கள் வானத்தில் உலாவித் திரியும் கோள்கள், மண்ணில் வாழும் மனிதன்மீது எத்தகைய ஆதிக்கம் செலுத்துகின்றன என்பதை விவரிக்கின்றன.

சரசுவதி மகால் வெளியீடுகள், வியாபார முறையில் பதிக்கப்படுபவை அல்ல. அரசு பொருளுதவியுடன் அடக்கவிலையில் வெளியிடப்படுபவை. மக்கள் படித்துப் பயன்பெற வேண்டும் என்ற உயர்நோக்குடன் அச்சிடப்படுகின்றன. சுவடிகள் நாளடைவில் உருவிழந்து போகக்கூடும். அவ்வாறு பயனற்றுப் போகுமுன்னமே பதிப்பிக்கப்படல் வேண்டும் என்ற நல்நோக்கமும் உண்டு. மேலும் சோதிடச் சுவடிகளை முறைப்படுத்த நம் மக்கள் வசம் போதிய சுவடி படி அளக்கும் திறமையும் வளர்த்திட வேண்டும். மேலும் அரசின் முழுமையான ஒத்துழைப்பை நாம் முறையாக பயன்படுத்தினால் சுவடி சோதிடத்தையும் அதன் ஆழமான தன்மையும் மிகவும் ஆய்வாக ஆராய்ந்து அதைப் பதிப்பிக்க இயலலாம்.

சோதிடக் கலை என்பது ஒரு மாபெரும் கடலைப் போன்றது. அதன் ஆழத்தையும் அகலத்தையு'ᐟ முழுவதும் உணர்ந்தவர்கள் உலகில் யாவரும் இல்லை. உலகெங்கிலும் சோதிடக் கலைக்கு இப்போது ஒரு வரவேற்பு இருக்கிறது. மேனாட்டினர் பாரத நாட்டுச் சோதிடக் கலையில் அளவற்ற ஆர்வம் காட்டி வருகிறார்கள். காரணம் ஆயிரம் ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பு வாழ்ந்திருந்த சோதிடப் பேராசிரியர்களின் வானநூல் புலமையேயாகும். ஆகையால் நமது சோதிடக்கலைக்கு மேனாடுகளில் பெரும் செல்வாக்கு ஏற்பட்டுள்ளது. நமது பழமையான சோதிட நூல்களின் (சுவடி) அடிப்படையில் மேனாட்டு ஆசிரியர்கள் பலர் புதிய நூல்கள் எழுதி உள்ளனர்.

"சுவடியியல் சோதிடத்தின் புதிய பரிணாமம்''

டி. சரவணன்

முன்னுரை

நாடி என்றால் சுவடி மற்றும் ஓலைச் சுவடி என்று பொருள். பனை ஓலைச் சுவடிகளில் சித்தர்களால் எழுதி வைக்கப்பட்ட சோதிட சாத்திரம் தான் சுவடியியல் சோதிடம் எனும் நாடி சோதிடம். சித்தர்கள் தமிழ்நாட்டைச் சார்ந்தவர்கள். இவர்கள் 64 நாடி நூல்களை எழுதி இருக்கின்றனர். ஆனால் அவைகளில் ஒரு சில நாடி நூல்கள் மட்டும் தான் நடைமுறையில் உள்ளது. சோதிடப் பலன் காணப் பல நாடி நூல்கள் இருக்கின்ற போதிலும் இக்கட்டுரையில் பிருகு நந்தி நாடி சோதிடம் குறித்து மட்டும் ஆய்வு செய்யப்படுகின்றது. இந்த ஆய்விற்கு உறுதுணையாக இருக்க நாடி சோதிடம் என்றால் என்ன ? இதன் மூலம் பலன் காண்பது எப்படி ? நாடி சோதிடத்தில் உள்ள சிக்கல்கள் என்னென்ன என்பதையும் சேர்த்து ஆய்வு மேற்க்கொள்ளப்பட்டுள்ளது.

நாடி நூல்கள் சில:

- காகபுஜண்டர் நாடி
- பிருகு நாடி
- சுகர் நாடி
- அகத்தியர் நாடி
- கவுசிக நாடி
- வசிஷ்டர் நாடி
- சப்தரிஷி நாடி
- ஈஸ்வர நாடி
- சந்திரகலா நாடி
- பதஞ்சலி நாடி
- சுகர்பிரமம் நாடி
- கந்தர் நாடி
- இடும்பி நாடி
- பால கவுமார நாடி
- சகாதேவர் நாடி
- உமா மகேஸ்வர நாடி
- நந்தி நாடி
- பிரம்ம நாடி
- சிவவாக்கியர் நாடி
- சாம்பசிவ நாடி
- துருவ நாடி
- கவுமார நாடி
- மார்க்கண்டேய நாடி
- நாரத நாடி
- பராசரர் நாடி
- கர்கர் நாடி
- அத்திரி நாடி
- பீம நாடி
- சூரிய நாடி
- சந்திர நாடி
- மங்கள நாடி
- புத நாடி

- ✧ விசுவாமித்திர நாடி
- ✧ சிவ நாடி
- ✧ காசியப்ப நாடி
- ✧ குரு நாடி
- ✧ சுக்கிர நாடி
- ✧ சனி நாடி

முதலியன நாடி நூல்களாகும்

சோதிடப் பலன்களை அறிந்து கொள்ளும் வகையில் நாடி சோதிட முறை பண்டைய காலத்திலிருந்து பல ஆயிரம் ஆண்டுகளாகப் பின்பற்றப்பட்டு வந்து கொண்டிருக்கின்றது. நாடி சோதிடம் முறையில் முன் கூட்டியே பலா பலன்களைக் குறிப்புகளாக ஓலைச் சுவடிகளில் சித்தர்கள் எழுதி வைத்துள்ளனர். சாதாரண மனிதர்கள் முதல் ஒவ்வொருவருக்கும் சோதிடப் பலன்களை எழுதி வைத்திருப்பது நாடி சோதிட முறையில் மட்டுமே என்பது அறிஞர்கள் கூற்று.

சில அடிப்படைச் சூத்திரங்களை வகுத்துக்கொண்டு வானியல் உடன் தொடர்புபடுத்தி நாடி சோதிடமாக்கி ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்திருக்கலாம் என்று ஒரு சிலர் கருதுகின்றார்கள். சில நுணுக்கமான கணித முறைகள் மூலம் ஆராய்ந்து அதன் மூலம் கண்டறிந்த உண்மைகளைச் சித்தர்கள் தங்களுக்கே உரித்தான சங்கேத மூல மொழிகளில் பாடல் வடிவில் எழுதியுள்ளனர்.

நாடி சோதிட முறையை உருவாக்கியவர்கள் சித்தர்களே. இவர்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் தோன்றியவர்கள். இந்நிலையில் மரபு வழி சோதிடத்தின் தோற்றத்திற்கே நாடி சோதிடம் தான் முதன்மையானதாக இருந்திருக்கும் எனக் கருத முடிகின்றது.

சித்தர்கள் வாழ்ந்த காலம், இதிகாச காலங்கள், சங்க காலங்கள், இடைநிலை காலங்கள் போன்ற காலங்களின் இடைவெளிகளில் சுவடி சோதிடத்தின் நிலைப்பாட்டைக் கருதும்பொழுது நாடி சோதிடத்தின் மூல வடிவ மொழி தமிழ் மொழியாகத்தான் இருந்திருக்கக் கூடும். இதிகாச காலங்கள், சங்க காலங்கள், இடைநிலை காலங்களில் வழக்கத்தில் இருந்து சொற்களும், எழுத்துகளும் நாடி சோதிட சுவடிகளில் இடம் பெற்று இருப்பதாகத் தமிழ் அறிஞரும், சோதிட அறிஞருமான மதுரையைச் சார்ந்த நவமணி சண்முகவேல் கருத்து தெரிவிக்கின்றார். எனவே, நாடி சோதிடத்தின் மூல எழுத்துகள் தமிழ் எழுத்துகளாகவே இருந்திருக்க வேண்டும் என்று முடிவுக்கு வரத் தோன்றுகிறது.

பழங்காலத்தில் நாடி சோதிடத்தை மிகுந்த ஆர்வத்தோடு வள்ளுவர்கள் என்ற இனத்தார்களும், பிராமணர்கள் என்பவர்களுமே கற்றுள்ளனர். இவர்கள் காலப்போக்கில் சித்தர்களின் சங்கேத

பழங்காலத்து தமிழ் எழுத்துகளில் இருந்த சோதிட கருத்துக்களை வருங்காலச் சந்ததியினர்களுக்கு உதவும் வகையில் எளிய தமிழிலும், சமஸ்கிருத மொழியிலும் எழுதி வைத்துள்ளனர் என்று சோதிட அறிஞர் எல்..துரைசாமி தெரிவிக்கின்றார்.

வட நாட்டில் உள்ள நாடி நூல்கள் பெரும்பாலும் சமஸ்கிருத மொழியிலேயே உள்ளது. சமஸ்கிருத மொழியில் நன்கு தேர்ச்சி பெற்றிருந்த பிராமணர்கள் தாங்கள் கற்ற நாடி சோதிடக் கலையைத் தங்களது மூலமொழியான சமஸ்கிருதத்தில் எழுதியுள்ளனர்.

நாடி சோதிடம் முறையில் பலன் காண்பது மூன்று பிரிவுகளின் கீழ் அறிய முடிகின்றது.

முதலாவதாக ஜீவ நாடி என்ற முறையில் சோதிடப் பலன்களை தெரிந்து கொள்ள முடியும். இம்முறையில் பலனைத் தெரிந்துகொள்ள விரும்பும் நபர் ஜீவ நாடி பார்த்துப் பலன் சொல்லக்கூடிய நாடி சோதிடரை அணுகிப் பலன்களைத் தெரிந்து கொள்ளலாம். ஜீவ நாடி முறையில் பலன்களை தெரிந்து கொள்ள எந்த விதமான குறிப்புகளும் தேவை இல்லை. ஜீவ நாடி படித்துப் பலன் சொல்லும் ஜீவ நாடி சோதிடர் பலன் காண வந்தவரைத் தன் முன் அமர வைத்துப் பலன் காண வேண்டியவரின் பெயரை மட்டும் கேட்டுக்கொண்டு ஜீவ நாடியை எடுத்து தனது குருமார்களையும், சித்தர்களையும் பிரார்த்தனை செய்து கொண்டு அதில் தெரிய வரும் பலன்களை எடுத்துரைக்கின்றார். ஜீவ நாடி முறையில் நாடி சோதிடர் சுவடியைப் படிக்கும் பொழுது மட்டுமே அதில் எழுத்துகள் ஒளிரும். இதர நேரங்களில் அச்சுவடிகளில் எந்த விதமான எழுத்துகளும் இராது. மேலும் ஜீவ நாடி சோதிடரின் தாய் மொழிக்கு ஏற்ப எழுத்துகள் ஒளிரும்.

ஜீவ நாடி முறையில் பலன்களை எடுத்துரைக்கும் நாடி சோதிடர்கள் ஆழ்ந்த பக்தியுடனும், ஆத்ம சுத்தியுடனும், முறையான பூசை வழிபாடுகளுடனும் இருந்து சித்தர்களது அருளாசியால் ஜீவ நாடிகளைப் பார்த்துப் பலன்களை எடுத்துரைக்கின்றனர். இம்முறையில் பலன்களை எடுத்துரைக்கும் ஜீவ நாடி சோதிடர்கள் மிகவும் குறைவாகவே இருக்கின்றார்கள். சாதகருக்கு கொடுப்பினையும், நாடி சோதிடர்களுக்கு சித்தர்களது அருளாசியும் இருந்தால் மட்டுமே ஜீவ நாடி முறையில் பலன்களை அறிந்து கொள்ள முடியும் என்று கூறப்படுகின்றது. இம் முறையைப் பின்பற்றிப் பலன் சொல்லும் நாடி சோதிடர்களுக்குச் சோதிட அறிவு இருக்க வேண்டும் என்ற கட்டுப்பாடு ஏதும் இல்லை. ஜீவ நாடி சோதிட முறையில் தனி நபரின் பலன்களையும்,

நாட்டின் பலன்களையும், சிக்கல்களுக்கான தீர்வுகளையும் காண முடியும் என்பது ஜீவ நாடி சோதிடர்களின் கருத்து.

இரண்டாவதாக ஜீவ நாடி என்ற அப்பியாச நாடி சோதிட முறையில் பலன்களை இரண்டு பிரிவுகளாகப் பிரித்து சொல்லிக் கொண்டு இருக்கின்றார்கள். அப்பியாச நாடி முறையில் முதல் பிரிவானது பாமர மக்கள் முதல் ஏனையோரும் இம் முறையைப் பற்றி நன்கு தெரிந்துள்ளனர். இம்முறையில் கை பெருவிரல் இரேகையைப் பதிவு செய்து கொண்டு பலன் சொல்வதாகும். நாடி சோதிடர் ஆண்களுக்கு வலது கை பெருவிரல் இரேகையையும், பெண்களுக்கு இடது கை பெருவிரல் இரேகையையும் பதிவு செய்து கொள்கின்றனர். இவ்வாறு பதிவு செய்யப்பட்டவர்களின் இரேகைக்கு உரிய சுவடியைத் தேடிப் பிடித்து அதில் எழுதப்பட்டு இருக்கும் பலன்களை எடுத்துரைக்கின்றார்கள். பலன்களைச் சொல்லத் துவங்குவதற்கு முன் பலன் காண வந்தவருக்கான சுவடிதானா என்பதை அறிய வந்தவரின் பெயர், பெற்றோர் பெயர்கள் மேலும் சில விபரங்களைக் கேட்டுக்கொண்டு கிடைக்கப்பெற்ற சுவடிக் குறிப்புகளுடன் பொருத்திப் பார்த்து வந்தவருக்கு உரிய சுவடிதான் என்பதை தீர்மானிக்கின்றனர். மேலும் பதிவு செய்த ரேகையின் அமைப்புக்கு உரிய இராசி சக்கரத்தையும் குறித்துக் கொண்டு சுவடியில் உள்ள இராசி சக்கரத்துடனும் ஒப்பிட்டுக்கொண்ட பின்னரே அந்தச் சுவடியில் உள்ள பலன்களை கூறுகின்றனர். இம்முறையில் பலன்காணும் பொழுது பெரும்பாலானவர்களுக்குக் கடந்த காலப் பலன்கள், நிகழ்காலப் பலன்கள் மட்டும் சரியாக வருகின்றது என்றும் எதிர்காலப் பலன்கள் சரியாக வருவதில்லை என்றும் ஒரு சிலருக்கு முக்காலப் பலன்களுமே சரியாக இருக்கின்றது என்ற கருத்தும் நடைமுறையில் இருந்து கொண்டுள்ளது.

மூன்றாவதாக நாடி சோதிட முறையில் பலனை அறிய சனன காலக் குறிப்புகளின்படி கணிக்கப்பட்ட சாதகத்திற்கு நாடி சோதிட விதிகளின்படி பலன் சொல்வதாகும். இம்முறையில் பலன் சொல்வது அப்பியாச நாடி முறையில் இரண்டாவது பிரிவு ஆகும். இம்முறையில் பலன் சொல்வதை நாடி சோதிடர்களும், மரபு வழி சோதிடர்களும் பின்பற்றி வருகின்றனர்.

அப்பியாச நாடி முறையில் பலன் சொல்லும் நாடி சோதிடர்களுக்குச் சோதிட அறிவு இருக்க வேண்டும். குறிப்பாகப் பெருவிரல் இரேகையைக் கொண்டு சுவடி மூலம் பலன் சொல்லும் நாடி

சோதிடர்களைக் காட்டிலும் சனன காலச் சாதகத்திற்குப் பலன் சொல்லும் நாடி சோதிடர்களுக்குச் சோதிட அறிவு கண்டிப்பாக இருக்க வேண்டும்.

நாடி சோதிட முறையில் பலனைத் தெரிந்து கொள்ள விரும்பும் நபருக்கு சனன சாதகம் இல்லாத நிலையில் ஜீவ நாடி அல்லது அஜீவ நாடியின் ஒரு பிரிவான இரேகை பதிவால் பலன் காணும் முறையே சிறந்தது. பெருவிரல் ரேகையைக் கொண்டு சுவடி மூலம் பலன் காணும் பொழுது ஒரு சிலருக்குப் பலன்கள் சரியாக இருப்பதில்லை. இது நாடி சோதிடத்தின் மேல் இருக்கும் நம்பகத் தன்மையைக் குறைக்கின்றது. இம்முறை பின்பற்றும் நாடி சோதிடர்களுக்குச் சோதிட அறிவு இருப்பதற்கான சாத்திய கூறுகள் தெரியவில்லை. இவர்கள் உளவியல் மற்றும் பலன் காண வந்தவர்களின் எண்ணங்களைக் குறிப்பால் உணர்ந்து அதற்கு ஏற்றவாறு செயல்படும் ஆற்றல் உடையவர்களாக இருக்கின்றார்கள். இவர்களின் இத்தகைய செயல் நாடி சோதிடத்திற்கு இழுக்கை ஏற்படுத்துகின்றது.

சித்தர்கள் நாடி சோதிடப் பலன்களை மறை பொருளுடன் கூடிய வார்த்தைகளுடன் செய்யுள் வடிவில் சுவடிகளில் எழுதியுள்ளார்கள். இச்செய்யுள்களைச் சரியாகப் புரிந்துகொண்டு அதில் குறிப்பிட்டுள்ள வார்த்தைகளுக்கு உரிய விளக்கங்களை அறிந்து கொள்ளும் திறமையானவர்கள் மிகவும் குறைவு. இக் குறைபாட்டிற்கு உரிய தீர்வு கிடைத்தால் நாடி சோதிடம் மூலம் காணப்படும் பலன்களைத் துல்லியமாக கணிக்க முடியும்.

மரபு வழி சோதிட முறையில் ஒரு தனி நபரின் சோதிடப் பலன்களை சனன சாதகத்தின் கிரக (கோள்களின்) நிலைகளைக் கொண்டு சோதிட அடிப்படை விதிகளுடன் இராசியின் தன்மைகள், கோள்களின் செயல்கள், பாவக செயல்கள், தசா புத்தி கணிதம், கோட்சாரம் என்பனவற்றை எல்லாம் கொண்டு பலன் தீர்மானிக்கப்படுகின்றது. இந்த அளவிற்கு முயன்றும் சில நேரங்களில் பலன்கள் சற்று முன்பின் மாறுபடுகின்றது.

ஆனால் நாடி சோதிட முறையில் பலன்காண மிகவும் குறைந்த விதிகள், இராசியின் தன்மைகள், கோள்களின் செயல்கள் இவை மட்டுமே முக்கியக் காரணிகளாக இருக்கின்றன. முறையான ஆய்வுகளை மேற்கொண்டால் நாடி சோதிடத்தில் துல்லியமான, சரியான பலன்களைக் கணிக்க இயலும்.

நாடி சோதிடத்தின் இருபெரும் பிரிவான ஜீவ நாடி மற்றும் அஜீவ நாடி சோதிட முறைகளில் பலன்களைக் கணிக்க முதலில் சித்தர்கள்

தனது அதீத அறிவால் பலன்களை விவரித்து இருக்கின்றனர். நாளடைவில் கோள்களின் இணைவுகளுக்கு முக்கியத்துவம் கொடுத்து கோள்களுக்குச் சொல்லப்பட்டுள்ள செயல்களை ஆதாரமாகக் கொண்டு, கோள்கள் நின்ற இராசியின் தன்மைகளுக்கு ஏற்ப பலன்களை உருவாக்கி இருக்கின்றனர். காலப்போக்கில் பாவ அடிப்படையில் கிரக காரகத்துவத்தை (செயல்களை) இணைத்து பலன்களுக்கான விதிமுறைகளை உருவாக்கி இருக்கின்றனர். இதற்கு உதாரணமாக சப்தரிசி நாடி சோதிட முறையில் பாவ பலனுடன் கிரக காரகத்துவத்தை இணைத்துப் பலன் கூறப்பட்டுள்ளது.

மிகவும் எளிய கணிதங்களுடன், இராசியின் தன்மைகள், கோள்களின் செயல்கள் இவைகளை மட்டும் வைத்துச் சில நுணுக்கங்களுடன் பலன் காணும் முறையைக் கொண்டது நாடி சோதிடம், துல்லியமான சனன நேரத்தைக் குறித்துக்கொள்ளும் வசதியும், அதன் முக்கியத்துவத்தை உணரக்கூடிய நிலையும் பழங்காலத்தில் இல்லாத காரணத்தினால் சோதிடப் பலன்களை அறிந்து கொள்ள நாடி சோதிடமே மூல காருவியாக இருந்திருக்கின்றன. சித்தர்களுடைய காலம் வேத காலத்திற்கு முன்பே தொடங்கிவிட்டது என்றும், குறிப்பாகச் சிந்து சமவெளி நாகரிகத்தில் இதன் வெளிப்பாடுகள் தெளிவாக உள்ளது என்றும், வேளாண்மையின் தொடக்க காலத்திற்கு செல்கிறது என்றும், சோதிட ஆய்வாளர் கு.கு.ரவி கூறுகின்றார். இந்நிலையில் சித்த நெறிகளின் அடிப்படையிலான நாடி சோதிடத்தை ஆதாாமாகக் கொண்டு அதனை பின்பற்றியே மரபு வழி மற்றும் தற்கால நவீன சோதிடம் வளர்ந்திருக்கும் எனக் கருத முடிகின்றது.

சோதிடப் பலன்களைத் தீர்மானிக்கும் நாடி சோதிடம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முந்திய கலை ஆகும். இந்நிலையில் இந்த 20ஆம் நூற்றாண்டில் பிருகு நந்தி நாடி சோதிடம் என்ற நாடி சோதிட புதிய முறையைத் தென் இந்தியாவின் பெங்களூரைச் சார்ந்த சோதிட அறிஞர் ஆர்.ஜி. ராவ் 1990ஆம் ஆண்டு தான் எழுதிய ஆங்கிலப் புத்தகத்தின் மூலம் வெளிப்படுத்தி இருக்கின்றார்.

சித்தர்களால் எழுதி வைக்கப்பட்ட நாடி சோதிடச் சுவடிகளைப் பண்டைய காலத்திலிருந்து வழி வழியாகப் படி எடுத்துப் பாதுகாக்கப்பட்டு வந்தமையால் மட்டுமே ஆர்.ஜி.ராவ் சுவடிகளை ஆய்வு செய்து புதிய முறையான நாடி சோதிடத்தை வெளிப்படுத்த முடிந்திருக்கின்றது.

பெங்களூரில் பிறந்து கன்னட மொழியைத் தன் தாய்மொழியாகக் கொண்ட ஆர்.ஜி. ராவ் தமிழ் நாட்டில் கோவையில் நாடி சோதிடத்தின் மூலம் தனக்கான சோதிடப் பலன்களைத் தெரிந்து கொள்ளும் வாய்ப்பு அமைந்து இருக்கின்றது. கடந்த காலம், நிகழ்காலப் பலன்களைக் கண்டு அதிர்ச்சியும், ஆச்சரியமும் அடைந்த அறிஞர் ஆர்.ஜி. ராவ் நாடி சோதிடத்தின் மேல் மிகுந்த ஆர்வம் கொண்டு நாடி நூல்களைத் தேடி அலைந்துள்ளார். அவரின் விடாமுயற்சியால் சென்னையில் கிடைத்த நாடி நூல்களின் உதவியுடன் நாடி சோதிடத்தில் ஒரு புதிய யுக்தியைக் கையாண்டுள்ளார். இதன் வெளிப்பாடுதான் இந்தப் பிருகு நந்தி நாடி சோதிடம்.

ஆர்.ஜி. ராவ் பல நாடி சோதிடச் சுவடிகளை ஆராய்ந்து இறுதியாக பிருகு நாடியையும், நந்தி நாடியையும் ஆராய்ந்து இவை இரண்டையும் மூல கருவாகக் கொண்டு புதிய நாடி சோதிட முறையை வெளிப்படுத்தி இருக்கின்றார். அதற்குத் தான் பயன்படுத்திய பிருகு மற்றும் நந்தி நாடியை இணைத்துப் பிருகு நந்தி நாடி சோதிடம் என்ற பெயரை வைத்துள்ளார்.

பிருகு மற்றும் நந்தி நாடி சுவடிகளை நன்கு ஆராய்ந்து தனது தாய் மொழியான கன்னடத்தில் முதன் முதலில் பிருகு நந்தி நாடி சோதிட முறையை எழுதி இருக்கின்றார். இதை 1990இல் ஆங்கிலத்தில் மொழி பெயர்த்து நூலாக வெளியிட்டுள்ளார். பிருகு நந்தி நாடி சோதிடத்தின் தோற்றம் தென்னிந்தியாவின் பெங்களூரைச் சார்ந்தது. இந்தப் புதிய நாடி சோதிட முறை இந்தியாவில் தமிழகம், ஆந்திரா, பெங்களூர் மற்றும் குஜராத் போன்ற மாநிலங்களில் வெகு வேகமாக வளர்ந்து கொண்டிருக்கின்றது.

இராசியின் தன்மைகளையும் கோள்களின் சேர்க்கைகளையும் இணைத்துக் கோள்களின் செயல்களை மூலாதாரமாகக் கொண்டு பலன் சொல்வது நாடி சோதிடம் என்ற நிலையில் ஆர்.ஜி. ராவ் அவர்களின் அணுகு முறையின்படி நாடி சோதிடம் என்றால் கீழ்க்கண்ட விளக்கம் தான் சரியானதாக இருக்கும் எனக் கருத முடிகின்றது.

“கோட்சார கோள்கள், சனன கால சாதகத்தில் உள்ள கோள்களை நாடி கடந்து செல்வதால் உண்டாகும் பலன்களை அறியும் முறையே நாடி சோதிடம்''

ஆர்.ஜி. ராவ் இராசியின் தன்மைகள், கோள்களின் செயல்கள் இவற்றுடன் கோட்சாரத்தையும் இணைத்துப் பிருகு நந்தி நாடி சோதிடம் என்ற புதிய முறையை உருவாக்கி இருக்கின்றார். இவரின் கருத்துப்படி

சனன கால ஜாதகத்தில் உள்ள கோள்கள் மாற்றத்திற்கு உட்படாமல் நிலையாக பிறந்த நேரத்தின் அடிப்படையில் குறிப்பிட்ட இராசியில் குறிப்பிட்ட பாதையில் இருப்பதாகும். இந்த நிலையான சனன கால கோள்களின் நிலையில் கோட்சார கோள்கள் தனது சுற்று வட்டப் பாதையில் ஓய்வில்லாமல் சுழன்று கொண்டே இருக்கும் நிலையில் தனது ஒவ்வொரு சுற்றிலும் சனன கால கோள்களை நாடி கடந்து சென்று கொண்டிருக்கும். இந்நிலையில் சனன காலக்கோள்களுடன் கோட்சார கோள்கள் ஒன்றை ஒன்று சந்திக்கும்பொழுது சாதகருக்குப் பலன்களை வெளிப்படுத்தும். இதுவே பிருகு நந்தி நாடி சோதிட முறையின் மூலக் கரு ஆகும்.

தமிழகத்தைப் பொருத்தவரை பிருகு நந்தி நாடி சோதிட முறை வேரூன்றி நின்று இன்றுவரை வளர்ச்சி அடைந்து கொண்டிருக்கின்றது. இப்பெரும் வளர்ச்சிக்கு மூலக் காரணமானவர் தாராபுரத்தைச் சார்ந்த சோதிட அறிஞர் எல். துரைசாமி ஆவார்.

தாராபுரம் குரு நாதர் நாடி சோதிட ஆராய்ச்சி மையம் என்ற அமைப்பின் சார்பாக இந்த அமைப்பின் நிறுவனர், சோதிட அறிஞர் குரு ராமசுப்பு அவர்களின் தலைமையில் 1999ம் ஆண்டு மே மாதம் 10 நாட்கள் சோதிட அறிஞர் எல். துரைசாமி பிருகு நந்தி நாடி சோதிட முறையில் பயிற்சி வகுப்பு நடத்திப் பல சோதிட ஆர்வலர்களை உருவாக்கியுள்ளார். தொடர்ந்து இந்நாள் வரை இப் புதிய நாடி சோதிட முறையை அடிப்படையாக கொண்டு பல ஆய்வுகளையும் மேற்கொண்டு, பயிற்சிகளையும் அளித்துக்கொண்டு இருக்கின்றார். இவரின் கீழ் இந்த நாடி சோதிட பயிற்சியைப் பெற்றவர்கள் சோதிட பலன்களைக் கூறிக்கொண்டும், ஆய்வுகள் செய்துகொண்டும், ஒரு சிலர் பயிற்சி வகுப்புகளை நடத்திக்கொண்டும் பிருகு நந்தி நாடி சோதிடத்தின் பயனைத் தாங்களும் அடைந்து சமுதாய நலனுக்கும் வழிகாட்டிக் கொண்டிருக்கின்றார்கள்.

பிருகு நந்தி நாடி சோதிட முறையின் சிறப்புகள்

- ✓ மரபுவழி சோதிடத்தில் உள்ளதுபோல சாதகக் கணிதங்கள் தேவையில்லை.
- ✓ தசா புத்திக் கணிதம் கணிக்கத் தேவை இல்லை.
- ✓ இராசி சக்கரத்தைத் தவிர இதர வர்க்க சக்கரங்கள் தேவை இல்லை.
- ✓ சிக்கலான கேள்விகளுக்குக் குழப்பமே இல்லாமல் பதில் கூறலாம்.

- ✓ காலங்களைத் துல்லியமாகக் கூறலாம்.
- ✓ இரட்டைப் பிறவி சாதகங்களுக்கு எந்தவிதமான கணிதமும் இல்லாமல் இராசி சக்கரத்தை மட்டும் கொண்டே பலன்களைச் சொல்லமுடியும்.
- ✓ திருமணம், குழந்தை பாக்கியம், தொழில், வீடு அமையும் காலத்தை இராசி சக்கரத்தைக் கொண்டே சொல்ல முடியும்.
- ✓ வெளிநாடு யோகம், உடல்நல பாதிப்பு காலம், பதவி உயர்வு, இடமாற்றம் இவைகளை உடனடியாகச் சொல்ல முடியும்.
- ✓ ஆயுள் பற்றிய விவரங்களை எளிதாகத் தெரிந்து கொள்ளலாம்.
- ✓ ஆண் குழந்தை உண்டா ? இல்லையா என எளிதில் கூறலாம்.
- ✓ அரசு வேலையா ? தொழிலா ? வியாபாரமா ? என்பதை உடனே சொல்ல முடியும்.
- ✓ விபத்து, கடன், வழக்குகள், சகோதரர் நிலைகளையும் கூற முடியும்.
- ✓ அனைத்து விதமான கேள்விகளுக்கும் இராசி சக்கரம் ஒன்றை வைத்தே எளிமையாகப் பலன்கள் கூற இயலும்.
- ✓ அட்டவர்க்க, பாவக சக்கரங்கள் போன்றவை பார்க்கத் தேவை இல்லை.
- ✓ வேதைகள், சந்திரன் நின்ற இராசிக்கு அடிப்படையிலான கோட்சார நிலைகள் பார்க்கத் தேவை இல்லை.
- ✓ பால காரகத்துவங்கள் (செயல்கள்) தேவை இல்லை.
- ✓ மரபு வழி சோதிட முறையின் கோள்களின் பார்வை, சேர்க்கை, கோள்கள் நின்ற சார நிலைகள் போன்றவைக் கவனத்தில் கொள்ளத் தேவை இல்லை.

பிருகு நந்தி நாடி சோதிட முறையில் பலன் காண உதவும் முக்கியக் காரணிகள்.

- ✧ கோள்களின் செயல்கள் (காரகத்துவங்கள்)
- ✧ இராசியின் தன்மைகள்
- ✧ கோள்களின் சேர்க்கைகள்
- ✧ கோள்களின் வரிசைகள்
- ✧ கோள்கள் நின்ற திசைகள்
- ✧ சேர்க்கை ஸ்தானங்கள் (1, 5, 9)

- உப சேர்க்கை ஸ்தானங்கள் (12, 2)
- பார்வை ஸ்தானங்கள் (3, 7, 11)
- கோள்களுக்கு இடையிலான உறவுகள்.
- கோள்களின் பலம்
- கோள்களின் அஸ்தங்கம்
- வக்கிரம்
- பரிவர்த்தனை
- இராகு, கேது அச்சு

பிருகு நந்தி நாடி சோதிட முறையில் பலன் காணும்முறை

- ஒரு சாதகருக்குக் கொடுப்பினையை அறிய சனன காலக் கிரக நிலையைக் கண்டு உறுதி செய்து கொள்ள வேண்டும்.
- கொடுப்பினையின் காலத்தை அறிய சனன காலக் கிரக நிலையில் உள்ள கேள்விக்குரிய கோள்களுடன் கோட்சாரத்தை இணைத்துக் காலத்தை நிர்ணயம் செய்ய வேண்டும்.

பிருகு நந்தி நாடி சோதிட முறையில் பலனைத் தீர்மானிக்கும் முக்கிய கோள்கள்.

குரு : ஆண் சாதகங்களுக்கு ஜீவன்காரகன்.

சனி : தொழில் (அ) ஜீவனக்காரகன்.

ராகு / கேது : கர்ம வினைகளைத் தீர்மானிப்பவர்.

சுக்கிரன் : பெண் சாதகங்களுக்கு ஜீவன்காரகன்.

பிருகு நந்தி நாடி சோதிட முறையில் பலனைத் தரும் முக்கியக் கோள்களின் இணைவுகள்.

- சுக்கிரன், சனி தொடர்பு – செல்வச் சேர்க்கை
- சுக்கிரன், சந்திரன் தொடர்பு– பொருளாதார வீழ்ச்சி.
- சனி, இராகு / செவ்வாய், சனி/ செவ்வாய், இராகு தொடர்பு – விபத்து.
- இராகு / கேது, குரு/ சுக்கிரன் தொடர்பு– நோய்கள்.
- சுக்கிரன், குரு தொடர்பு – தீர்காயுசு யோகம்.
- குரு, சந்திரன் தொடர்பு – இடமாற்றம்.
- சனி, சூரியன் தொடர்பு – அரசு உத்தியோகம்.

பிருகு நந்தி நாடி சோதிட முறையில் கோள்களுக்கான முக்கியக் காரகத்துவங்கள்.

சூரியன் – ஆண் குழந்தை காரகன்

சந்திரன்– மனது காரகன்

செவ்வாய்– பெண் ஜாதகங்களுக்குக் கணவன் காரகன்.

புதன் – கல்வி காரகன்

குரு – ஆண்களுக்கு ஜீவன் காரகன்

சுக்கிரன் – பெண்களுக்கு ஜீவன்காரகன்

சனி – கர்மகாரகன்

இராகு – ஜீவன் உள்ளவைகளுக்கு அழிவு காரகன்

கேது– பிரிவினைக் காரகன்

பிருகு நந்தி நாடி சோதிட முறையின் முக்கிய சாராம்சம்.

✧ கோட்சார கோள்கள் ஜனன கால ஜாதகத்தின் கிரக நிலைகளுடன் சேர்க்கை பெருகின்ற நிலையில் நட்பு கோள்களுடன் இணைவு பெற்றால் நல்ல பலனும், பகை கோள்களுடன் இணைவு பெற்றால் தீய பலனும் உண்டாகும்.

✧ கோட்சார கோள்கள் ஜனன கால இராசி சக்கரத்தில் உள்ள இராசிகளைக் கடந்து செல்லும் நிலையில் குறிப்பிட்ட இராசியில் ஜனன கால கோள் இருந்தால் மட்டுமே கோட்சார கோள் தனது பலனைத் தரும் அந்த இராசியில் எந்தவிதமான கோள்களும் இல்லாத நிலையில் கோட்சாரக் கோள் எந்த விதமான பலன்களையும் வழங்காது.

✧ ஜனன கால ஜாதகத்தில் ஒரு கோள் வக்கிரம் பெற்று இருந்தால் அக்குறிப்பிட்ட கோள் கோட்சாரத்தில் வக்கிரம் பெரும்போதெல்லாம் முழுமையான பலனைத்தரும்.

பிருகு நந்தி நாடி சோதிடத்தின் முக்கிய விதிகள்

✧ கேள்விக்கு உரிய காரகக் கோள்களின் நிலையை முதலில் ஆய்வு செய்தல் வேண்டும்.

✧ கேள்விக்கு உரிய காரகக் கோள்களுக்கு 2, 7, 12 ல் ஏதேனும் ஒரு கோள்களாவது இருந்தால் தான் காரகக் கோள் வலுப்பெறும்.

- ✧ கேள்விக்கு உரிய காரகக் கோள்களுக்கு அடுத்தடுத்து எந்தக் கோள்களும் இல்லாமல் வெறும் இராசி கட்டம் மட்டும் இருத்தல் கூடாது.
- ✧ கேள்விக்கு உரிய காரகக் கோளின் சாதக, பாதக நிலையை அக்குறிப்பிட்ட கோளுக்கு 11ஆம் இடத்தில் நிற்கின்ற கோள்களே தீர்மானிக்கும்.
- ✧ இராசி சக்கரத்தில் ஒரு கோள் உச்சம் பெற்று இருந்தால் உடனே உச்சம் என்றோ அல்லது நீச்சம் பெற்று இருந்தால் நீச்சம் பெற்று உள்ளது என்றோ முடிவுக்கு வந்துவிடக்கூடாது.
- ✧ கேள்விக்கு உரிய காரகக் கோளுக்கு 2–ல் அதன் பகை கோள் இருத்தல் கூடாது.
- ✧ கேள்விக்கு உரிய காரகக் கோளிற்கு அடுத்தடுத்து அக்கோளுக்கு உரிய பகை கோள் இருத்தல் கூடாது.
- ✧ கேள்விக்கு உரிய காரக கோளிற்கு சேர்க்கை ஸ்தானமான 1, 5, 9இல் கோள்கள் இருந்தால் அவைகளை பாகையளவில் வரிசைப்படுத்திக்கொண்டு தான் பலன்களை தீர்மானிக்க வேண்டும்.
- ✧ கேள்விக்கு உரிய காரக கோளிற்கு இராகு/கேது தொடர்பு இருக்கின்றதா என்பதை ஆய்வு செய்த பிறகே பலனைத் தீர்மானிக்க வேண்டும்.
- ✧ பலன்களை தீர்மானிக்கின்ற நிலையில் இராகு உயிருள்ள காரகத்துவங்களை அழிப்பார், உயிரற்ற காரகத்துவங்களை பன்மடங்கு அதிகப் படுத்துவார். கேது உயிருள்ள காரகத்துவங்களைப் பிரிவினைப்படுத்துவார், உயிரற்ற காரகத்துவங்களை கடுமையாக அழிப்பார்.
- ✧ கேள்விகளுக்கு உரிய காரக கோள்களுக்கு இராகு / கேது தொடர்பு கொள்ளும் நிலையில் தனித்த இராகு / கேது மட்டுமே அதிக கெடுபலன்களை உண்டாக்கும். கூட்டு கிரகங்களுடன் சேர்ந்து இருக்கும் இராகு / கேது கெடுபலன்களை அதிகம் தர இயலாது.
- ✧ ஜாதகருக்கு சாதக / பாதக பலன்களைத் தனித்த கோள்களைக் காட்டிலும் கூட்டுக் கிரகங்களே நிறைவான, முழுமையான பலன்களைத் தரும்.

- ஒரு கோள் நீச்ச இராசியில் இருப்பதைக் காட்டிலும் நீச்ச பாகையை நோக்கிச் செல்லும் இராசியில் இருப்பது அக்கோளின் வலிமை மிகவும் குறையும்.

நிறைவுரை

- பண்டைய காலத்திலேயே சித்தர்கள் வானியல் கணிதம், சோதிடம், மருத்துவம், யோக நெறி ஆகிய துறைகளில் உன்னத நிலையை அடைந்திருந்தனர் என்பதற்கான வரலாற்றுச் சான்றுகள் உள்ளது. இந்நிலையில் இன்றைய காலத்தில் சோதிடம் மிகவும் பின் தங்கிய நிலையில் இருப்பதை உணர முடிகின்றது. இதற்கு முக்கியக் காரணம் சித்தர்களின் நூல்களுக்கு எழுதப்பட்டுள்ள பல உரை வேறுபாடுகளே ஆகும்.
- கிடைப்பதற்கு அரிய சுவடியியல் சோதிடத்தை முறையான கோணத்தில் பல ஆய்வுகள் செய்து மனித சமுதாயத்திற்குச் சித்தர்கள் விட்டுச்சென்ற அவர்களின் அழியாத முழுமையான சோதிட அறிவை வெளிப்படுத்துவது முக்கியப் பணியாகும்.
- நாடி சோதிடம் என்பது உண்மையா ? பொய்யா ? என்ற கேள்வி சமுதாயத்தில் எழுந்துள்ள நிலையில் இந்த நூற்றாண்டின் புதிய வெளிப்பாடான பிருகு நந்தி நாடி சோதிடம் என்ற நாடி சோதிட முறை நாடி சோதிடம் உண்மையே என்பதை மெய்ப்பிக்க உதவும் வகையில் இருக்கும் என்பதை மறுக்க இயலாது. இந்தப் புதிய நாடி சோதிடம் சுவடியியல் சோதிடத்தின் புதிய பரிமாணமாகும்.
- ஜீவ நாடி முறையிலும், அஜீவ நாடி முறையில் கை பெருவிரல் ரேகை மூலம் சொல்லப்படும் பலன்களை விஞ்ஞான ரீதியாக மெய்ப்பிக்கத் தனிநபர் முயற்சியைக் காட்டிலும் கூட்டு முயற்சியின் பயனால் பல விதமான ஆய்வுகள் மூலமே நிரூபிக்க இயலும்.
- எண்ணற்ற நாடி நூல்கள் இருக்கின்ற நிலையில் அவைகளை ஒவ்வொன்றையும் பல கோணங்களில் ஆய்வு செய்தால் 20ம் நூற்றாண்டின் புதிய முறையான பிருகு நந்தி நாடி சோதிட முறையைப்போல மேலும் பல பயனுள்ள நாடி சோதிட முறைகள் இந்த நூற்றாண்டிலும் உருவாக்கலாம்.

இந்த ஆய்வுக்கு உதவிய நூல்கள்

- ✧ நாடி சோதிடம் உண்மையா ? பொய்யா ? ஆசிரியர் அரவிந்த், மேக தூதன் பதிப்பகம், சென்னை.
- ✧ முனிவர்களின் சுவடிகளும் முற்பிறவி உண்மைகளும், ஆசிரியர் விக்கிரவாண்டி வி. ரவிச்சந்திரன், மேக தூதன் பதிப்பகம், சென்னை.
- ✧ பிருகு நந்தி நாடி, ஆசிரியர் ஆர்.ஜி.ராவ், ரஞ்சன் பப்ளிகேசன், புதுடெல்லி.
- ✧ சோதிட இயல், ஆசிரியர் முனைவர் தி. மகாலட்சுமி, நர்மதா பதிப்பகம், சென்னை.

இந்த ஆய்வுக்குக் கருத்துகளும், குறிப்புகளும் வழங்கியவர்கள்.

- ✧ சோதிட அறிஞர்.எல். .துரைசாமி, கௌரவ தலைவர், குருநாதர் நாடி சோதிட ஆராய்ச்சி மையம், தாராபுரம்.
- ✧ சோதிட அறிஞர் ஆர். மணியன், தலைவர், குருநாதர் நாடி சோதிட ஆராய்ச்சி மையம், தாராபுரம்.
- ✧ சோதிட அறிஞர் வி. கோவிந்தராஜீலு, முன்னால் தலைவர், P.S.ஐயர் நினைவு சோதிட ஆராய்ச்சி மையம், மதுரை.
- ✧ தமிழ் அறிஞர், சோதிட அறிஞர் நவமணி சண்முகவேல், மதுரை.
- ✧ சோதிட ஆய்வாளர் ஜி.கே. ரவி, கோவை.

சாதக அலங்காரத்தில் உரைவேறுபாடுகள்

திரு. மு.இராஜதுரை

பழைய ஓலைச் சுவடிகளில் இருந்த பழம்பெருமை பொருந்திய சோதிடத்தின் ஆதி நூலாக விளங்கும் சாதக அலங்காரம் ஆகிய இம்மூலநூலின் - உரை வேறுபாடுகள் பற்றிய செய்தியினை இக்கட்டுரை தருகின்றது. பல்வேறு மகான்கள், ரிஷிகள், முன்னோர்கள் பலர் எழுதிய செய்யுட்களைத் தொகுத்து கீரனூர் நடராசர் அழகிய செய்யுட்களில் வடித்து **"சாதக அலங்காரம்"** எனும் நூலினை யாத்துள்ளார். சாதகத்திற்கு அலங்காரம் ஆகத் திகழ்தலின் இப்பெயர் பெற்றது.

சாதக அலங்காரம் பதிப்பு விவரங்கள்–உரை விவரங்கள்

1. கீரனூர் நடராசர் அருளியது–முதல் பதிப்பு 1955– அமரம்பேடு இராஜஇரத்தின முதலியார்-விளக்க விருத்தியுரை செய்தவர்.
2. கீரனூர் நடராசர் அருளியது–இரண்டாம் பதிப்பு 1964–நூல் கிடைத்தில.
3. கீரனூர் நடராசர் அருளியது–மூன்றாம் பதிப்பு 1977 – வி.கே.வேலு நாயகர் கே.எம்.தெய்வ சிகாமணி சோதிடர் -விளக்க விருத்தியுரை செய்துள்ளனர்.

முதலாம், இரண்டாம் பதிப்புகள் மலர்மகள் விலாசம் அச்சுக் கூடத்தில் வெளியிடப்பெற்றன. மூன்றாம் பதிப்பு வருவதற்குள் கீரனூர் நடராசர் இறந்து விடவே தம் கணவரின் நினைவாஞ்சலியாகத் தாம் வெள்ளைத் தாளில் எழுதிப் போற்றிப் பாதுகாத்து வைத்த அந்நூலினை மூன்றாம் பதிப்பின் சோதிட உரையாசிரியர்கள் துணை கொண்டு அவர் மனைவியார் அதே பதிப்பகத்தில் வெளியிட்டார். 20.06.1977இல் வேலூர் வேலப்பாடி சோதிட கணித ஆருட சித்தாந்த வல்லுநரும், சோதிட கலாநிதியுமாகிய வி.கே.வேலு நாயகர் காவேரிப்பாக்கம், மற்றும் பால சோதிடம் கே.எம் தெய்வசிகாமணி ஆகியோர் உதவியுடன் தமது பதிப்பகத்தில் அவ்வம்மையார் வெளியிட்டார். பாயிரப் படலத்தில் – 15 நூற்பா, சோதிட நூற்பாக்கள் 1131ஆம் ஆக 1146 உள்ளன. பக்கங்கள் 828. மேற்குறிப்பிடப் பெற்ற குறிப்புகள்யாவும் மூன்றாம் பதிப்பின் வழி அறியலாகும்.

சாதக அலங்காரம் உரை – கருத்து ஒற்றுமை – வேறுபாடு

முதல், மூன்றாம் பதிப்பு இவ்விரண்டிலும் செய்யுள், மேற்கோள் செய்திகள் உட்பட அப்படியே கையாளப் பெற்றுள்ளது. செவ்வனே அமைந்துள்ளது பழைய பதிப்பு உரைகள்.

1. சாதக அலங்காரம் - முதல், மூன்றாம் உரையாசிரியர்கள், செய்தி

2. **கீரனூர்** நடராசரால் அருளிச் செய்த சாதகாலங்காரம் (மூலமும், ஆதிவிரியுரையும்) எனும் இந்நூல் பெயர் கொண்டு மகா-ரா-ரா-ஸ்ரீ மா வடிவேலு முதலியார் அவர்கள் எழுதிய விரியுரையும் (இதனை பரிசோதித்த அனுப்பாபாளையம். ஸ்ரீமான் அ.இ.ரா முருகையா சோதிடர்) 1900 பதிப்பு 1992, 1998, பதிப்பாசிரியர் லேனா தமிழ்வாணன் மணிமேகலை பிரசுரம் வெளியீடு, மேற்குறிப்பிட்ட மூலநூலின் துணை கொண்டு **ஜனன காலப் படலம்-பிரசூதி சயனதிக்கு, பிரசூதி ஸ்திரீ சயன மஞ்சனத்தில் லஷணம் பகுதியின்,** செய்யுள் ஒன்று உரை வேறுபாட்டிற்காக இங்கே தரப்பெற்று விளக்கப் பெறுகின்றது.

மூல நூலின் பழைய பதிப்பின் செய்தி வீடு, அறுசுவைகள் சான்று

(இ-ள்) புதன் பலவானானால், சித்திரர்களால் அலங்காரமாகக் கட்டியுள்ள புதிய வீட்டிலும், சுக்கிரன் பலவானானால் அலங்காரமாகக் கட்டியுள்ள புதிய வீட்டிலும் குரு பலவானால் மிகவும் வலுவுள்ளதாய் அதிக நாள் இருக்கக் கூடிய வீட்டிலும் ஜனனமாகும். குழந்தையின் தாய் பிரசவத்தினத்தன்று விரும்பி புசித்த சுவை (உருசி) யானது மாதுருகாரகன் அல்லது ஸ்தானம், ஸ்தானாதிபதி இவர்களுடன் இருந்தவர்களில் சூரியனுக்குக் காரமும், சந்திரனுக்கு உப்பும், செவ்வாய்க்குத் துவர்ப்பும், புதனுக்கு உவர்ப்பும், குருவுக்கு இனிப்பும், சுக்கிரனுக்குப் புளிப்பும், சனிக்குக் கசப்பும் ஆகும். வலிது பெற்ற கிரகம் இருந்த இடம் முதல் மும்மூன்று இராசிகளைக் கிழக்கு முதலிய திசைகளை வைத்து எண்ணிப் பார்த்துப் பிரசவ வீட்டின் நான்கு பக்கங்களிலுமுள்ள வீட்டின் அடையாளங்களைச் சொல்ல வேண்டியது. (கீரனூர் நடராசர், சாதகலங்காரம், முதல் பதிப்பு, ப.174).

தாயின் வயது

((வி.ரை) பிரசவ ஸ்திரியினதும் பிரசவ ஸ்திரீயுடன் இருந்த ஸ்திரீகளினதும் பருவத்தைச் சூரியாதி கிரகங்களுடைய வயது பிரமாணத்தால் கூறுதல் வேண்டும். சூரியனுக்கு வயது-50, சந்திரனுக்கு-70, அங்காரனுக்கு-16, புதனுக்கு-20, குருவுக்கு-30, சுக்கிரனுக்கு-7, சனிக்கு (இராகு கேதுவுக்கு) 100 ஆகும். இம்முறையே நோக்கும்போது சூரியன்

வயது-50, சந்திரன்-70, சனி-100, குரு-30 இந்நால்வர்களும் விருத்த பருவம் தளர்ச்சியான வயதுடையவர்கள். புதன்-20, அங்காரகன்-16, சுக்கிரன்-7, இம்மூவர்களும் இளமைப் பருவம் வளர்ச்சியான வயதுடையவர்கள். இம்முறையே நோக்கும்போது குருவை விடச் சூரியனும். சூரியனைவிடச் சந்திரனும். சந்திரனை விடச் சனியும் முதிர்ந்த பருவமுடையவர்களாவர். புதன் மத்திம வயதுடையவன். புதனைவிடச் செவ்வாயும். செவ்வாயை விடச் சுக்கிரனும் இளமைப் பருவமுடையவர் களாவர். இம்முறையை நோக்கிக் கூறுதல் சாலக்கற்ற நல்லறிவாளர் கடமை இக்கருத்தைத் தழுவி 4-5ஆவது செய்யுள்களைத் திருத்தி அமைத்தாமென்க.

அறுசுவைகள்

சோதிட சாஸ்திரத்தில் கைப்பு, தித்திப்பு. புளிப்பு. உவர்ப்பு, துவர்ப்பு, கார்ப்பு ஆகிய ஆறு சுவைகளை ஏழு கிரகங்களுக்கு இன்னின்ன சுவைகள் உரியதெனக் கூறப்பட்டிருக்கின்றது. அதாவது **“ பாஸ்கரம்-கடுக–லவண–திக்த–மிச்ரிதா–மதுரா–ம்லெளச- கஷாய இத்யபி”** என்றவராக மிசிராசாரியர்வசனப்படி சூரியனுக்குக் காரம் (கார்த்தல்), சந்திரனுக்கு உப்பு (உவர்த்தல்), செவ்வாய்க்குத் துவர்த்தல், புதனுக்குச் சட்சரம் (அறுசுவை), குருவுக்கு இனித்தல், சுக்கிரனுக்குப் புளித்தல், சனிக்குக் கசத்தல் முதலியனவாம் (இராகுவுக்குக் கசப்பும், கேதுவுக்கு துவர்ப்புமாம்).

ஜனன காலத்தில் பிரசவஸ்திரீகள் உடுத்தியிருந்த சேலைகளின் விபரமாவன

சூரியன் வலிதாகவும், உரமாகவும் உடையது. சந்திரன் புதியதும் அழகாகவும் உடையதும் ஆகும். செவ்வாய் தீப்பட்டதும், கிழிந்ததும், அழுக்குடையதுமாகும். புதன் வலையைப் போன்றதும், நீரில் நனைந்தமாகும். குரு புதியதும், பழையதுமின்றி நடுநிலைமையானதாகும். சுக்கிரன் திடமுள்ளதும் அழகுடையதாகும். சனி பழையதும் கிழிந்ததுமாகும்.ப -175)

செய்யுள் முதல் அடிக்கு விளக்கம் இராசி – திசை விளக்கம்

வீடுகளின் இலட்சணங்களைக் கூறுதல் வேண்டும் என்று ஏற்படுதலின் **“கோள் உறும் திசை தொட்டு எண்ணே”** என்று திருத்தியமைத்தாம் என்றறிக. இது விஷயமாய் **“பவனக்கரஹஸம் யோகை: ப்ரதிவேச்மாநி சிந்தநீயாநி”** என்று சாராவளியிலும் கூறப்பட்டிருத்தலறிக. வலிது பெற்ற கிரகம் இருந்த இராசி முதல் மூன்று இராசிகள் **கிழக்குத் திசை** அதற்கு மேலுள்ள மூன்று இராசிகள் **தெற்கு திசை** அதற்கு மேலுள்ள மூன்று இராசிகள் **மேற்குத் திசை** அதற்கு மேலுள்ள மூன்று இராசிகள் **வடக்குத் திசை**யாகும். சிலர் இலக்கின முதலாகவும் பார்த்துரைப்பார்கள்.

1. குரு பரம உச்சத்துக்கு முன்னாக (பரமோச்ச ஸ்தானத்திற்குப் போவதாக) இருந்து ஜனனலக்கினம் மிதுனம் அல்லது மீனமாகயிருந்தால் மூன்று அந்தஸ்துள்ள வீட்டில் ஜனனமென்றும் பரமோச்சத்தை விட்டுத் தாண்டி இருந்தால் இரண்டு அந்தஸ்துள்ள வீட்டில் ஜனனமென்றுங் கூறுக.

2. குரு தனுவில் இருந்தால் பிரசவவீடு திரிசாலையை யுடையதென்றும், மிதுனம் மீனத்தில் இருக்க துவீதசாலை என்றும் சொல்லுக. கடகம் சதுர்சாலை என்றறிக. துவிதசாலை இரண்டு கட்டுவீடு அல்லது இரண்டுகட்டுக்கு மேல் மாளிகையாகும். இம்முறை பெரும்பாலும் நகரவாசிகள் ஜாதகத்திற்கே பயன் தரும்.

12ஆம் இடம் கட்டிலின் 4ஆவது கால் ஆகும். இப்படி இலக்கின முதலாக மஞ்சத்திற்குச் சொல்லப்பட்ட பன்னிரண்டு இராசிகளில், உபயராசியாக வரும் இடத்தில் வளைந்து இருக்கும். அவ்வித உபய ராசியில் பாவர்கள் இருந்தால் வளைந்து ஒடிந்து இருக்கும். அந்த உபய இராசியில் சுபர் இருந்தாலும், பார்ததாலும் ஒடியாது செவ்வாயாயிருக்கும். உபயராசியில் பாவகிரகங்கள் உச்சம் ஆட்சி மூலத்திரி கோணம் - நட்பு இவ்வித இடங்களில் இருக்கில் பழுதில்லாது வலுவாகவே இருக்குமென்க.

பிரசூதி சயன திக்கு

மேஷம்,	ரிஷபம்,	கிழக்கு
துலாம்,	விருச்சிகம்,	மேற்கு
மிதுனம்,		தென்கிழக்கு
தனுசு,		வடமேற்கு
கடகம்,	சிங்கட்	தெற்கு
மகரம்,	கும்பம்	வடக்கு
கன்னி,		தென்மேற்கு
மீனம்,		வடகிழக்கு

இந்த இராசிகளில் ஒன்று ஜனலக்கினமாகும் அந்த இராசிக்குரிய திக்கில் சிரம் வைத்துப் பிரசூதி ஸ்திரி சயனித்திருந்தாள் என்று அறிக.

பிரசூதி ஸ்திரி சயன மஞ்சனத்தின் இலட்சணம்

இலக்கினம் 2ஆம் இடம் கட்டிலின் 1-4ஆவது கால்களுக்கு நடுவில் தலை வைத்துச் சயனிக்கும் திசையாகும். 3ஆம் இடம் கட்டிலின் தலைப்பாகத்திலுள்ள 1ஆவது வலது கால் 4-5ஆம் இடம் கட்டிலின் வலது பக்கம் 1ஆவது, 2ஆவது கால்களுக்கு மத்தியில் உள்ள ஸ்தானமாகும்.

6 ஆம் இடம் கட்டிலின் கால்பாகத்துள்ள 2ஆவது காலாகும். (மே.ப.176)

7-8 ஆம் இடம் கட்டிலின் 2-3 ஆவது கால்களுக்கு நடுவில் கால் நீட்டும் திசையாகும்.

9 ஆம் இடம் கட்டிலின் கால்பக்கதிலுள்ள 3ஆவது காலாகும். 10-11 ஆம் இடம் கட்டிலின் இடது பக்கம் 3-4ஆவது கால்களுக்கு மத்தியிலுள்ள ஸ்தானமாகும் (மே ப 177).

சான்று செய்யுள்

"சொல்லு புதன் வலுத்திருந்தால் சித்திரவீடு ஆகும்.
சுக்கிரன் தான் இருந்தக்கால் சசிவீடது ஆகும்
வில்அரசன் வலுத்து இருந்தால் கெட்டிஅகம் ஆகும்
மின்அனையார் விரும்புசுவை வெய்யவனுக்கு உறைப்பாம்
நல்லமதிக்கு உப்பாகும் சேய்துவர்ப்பை நாடும்
நாலுவகைச் சுவைபுதனே நல்குவிப்பன் இப்பால்
அல்லல் அறும் குருமதுரம் வெள்ளி புளிப்பு ஆகும்
அணிகாரி கசப்புக் கோள் உறும் திசை தொட்டு எண்ணே"
(மேலது, செ.எ 66 பு 174)

வீடு, அறுசுவைகள், சேலைகள், திசைகள், குருவை வைத்துக் கூறுதல், **12** ஆம் இடம் காண்டுகூறுதல் **, சயனதிக்கு, சயனமஞ்சன** இலட்சணம் ஆக இவற்றின் செய்திகள் விரிவாக விளக்கப்பெற்றுள்ளன. இவ்விதமாகப் பழைய பதிப்பு தகுந்த பல ஆதார விளக்கங்கள், செய்திகள், செய்யுள் அடிக்கு விளக்கம் எனப் பொருள் தந்து சிறப்பித்து நிற்கின்றது. செய்யுளுக்குச் சிறப்பும் பொருளும் பொருந்தி சிறப்புத் தருகின்றது.

ஆனால் இதே செய்யுளிற்கு **"சாதகாலங்காரம் மூலமும் ஆதி விரியுரையும்"** எனும் நூலில் அந்தச் சோதிட உரையாசிரியர் தரும் விளக்கம், பாடல் அமைந்துள்ள முறையினையும் இங்கே காண்போம்.

(இ-ள்) சொல்லப்படும் புதன் பார்த்தும், இருந்தாலும், அது சித்திர வீடாகும். சுக்கிரன் பார்த்தாலும், இருந்தாலும், சுத்த வீடாகும். குருவிருந்து கண்டால் கெட்டி வீடாகும். தவிரப் பெற்றதாய் விரும்பும் சுவையைச் சொல்லுமிடத்துச் சூரியன் அதில் சந்திரனிருந்தால் காரத்தையும், உப்பையும், அங்காரகனிருந்தால் துவர்ப்பையும், புதனிருந்தால் நான்கு வகை ருசிகளையும், குருவிருந்தால் மதுரத்தையும், சுக்கிரனிருந்தால் புளிப்பையும், சனியிருந்தால் கைப்பையும் விரும்புவார் என்பதாம் (எ.று).

"சொல்லும் புதன் பார்த்திருந்தாற் சித்திர வீடாகும்
சுக்கிரன் பார்ந்திருந்தக்காற் சசி வீடதாகும்

வில்லரச னிருந்து கண்டாற் கெட்டிய மாகும்
மின்னனையார் விரும்புசுவை வெய்யவனே வுரைப்பாம்
நல்ல மதிப்பாகுஞ்சேய் துவர்ப்பைநாடும்
நாலுவகைச் சுவை புதனே நல்கிவிப்பனிப்பால்
வல்லறுங்குறு மதுரம் வெள்ளி புளிப்பாகும்
அணிகாரி கசப்பிலக் கினத்திசையில் சிரசே."

(மே, நூல், செ. ஏ. 66, ப 38)

நல்கிவிப்பனிப்பால் - இதன் பொருள் என்ன, குறு என்பது குறுகிய எனப் பொருள் தரும். ஆனால் குரு என்பது குரு கோளைக் குறிக்கும். பொருள், செய்யுள் அடி, தொடர் பிழைகள் உள்ளன. பழைய பதிப்பில் சுவை வேறுபாடுகள் வேறுவிதமாக உள்ளன. புதனிருந்தால் நான்கு வகை ருசிகளையும் குறிப்பிடுகிறது. செய்திகள், பொருள் முதலியன புதிய பதிப்பு உரையில் விடுபட்டுள்ளன. மாதுருஸ்தானம் - 4 இதை வைத்து கோள் நிலை சொல்லவில்லை. எப்படி பொருள் அறிந்து கொள்வது. முழுவதுமாக விளக்கம் இருந்தால் மட்டுமே கடிமான சோதிடக்கலையினில் பொருள் விளங்கிக் கொள்ள முடியும். பயன் பெறமுடியும். சுருக்கமாக பயன்தராத பொருள் இல்லாத உரைகளினால் இந்தச் சோதிடத்தின் பலனை அறிந்து கொள்வதில் இடர் ஏற்படுகின்றது.

முடிவுரை

பழைய மூலநூல் செய்யுள், செய்தி, மேற்கோள் இவற்றிற்கான தொடர்பும் புதிய உரையாசிரியர் - புதிய பதிப்பால் நிகழ்ந்த – பிழை மாற்றங்களும் - ஒன்றற்கொன்று முற்றிலும் மாறுபட்டு விளங்குகின்றன. ஏற்புடையன சிறந்த பழைய மூலநூல் பதிப்பு உரைகளே! புதியவற்றில் பிழைகள் ஏராளம் ! கருத்து, செய்யுள், தொடர் இன்ன பிற பிழைகள் நிகழ்கின்றன.

எனவே பழைய சோதிட உரையைப் போற்றுவோம் ! நவ கோள்களின் நற் செயல்களினைப் போற்றுவோம்.

சாதக அலங்காரம் புத்திரபாவத்தில் உரைவேறுபாடுகள்

தி. கல்பனாதேவி

சாதகத்திற்கு அலங்காரமாகத் திகழும் **"சாதக அலங்காரம்"** எனும் நூலின் முதல், மூன்றாம் பழைய பதிப்புகளும், **"சாதக அலங்காரம் மூலமும் ஆதி விரியுரையும்"** எனும் நூலின் பதிப்பு உரையும் இங்கே கட்டுரைக்கு எடுத்துக் கொள்ளப் பெறுகின்றன.

சாதக அலங்காரம் பதிப்பு விவரங்கள் – உரை விவரங்கள்

1. **கீரனூர்** நடராசர் அருளியது முதல் பதிப்பு 1955 அமரம்பேடு **இராஜரத்தின** முதலியார் விளக்க விருத்தியுரை செய்தவர்.

2. **கீரனூர்** நடராசர் அருளியது இரண்டாம் பதிப்பு 1964 **நூல் கிடைத்தில.**

3. **கீரனூர்** நடராசர் அருளியது–மூன்றாம் பதிப்பு 1977 வி.கே.வேலு நாயகர், கே.எம்.தெய்வ சிகாமணி சோதிடர் - விளக்க விருத்தியுரை செய்துள்ளனர்.

முதலாம், இரண்டாம் பதிப்புகள் மலர்மகள் விலாசம் அச்சக் கூடத்தில் வெளியிடப்பெற்றன. மூன்றாம் பதிப்பிற்குள் கீரனூர் நடராசர் இறந்து விடவே தம் கணவரின் நினைவாஞ்சலியாகத் தாம் வெள்ளைத் தாளில் எழுதிப் போற்றிப் பாதுகாத்து வைத்த அந்நூலினை மூன்றாம் பதிப்பின் சோதிட உரையாசிரியர்கள் துணைகொண்டு அவ்வம்மையார் அதே பதிப்பகத்தில் வெளியிட்டார். 20.06.1977இல் வேலூர் வேலப்பாடி சோதிடக் கணித ஆருட சித்தாந்த வல்லுநரும், சோதிட கலாநிதியாகிய வி.கே.வேலு நாயகர் காவேரிப்பாக்கம் - பால சோதிடம் கே.எம் தெய்வசிகாமணி ஆகியோர் உதவியுடன் தமது பதிப்பகத்தில் அவ்வம்மையார் வெளியிட்டார். பாயிரப்படலத்தில் – 15 நூற்பாவும், சோதிட நூற்பாக்கள் 1131ஆம் ஆக 1146ஆம் உள்ளன. பக்கங்கள் 828. மேற்குறிப்பிடப் பெற்ற குறிப்புகள்யாவும் மூன்றாம் பதிப்பின் வழி அறியலாகும்.

சாதக அலங்காரம் உரை – கருத்து ஒற்றுமை – வேறுபாடு

முதல், மூன்றாம் பதிப்பு இவ்விரண்டிலும் செய்யுள், மேற்கோள் செய்திகள் உட்பட அப்படியே கையாளப் பெற்றுள்ளது. செவ்வனே அமைந்துள்ளது பழைய பதிப்பு உரைகள்.

1. **சாதக அலங்காரம் - முதல், மூன்றாம் உரையாசிரியர்கள், செய்தி**

2. **கீரனூர்** நடராசரால் அருளிச் செய்த சாதகாலங்காரம் (மூலமும், ஆதிவிரியுரையும்) எனும் இந்நூல் பெயர் கொண்டு மகா-ரா-ரா-ஸ்ரீ மா வடிவேலு முதலியார் அவர்கள் எழுதிய விரியுரையும் (இதனைப் பரிசோதித்த அனுப்பாபாளையம். ஸ்ரீமான் அ.இ.ரா முருகையா சோதிடர்) 1900 பதிப்பு 1992, 1998, பதிப்பாசிரியர் லேனா தமிழ்வாணன் மணிமேகலை பிரசுரம் வெளியீடு.

சாதக அலங்கார நூலின் - ஐந்தாம் பாவகம் - புத்திரபாவகம் - புத்திர பலன் பகுதியிலிருந்து அசுவத்த பிரதட்சணம், நாகபிரதிட்டை செய்திகள் பற்றி மூலநூல் உரை தரும் விளக்கமும், புதிய பதிப்பு உரை தரும் விளக்கமும் இங்கே குறிப்பிடப் பெறுகின்றது. தரத்தில் சிறந்த உரை பதிப்பு, அவற்றின் நன்மை பற்றியும் இக்கட்டுரை குறிப்பிடுகின்றது.

ஐந்தாம் பாவகத்தில் புத்திரர்கள் பற்றிய செய்தியினையும், பூர்வ புண்ணிய பலன்கள் பற்றியும், உயர்ந்த நட்பு வட்டாரங்கள் பற்றியும் இன்னும் பலவற்றையும் சாதக அலங்காரம் குறிப்பிடுகின்றது. புத்திர பலன் இல்லாமைக்கான பரிகாரமாகப் பிரதிட்டை பற்றிய செய்திகளை இங்கே காண்போம்.

இ-ள் ஜெனன ராசிக்கு ஐந்தாம் இராசிநாதனான புத்திரஸ்தானாதிபதியும் ரோகஸ்தானாதிபதி என்னும் 6 ஆம் இராசிநாதனும் ஒன்றுகூடி சுப கோட்களால் நோக்குறாது அமர்ந்திருப்பாரேயானால் அந்த ஜாதகனுக்குச் சத்துரு சாபத்தினால் மக்கட்பிறவி இல்லை எனவும் மேற்சொன்ன 5 ஆம் இராசிநாதன் தன் சுபவீட்டில் ஆட்சிபெற்ற சுபகோள்கள் பார்வையற்று அசுபர்களால் பார்க்கப்பட்டிருந்தால் அவனுக்குப் புத்திரப்பேறில்லை எனவும் ஓமம், எக்கியம் முதலியவைகளைச் செய்து தானம் செய்யின் புத்திரனுண்டு எனவும் கூறுவர் எ-று.

வி-ரை சத்துரு தோஷத்தால் புத்திவிருத்தியில்லாதார் 6 ஆம் ராசிநாதன் எவனோ அவனுக்குத் தக்கபடி 592 -ம் செய்யுளுக்கு இடையில் சொல்லியபடி அந்தந்த தெய்வங்களுக்கு அபிஷேகிப்பதுடன் நவக்கிரக தியானமும் செய்யின் புத்திர உற்பவம் உண்டாகும் என்பதாம்.

பரிகார விவரங்கள் : அசுவத்த பிரதட்சணம்

அரசமர பிரதட்சணம்

இதுவே நாகிபரதிஷ்டை என்று கூறப்படும்.

"அஸ்வத்தஸ் ஸர்வ வ்ருஷாணாம் தேவர்ஷீணாஞ்ச நாரத:
கந்தர்வாணாம் சித்ராதஸ் ஸித்தநாங் கபிலோ முநி:"

என்று பகவத்கீதை 10-ஆம் அத்தியாயம் 26-ஆம் சுலோகத்தில், ஸ்ரீ பகவான் விருட்சங்கள் தானாக இருப்பதாய் அருள் செய்திருக்கின்றனர். திருமுட்டபுராணத்தில் ஸ்ரீமந் நாராயண மூர்த்தியின் வலது நேத்திரத்திலிருந்து இவ்விருட்சம் பிறந்ததெனவும், சகல விருட்சங்களுக்கும் முதன்மையாக இருக்கும்படி அவர் அனுக்கிரகித்து அபிடேகம் செய்து அரசு எனப் பெயரிட்டனர் எனவும் கூறப்பட்டிருக்கின்றது. இவ்விருட்சம் நமது நாட்டில் எவ்விடங்களிலும் இருக்கின்றது. அகன்ற அடியிடமும், நீண்டு வளர்ந்த வெண்மையான செழுங்கிளைகளும், திரண்டுருண்டு ஓங்கி வளர்ந்த உருவமும் பச்சை நிறமாகத் தழைத்த இலையும், அந்த இலையின் அழகிய அமைப்பும், அந்த இலையினூடே மென்காற்று நுழைந்து சலசலவென்று ஒலிக்கும் ஒலியின் காட்சியும் மனோரம்யமாக இருக்கும். இது தன்னைக் காண்போர் கண்ணையும் மனதையும் ஒருங்கே கவருந் தன்மையதாகும். "**பூவாதே காய்க்கு மரமுமுள மக்களும், ஏவாதே நின்றுணர்வார் தாமுளரே**" என்றபடி அத்தி-ஆல்-பலா முதலியவைகளைப் போல் பூவாதே காய்க்கும் மரங்களுள் இதுவும் ஒன்றாகும். பூவாது காய்க்கும் மரம் என்பதை அறிவதற்கு ஓர் அடையாளமுண்டு. அதுயாதெனில்: அவ்வினத்து மரங்கள் தளிர்விடும்போது அந்தத் தளிர் மூங்கில் முளைபோல் மூடிக்கொண்டிருக்கும் ஆடைபோன்ற ஒருவித இதழால் மூடப்பட்டிருக்கும். அவ்வாடை தளிர் முதிர முதிர உலர்ந்துபோகும். இதுவே, அதனை அறிதற்கு ஏற்ற குறியாகும். வஸந்த ருதுவாகிய சித்திரை, வைகாசி மாதங்களில் இம்மரம் இலைகளை உதிரத்துவிட்டு புதியதாகத் தளிர் எடுக்கும். இதனிடத்தில் தாமிரசத்தும் மின்சாரமும் இருக்கின்றது. நோயினால் துன்பப்பட்டு சௌக்கியமடைந்து வருவோரும், சரீரமும் மனமும் மெலிவடைந்திருப்போரும், காலையும் மாலையும் சுத்தமான நீரில் மூழ்கி ஈரமான உடையுடன் அரசமரத்தைப் பிரதட்சணம் செய்துவருவதை பன்முறைக் கண்டிருக்கின்றோம். அவர்கள் அப்படிச் செய்து வருவதனால் நாளுக்குநாள் நலிவுகள் குறைந்து தெளிவடைந்து பூரணமான சௌக்கியத்தைப் பெறுவதையும் காண்கின்றோம்.

இதற்குக் காரணம் இவ்விருட்சத்தின் காற்றேயாம். மின்சாரமானது கூர்மையான முனைகளின் வழியாகவே நன்கு ஒழுகுந்தன்மையுடையதும், ஈரமான பொருட்களில் மட்டுமே நன்கு பரவும் தன்மையுடையதுமாகும். ஆதலால் அரசமரத்திலுள்ள மின்சாரமானது அரசிலையின் கூர்மையான நுனியின் வழியாக நனைந்த ஈரமான உடையுடன் வலம்வருகின்ற வியாதியஸ்தர்களின் சரீரத்தில் சிறிது சிறிதாகப் பரவி நாளுக்குநாள் வலிவைத்தந்து சௌக்கியப்படுத்துகின்ற தென்று இரசாயன சாஸ்திரர்கள் கூறாநிற்பர். ஆயினும் சரீரத்திலுள்ள வியாதி, விஷக்கடி, பேய்பிடி இவைகளை நீக்குந்தன்மை அரச மரத்தின் காற்றுக்கு அவ்வளவாக இல்லை. வேம்பின் காற்றுக்கே உண்டு. இதுபற்றியே மணிமேகலையில் வேம்புக்கு "**அரவாய்க் கடிப்பகை**" என்ற பெயர் கூறப்பட்டிருக்கிறது.

அரசமரத்தின் சுள்ளியின் புகையை மோப்பதினால் சரீரத்தின் நரம்பு தளர்ச்சிகள் நீங்கி வன்மையுண்டாகி முறுக்கேறும். மகரிஷிகளும், ஞானிகளும் நாடோறும் பலவகை சமித்துகளுடன் அரசு சமித்தையுஞ் சேர்த்து அக்கினி காரியங்களைச் செய்து சரீரவன்மையும், மனத்தெளிவும் தீர்க்காயுளும்பெற்று நெடுங்காலம் வாழ்ந்திருந்தனர்.

"மூலதோ பிரம்ம ருபாய மத்யதே விஷ்ணு ருபிணி
ஆக்ரதோ ஸிவரூபாய விருஷராஜாயதே நம:"

அசுவத்த விருப்த்தின் அடி-நடு-முடி என்னும் மூன்றிடத்திலும் பிரம்ம-விஷ்ணு -ருத்திரர் என்னும் திரிமூர்த்திகளும் இருந்து வாழ்கின்றனர் என்றும், ஆதலால் இவ்விருட்சத்தைப் பிரதட்சணம் செய்தவர்கள் அம்மூவரையும் பிரதட்சணம் செய்து சகல நற்பேறுகளையும் பெற்று வாழ்வர் என்றும், பிரம்மசரியவிரதத்தைப் பிழைபடாமல் காத்து நல்லொழுக்கத்திற் சிறந்து விளங்கிய ஒரு புருஷன் ஊழின்பயனால் உயிரிழப்பின் அவனே அரசமரமாகப் பிறக்கின்றனன் என்றும் இதுபற்றியே இம்மரத்திற்கு இடது பக்கத்தில் நாகபிரதிஷ்டை செய்துவைத்துக் கலியாணமும் செய்து வைத்தவர்களுக்கு மகப்பேறு உண்டாகுமென்றும், அரசு ஆணும், வேம்பு பெண்ணும் ஆகுமென்றும், அவ்விரண்டடையும் ஒன்றாக நட்டு வளர்த்து கலியாணம் செய்து வழிபடுவோருக்கு அவசியம் புத்திரப்பேறு உண்டாகுமென்றும் சுருதி ஸ்மிருதி புராண இதிகாசங்களில் ஆன்றோர் திருவாய் மலர்ந்திருக்கின்றனர்.

மார்க்கஸீர்ஷே மாகமாஸி வைஸாகே கார்த்திகேததா
விவாகங் காரயே பிப்பலஸ்ய மகாபலம்
கோடி விப்ர விவாக நய:பலம் லபதே நர:
ஆஸ்வத்தஸ்ய விவாகா தத்பலம் லபதே புவி"

என்றபடி மார்கழி-மாசி-வைகாசி-கார்த்திகை இந்த மாதங்களில் அரசு - வேம்பு ஆகிய விருட்சங்களுக்கு விவாகம் செய்ய உத்தமம் என்பதும் கோடி பிராமணர்களுக்கு விவாகம் செய்து வைத்தால் எவ்வளவு புண்ணிய முண்டாகுமோ அவ்வளவு புண்ணியமும் ஒரு அசுவத்தவிவாகத்தினால் சித்திக்குமென்றும் மகரிஷிகள் கூறியிருக்கின்றனர். முதல் அசுவத்த பிரதிஷ்டையும், இரண்டாவது அஸ்வத்த உபநயனமும், மூன்றாவது அஸ்வத்த விவாகமும் முறையே சாஸ்திர விதிப்படி செய்துவைத்தல் உத்தமம் மற்றும்

"அமாவைஸோ மவாரேண ரவிவாரேண ஸப்தமீ சதுர்த்தீ
பௌமவாரேண விஷீவத் ஸத்ரு ஸம்பவம"

என்றபடி அமாவாசையும் திங்கட்கிழமையும், சப்தமிதிதியும் ஞாயிற்றுக் கிழமையும், சதுர்த்தி திதியும் செவ்வாய்க்கிழமையும் கூடிவந்தால் அந்த தினம் விஷீவத் புண்ணியகாலத்தில் ஒப்பானதென்றும், மும்மூர்த்திகளின் சொருபமாக விளங்கும் புண்ணிய நதி தீரங்களிலுள்ள அரசுவிருட்சத்திற்கு

சோடசோபசார பூஜைகளும், அபிஷேக அலங்காரங்களுஞ் செய்து நமஸ்கரித்து 108-பிரதட்சணம் வந்து விரதம் இருத்தல் வேண்டும் இதற்கு அசுவத்த பிரதட்சண விரதம் என்று பெயர். இவ்விரதம் அனுஷ்டிப்போர் கொடிய வியாதிகள் நீங்கப்பெற்று சுகபோக பாக்கிய புத்திர லாபங்களையடைவார்கள். இலைகள் ருக்வேதமாவும், பழங்கள் யக்ஞமாகவும் எண்ணிப் பூசை செய்யவேண்டும் என்று சாஸ்திரங்களில் கூறப்பட்டு இருக்கின்றன.

நாக பிரதிட்டை

கருங்கற்பலகையில் ஒன்று அல்லது ஐந்து முகமுடைய இரண்டு சர்ப்பங்கள் ஒன்றோடொன்று இணைந்து சுற்றிக்கொண்டு இருப்பதுபோல் சிற்பிகளைக் கொண்டு சர்ப்ப உருவங்களை செய்வித்து, அக்கற்பலகையைச் சிறிதுகாலம் சுத்தநீர் நிலையில் விட்டு வைத்திருந்து எடுத்துப் பிரதிஷ்டை செய்ய விரும்பிய கருத்தாவின் ஜென்ம நாம நட்சத்திரங்கட்குத் தாரா சந்திர பலம் சுத்தமுடையதான சுபமுகூர்த்தத்தில் 8மிடம் சுத்தமான சுபலக்கனத்தில் உத்தராயணத்தில் வேதியர்களைக்கொண்டு சாஸ்திரோக்தமாக பிரதிஷ்டை செய்தல் வேண்டும். அரசு, வேம்பு ஆகிய இவ்விரு விருட்சங்களும் ஒன்றாய் வளர்ந்தோங்கி இருக்குமிடத்தில் அதைச்சுற்றிலும் பீடம் அமைத்து இவ்வித பிரதிஷ்டையைச் செய்து வைப்போர்க்குத் தவறாமல் புத்திரப்பேறு உண்டாகும். மற்றும் ஆண்மகவுமின்றி பெண்ணாகவே பெறுவோருக்கும் அது விலகி ஆண்மகவு உண்டாகும் என்று மகரிஷிகள் கூறியிருக்கின்றனர். இங்ஙனம் நாகப்பிரதிஷ்டை செய்ய வேண்டிய காரணத்தைச் சிறிது விளக்குவாம்.

"மூலத் திருவிரல் மேலுக்கு முன்னின்ற
பாலித் யோனிக்கு இரவிரல் கீருநின்ற
கோலித்த குண்டலி யுள்ளே செழுஞ்சுடர்
ஞாலத்து நாபிக்கு நால்விரற் கீழே" (திருமந்திரம்)

சகல ஜீவராசிகளினுடையே சரீரத்துனுள்ளேயிருக்கும் நூறு நாடிகளின் மத்தியில் பாம்பு வடிவமாக மண்டலமிட்டுக் கிடக்கும் தன்மையதான குண்டலிசக்தி ஒன்றுண்டு. அதுவே மற்றைய சக்திகளுக்கெல்லாம் தலைமையானதும் பரிசுத்தமுடையதும் ஆகும். நமக்கு சஞ்சலம் உண்டாவதற்கு ஏற்ற காரணமாக இருப்பது இந்தச் சக்தியேயாகும். மனதைச் சேர்ந்திருக்கும் இருதயநாடிகள்யாவும் இக்குண்டலி சக்தியிலேயே இணைக்கப்பட்டிருக்கின்றன. சகல யோகப் அப்பியாசங்களுக்கும் இக்குண்டலி சக்தியே பிராணதாரமாக இருக்கின்றது. கசிய பிரஜாபதிக்குக் கத்துருவையிடத்து உதித்த புத்திரர்கள் பலர். அவர்களுள் மூத்தபுத்திரன் ஆதிசேடன். இவன் பூமியை நடுவில் நின்று தாங்கும் வரம்பெற்றவன். பிரளயகாலத்தில் உலகமும் மற்றைய புவனங்களும் நாசமெய்திய பின்னும் இவன் நாசமின்றிச் சேஷித்து

(மிச்சமாக) இருப்பவனாதலால் ஆதிசேடன் என்னும் பெயர் பெற்றனன். இவனுடன் **வாசுகி, அனந்தன், தக்கன், சங்கபாலன், குளிகன், பதுமன், மகாபதுமன், கார்க்கோடகன்** என்னும் எட்டு நாகர்களும் முறையே கிழக்கு முதலாக எட்டுத் திக்குகளிலும் பூமியைத் தாங்கி நிற்பர்.

இவர்கள் குலத்தைச் சேர்ந்தன மற்றைய சர்ப்பக் கூட்டங்களுமானபடியால் அவற்றைத் துன்பப்படுத்துவதும் கொல்லுவதும் பாவங்களுக்கெல்லாம் தலைமை பெற்று சந்தான நாசத்திற்கு ஏதுவாயதுபோலும். சர்ப்பங்களுக்குக் காது கிடையாது. கண்ணையே செவியாக உடையனவாகையால் கட்செவி என்று பெயர் பெறுவதாயின. இதனால் **"கட்செவி எடுத்தாட்டலாம்"** என்றார் தாயுமானவர். ஒலியைக் கேட்டு வெகு எச்சரிக்கைடன் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளும் வகையில் நோக்கமுடையதாகையினால் அரவம் என்று பெயர் பெற்றது. தனக்குத் தீங்கிழைத்தவனை அநேக காலம் வரையில் தனது ஞாபகத்தில் வைத்திருந்து அவனை எவ்விதத்திலாவது கடிக்கும் வஞ்சினமுடைய ஜந்துவாகும். அதனைத் தெரியாமல் மிதித்தாலும் அல்லது அடித்தாலும் கடித்துத் துன்பப்படுத்துமேயன்றி தானாக ஒருவரை கடிக்க வேண்டுமென்று கருதி செய்யுந் தன்மையுடையதல்ல. அதன் ஞாபக சக்தியைப் பற்றிய கதைகள் பலவுண்டு. ஆதலால் சர்ப்பங்களை அடித்துத் துன்பப்படுத்தக்கூடாது. இதனை அடித்துக் கொன்றவர்களுக்குப் பிறவிகள்தோறும் புத்திரப்பேறு இல்லாமல் போகுமென்பது பெரியோர் கொள்கை. புத்திரப்பேறு இல்லாதவர்கள் எல்லோரும் பூர்வத்தில் நாகத்தைக்கொன்றவர்கள் என்று சொல்ல முடியாது. இதனை வேதத்தின் அங்கங்களில் நேத்தராங்கமாகிய சோதிட சாஸ்திரத்தின் உதவியினால் நன்கு அறிந்துகொள்ள இயலும்.

முற்காலத்தில் தட்சன் இந்திரனிடம் செல்லுகையில் தன் குமாரனை அழைத்துக் கொண்டுபோய் அளகாபுரியின் (குபேரபட்டினம்) அருகில் நிறுத்திவிட்டு தான் உட்சென்றனன். அப்போது அரம்பையின் மனைவாயிலுக்குக் குறுக்காக ஒரு பாம்பு (தட்சன் குமாரன்) இருப்பதைக் கண்டு நளகூபரன் (குபேரன் மகன்) தன் கைவாளால் வெட்டினான். அதைக் கண்ட தட்சன் நளகூபனைப் பாம்பு கடித்து இறக்கும்படி சபித்து விட்டுத் தன் புதல்வனை மிருதசஞ்சீவினியால் உயிர்ப்பித்துக் கொண்டு போனான். அந்நளகூபரன் அம்சத்தில் பிறந்தவனே அரிச்சந்திரனுடைய செல்வனாகிய லோகியதாசன். ஆதலால் பூர்வ ஜென்ம சாபத்தினால் பாம்பு கடித்திறந்தனன் என்ற புராண சரிதம் உலகறிந்த உண்மை.

"தத்தோஷ பரிகாரார்த்தம் நாகபூஜாம் ஸமாரபேத்
ஸ்வக்ருக் யோக்த விதாநோ ப்ரதிஷ்டாங்கார யேத்ஸ்ஃதீ:
நாகமூர்த்திஞ் சுவர்ணேநக்ருத்வாம் பூஜாம் ஸமாரேத்
கோ பூ தில ரண்யாதி தத்யாத் வித்தாநுஸாரத:
எவங்க்ருதேது நாகேந்த்ர ப்ரஸாதாத்வர்த்ததே குலம்".

என்னும் வசனப்படி நாகதோஷ நிவர்த்தியின்பொருட்டு அவசியம் நாகப் பிரதிஷ்டை செய்து திரிகரணசுத்தியாய் அவரவர்கள் கீயோக்தத்தின்படி மந்திர பூர்வாகபூஜாதிகளை நடத்திப் பொன்னால் செய்த சர்ப்பத்தையும் பூசித்து, பசு - பூமி - எள் - பொன் இவைகளைத் தமது சக்தியானு சாரமாக உத்தம புருஷர்களாகிய மகான்களுக்குத் தானஞ் செய்தால் நாகேந்திரனாகிய ஆதிசேஷனுடைய அனுக்கிரகத்தால் சந்நதி விருத்தியாய் குலவர்த்தனை யாகுமென்று அறிய வேண்டியது.

சான்று செய்யுள்

"உண்டாமைந் தாம்வீட்டோ னாறா மாதி
உடன்கூட்டி நல்லோர்கண் ணுறாம னிற்க
அண்டாத சத்துருசா பத்தினாலே
ஆனதொரு மகவில்லை யைந்தாம்வீட்டில்
மிண்டாக வைந்தாதி யிருக்கநல்லோர்
விழிபார்வை யறத்தீயோர் மிகவுநோக்கிக்
கண்டார்க ளெனிற்றெய்வ சாபத்தாலே
காளையர்க ளிலையோம கன்மஞ்செய்ய"

(நடராசர், சாதக அலங்காரம், முதல் பதிப்பு, செ.எ 621, ப. 571)

இவ்விதமாக மூலநூல் பழைய பதிப்புரை சத்துரு சாபம், தோடம், புத்திர சாபம், தோடம் இவற்றினைப் பற்றியும் இதனை நீக்கும் பரிகாரம் பற்றிய விரிவான சித்தர்கள் செய்தியையும் விளக்குகின்றது. இதனைக் கற்போர் கேட்போர் பயன் அடைவர்.

புதிய பதிப்புரையில் **"சாதக அலங்காரம் மூலமும் ஆதி விரியுரையும்"** எனும் நூலில், **மிண்டாகனவந்தாதி யிருக்கநல்லோர், விழிப்பார்வையறத் தீயோர்மிகநோக்கி:**

என பிழைபட செய்யுளடி அமைந்துள்ளது. ஐந்தாம் வீட்டுக்குடையோன் ஆறுக்குடையவனோடு சேர்ந்து நல்லோர் பார்வைபெறாதிருந்தால் சத்துருசாபத்தால் மகவில்லையாம், ஐந்தில் ஆட்சியாக ஐந்தாம் வீட்டிலிருந்து சுபர் பாராமல் பாவிகள் பார்க்கத் தெய்வ சாபத்தால் கர்மமேலிட்டு ஓமகர்மஞ் செய்ய பிள்ளையில்லையாம் என்று பொருளுரை அமைந்துள்ளது. விளக்கங்கள் பழைய பதிப்புரையின்படி அமையவில்லை.

எனவே பழைய உரைகள் சோதிடத்தின வளர்ச்சி நிலைக்கு உறுதுணையாய்

நிற்கின்றன. புதிய உரைகள் தகுந்த விளங்கங்கள், சரியான செய்திகளை தரவில்லை. ஆதியில் ஓலைச் சுவடியிலிருந்து அடிப்பெயர்த்து எடுத்து எழுதியிருந்தாலும் பழைய உரைகள் தரம் வாய்ந்ததாய் உள்ளன. பழமையைப் போற்றுவோம்!

மனை சாத்திரமும் அறிவியல் கூறுகளும்

ஏ. ஜெயக்குமார், ப. கல்விராயன்

முன்னுரை

மனிதனாகப் பிறந்த ஒவ்வொருவருக்கும் உணவு, உடை, உறைவிடம் இவை மூன்றும் அடிப்படைத் தேவையாகும். இம்மூன்றும் இயற்கைக்கு ஏற்றவாறு இருந்தால் மனிதனின் வாழ்வு ஆரோக்கியமான மகிழ்ச்சியான வாழ்வாக அமையும். அவ்வாறுதான் மற்ற உயிரினங்கள் அனைத்தும் இயற்கைக்கு ஏற்ப தம் வாழ்வை அமைத்து இன்பமாக வாழ்கின்றன. ஆனால் மனிதன் மாறிவிட்டான், இயற்கையை விட்டு வெகுதூரம் விலகிச் செல்கிறான். அதனால் தான் புதுப்புது நோய்களுக்கும் உளவியல் பிரச்சினைகளுக்கும் ஆளாகின்றான். அதற்கு மிக முக்கியக் காரணம் அவன் வாழும் வீட்டின் அமைப்பே.

வாஸ்து என்பது இன்று தோன்றியது அல்ல இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தமிழர்களால் அறிவியல் கண்ணோட்டத்தோடு காணப்பட்டு வந்துள்ளன. சங்க இலக்கியமான பட்டினப்பாலை, நெடுநல்வாடை ஆகிய இரண்டு நூல்களும் இக்கூற்றுக்குச் சான்றாக அமைகின்றன. சிலப்பதிகாரம் பருவ காலத்திற்கு ஏற்ப தங்குவதற்கு ஏழு மாடங்களைக் கொண்ட இல்ல அமைப்பைச் சுட்டுகிறது. சித்தர்களும் இயற்கைச் சக்திகளைப் பெரும் வகையில்தான் கட்டடத்தின் அமைப்பு இருக்க வேண்டும் என்றும் அவற்றை அமைக்கும் விதிகளையும் முறைகளையும் ஓலைச் சுவடிகளில் எழுதி வைத்துள்ளனர். இதனடிப்படையில், மனையடி சாத்திரத்தில் காணப்படும் அறிவியல் கூறுகளை இக்கட்டுரை ஆராய்கின்றது.

ஐம்பூதங்களும் மனிதனும்

மனித உடல் பஞ்ச பூதங்களின் அடிப்படையில் அமைந்துள்ளது. பஞ்ச பூதங்களாகிய நிலம், நீர், நெருப்பு, காற்று, ஆகாயம் என்பன மனித உடலோடு பின்வருமாறு பொருந்துகின்றன.

நிலம் – மனித உடலானது நமது அனைத்துச் செயல்களுக்கும் ஆதாரமாக இருப்பதால் இந்த உடலே நிலமாக அமைகின்றது. நீர் – உடலினுள் ஓடிக்கொண்டிருக்கும் இரத்த ஓட்டம் நீராக அமைகின்றது. நெருப்பு – உடலுக்கு வெப்பமானது சூரியன் வழியாகக் கிடைக்கின்றது. இது உடலின் உஷ்ணமானது இரத்த ஓட்டத்தினால் நரம்பு மண்டலங்களின் வழியாக உற்பத்தியாகின்றது. காற்று–காற்றானது மனித உடலில் உள்ள இரத்தத்திலுள்ள கழிவுகளை அகற்றி கரியமில வாயுவாக வெளியேற்றிப்

பிராண வாயுவை உடலினுள் கொண்டு செல்லுகிறது. ஆகாயம்– காற்றானது மனித உடலில் ஒன்றியிருக்கும் உயிரே ஆகாயம் எனும் விண்ணாக நமது உடலில் இருக்கின்றது.

இவ்வாறு ஐம்பூதங்களின் கலவையான மனிதனை ஐம்பூதங்களே தமது சக்தியைக் கொண்டு பாதுகாத்து அவனை ஆரோக்கியமுடன் வாழச் செய்வதனை மேற்கண்டதன் மூலம் அறியலாம்.

ஐம்பூதமும் மனையும்

1. நீர்– இது வீட்டின் ஈசானிய மூலையைச் சார்ந்து உள்ளது. அதாவது ஒரு கட்டிடத்தின் வடகிழக்குப் பகுதியைக் குறிக்கும். நீரின் தன்மை நிறைந்த பகுதி கிணறு, (போர்வெல்) கீழ்நிலை தண்ணீர் தொட்டி, நீரூற்று, நீச்சல்குளம் ஆகியவை இங்கே அமைவது நல்லது.

2. நெருப்பு– வீட்டின் அக்னி மூலையைச் சார்ந்த பகுதி. அதாவது கட்டிடத்தின் தென்கிழக்கு பகுதியைக் குறிக்கும். நெருப்பின் தன்மை நிறைந்த பகுதி. சமையலறை, அடுப்பு, பாய்லர், கொதிகலன்கள், மின்சக்தி, உற்பத்தி இயந்திரம் போன்றவை இந்த மூலையில் தான் அமைய வேண்டும்.

3. நிலம்– வீட்டின் நைருதி மூலையில் உள்ள பகுதி சார்ந்தது. ஆதாவது கட்டிடத்தின் தென்மேற்கு மூலையைக் குறிக்கும். அதிக பாரமான பொருட்கள், அதிக எடை கொண்ட பொருட்கள், உயரமான கட்டிடம், பெரிய மரம் மேல்நிலைத் தண்ணீர் தொட்டி, ஹெட்ரூம் போன்றவை இங்கே அமைய வேண்டும்.

4. காற்று–வீட்டின் வாயு மூலையைச் சார்ந்த பகுதி. அதாவது ஒரு கட்டிடத்தின் வடமேற்கு பகுதியைக் குறிக்கும். காற்று இல்லையேல் உலகில் ஜீவனே இல்லை. எனவே காற்றோட்டம் அதிகமுள்ள திறப்புகள் சன்னல்கள் வைக்கும் இடம்.

5. ஆகாயம்– வீட்டின் வெட்ட வெளியை சார்ந்த பகுதி அதன் குணம் அந்த மனையின் அமைப்பிற்கு ஏற்ப அமையலாம். மனையின் நடுவே பிரம்மஸ்தானம் ஆகாயம் என்று கருதப்பட்டது. வீட்டிற்கும் வீட்டின் சுற்றுச்சுவருக்கும் உள்ள இடைவெளி, ஜன்னல் கதவுகளின் திறப்பு, முட்டம், பால்கனி ஆகியவற்றின் அமைப்பை சார்ந்தது.

இவ்வாறு ஐம்பூதங்கள் வீட்டில் ஒவ்வொரு பகுதிக்குரியதாக அமைந்து அவற்றின் பலன்களைத் தருகின்றன.

வாஸ்து

வாஸ்து என்பது பஞ்ச பூதங்களின் சக்தியைச் சரியான முறையில் வீட்டிற்குக் கிடைக்கும் வகையில், கட்டடங்களை அமைத்து வீட்டில் உள்ளவர்களை நலம் பெறச் செய்யும் கலை ஆகும். சுருங்கக் கூறின் இயற்கையின் இயல்புக்கு ஏற்ப இல்லத்தை அமைக்கும் அறிவியல் கலையே வாஸ்துவாகும்.

சூரியன்

சாத்திரங்கள் அனைத்தும் சூரியனை ஆண் என்று குறிப்பிடுகின்றன. சந்திரனைப் பெண் என்று சுட்டுகின்றன. விஞ்ஞானமும் சூரியனை இவ்வுலகத்தின் இயக்கத்திற்குப் பெரும்காரணம் என்று கண்டு தெளிந்துள்ளன. வாஸ்து சாஸ்திரம் கிழக்குத் திசையை ஆணுக்குரிய திசையாக குறிப்பிடுகின்றன. அதனால் தான் வாஸ்து சாஸ்திரம் ஆணுக்கு ஆற்றல் அதிகம் வேண்டுமென்றால் சூரியனின் ஒலி வீட்டில் படவேண்டும் என்று குறிப்பிடுகின்றன. இதன் மூலம் சாஸ்திரம் என்பது அறிவியலைச் சார்ந்தது என்பது புலனாகின்றது.

மனித வாழ்வுக்கும் செயலுக்கும் சூரிய கதிர் வீச்சின் அளவு அதிகம் தேவைப்படுவதால் தான் வீட்டின் கிழக்கு பகுதியில் காலியிடம் விடவேண்டும். சூரியன் உதிக்கும் திசை கிழக்கு என்றும், மாலையில் மறையும் திசை மேற்கு என்றும் குறிக்கிறோம்.

காலை சூரியன் அல்ட்ரா வைலட் கதிர்களை வீசுகிறது. பகலின் மற்ற நேரத்தைக் காட்டிலும் அதிக ஒளியும் குறைந்த வெப்பமும் உள்ளது. இக்கதிர், வீட்டினுள் உள்ள கிருமிகளை அழிக்கக் கூடியது. வைட்டமின் டி உற்பத்திக்கு காரணமாக உதவுகிறது.

வாஸ்து சாஸ்திரத்தில் கூறியுள்ள படி அதிக இடமும் அதிக கதவுகளும் அதிக ஜன்னல்களும் அதிக பால்கனிகளும் தாழ்வாரங்களும் அதிக காலி இடமும் வடக்குத் திசையிலும் கிழக்குத் திசையிலும் அமைக்க வேண்டும். காலையில் சூரியனின் ஒளிக்கதிர் தடையின்றி வீட்டினுள் வீசும் படி அமைக்க வேண்டும்.

வாஸ்துவின் தொன்மை

வாஸ்து கலை என்பது இன்று தான் பிரபலம் என்று பெரும்பாலானோர் கருதுகின்றனர். அன்றைய கால மக்கள் நல்ல முறையில் வாழவில்லையா? வாழ்ந்தார்களே என்று தர்க்கத்தில் ஈடுபடுகின்றனர். அன்றைய காலத்தில் நம் முன்னோர்கள் இதைப் பற்றிய விளக்கங்களை அறிந்திருந்தனர். அதனால் தான் தலைமுறை தலைமுறையாக இவற்றைப் பின்பற்றி வந்தனர்.

பண்டைய கால வீடுகளில் நில அமைப்பு எந்த முறையில் இருந்தாலும் முன் வாசல் ஒன்றும் பின்வாசல் ஒன்றும் கட்டாயம் அமைத்திருந்தனர். இதன்

நுணுக்கம் தவறான நீச்சவாசல் இருந்தாலும் அதற்கு நேர் எதிரான உச்ச வாசல் வைப்பதாலேயே பல பிரச்சினைகளும் அக்காலத்தில் தவிர்க்கப்பட்டன. மேலும் அக்கால மக்கள் பெரும்பாலானோர் குடிசைகளில் வாழ்ந்தனர். குடிசையும் சூரிய திசையை நோக்கியே கட்டப்பட்டது மேலும் சூரிய ஒளியின் ஒளிக்கற்றைகள் வீட்டின் உள்வரை சென்று நல்ல சக்தியைப் பரப்பியது. இதுவும் அக்கால மக்கள் ஆரோக்கியமாக வாழ ஒரு காரணமாக இருந்தது.

புத்தர், ஒரு பெண்மணி அளித்த பாயாசத்தை கிழக்கு நோக்கி உண்டதாகவும், அவர் ஞானம் பெறும்போது போதிமரத்தின் வடமேற்கு திசையில் அமர்ந்து ஆராய்ச்சி செய்தார் என்பதும் வரலாற்றில் அறியப்படுகிறது. இதன் மூலம் வாஸ்து என்பது முற்காலம் தொட்டு பயின்றுவந்துள்ளன என்பதை அறியலாம்.

பிரம்மஸ்தானம்

மனிதனின் புவி ஈர்ப்பு ஸ்தானம் தொப்புள் பகுதிதான். மனையின் பிரம்மஸ்தானம் மனையின் மத்தியப் பகுதியில் உள்ளது. மனையின் அகலத்தில் மூன்றில் ஒரு பகுதி பிரம்மஸ்தானமாக கருதலாம். கட்டிடத்தில் குறைந்தது அகலத்தின் கால் பகுதியாவது நிச்சயமாக பிரம்மஸ்தானமாக விடப்பட வேண்டும்.

திசைகள்

கிழக்கு மேற்கு

கிழக்குத்திசையில் சூரியன் உதித்து மேற்குத் திசையில் மறைவதால் இவ்விரு திசைகளையும் ஆண்களின் திசை என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகின்றது.

வடக்குத் தெற்கு

வடக்கு தெற்குத் திசையினைப் பெண்களுக்குரிய திசையாக வாஸ்து சாஸ்த்திரம் சுட்டுகின்றது. இவ்வாறு திசைகளை ஆண் திசை என்றும் பெண் திசை என்றும் பிரித்து வாஸ்து சாஸ்திரம் பலன்களை மிக நுட்பமாக கணித்துக் கூறுகின்றது.

வடகிழக்கு

அனைத்துப் பிள்ளைகளுக்கும் உரிய திசையாகும். தென்மேற்குத் திசை ஒரு குடும்பத்தின் மூத்த குழந்தையைக் குறிப்பிடுகின்றது. தென்கிழக்குத் திசை ஒரு குடும்பத்தின் இரண்டாவது குழந்தையைக் குறிப்பிடுகிறது. வாயுவியம் எனப்படும் வடமேற்குத் திசை ஒரு குடும்பத்தின் மூன்றாவது குழந்தையைக் குறிப்பிடுகின்றது.

எண்திசைகள்

வடக்கு– செல்வத்தின் தன்மை, மகிழ்ச்சி, அறிவு ஆற்றல், பெண்களின் வாழ்க்கை ஆகியவற்றைக் குறிக்கும் திசை.

வடகிழக்கு–உடல்நலம், அறிவு, முன்னேற்றம், புகழ் செல்வம் வம்ச விருத்தி ஆகியவற்றைக் குறிக்கும் திசை.

கிழக்கு– ஆண்களின் உயர்வுக்கும், புகழுக்கும் உரிய திசை,அறிவு ஆற்றல் தந்தை கௌரவம், பதவி ஆகியவற்றைக் குறிக்கும் திசை.

தென்கிழக்கு– சுபகாரியம், பெண்களின் உடல் நலம், ஆண்களின் நன்நடத்தை காமம், கலைகளில் தேர்ச்சி ஆகியவற்றைக் குறிக்கும் திசை

தெற்கு– பெண்களின் தன்மை (தாய், மனைவி, மகள்) நீதி, நேர்மை உடல் ஆரோக்கியம் ஆகியவற்றைக் குறிக்கும் திசை.

தென்மேற்கு– புத்திரபாக்கியம், குடும்பத் தலைவன், மூத்த மகன், மூத்த மகள் ஆகியவர்களின் குணங்கள் உடல் நலம் (ஆண்,பெண்) நல்லெண்ணம், தொழில் ஆகியவற்றைக் குறிக்கும் திசை.

மேற்கு ஆண்களின் புகழ், கௌரவம், உடல்நலம் ஆகியவற்றைக் குறிக்கும் திசை.

வடமேற்கு– குடும்ப உறவுகள், உடல் உறவுகள், மனநிம்மதி, நட்பு, வியாபாரம், வழக்குகள், அந்தஸ்து ஆகியவற்றைக் குறிக்கும் திசை.

இவ்வாறு ஒவ்வொரு திசையும் ஒவ்வொரு செயலுக்குக் காரணமாக அமைகின்றன.

வாயில்கள்

நல்ல எண்ணத்தைத் தரக் கூடிய வாயில்களை உச்ச வாயில்க்ள் என்றும் தீய எண்ணத்தைத் தரக்கூடிய வாயில்களை நீச்ச வாயில்கள் என்றும் வாஸ்து சாஸ்திரம் குறிப்பிடுகின்றன. உச்ச நீச்சம் என்பது கோள்கனின் கதிர்கள் வீட்டில் விழும் பகுதியை வைத்துக் கணிக்கப்படுவதாகும்.

பாவ கிரகங்களாக எண்ணப்படும் சனி, செவ்வாய் போன்ற கோள்களின் கதிர்கள் விழக்கூடிய தெற்கு, மேற்கு பகுதியில் உள்ள இடங்கள் உயிர்ந்தும், இடம் குறைந்தும், அடைபட்டும் இருக்க வேண்டும். அவ்வாறு அமைந்தால்தான் கெடுதல் நீங்கி நன்மை உருவாகும். இல்லையென்றால் தீமையே உருவாகும் என்று வாஸ்து சாஸ்திரம் குறிப்பிடுகின்றன. நல்ல கிரகங்களாக எண்ணப்படும் சூரியன் புதன் போன்ற கோள்களின் கதிர்கள் விழக்கூடிய கிழக்கு, வடக்குப் பகுதிகள் அதிக இடம் கொண்டும், கணம் இல்லாமலும் காற்றோட்டம் கொண்டதாகவும் அமைய வேண்டும். அப்பொழுதுதான் அக்கதிர்களின் ஒளிகளைப் பெற்று வீடு நல்ல பலனைத்

தரும் அதற்கு மாறாக அமைந்தால் தீயவிளைவுகளை ஏற்படுத்தும் என்று வாஸ்து சாஸ்திரம் கூறுகின்றது. இவ்வாறு கோள்களின் இலக்கத்திற்கு ஏற்ப பருவநிலை மாற்றுவதும் பருவநிலைக்கு ஏற்ப மனிதனின் உடல்நிலை, வாழ்க்கைமுறை ஆகியன மாறுவதும் அனைவரும் உணர்ந்த ஒன்றாகும். இவ்வாறாக வாஸ்து என்பது அறிவியல் பூர்வமானது என்பதும் மூடநம்பிக்கைக்கு அப்பாற்பட்டது என்பதையும் அறிய இயலுகின்றது.

உச்ச வாயில்கள்

அ. வடக்கு வடகிழக்கு சார்ந்த பாகம்

ஆ. கிழக்கு வடகிழக்கு சார்ந்த பாகம்

இ. தெற்கு தென்கிழக்கு சார்ந்த பாகம்

ஈ. மேற்கு மற்றும் மேற்கு சார்ந்த வடமேற்கு

நீச்சவாயில்கள்

அ. கிழக்கு சார்ந்த தென்கிழக்கு

ஆ. தெற்கு சார்ந்த தென்மேற்கு

இ. மேற்கு சார்ந்த தென்மேற்கு

ஈ. வடக்கு சார்ந்த வடமேற்கு

கதவுகளுக்குப் பொதுவான விதிகள்

வீட்டின் உட்புறமாகத் திறக்கும் வகையிலேயே கதவுகள் அமைக்கப்பட வேண்டும். அறைகளின் கதவுகளும் உட்புறமாகவே திறக்க வேண்டும்.

வீட்டின் தலைவாசலைத் தொடர்ந்து அணைத்துக் கதவுகளும் ஒரே வரிசையில் இருக்க வேண்டும். அதுபோலக் கதவுகள் வைக்க இயலாவிட்டால் ஜன்னல்களையாவது வைக்க வேண்டும்.

வடக்கு நோக்கிய கதவின் மேற்குப் பாகத்தில் கீழ் வைத்து அதைச் சுவரில் மாட்ட வேண்டும். இதனால் கதவு இடமிருந்து வலமாகத் திறக்கும். கீலை வேறு பக்கம் வைத்துத் திறக்கும் போது கதவு வடக்கு ஈசானியத்தைத் தொட்டால் பெண்குழந்தைகளுக்கும் கெடுதல் ஏற்படும்.

கிழக்கு நோக்கிய கதவின் தெற்குப் பாகத்தில் கீல் வைத்து அதைச் சுவரில் மாட்ட வேண்டும் அதால் கதவு வலமிருந்து இடமாகத் திறக்கும். கீலை வேறு பக்கம் அமைத்துத் திறக்கும் போது அது வடக்கு ஈசானியத்தைத் தொட்டால் பெண் குழந்தைகளுக்கும் கிழக்கு ஈசானியத்தைத் தொட்டால் ஆண் குழந்தைகளுக்கும் கெடுதல் ஏற்படும்.

தெற்கு நோக்கிய கதவின் மேற்குப் பாகத்தில் கீல் வைத்து அதைச் சுவரில் மாட்ட வேண்டும். அதனால் கதவு வலம் இருந்து இடமாகத் திறக்கும்

கீலை வேறு பக்கம் அமைத்துத் திறக்கும் போது அது தெற்குச் சுவரைத் தொடலாம். அக்னியைத் தொட்டால் தீய பலன்கள் ஏற்படும்.

மேற்கு நோக்கிய கதவின் தெற்குப் பாகத்தில் கீல் வைத்து அதைச் சுவரில் மாட்ட வேண்டும். இதனால் கதவு இடமிருந்து வலமாகத் திறக்கும். கீலை வேறு பக்கம் அமைத்துத் திறக்கும் போது அது வாயு மூலை யில் மோதினால் பணக் கஷ்டமும் வழக்குகளும் ஏற்படும்.

வீட்டுக் கதவுகளின் நிலைகளைக் கருங்கல்லால் அமைக்கக் கூடாது. இவ்வாறு கருங்கல்லை அமைப்பது பொதுக் கட்டடங்களுக்கு மட்டுமே அனுமதிக்கப்படுகிறது.

கொஞ்சம் கூடக் காற்று இல்லாமல் கதவு தானாகவே திறந்தால் மனச் சஞ்சலங்கள் ஏற்படும். கொஞ்சம் கூடக் காற்று இல்லாமல் கதவு தானாகவே மூடினால் வம்ச வளர்ச்சி பாதிக்கப்படும்.

கதவுக்கு இரண்டு புறங்களிலும் தலை சமமாக இருக்க வேண்டும்.உயர்ந்தும் தாழ்ந்தும் இருந்தால் பெண்களுக்கு மலட்டுத்தன்மையும், குழந்தைகளின் முன்னேற்றத்துக்குத் தடங்கலும் ஏற்படும்.

பூமியின் அடித்தளத்தில் அறை அமைக்கப் படுவதாக இருந்ததால் கிழக்குப் பகுதியில் அல்லது வடக்குப் பகுதியில் அல்லது வடகிழப்பகுதியில் அமைக்கப்பட வேண்டும்.

முடிவுரை

வாஸ்து என்பது ஒரு வீடு எவ்வாறு அமைய வேண்டும் ஒரு வீட்டின் அமைப்பு எவ்வாறு இருக்க வேண்டும் என்பதையும் எவ்வாறு இருக்கக் கூடாது என்பதையும் மிகத்தெளிவாகக் குறிப்பிடுகின்றன. ஒரு கட்டடம் சரியாக அமைந்தால் நன்மையும் மாறாக அமைந்தால் தீமையும் தரும் என்பதையும் மிகத் தெளிவாக அறிவியல் அடிப்படையில் விளக்குகின்றன. வாஸ்து என்பது மூட நம்பிக்கைக்கு அப்பாற்பட்டு இயற்கையின் உண்மைகளைக் கண்டு அதன் தன்மைக்கு ஏற்ப வீட்டின் வடிவங்களை அமைத்து வாழச் செய்யும் ஒரு அறிவியல் சார்ந்த கலையே என்பதை இக்கட்டுரையின் வயிலாக அறியலாம்.

மந்திரச் சுவடிப் பதிப்புகள்

டி.சி. சந்திரசேகர்

முன்னுரை

மானிட வாழ்வில் இறைவனைப் பூசிக்கும் முறை இரு வகைப்பட்டது. ஒன்று பக்தியால் பூசிப்பது, மற்றொன்று மந்திரத்தாலும் எந்திரத்தாலும் பூசிப்பது. இம்முறையே சித்தர்கள் பூசித்தார்கள். ஆதியில் கிரந்த சமஸ்கிருதம், தேவ மொழிகளாகத் திகழ்ந்தன. இதில் எந்திரத்தில் கிரந்தமும், எண்களும் பீஜாட் சாத்திரங்கள் அடைக்கப்பட்டு உச்சாடமாக மந்திரங்களால் பூசிக்கப் பெற்றது.

இவ்வழியில் மந்திர ஒலி சப்தம் இறைலோகத்தில் கேட்கப் பெற்றது என்று கூறுவர். இதற்கு வலிமை அதிகமுண்டு என்று சாத்திரம் கூறுகிறது. இதுவே ஆதி முதல் இன்று தொட்டு புழக்கத்தில் புழங்கி வருகின்றது.

இதில் இருவகைப்பட்ட தன்மையுண்டு. ஒன்று அதர்வண வேதமுறை சான்ற உப தெய்வங்கள் என்று சொல்லப்படுகின்ற முறையில் மந்திர உச்சாடனங்கள் உண்டு. இரண்டாவது ஞான முறையைச் சார்ந்த தெய்வங்களைப் பூசிக்கும் மந்திர முறைகளும் தபஸ் முறைகளும் உண்டு. இதில் முதன் முறையாக உப தெய்வ மந்திரங்கள் பெரும்பாலும் காஷயாத்தில் (சுடுகாடு) பயிற்சி பெற்று பயன்படுத்தப்படுகின்றன. இதையே ஒரு சாரர் ஆர்வமாகப் பயன்படுத்தத் தொடங்கி வாழ்ந்தனர். இம்முறை பெரும்பாலும் மக்களுக்கு அச்சத்தை ஏற்படுத்தியதுடன் “மந்திரவாதி'' என்றால் ஓர் அச்சமும் ஏற்படுத்தியது.

ஞான முறையான மந்திரங்கள் தெய்வங்களைக் கொண்டு முறையாகப் பூசிக்கப்பட்டன. இம்முறை சுத்த மந்திரமாக கருதப்பட்டது. இம்முறையில் பயன்படுத்த மிகு நேர்மை, அதி சத்தியம், அதி உண்மை, பரந்த நிஷ்காமிய மனம் தேவை. இதைக் கையாளும் சித்தி வித்தியார்த்திகள் குருகுலம் வாசம் செய்து சற்குருவாகிய சித்தர்கள் கீழ் பயிற்சி பெற்று உலகத்தில் வழிவழியாக கையாளப்படுகின்றது.

இறைவனின் லோக பரமபத ஆளுகையின்கீழ் மானிடர்களைப் படைத்து நல்வினை தீவினைகளைப் புரிய வைக்கப்

பெற்று அதன் கரும வினைப்படி நன்மைகளும் தீமைகளும் மக்களை அடையப்பெற்று அதன் பலாபலன்களை அருளினர்.

வினைப் பயனாக முற்பிறவியில் செய்த வினைகளும் இப்பிறவியில் செய்த வினைகளும் ஒருங்கே அடையப் பெற்று மானிடர்களுக்குத் துன்பத்தின் சாயலாக வாழ்வில் தடைகளும், கட்டங்களும், வறுமைகளும், நோய்களும், முன்னேற்றமின்மையும் ஏற்பட்டன.

அடையப் பெற்று துன்பப்படுகிறார்கள் இவையெல்லாம் நீக்கப் பெற்று நலம் பெற்று வாழ இறைவன் மந்திரங்கள், எந்திரங்கள் இவை மூலம், சுபிஷம் பெற அருள்பாலினார். இதைத் தயாரிப்பவர்களுக்கும், பயன்படுத்துவர்களுக்கும் நேர்மை, நாணயம், தூய பக்தி, கட்டாயமாகிறது.

மந்திரங்களின் அசாத்திய பலத்தைப் பற்றிக் காண்போம்.

மந்திரங்களின் சப்தங்கள் இறை லோகத்தில் இறைவனால் கிரகிக்கப்படுகிறது. கரும வினையானது இரு பிரிவாகச் செயல்படு கிறது. 1. ஒன்று எளிய கருமம், 2. வலுத்த கருமம் எனப் பிரிவுபடு கின்றது.

எளிய கருமம் என்பது பூசைகளால் (சுலபமாக) நீங்கப் பெறுகிறது. வலுத்த கருமங்கள் ஆனவை அரிய நுட்ப முறையில் மட்டுமே நீக்கும் தன்மையை அடைகிறது. இதன்படி வலுப்பெற்ற மந்திரங்களால் மட்டுமே நன்மையை அடைய முடிகின்றது. இம்மந்திரங்கள் சித்தர்களால் வரையப் பெற்று இதையே பாராயணம் செய்யும் போதும், பிரயோகிக்கும் போதும், சத்தியம், நேர்மை, யோகம் கொண்டவர்களால் மட்டுமே வலிமைபெறும். இம்மந்திரங்கள் முறையற்ற வழியில் தெரியப்பெற்றாலும் அதைத் தெரிந்து கொண்டவர்கள் பிரயோகப்படுத்தி வெற்றி காண முடியாது.

ஞான முறைகளை அடைய இயமமும், நியமமும், யோகமும் உடையவர்களால் மட்டுமே சாத்தியமாகும். இதற்குத் தனி மனித ஒழுக்கமும், கட்டுப்பாடும், பிறருக்கு நன்மை செய்ய வேண்டும் என்ற தூய நோக்கமும் இருப்பது அவசியம்.

பொதுவாகச் (கூறிய) சாத்திரங்கள் மூலம் ஆராயுங்கால் பூர்வ ஜென்ம விட்ட குறை, தொட்ட குறைபடி மட்டுமே உணரும் பாக்கியமும், கற்கும் பாக்கியமும் சித்தர்களின் அருளாசியுடன் கிடைக்கின்றன. இம்முறையில் மட்டுமே சாத்திரங்களின், மந்திரங்களின் அர்த்தங்கள் புலப்பட்டு ஞானம், மந்திரம் விருத்திப் பெறுகின்றன.

அப்பொழுது மட்டுமே எந்திர, மந்திரங்களின் வலிமையை நுட்பமாகப் பார்வையில் காண வலிமை பெறுகின்றது. அதேப்போல் எந்திரங்களின் அசாத கதிர்வீச்சும், உணரபெற்று காணப்பெறும் பாக்கியமும் கிடைக்கின்றது.

1. ஞான மந்திரம் துல்லியமாகக் கிடைக்க வேண்டும்.

2. அதை யோகியர் அம்சமாகப் பிரயோகிக்க வேண்டும்.

இத்தூய்மையால் மட்டுமே உலகத்தில் கரும வினைகளின் தீய பலன்களை வேர்அறுக்க முடியுமே அல்லாமல் மற்ற வழிகளின் மூலம் வெற்றி காண முடியாது. இதை அடையப்பெற்ற மானிடர் களுக்கும் மேற்கூறிய இதே ஒழுக்கங்கள் தேவையாகிறது. தனி ஒழுக்கம் அற்றவர்களுக்கு இறைவனால் இம்முறை கிடைக்கப்பெறாமல் போகும். தவறிக் கிடைத்தாலும் அதைப் பயன்படுத்த முடியாமல் போகும். அதுமட்டுமே இன்றி பலன்களை அடைய முடியாமல் போகும்.

இனி மந்திரங்களின் தன்மையைக் காண்போம். மந்திரங் களானது பழங்காலச் சுவடிகளிலிருந்து சான்றோர்களால் படியெடுக்கப்பட்டும், பின்நாளில் அதே புத்தக வடிவமாக இயற்றப் பட்டும், புழக்கத்தில் வந்தது. இதில் பெரும்பாலும் பிழைகளைக் காண்பது அரிது. அதற்கும் பிற்காலத்தில் படி எடுக்கப்பட்ட சுவடிகளில் சிறிது பிழைகளும் இருக்கதான் செய்தது.

அதில் இருந்து இயற்றப்பட்ட நூல் அச்சுகளில் பிழைகள் ஏற்பட்டன. 1960 இல் கையேடுகளாக வந்த நிறைய நூல்களின் பதிப்புகளில் அச்சுப்பிழைகள் அதிகமும் மந்திரங்களிலே பிழைகள் காணப்பட்டும் வரிகள் விடுபட்டும், வார்த்தைகள் விடுபட்டும், கண்டபடிக்கு அச்சு ஆனது. இதன் வழியிலும் தவறான படிப்பினைகள் மக்களுக்கு ஏற்படுத்தப்பட்டது. இதே, காலத்தில் படித்த மக்கள் இதே சரியானது என்று பயன்படுத்திப் பலன் அடையாத நிலையும் ஏற்பட்டது.

மந்திரங்கள் முறையாகத் தவறின்றி கிடைத்து பயன்படுத்தினால் மட்டுமே, வெற்றி காண முடியும். அல்லது அரை குறையாகவும், தவறாகவும் கிடைக்கப்பெற்ற மந்திரங்களால் பலன் கிடைக்காது. மேலும் தோடம் ஏற்படும். சித்தர்களின் கடும் சாபாத்திற்கும் ஆளாக நேரும்.

சித்தர்களின் சாபமானது உதாரணத்திற்குப் பார்க்குங்கால், **காக நின்ற கழுதை பிறப்பு பிறப்பாய், அறிவுநாசம், குலநாசம், பாரம்பரிய பைத்தியம் பிடித்துவிடும், ரோகம் வந்து வாய்க்கும்** என்று சித்தர்களால் கடுமையாக எச்சரிக்கப்படுகின்றது. இதையும் மீறி இக்காலத்திலும் முறைஅற்று பயன்படுத்தியவர்கள் இச்சாபங்களை அடைவதாக நம்பினர்.

கலிகாலத்திலும் இது பலிதம் ஆகிறது. எப்படி நல்லது என்பது இக்கலிகாலத்திலும் நடக்கும் என்றும் சித்தர்களால் வரையறுக்கப்பட்டது. செய்த தவறுகளால் சாபங்களை அடைவார்கள் என்பதும் நிரூபணமாகின்றது.

பொதுவாக (மானிடர்களுக்கு) ஒரு கருமம் அதை நிவர்த்தி முறை மந்திரம் அதுபலிதம் ஆகி நிவாரணம் பெற்று சுபிட்சம் ஏற்படுவதும் மந்திரங்களின் தனித்தன்மையாகத் திகழ்கிறது.

உண்மையிலேயே மந்திரங்கள் என்பது எல்லாவிதக் கட்டங்களுக்கும் மானிடர்களுக்கும் ஒரு சிறப்பு நிவாரண முறைகளாகும். இதன் மூலம் கட்டங்களுக்கும் முறையாகத் தீரத்து கொள்ள முடியும். இதையே பழங்காலத்தில் முன்னோர்கள் பயபக்தியுடனும், ஒழுக்கத்துடனும் பின்பற்றி வாழ்ந்தார்கள்.

அவர்கள் எல்லோருமே எளிய வாழ்க்கை வாழ்ந்தாலும் ஒழுக்க சீலத்தின் காரணமாக மகிழ்ச்சியாக இருந்தார்கள். எவ்வளவோ, பெரிய கட்டங்களைக் கூடக் கடந்து வெற்றி கண்டு நலமாக வாழ்ந்தார்கள்.

மந்திரங்களைப் பற்றி அறிய பல தரப்பட்ட நூல்களை ஆராய வேண்டும். நூலுக்கு நூல் காணும் பிழைகளைப் பூர்வ ஞானத்தாலும் பக்தியாலும் சரிசெய்து கொண்டு அதைப் பயன்படுத்த வேண்டும்.

சுவடியில் சித்தர்கள் கொடுத்த முறைப்படி, எடுத்துப் பயன்படுத்த முடியாது. மேலும் ஒவ்வொரு முறையிலும் நிறைய நுணுக்கங்களை மறைப் பொருளாகக் குறிப்பிட்டிருப்பார்கள். இவை கிடைக்க பெற்றால்தான் பயன்படுத்த முடியும்.

பார்ப்பதற்குப் பயன்படுத்த முடியும் என்ற ஒரு மனோபலம் கிடைத்தாலும் உள் மர்மங்களை அறிந்தால் ஒழிய, முழுமையாகச் செயல்படுத்த முடியாது.

மேலும் சித்தர்கள் எழுதும் முறைகளை, துஷ்டர்களோ, பேராசைக்காரர்களோ, பணம் பண்ணும் சுயநலக்காரர்களோ, கருமிகளோ பயன்படுத்தக் கூடாது என்ற மதி நுட்பத்துடன் எச்சரிக்கையாக எழுதி இருந்தார்கள்.

இவை மானிடர்களுக்கு முற்பிறவியின் விட்ட குறை, தொட்ட குறை நாணயத்தின் காரணமாக அறியப்படுவதும் பல நூல்களிலிருந்து உட்பொருளைத் திரட்டும் அறிவு கிடைத்து, சித்தர்களின் நல்லாசியும் கிடைத்தால் முழுமை அடையும்.

இங்குதான் தனி மனித ஒழுக்கம் தேவைப்படுகிறது. இது மந்திரங்களைப் படிப்பவர்களுக்கும் பலன் அடைபவர்களுக்கும் இவ்வொழுக்கம் மிக தேவையாகின்றது.

இத்தகு பின்னணியில் உள்ள மந்திர சாத்திரங்களை எவரும் எளிதில் அடைந்து விடலாம் என்ற கருத்து பொய்யாகிப் போனது மட்டுமே அல்லாமல் இதை அரை குறையாகத் தீய எண்ணத்துடன் பயின்றவர்கள் நல்ல பலனை மக்களுக்கு ஏற்படுத்தித் தரமுடியாது.

இதைக் கொண்டு தீயவர்கள் உலகை ஏமாற்ற முடியாது.

தானும் முறையாகக் கற்கவும் இயலாது.

சாஸ்திரங்களின் முறைகளை வழி மாற்றியோ அல்லது முறையற்ற வழிகளிலோ எடுக்கப் பெற்றாலும் அது சித்தர்களின் சாபத்திற்கும், பல வித இம்சைகளுக்கும் ஆளாக நேரும்.

அரிய சித்தர்களும் தெய்வங்களும் இதைக் கண்காணித்துக் கொண்டிருக்கும். கண்காணித்து நற்பலன் தீய பலன்களை அருளிக் கொண்டே இருக்கும். இதிலிருந்து யாரும் தப்ப முடியாது. இதுவே, பலத்த இரகசியமாகும்.

பரிகாரங்கள்

மானிடர்களின் கரும வினைகளுக்கு ஏற்ப தூய தெய்வ மந்திரங்களைப் பயன்படுத்தி நிவர்த்தி காணுதல் என்பது இயல்பு. இந்த நிவர்த்தியும் நல்லோர்கள் இன்றி மற்றவர்களுக்குக் கிடைக்காது. இதைச் செய்யும் குருமார்களுக்கும் விதியாளர்கள் யின்றி மற்றவர்களுக்கு செய்து தரும் எண்ணம் வராது. அதுபோல் விதியாளர்யின்றி மற்ற எவரும் இதைப் பெறவோ, நிவர்த்திக்கவோ முன் வரமாட்டார்கள். அவர்களின் கண்களை மறைத்துவிடும்.

அப்படி ஒரு நுட்பம் இம்முறையில் புதைந்திருக்கிறது. இப்பரிகார முறைகளை வெளிநாட்டவர்கள் மிகவும் வன்மையுடன் நேசித்து அதைப் பெறவும் விரும்புகிறார்கள். பெற்ற பிறகும் அதைச் சிரத்தையாகவும் பூசித்து அதை உள்ளன்புடன் பின்பற்றுகிறார்கள். உறுதியாகவும் இருக்கிறார்கள். வெற்றியும் காண்கிறார்கள். இதனால் நுட்பமான சித்தர்களின் பண்பாடும் வெளிநாட்டவர்களுக்கும் கிடைக்கப்பெற்று உண்மை பரிகார ஞானம் உலகில் பரவ வழிவகுக்கிறது.

இதில் சாதி, மத, பேதம் கிடையாது. எந்த வகுப்பினரும் இதைப் பயன்படுத்தலாம். குறிப்பிட்ட கடவுளைக் கொண்டுதான் பூசிக்க வேண்டும் என்பது கிடையாது. அவர் அவர்கள் தங்கள் கடவுளைப் பூசித்து வெற்றி காணலாம். இது ஒரு பழங்கால அதி

நுட்பமுறை ஆதலால் சாதி, மதம், பேதம் இதற்குப் பொருந்தாது. இதே மக்கள் மிகுந்த அன்புடனும் உண்மையுடன் உறுதியுடன் பின்பற்ற வேண்டும். இதனால் நமது கருமவினை நிலையை அறியாமல் வாழ்க்கையில் கட்டத்தில் உழன்று எவ்வித முன்னேற்றமும் இன்றி, செய்வது துயோத திகைக்கும் நிலை உருவாகாது. இதனால் தடங்கல்களும், துன்பங்களும் முன்னேற்ற மின்மையும் நீங்கி சுக வாழ்வு வாழ முடியும்.

இதை உலக மக்கள் அனைவரும் பரமாத்த பரமபத விளையாட்டை உணர்ந்து இவ்வரிய நுட்பங்களைக் கைப்பற்றி உலகில் வாழ்வாங்கு வாழலாம்.

மந்திரங்களின் பொருளை உணர்ந்து கொள்ளுதல் எளிதன்று சொற்பொருள் குறியீட்டுத் தன்மையுடன் பயன்பாட்டில் இருப்பதைப் பின்வரும் மந்திரச் சொற்களும் அவற்றின் பொருட்களும் குறிக்கின்றன.

ஒரு மந்திரச் சுவடியின் வேற்றுப் படிகளில் பல வரிகள் விடுபட்டும், சில சொற்கள் பிழையுடனும் காணப்படுகின்றது. அவற்றைத் திருத்திப் படிக்க வேண்டிய தேவையுள்ளது. இதற்கான சான்று வடிவம் இங்கே காட்டப்படுகின்றது.

	சுவடிச்சொல்	பொருள்
1.	தேசிபல்	குதிரைபல்
2.	தேறல்	தேன்
3.	நிலவேற்	நாக்குபூச்சி
4.	முசுறு	எறும்பு
5.	தண்டு	மூங்கில்
6.	கோணான்	பாகன்
7.	கடம்	சட்டி
8.	வல்சி	சோறு
9.	கலாக்கு	ஆப்பு
10.	காஷ்டம்/காட்டகம்	சுடுகாடு
11.	பலுகாய் போட்டு	இடம் வலமாய் பேட்டு
12.	அக்கு மாலை/அக்கு மணி	செபமாலை/செப மணி/ உத்திராட்சம்
13.	(கற்றெனென்று) கழராதே	கூறிக்கொண்டு திரியாதே
14.	கயிறு	கயிலைமலையாகும்

15.	விள்ளாதே	சொல்லாதே
16.	சேரை	ஒரு உள்ளங்கை அளவு
17.	சம்பழம் சாறு	எலுமிச்சம் பழசாறு
18.	கற்கடகம்	தாமரை நூல்/ நண்டு
19.	காளுடம்	மருந்து புட்டி
20.	அனுராக மயக்கம்	காமமயக்கம்
21.	அல்லம்	இஞ்சி
22.	காண்டிகை	மருந்துப் பெட்டி
23.	ஆ	பசு, வைகாசி
24.	உடை	வேலமரம் (கருவேல்)
25.	வீ	கற்பம் தரித்தல் / சாவு
26.	வீவு	சாவு
27.	ஏதி	வாள்
28.	பிணிமுகம்	மயில், முருகன், யானை, அன்னம், பறவை
29.	சிதலை	நோய்,கரையான்,சீலைதுணி
30.	ஊர்	சங்கு

பாடல்

பொத்தையிலே செய்து மை உருண்டை
தனை பிரித்துக் கொண்டு
செய்யிளையாள் முகங்காண
முதகிலப் போடே

இப்புலியும் நாதமும் கூட்டி அரைத்து
பதறு பண்ணவும்

பெ– இ– ம–உ–உஉ

திருந்திய பாடல்

பொத்தையிலே செய்து மை உருண்டை
தனை பிரித்துக் கொண்டு
செய்யிழையாள் முகங் காண
முதகிலப் போடே
திப்புலியும் நாதமும் கூட்டி அரைத்து
பதறு பண்ணவும்

பெ–இ–ம– உஉஉ

பாடல்

பந்து கொலுத்தகுதிமோடி குபுர எட்ணா
பண வெனது அரசுலுகு மகா மந்திர தியானு
பண்டெடுத்த கோல் போல பால மட்டு

ள–ள–ள–உ

திருந்திய பாடல்

பந்து கொலுத்தகுதிமோடி குபுர எட்ணா
பண வெனது அரசுலுகு மகா மந்திர தியானு
பண்டெடுத்த கோல் போல பால மிட்டு
(வென்று வீரனுக்கு லெச்சமோது)

சிவவாக்கியத்தில் உரைவேறுபாடுகள்

பேரா. முனைவர் க. இளமதி சானகிராமன்
புதுச்சேரி பல்கலைக்கழகம்

ஆன்மீக நெறிகளுடன் அறிவியலையும் பிணைத்ததால் நிறைமொழி மாந்தரென்றும் அறிவரென்றும் போற்றப்பெற்றவர்கள் சித்தர்கள். இவ்வுலகம், உயிர், உடல், உளம் முதலானவற்றின் தோற்ற ஒடுக்கங்களைத் தம் ஞானத்தால் அறிந்து, மனித இனத்தின் மாண்பினைக் காக்க வேண்டியவர்கள். தம்மை வருத்திக் கண்ட உண்மைகளை இச்சமுதாய மக்களும் உணர வேண்டும்; பெறுதல் வேண்டும் என்ற உயரிய நோக்கால் பாடல்களாகப் பாடி வெளிப்படுத்தியவர்கள். உண்மையில் சித்தநெறியில் செல்ல விரும்புபவர்கட்கு மட்டுமே அப்பாடல்களின் பொருள்கள் புலப்பட வேண்டும் என்பதால் மறைபொருள்களில் பல பாடல்களைப் பாடியுள்ளனர். எனவே, சித்தர் பாடல்களுக்கு உரை எழுதுவது என்பது பலருக்கும் எளிய செயலல்ல. சித்தர் பாடல்களைப் பன்முறையும் படித்துப்படித்து, அவற்றின் பொருண்மையைக் குருவின் வாயிலாக அறிந்தவர்களாலும், யோக, ஞானச் செயல் முறைகளில் ஈடுபட்டவர்களாலும், மருத்துவ உண்மைகளை அறிந்து கொண்டோர்களாலும் மட்டுமே அது இயலக்கூடியது. அகத்தியர், திருமூலர், போகர், காகபுசுண்டர், கொங்கணர் முதலான சித்தர்களுள் சிவவாக்கியரும் ஒருவர். இவரது பாடல்கள் பலராலும் படிக்கப்பெற்றும் பேசப்பெற்றும் வருபவை.

சிவவாக்கியரின் பாடல்களைப் பதினெண் சித்தர் பெரிய ஞானக்கோவை, சித்தர் ஞானக்கோவை, சித்தர் பாடல்கள், சிவவாக்கியர் பாடல்கள் மூலமும் உரையும், சிவவாக்கியர் பாடல், சிவவாக்கியம் 1000 என்னும் பல்வேறு தலைப்புகளில் பலர் பதிப்பித்துள்ளனர். தொகுப்பு நூல்களில் முதலாவதாகவும், தனித்த நூல்களாகவும் அவை வெளிவந்து உள்ளன. பாடல்களின் எண்ணிக்கை ஒவ்வொரு நூலிலும் வேறுபடுகின்றது. எழுத்து, சொல், வரி என்ற பல நிலைகளிலும் அதிக வேறுபாடுகள் காணப்பெறுகின்றன. அனைத்து மக்களாலும் சிறப்பாக எடுத்துக் காட்டப்பெறும் இப்பாடல்கள் பிழையற்றவைகளாயும் சரியான பொருளுணர்த்துபவைகளாகவும் இருத்தல் வேண்டும் என்ற உயரிய நோக்கினாலேயே இத்தலைப்பு எடுத்துக் கொள்ளப்பெற்றது.

பாடற் பொருண்மைகள்

சமுதாய மக்களை அலைக்கழித்து வரும் சாதிய சமயங்களை வெறுத்தல், சடங்குகளை வெறுத்தல், தெய்வம் ஒன்று என்பதை உணர்த்துதல், ஏழை எளிய மக்களிடம் இரக்கம் காட்டச் செய்தல், போலிகளை நம்பி ஏமாறுவதைத் தடுத்தல், யோக நெறிகளில் நிற்பதால் ஏற்படும் பயன்பாடுகளை எடுத்துரைத்தல், அனைத்துச் சமயத்தினரும் உய்தியை அடைவதற்குரிய நெறிமுறைகளைக் கூறுதல், பெண்மையைப் போற்றுதல், இல்லறத்தார்க்கு உரிய நெறிமுறைகளைக் கூறுதல் எனப் பலவாறாக இக்காலச் சமுதாயத்தினருக்குத் தேவையான பல சிறந்த கருத்துகளை எடுத்தியம்புவன சிவவாக்கியரின் பாடல்கள். அறிவியல், தத்துவம், யோகம், ஞானம் என்று பல துறைகளையும் தம்முள் அடக்கியன. இத்தகைய அரிய இலக்கியக் கருவூலம் பிழைபட்டுப் போய் இருப்பது தமிழிலக்கியத்திற்கு அவப்பெயரையேயூட்டும். தமிழறிந்த நமக்கும் கேடே விளையும். அவப்பெயரையும் கேட்டையும் நீக்கி உண்மைப் பொருளை உலகுக்கு உணர்த்துதல் இன்றைய கட்டாயத் தேவையாகும்.

இவ்ஆய்விற்கு ஸ்ரீஞானஜோதி சம்பங்கியின் சித்தர் சிவவாக்கியர் பாடல் மூலமும் தெளிவுரையும், மா. வடிவேலு முதலியாரின் சிவவாக்கியர் பாடல் மூலமும் உரையும் எனும் இவ்விரண்டு நூல்களும் எடுத்துக்கொள்ளப்பெற்று, த. கோவேந்தனின் சித்தர் பாடல்கள் - எனும் தொகுப்பு நூலும் கலைச்செல்வி கிருஷ்ணகுமார் என்பவரின் சித்தர் சிவவாக்கியரின் இறைப்புரட்சியும் இனப்புரட்சியும் என்ற நூலும் மேற்கோளுக்காக எடுத்துக்கொள்ளப் பெற்றுள்ளன.

உரைவேறுபாடுகள்

மாயைநிலை

> *“நினைப்ப தொன்று கண்டி லேனீ யலாது வேறிலை*
> *நினைப்பு மாய்ம றப்பு மாய்நின் றமாயை மாயையோ*
> *அனைத்து மாய கண்ட மாய னாதிமுன் னனாதியாய்*
> *எனக்குள் நீயுனக் குள்நா னிருக்கு மாற தெங்ஙனே?”* (பா. 7)

எனும் இப்பாடலுக்கு, ஸ்ரீஞானஜோதி சம்பங்கி,

> “பிரபஞ்சப் பொருள்களாகவும், பிரபஞ்சமாகவும், நினைவாகவும், மறதியாகவுமான மாயையாகவும், எனக்குள் நீயும் உனக்குள் நானுமாக இருக்கின்ற விந்தை என்னே! என்பது கருத்து” (ப. 37)

என்பர். மா. வடிவேலு முதலியார், "நான் எண்ணுகின்ற எண்ணங்களெல்லாம் நீயே முன்னின்று எண்ணுவிக்கின்றாயே யொழிய வேறில்லை. அங்ஙனம் உணரும் என்னுடைய நல்லுணர்ச்சியை ஒரு மாயையானது வெளிப்பட்டு வந்து நினைத்தலாகவும், மீண்டு மறத்தலாகவும் செய்து கெடுத்து விடுகின்றது. அதுவென்ன மாயமோ தெரியாது. ஆனாலும் ஒருவாறு அதை நீங்கிய காலத்தில் சர்வ பொருள்களாகவும் கண்டிக்கப்படாத பொருளாகவும் அநாதிப் பொருளாகவும் உள்ள நீ எனக்குள்ளே கலந்திருக்கின்றதாகவும் நான் உனக்குள்ளடங்கி அடிமைப்பட்டிருப்பதாகவும் தெரியவருகின்றது. அப்படி யிருப்பதால் நான் உன்னை எவ்விடத்தினின்று எப்படி துதிசெய்வதோ எனக்குத் தெரியவில்லை (எ-று) (ப. 10) என்று எழுதுகின்றார். இவ்விரண்டு உரைகளில்,

மாயையை இறையே என்று ஸ்ரீஞானஜோதி அவர்களும் மாயையைத் தனித்த ஒன்றாக வடிவேல் முதலியாரும் கொள்வர். மாயை என்ற ஒன்றைத் தனித்த ஒன்றாகவே பிறசமயவாதிகளும் கொள்வர். நினைக்கச் செய்வதும் மறக்கச் செய்வதுமாகச் செயல்படுவது மாயை என்பதால் வடிவேல் முதலியார் உரைத்ததைச் சரி எனத் தெளியலாம்.

"நான்காவது அடியாக, எனக்குள் நீ உனக்குள் நான் இருக்குமாறது எங்ஙனே" என்று ஸ்ரீஞானஜோதி சம்பங்கிதர, வடிவேல் முதலியார், "எனக்குணீ யுனக்குணா னினைக்குமாற தெங்ஙனே" (ப. 10) என்று அமைப்பர். இவ்வடியும் அதன் பொருளும் சிவவாக்கியரின் பாடற்பொருண்மைக்குப் பொருத்தமாக இல்லை. எனவே, வடிவேல் முதலியார் தந்துள்ள இந்நான்காமடி திருத்தம்பெற வேண்டியது எனலாம்.

உற்பத்தி நிலை

"அண்ணலே யநாதியே அனாதிமுன் அநாதியே
பெண்ணு மாணும் ஒன்றலோ பிறப்பதற்கு முன்னெலாம்
பெண்ணி லாணின் சுக்கிலம் பிறப்பெடுக்கு மாயையில்
மண்ணு ளோரில் விண்ணுளோர் விளங்கவந்த தெங்ஙனே?"

எனுமிப்பாடலுக்கு ஸ்ரீஞானஜோதி சம்பங்கி,

"அநாதி காலமுதலாக இருக்கின்ற முதற்பொருளே! பிறப்பதற்கு முன் ஆன்மா ஆண், பெண் பேதமாகிப் பிறந்த இந்த மாயப் பிறப்பில் மனிதருக்குள்ளே தேவநிலை பெற்ற மனிதர்கள் ஜனிக்கின்ற விந்தை என்ன? என்பது கருத்து என்பர் (ப. 35).

இதே பாடலில், மூன்றாவது, நான்காவது அடிகள் மாறுபட்ட நிலையில் வடிவேலு முதலியார் நூலில் அமைந்துள்ளன.

"கண்ணிலாநிர்ச் சுக்கிலங் கருதியோங்கு நாளிலே
மண்ணுளோரும் விண்ணுளோரும் வந்தவாற தெங்ஙனே"
(ப. 26)

பெண்களும் ஆண்களும் பிறப்பதற்குமுன் கருக்குழியின்கண் சுக்கிலமானது தங்கி வளர்கின்ற நாளில் பெண்களும் ஆண்களும் ஒன்றேயல்லவா? இங்ஙனமிருத்தலால் உலகர்கள் தேவர்கள் என்கிற இருபகுப்பு அக்காலத்தில் இல்லை என்பர். இது பொருந்துவதாகாது. ஆண், பெண் என்ற பேதமும், உலகர்கள், தேவர்கள் என்ற பகுப்பும் எக்காலத்திலும் உள்ளதேயாம் எனவே ஸ்ரீ ஞானஜோதி சம்பங்கி அவர்களின் கருத்தே பொருத்தமுடைய தாகும்.

பூவிலாய ஐந்துமாய்ப் புனலில்நின்ற நான்குமாய்த்
தீயிலாய மூன்றுமாய்ச் சிறந்தகாலி ரண்டுமாய்
வேயிலாய தொன்றுமாய் வேறுவேறு தன்மையாய்
நீயிலாமல் நின்ற நேர்மை யாவர்காண வல்லரே (பா. 297)

எனும் பாடலிலும்,

"அந்தரத்தில் ஒன்றுமாய்... (பா. 298) என்றமையும் அடுத்த பாடலிலும், ஐந்து பூதங்களிலும் இறைவன் வியாபித்திருக்கின்ற நிலையைக் காண வல்லவர் யாவர்? என்றும் அதனைச் சிந்தை செய்திருந்த நிலையைக் காணவல்லவர் யாவர்? என்றும் சிவவாக்கியர் வினா எழுப்பி எழுதியிருக்க,

இறைவன் பல்வேறு தன்மைகளில் ஒவ்வொரு பூதத்திலும் நிறைந்துள்ளதைக் காட்டவந்த ஸ்ரீஞானஜோதி சம்பங்கி, "பூமியில் குறிஞ்சி, முல்லை, மருதம், நெய்தல், பாலை ஆகிய ஐவகை நிலங்களாகவும், நீரில் ஆற்றுநீர், ஊற்றுநீர், கடல்நீர், மழைநீர் என்ற நான்கு வகை புனலாகவும், தீயில் மூலாக்கினி, ஜடராக்கினி, அக்னி என்ற மூவகைத் தீயாகவும், காற்றில் உட்சுவாசம், வெளிச்சுவாசம் என்ற இருவகைக் காற்றாகவும், வேய்ந்திருப்ப தாகிய உடம்பிலே உயிர் ஒன்றாகவும் வேறுவேறு கதிகளிலே நீ நீக்கமற நின்ற தன்மையை யார் அறிவார்கள்? என் ஐயனே என்பது கருத்து (ப. 58) என்றும் அடுத்த பாடலுக்கு,

அந்தரமாகிய இந்த உயிர் ஒன்றுமாய் (ப. 1:59) என்றும் உரை எழுதுவர். மா.வடிவேலு முதலியார்,

"பூமியின்கண் ஐந்தாகியும் சலத்தின்கண் நான்காகியும் நெருப்பின்கண் மூன்றாகியும் காற்றின்கண் இரண்டாகியும்

ஆகாயத்தின்கண் ஒன்றாகியும் வேறுவேறு ரூபத்தொடு நீயில்லாமல் வேறு நிற்கவல்லவர் யார்? (எ-று)" (ப. 239) என்றும், அடுத்த பாடலுக்கு ஆகாய பூதத்தில் ஒன்றாகியும் (ப. 240) என்றும் எழுதுவர்.

பஞ்சபூதங்களின் அமைப்பினையும் இயல்பினையும் கூறவந்த சிவவாக்கியர் நிலம், நீர், தீ, காற்று, வெளி எனும் ஒவ்வொரு பூதமும் பிற பூதங்களின் தொடக்கினைப் பெற்றுள்ளதை இயம்புகின்றார். வேயிலாய தொன்றுமாய்... என்பதற்கு ஸ்ரீஞான ஜோதி சம்பங்கி, உடல் என்று கொள்கின்றார். ஐந்து பூதங்களில் நிலம், நீர், தீ, காற்று எனும் நான்கினைக் கூறிவிட்டு வெளியை விட்டுவிட்டு உடலைக்கூறுவாரா? உடல் பெரும்பூதங்களில் ஒன்று இல்லை. எனவே, வேயிலாய தொன்றுமாய்... என்பது வெளி எனும் பூதம் ஒரே தன்மையுடன் இயங்குவதைக் குறிப்பிடுவதால் ஸ்ரீஞானஜோதி சம்பங்கி கூறுவது பொருந்து வதாக இல்லை எனலாம்.

உடல்நோய்

சாத்திரங்கள் ஓதுகின்ற சட்டநாத பட்டரேஞ்..
வேர்த்திரைப்பு வந்தபோது வேதம்வந்து உதவுமோ
மாத்திரைப் போதும்முளே மறித்துதொக்க வல்லரேல்
சாத்திரப்பை நோய்களேது சத்திமுத்தி சித்தியே (பா. 13)

எனும் இப்பாடலில், சாத்திரங்களை ஓதுகின்ற பட்டர்கள், தங்களது அந்தச் செயலால் உடல்பெறுகின்ற நோய்களில் இருந்து தங்களைக் காத்துக் கொள்ளுதல் இயலாது. அச்செயலை விடுத்து, யோகச் செயல்முறைகளில் (பிராணாயாமம், தியானம்) ஈடுபட்டு வல்லமை பெற்றால் உடலுக்கு நோய்களுமில்லை; வலிமையும் முத்தியும் சித்தர்கள் கைவரப் பெறுதலும் கூடும் என்பர் சிவவாக்கியர்.

இதற்கு உரை வகுக்கும் ஸ்ரீஞானஜோதி சம்பங்கி, இறுதி வரியில் உள்ள சாத்திரப்பை நோய்களேது சத்திமுத்தி சித்தியே என்பதற்கு சாத்திரங்கள் அடங்கியபையோ, மரணபயமோ தேவையில்லை என்று எழுதுகின்றார் (ப. 244). இக்கருத்து பொருத்தமற்றது. சாத்திரப்பை என்பது உடலைக் குறித்த சொல்லாகும்.

வடிவேலு முதலியார், "நீங்கள் ஒரு மாத்திரை நேரமானாலும் உம்முள்ளிருந்து வெளிப்பட்டு எட்டங்குலம் வீணே போகின்ற வாயுவை யடக்கி யோக சாதனஞ் செய்வீரானால் எந்த ரோகப் பிடிப்பையுமடையாமல் சிவயோக சாம்ராஜ்யத்தைப் பெறுவீர் (எ-று)" (ப. 13) என்பர். இவர் உடல் நோயையே ரோகப் பிடிப்பு என்பர். இவரது கருத்தே ஏற்புடையதாகும்.

அருக்கனோடு சோமனும் அதற்குமப் புறத்திலே
நெருக்கியேறு தாரகை நெருங்குகின்ற நேர்மையை
உருக்கியோர் எழுத்துளே ஒப்பிலாத வெளியிலே
இருக்கவல்ல பேரலோ இனிப்பிறப்ப தில்லையே (பா. 283)

இப்பாடலுக்கு ஸ்ரீஞானஜோதி சம்பங்கி, சூரியகலையும் சந்திரகலையும் இயங்க, சுஷூம்னா நாடிவழியே குண்டலினி உயரும் தன்மையை உணர்ந்து மனஒருமையோடு வாசியை நடத்தி ஆழ்ந்த தியானத்தில் இருப்பவர் மீண்டும் பிறக்க மாட்டார் என்பது பொருள்.

சூரியகலை (வலது நாசித் துளை), சந்திரகலை (இடது நாசித் துளை) இவற்றை அருக்கன் என்றும் சோமன் என்றும் சொன்னார். நெருக்கியேறு தாரகை என்று இவை இரண்டாலும் சூழப்பட்ட சுஷூம்னா நாடியைச் சொன்னார். இதன் வழியே குண்டலினி செயல்படும் போது மனம் எல்லையற்ற அமைதி நிலைக்குச் சென்று சலனமின்றி இருக்கும். ஆகவே, இந்த நிலையை உருக்கியோர் எழுத்து என்றும் ஒப்பில்லாத வெளி என்றும் சொன்னார். இதனால் உடம்பு, உயிர், மனம் மூன்றும் வளம்பெறுகின்றன. இத்தகு யோகிக்கு மீண்டும் பிறவி இல்லையாதலால் இருக்க வல்ல பேரோ இனிப் பிறப்பதில்லை என்கிறார் (பா. 318).

மா. வடிவேல் முதலியார், சூரிய சந்திரர்களையும் அவர்களுக்கு அப்புறத்தையும் நெருங்கி ஏறுகின்ற நட்சத்திரக் கூட்டங்கள் நெருங்கியிருந்த தன்மையை ஓரெழுத்தாகிய பிரணவத்தில் சேர்த்து அளவு சொல்லப்படாத வெளியாகிய ஆகாயத்தின்கண் இருக்க வல்லமையுடையவர்களே இனிப் பிறவார், எ-று என்றும் உரைப்பர்.

வாசியோகம் அறிந்தவர்களே இப்பாடலுக்குரிய உண்மைப் பொருளைக் கூறமுடியும். வடிவேலு முதலியார் முழுமையான பயிற்சி உடையவராகத் தெரியவில்லை. அவ்வகையில் ஸ்ரீஞானஜோதி சம்பங்கி கூறுவதே பொருத்தமுடையதாகும்.

சுடர்வதாகி எழும்பியங்கு தூபமான காலமே
இடர்வதாயிப் புவியும்விண்ணும் ஏகமாய் அமைந்தபின்
படர்வதாகி நின்றவாதிப் பஞ்சபூத மாகியே
அடர்வதாகி அண்டம்யாவும் ஆள்வதாக நின்றதே (பா. 128)

ஒளிமிகுந்து காலங்காலமாகச் சுடர்விட்ட ஒன்று இடர்பட்டுச் சிதறி பூமிகளும், கோள்களும் உண்டாயின.

மூலப்பிரகிருதியானது பூமியில் பஞ்ச பூதங்களாகி எங்கும் அடர்ந்த அண்டங்களை எல்லாம் ஆள்வதாக நின்றது என்று பொருள்.

சிவவாக்கியர் பாடல்களிலே தலைசிறந்த பாடல் இது. பிரம்மம், பரம்பொருள் கடவுள் என்று சொல்லப்படுவது எது? என்பதை ஒரே பாடலில் பாடுகிறார். அதோடு இந்த உலகமும் அதில் பஞ்ச பூதங்களும், வானில் அண்டங்களும் தோன்றியதையும் சொல்லுகிறார்.

இந்தப் பூமியும் எண்ணற்ற கோள்களும், நட்சத்திரங்களும் தோன்றுவதற்கு முன்னால் ஒரே ஒரு நெருப்புக் கோளம் தன்னந்தனியே படுவேகமாகச் சுழன்று கொண்டிருந்தது. இதைச் 'சுடர்வதாக எழும்பி அங்குத் தூபமான காலமே' என்றார்.

இவ்வாறு சுழன்று கொண்டிருந்த நெருப்புக் கோளம் வெடித்துச் சிதறியது. இந்தச் சிதறலால் கோடானகோடி பூமிகள், சூரியன்கள், கிரகங்கள், நட்சத்திரங்கள் ஆகியவை உருவாகி அவற்றின் இயற்கை காந்த சக்தியின் ஈர்ப்பாற்றலால் தம்மைத் தாமே சுற்றிக் கொண்டு இயங்கலாயின. இப்படி வெடித்துச் சிதறியதை 'இடர்வதாய் இப்புவியும், விண்ணும் ஏகமாய் அமைந்தபின்' என்றார். இந்தச் சிதறலிலே சிதறிய ஒரு துளிதான் நாம் வாழும் பூமி. காலப் போக்கில் இது குளிர்ந்து இதிலே, மண், நீர், நெருப்பு, காற்று, ஆகாசம் ஆகிய பஞ்சபூதங்கள் உருவாகிப் பின் உயிர்கள் உற்பவமாயின. இதைப் 'படர்வதாகி நின்ற ஆதிப் பஞ்சபூதமாகியே' என்றார். இதன் பின்னும் இவை எல்லாம் நிகழ்வதற்கு மூலகாரணமாக இருந்த மூலபிரகிருதி எங்கும் அடர்ந்து நீக்கமற நின்று அண்டங்கள் அனைத்தையும் ஆட்சி செய்வதாக இருந்து வருகிறது. இதை, 'அடர்வதாகி அண்டம் யாவும் ஆள்வதாக நின்றதே' என்றார்.

இந்த உலகம் எப்படி தோன்றி இருக்கக்கூடும் என்று ஆய்வு செய்த விஞ்ஞானிகள் இதே கருத்தைத்தான் சொல்லுகிறார்கள். சிவவாக்கியர் சொல்லும் நெருப்புக் கோளம் வெடித்துச் சிதறிய சம்பவத்தை விஞ்ஞானிகள் (Big Bang) என்று சொல்லுகிறார்கள். ஒரு விஞ்ஞான உபகரணமும் இல்லாமலே இந்த நிலவுலகும், வானில் கோள்களும் எப்படி உருவாயின என்பதைச் சிவவாக்கியர் பாடியிருக்கும் மூதறிவின் திறத்தை எண்ண வியப்பாக இருக்கிறது என்பர் (ப. 189).

இப்பாடலுக்கு உரைவகுத்த மா. வடிவேலு முதலியார், தேஜோமயமாக எழும்பி விளங்குகின்ற தூபமானது உண்டாகின்ற

காலத்தில், சர்வ இடையூறுகளுண்டாய்ப் பூமியிலும் ஆகாயத்திலும் ஒரே வஸ்துவாய் அமைக்க முன்னே சர்வ இடங்களிலும் படர்ந்துநின்ற இறைவன் பஞ்சபூதமாகி அண்டரண்டங்களி லெல்லாமடர்ந்து ஆண்தன்மையோடு நின்றது என்பர் (ப. 264).

இறுதியடியில் வரும் 'ஆள்வதாகிநின் றதே' என்பதை 'ஆண்மையாக நின்றதே' என்று கொண்டதால் தவறாக உரை எழுதியுள்ளார். தூபமானகாலமே என்பதற்குச் 'சுழலுகின்ற காலத்தில்' என்று ஸ்ரீஞானஜோதி சம்பங்கி பொருள் உரைக்க,

சர்வேஸ்வரன் தேஜோரூபனாய் வருவானென்பார். 'சுடரதாயெழும்பி' எனவும், அவனுக்கே தூபாதி கொடுக்க வேண்டு மென்பார், 'தூபமான காலமே' எனவும், சர்வேஸ்வரன் சர்வ வியாபகமுள்ளவனென்பார். 'இடரதாய்ப் புவியும்விண்ணு மேகமா யமைக்க முன்படரதாக நின்றவாதி' எனவும், இறைவனே பஞ்சபூதமானவனு மென்பார். 'பஞ்சபூதமாகியே அடரதாக அண்டமெங்கு மாண்மையாக நின்றதே' எனவுங் கூறினார் (ப. 265). உலக உற்பத்தி நிலையைச் சிவவாக்கியர்கூற, மாறுபட்டு பொருள்கொண்டு மா. வடிவேலு முதலியார் பேசுவதால் இவ்வுரை பொருத்தமற்றது என்றுரைக்கலாம்.

ஸ்ரீஞானஜோதி சம்பங்கி உரையையே இரா. கலைச்செல்வி கிருஷ்ணகுமாரும் தந்துள்ளார் (ப. 33) என்பது குறிப்பிடத்தக்கது.

காயசித்தி

நல்லவெள்ளி ஆறனோடு நயந்தசெம்பு நாலதாய்
சொல்லுநாகம் ஒன்றதாய் குலாவுசெம்பொ னிரண்டதாய்
வில்லினோசை ஒன்றுடன் விளங்கவூத வல்லிரேல்
எல்லையற்ற சோதியானை எட்டிரண்டாய் மாற்றுமே (பா. 281)

சுத்த வெள்ளி ஆறுபாகத்தோடு செம்பு நாலுபாகமும், துத்த நாகம் ஒரு பாகமும், நல்ல பொன் இரண்டு பாகமும் சேர்த்து ஊதி உருக்கினால் பத்து மாற்றுடைய பொன்னாக மாறும் என்பது பொருள்.

இந்தப் பாடலுக்கு மேலே எழுதியுள்ள மேலோட்டமான பொருளைப்பார்த்து இது ரசவாத வித்தை. இதனால் பொன் செய்யலாம் என்று இப்பாடலிலுள்ள விகிதாச்சாரப்படி சொல்லிய உலோகங்களைச் சேர்த்து உருக்கிப் பார்த்து ஏமாந்து போனவர் அநேகர்.

நல்ல வெள்ளி ஆறனோடு என்று முதுகெலும்பிலே உள்ள ஆறு ஆதாரகமலங்களைச் சொல்லுகிறார். சொல்லு நாகம் ஒன்று என்று ஒரு பக்க நாசி துவாரத்தின் வழியே உள்ளே இழுக்கும் (பூரகம்) காற்றைச் சொன்னார். நயந்த செம்பு நாலு என்று கும்பகத்தைச் சொன்னார். குலாவு செம்பொன் இரண்டு என்று மறுபக்க நாசித்துளை வழியாக இரண்டு மடங்கு நேரம் காற்றை வெளியேற்றும் ரேசகத்தைச் சொன்னார்.

வில் என்று உடம்பையும், ஓசை என்று மூச்சுக்காற்றையும் ஊதவல்லிரேல் என்று பிராணாயாமங்களையும் சொன்னார். இவ்வாறு வழுவாமல் செய்கின்ற பிராணாயாமங்களால் உடம்பை நெடுநாள் இளமையோடு காக்கலாம் என்ற கருத்தில் “எல்லையற்ற சோதியானை எட்டிரண்டாய் மாற்றுமே” என்றார். எல்லையற்ற சோதியானை என்றதால் ஆன்மாவைக் கர்மவினைகளிலிருந்து ஈடேற்றி முக்தியிலே சேர்க்கும் என்றும் பொருள் கொள்ளத்தகும் (ப.315). எட்டிரண்டும் என்றதால் 8+2=10 என்ற எண்வரும். இதனால் உடம்பைப் பத்துமாற்றுப் பொன்னைப்போல் முதுமையும், பிணியும் அணுகாமல் நெடுநாள் காக்கலாம் என்ற பொருள்பட எட்டிரண்டும் ஆகுமே என்று சொன்னார். இதனை எட்டும் இரண்டு (எட்டுகின்ற இரண்டு) என்று பொருள்கொண்டு ஆன்மாவை எட்டித்தளைப்படுத்தும் நல்வினை, தீவினை ஆகிய இருவினைகளையும் மாற்றிப் பிறவாமையில் சேர்க்கும் என்றும் பொருள் கொள்ளத்தகும்.

இப்பாடலுக்கு உரைவகுத்த மா. வடிவேலு முதலியார், சுயமான வெள்ளியென்றும் பிருதிவியின் கண் ஆறு மாத்திரையளவும், செம்பாகிய அப்புவில் நாலு மாத்திரையளவும், நாகமென்னும் தேயுவில் மூன்று மாத்திரையளவும், செம்பொன் என்னும் வாயுவில் இரண்டு மாத்திரையளவும், வில்லோசை என்னும் ஆகாசத்தில் ஒரு மாத்திரையளவும் நின்று சரத்தையூத வல்லமையுடையீரானால் அளவுகடந்த சர்வேஸ்வரனாவன் எட்டு மாற்றுள்ள பொன்னாக வெளிப்படுவான் (ப. 157) என்பர். பிராணாயாமம் எனப்பெறும் வாசியோப் பயிற்சி குறித்த அனுபவம் இல்லாமையால் விளக்கிச் செல்ல இயலவில்லை. இது யோகிகளுக்குக் கூறியது என்று அறியக்கடவர் என்றும் முடிப்பர். இப்பாடலுக்கு ஸ்ரீஞானஜோதி சம்பங்கியின் உரையே பொருத்தமானதாகும்.

சித்தர் இலக்கியங்களில் உரைவேறுபாடுகள் நிகழ்வதற்கு முக்கிய காரணங்களாக அமைவன.

1. சித்தர்களின் தத்துவம், யோகம் குறித்த முழுமையான அறிவைப் பெறாமை.
2. பாடல்கள் எழுந்ததற்கான நோக்கங்களைத் தெளிவாகப் புரிந்து கொள்ளாமை.
3. பாடற் பொருண்மைகளை உள்வாங்கிக் கொள்ளாமை
4. பாட வேறுபாடுகள் நிறைந்திருப்பவை.
5. தாங்கள் சார்ந்த துறையறிவைச் சித்தர் பாடல்களில் பொருத்துதல்

எனக் கருதலாம்.

ஸ்ரீஞானஜோதி சம்பங்கி முறையாகக் குருவிடம் வாசியோகம் மற்றும் தியானப் பயிற்சிகளைப் பெற்றமையால், சித்தர் சிவவாக்கியரின் பாடல்களை நன்கு ஆழ்ந்து கற்று பல இடங்களில் பொருத்தமான உரைகளைத் தந்துள்ளார்.

மா. வடிவேலு முதலியார் தாம் சார்ந்த சைவ சமயக் கருத்துக்களில் ஆழங்காற்பட்டமையின் பல பாடல்களுக்குப் பொருத்தமற்ற உரையை வழங்கியுள்ளார். சித்தர் பாடல்களைப் பதிப்பிப்பவர்கள் பாடலின் பொருளை உணர்ந்து பிழையறப் பதிப்பித்தால் பாடவேறுபாடுகள் வரா. பாடவேறுபாடுகள் வராது போயின் உரைவேறுபாடுகளும் அமையா. சித்தர் பாடல்களின் பொருண்மைகள் மிகமிக ஆழங்காற்பட்டவை. அவற்றிற்கு உரை எழுதப்புகும் அன்பர்கள் அட்டாங்க யோகம், தியானம் போன்ற முறைகளை நன்கு தெரிந்து கொண்டும் சொற்களின் பொருள்களைப் புரிந்து கொண்டும் உரைவகுப்பது சிறந்தது.

துணைநூல்கள்

1. முனைவர் க. இளமதி சானகிராமன், சிவவாக்கியர் பாடல்களின் செம்பதிப்பு, குறிஞ்சிப் பதிப்பகம், புதுச்சேரி, 1999.
2. இரா. கலைச்செல்வி கிருஷ்ணகுமார், சித்தர் சிவவாக்கியரின் இறைப்புரட்சியும் இனப்புரட்சியும், ஞானதீபம் பதிப்பகம், திண்டிவனம், 2011.
3. ஸ்ரீஞானஜோதி சம்பங்கி, சித்தர் சிவவாக்கியர் பாடல் மூலமும் தெளிவுரையும், ஞானதீபம் பதிப்பகம், தாராபுரம், 2001.
4. மா. வடிவேல் முதலியார் (உ.ஆ.), சிவவாக்கியர் பாடல் மூலமும் - உரையும், அருந்ததி நிலையம், சென்னை, 2003.

ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பதில் மலேசியத் தமிழரின் பங்கு

கோவி.சிவபாலன்

முன்னுரை

தமிழகத்திலிருந்து மலாயாவுக்குத் (மலேசியாவுக்கான பழைய பெயர்) தமிழர்கள் குடியேறிய காலந்தொட்டுத் தமிழ்ப் பண்பாடு மலாயாவில் வேரூன்றிவிட்டது. மலேசியப் பண்பாட்டை ஏற்றுக்கொண்டு வாழ்ந்துவரும் இங்குள்ள தமிழர்கள், எந்தச் சூழலிலும் தமிழர் என்னும் அடையாளத்தை இழக்காமல் இயன்றளவு தமிழர் பண்பாட்டைக் கட்டிக்காத்துப் போற்றி வருகின்றார்கள். மலேசியத் தமிழர்கள் இன்றளவும் தங்கள் பண்பாட்டில் பிசகாது வாழ்ந்து வருவதற்கு அவர்களிடமுள்ள மொழி, இனம், கலை, சமய நம்பிக்கை சார்ந்த உணர்வே அடிப்படையாக அமைந்துள்ளது (அயலகத் தமிழ்க் கலை, இலக்கியம் - சமகாலச் செல்நெறிகள், ப. 336). தங்கள் மூதாதையர்கள் விட்டுச் சென்ற மரபுவழி ஆவணங்களை அவர்கள் கவனமுடன் பாதுகாத்து வந்திருக்கின்றார்கள். அந்த வகையில் மரபுவழி ஆவணங்களான ஓலைச்சுவடிகளுக்கும் மலேசியத் தமிழர்களுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. ஓலைச்சுவடிகள் மலேசியத் தமிழர்களின் வாழ்வில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தியிருக்கின்றன. சித்த மருத்துவம், சித்தர் நெறி, நாடி சோதிடம் ஆகிய துறைகளில் இத்தாக்கத்தைக் காணமுடிகின்றது. ஓலைச்சுவடிகளின் அருமையை உணர்ந்து அவற்றைப் பாதுகாப்பதற்கான பணிகளை மலேசியத் தமிழர்கள் அண்மைக் காலமாக மேற்கொண்டு வருகின்றார்கள்.

கட்டுரையின் நோக்கம்

- ஓலைச்சுவடிகளுக்கும் மலேசியத் தமிழர்களுக்கும் இடையிலான தொடர்பைக் கண்டறிவது.
- ஓலைச்சுவடிகளின் வாயிலாகச் சித்த மருத்துவம், சித்தர் நெறி, நாடி சோதிடம் ஆகிய துறைகளில் ஏற்பட்டுள்ள தாக்கங்களைக் கண்டறிவது.
- மலேசியத் தமிழர்கள் ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பதற்கு மேற்கொண்டு வரும் முயற்சிகளைக் கண்டறிவது.

மலேசியாவில் சித்த மருத்துவத் துறைக்கும் ஓலைச்சுவடிகளுக்கும் நெருங்கிய தொடர்புண்டு. 1890-களில் களஞ்சேரி அண்ணாசாமி வைத்தியரின் மகனாகிய பெரியதம்பி எனும் சித்த மருத்துவர் மலேசியாவில் சித்த மருத்துவச் சேவை செய்துள்ளார். இவர் தனது ஐந்தாவது வயதில் அப்போதைய மலாயாவிற்கு வந்துள்ளார். ஏறத்தாழ ஐம்பது பேர் இவரிடம் மருத்துவம் பயின்றுள்ளனர். சுற்றுவட்டார மக்களுக்குச் சித்த வைத்தியம் செய்து நன்கு அறிமுகமானவர். பெரியதம்பியின் சீடர்களில் முக்கியமானவர் அவரது மகன் கணபதி என்பவர். இவர், இரவாங் கம்போங் மெலாயு/20ஆம் கட்டை எனுமிடத்தில் வசித்தவர். இரவாங் தமிழ்ப்பள்ளியில் தலைமையாசிரியர் பொறுப்பில் இருந்துள்ளதோடு சுற்றுவட்டார மக்களுக்கு ஆன்மீக வழிகாட்டியாகவும் இருந்துள்ளார். இவரிடம் ஏராளமான ஓலைச்சுவடிகள் இருந்துள்ளன. அவற்றுள் பலவற்றைத் தமிழ்நாட்டுச் சுவடிக் காப்பகங்களிடம் ஒப்படைத்துவிட்டார். இன்னும் பல சுவடிகள் (ஏறத்தாழ 60 சுவடிகள்) 1956இல் ஏற்பட்ட வெள்ளத்தில், சேதமடைந்து வீசப்பட்டுவிட்டன. பெரியதம்பி மற்றும் அவரது மகன் கணபதி காலத்தில் இன்னும் பலர் ஓலைச்சுவடிகளைப் பயன்படுத்திச் சித்த மருத்துவம் செய்துள்ளனர். அவர்களுள் கணபதியின் மாமனாராகிய ரெங்கசாமி வைத்தியர் கோலகங்சார் என்னுமிடத்தில் சித்த மருத்துவம் செய்துள்ளார். அவரும் நிறையச் சுவடிகள் வைத்திருந்ததாகச் சொல்லப்படுகின்றது. கணபதியின் மருமகன் சீனிவாசன் என்பவர் தன் மாமனாரின் சித்த மருத்துவச் சேவையை இன்றுவரை தொடர்ந்து செய்து வருகிறார். இவர் பழைய பெட்டாலிங் ஜெயா நகர்ப் பகுதியில் (P.J. old town) முடிதிருத்தும் நிலையத்தை நடத்தி வருகின்றார். முடிதிருத்தும் நிலையத்துக்கு உள்ளே இவரது மருந்தகம் செயல்படுகின்றது. இரத்த முறிவு நோயாகிய டெங்கு முதல் இப்போதைய பன்றிக்காய்ச்சல் வரை பல அரிய வகை நோய்களுக்கும் மருந்தளிக்கிறார். இவரிடம் சித்த மருத்துவம், மாந்திரீகம், இலக்கியம் சார்ந்த சுவடிகள் இருக்கின்றன (கள ஆய்வு, நேர்காணல்).

உத்தண்டி என்பவர் ஜொகூர் மூவாரில் சித்த மருத்துவம் செய்தவர். நிறைய சுவடிகள் வைத்திருந்தார். எண்பதாவது வயதில் காலமானார். இராமகிருஷ்ணன் என்பவர் ஈப்போ என்னுமிடத்தில் சுவடிகள் வைத்துச் சித்த மருத்துவம் செய்துள்ளார் (கள ஆய்வு, நேர்காணல்). சித்த மருத்துவர் சாரங்கபாணி என்பவர் ஈப்போ நகரில் இன்றளவும் மருந்தகம் வைத்துச் சித்த மருத்துவம் செய்து

வருகின்றார். இவரிடம் சித்த மருத்துவம், மாந்திரீகம் ஆகிய துறைகளைச் சார்ந்த சுவடிகள் உள்ளன. இவர் தேவைப்படும்போது மருத்துவச் சுவடிகளிலுள்ள குறிப்புகளைக் கொண்டு மருந்து களைச் செய்வதுண்டு எனக் கூறுகின்றார்(கள ஆய்வு, நேர் காணல்). சுவாமி இராமதாஸ் என்பவர் நிறையச் சுவடிகள் வைத்திருந்தார். பழைய சித்த மருத்துவச் சங்கத் தலைவராக இருந்தார். சித்த மருத்துவ நூல்களை நிரம்பக் கற்றவர் ; நல்ல தமிழ்ப்புலவர் ; பல கவிஞர்களை உருவாக்கியுள்ளார் (கள ஆய்வு, நேர்காணல்). ஸ்ரீரங்கம் வைத்தியரின் மகனாகிய பெருமாள் வைத்தியர் என்பவர் பிரீக்பீல்டில் புகழ்ப்பெற்ற வைத்தியராக இருந்துள்ளார். இவர் வருமக் கலையையும் அறிந்திருந்ததால் சாண்டோ பெருமாள் எனவும் அழைக்கப்பட்டார். இவரும் நிறையச் சுவடிகள் வைத்திருந்ததாகச் சொல்லப்படுகின்றது. இவரது மகன் தற்போது செலாயாங் என்னுமிடத்தில் வசித்து வருகின்றார். இவரிடம் தம் தந்தையாருடைய சுவடிகள் இருப்பதாகச் சொல்லப் படுகின்றது(கள ஆய்வு, நேர்காணல்). கிள்ளானைச் சேர்ந்த அறிவானந்தன் என்னும் சித்த மருத்துவர் சில புதிய தகவல்களைத் தந்தார். தன்னுடைய தாத்தா புகழ்ப்பெற்ற சித்த மருத்துவர் என்பதையும் அவருடைய சுவடிகளைத் தான் பாதுகாத்து வருவதையும் அவற்றைக் கணினியில் ஏற்றும் முயற்சியில் ஈடுபட்டுள்ளதையும் அவர் குறிப்பிட்டார்(கள ஆய்வு, நேர்காணல்).

மேற்கண்ட சித்த மருத்துவர்கள், சித்த மருத்துவம், மாந்திரீகம், சோதிடம் போன்ற பல்துறை சார்ந்த ஓலைச் சுவடிகளை வைத்திருக்கிறார்கள். அவர்களுள் சிலர் மட்டும் சுவடிகளை வாசிக்கத் தெரிந்து பயன்படுத்தியிருக்கின்றனர். பலர் தந்தை வழிப் பாட்டன் முப்பாட்டன் சொத்து என்று சுவடிகளைப் பயன்படுத்தத் தெரியாமல் பாதுகாத்து வந்துள்ளனர். இவர்கள் காலத்திலேயே பல சுவடிகள் பாதுகாப்பாகத் தமிழகத்துக்குக் கொண்டு செல்லப்பட்டு விட்டன. வெள்ளம் போன்ற இயற்கைப் பேரிடர் காரணங்களால் அழிந்தவை போக எஞ்சியவை அங்கொன்றும் இங்கொன்றுமாகத் தனிமனிதர்களின் கைகளில் இப்போதும் இருக்கின்றன.

மலேசியாவில் ஓலைச்சுவடிகளும் சித்தர் நெறிப் பரவலும்

இறையென்னும் பேராற்றலானது குருவடிவாக வந்தமைந்து ஆன்மக் கடைத் தேற்றத்திற்கு மானிடனைப் பக்குவப்படுத்தும் என்னும் கருத்துடையவர்கள் சித்தர் நெறியாளர்கள். சித்தர் நெறியாளர்கள் தங்களின் ஆன்மீகத் தேடலுக்குச் சித்தர்களைக் குருவாகக் கொண்டு அவர்கள் காட்டுகின்ற பாதையில்

வாழ்கின்றார்கள். சித்தர்களின் வழிகாட்டுதலைப் பெறுவதில் ஓலைச்சுவடிகள்/நாடி ஓலைகள் பெரும்பங்கு வகிப்பதாக அவர்கள் கருதுகின்றனர். அவ்வப்போது நாடி ஓலைகளைப் பார்த்து அதன் வழி தங்கள் வாழ்க்கை நிலையை இவர்கள் செம்மைப்படுத்திக் கொள்ளுகின்றனர். இந்தப் போக்கு தமிழகத்திலும் மலேசியாவிலும் ஏறத்தாழ ஒன்றாகவே உள்ளது(கோவி.சிவபாலன்(2010), சித்தர்களும் ஓலைச்சுவடிகளும், மூன்றாவது உலகச் சித்தர் நெறி மாநாட்டுக் களஞ்சியம், பக்.110-115).

மலேசியாவில் சித்தர் நெறிப் பரவலுக்கு ஓலைச்சுவடிகள் பெரும்பங்காற்றியிருக்கின்றன. சித்தர்களின் பெயரால் உள்ள நாடி ஓலைகள் சித்தர்களைப் பற்றிய அறிமுகத்தை மக்களுக்குத் தந்தன (G.Sivapalan(2010), The Siddha Worship In Malaysia : An Introduction, Journal of Indian Studies, Vol.10) . அந்நாடிகளுள் அகத்திய நாடி, கௌசிக நாடி, வசிஷ்ட நாடி, சப்தரிஷி நாடி போன்றவை மலேசியத் தமிழர்களுக்கு நன்கு அறிமுகமானவை. இவற்றுள் அகத்திய நாடியே மக்களிடையே மிகப்பெரிய வரவேற்பைப் பெற்று வந்தது. இதற்கு முன்பு அகத்தியர், அருட்பெருஞ்சோதி, அருணகிரிநாதர், பட்டினத்தார் போன்ற திரைப்படங்கள், 'சித்தன் போக்கு சிவன் போக்கு' போன்ற பழமொழிகளின் பயன்பாடு என்ற அளவில் மட்டுமே மலேசியத் தமிழர்கள் சித்தர்களைப் பற்றி அறிந்திருந்தனர். ஆனால் சித்தர்களைப் பற்றி முன் பின் கேள்விப்பட்டிராதவர்கள் கூட நாடி சோதிடத்தைப் பார்த்த பின்பு சித்தர்களைப் பற்றி அறிந்து அவர்களைக் குருவாக வழிபடத் தொடங்கினர். 1980களின் பிற்பகுதியில் மலேசியாவுக்கு நாடி சோதிடர்கள் அதிகம் வரத் தொடங்கினர். 1980களிலும் 1990களிலும் இந்த நாடி சோதிடத்துக்கு மிகப்பெரிய வரவேற்பு இருந்தது. சற்றேறத்தாழ 40,000-50,000 பேர் வரை இதுநாள் வரை நாடி சோதிடம் பார்த்துள்ளார்கள் என்பது ஆய்வின் வழி தெரிய வருகின்றது (கள ஆய்வு, நேர்காணல்).

நாடி சோதிடத் தொடர்பு ஏற்பட்ட பிறகு மலேசியாவில் சித்தர் வழிபாட்டு மையங்கள் உருவாகத் தொடங்கின. அகத்திய சன்மார்க்கச் சங்கங்கள், அகத்திய சன்மார்க்க குருகுலங்கள், சித்தர் ஞான பீடங்கள் ஆங்காங்கே தோன்றின(சித்தர் வாழ்வும் வாக்கும் : ஓர் ஆய்வுப் பார்வை, பக்.171). சித்தர் நெறி சங்கங்களில் வினைக் கொள்கைப் பற்றிய போதனை முக்கியத்துவம் வாய்ந்ததாக இருந்தது. வினைகளை வென்றவர்களாகிய சித்தர்கள்/ மெய்ஞானியர்கள் மட்டுமே மனிதர்களுடைய வினைகள் நீங்குவதற்குச் சரியான வழியைக் காட்ட முடியும் என்ற போதனை மக்களுக்கு வழங்கப்பட்டது. எனவே வினையைப் போக்க

வழிகாட்டும் ஞானகுருவாகச் சித்தர்களை மக்கள் வழிபடத் தொடங்கினர். நாடி சோதிடம் பார்க்கப்படும் இடங்களில் சித்தர்களின் உருவப் படங்கள் வைக்கப்பட்டிருந்தன; வந்து செல்கின்ற வாடிக்கையாளர்களுக்கும் இதுபோன்ற உருவப் படங்கள் வழங்கப்பட்டன. ஆன்மீகத் தேடல் உள்ளவர்களுக்குச் சித்தர் நெறி அமைப்புகள் சிறந்த வழிகாட்டல் மையங்களாக விளங்கின. இன்று மலேசியாவிலுள்ள சித்தர் நெறிப் பற்றாளர்களில் பெரும்பான்மையினர் நாடி சோதிடம் பார்த்த அனுபவம் உள்ளவர்களாகவோ இன்னும் நாடி சோதிடத் தொடர்பு உள்ளவர்களாகவோ இருக்கின்றார்கள்(கோவி.சிவபாலன்(2010), சித்தர்களும் ஓலைச்சுவடிகளும், மூன்றாவது உலக சித்தர் நெறி மாநாட்டுக் களஞ்சியம், பக்.110-115). இந்த வகையில் நாடி சோதிடம் சித்தர்களைப் பற்றியும் அவர்தம் போதனைகள் பற்றியும் மக்களுக்கு நல்ல அறிமுகத்தைக் கொடுத்துள்ளது.

நாடிசோதிடத்தின்பால் மக்கள் ஈர்ப்புக் கொண்டதற்கான காரணங்கள்

நாடி சோதிடத்தின்பால் மலேசியத் தமிழர்களுக்கு ஈர்ப்பு ஏற்பட்டதற்குப் பல காரணங்கள் உள்ளன. மற்ற சோதிடங்களைப் போல் மனிதன் கணித்துப் பலன் சொல்கின்றான் என்றில்லாமல் சித்தர்கள் எழுதிவைத்ததை நாடி சோதிடர்கள் படித்துப் பலன் சொல்கின்றார்கள் என்ற நம்பிக்கை. கட்டை விரல் இரேகை-சில கேள்விகள், இவற்றை வைத்தே தங்கள் வாழ்க்கைப் பலன்கள் சொல்லப்படுகின்றது என்ற வியப்பு. முற்பிறப்பு, முற்பிறப்பின் வினைகள், அதற்கேற்ப அமைந்த இப்பிறப்பு, தீவினை நீங்கி வாழ்வதற்குரிய வழிவகைகள் (பரிகாரங்கள்) என்ற அமைப்பு முறை. தொழில், கல்வி, திருமணம், குடும்பம் தொடர்புடைய சிக்கல்களுக்குச் சுவடிகளில் சொல்லப்பட்டுள்ள பரிகாரங்களைச் செய்தால் தீர்வு கிட்டும் என்ற நம்பிக்கை. நாடிச்சுவடி பல்வேறு காண்டங்களாகப் பகுக்கப்பட்டிருந்த அமைப்பு. தங்களுக்குத் தேவையான பலன்களைத் தேவையான காண்டங்களின்வழி பெற்றுக் கொள்ளலாம் என்ற வசதி. நாடிகளில் காணப்படும் சிவன், உமை, ஆனைமுகன், ஆறுமுகன் போன்ற இறைவனுடைய திருநாமங்கள் தங்களுக்குப் பழக்கப்பட்டுள்ளதால் நாடியிலிருந்து வெளிப்படும் பலன்கள் மிகச்சரியானவையாகத்தான் இருக்கும் என்ற நம்பிக்கை. சொல்லப்படுகின்ற பரிகாரங்கள் இறைவழிபாடு, தானதருமங்கள், நூல்தானம் என்ற அமைப்பில் நற்செயல்களோடு (புண்ணியகாரியங்கள்) தொடர்புடையவையாக இருந்ததனால் ஏற்பட்ட நம்பிக்கை. பரிகாரச் செலவுகள் சில நூறுகளிலிருந்து சில ஆயிரங்களை எட்டினாலும் துன்பம்/சிக்கல் தீர்ந்தால் போதும் என்ற

மக்களின் மனநிலை. இதற்குமுன் இத்தகைய அமைப்பில் சோதிடப் பலன் கேட்டறியாத காரணத்தால் மக்களை நாடி சோதிடம் வெகுவாகக் கவர்ந்து விட்டது.

நாடி சோதிடத்தினால் ஏற்பட்ட விளைவுகள்

முப்பதுக்கும் மேற்பட்ட ஆண்டுகளாக 50,000க்கும் மேற்பட்ட மலேசியத் தமிழர்களின் மீது நாடி சோதிடம் மிகப்பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே நாடி சோதிடத்தால் மக்களுக்கு ஏற்பட்டுள்ள விளைவுகள் பற்றிய ஆய்வு தேவையாக இருந்தது. ஆய்வு மேற்கொள்வதற்கு மலாயாப் பல்கலைக் கழகத்திடம் விண்ணப்பம் செய்யப்பட்டது. பல்கலைக்கழக ஒப்புதலுடன் 2008 தொடக்கத்தில் ஆய்வு தொடங்கியது. மூன்று இளங்கலைப் பட்ட மாணவர்கள், ஓர் ஆராய்ச்சி உதவியாளர் ஆகியோர் ஆய்வில் ஈடுபட்டனர். ஆய்வின் தொடக்கத்தின்போது ஓலைச்சுவடிகளின் எழுத்துகளைப் பற்றிய குழப்பம் ஏற்பட்டது. ஓலைச்சுவடிகளைப் பற்றிய அடிப்படை அறிவு தேவையெனப்பட்டது. இதன் பொருட்டு, ஏழு பேர் கொண்ட குழு தஞ்சைத் தமிழ்ப்பல்கலைக்கழகத்தின் ஓலைச் சுவடித்துறையில் இரு வாரங்கள் குறுங்காலச் சுவடியியல் பயிற்சி பெற்றனர். பயிற்சியின் விளைவாக ஓலைச்சுவடிகளின் எழுத்து வரிவடிவங்கள் பற்றிய தெளிவு கிடைத்தது. இப்பயிற்சியைத் தொடர்ந்து மலேசியாவின் பேராக், ஜொகூர், கிள்ளான் பள்ளத்தாக்கு ஆகியப் பகுதிகளில் நாடி சோதிடம் ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைப் பற்றிய ஆய்வு முறையாகத் தொடங்கியது. 300 கருத்தறிவிப்பாளர்களிடம் நேர்காணல் செய்யப்பட்டது. ஆய்வின் வழி, நாடி சோதிடம் மலேசியத் தமிழர்கள்மீது ஏற்படுத்தியுள்ள தாக்கத்தைக் கீழ்க்காணுமாறு கண்டறிய முடிந்தது.

நாடி சோதிட நன்மைகள்

- ☞ தடைகளுக்குத் தீர்வு
- ☞ தீராத உடற்பிணிகளுக்குத் தீர்வு
- ☞ குடும்பச் சிக்கல்களுக்குத் தீர்வு
- ☞ தொழில் சிக்கல்கலுக்குத் தீர்வு
- ☞ ஆன்மீகத் தெளிவு

நாடி சோதிடத் தீமைகள்

- ☞ நாடியே கதி என்ற நிலையினால் பொருள் விரயம், தன்முயற்சி குன்றல் ஏற்பட்டது

- ஒன்றுக்கு மேற்பட்ட இடங்களில் நாடி பார்த்ததால் தெளிவுக்குப் பதிலாகக் குழப்பம் ஏற்பட்டது
- அதிகமான பரிகாரச் செலவு
- தொடக்கத்தில் தூய சிந்தனையோடு செயல்படும் நூலாசான்கள் காலவோட்டத்தில் பொருளாசைக் கொண்டவர்களாக மாறிவிடுகின்றனர். இதனால் பரிகாரங் களைக் கூட்டிச் சொல்வது/இட்டுக் கட்டிச் சொல்வது
- பக்குவம் குறைந்த நூலாசான்கள் அனுபவக் குறைவு காரணமாக ஏடு தேடுவதற்கு நிறையக் கேள்விகள் கேட்பதனால் மக்களுக்கு ஐயம் உண்டானது. பக்குவ முள்ள நூலாசானால் கைபெருவிரல் இரேகை மற்றும் ஒரு சில கேள்விகளுடன் ஏடு தேடவியலும் என்னும் தெளிவு மக்களுக்கு ஏற்பட்டது
- சுவடிகளில் வெளிப்படும் கருத்துகளை மிகச் சரியாக விளங்கிக் கொள்ளும் பக்குவமில்லாத நூலாசான்கள் மக்களுக்குத் தவறான விளக்கங்களைத் தருதல்
- நூலாசான் சொல்லுகின்ற சுவடிச் செய்திகளைத் தன் மனவோட்டத்திற்கு ஏற்ப மக்கள் விளங்கிக் கொள்ளுதல்.
- மக்களிடம் சுவடியிலிருந்து அதிகமான எதிர்பார்ப்புகள்.

மலேசியாவில் ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பதற்கான முயற்சிகளும் எதிர்காலத் திட்டங்களும்

தமிழர்களின் தொன்மை மரபையும் இன்னபிற சிறப்புகளையும் ஏந்தியுள்ள ஓலைச்சுவடித்துறை புதிய கண்ணோட்டத்துடன் அணுகப்படவேண்டியது காலத்தின் கட்டாயமாகும். இதுநாள்வரை சித்த மருத்துவம், நாடி சோதிடம் என்ற அளவில் மட்டும் மலேசியத் தமிழர்கள் பலரால் சுவடியியல் துறை அறியப்பட்டு வந்துள்ளது. சித்த மருத்துவம், நாடி சோதிடம் ஆகிய துறைகளில் இருந்துவரும் இந்த உறவு சுவடியியல் ஆராய்ச்சித் துறைக்கும் விரிவுபடுத்தப்பட வேண்டும். இதன்வழி, பட்டப்படிப்பு மேற்கொள்ளும் இங்குள்ள ஆராய்ச்சி மாணவர்களும் இலக்கிய ஆர்வலர்களும் இத்துறையில் தங்களை ஈடுபடுத்திக் கொண்டு மொழிக்கும் இனத்துக்கும் பயன்தரும் பல்வேறு கண்டுப்பிடிப்புகளை வெளிக்கொணருவதி ்ல் பங்களிக்க முடியும். மலேசியத் தமிழர்களுக்கும் ஓலை -வடிகளுக்கும் ஒரு நூற்றாண்டுக்கும் மேலான தொடர்பு இருந்துவந்துள்ளது. இன்றும் பல தனி மனிதர்கள் மலேசியாவில் ஓலைச்சுவடிகளை வைத்துள்ளனர். மலேசியத் தமிழர்களிடமுள்ள ஓலைச்சுவடிகள்

சேகரிக்கப்பட்டு முறையாகப் பாதுகாப்பதற்கான முயற்சிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன் தொடக்கமாக மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையைச் சேர்ந்த மாணவர் ஒருவர் தனது முதுகலைப்பட்ட ஆய்வுக்காக, மலேசியத் தமிழர்களிடமுள்ள ஓலைச்சுவடிகளைத் தேடுதல், திரட்டுதல், ஆவணப்படுத்துதல் ஆகிய பணிகளை மேற்கொள்ள முனைந் துள்ளார். தனது ஆய்வு திட்டத்தைப் பல்கலைக்கழகத்தாரிடம் முன்வைத்து ஒப்புதலையும் பெற்றுவிட்டார்.

நாடி சோதிட நம்பிக்கை மலேசியத் தமிழர்களிடம் ஆழமாக வேரூன்றியுள்ளது. ஓலைச்சுவடி என்று சொன்னாலே அது நாடி சோதிடம்தான் என்று எண்ணுகின்ற அளவுக்கு அவர்களிடம் நாடிசோதிடம் மிகப் பெரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. நாடி சோதிடத்தைப் பற்றிய எச்சரிக்கையுணர்வு மலேசியத் தமிழர் களிடம் முன்பை விட இப்போது பரவலாகக் காணப்படுகின்றது என்றாலும் அது போதுமானதாக இல்லை. எனவே நாடி சோதிடத்துக்கும் இலக்கியங்களை ஏந்தியுள்ள ஓலைச்சுவடிகளுக்கும் இடையிலான வேறுபாடுகளை மக்களுக்கு விளக்கிச் சொல்லுவதற்கு முயற்சி மேற்கொள்ளப்பட்டது. இந்த முயற்சியின் தொடக்கமாகத்தான் கடந்த 29.8.2009ஆம் நாளன்று மலேசியாவில் அமைந்துள்ள மலாயாப் பல்கலைக்கழகத்தில், 'ஓலைச்சுவடிகளின் தோற்றமும் தொடர்ச்சியும்' எனும் தலைப்பிலான ஒரு நாள் கருத்தரங்கம் நடத்தப்பட்டது. இக் கருத்தரங்கில் தஞ்சைப் பல்கலைக்கழகத்தின் ஓலைச்சுவடித் துறையைச் சார்ந்த கல்வியாளர் முனைவர் மோ.கோ. கோவை மணியும், தரமணி உலகத் தமிழாராய்ச்சி நிறுவனத்தைச் சார்ந்த கல்வியாளர் முனைவர் தி. மகாலட்சுமியும், மலாயாப் பல்கலைக் கழகத்தின் கல்வியாளர் கோவி. சிவபாலனும் ஆய்வுக் கட்டுரைப் படைத்தனர். இக்கருத்தரங்கு தொடர்பான செய்திகளை மலேசியாவின் தமிழ் அச்சு, மின்னூடகங்கள் சிறந்த முறையில் விளம்பரம் செய்திருந்தன. கல்வியாளர்கள், மாணவர்கள், பொது அமைப்புகளைச் சார்ந்தவர்கள், பொதுமக்களென 300 பேர் இக்கருத்தரங்கில் கலந்து கொண்டனர்.

இக்கருத்தரங்கில் கட்டுரைப் படைப்பாளர்களாகக் கலந்துகொண்ட கல்வியாளர்கள், நாடி சோதிட எழுத்து என்று ஒன்று கிடையாது என்றும், மீடியம் என்று சொல்லக்கூடிய தேவதைகளை வசியம் செய்து வைத்துக்கொண்டு அவற்றின் துணையுடன்தான் நாடி சோதிடர்கள் பலன் சொல்லுகின்றார்கள் என்ற கருத்தையும் முன்வைத்திருந்தார்கள். இக்கருத்தின் நம்பகத்தன்மையை ஆராயும் நோக்கத்துடன் கள ஆய்வு ஒன்று

தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. எதிர்காலத்தில் சுவடியியல் சார்ந்த எக்கருத்தையும் ஆய்வுக்கண்ணோட்டத்துடன் அணுகி ஆராய்ச்சி அடிப்படையிலேயே முடிவு காண்பது என்று கருத்தரங்கின் ஏற்பாட்டுக் குழுவினர் முடிவுசெய்துள்ளனர். அதற்கான அடிப்படை வேலைகளையும் இவர்கள் தற்போது மேற்கொண்டு வருகின்றனர்.

எதிர்காலத் திட்டங்கள்

மலேசியத் தமிழ்ச் சுவடியியல் ஆய்வு மையம் ஒன்றை அமைப்பதற்கான பணிகள் தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இம்மையம் பல்கலைக்கழகத்தைச் சார்ந்து செயல்படும் வண்ணம் திட்டங்கள் வரையப்பட்டு வருகின்றன. ஆய்வு மையத்தின் நோக்கங்கள் பின்வருமாறு அமைந்துள்ளன:

☞ சுவடிகளைச் சேகரித்துப் பாதுகாத்தல்

☞ சுவடிகளைக் கணினியில் ஏற்றுதல்

☞ குறுங்காலச் சுவடி வாசிப்புப் பயிற்சிகளை மாணவர் களுக்கும் பொதுமக்களுக்கும் நடத்துதல்.

☞ தமிழகத்துக் கல்வியாளர்களை வரவழைத்துப் பயிற்சிப் பட்டறைகளும் கருத்தரங்குகளும் நடத்துதல்.

☞ மலாயாப் பல்கலைக்கழக இந்திய ஆய்வியல் துறையைச் சார்ந்த இளங்கலைப் பட்டப்படிப்பு மேற்கொள்ளும் மாணவர்களுக்குத் தமிழ்ச்சுவடியியலை ஒரு பாடமாக நடத்துவதற்காகப் பாடத்திட்டம் ஒன்று வரையப்பட்டு பல்கலைக்கழகத்தாரின் ஒப்புதலுக்காகச் சார்வு செய்யப் பட்டுள்ளது. ஒப்புதல் கிடைத்தவுடன் தமிழ்ச் சுவடியியல் பாடம் நடத்தப்படும்.

☞ விருப்பமுள்ள இளங்கலைப் பட்டப்படிப்பு மாணவர்கள் தமிழ்ச் சுவடித்துறையைத் தங்களின் ஆய்வுப்பணி நோக்கத்துக்காகத் தேர்வு செய்து ஆய்வை மேற்கொள்ளலாம்.

☞ முதுகலைப்பட்டம், முனைவர்ப்பட்டத்துக்கான ஆய்வு களைச் சுவடியியல் துறையில் மேற்கொள்ள ஊக்குவித்தல்.

☞ தமிழகத்திலுள்ள சுவடி ஆய்வு மையங்கள், பல்கலைக் கழகங்கள் ஆகியவற்றுடன் புரிந்துணர்வு ஒப்பந்தம் செய்தல்.

☞ தமிழகக் கல்வி மையங்களிலுள்ள சுவடியியல் துறைசார் மாணவர்களுடன் மாணவர் மாற்றுமுறை பாடத்திட்டத்தை உருவாக்குதல்.

- தமிழைச் செம்மொழி அரியாசனத்தில் ஏற்றி வைத்தப் பெருமைக்குரியது தமிழக அரசு. ஓலைச்சுவடிகளைப் பாதுகாப்பதில் மலேசியத் தமிழர்களுக்கு இருக்கின்ற கடப்பாட்டையும் ஆர்வத்தையும் உணர்ந்து அவர்களது நோக்கங்களையும் திட்டங்களையும் வெற்றியடையச் செய்வதற்காக இத்தமிழக அரசு மலேசியத் தமிழர்களுக்குச் சில சலுகைகளை வழங்கி உதவலாம்.
- மலேசியத் தமிழர்கள் மேற்கொண்டு வரும் சுவடி சேகரிப்புப் பணி ஒரு புறம் இருக்க, சுவடியியல் பயிற்சிகளை அங்குள்ள தமிழர்கள் முழுமையாகப் பெறுவதற்குப் பல்துறை சார்ந்த சுவடிகள் சிலவற்றைப் பயிற்சி நோக்கத்துக்காகக் கொடுத்து உதவ வேண்டும். ஏனெனில் இங்குள்ள சட்டவிதிகளின்படி சுவடிகளை அயல் நாடுகளுக்குக் கொண்டு செல்வதற்குக் கட்டுப்பாடு அல்லது தடைகள் உள்ளன.
- இங்கிருந்து மலேசியாவுக்குக் கொண்டு செல்லப்படும் சுவடிகளின் பாதுகாப்புப் பற்றித் தமிழக அரசு ஐயம் கொள்ளத் தேவையில்லை. ஏனெனில் சுமார் அறுபது ஆண்டுகளுக்குமுன் ஆயிரக்கணக்கான தமிழ் நூல்களைத் தமிழகத்திலிருந்து மலேசிய நூலகங்களுக்கு வாங்கிச் சேர்த்தார் தமிழவேள் கோ.சாரங்கபாணி. அந்த நூல்கள் எல்லாம் இன்று வரை கண்ணேபோல் போற்றிக் காக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் இல்லாத பல அரிய நூல்கள்கூட மலேசியாவில் பாதுகாத்து வைக்கப் பட்டுள்ளன.
- மலேசியத் தமிழர்கள் குறிப்பாக மாணவர்கள் அவ்வப் போது தமிழகம் வந்து குறுங்காலச் சுவடி வாசிப்புப் பயிற்சி மேற்கொள்வதற்கான முழுச்செலவுகளைச் செம்மொழித் திட்டத்தின்கீழ் தமிழக அரசு ஏற்று உதவ வேண்டும். அதுபோன்றே தமிழகத்து அறிஞர்கள் மலேசியாவுக்கு அவ்வப்போது வந்து சுவடியியல் பயிற்சிகளை நடத்து வதற்குரிய செலவுகளையும் இந்த நல்லரசு ஏற்று உதவ வேண்டும்.

முடிவுரை

தமிழறிஞர் பலர் சுவடிச் சேகரிப்பு மற்றும் சுவடிப் பதிப்பு ஆகிய பணிகளை மேற்கொண்டு அரிய சுவடிகள் பலவற்றை

அழிவிலிருந்துக் காப்பாற்றித் தமிழ் இலக்கிய உலகுக்குக் கொடுத்துள்ளனர். அந்த அரும்பணி இல்லாமல் இருந்திருந்தால் இன்று சங்க இலக்கியம் போன்ற இலக்கியச் சொத்துகளை இழந்திருப்போம். இன்றும் கூடத் தமிழ்நாட்டில் அரிய பல இலக்கியங்களை உள்ளடக்கிய பல்லாயிரக்கணக்கான ஓலைச் சுவடிகள் படிப்பாரற்றும் பதிப்பாரற்றும் கிடப்பதாகத் தெரிகின்றது. அவற்றுள் பல சிதிலமடைந்து அழிந்துகொண்டிருக்கின்றன. தமிழ் நாட்டு அறிஞர்கள் அவற்றைப் பாதுகாத்துப் பதிப்பிக்கும் பணியை முன்னெடுத்துச் சென்றுகொண்டிருக்கின்றார்கள். என்றாலும் குவிந்துக் கிடக்கின்ற சுவடிகளின் எண்ணிக்கையுடன் ஒப்பிட்டுப் பார்த்தால் இவ்வறிஞர்களின் எண்ணிக்கை மிகச் சிறியது. தமிழகத்து இளந்தலைமுறையினரும் இத்துறையின்பால் அவ்வளவாக ஆர்வம் காட்டுவதில்லை எனத் தெரிய வருகின்றது. இவ்வாறு தமிழர்களின் மரபுவழிச் சொத்துகளுக்குக் குறை நேரும்போது அக்குறையைக் களைகின்ற கடப்பாடு உலகத் தமிழர்கள் அனைவருக்கும் உண்டு. தமிழகத்தின் உயர்க் கல்விக்கூடங்களுடனும் இலக்கிய அமைப்புகளுடனும் நெருங்கிய அறிவுசார்ந்த உறவை வளர்த்து வருகின்ற மலேசியத் தமிழர்களுக்கு இக்கடப்பாடு நிறையவே உள்ளது.

துணைநூல்கள்

1. அயலகத் தமிழ்க்கலை இலக்கியம்-சமகாலச் செல்நெறிகள் (பதிப்.ந.கடிகாசலம், ச.சிவகாமி)2001. சென்னை : உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்.
2. மூன்றாவது உலக சித்தர் நெறி மாநாட்டுக் களஞ்சியம் (2010) கோலாலும்பூர் : அகத்திய ஞானபீடம்).
3. Journal of Indian Studies, Vol.10.(2010), Kuala Lumpur: Deparment of Indian Studies.
4. ஜோகூர் மாநிலத் தமிழர்களிடையே காணப்படும் நாடி சோதிட நம்பிக்கை(இளங்கலைப் பட்டத்துக்கான ஆய்வேடு) (2009), கோலாலும்பூர் : மலாயாப் பல்கலைக் கழகம்.
5. சித்தர் வாழ்வும் வாக்கும்:ஓர் ஆய்வுப் பார்வை(2009), சென்னை : சித்தர் ஆய்வு மையம்.
6. கள ஆய்வு, நேர் காணல்கள்

பாரம்பரிய அறிவுப் பேணுகை

முனைவர் சீதா லட்சுமி

பாரம்பரியம் என்பது நமது வரலாற்றுடன் தொடர்புடையது. ஆம் அது நாம் வாழ்ந்த காலத்தில் அல்லது நமக்கு முன்பிருந்தோர் வாழ்ந்த காலத்தில் இடம்பெற்ற வாழ்வை அவ்வாறே படம் பிடித்துக் காட்டுவது. இன்று அத்தகு பாரம்பரியத்தை எங்கே நாம் காணமுடியும்? பின்வரும் இடங்களில் காண முடியும்:

அரும்பொருளகம், இலக்கியம், வரலாற்று நூல்கள், புகைப்படங்கள், வரைபடங்கள், அகழ்வாராய்ச்சிப் பொருள்கள், கண்காட்சிக் கூடங்கள் போன்றவற்றைக் குறிப்பிடலாம். பலர், ஏதோ பழைய காலத்துப்பொருட்கள் என்றும் விலைபோகாத பொருட்கள் என்றும் மரபுசார் பொருள்களையும் அரும்பொருளகக் காட்சிப்பொருள்களையும் மலிவாக எண்ணி அவற்றின் மதிப்பை மிகவும் குறைத்துவிடுகின்றனர். ஆனால் அவை, கல்வியாளர்கள், கல்வித்துறைசார் ஆய்வாளர்கள், அரசாங்க அதிகாரிகள் ஆகியோர், பாரம்பரிய நிறுவனங்கள், பண்பாட்டு நிறுவனங்களின் பயன்பாட்டாளர்கள் ஆகியோர்தம் பார்வையில் வெவ்வேறு அணுகுமுறைகளை எடுத்துக்காட்டுகின்றன. மேலும் அவர்கள் ஒவ்வொருவரும் தரும் பொருளும் அல்லது கொள்ளும் பொருளும் வேறுபட்டதே. எனவே, “பரிசத்துக்கு ஏற்ற பெண்” என்பதுபோலப் பார்ப்பவரின் மதிப்புக்கும் உள்ளத்திற்கும் ஏற்ப அவர்கள் கொள்ளும் பொருளும் தரும் மதிப்பும் அமையும்.

பாரம்பரியம் சார்ந்த வளங்கள்

பாரம்பரியம் சார்ந்த வளங்களில் பல அசையும் தன்மையன. பல அசையாத் தன்மையன. அவற்றில் சிலவற்றின் மதிப்பு பொருளால் மதிப்பிடக்கூடியது. வேறு சிலவற்றின் மதிப்பு, பொருள்களால் மதிப்பிட இயலாத சிறப்புடையன. தவிரவும், முறையான இலக்கிய, மானிடவியல், வரலாற்று, பண்பாட்டு, தத்துவ நோக்கிலான ஆய்வுகளின் வழியே பாரம்பரிய வளங்களின் சிறப்பை வெகுவாக எடுத்துக்காட்டி உயர்த்த முடியும். மேலும் இத்துறைகளைச் சேர்ந்த ஆய்வாளர்கள் முன்பு வந்த ஆய்வுகளை

இன்னும் ஆழமாக நோக்குவதும் பலதுறை நோக்கில் பாரம்பரிய ஆய்வு வளங்களை ஆராய்வதும் இன்னும் சிறப்பானதாக அமையும். அதாவது பலவற்றை ஆராய்ந்து பகுத்து ஒன்றுசேர்த்துப் புதிய நோக்கில் ஆராய்வது பயனுடையதாக இருக்கும். பாரம்பரிய வளங்களைப் பலரும் தொடர்ந்து அறிந்து போற்றி மகிழும் வகையிலும் பெருமைப்படும் வகையிலும் தமது இனம், மொழி, மரபுசார் அடையாளத்தை மேலும் தக்கவைத்துக்கொள்ளும் வகையிலும் பாரம்பரியவளங்களைக் கொண்டு கண்காட்சிகள் நடத்துதல், விளக்கநிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்தலும், கல்வித் துறை சார்ந்த நடவடிக்கைகளுக்கு ஏற்பாடு செய்தலும்(எடு. வினாடிவினா, கட்டுரைப்போட்டி, பேச்சுப்போட்டி, ஒப்படைப்புகளைச் செய்தல் போன்றன), தம் சுய கருத்துரைத்தலும்(live interpretation), வழிகாட்டுடதலுடன் கூடிய கல்விச் சுற்றுலாக்களுக்கு வழிசெய்தலும், வெளியீடுகள் வெளியிடுதலும், கூடுதலாகத் தகவல் வழங்குதல் ஆகிய சேவைகளின் வழியேயும் பாரம்பரியம் பற்றிய பல செய்திகளை எடுத்துக்கூற இயலும்(Gerard Corsane, 2005). மேலும் வரலாறு, பண்பாடு ஆகியவற்றுடன் தொடர்புடைய பாரம்பரியத்தைத் தொடர்ந்து பாராட்டி மகிழவும் முடியும் எனலாம்.

எப்படி உதவலாம்?

மனித வாழ்வில் வரலாறு என்பது குறிப்பிடத்தக்கது. ஒருவர் தமது வாழ்வில் அத்தகு வரலாற்றை உருவாக்குவதும் சராசரி மனிதனின் வாழ்வாக அதை விட்டுவிட்டுச்செல்வதும் அவரவர் கைகளில்தாம் உள்ளது. இன்று நாம் வாழும் வாழ்வு முன்னாளில் பலரது வாழ்வு வழங்கிய தியாகங்கள்தாம் எனில் மிகையில்லை. இந்நிலையில் ஒவ்வொரு நிலையிலும் ஒருவரது வாழ்வு பதிவு செய்யப்படவேண்டும். இங்குப் பதிவு என்பது என்ன? அது ஏன் இன்றியமையாதது? பதிவின் பயன் என்பது எத்தகு தன்மை வாய்ந்தது? நமது பதிவுகளை நாம் எவ்வாறு முறைப்படி படிநிலைகள் அடிப்படையில் பதிவுகளை ஒழுங்குபடச் செயல்படுத்தி எதிர்காலத் தலைமுறைக்கு வழிகாட்டி உதவுவது என்று இக்கட்டுரையில் பார்ப்போம்.

தஞ்சாவூர் சரஸ்வதி மகால் என்பது புகழ்பெற்ற பல அரிய வரலாறுகளைக் கொண்டது. ஆனால் அங்கே உள்ள பல வரலாற்று மூலங்களும் ஆவணங்களும் சிலைகளும் ஓரளவுக்கு நன்றாகச்

சாசனப்படுத்தி வைக்கப்பட்டுள்ளன. ஆனால் அவை போதா. இன்னும் சிறப்பாகச் சுத்தம் செய்யப்பட்டு இப்போதுதான் உருவாக்கியது போல அவ்விடத்தை அழகுபடுத்திப் பார்வை யாளர்களை ஈர்க்கலாம். அயல்நாட்டினர் பலரை ஈர்த்துத் தமிழ்ப் பாரம்பரியத்தையும் இந்தியப்பாரம்பரியத்தையும் உலகமுழுதும் பரப்பலாம்.

அயல்நாடுகளில் பாரம்பரியப் பாதுகாப்பு சிறப்பாகப் பராமரித்துப் பாதுகாத்து வருகின்றனர். ஸ்பானியக் கட்டடக்கலைஞர் ஜூவான் நவார்ரோ பால்டிவெக்(Juan Navarro Baldeweg) பண்பாட்டு, வரலாற்றுப் பதிவைப் பாதுகாத்தல் குறித்துப்பேசும்போது, ரோமில் உள் பாலாஸோ ஸூக்காரி, லுசுல்லியன் வில்லா(Palazzo Zuccari and the Lucullian Villa) தோட்டங்களில் உள்ள நூலகம் பற்றிய பல அரிய செய்திகளைப் பதித்துள்ளார். அதாவது, அது இயற்கையுடனான மனித இடைவினையாடலை எதிரொளிக்கிறது. மேலும் அது நிழலுக்கும் விளக்குக்கும் இடையிலான சிறப்பான இடைவிளையாடலை எடுத்துக்காட்டுகிறது. மேலும் விளக்கத்தையும் அறிவையும் எடுத்துக்காட்டும் வகையில் அது அமைந்துள்ளது என்றும் அவர் தெரிவிக்கிறார். வரலாற்றை மக்களுக்கு எடுத்துக்காட்டும் வகையில் அதைப் பாதுகாப்பது மிகவும் இன்றியமையாத சவால் என்று அவர் தெரிவிக்கிறார். இறுதியில் ஜனவரியில் உரோமில் கொண்டாடப்பட்ட அந்த புதிய நூலகக் கட்டடம் அனைத்துலக ஆய்வுச்சமூகத்துக்குப் பயன்தரும் ஒன்றாக அமைகிறது. அதன் நிர்வாக இயக்குனராக இருக்கும் எலிஸபெத் கிய்வென்(Elisabeth Kieven) பார்வையாளர்களுக்கும் கலை வரலாற்றாய்வாளர் களுக்கும் நூலகம் 1, பிப்ரவரி 2013 அன்று திறக்கப்பட்டது(Max Planck Society –MPG, (2013)..

சிங்கப்பூரில் மரபுடைமையைப் பத்திரப்படுத்திப் பாதுகாப்பது என்பது குறிப்பிடத்தக்க இடம்பெற்று வருகிறது. எனினும் அதைச் செயல்படுத்துவதில் சில சிரமங்களும் எதிர்ப்படத் தான் செய்கின்றன. 700 சதுரக்கிலோ மீட்டர் நிலப்பரப்பைக் கொண்டுள்ள இங்கு 5 மில்லியன் மக்கள் வாழ்கிறார்கள். இந்நிலையில் மக்களுக்குப் போதிய இடம் தேவைப்படுகிறது. இதற்கிடையில் பாரம்பரியச் சின்னங்களையும் சிறப்புகளையும் பாதுகாக்கவும் பத்திரப்படுத்தவும் ஆவணப்படுத்தவும் இட வசதிகளைத் தக்கவைப்பது, பொருளாதார முன்னேற்றத்தை இலக்காகக் கொள்ளவேண்டிய நிலையில் உயர்மாடிக் கட்டடங்கள்

அதிகம் கட்டப்படவேண்டிய நிலையில் பாரம்பரியச் சிறப்புமிக்க பகுதிகளுக்கு இடவசதியை ஏற்படுத்துவது, தக்கவைப்பது ஆகியன சிரமங்களாக உள்ளன. இதற்கிடையில் பாரம்பரியச் சின்னங்களையும் மரபுடைமைப் பகுதிகளையும் தக்கவைப்பது குறித்த மக்களின் இருவகைக் கருத்துகளும்கூட ஒரு சவாலாக அமைந்துள்ளது எனலாம். எனினும் எல்லாவற்றையும் சமாளித்து, நாடு, அடையாளம், படைப்பாக்கம் ஆகியவற்றை மரபுடைமை மற்றும் பண்பாட்டு மேம்பாட்டின் மூலம் பாதுகாத்தல் (To foster nationhood, identity and creativity through heritage and cultural development.) என்பதை நோக்காகக் கொண்டு தேசிய மரபுடைமை வாரியம் என்ற அரசு நிறுவனம் செயல்பட்டு ஆவண செய்து வருவது குறிப்பிடத்தக்கது

வாழ்ந்ததற்கும் வாழ்வதற்கும் பொருள் தரும் சிறப்பு

வரலாறு என்பது நமது முன்னோர்தம் வாழ்வு பற்றி எடுத்துக்கூறும் துறை மட்டுமல்ல. அது நாம் இன்று வாழ வழிவகுத்த ஓர் அடித்தளத்தின் விரிவான வளம் எனலாம். வரலாறு என்பதை ஏன் நாம் பாதுகாக்க வேண்டும் என்றால் அது இல்லாவிட்டால் நாம் யார், நமது அடையாளம் என்ன என்று யாருக்கும் தெரியாது போய்விடும். மேலும் இன்றைய உலகில் அன்றுபோல் பல இயற்கைப் பேரிடர்களும் ஆக்கிரமிப்பு வேலைகளும் இடம்பெறக்கூடும். எனவே நாம் முறையாகப் பதிந்து வைத்தால் அவை நமது சந்ததியினர் தன்னம்பிக்கையுடன் மூச்சுவிட வழிவகுக்கும். அல்லாவிடில் அடிமைகள்போல் அவர்கள் வாழ வழிசெய்துவிடும்.

வரலாறு எனும்போது வெறும் ஆட்சி, கொள்கைகள் என்று பொருள்படாது. அது ஒரு நாட்டின் தலைவர்கள், அரசியல், கல்வி, உள்ளிட்ட பல துறைகளில் அந்நாடு எவ்வாறு அமைந்திருந்தது, மக்களின் பண்புநலன்கள் எவ்வாறு அமைந்திருந்தன, இலக்கிய வளம் எவ்வாறு இருந்தது, கல்வியாளர்கள் எவ்வாறு சமூக முன்னேற்றத்துக்கு அறிவு வழியே வழிசெய்தனர் எனப் பல கூறுகளை எடுத்துக்கூறும் பாங்கினது எனலாம்.

வரலாறு என்றுகூறும்போது, சமூகம் சமூகப்பொருளாதாரம், கல்வி, கேள்வி, அரசியல், பொருளாதாரம், பிற நாடுகளுடன் தொடர்பு எனப் பல நிலைகளில் எவ்வாறு அமைந்திருத்து எனலாம். மேலும் \இத்தகு பாதுகாப்பின் வழி'யே என்ன பயன் கிடைக்கும் என்றால் நமது பாரம்பரியம் தனிச்சிறப்புடன் திகழும்.

கிடைக்காத அரிய பொக்கிஷங்கள் பெரும் பொருளியல் வளத்தைத் தரும். நமது நாடு குறித்த ஆய்வுகள் அதிகம் எழும். பல புதிய கண்டுபிடிப்புகள் உருவாக வழி கிடைக்கும். இன்னும் என்ன நிலையில் முன்னேறலாம் என்று பல துறைகளிலும் புதின முனைப்புகள் உருவாக வழி கிடைக்கும்.

தலைநகரின் பாரம்பரியச் சிறப்பு

அமெரிக்காவில் பென்சில்வேனியா மாநிலத்தில் ஃபிலடெல்ஃபியா வரலாற்று வட்டாரத்தில்(Philadelphia Histori-cal Disctrict) பெஞ்சமின் ஃபிராங்க்ளின் வாழ்க்கை வரலாறு குறித்த அரும்பொருளகம், அவர்தம் வாழ்விடம் உட்படப் பல கூறுகளைச் சிறுவர்களுக்கும் இளையர்களுக்கும் சுற்றுப் பயணிகளுக்கும் எடுத்துச்சொல்வதில் பெரும் பங்காற்றி வருகிறது (http://www2.fi.edu/exhibits/permanent/ franklin_ national_ memorial.php)நாட்டின் பாரம்பரியத்தைக் கதைகளாகக் கூறும் கதை சொல்லிகள்(http://histpres.com/actors-historic-philadelphia-pa) இவ்வாறு வரலாற்றையும் பண்பாட்டையும் நாட்டின் தனித்தன்மையையும் பாதுகாக்கிறார்கள். இதன் வழியே அவர்கள் தங்கள் நாட்டுக் குழந்தைகள் அமெரிக்கக் குடிமக்களாகச் சிறந்து விளங்கவும் வழி செய்கிறார்கள். இங்கு இது ஒருவகையில் பாரம்பரியப் பாதுகாப்பாகத் திகழ்கிறது எனலாம். இது அங்கு அமைந்துள்ள நிர்வாகத்துறையின் முயற்சி என்பது குறிப்பிடத் தக்கது. இந்தப்பகுதிதான் முன்பு அமெரிக்காவின் தலைநகராக இருந்து நிர்வாகத்துறையில் பல பெரும் சாதனைகளைப் படைத்தது என்பது கட்டுரையாளர் நேரடியாகக் கதைசொல்லிகள் வழியே பெற்ற செய்தி அனுபவமாகும்.

வரலாற்றுப் பாதுகாப்பு என்ற கருத்து அல்லது தொடர் அமெரிக்காவில் பயன்படுத்தப்பட்டு வந்தாலும் 1960கள்வரை அது தனக்கென ஒரு தனி முக்கியத்துவம் பெறவில்லை. 1960களில் நகர மறுபுதுப்பிப்புப் பணியை அது தொடங்கும்வரை அத்துறை யாரும் கண்டுகொள்ளாத ஒரு துறையாக இருந்தது என்று கூறலாம். மேலும் ஆங்கிலம் பேசும் நாடுகள் மரபுடைமை பாதுகாப்பு(Heritage conservation) என்று கட்டடப் பாதுகாப்பையும், நகரபாதுகாப்பு, நிலப்பகுதிப்பாதுகாப்பு, கட்டடச்சூழல் பாதுகாப்பு, அசையாப்பொருள் பாதுகாப்பு எனப் பலவகைகளில் பாதுகாப்பைப் பல நிலைகளில் மேற்கொண்டு வருகிறது.

பாதுகாப்பு எனும்போது 1944இல் இங்கிலாந்தில் திட்டமிடலில் முக்கியக் கூறாத அமைந்தது. 17ஆம் நூற்றாண்டின்

இடைப்பகுதி வரையிலான வரலாற்றுக் கட்டடங்கள் பாதுகாக்கப் பட்டன. பாதுகாப்பு தொடர்பாகச் சட்டங்களும் இடம்பெற்றன (Amanda Birney)

உலக அளவில் யுனெஸ்கோ நிறுவனத்தின் தொல்பொருள் பாதுகாப்பின்கீழ் மரபுடைமைப் பாதுக்காப்புக் கட்டடங்களான பல அரிய சின்னங்கள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. தமிழகத்தில் தஞ்சைப்பெரிய கோயில் இவ்வாறு இடம்பெற்றுள்ள ஒரு தொல்பொருள் பாதுகாப்புப் பகுதி எனலாம்.

கட்டடங்கள் மட்டுமல்ல

கட்டடங்கள் மட்டுமா பாதுகாக்கப்படுகின்றன? இலக்கியங் களும்தாம் அப்படியலில் இடம்பெற்றுப் பாதுகாக்கப் பட்டு வருகின்றன. இலக்கியங்கள் என்பன எதிர்காலத்துக்குப் பயன்பட வேண்டும் என்றும் அவை ஓலைகளில் செல்லரித்துப் போகாது இருக்கவேண்டும் என்றும் அரிய சிந்தனையில் அரும்பெரும் உழைப்பைத் தந்த தமிழ்த்தாத்தா உ.வே.சாமிநாத ஐயர் பல இலக்கியங்களை ஊர் ஊராகச்சென்று சேகரித்தார். அவரது உழைப்பின் பயனை இன்று நாம் அனுபவிக்கிறோம். நமது நூலகங்கள் அரிய நூல்களின் தொகுப்பாக விளங்குவதற்கு அவர் ஒரு காரணம்!

பாதுகாப்பு எனும்போது எழுதப்பட்ட படைப்புகள், ஓலைச் சுவடிகள் ஆகியவற்றைப் பாதுகாப்பது இன்றியமையாதது. இவைதாம் அக்காலத்து எழுத்துப்படைப்புகள். முன்னேறிய தொழில்முறையில் புத்தக அச்சிடும் இயந்திரங்களை அறிமுகப்படுத்து முன்புவரை இவைதாம் நமது வாசிப்பு வாயில்களாக அமைந்திருந்தன.

எப்படிப் பாதுகாப்பது?

பாதுகாப்பு எனும்போது எவ்வாறு பாதுகாப்பது என்று அறிவது பயனுடையது. அவ்வகையில் பாரம்பரியமாக வேப்பிலை, மூலிகைகள், சாம்பிராணிப்புகை போன்றவற்றைக் கொண்டு பூச்சிகள் அண்டாதவகையில் பாதுகாத்து வந்துள்ளனர். எனினும் தற்போது பல தொழில் நிறுவனங்கள் இத்தகு பூச்சிகள் அண்டாவகையில் பாதுகாக்கும் பொறுப்புகளை மேற்கொண்டு வருகின்றனர். பலருக்கு வகுப்பும் எடுத்து வருகின்றன. அமெரிக்காவில் உள்ள The Northeast Document Conservation Center, இத்தகு பாதுகாப்பில் பெரும்பங்கு ஆற்றிவருகின்றது.

உரிய படைப்புகளை நன்கு தொகுத்துவைத்தல், பாதுகாப்புக்கு ஏற்ற வழிமுறைகளைக் கூறுதல் எனச் சமூகப்பணிகளில் ஈடுபட்டு வருகிறது.

பாதுகாப்பில் உள்ள சிக்கல்களின்போது அவை தொடர்பான பட்டத்தொழில் நிபுணத்துவ நிறுவனங்கள் (எடு. the American Institute for Conservation of Historic and Artistic Works (AIC), உதவி செய்ய முன்வந்துள்ளன. அவை உரிய பாதுகாப்பாளரை எவ்வாறு தெரிவு செய்வது, அவரிடமிருந்து எவ்வாறு உரிய பராமரிப்பைப் பெறுவது, பின் வழிகாட்டிக் குறிப்புகளை எங்கிருந்து பெறுவது போன்ற பல அரிய செய்திகளை வழங்குவதில் ஈடுபட்டுள்ளது.

பராமரித்துப் பாதுகாத்தல்

தற்போது பாதுகாப்பு எனும்போது உள்ளதை உள்ளவாறே பராமரித்தல், உள்ளதை மேலும் செம்மைப்படுத்தி மற்றொரு ஊடகத்தில் பதித்துப் பராமரித்தல், மின்னணு முறையில் பராமரித்தல் என்று பலவகைகளில் பாரமரித்தலை மேற் கொள்ளலாம். இன்று நுண்ம நிலைப் பராமரித்தல் என்பது மிகவும் புகழ் பெற்றது. மேலும் இத்தகு முயற்சிகள் பாதுகாப்பது முதல் முடிவுகள் எடுப்பதுவரை எல்லாவற்றிலும் பொதுமக்களின் ஈடுபாடும் பங்களிப்பும் இருக்கவேண்டும் என்பதை எடுத்துக் கூறும் வகையில் அமைந்துள்ளன. இங்குப் பத்திரப்படுத்திப் பாதுகாத்தல், தடுப்புப்பாதுகாப்பு(Preservation and Preventive Conversation என்ற இரு படிநிலைகளில் இடம்பெறும் இன்றியமையாக் கூறுகள் மிகவும் இன்றியமையாதனவை.

வரலாற்றுநோக்கில் பாதுகாப்பதன் வரலாறு

பாதுகாப்பது அதாவது வரலாற்றுநோக்கில் வரலாற்றுடன் தொடர்புடையவற்றைப் பத்திரப்படுத்திப் பாதுகாப்பது என்பது 1960கள் வரை அதிகமாக அறியப்பட்ட தொடராக இல்லை என்கிறார் ஆய்வாளர். எனினும் 17ஆம் நூற்றாண்டின் இடைப் பகுதியிலிருந்து வரலாற்று இடங்களைப் பாதுகாத்தல் என்பது இடம்பெற்று வந்துள்ளது. பணம் படைத்த ஆங்கிலேயர்கள் வரலாற்றுக் கலைப்பொருட்களைத் தொடர்ந்து சேகரித்தனர். பிறகு அப்பொருள்கள் பத்திரப்படுத்திப் பாதுகாத்திடும் பல பெரும் நடவடிக்கைகளுக்கு வழி செய்தன. 1913இல் வரலாற்றுப் பாதுகாப்பு என்பது ஆங்கிலச் சட்டத்தின் ஒரு பகுதியாக ஆனது.

இங்கிலாந்தில் அவ்வாண்டில் இயற்றப்பட்ட பழங்கால நினைவுச் சின்னங்கள் சட்டத்தின்படி வரலாற்றுச் சிறப்புகளையும், வரலாற்றுடன் தொடர்புடைய இடங்களையும் படைப்புகளையும் அதிகார முறைப்படிப் பாதுகாக்க வழி கிடைத்தது. 1944இல் இத்தகு பாதுகாப்பு, நகர மற்றும் நாட்டுத் திட்டமிடல் சட்டம் வரலாற்றுச் சிறப்பு மிக்க இடங்களைப் பாதுகாத்தல் குறித்த சட்டங்களில் முன்னுரிமை பெற்றதாகவும் புதிய திட்டப்பணிகளுக்கும் ஒப்படைப்புகளுக்கும் அனுமதி தருவதிலும் முன்னுரிமை பெற்றதாகவும் அமைந்து வந்துள்ளது. அமெரிக்காவிலும் வர்ஜீனியா பழம்பொருள்களைப் பாதுகாக்கும் அமைப்பு வர்ஜீனியாவிலுள்ள ரிச்மண்ட் பகுதியில் 1889இல் உருவாக்கப் பட்டது. நாட்டில் இவ்வாறு வரலாற்றுப் பொருள்களைப் பாதுகாக்கும் அமைப்பு முதல்முதலில் இங்குதான் உருவாக்கப் பட்டது. வரலாற்றுப் பொருள்களைப் பாதுகாத்தல் என்பது பல பல்கலைக்கழகங்களில் பாடத்திட்டத்தில் ஒரு பகுதியாக அமைந்துள்ளது குறிப்பிடத்தக்கது. மேலும் வரலாற்றுப் பாதுகாப்பு என்பது ஆய்வுக்குரிய ஒரு துறையாகவும் அமைந்துள்ளது.

தமிழகத்தில் பாரம்பரியப் பாதுகாப்பு

தமிழகத்தில் இத்தகு பாதுகாப்பு என்பது தொடர்ந்து நடைபெற்றுவருகிறது. நீண்டதொரு பாரம்பரியத்தைக் கொண்ட ஒரு மொழி, பண்பாடு, வரலாறு, பாரம்பரிய ஆகிய அனைத்தும் இன்னும் பல்லாயிரம் ஆண்டுகள் சிறப்பாகத் திகழவும் அவற்றிலிருந்து பல அரிய உண்மைகள் கண்டுபிடிக்கப்பட்டு வெளியுலகிற்குத் தெரியவும் தமிழர்தம் புகழ் உலகில் ஓங்கவும் இத்தகு பாதுகாப்பு அவசியமானதாக அமைகிறது. தொல்பொருள் பாதுகாப்பு என்பது குறிப்பிடத்தக்க ஒரு துறையாக அமைந்துள்ளது. அரிக்கமேடு, மாமல்லபுரம், திருப்பரங்குன்றம் போன்ற பல பல பகுதிகளில் இத்தகு முயற்சிகள் வெற்றியளித்துவருகின்றன. உலகத்தமிழாராய்ச்சி நிறுவனம், திருவான்மியூரில் உள்ள உ வே சாமிநாதையர் நூலகம் ஆகியன பழைய நூல்களையும் ஓலைச்சுவடிகளையும் முறையாகப்பாதுகாத்து அவை தொடர்பான ஆய்வுப்பணிகளில் ஈடுபட்டுவருகின்றன. எழும்பூரில் உள்ள தொல்பொருள் ஆய்வு நிறுவனம் எல்லாவகையான பழம்பொருள் களையும் தரவுகளையும் ஆய்வுநோக்கில் பாதுகாத்து மக்களின் பார்வைக்கு வைத்துவருகிறது. மறைமலையடிகள் நூலகம் அரிய

தமிழ் நூல்களைப் பாதுகாத்துப் பொதுமக்களுக்கும் ஆய்வாளர் களுக்கும் கல்விச்சேவை வழங்கிவருகிறது.

திருவான்மியூரில் ஆசிய ஆய்வு நிறுவனம்(Institute of Asian Studies) என்ற ஆய்வு நிறுவனம் யுனெஸ்கோவின் ஆதரவுடன் ஓலைச்சுவடிகளைப் பாதுகாக்கும் ஆய்வுத்திட்டம் (UNESCO's Memory of the World project) ஒன்றைச் செயல்படுத்தி வருகிறது. அதன்படி ஈராயிரம் ஆண்டுகளுக்கும் மேலாகப் பழமை வாய்ந்த படைப்புகள் பனையோலையில் எழுதி வைக்கப்பட்டு முறையாகப் பாதுகாக்கப்பட்டுச் சீர் செய்யப்பட்டு வருவதை நிறுவனத்தின் இணையப்பக்கம் எடுத்துக் கூறுகிறது. இத்தகு ஓலைச்சுவடிப் பாதுகாப்பகங்கள் பல இருப்பினும் முறையாகப் பாதுகாக்கப்படுவது இன்றியமையாதது. இந்த நிறுவனம் 1990முதல் ஓலைச்சுவடியியல் குறித்த பயிலரங்கை நடத்திவருகிறது உலகத்தமிழாராய்ச்சி நிறுவனத்தில் ஓலைச் சுவடிகள் குறித்த பல ஆய்வுத்திட்டங்கள் நடைபெற்று வருகின்றன. தமிழக ஆவணக்காப்பகத்திலும் பல அரிய பாரம்பரியப் பொக்கிஷங்கள் பாதுகாக்கப்பட்டுவருகின்றன. தமிழகம் முழுவதும் பல அரிய சிற்பங்கள், கலைக்கோவில்கள், வழிபாட்டிடங்கள், வாழ்வியல் கூறுகள் போன்றன பல அமைப்புகளால் பாதுகாக்கப்பட்டு வருகின்றன. அனைத்துக்கும் மேலாக ஒவ்வோர் இல்லமும் ஓர் ஆவணக்காப்பகமாகப் பலவற்றைப் பத்திரப்படுத்திப் பாதுகாத்து வருகின்றது எனலாம்.

எனினும் இவை தொடர்பான முயற்சிகள் இன்னும் அதிகமாக ஒருங்கிணைந்த அளவில் இடம்பெறும்போது தமிழகத்தின் மற்றும் இந்தியாவின் பெருமை உலகநாடுகளில் அதிகமாகப்பேசப்படும் நிலை உள்ளது. இங்கு இந்தியர்களின் பாரம்பரியப்பெருமையும் பண்பாட்டுச் சிறப்பும் அதிக அளவில் உலகமுழுதும் பரவும் நிலை அமையும். மேலும் ஆய்வாளர்கள் பலரும் புலம்பெயர் தமிழ்மக்களும் இத்தகு துறையில் ஆய்வு செய்யவும் ஒப்பீட்டு ஆய்வு மேற்கொள்ளவும் வழிவகைகள் உள்ளன. மனித இனத்தின் மாண்புக்கும் பலவகையான நலத் திட்டங்களுக்கும் இத்தகு ஆய்வுகள் உதவும் என்பது திண்ணம்.

பாரம்பரியம் எனும்போது அங்கே சுற்றுப்பயணச்சிறப்பு, பாரம்பரியச்சிறப்பு, பண்பாட்டு மூலதனம்(Bourdieu P., 1986), அடையாள மூலதனம், சமூக மூலதனம், அறிவு மூலதனம், பண்பாட்டு மூலதனம் போன்ற பலவும் தமிழர்தம் வாழ்வில்

எவ்வாறு இடம்பெற்றுள்ளன, அவை எவ்வாறு இன்றைய உலகளாவிய சூழலில் தமிழர்களுக்கு வாழ்வில் முன்னேறப் பேருதவி புரியும் என்பது தெள்ளத்தெளிவு. மனித இனத்தின் மாண்புகளைப் பற்றி அறிய இத்தகு கூறுகள் உதவும். மேலும் பொருளாதார ரீதியிலும் அறிவு ரீதியிலும் ஒரு சமுதாயமும் நாடும் முன்னேற இத்தகு பாரம்பரியப் பொக்கிஷங்கள் உதவும் என்பதும் மறக்கவோ மறுக்கவோ முடியாததவை எனலாம். எனவே தொடர்ந்து பாரம்பரியம், பழமை, பண்பாடு, வரலாறு, முன்னோர்தம் வாழ்வியல் முறைகள் ஆகியன அனைத்தையும் முறையாகப் பதிவு செய்து பிற்காலச் சந்ததியினரும் உலகமும் உய்த்துணர்ந்து மகிழவும் அறிவுத்துறையில் மேம்படவும் வழிசெய்வோமாக! இது நமது கடமை அல்ல கடப்பாடு எனலாம்!

நமக்கு இவ்வுலகைச் சிறப்பான உலகமாக அறிமுகப் படுத்திய நம் பெற்றோரையும் முன்னோரையும் போல நாமும் நம் தொடரும் தலைமுறைகளுக்குப் பலவற்றை விட்டுச் செல்லும்வகையில் நம்மைப் பாதுகாப்போம்! நம் வரலாற்றையும் பண்பாட்டையும் பத்திரப்படுத்திப் பாதுகாத்து ஆவணப்படுத்துவோம்!

A painful past is a box office(Horn 1997:54 in Linda K Richter, 2005)

துணைநூல்பட்டியல்

Amanda Briney. Historic Preservation. An Overview of Historic Preservation and Its Importance to Urban Planning Website: http://geography.about.com/od/urbaneconomic geography/a/historicpreserv.htm accessed on 22 February 2013.

Bourdieu, P. (1986) The forms of capital. In J. Richardson (Ed.) Handbook of Theory and Research for the Sociology of Education (New York, Greenwood), 241-258.Website http://www.marxists.org/reference/subject/philosophy/works/fr/bourdieu-forms-capital.htm accessed on 22 February 2013.

Brian Graham, Gregory John Ashworth and John E Tunbridge. 2005. In Heritage , Museums and Galleries: An Introductory Reader, Ed: Gerard Corsane. New York: Routledge, 26-37.

Care, Handling, and Storage of Works on Paper website http://www.loc.gov/preservation/care/paper.html accessed on 05022013

Challenges Singapore faces in preserving our heritage. Website http://ihmonumentace.wiki.hci.edu.sgChallenges+Singapore+faces+in+preserving+our+heritage accessed on 22 February 2013.

http://www2.fi.edu/exhibits/permanent/franklin_national_.memorial.php Accessed on 20 February 2013.

Histpres.com. Website http://histpres.com/actors-historic-philadelphia-pa Accessed on 20 February 2013.

Linda K Richter. 2005. The politics of heritage tourism development emerging issues for the new millennium. In Heritage , Museums and Galleries: An Introductory Reader, Ed: Gerard Corsane, 2005. New York: Routledge,257-271.

Max Planck Society (MPG) (2013). New building for literary treasures. Website http://www.research-in-germany.de/120720/2013-01-24-new-building-for-literary-treasures,sourcePageId=12484.html accessed on 3 February 2013.

Memory of Asia: Palm-leaf Manuscript Project. Institute of Asian Studies. Website http://xlweb.com/heritage/asian/main.htm#journal accessed on 21 February 2013.

Preface, Heritage , Museums and Galleries: An Introductory Reader, Ed: Gerard Corsane, 2005. New York: Routledge.

Robert Lumley, 2005. The debate on Heritage reviewed, In Heritage , Museums and Galleries: An Introductory Reader, Ed: Gerard Corsane, 2005. New York: Routledge. 15-25.

Why Historic Preservation? http://www.historichawaii.org/WhyPreserve/WhyPreserve.htmlAccessed on 05 Feb 2013

Website: http://www.historichawaii.org/Articles/MCBHNetZeroHouse.html Accessed on 20 February 2013.

ஓலையும் மின் ஓலையும்

இளங்குமரன் சிவநாதன்

சந்ததி சந்ததியாக, எண்ணங்களை வெறும் மணலில் கைவைத்து எழுதிப் பழகி, பின்னர் கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச்சுவடி, அச்சுத்தாள் என வளர்ந்து தற்போது கணிப்பொறி தொடுதிரை, இணையம் வரை இன்று தமிழ் வளர்ச்சியும் ஏற்றமும் கண்டு பவனி வருகின்றது. 1980-ஆம் ஆண்டுவாக்கில் முதன் முதலில் தமிழ் கணினியில் இடம்பெறத் தொடங்கியது. பின்னர் 1995-ஆம் ஆண்டு முதல் தமிழ் இணையத்தில் உலா வர தொடங்கியது. இணையத்தில் தமிழ் இடம்பெறத் தொடங்கி ஏறக்குறைய 18 ஆண்டுகள் ஆகிவிட்டன. காலந்தோறும் தமிழ் அவ்வப்போதைய வளர்ச்சியின் உச்சானிக்கொம்பில் ஏறிப் பயணித்துப் பல்வேறு பிரதிரூப மாற்றங்களையும் ஏற்றங்களையும் கண்டு வந்திருக்கின்றது. ஆனால், தற்போதைய கேள்வி என்னவெனில், இன்றைய நவீன தொழில்நுட்ப வளர்ச்சியோடு தமிழை ஈடுகொடுத்து வளர்ச்சி பெறச் செய்ய முயற்சிகள் மேற்கொள்கின்றோமா என்பது தான்.

ஒரு மொழி காலந்தோறும் தொடர்ந்து வளர்ச்சி பெற்று வர வேண்டுமாயின் அதற்கு இரு முக்கிய அம்சங்கள் இன்றியமையாதனவாக அமைகின்றன. முதலாவதாக, ஒவ்வொரு காலகட்டத்திலும் தொடர்ந்து அம்மொழியில் பதிவுகள் இருந்துகொண்டே இருக்க வேண்டும். அதாவது அம்மொழியில் இலக்கியங்கள் இலக்கணங்கள் போன்ற படைப்புகள் எழுந்துகொண்டே இருக்க வேண்டும். இரண்டாவதாக, குறிப்பிட்டதொரு எண்ணிக்கையிலான மக்கள் அதனைப் படிக்க வேண்டும். இவ்விரண்டில் ஏதாவது ஒன்றில் சுணக்கம் ஏற்பட்டாலும் அஃது அம்மொழியின் வளர்ச்சியை வெகுவாகப் பாதிக்கும்.

பழங்காலங்களில் தமிழைப் பதிவு செய்துவந்த விதத்திற்கும் தற்போதைய சூழலுக்கும் மிகப்பெரிய மாற்றங்கள் உள்ளன. ஓலைச்சுவடிகளில் இலக்கண இலக்கியங்களைப் பதிவு செய்து வந்திருந்த மெல்ல மெல்ல வளர்ச்சி கண்டு வந்திருப்பது அனைவரும் அறிந்த ஒன்றே. தொடக்கத்தில் இருந்த சிக்கல்களும் சிரமங்களும் தற்போது மிகவும் குறைவாகும். தொழில்நுட்பத்தின் வளர்ச்சி இச்சிரமங்களைக் குறைத்துக்கொண்டே வந்திருக்கின்றது. இன்றைய காலகட்டத்தில் மேற்கண்ட இரு அம்சங்களையும் செயல்படுத்த இணையம் உற்ற துணையாக இருக்கின்றது. இன்றைய இணைய உலகால் தமிழ்ப் பயன்பாடு உலகம் முழுமையும் மிக விரைவாகப் பரவி வருகின்றது. மொத்தத்தில் தற்காலத்தில் தகவல் தொழிநுட்ப உலகில்

தமிழைத் தழைக்கச் செய்ய வேண்டிய முயற்சிகள் இணையத்தின் வாயிலாக மிக வேகமாக நடைபெற்று வருகின்றன என்பதே உண்மை நிலை.

இத்தருணத்தில், ஓலைச்சுவடிகளையும் இணையத்தில் இடம்பெறச் செய்யும் பொருட்டு அதனை மின்பதிப்பு செய்ய வேண்டியது மிக மிக அவசியமானது. இவ்வாறு செய்யப்படுவதன் வாயிலாகப் பழங்கால ஓலைச்சுவடிகளில் பொதிந்துகிடக்கும் தமிழர் மாண்பை அவர்களின் பண்பாட்டை இன்றைய தலைமுறையினர் உணரவும், தமிழரல்லாத பிற நாட்டினரும் அறியவும் வாய்ப்பாக அமையும்.

“மறைவாக நமக்குள்ளே பழங்கதைகள்
சொல்வதிலோர் மகிமை யில்லை
திறமான புலமையெனில் வெளிநாட்டோர்
அதை வணக்கஞ் செய்தல் வேண்டும்”

என்ற சுப்பிரமணிய பாரதியின் வாக்கை மெய்ப்பிக்க வேண்டும்.

ஆயக்கலைகளும், பண்பாடுகளும், கலைகளும், இலக்கியங் களும், மருத்துவ முறைகளும், புராணங்களும், இதிகாசங் களும் மிகச் சிறந்தவை என்பதை இனியும் நமக்கு நாமே கூறிக் கொண்டிருந்து விட்டுப் பின்னர் கலைந்து சென்றுவிடாது, அதனை வெளிநாட்டாரும் போற்றும் வண்ணம் எடுத்தியம்ப வேண்டியது நமது கடமையாக இருக்கின்றது. இலக்கியங்கள் அனைத்துமே மிகச் செவ்விய இலக்கியங்கள். பின்னர் அவற்றை உலகுக்கு அறிவிக்கலாமே! நமது பொக்கிஷங்கள் சொக்கத் தங்கம் என்றாலும் அதனை உரசிப் பார்த்தால் தானே பிறருக்குப் புலப்படும், கருவூலங்கள் வைரமாகினும் அதனைப் பட்டைத் தீட்டும் போது தானே அது இன்னும் பளிச்சிடும்! ஆக, நமது பொக்கிஷங்களை உரசிக் காட்டி பட்டைத் தீட்டிப் பிறருக்குக் காண்பித்து அனைத்திலும் தமிழ் சிறந்ததெனக் காட்ட வேண்டிய நேரமிது. அதற்கு நமது சொத்துக்களான ஓலைச்சுவடிகளை மின்பதிப்பு செய்து மின் ஓலைகளாகச் செய்து அனைவரும் படிக்கும் வண்ணஞ்செய்தல் மிக மிக அவசியமானதாகும்.

“கைதிறச் சித்திரங்கள்,
கணிதங்கள் வான நூற்கள்
மெய்த்திற நூற்கள், சிற்பம்,
விஞ்ஞானம், காவியங்கள்
வைத்துள தமிழர் நூல்கள்
வையத்தின் புதுமை என்னப்
புத்தகசாலை எங்கும்
புதுக்குநாள் எந்தநாளோ?

என்ற பாரதிதாசனின் கனவை நனவாக்க இம்முயற்சி மிக மிக அவசியமானது.

இந்தியர்களின் சரித்திரத் தொண்மையின் ஏற்றமிகு சொத்தாக சுவடிகள் கருதப்படுவது மட்டுமல்லாது, பண்பாட்டு அறிவையும் அது சமுதாயத்திற்கு வழங்குகின்றது. சுவடிகளில் மறைந்து கிடக்கும் அறிவு செல்வத்தை வெளிக்கொணர்வது மிகவும் அவசியம். ஓலைச் சுவடிகளைப் பன்னெடுங்காலங்களாக ஆராய்ந்து வந்துகொண்டே யிருந்தாலும், புதுப்புது தகவல்கள் சுரந்துகொண்டே இருப்பது ஆச்சரியமான செய்தியாகும். அள்ள அள்ள வற்றாத தீராநதி இந்த ஓலைச்சுவடிகள். இன்னும்கூட ஆய்வு செய்யப்படாத ஓலைச்சுவடிகள் இருந்து வருவதனால், இன்னமும் அறிவுக்குப் புலப்படாத பல்வகை விஷயங்கள் ஓலைச்சுவடிகளில் மறைந்திருக்கின்றது.

'கல் தோன்றி மண் தோன்றாக் காலத்தே வாளொடு முன்
தோன்றிய மூத்த குடி"

என்பதனால் மிக மிகப் பழமையான பண்பாட்டைக் கொண்டவர்கள் என்பது வெள்ளிடைமலை. கோடுகள், வரைவுகள், குறியீடுகள் ஆகியவை தோன்றிப் பின்னர் படிப்படியான வளர்ச்சியில் எழுத்துருக்கள் தோன்றின. பின் அவற்றைப் பதிவு செய்து வைக்க முயற்சித்த வேளையில், பனை ஓலைகளில் எழுதுவதற்கு எளிமையாகத் தோன்றியதாலும் அவற்றைச் சரியாகப் பாதுகாத்தால் நீண்ட நாட்கள் அழியாமல் இருக்கும் தன்மையைக் கொண்டிருக்கிறன என்பதாலும் ஓலைகளை முன்னோர்கள் பயன்படுத்தினர். பன்னெடுங்காலங்கலாகத் தமது இலக்கியங்களையும், தாம் கண்ட; மேற்கொண்ட ஆய்வுகள் குறித்த குறிப்புகளையும் முன்னோர்கள் ஓலைகளில் பதிவு செய்து வந்திருக்கின்றனர்.

ஆயினும், தட்ப வெட்ப சீதோஷ்ண நிலைக்கு ஓலைச்சுவடிகள் பல நூற்றாண்டுகளுக்குத் தாக்குப்பிடிக்கும் வகையில் இல்லை. ஓலைச்சுவடிகளின் சராசரி ஆயுட்காலம் 200 முதல் 400 ஆண்டுகாலம் மட்டுமே. அதுவும் முறையாகப் பராமறித்தால்தான் இவ்வளவு காலங்களுக்குத் தாக்குப்பிடிக்கும், இல்லையேல் நாளடைவில் உருமாற்றம் அடைந்து, மக்கி, துகள்களாகக் கொட்டிவிடும். ஆக, இவ்வாறு நம்மிடம் இருக்கும் பொக்கிஷங்கள் அழிந்துவிடும் முன்னர் அவைகளை மின் ஓலைகளாக மாற்றி விடுவதே சாலச் சிறந்தது. இவற்றை நூல்களாகச் செய்யலாமே என்று சிலர் கேள்விகள் எழுப்பக்கூடும். செய்யலாம்தான். இருப்பினும் தாள்களின் ஆயுட் காலமும் மிக நீண்டனவாக இல்லை. ஹர்கியூலிஸ் இன்கோர்பரேட்டட் (Hercules Incorporated) என்ற நிறுவனம் 1950-இல் கண்டுபிடித்த அமிலத்தன்மை அற்ற காகிதங்கள் வேண்டுமானால் சற்று அதிகமான ஆயுட்காலத்தை உடையது எனலாம். இருப்பினும், அவற்றின்

ஆயுட்காலத்தை இன்னும் அறுதியிட்டுக் கூறவியலாத நிலையும், இத்தகைய அமிலமற்ற காகிதங்களின் மிக அதிகமான விலையும் நமது இலக்கியங்கள் அனைத்தையும் இவற்றில் பதிவு செய்வதென்பதை இயலாத காரியமாக்கிவிடுகின்றன. இவற்றை எல்லாம் சீர்தூக்கிப் பார்க்கும் வேளையில், ஓலைகளை மின்பதிப்பு செய்து மின் ஓலைகளாக ஆக்குவது சிறப்பானதாகவும் சாத்தியமானதாகவும் இருக்கின்றது.

மின் நூல்கள் என்பது இன்றைய பதிப்பகத் தொழில் நிறுவனங்களில் சர்வ சாதாரணமான ஒன்றாக ஆகிவிட்டது. பலதரப்பட்ட அச்சு பிரசுரங்கள் வெளியிட்ட புத்தகங்கள் தற்போது உலகின் பெரும்பாலான மொழிகளில் மின் வடிவில் வலம் வருகின்றன. அவற்றில் ஆங்கிலப் புத்தகங்களின் எண்ணிக்கை தினம் தினம் அபரிமித வளர்ச்சியைக் கண்டு வருகின்றன. உரைகளும் படங்களும் எண்ணியல் (Digital) மயமாக்கப்பட்டு ஒரு புத்தக வடிவில் உருவாக்கப்படுபோது அது மின்னூல் என ஆகின்றது. இன்றைய கணினித்துறை வளர்ச்சி யினால் இத்தகைய நூல்களைக் கணினிகளிலும் (Desktop), மடிக்கணினிகளிலும் (Laptop), கையடக்க கணினிகளிலும் (Tablet), விவேகத் தொலைபேசிகளிலும் (Smart phones) படிக்க இயலும். இதைத் தவிர, மின்னூல்களைப் படிப்பதற்கென்றே புத்தக வடிவில் இருக்கும் நடமாடும் மின் வாசிப்பான்களும் (eReaders) சந்தைகளில் கிடைக்கின்றன. மின்னூல்கள் தயாரிக்கும் விதம், அதனைப் பதிவிறக்கம் செய்வது, படிப்பது, பாதுகாப்பது ஆகிய அனைத்தும் மின் ஓலைகளுக்கும் பொருந்தும்.

சிறப்பு என்னவெனில், தமிழ் மின்னூல்களையோ, மின் ஓலைகளையோ வாசிப்பதற்கு மின் சாதனங்களைப் பயன்படுத்தும்போது புதியதாக ஒரு மென்பொருளைப் பதிவிறக்கம் செய்ய வேண்டியதில்லை. கையடக்கக் கணினிகளிலோ அல்லது விவேகத் தொலைபேசிகளிலோ மின்னூல்களைப் படிக்கவேண்டிய பொதுவான மென் ஒருங்கை (Software App) பதிவிறக்கம் செய்துகொண்டால் போதுமானது. இன்று மக்கள் பயன்படுத்தும் கையடக்கக் கணினிகள் மற்றும் விவேகத் தொலைபேசிகளிலும் முக்கியப் பங்கு வகிப்பவை ஆப்பிள் (Apple) நிறுவனத்தின் இயங்கு தளமும் (iOS6), ஆண்ட்ராய்டு (Android) இயங்கு தளமும் தான். இதற்கு அடுத்தபடியாகப் பார்க்கும்போது மைக்க்ரோசாப்டின் (Microsoft) விண்டோஸ் (Windows) இயங்கு தளமும் இருக்கின்றது. மின் வாசிப்பான்களை எடுத்துக்கொண்டால் புத்தக விற்பனையின் ஜாம்பவானாகக் கருதப்படும் அமேசானின் (Amazon) கிண்டலும் (Kindle) ஆப்பிள் (Apple) நிறுவனத்தின் ஐபாட்-டும் (iPad) போட்டி போடுகின்றன. இது தவிர அமெரிக்காவின் பெரிய புத்தக நிறுவனத்தின் நூக் (nook) என்ற மின் வாசிப்பானும் பெரிய அளவில் பயன்படுத்தப்படுகின்றது. Infibeam என்ற நிறுவனம் இந்தியாவில் இந்திய மொழிகளுக்கென மின் வாசிப்பான்களை அறிமுகப்படுத்தியுள்ளது. ஆண்ட்ராய்டைப் (Android) பயன்படுத்தும்

கையடக்கக் கணினிகளிலும் தமிழைப் படிக்கவும் உள்ளிடவும் முடிகின்றது என்பது அனைவரும் அறிந்த ஒன்றே. nook என்ற மின் வாசிப்பானிலும் ஒருங்குறியில் (Unicode) எழுதப்பட்ட உரைகளை எளிதில் மின்னூல் மற்றும் மின் ஓலை வடிவம் கொடுக்கலாம். அமேசானின் (Amazon) கிண்டலில் (Kindle) மட்டும் இன்னும் தமிழ் ஒருங்குறி இல்லை. கிண்டலில் (Kindle) தமிழ் மின்னூல்களை PDF ஆவணமாக மட்டுமே இப்போதைக்குப் படிக்க முடிகின்றது. ஆப்பிள் (Apple) நிறுவனத்தின் iBook என்ற மென் ஒருங்குப் பயன்பாடும், ஆண்ட்ராய்டு (Android) இயங்கு தள கையடக்கக் கணினிகளில் Google Books என்ற மென் ஒருங்குப் பயன்பாடும் மின்னூல்களை வாசிக்கப் பயன்படுத்தப்படுகின்றன. Aldiko Book என்ற மென் ஒருங்கையும் ஆண்ட்ராய்டு (Android) இயங்கு தளத்தில் நன்றாகப் பயன்படுத்த முடிகின்றது. விண்டோஸ் (Windows) இயங்கு தளம் கொண்ட விவேகத் தொலைபேசிகளில் தமிழ் மின்னூல்களை Google Books என்ற மென் ஒருங்கைப் பயன்படுத்தி படிக்க இயலும். இவை அனைத்தையும் அப்படியே மின் ஓலைகளுக்கும் பயன்படுத்த வியலும்.

இவ்வாறு ஓலைச்சுவடிகளை மின் ஓலைகளாகச் செய்வதன் மூலம் ஒரு பெரிய புரட்சியையே செய்ய முடியும். ஓலைச்சுவடிகளை மின் பதிப்பு செய்யத் தொடங்கும் தொடக்க முயற்சியில் Pdf ஆவணங்களாகவும் Flash முறையில் படங்களைக் கொண்ட புரட்டு மின் ஓலைகளாகவும் செய்யத் தொடங்கலாம். ஆனால், பின்னாளில் அந்த உள்ளீடுகளைக் கொண்டு இத்தகைய மின் ஓலைகளில் வரும் எழுத்துருக்களின் வடிவத்தையோ, அளவையோ, வண்ணத்தையோ, பக்க வடிவத்தையோ எவற்றை வேண்டுமானாலும் கணினிகள் (Desktop), மடிக்கணினிககள் (Laptop), கையடக்க கணினிககள் (Tablet), விவேகத் தொலைபேசிகள் (Smart phones) ஆகியவற்றின் தன்மை, வடிவம், அளவு ஆகியவற்றிற்கு ஏற்றவாறு பயன்படுத்து வோரின் வசதிக்கேற்ப மாற்றம் செய்துகொள்ளலாம்.

இவை மட்டுமல்லாது காணொளிகளையும் கூட இத்தகைய மின் ஓலைகளில் இணைக்க வாய்ப்பு இருக்கின்றது. இதன் மூலம் தமிழ் படிக்கத் தெரியாதவர்கள் கூட ஒலிகளை மட்டும் கேட்டே இவ்வோலைச்சுவடிகளில் இருக்கும் தகவல்களை அறிந்துகொள்ள வாய்ப்பு ஏற்படுகின்றது. கூடவே அதிகப்படியான தகவல்களையும் ஓலைச்சுவடிகள் தொடர்புபட்ட இதர பிற காணொளிகளையும் தொடர்புபட்ட இடங்களில் இணைத்து, கூடுதல் தகவல்களை படிப்போருக்கு வழங்க இயலும். குறிப்பாக மருத்துவம் குறித்த ஓலைகளை மின் ஓலைகளாக மக்களுக்குப் படிக்கத் தரும் முயற்சிகளை மேற்கொள்ளும் போது அதில் குறிக்கப்பட்டிருக்கும் மூலிகைகளின் படங்களை ஆங்கு இணைக்குப்போது படிப்போரும் கேட்போரும் மிகுந்த நன்மையை அடைய வாய்ப்பு ஏற்படுகின்றது. ஒரு முழு பனை ஓலைச்சுவடி நம்மிடம்

இருந்தாலும் ஆயிரக்கணக்கானவர் அதனைப் படிக்க இயலாது. ஏனெனில், கைக்கு கை மாறும்போது அதன் நிலையும் குழையும் வாய்ப்பு இருக்கின்றது. மின் ஓலைகளாக மாற்றிவிடும்போது, இதன் வழியாக உலகத்தில் எந்தப் பகுதியிலும் இருக்கும் கோடிக்கணக்கான மக்களும் ஓலைச்சுவடிகளைத் தாங்களாகவே படித்துக்கொள்ளும் வாய்ப்பைப் பெறுவர்.

இவ்வளவுக்கும் மின் ஓலைகளைத் தயாரிப்பது என்பது மிகுந்த சிரமமான காரியம் அன்று. மாறாக, அவற்றை மிக எளிதாகத் தயாரிக்கலாம். .zip என்பதன் மறு வடிவமே .ePub ஆகும். ஒரு மின் ஓலை கோப்பைத் தயாரித்து அதனை .ePub-இல் இருந்து .zip-ஆக மாற்றிவிட்டு, பின்னர் அக்கோப்பை விரிவுபடுத்திப் பார்த்தால் அதற்குள் mimetype, content.opf, OEBPS folder என மூன்று வித கோப்புகளைக் காண முடிகின்றது. (DeMont,2011). Mimetype ஒரு மின் வாசிப்பானுக்கு இந்தக் கோப்பின் உள்ளடக்கங்களை விவரிக்கின்றது. இது வெறும் ASCII உரை மட்டுமே. META-INF என்ற கோப்பில் மின் ஓலையின் அடிப்படையான content.opf ஆவணம் எங்கே இருக்கிறது என்று மின் வாசிப்பான்களுக்குச் சுட்டிக்காட்டும் xml ஆவணம் இருக்கின்றது. இது எல்லா மின் வாசிப்பான்களுக்குரிய மென் ஒருங்குகளுக்கும் பொதுவானது. OEBPS கோப்பில் xhtml ஆவணங்கள், மின் ஓலைக்குரிய படங்கள், நீவஉ ஆவணங்கள் ஆகியவற்றோடு content.opf toc.ncx என்ற இரு வேறுபட்ட ஆவணங்களும் இருக்கும். (DeMont,2011) content.opf என்ற ஆவணத்திற்குள், ஓலையின் தலைப்பு, ஆசிரியரின் பெயர் போன்ற இன்னும் பல செய்திகளை நாம் உள்ளிடலாம். அதோடு அந்த ஓலைச்சுவடியைச் சிறு சிறு பகுதிகளாகப் பகுத்து, இயல்களாகப் பிரிக்கவேண்டிய சூழல் ஏற்பட்டால் அதன் சிறு தலைப்புகளையும் இங்குப் பதிவு செய்யலாம். (இவ்வாறு செய்யப்படுவதால் படிப்போர் குறிப்பிட்ட சில பகுதிகளை இலகுவாகத் தேர்ந்தெடுத்துப் படிக்கும் வாய்ப்பைப் பெறுகின்றனர். இல்லையேல், மொத்த ஓலைச்சுவடியையும் மேலோட்டமாகப் படித்துவிட்ட பிறகே அவர்களுக்குத் தேவையான பகுதிகளைத் தேர்ந்தெடுத்துப் படிக்க வேண்டியிருக்கும். இவ்வாறான சிக்கல்கள் இருப்பதனால் வாசிப்போரின் ஆர்வம் குன்றிவிடவும் வாய்ப்பு ஏற்படலாம். ஆக, மின் ஓலைகளாக மாற்றப்படும்போது, இத்தகைய சலுகைகளை படிப்போருக்கு ஏற்படுத்தித் தர இயலும். இணையத்தில் குறிப்பிட்ட விஷயங்கள் குறித்த தகவல்களை மட்டும் தேடுபவர் களுக்கும் இது மிகவும் உதவியாக இருக்கும்) இந்த எல்லா ஆவணங் களையும் கோப்புகளையும் உரைப்பான் கொண்டு தயாரித்த பிறகு, ஒரு வெற்று .zip என்ற நீட்சியின் பெயரை .ePub என்று மாற்றிவிட வேண்டும். இந்த .ePub ஆவணத்தை, பிறகு நாம் மின் வாசிப்பான்களில் வாசிக்க இயலும். (DeMont,2011)

இதனைத் தவிர வேறு முறைகளைப் பின்பற்றிகூட மின் ஓலைகளை எளிதாகத் தயாரிக்கலாம். மின்னூல்களுக்கும் மின் ஓலைகளுக்கும் கூட அடிப்படை html என்றாலும் மின் ஓலைகளைத்

தயாரிக்க html தெரிந்திருக்க வேண்டும் என்பது அவசியம் இல்லை. Microsoft word-இல் இருந்தும் Open office-இல் இருந்தும் கூட ஒருங்குறி முறையில் தட்டச்சு செய்யப்பட்ட ஆவணங்களை மின் ஓலைகளாக மாற்றலாம். ஆப்பிள் (Apple) நிறுவனத்தின் Pages, iBook Author மூலமாகவும் Adobe நிறுவனத்தின் InDesign மென்பொருள்களின் உதவியுடனும் மிக எளிதில் மின் ஓலைகளை உருவாக்கலாம். Pages, Sigil, Calibre போன்ற திறவூட்டு மென்பொருள்களும் மின் ஓலைகளைத் தயாரிக்க உதவலாம்.

ஆக, தமிழில் மின் ஓலைகள் தயாரிப்பது மிக எளிதாகவும் சிக்கனமானதாகவும் இருப்பதனால், தமிழில் மின் ஓலைகளைத் தயாரிக்கப் பல்கலைகழகங்களும், புத்தக வெளியீட்டு நிறுவனங்களும், அரசும் கூட முன்வர வேண்டும். ஏனெனில், தமிழ் சமுதாயத்தின் தொன்மைச் சிறப்புகளை இன்னமும் பெறுமளவில் தாங்கியிருப்பவை ஓலைச்சுவடிகள் என்றால் மிகையில்லை. இத்தகைய அறிய பொக்கிஷங்களைப் பாதுகாத்து, காலந்தோறும் இருக்கச் செய்யவும், வெறுமனே ஓரிடத்தில் கும்பலாகச் சேகரித்து வைத்து அதனால் பிறருக்கு நன்மை ஏதும் கிடைக்காமல் போகும் நிலையை மாற்றவும் இந்த மின் ஓலை முயற்சிகள் இன்றியமையாதவையாகும். இம்முயற்சியின் பலனாக உலகத்தில் இருக்கும் பெரும்பாலான தமிழர்கள் ஓலைச்சுவடிகளைப் படித்துப் பயன் பெறுவர் என்பது ஆனந்தம் அளிக்கும் விஷயம் என்றாலும் அவ்வாறு அவற்றைப் படிக்கும் ஒரு சிலர் அதனை வேறு சில கோணங்களில் (குறிப்பாக அறிவியல் கோணத்தில்) சிந்தித்து அதன் அடிப்படைகளில் ஆய்வுகள் செய்து உலகிற்கு உணர்த்த வாய்ப்பு ஏற்படலாம் என அறிவது பேரானந்தத்தை அளிப்பதாக உள்ளது. ஆகவே, இனியும் தாமதிக்காது இந்த மின் ஓலை முயற்சியில் ஈடுபடுதல் அவசியம்.

துணைநூல்பட்டியல்

1. Castro,E. (2012). Elizabeth castro\'s epub, Straight to the point: Creating ebooks for the Apple ipad and other eReaders.Peachpit Pr.
2. DeMont, A. (2011). What is ePub? Why Should I use It? Retrieved from http://www.jedisaber.com/eBooks/tutorial.shtml
3. Loton, T. (2010). E-book Publishing diy. Lexington KY:LOTONtech Limited.
4. http://en.wikipedia.org/wiki/Acid-free_paper

ஓலைச்சுவடி மின்படிவாக்கமும் பயன்களும்

கோ. சக்கரபாணி

முன்னுரை

தமிழனின் தொன்மையான பண்பாட்டைத் தாங்கி நிற்பவை பழம் பெரும் சுவடிகளேயாகும். ஒருவரின் பட்டறிவையும் அனுபவத்தையும் எழுதி வைத்த மூலச்சுவடியைப் பாதுகாப்பது என்பது மிகப்பெரிய செயல். அவ்வாறு பாதுகாக்கப் பட்டிருந்தால், அதைப் பகிர்ந்து கொள்ளுவது எளிதான ஒன்று. அறிவுத் தகவல்கள் பல்வேறு வடிவங்களில் பாதுகாக்கப்பட்டு வந்திருக்கின்றன. இவற்றுள் பழமையான சாதனமாக பனை யோலைகள் பயன்பட்டிருக்கின்றன. மூலபாட தகவல் என்பது மிகவும் முக்கியமான ஒன்றாகும். ஏனென்றால் ஒரு சிறு எழுத்து அல்லது வரி வடிவ மாற்றத்தால் அல்லது பிழையால் வெவ்வேறான பொருள் கொள்ள நேரிடும். எந்த ஊடகம் பல நூற்றாண்டுகளுக்கு சிதிலமடையாமல் இருக்குமோ அந்த ஊடகத்தில் மூலத் தகவல் பதியப்பட்டுப் பாதுகாக்கப்பட்டு வந்ததினால்தான் இன்று ஆய்வாளர்களுக்கும் மாணவர்களுக்கும் அது ஒரு பெரிய கொடையாக இருக்கிறது.

ஓலைச் சுவடிகளும் காகிதச் சுவடிகளும் அரசு மற்றும் தனியார் பல்கலைக் கழகங்களிலும், அரசு நூலகங்களிலும், அரசு மற்றும் தனியார் கல்லூரித் தமிழ்த் துறைகளிலும், தனியார் நிறுவனங்களிலும், தனியார் நூலகங்களிலும், அரசின் ஆராய்ச்சி மையங்களிலும் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருக்கின்றன. இந் நிறுவனங்கள் சுவடிகளைப் பராமரித்து வருகின்றன. பராமரிப்பு மட்டும் போதாது. அவைகளில் பொதிந்து கிடக்கும் தகவல்களை மீட்டெடுக்க வேண்டும்.

இத்தகைய சுவடிகளில் பொதிந்து கிடக்கும் உண்மை களையும் அனுபவங்களையும் பரந்து பட்ட உலகில் பரவிக் கிடக்கும் தமிழர்கள் பயன்படுத்திக் கொள்ளுவதற்கு தகவல் தொழில் நுட்பம் வழிவகை செய்யும். புழக்கத்திலிருந்து படிப்படியாக மறந்து மறைந்து போகும் தமிழ்ச்சொற்களைப் பாதுகாத்து பகிர்ந்து கொள்ளுதல் சாத்தியப்படும். இணையத்தின் துணை கொண்டு உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்கள் இலகுவாக பயன்படுத்த ஏதுவாக இருக்கும். கண்டறியப்பட்ட ஓலைச்

சுவடிகள் எங்கெங்கு இருப்பினும் யாவற்றையும் மின்னாக்கம் (ஸ்கேன்) செய்து இணையத்தில் உலா வர செய்யவேண்டும்

ஓலைச்சுவடி மின்படிவமாக்கம்

ஓலைச்சுவடிகளின் வாழ்நாள் அதிகபட்சம் ஐந்நூறு ஆண்டுகளாகும். இத்தகைய பழமை வாய்ந்த ஏடுகளைப் பாதுகாப்புடன் பராமரித்து கையாளவேண்டும். ஓலைச்சுவடிகளை மின்படிவமாக்க அறிவியல் வளர்ச்சியில் உருவான வருடுதல், (Scanning), எழுத்து கண்டறிந்து வாசிக்கும் பொறி (Optical Character Reading), நுண்கதிர் படப்பிடிப்பு (Micro film), டிஜிட்டல் படப்பிடிப்பு (Digital Camera) போன்றவைகளில் ஏதேனும் ஒன்றை பயன்படுத்தலாம்.

ஓலைச்சுவடி மின்படிவ தகவல்களை சேமித்தல்

மின்படிவமாக்கப்பட்ட தகவல்கள் பெரும்பாலும் பட வடிவிலேயே இருக்கும். இந்தப் பட வடிவமும், ஏதேனும் ஒரு தன்மையைச் (Format) சார்ந்ததாக இருக்கும். அங்கீகரிக்கப்பட்ட தன்மையுள்ள (Format) ஒரே ஆவணமாக இவற்றை மாற்றிக்கொள்ள வேண்டும். பின் இவற்றைப் பாதுகாத்து பராமரிப்பதற்காக அதிக கொள்ளளவு சாதனங்களில் (Devices) ஏதேனும் ஒன்றைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளவேண்டும்.

ஓலைச்சுவடி மின்படிவ தகவல் வடிவ மாற்றம் (Image processing)

ஓலைச்சுவடிப் படங்களை வடிவமாற்றம் செய்து எழுத்துகளாகப் பெறலாம். இதற்கென மின்னாக்க கருவிகள் உண்டு. அவ்வாறு வடிவ மாற்றம் செய்த பின்பு தகவல்களை தேவைக்கேற்ப பயன்படுத்திக்கொள்ளலாம். எழுத்துகளின் துணை கொண்டு அகராதி உருவாக்கலாம்; சொற்களை தொகுக்கலாம்; அகர வரிசையாக்கலாம் பகுத்து வகைப்படுத்தலாம், இலக்கியங்களுக்குச் சொல்லடைவு மற்றும் சொற்பொருளடைவு முதலியவற்றைத் தயார் செய்யலாம் மொழிபெயர்ப்பு ஆய்வு செய்யலாம்.

ஓலைச்சுவடி தகவல்கள் இணையத்தில் உள்ளீடு

தகுந்த மென்பொருட்களைப் பயன்படுத்தி ஓலைச்சுவடித் தகவல்களை இணையத்தில் நேரிடையாக (Online) உள்ளீடு செய்யலாம். உலகம் முழுக்க இவ்வாறு உள்ளிடும் பணி நடந்தால் உலகளாவிய முன்முயற்சியாக அது அமையும். சுவடிகளில் இருக்கும் தகவல்களையெல்லாம் மின்படிவமாக்கி முறையான தரவுத் தளத்தில் பாதுகாத்து இணையத்தின் வாயிலாக ஒருங்கிணைத்துப் பொதுமக்கள் பயன்பாட்டிற்குக் கொண்டுவர

வேண்டும். அப்படி ஒருங்கிணைத்தால் கீழ்கண்ட பல நன்மைகள் தமிழ் கூறும் நல்லுலகத்திற்குக் கிட்டும்.

ஓலைச்சுவடி மின்படிவமாக்குதலால் உண்டாகும் பயன்கள்

மூலச்சுவடி எவருக்கும் எளிதில் காணக் கிடைக்கும்

பல்வேறு காலகட்டங்களில் கண்டறியப்பட்ட ஓலைச் சுவடிகள் மின்படிவமாக்கப்பட்டிருப்பதால், அவற்றை யாவரும் மூலமாக கருதிச் செயல்பட முடியும். இல்லையென்றால், மூலச்சுவடியை யார் ஒருவர் பராமரித்து வருகிறாரோ அவரால் மட்டுமே உரிமை கோரமுடியும். அவர் யாருக்கும் அச்சுவடியைக் கண்ணில் கூட காட்டமாட்டார். மேலும் இன்றைய புதிய இலக்கியங்களின் மூல எழுத்துச்சுவடி ஒவ்வொன்றும் மின்படிவ மாக்கப்பட்டு ஆவணப்படுத்தப்பட்டால் எதிர்கால ஆய்வுகளுக்கு வழிகாட்டியாய் அமையும். படைப்பாளிகளின் வாழ்வியல் பதிவுகள் அவர்கள் வாழும்போதே செய்யப்பட்டு ஆவணப் படுத்தப்பட்டால், அவை அவர்களின் படைப்பில் வெளிப்பட்ட முறையை நம்மால் அறியமுடியும். எதிர்காலத்தில் வெளியாகும் அனைத்துப் படைப்புக்களோடும் அந்தப் படைப்பு பிறந்த சூழல் குறித்த தகவலை ஆசிரியரின் சொந்த குரல் ஒலிப்பதிவுடன் இணைந்து வெளியானால் படைப்பை முழுமையாய் உணர முடியும். உதாரணத்திற்கு டாக்டர் உ. வே. சாமிநாத அய்யரின் ‘என் சரித்திரம்’ புத்தகம் பதிப்பித்து வெளிவராமல் போய் இருந்தால், அவருடைய பல்வேறு படைப்புகள் பிறந்த சூழல் நமக்கு தெரிய வராது.

மூலபாட ஆய்வு எளிதாகும்

உ.வே.சாமிநாத அய்யர் தனியொரு ஆளாய் அலைந்து திரிந்து அழிவின் விளிம்பிலிருந்த ஓலைச் சுவடிகளைக் கண்டெடுத்து அச்சில் வராத சுவடிகளை அச்சிட்டும் அச்சிட்ட நூல்களைத் தேடிப்பிடித்து மூலச்சுவடியுடன் ஒப்பு நோக்கிப் மூலபாட ஆய்வு செய்து பாட வேறுபாடுகளைக் கண்டு அடிக்குறிப்போடு பல இலக்கியங்களை மறு பதிப்பாக்கி வெளியிட்டார். அவரின் அரிய முயற்சியினால் தான் ஓரளவேனும் சங்க இலக்கியங்கள் கிடைத்தன. அத்தகைய பொறுமையும் விடாமுயற்சியும், உழைப்பும் இக்காலத்தில் இல்லாததினால் சுவடிகளை ஒப்புநோக்கி ஆய்தல் குறைந்து போனது. மூலபாட தகவல்கள் எளிதில் காணமுடியுமானால் ஒப்பு நோக்குதல் எளிதாகும். அதுமாத்திரமல்ல எத்தனை பதிப்புகள் வெளி வந்திருக்கிறதோ, அத்தனை பதிப்புகளையும் ஒரு சேரக் கண்டு

ஒப்பு நோக்கி ஆய்வு செய்யும் பொழுது பாடவேறுபாடுகள் தெள்ளெனத் தெரியும்.

மொழி ஆய்வு எளிதாகும்

இந்திய மொழிகளில் தாய்மொழியில் எழுதப்பட்டது தொல்காப்பியம் மட்டும் தான். தமிழின் பெருமையை உலகிற்கு உணர்த்துவது தொல்காப்பியம் மட்டுமே. தமிழின் முதல் இலக்கண நூல் தொல்காப்பியம்தான். இவ்வாறு ஒரு மொழியை அறிவியல் ஆய்விற்கு உட்படுத்த பல ஆய்வுக் கருவிகள் உண்டு. மொழி ஆய்விற்குக் கணிப்பொறியும், இணையவழி தகவல் தொழில்நுட்பமும் பெரிதும் பயன்படும். மொழி ஆய்வில் கணிப்பொறி, ஒலி-ஒளிக் கருவிகள் பெரும் பங்காற்றுகின்றன. இன்றைய காலகட்டத்தில், நவீன அறிவியல் ஆய்வுகளுக்கு ஆய்வாளர்களுக்கேற்ற உற்ற நண்பனாக கணினிகள் விளங்குகின்றன. சுவடிகளை மின்படிவமாக்கி கணினியிலும் இணையத்திலும் வைத்திருக்கும்பொழுது உலகெங்கும் வாழும் தமிழ்ச்சமுதாயம் அதைப் பயன்படுத்தி மொழி ஆய்வு செய்வதற்கு எளிதாகும்

இனி செய்யவேண்டுவன

மறைந்த மறைக்கப்பட்ட தமிழர் வரலாற்றுத் தேடல்கள், தூய தமிழ் வழக்கு, தமிழ் மொழிக்கல்வி தமிழைப் பற்றிக் கவலைப்படும் தனித்த மின்படிவமாக்க ஆவணக் காப்பகங்கள் ஏதும் இல்லை. இந்தியக் கூட்டரசின் அமைப்புகள் இந்தி மொழியில் உள்ள ஆவணங்களை காப்பது பற்றி அக்கறை கொள்கிறது. அரசு ஆவணங்கள் சட்டப்படி பாதுகாக்கப் படவேண்டும். அவை நீதி மன்றங்களில் முறையாக அரசின் உறுதி கொண்ட ஆவணங்களாக நிறுவப்படவேண்டும். அதற்கான நெறிமுறைகள வகுக்கப்பட வேண்டும்.

தமிழகத்திலும் அயல்நாடுகளிலும் பல்வேறு நூலகங் களிலும் உள்ள ஓலைச்சுவடிகளை மின்படிவமாக்க செய்து வாசிப்புக்கு உட்படுத்தவதற்கு ஏதுவாகத் தகவல் தொழில்நுட்பக் கருவிகளைப் பயன்படுத்தி மின்பதிப்பு பக்கங்களையும் அதற்கேற்ற அட்டவணையையும் தயார் செய்து இணையத்தில் பதிப்பித்து, உலக முழுவதிலுமுள்ள தமிழர்கள் பயன் பெறத் தமிழில் தேடுபொறி ஒன்று உருவாக்கிவழி வகை செய்ய வேண்டும். மின்படிவமாக்கம் செய்யும்பொழுது ஏற்படக்கூடிய தொழில் நுட்ப பிரச்சினைகளைக் கையாள கையேடுகள் உருவாக்கப்பட வேண்டும். சரியாகத் திட்டமிட்ட தரவுத் தளம்

உருவாக்கப்பட வேண்டும் தகவல் தொழில் நுட்பம் அனைத்துத் தமிழ் மக்களுக்கும் கிடைக்கத் தரப்படுத்தப்பட்ட விசைபலகை யுடன் அகராதிகளையும் தரவுத் தளங்களையும் கணிப்பொறியில் நிறுவி இணையவழி பயனடைவோம்.

முடிவுரை

உலகில் சுவடிப்புலங்கள் உள்ள அனைத்துப் பல்கலைக் கழக நூலகங்களும் இணையம் வழியே தொடர் இணைவுச் செய்யப்பட்டால், "மின்னணு நூலகம் உருவாக்கப்பட்டு ஆய்வுகள் சிறப்பாக நடைபெறும். அனைத்துப் பல்கலைக்கழக ஆய்வு நூலடைவுகளும் இணையத்தில் இடப்படுவதன் மூலம், திரும்பத் திரும்ப ஒரே துறையில் நடைபெறும் ஆய்வுகள் குறையும்.

கணிப்பொறி மூலம் ஓலைச் சுவடிகளின் தகவல்களைப் பாதுகாத்து எளிதில் தொகுக்க இயலும்.. உலகம் முழுவதிலு மிருந்து கிடைக்கக் கூடிய ஓலைச் சுவடி உரைகளையும் அவை சார்ந்த நூல் அடைவுகளையும் பிற விவரங்களையும் கணிப் பொறி வழி தொகுக்கலாம். பின்னர் பொருள் மற்றும் பாடத் தலைப்புகளில் அவற்றை வகைப்படுத்த இயலும். ஆசிரியர், தலைப்பு, பொருள், உரையாசிரியர் முதலியனவற்றைக் கொண்டு செய்திகளைப் பகுத்தும் தேவைக்கேற்ப தெரிவு செய்யவும் உரிய அட்டவணைகளை உருவாக்கலாம். உலகெங்கும் பரவிக் கிடக்கும் தமிழினம் தகவல் தொழில் நுட்ப மாற்றங்களின் வாயிலாகத் தங்கள் மொழி இனப் பண்பாட்டுச் செல்வத்தைப் பயன்படுத்திக் கொள்ளுதல் சாலச்சிறந்தது. பொறியியல், மருத்துவம் ஆகியன நம்மிடையே பெரும் தாக்கத்தை ஏற்படுத்தியிருந்தாலும் தகவல் தொழில் நுட்பம் வாயிலாக அவற்றை வசப்படுத்தி வாழ்வாங்கு வாழ்வோம். தொன்மையான மொழியாம் நம் தாய் மொழி தமிழின் அனைத்துக் கலைச் சொற்களையும் புழக்கம் மற்றும் பயன்பாட்டில் கொண்டு வருவதற்குத் தகவல் தொழில் நுட்பம் வழி வகுக்கும். உலக அளவில் தமிழின் பெருமை உயர்வது மட்டுமல்ல பயன்பாடு அதிகரிக்கும். எனவே தகவல் தொழில் நுட்ப கலைச் சொற்களை வளர்த்திட்டால் உலக அளவில் தமிழன் மத்தியில் ஒருங்கிணைப்பும் பயன்பாடும் உயரும்.

ஓலைச் சுவடிக்குக் கணினியின் பங்களிப்பு

முனைவர் சு. சாந்தி,
சீ. கமலநாதன்,

முன்னுரை

தொடக்கத்தில் கோடுகள், வரைவுகள், குறியீடுகள் ஆகியவை தோன்றி அவை எழுத்துகளாக உருமாறின. பனையோலையில் எழுதுவதற்கு எளிமையாக இருப்பதாலும் அவற்றைச் சரியான முறையில் பாதுகாத்து வந்தால் நீண்ட நாட்கள் அழியாமல் இருக்கும் தன்மை கொண்டதால் பனையோலைகள் பயன்படுத்தப்பட்டு வந்தன. மக்கள் தமிழ் இலக்கியங்களையும் பிற கலைகளையும் பனை ஓலைகளில் பதிவு செய்து பாதுகாத்துள்ளனர்.

தமிழில் நினைத்துப் பார்க்க முடியாத அறிவுத் துறைகள் எல்லாம் ஓலைச் சுவடிகளில் எழுதப்பட்டிருக்கின்றன. அழகுக் குறிப்புகள், இராக்கெட், தொழில்நுட்பம், சமையல் குறிப்புகள், இரசவாதம் என்று உலகத்தில் யாருமே சிந்திக்காத காலத்தில் முன்னோர்கள் சிந்தித்து எழுதி இருக்கின்றனர். சுவடிகளில் மறைந்து கிடக்கும் அறிவுச் செல்வத்தின் துணையினால் மட்டுமே சமூக பண்பாட்டுப் புரிந்துணர்வின் இடைவெளியைக் குறிக்க முடியும்.

சுவடி ஆவணங்கள் ஒரு நாட்டின் சரித்திரம், பண்பாடு போன்றவற்றைப் பாதுகாக்கும் தன்மையைக் கொண்டது, சுவடிகள், பண்பாடு மற்றும் அறிவைச் சமுதாயத்திற்கு வெளிப்படுத்த உதவும் மிக முக்கிய இணைப்பாகும். ஓலைச் சுவடிகளின் வாழ்நாள் சுமார் முந்நூறு ஆண்டுகள் ஆகும். எவ்வளவுதான் பராமரித்து வந்தாலும் அவை நாளடைவில் உருமாற்றமடைந்து, மக்கி எழுத்துகள் மங்கி, ஒடிந்து தூள் தூளாகப் போய்விடும். பனையோலைகள் அழிவதற்கு முன்பாக அவற்றை அச்சுப் பதிப்பாக மாற்றிப் பாதுகாத்துக் கொள்ளுதல் அவசியம். அரசு மற்றும் தனியார் பல்கலைக் கழகங்களிலும், அரசு மற்றும் தனியார் கல்லூரித் தமிழ்த் துறைகளிலும் தனியார் நிறுவனங்களிலும், தனியார் நூலகங்களிலும் அரசின் ஆராய்ச்சி மையங்களிலும் ஓலைச்சுவடிகளும் காகிதச் சுவடிகளும் பாதுகாத்து அவற்றில் பொதிந்து கிடக்கும் தகவல்களை மீட்டெடுக்க வேண்டும்.

ஓலைச் சுவடிகளைக் கணினிவழி வலைதளத்தில் கொண்டு வருவதில் பல நன்மைகள் உண்டு. முக்கியமான நன்மை பாரம்பரியமாக நமக்குச் சொந்தமான செய்திகளை வெளிநாட்டினர் உரிமை கொண்டாடினால் அவை நமக்குத்தான் சொந்தம் என்று ஆணித்தரமாகக் கூற முடியும்.

அயலகத் தமிழர்களின் பொறுப்பு

தமிழ் இளைஞர் மணிமன்றத்தின் ஏற்பாட்டில் மலாய் பல்கலை கழகத் தமிழ்ப்பேரவையின் ஆதரவுடன். **ஓலைச் சுவடிகளின் தோற்றமும் தொடர்ச்சியும்** என்ற தலைப்பில் கோலாலம்பூரில் 2009இல் கருத்தரங்கு நடந்தது. அதில்:

- சுவடி இயலை மலேசியத் தமிழர்களுக்கு அறிமுகப்படுத்துதல்.
- ஓலை சோதிடம் / நாடி சோதிடம் பற்றிய குழப்பங்களுக்குத் தெளிவு காணல்.
- மலேசியத் தமிழர்கள் சுவடியியல் துறையில் ஈடுபடுவதற்கான வாய்ப்புகளைக் கண்டறிதல்.

போன்ற பொருண்மைகளில் ஆய்வு கட்டுரைகள் படிக்கப்பட்டன.

ஓலைச்சுவடிகள் எங்கெங்கே இருக்கிறது எனக் கண்டுபிடித்து அதை அப்படியே வலைதளத்தில் பதிப்பிக்கச் செர்மனியில் வசிக்கும் கண்ணன் என்பவர் முழுமையான ஆர்வத்துடன் செயல்பட்டுக் கொண்டிருக்கிறார்.

தமிழர்களின் மரபுவழிச் சொத்துக்களான ஓலைச்சுவடிகளை அழிவிலிருந்து காக்க வேண்டிய பொறுப்பு தமிழகத் தமிழர்களுக்கு மட்டுமின்றி அயலகத் தமிழர்களுக்கும் உண்டு. மலேசியத் தமிழர்களுக்கும் ஓலைச் சுவடிகளுக்கும் ஏறக்குறைய 20 ஆம் நூற்றாண்டுத் தொடக்கத்திலிருந்து உறவு இருந்து வருகின்றது என்பதைக் கோலாலம்பூர் கருத்தரங்கு வாயிலாக அறிய முடியும்.

ஓலைச்சுவடிகள் உள்ள இடங்கள் அங்கு நடைபெறும் பணிகள்

- பல ஆய்வாளர்கள் நாட்டார் வழக்காற்று ஓலைச் சுவடிகளைத் திருநெல்வேலி பகுதியிலிருந்து திரட்டி வருகின்றனர். உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனமும், ஆசியவியல் நிறுவனமும் பல சுவடிகளைப் பதிப்பித்துள்ளன.
- மத்திய அரசின் பண்பாட்டுத் துறையின் தேசிய ஓலைச் சுவடிகள் மையமும் தமிழ்நாடு அரசும் இணைந்து ஓலைச்சுவடிக் கணக்கெடுப்பை இரண்டாயிரத்து ஆறாம் ஆண்டு பிப்ரவரி மாதம் ஒன்று முதல் ஐந்தாம் நாள்வரை நடத்தியது. நெல்லை மாவட்டத்தைப் பொறுத்தவரையில் இரண்டு இலட்சம் ஓலைச் சுவடிகள் இருப்பதாகக் கண்டறியப்பட்டுள்ளது. இதில் குறிப்பாக, சங்கரன் கோயில் மற்றும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளில் மட்டும் சுமார் முப்பதினாயிரம் ஓலைச் சுவடிகள் இருப்பதாக அறியப்பட்டுள்ளது (தினமலர் 7.2.2006, ப-7).
- தஞ்சையை ஆண்ட சரபோஜி மன்னரால் சரஸ்வதி மகால் நூலகம் உருவாக்கப்பட்டது. இது உலகின் முக்கியமான

நூலகங்களுள் ஒன்றாகத் திகழ்கிறது. இங்கு 3 இலட்சத்துக்கும் மேற்பட்ட ஓலைச்சுவடிகள், தஞ்சை ஓவியங்கள், கையெழுத்துப் பிரதிகள், பழமையான நூல்கள் எனப் பல அரிய செய்திகள் பாதுகாக்கப்பட்டு வருகின்றன.

- சென்னை தண்டையார் பேட்டையிலுள்ள ராகவேந்திரா மருத்துவ ஓலைச் சுவடி ஆராய்ச்சி மையத்தில் மருத்துவ ஓலைச் சுவடி குறித்த விழிப்புணர்வு மற்றும் பயிற்சிக் கருத்தரங்கு நடந்தது. ஓலைச் சுவடிகளை அழியாமல் பாதுகாக்க ஆயிரத்திற்கும் மேற்பட்ட ஓலைச் சுவடிகள் கணினியில் பதிவு செய்யப்பட்டன.

- இலக்கியம், கலை, மருத்துவம், சாதகம், சோதிடம், கணிதம், நிகண்டு, நாட்டார், வழக்காறுகள் எனப் பலவகைச் செய்திகள் எழுதப்பட்ட ஓலைச்சுவடிகள் திருநெல்வேலியிலும் அதனைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மிகுதியாக உள்ளன.

- தொல்லியல் துறையின்கீழ் இயங்கும், அரசினர் கீழ்த்திசைச் சுவடிகள் நூலகம் சென்னைப் பல்கலைக் கழகத்தில் செயல்பட்டு வருகிறது. இங்கு 72,300 ஓலைச் சுவடிகளைப் பாதுகாப்பாக வைத்துள்ளனர்.

- தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் மட்டும் இலக்கியம், இலக்கணம், மருத்துவம், சோதிடம் முதலிய பலதுறைப்பட்ட ஓலைச் சுவடிகள் 1728 உள்ளன.

- பழங்கால ஓலைச் சுவடிகளைத் திரட்டிய அண்ணாமலை சுகுமாரன், தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகத்துக்காக ஓர் இலட்சம் ஓலைச் சுவடி ஏடுகளைத் தமிழகத்தின் பல பகுதிகளில் இருந்து திரட்டி அளித்துள்ளார் (டி. சிவக்குமார் ளைளரந னயவநன செப்டம்பர் 18,2011).

- ஓலைச் சுவடிகளில் 60 விழுக்காடு மருத்துவம் தொடர்பானவை மற்றவை இலக்கியம், மாந்திரிகம், சோதிடம், கதைப்பாட்டு மற்றும் சித்தர்கள் தொடர்பானவை. தமிழ் மரபு அறக்கட்டளை சார்பில் அண்ணாமலை சுகுமாரனும், தஞ்சை பல்கலைக் கழகம் சார்பில் கோவை மணியும், கணினி வல்லுநர் செல்வ முரளியும் குழுவாகச் சேர்ந்து ஓர் இலட்சம் ஓலைச் சுவடிகளைத் திரட்டியுள்ளனர். இவை தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மின்னாக்கம் செய்யப்பட்டு வருகின்றன.

- தமிழகத்தில் சுமார் ஐந்து இலட்சம் ஓலைச் சுவடி ஏடுகள் இருக்க வாய்ப்புகள் உள்ளன. இதில் ஏற்கனவே தஞ்சைப் பல்கலைக் கழகத்தில் 2 இலட்சம் ஓலைச் சுவடி ஏடுகள் திரட்டி வைக்கப்பட்டுள்ளன. மேலும் ஒரு இலட்சம் ஓலைச் சுவடி

ஏடுகளைத் திரட்டி. மீதம் 2 இலட்சம் ஓலைச் சுவடிகள் தமிழகத்தில் பல இடங்களில் இருக்கக் கூடும். இதனைக் கண்டுபிடித்து திரட்டிப் பாதுகாத்து வைக்கும் திட்டம் உள்ளது. இதற்காகப் புதுவையில் தமிழ்சித்தர்மரபு என்ற அறக்கட்டளை தொடங்கப்பட்டுள்ளது.

- திண்டுக்கள் மாவட்டம் பழநி அருகில் பூலாம்பட்டியில் பாழடைந்த தண்ணீரில்லாத கிணற்றில் ஓலைச்சுவடிகள் கிடந்தன. தொல்லியல் ஆர்வலர் நந்திவர்மன் இதனைக் கண்டுபிடித்து எடுத்துள்ளார். இந்த ஓலைச்சுவடிகள் 400 ஆண்டுகளுக்கு முந்தயவை எனத் தெரிய வந்துள்ளது. இதில் ஆத்திசூடி, கொன்றை வேந்தன், உலகநீதி, மூதுரை, விநாயகர் அகவல், பழநி முருகன் காவடிசிந்து, பெரியநாயகி அம்மன் துதி, இராமாயண உரைநடை, மருத்துவச்சுவடிகள், திருமண மொய் கணக்கு, திருமண அழைப்பு, வரவு-செலவு ஓலைச் சுவடிகள், உட்பட 1500க்கும் மேற்பட்ட சுவடிகள் உள்ளன.

- உ.வே.சா.வின் நூலகத்தில் மொத்தம் 23,272 ஓலைச்சுவடிகள் உள்ளன. இவை மிகச்சிறந்த முறையில் பராமரிக்கப்பட்டு பாதுகாக்கப்பட்டு வருகின்றன. இவற்றில் அச்சில் வெளிவராத 475 ஓலைச்சுவடிகளைப் படியெடுத்துத் திருத்தம் சரிபார்க்கும் பணி நடைபெறுகிறது.

- தமிழகத்தில் உள்ள 12,617 ஓலைச்சுவடிகளின் அடிப்படை விவரங்களைத் திரட்டி, அதில் 1,862 சித்த மருத்துவச் சுவடிகளை இவர்கள் குறுந்தகட்டில் பதிவு செய்திருக்கின்றனர். இதனால் குறுந்தகடு மூலம் சித்த மருத்துவ ஆய்வாளர்கள் தகவல்களை எளிதாகப் பெறமுடிகிறது.

- கணினிவழி அனைத்துலகத் தமிழ் ஓலைச்சுவடிகள் அட்டவணை – 1989இல் வெளியிடப்பட்டுள்ளது.

சுவடிகளைக் கணினிவழி பதிப்பிக்கத் தேவையான எதிர்காலத் திட்டங்கள்

- சுவடிகளில் இருக்கும் தகவல்களையெல்லாம் திரட்டி முறையான தரவுத் தளத்தில் பாதுகாத்து இணையத்தின் வாயிலாக ஒருங்கிணைத்து பொது மக்கள் பயன்பாட்டிற்கு கொண்டு வரவேண்டும்.

- தகவல் தொழில்நுட்ப கருவிகளைப் பயன்படுத்தி மின்பதிப்பு பக்கங்களையும் அதற்கேற்ற அட்டவணையையும் உருவாக்கி இணையத்தில் பதிப்பித்து, உலகம் முழுவதிலுமுள்ள தமிழர்கள் பயன் பெற தமிழில் தேடு பொறி ஒன்று உருவாக்க வழிவகை செய்ய வேண்டும்.

- ஓலைச்சுவடிகளைப் படிக்கும் மொழி அறிவுத்திறன் கணினிக்குக் கொடுக்க வேண்டும். அதற்கு தேவையான மென்பொருளை உருவாக்க வேண்டும்.
- ஓலைச்சுவடிகளில் உள்ள எழுத்துகளைப் பிரித்தறியும் திறனைக் கணினிக்குக் கொடுக்க வேண்டும் அதற்குத் தேவையான மென்பொருளை உருவாக்க வேண்டும் (எ.டு) உடைந்த ஓலைச்சுவடிகள் உள்ள எழுத்துகளை கண்டு அறிதல்.
- ஓலைச்சுவடிகளைப் பற்றிய செய்திகளை அறியப் புதிய தமிழ் தேடுபொறியை உருவாக்க வேண்டும்.
- ஓலைச்சுவடிகளின் காலகட்டத்தை அறிய புதிய மென்பொருளை உருவாக்க வேண்டும்.
- அனைத்து விதமான ஓலைச்சுவடிக்கு தேவையான விரிதரவினை உருவாக்க வேண்டும்.
- பொருண்மையியல் அடிப்படையிலான சுவடி விரிதரவு ஆகவேண்டும்
- சுவடிகளுக்குத் தனி மின்அகராதி உருவாக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.
- சொல்தேடல், இலக்கணக் குறிப்பு, சொல் சூழமைப்பு, ஒப்பீடு, வரைபடம் என்ற நிலையை விரிதரவும், தேடு பொறியும் தமிழ் இணையப் பல்கலைக்கலகத்தின் முழு முயற்சியில் தயாரித்து வருகிறது. இதேபோன்று ஓலைச் சுவடி நிலைகளைக் கருத்தில் கொண்டு விரிதரவு தயாரிக்கும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.
- தமிழ் இலக்கணம், கணினி மொழியில், மொழித் தொழில்நுட்பம் ஆகிய துறைகளின் அடிப்படையில் மென்தமிழ் எனும் தமிழ்ச் சொல்லாளர் மென்பொருளை முனைவர் ந. தெய்வசுந்தரம் உருவாக்கியுள்ளார். இதேபோன்று ஓலைச்சுவடிக்கு என்று தனிமென்பொருளை உருவாக்க வேண்டும்.
- கணினியில் ஏற்றும்பொழுது ஏற்படக்கூடிய தொழில்நுட்ப பிரச்சினைகளைக் கையாளக் கையேடுகள் உருவாக்கப்பட வேண்டும்.
- திட்ட வரைவை அரசுக்கு அனுப்பி ஒப்புதல் பெற வேண்டும். அரசும் இத்திட்டத்திற்கான ஒரு பொதுநிதி உருவாக்க வேண்டும். அதற்கு ஒரு கால திட்டத்தை வகுத்துக் கொண்டு செயல் பட வேண்டும்.
- தமிழில் கிடைக்கக் கூடிய ஓலைச் சுவடி உரைகளையும் அவை சார்ந்த நூல் அடைவுகளையும் பிற விவரங்களையும் கணிப்பொறி வழி தொகுக்கலாம்

- பொருள் மற்றும் பாட வேறுபாடுகளைக் கொண்டு சுவடிகளைப் பிரித்தறியும் வகையில், மொழித் திறனை கணினிக்கு அளிக்க வேண்டும் ஆசிரியர், தலைப்பு, பொருள், உரையாசிரியர் முதலியனவற்றைக் கொண்டு செய்திகளை வகைப்படுத்தி, தேவைக்கேற்ப தெரிவு செய்ய உரிய அட்டவணைகளை உருவாக்கலாம்.
- தகவல் தொழில்நுட்பச் சுவடிக்குரிய கணினி கலைச்சொற்களை வளர்த்திட்டால் கணினிவழி ஓலைச்சுவடி மின்பதிப்பு எளிமைப்படும்.
- வழக்கில் இருந்து படிப்படியாக மறந்து மறைந்துபோகும் தமிழ்ச் சொற்களைப் பாதுகாத்துப் பகிர்ந்து கொள்ளுதல் சாத்தியப்படும்.
- சுவடி பட்டய, பட்ட வகுப்புகள், ஆராய்ச்சி வகுப்புகள் அனைத்துப் பல்கலைகழகங்களிலும் தொடங்க வேண்டும்.
- சுவடி ஆய்வின் மேனிலை ஆய்வுத் தலைப்புகளை வரிசைப்படுத்திக் கணினியில் வகைப்படுத்த வேண்டும்.
- கணினிவழி ஓலைச்சுவடிகளை எவ்வாறு கொண்டு செல்ல வேண்டும் என்பது போன்ற பயிற்சி வகுப்பு இளங்கலை மற்றும் முதுகலை மற்றும் ஆராய்ச்சியாளர்கள் என அனைவருக்கும் நடத்த வேண்டும்.
- ஓலைச்சுவடி பயிலும் மாணவர்களுக்கு, கணினிவழி பதிப்பிக்கும் நிறுவனங்களுக்கும் அதிக நிதி ஒதுக்கீடு செய்ய வேண்டும்.
- தமிழ் இலக்கியங்களைக் கணினி வழி மின்னாக்கம் செய்ய புதிய ஓலைச்சுவடித் துறையை மாணவர்களுக்கு உருவாக்கி அதில் வேலைவாய்ப்பை எதிர்கால மாணவர்களுக்கு உருவாக்கித் தரவேண்டும்.

இந்தியாவில் ஓலைச்சுவடிகள் உள்ள இடங்கள்

இந்தியாவிலும் அயல்நாடுகளிலும் சுமார் 30,000 ஓலைச் சுவடிகள் பதிக்கப்படாமல் உள்ளதாக ஆய்வுகள் கூறுகின்றன. பின்வரும் விகிதத்தில் இந்தியாவில் ஓலைச் சுவடிகள் உள்ளன: மருத்துவம் - ரூ. 50, சோதிடம் - ரூ.10, சமயம் - ரூ.10, கலை இலக்கியம் - ரூ.10, வரலாறு - ரூ.5, இலக்கணம் - ரூ.5, நாட்டுப்புற இலக்கியம் - ரூ.10 இவற்றுள் 25விழுக்காடு சுவடிகள் மட்டுமே. பதிக்கப்பட்டவை. மருத்துவம் - ரூ.5, சோதிடம் - ரூ.2, சமயம் - ரூ.10, இலக்கணம் - ரூ.4, நாட்டுப்புற இலக்கியம் - ரூ.4.

இந்தியாவில் ஓலைச் சுவடிகள் உள்ள இடங்கள் : சென்னை, காஞ்சிபுரம், பாண்டிச்சேரி, விருதாச்சலம், திருச்சி, தஞ்சை, மதுரை, கோவை, ஈரோடு, கேரளா, ஆந்திரா, மேற்கு வங்கம், ஈரோடு கலைமகள் கல்வி நிலையம், ஈரோடு

கேரளா: கேரளப் பல்கலைக்கழகம் கீழ்த்திசைச் சுவடி நிலையம், திருவனந்தபுரம்,

கள்ளிக்கோட்டை சர்வ கலாசாலை, கோழிக்கோடு,

சாகித்திய அகாதெமி, திருச்சூர்

ஆந்திரா: திருவேங்கடவன் பல்கலைக்கழகம், திருப்பதி,

ஆந்திரப் பல்கலைக்கழகம், விசாகப்பட்டிணம்,

உஸ்மானியா பல்கலைக்கழகம், ஐதராபாத்,

மேற்கு வங்கம் : தேசிய நூலகம், கல்கத்தா

சென்னை : சென்னை பல்கலைக்கழகக் கீழ்த்திசைச் சுவடி நூலகம், உ.வே.சா. நூல் நிலையம், பிரமஞான சபை நூலகம், தமிழ்நாடு தொல்பொருள் ஆய்வுத்துறை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சித்த மருத்துவ ஆராய்ச்சி நிலையம், ஆசியவியல் ஆய்வு நிறுவனம்.

காஞ்சிபுரம் : காமகோடி பீடம், ஸ்ரீ சங்கராச்சாரியார் மடம், பாண்டிச்சேரி, பிரஞ்சிந்திய பல்கலைக் கழகம், விருதாச்சலம், குமார தேவ மடாலயம், விருதாச்சலம்.

திருச்சி : குமார தேவ மடாலயம், துறையூர்

தஞ்சை: சரசுவதி மகால் நூல் நிலையம், தமிழ்ப் பல்கலைக் கழகம், தருமபுர ஆதின மடாலயம், மயிலாடுதுறை, ஸ்ரீ காசி மடம், திருப்பனந்தாள், திருவாடுதுறை ஆதினம், திருவாடுதுறை.

மதுரை: தமிழ்ச் சங்கம், மதுரை, மதுரை காமராசர் பல்கலைக் கழகம், மதுரை

கோவை: தவத்திரு சாந்தலிங்க அடிகள் திருமடம், பேரூர்.

தமிழ்நாட்டில் உள்ள பழமையான ஓலைச்சுவடிகளில் இதுவரை ஏறக்குறைய 50 நூல்கள் படித்து வெளிவந்துள்ளன. அந்த 50 நூல்களுக்குள்தான் திருக்குறள், சிலப்பதிகாரம், மணிமேகலை, அகநானூறு, புறநானூறு, பதிற்றுப்பத்து, எட்டுத்தொகை, நற்றிணை, குறுந்தொகை, ஐங்குறுநூறு, சீவகசிந்தாமணி, பரிபாடல் போன்றவை உள்ளன.

இங்கு குவிந்துகிடக்கும் மூன்று இலட்சம் ஓலைச் சுவடி களையும் படித்தறிந்தால் நல்ல படைப்புகள் மிகுதியாக வெளிவரும். தமிழ்மொழியின் செழுமையும், தமிழனின் பல்வேறு திறமைகளையும் பற்றி உலகம் இன்னும் அதிகமாகத் தெரிந்து கொள்ளும்.

உலகில் தோன்றிய முதல்மொழி, மூத்தமொழி, தமிழ்மொழி என்பதை ஆணித்தரமாக எடுத்துரைக்க ஓலைச்சுவடிகள் பெரும் பங்களிப்பைச் செய்து வருகின்றன.

இணையத்தில் ஓலைச்சுவடி பற்றிய ஆய்வுகள்

க. பகலவன், த. பிரியா

முன்னுரை

மக்கள் தம் உணர்வுகளையும். எண்ணங்களையும் இரண்டு வழிகளில் வெளியிடுகின்றனர், ஒன்று பேச்சுவழி மற்றொன்று எழுத்துவழி. எழுத்துவழியில் வெளியிடப்படுபவை நிலைபெற்று விடுகின்றன. பழந்தமிழர் தம் கருத்துகளைக் கல், களிமண், பலகை, உலோகத்தகடு, தோல், மரக்கட்டை. தந்தம், சங்கு, சிப்பி, துணி, மூங்கில் பத்தை, எலும்பு, பனைஓலை போன்ற பொருட்களில் எழுதி பாதுகாத்தனர். தமிழகத்தைப் பொறுத்த வரையில் அதிகம் பயன்பட்டது ஓலையாகும். ஓலை, ஏடு. சுவடி, முறி, பத்திரம், நுகும்பு, பொத்தகம், தீட்டு, தோடு, நூல் என்று பலவாறாக அழைக்கப்பட்டிருக்கின்றன. ஓலைகள் பட்டோலை. பொன்னோலை, மந்திர ஓலை, வெள்ளோலை, பாயோலை என்று இலக்கியங்களிலும்; அறையோலை, கையோலை, இறையோலை, கீழ்ஓலை, தூது ஓலை, ஓலை பிடிபாடு என்று கல்வெட்டுகளிலும் குறிக்கப்படுகின்றன. இத்தகைய பண்டையத் தமிழர்களின் ஓலைச் சுவடிகளைப் பற்றிய ஆய்வுகள் கணினியில் இடம்பெற்றிருப்பது சிறப்புக்குரியது. இணையத்தில் ஓலைச் சுவடிகள் பற்றிய ஆய்வுகளை முன்பொழிவாக இக்கட்டுரை அமைந்துள்ளது.

ஓலைச்சுவடிகள்

சுவடி நூலகம்

காலின் மெக்கன்ஸி (கி.பி. 1754 – 1821), டாக்டர் லெய்டன் (கி.பி. 1803–1811), சி.பி. பிரவுன் (கி.பி. 1798–1837)ஆகிய மூவரும் தங்கள் சொந்த உழைப்பில் திரட்டிய சுவடிகளைக் கொண்டு கி.பி. 1869 இல் சென்னையில் ஒரு நூலகம் தொடங்கப்பட்டது. பின்பு 1876 இல் சென்னைப் பல்கலைக் கழகக் கட்டிடத்தில் தனி நூலகமாகவே தொடங்கப்பட்டது. இந்நூலகத்தில் உள்ள சுவடிகளைத் பிக்ஃபோர்டு என்பவர் முதன்முதலில் விளக்க அட்டவணை தயாரிக்கும் பொறுப்பேற்றார்.

கீழ்த்திசைச் சுவடிகள் ஆய்வு மையம், சுவடியியல் நிறுவனம் போன்ற பல நிறுவனங்களில் பதிக்கப்படாத பல ஓலைச்சுவடிகள் காணப்படுகின்றன. இவை தவிர இன்னும் பல நிறுவனங்களிலும் எண்ணற்ற தமிழ்ச் சுவடிகள் பதிக்கப்படாமல் பாதுகாக்கப்பட்டு

வருகின்றன. அவற்றுள் ஜோதிடம், மாந்தீரீகம், மருத்துவம் பற்றிய சுவடிகள் அதிகம் உள்ளன.

கேரள மணிகண்ட சாத்திரம். குருநாடி சாத்திரம் போன்ற ஜோதிடம் பற்றிய சுவடிகள். இவைகளில் அரிஷ்ட சகோதர பித்ரு அற்பாயுசு, யோக, மாதுரு போன்ற 20 காண்டங்கள் உள்ளன. இவையெல்லாம் தனிப்பட்ட மனிதருக்கான நாடிசுவடிகள்போல் அல்லாமல் பொதுவான தகவல்களாகுக் காணப்படுகின்றன. (ஆருடக்கையேடு, கிரகச் சக்கர ஏடு, ஆதித்தன் பலன். அகத்தியர் ரணவாகடம், ஞானம்–32, அகத்தியர் செந்தூரம், சாலத்திரட்டு, சித்தராரூடம், சௌமிய சாகரம், குரல் கட்ட மந்திரம்) இவையெல்லாம் சுவடிகளின் தலைப்புகள், இவைபோன்று இலக்கியம், புராணம் பற்றியும் சில சுவடிகள் உள்ளன. (சாத்தாவையன் கதை, சாத்தான் கதை போன்றவை) இவை போன்ற பல சுவடிகள் பதிப்பிக்கப் பெறவில்லை. மேலும் நிறைய ஓலைச் சுவடிகளில் என்ன உள்ளது, அது எதைப் பற்றியது என்பது பற்றிய ஆய்வு இன்னமும் தொடர்ந்து கொண்டுதான் உள்ளது.

ஓலைச்சுவடிகள் ஆயிரக்கணக்கான ஆண்டுகளுக்கு முன்னால் முனிவர்களால் தான் எழுதப்பட்டது என்பது ஏற்க முடிவதாக இல்லை. ஏனெனில் பெரும்பாலான பாடல்கள் அந்தாதி யாப்பில் உள்ளன. சங்ககாலப் பாடல்களில் ஆசிரியப்பாவே ஏற்றம் பெற்றிருந்தது. சங்க காலத்திலோ அல்லது அதற்கு முன்னதாகவோ இவை இயற்றப் பெற்றதாக இருந்திருந்தால் பாடல்கள் பெரும்பாலும் ஆசிரியப்பாவில் தான் அமைந்திருக்க வேண்டும். ஆனால் அவ்வாறு இல்லை. எனவே முனிவர்களால் தான் எழுதப்பட்டது என்ற கருத்தை முழுமையாக ஏற்க இயலாது. ஆனால் சங்கம் மருவிய காலத்தும் அதன் பின்னரும் வெண்பா ஏற்றம் பெற்றது. எனவே அக்காலத்திற்குப்பின் தான் இவ்வகை சுவடிகள் தோன்றியிருக்கும் என்பது உறுதி. தமிழில் முதலில் தோன்றிய அந்தாதி நூலான காரைக்காலம்மையாரின் அற்புதத் திருவந்தாதிக்குப் பின்னரே இவ்வகை நூல்கள் தோன்றியிருக்க வேண்டும் எனலாம், காரைக்காலம்மையாரின் காலம் கி.பி. ஐந்தாம் நூற்றாண்டின் பிற்பகுதியாகும். இவை போன்ற ஓலைச் சுவடிகளின் கால ஆராய்ச்சிகள் தொடர்பான கட்டுரைகளும், விமர்சனங்களும் இணையத்தில் இடம்பெற்றுள்ளன.

ஓலைச்சுவடியில் தமிழெழுத்தின் அமைப்பு

பண்டைய காலத்தில் தமிழ் வரிவடித்தில் பல மாற்றங்கள் நிகழ்ந்து வந்துள்ளன. இம்மாற்றங்கள் காலத்திற்கு ஏற்ப நிகழ்ந்துள்ளதைக் காணலாம். பன்னெடுங் காலமாகத் தமிழில்

இலக்கண இலக்கியங்களை வரிவடிவில் எழுதத் தொடங்கியுள்ளனர். பல மாற்றங்கள் பெற்று வளர்ச்சியடைந்து இன்று வழங்கும் தமிழ் வரிவடிவம் நிலைகொண்டாலும் அவற்றிலும் கணிப்பொறியின் உதவியால் பலபல மாற்றங்கள் நிகழ்ந்து கொண்டு தான் இருக்கின்றன. கி.மு. 3ஆம் நூற்றாண்டு முதல் கி.பி.15ஆம் நூற்றாண்டு வரை தமிழ் வரிவடிவில் பலபல மாற்றங்கள் பெற்றாலும் கி.பி. 15ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு தமிழ் வரிவடிவில் பெருமளவில் மாற்றம் நிகழவில்லை என்றே சொல்லலாம், அப்படி நிகழ்ந்த சில மாற்றங்கள் நம்மால் இன்று அறியக் கூடிய நிலையில் இருப்பதைக் காணமுடிகின்றன.

மோ.கோ. கோவைமணி தமிழ்ச் சுவடியியல் என்னும் ஆய்வில் சார்பெழுத்துக் குறியீடுகள் பற்றியும், ஒட்டுவகை எழுத்துகளைப் பற்றிக் கூறும்பொழுது "முழு வரிவடிவ எழுத்தை அடிப்படையாகக் கொண்டு சார்பு வரிவடிவக் குறியீடு களின் உதவியுடன் நான்கு நிலைகளில் ஒட்டுக்கள் அமைகின்றன. இவ்வொட்டுக்கள் முன்னொட்டாகவோ, பின்னொட்டாகவோ, முன்னொட்டும் பின்னொட்டும் இணைந்தோ, மேல் நடுவொட்டாகவோ அமையும்'' என்று தமிழ் எழுத்துகளின் வரிவடிவத்தைப் பற்றிய செய்திகளைக் கூறுகின்றார்.

ஓலைச்சுவடியில், தொல்காப்பியரின் கூற்றுப்படி எகரமும் ஒகரமும் புள்ளி பெற்று வரும் என்பதால், அதன் எகர உயிர்மெய்களும் ஒகர உயிர்மெய்களும் புள்ளி பெற்று வரும் என்பதைக் கருதலாம். ஓலையில் புள்ளி எழுத்துகள் இல்லாததால் எகரமும் ஒகரமும் முறையே ஏகாரமாகவும் ஓகாரமாகவும் வரிவடிவில் ஒன்று போலவே அமைந்துள்ளதைக் காண முடிகின்றது. கி.பி. 12ஆம் நூற்றாண்டிற்கும் பிற்பட்ட தமிழ் வரிவடிவ எழுத்துகளில் எழுத்துகளின் மேல்நடு ஒட்டாகப் புள்ளி வைக்கும் வழக்கம் ஒழிந்திருக்கிறது. கி.பி.15 ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு எழுதப்பெற்ற ஓலைச்சுவடிகளே இன்று கிடைக்கின்றன. நமக்குக் கிடைத்திருக்கும் ஓலைச்சுவடிகளின் காலம் ஏறக்குறைய முந்நூறு ஆண்டுகளாக இருக்க, அக்காலத்தில் எழுதப் பெற்ற தமிழ் எழுத்து வரிவடிவில் புள்ளி நீக்கப்பெற்றிருக்கும்போது அதற்குப் பிறகு எழுதப்பெற்ற ஓலைச்சுவடி எழுத்துகளில் புள்ளி பெற்றிருக்க வாய்ப்பே இல்லை. ஓலைச்சுவடியில் புள்ளி எழுத்துக்கள் இல்லாததற்குப் பலர் பல காரணங்களைச் சொல்கின்றனர். இவ்வாறாக, மோ.கோ. கோவை மணி தமிழ் வரிவடிவத்தில் ஏற்பட்ட மாற்றங்களை ஆதாரங்களோடு இணையத்தில் இணைத்துள்ளது போற்றுதலுக்குரியது.

செப்பேடுகளும், ஓலைச்சுவடிகளும்

தங்களின் கருத்துகளைப் பண்டையத் தமிழர்கள் பல பொருட்களில் பதிவு செய்தனர் என்பதை நாம் அறிவோம். அவ்வகையில் செப்பேடுகளும் ஓலைச்சுவடிகளிலும் கருத்துகளைப் பதித்துள்ளனர். செப்பேடு (செம்பு + ஏடு), ஏட்டுச் சுவடி (ஓலைச் சுவடி) ஏடு + சுவடி என்ற இரண்டு பெயர்களிலும் 'ஏடு' என்ற பொதுவான பெயர் வருவதைக் காணலாம். செப்பேடுகளும் ஓலைச் சுவடிகளும் தனித்தனி ஏடுகள் கொண்டு தொகுதிகளாக உள்ளன. ஓலைச்சுவடி கட்டுக்கள் 'புத்தகக் கவளி' என்று குறிக்கப்பெறும்.

செம்பும் ஓலையும்

பழங்காலத்தில் 'ஓலை' என்றாலே உத்தரவு, ஆணை என்று பொருள்பட்டது. முதலில் ஆணைகள் ஓலையில்தான் எழுதப்பட்டன. பின் கல்வெட்டில் தேவையானவை பொறிக்கப்பட்டன. ஓலையை, 'சிலையிலும் செம்பிலும் வெட்டிக் கொள்ளுக' என்ற தொடரைக் கல்வெட்டுக்களில் காணமுடிகின்றன. எனவே ஓலை முதல்படியாகவும், கல்வெட்டு இரண்டாவது படியாகவும் செப்பேடு மூன்றாவது படியாகவும் செய்யபட்டவையாகக் கருதப்படுகின்றன.

செப்பேடுகள் சில ஓலை நகல்களைப் பெற்றுள்ளன. ஈரோடு கலைமகள் கல்வி நிலையத்தில் குறிப்பு நாட்டுப் பட்டயம், கத்தாங்கண்ணிப் பட்டயம், திரு முருகன் பூண்டிச் சாசனம் என்ற மூன்று ஓலைபட்டயங்கள் உள்ளன. அவற்றின் செப்பேடுகள் முறையே கள்ளிப்பட்டி திரு.க.கு. கோதண்டராமக் கவுண்டர், கத்தாங் கண்ணி இராசக் கவுண்டர், திருப்பூர் விஜயபுரம் வெங்கடாசலக் கவுண்டர் ஆகியோரிடம் உள்ளன என்கிறார் செ. இராசு.

பண்டைய செப்பேடுகள் ஓலைச் சுவடிகளை மனத்தில் கொண்டு சுவடி அமைப்பிலேயே செய்யப்பட்டன. பிற்காலச் செப்பேடுகள் வடிவத்தில் மாறுபட்டன.

> *"முத்திறத்தார் ஈசன் முதல் திறத்தைப் பாடியவாறு*
> *ஒத்தமைத்த செப்பேட்டினுள் எழுதி – இத்தலத்தில்*
> *எல்லைக் கிரிவாய் இசைஎழுதினான் கூத்தன்*
> *தில்லைச்சிற் றம்பலத்தே சென்று''*

என்பது அக்கல்வெட்டுப் பாடலாகும்.

திருப்பதியில் தெலுங்கு, வடமொழி நூல்கள் பொறிக்கப்பட்ட செப்பேடுகள் பல உள்ளன. திருவாவடுதுறை ஆதினச் செப்பேடுகள் சிலவற்றில் குமரகுருபரர் இயற்றிய சகலகலாவல்லி மாலை எழுதப்பட்டுள்ளது.

செப்பேடுகளில் எழுதப்பெறும் ஆவணங்கள் போன்றவை பல ஓலைகளில் எழுதப்பட்டுள்ளன. அவை கிழக்கிந்திய கம்பெனி, மராட்டியர், நவாபுகள் முத்திரையுடன் கிடைத்துள்ளன. அவற்றில் பல முதுகு நரம்பு எடுக்கப்படாமல் இரட்டை ஓலைகளில் எழுதப் பட்டுள்ளன. இவற்றில் விற்பனை, ஒத்திவைப்பு, ஒப்பந்தம், அடிமைமுறை, கொடுக்கல்– வாங்கல், கடன் பத்திரம் ஆகியவை இடம் பெற்றிருக்கின்றன போன்ற செய்திகளை இணையத்தில் செ. இராசு அவர்கள் செப்பேடுகளும் ஓலைச்சுவடிகளும் என்ற பொருண்மையின் கீழ் விளக்கியுள்ளார்.

இணையதளங்களின் பங்களிப்பு

'உயிர் வகைகள் அனைத்திலும் மனிதன் மட்டுமெ கருவிகளைப் படைக்கும் ஆற்றல் உள்ளவன்' என்கிறார் ஆம்பிரெட் வாலெஸ். மார்க் ஆண்டர்சன் என்ற மாணவர் 1968ஆம் ஆண்ட 'மொசைக்' எனப்படும் ஒரு புதுமையான மென்பொருளைக் கண்டுபிடித்தார். இது யனிக்ஸில் வேலை செய்யம். இதன்மூலமாகத் தொலைபெசி இணைப்புகளைப் பயன்படுத்திப் பல கணினிகள் ஒன்றுடன் ஒன்று சேர்க்கப்பட்டன. இதனால் இன்று பரவலாகப் பயன்படுத்தப்படும் வலையதளமாகிய இணையதளம் பிறந்தது எனலாம்.

சுவடியியல் குறித்த இணையதளங்கள்

சித்தர் பிரபஞ்சம்

சித்தர் பிரபஞ்சம் என்ற இணையதளம் சித்தர் இரசவாத அதிசயங்கள் எனும் தலைப்பின்கீழ் இரசவாதச் செய்முறைகளையும். விளக்கங்களையும் தெளிவாகக்கூறுவதொடு மட்டுமல்லாமல். கொல்லி மலை ஓலைச்சுவடி குறித்த குறிப்புகளையும் தெரிவிக்கின்றன. 'கொல்லிமலை கலிங்கம்' என்னும் பெயருடைய ஓலைச் சுவடியானது சேலம் மாவட்டத்தைச் சேர்ந்த 'பெருமாள் சேர்வை' என்ற பாரம்பரிய சித்த வைத்தியரிடமிருந்து பெறப்பட்டதாக கூறப்படுகிறது. இதில் கொல்லிமலையில் கிடைக்கக்கூடிய பல அரிய மூலிகைகளின் இருப்பிடம். அவற்றை இரசவாதம். காயகற்பத்திற்கு எப்படி பயன்படுத்தலாம் என்ற இரகசிய செய்முறை விளகங்களும் விவரமாகக் கூறப்பட்டுள்ளது.

இச்சுவடியில் உள்ளவற்றைச் சித்த மருத்துவர்களுக்கும். சித்தர் கலை ஆய்வாளர்களுக்கும் பயன்பெறும் விதத்தில் எளிய முறையில் பதிவு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்க ஒன்றாகும்.

பிரபசயோகம்

இவ்விணைய தளம் 'சித்தர்களின் சேவகன்' என்னும் தலைப்பின்கீழ் ஓலைச்சுவடிகளை வரிசைப்பட கொடுத்துள்ளது. அவற்றை நாம் தேர்வுசெய்து தமது வசதிக்கெற்ப பார்த்து படித்துப் புரிந்துக்கொள்ளும் வகையில் எளிமைப்படுத்தி தரப்பட்டுள்ளது.

கூகுள் குழுமம்

கூகுள் குழும இணைய தளம் 'சோதிடம்' குறித்த கருத்துகளைத் தெரிவிப்பதாக அமைந்துள்ளது. குறிப்பாக ஓலைச்சுவடியின்மூலம் சோதிடம் கூறுவதாக அமைகிறது.

அமர்க்களம்

இத்தளத்தில் 'பரமார்த்த குருகதைகள்' என்ற தலைப்பில் ஓலைச்சுவடிப் பத்திரிக்கை ஆரம்பிக்கும் கருத்துகள் பகிரப்படுகின்றன.

சித்தபீடியா

சித்த மருத்துவ ஓலைச்சுவடிகள் குறித்து முன்மொழிகின்றன. ஓலைச்சுவடிகள் எழுதப்பட்ட முறைகள் குறித்தும். அவற்றை முறையே பேணி காப்பது குறித்தும் பேசப்படுகின்றன.

ஈகரை தமிழ்க் களஞ்சியம்

இது உலகத் தமிழர்களின் உறவு பாலமாகத் திகழ்கிறது. இதில் பல தகவல்கள் கிடைக்கின்றன. குறிப்பாக சுவடியியல் என்று நோக்கும்போது பதிணென் சித்தர்கள் சமாதியானத் தலங்களைப் பற்றி குறிப்பிடும் பழைய ஓலைச்சுவடிகள் குறித்த செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன.

தமிழ் சுவடியியல்

இத்தளத்தின் ஆசிரியர் மோ.கோ. கோவைமணி. இவர் ஓலைச்சுவடி எழுதிய முறைகள் பற்றிக்கூறும்போது மூன்று நிலைகளில் ஏடுகள் எழுதப்படுவதாக முன்மொழிந்துள்ளார். இவை முறையே,

1. மூல ஏடெழுதுதல்.
2. நகலேடு எழுதுதல்
3. திருத்திய ஏடெழுதுதல்

என்று ஒவ்வொன்றிற்கும் தெளிவுரை தந்துள்ளார்.

முடிவுரை

மனிதன் தங்களின் கருத்துக்களைப் பதிவு செய்வதற்கு அக்காலத்தே ஓலைச் சுவடிகளையும், கல்வெட்டு, செப்பேடுகளையும பயன்படுத்திய காலம் மாறி தற்போது அறிவியல் தொழில்நுட்பத்தின்

வளர்ச்சியால் கணினியின் உதவியால் இணையத்தில் இணைத்துக் கொண்டு இன்றைய ஆய்வுகள் நடைபெற்று வருகின்றன. அவ்வகையில் இணையத்தில் ஓலைச்சவடிகள், ஓலைச்சுவடிகளில் தமிழெழுத்தின் அமைப்பு, செப்பேடுகளும், ஓலைச் சுவடிகளும் போன்ற கருத்துக்களின் பின்புலமாக இக்கட்டுரை அமைந்துள்ளது. மேலும் ஓலைச்சுவடிகள் பற்றிய எண்ணற்ற ஆய்வுகள் இணையத்தில் காணக்கிடைக்கின்றன. இன்றைய ஆராய்ச்சியாளர்களுக்கு இவை பெரிதும் துணைபுரியும் என்பதில் சிறிதேனும் ஐயமில்லை எனலாம்.

சுவடிக் குறித்த இணையதளங்கள் ஒவ்வொன்றும் ஆணித்தரமான கருத்துக்களை முன்வைக்கின்றனன. தமிழ் படித்தவர்களால் மட்டுமே ஓலைச்சுவடிகளைப் படிக்க இயலும் என்ற நிலை மாறி மற்றைய துறையினரும் மின் நூலகங்களிலும் இணைய தளங்களிலும் பார்த்து மகிழ்வதொடு மட்டுமல்லாமல் படிக்கவும் செய்கின்றனர். ஒவ்வொரு இணைய தளத்தின் கருத்துகளைக் காணும் போது சித்த மருத்துவம் குறித்த தகவல்கள் கிடைக்கின்றன. எங்கும் எளிதில் பார்க்கும் வாய்ப்பும் அமைகிறது.

இணைய முகவரிகள்

1. www. tamilheritage.org
2. www. tamilo.com
3. www. santhipu.com
4. www. tamilfliclub.com
5. www. kalakam.com
6. www. kavithi.com
7. www. nilapennukku.com
8. www. youtube.com
9. www. facebook.com
10. www. sithanarul.com
11. www. eegarai.com
12. www.kovaimani - tamilmanuscriptology.blogs.pot.in
13. www.ramanans.wordpress.com
14. www. ularuvayan.com
15. www. siddharprabanjam.com
16. www. pharabasyogam.com
17. www. grapsgoogle.com
18. www. amarkkalam.com
19. www. siddhapedia.com

ஆவணச் சுவடி பதிப்பு வரலாறு

முனைவர் த. கலாஸ்ரீதர்
உதவிப் பேராசிரியர்
காகிதச் சுவடிப்புலம்
தமிழ்ப்பல்கலைக்கழகம்

மனிதன் தோன்றிய காலத்திலிருந்து தன் மனத்தில் தோன்றிய செய்திகளைக் கல்லிலும் செம்பிலும் இலைகளிலும் மரப்பட்டைகளிலும் தாள்களிலும் பதியவைத்தான். இவ்வாறாக மனித இனம் தோன்றியதிலிருந்து கூட்டமாக வாழ ஆரம்பித்தனர். கூட்டத்தில் தலைவன் ஒருவன் தோன்றினான். இச்சுழற்சி முறையினால் சமுதாயம் உருவானது தொழில்முறை உருவானது. அரசாங்கம் உருவானது. மனிதனுக்கென்று வாழ்வியல் நெறிகள் சட்டதிட்டங்கள் மனிதனால் ஏற்படுத்தப்பட்டது. மக்களை நெறிப்படுத்திக் கொள்ள ஒழுக்க முறைகள், ஒழுங்குமுறைகள் கடைபிடிக்கப்பட்டன. இவைகளையெல்லாம் பதிவு செய்து வைத்தனர். அவற்றை நடைமுறைப்படுத்தினர். மக்களின் நலனுக்காக பல புதிய கொள்கைகளும், சலுகைகளும் வகுக்கப்பட்டன. சட்டம் ஒழுங்கு பின்பற்றப்பட்டது. அச்செய்திகளையெல்லாம் ஆவணங்களாகப் பின்பற்றத் தொடங்கினர். நடைமுறை செய்திகளையும், நிகழ்ச்சிகளையும் ஆதாரபூர்வமாக நிருபிக்க சாட்சிகள் ஆதாரங்கள் தேவைப்படுகின்றன. இவற்றையே ஆவணம் என்கின்றனர்.

ஆவணம்

எழுத்துகள், எண்கள் குறிகள் ஆகியவற்றைக் காகிதம் ஓலை செப்புத்தகடு கல் போன்றவற்றில் செய்தியாகப் பொறித்து வைக்கப்பெறுவது ஆவணம் எனப்படும். இச்செய்திகள் சட்டத்தின் சான்றாகக் காட்டக் கூடியவாதலின் ஆவணம் இன்றியமையாததாக உள்ளது.

ஆவணங்களின் வகைகள்

ஆவணங்கள் முத்திரையிடப்பட்ட அல்லது பதிவு செய்யப்பட்ட ஆவணங்கள், உரிமை ஆவணங்கள், நீதித்துறை ஆவணங்கள், ஒருவருடைய பத்திரம், பலரால் கையொப்பமிடப்பட்ட ஆவணங்கள், தனியார் ஆவணங்கள் எனப் பலவகைப்படும்.

நம்பி ஆரூரராகிய சுந்தரமூர்த்தி நாயனாரின் மூதாதை ஒருவர் தமக்கு அடிமை ஓலை எழுதிக் கொடுத்திருப்பதாக வழக்கு கூறிச் சிவபெருமான் அந்த ஓலை ஆவணத்தைச் சான்றாகக் காட்டியதாகப் பெரியபுராணம் கூறுகிறது.

ஒன்றைப் பாதுகாக்கும் நோக்குடன் ஒரு செய்தியை அல்லது பல செய்திகளைப் பதித்துவைத்துக்கொள்ளும் வழக்கம் மக்களிடையே

நெடுங்காலமாக இருந்துவருகிறது. அந்தப் பதிவுக் குறிப்புகளும் ஆவணங்கள் என்று பொதுவாகத் தமிழில் குறிப்பிடப்படுகின்றன.

முற்காலத்தில் ஒருவருக்கு அரசர் நிலம் அல்லது வேறு மானியம் வழங்கினால் அந்த விவரத்தைச் செப்பேடுகளில் பதித்து முத்திரையிட்டு கொடுப்பது வழக்கம். அரசனது ஆணையைக் குறிப்பெடுத்துக் கொள்பவர் **திருவாய்க்கேள்வி** என்றும் அதை ஓலையில் எழுதிக்கொள்பவர் **திருமந்திர ஓலை** என்றும் பிழையின்றி எழுதப்பட்டுள்ளதா என்று பார்ப்பவர் **ஓலை நாயகம்** என்றும் நிலம் தொடர்பான ஆணையாயின் அது **ஆவணக் களரி** அலுவலர்களால் பார்க்கப்பட்டு பின்னர் ஆவணத்தி என்பவரால்நிறைவேற்றி வைக்கப்படுகிறது என்ற குறிப்புகள் வாழ்வியற் களஞ்சியத்தில் கொடுக்கப்பட்டுள்ளன. இலக்கியம் மற்றும் வரலாற்று செய்திகளின் வழியாக ஆவணத்தின் சிறப்பை அறிந்து கொள்ளமுடிகிறது.

கி.பி. 17, 18 ஆம் நூற்றாண்டைச் சார்ந்த வருவாய்த் துறை சார்ந்த ஓலை ஆவணங்களும் கோயில் பராமரிப்புப் பற்றிய செய்திகளைக் கூறும் கோயில்களில்காணப்படும் ஆவணங்களையும் மராத்தியர்காலத் தமிழ் ஆவணங்களும் பல தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள ஓலைச்சுவடித் துறையும் அரிய கையெழுத்துச் சுவடித்துறையும் ஆவணங்கள் பற்றிய பல ஆய்வுகளை மேற்கொண்டு வருகின்றனர்.

ஓலை ஆவணங்கள் வருவாய்த்துறை தொடர்பானதாக இருந்ததால் அவை பல மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து பெறப்பட்டவை. ஆனால் அதில் பல சமுதாயம் தொடர்பான செய்திகள் காணப்படுவதை ஆய்வுகள் மேற்கொள்ளும்போது அறியமுடிகிறது.

தமிழ் இலக்கியங்கள் காதலையும் வீரத்தையும் மையமாகக் கொண்டு பேசப்படுகின்றன. தமிழரின் வாழ்க்கை முறையும் அதன் அடிப்படையிலே அமைந்துள்ளது. இது மட்டுமின்றி மக்களின் சமூக நிலை எந்த நிலைக்கு உயர்ந்திருந்தது, சிறந்திருந்தது, தமிழகத்தை ஆண்ட அன்னிய தேசத்தார்கள் பல நல்லாட்சியைத் தமிழகத்தில் செய்திருந்தாலும் அவர்களின் ஆட்சியில் மக்களின் வாழ்வியல் நிலைகள், பொருளாதார நிலைகள், தனிமனித உரிமைகள், பெண்களின் வாழ்க்கை முறைகள் அவர்களுக்கு அளிக்கப்பட்ட உரிமைகள் மற்றும் பரிக்கப்பட்ட உரிமைகளை அறிந்துகொள்வதற்கும், மக்களின் கல்விநிலை சமயம் மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளை அறிந்துகொள்வதற்கு ஓலை ஆவணங்கள் மற்றும் காகிதச் சுவடி ஆவணங்கள் சிறந்த சான்றாதாரமாகத் திகழ்கின்றன.

ஆவணங்களின் சிறப்பு

கிழக்கில் இந்தோனேசியா முதல் மேற்கில் மொரீசியசு வரையில் நடைபெற்ற பிரிட்டிசு அரசின் நடவடிக்கைகளுக்குச் சென்னையே மையமாகும். எனவே தான் புனித சார்சுகோட்டை ஆவணங்கள் சிறப்புத் தன்மை வாய்ந்தவையாக உள்ளன. ஆங்கிலேயர் தமிழகத்தைக் கைப்பற்றியவுடன் எழுதப்பட்ட சுவடிகளாக இந்த ஆவணச் சுவடிகள் காணப்படுகின்றன.

தமிழரின் அரசியல் சமூகப் பொருளாதார வளர்ச்சிநிலையை அறிய பெரிதும் துணைபுரியும் வகையில் இவ் ஆவணங்கள் அமைந்துள்ளன. இவை கி.பி.1770 ஐ ஒட்டி எழுதப்பட்ட ஆவணங்களாகும். இவை பதிவு அலுவலகத்தினின்று நேரடியாகப் பெறப்பட்ட ஆவணங்கள் ஆதலின் தனியார் சொத்தாகவோ அல்லது தனியார் எவரும் உரிமைகொண்டாடவோ முடியாது எனலாம்.

ஒவ்வொரு ஆவணமும் காலம், சூழல் இடம் அளவீட்டை மேற்கொண்டோர் விவரம் ஆகியவற்றைத் தெளிவாகக் காட்டுகின்றன. இதற்குச் சான்றாக செங்கல்பட்டு மாவட்ட ஓலை ஆவணங்களைக் குறிப்பிடலாம்.

கோவளம் சீமை செங்குன்றம் தாலுக்கா 1762 வருடம் செப்டம்பர் மாதம் 5ம் தேதி ஐப்பசிமாதம் 22-ந்தேதி இஞ்சினியர் பாரனிட்டு ராசஸ்ரீ செங்கல்வராய முதலியார் அவர்கள் திட்டப்படிக்கி வகை ஏடு எனத் தொடங்கி செய்திகள் கூறப்படுகின்றன. (தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர், ஓலைச்சுவடித்துறையில் உள்ள செங்கல்பட்டு மாவட்ட ஓலை ஆவணங்கள்)

சில ஆவணங்களில் எல்லை அமைப்புகளைக் கூறுவதுடன் ஒரு ஊரை அளப்பதற்குப் பல ஊர்களில் இருந்து மிராசுதாரர்கள் வந்திருந்து மேற்பார்வை செய்ததற்கானக் குறிப்புகள் காணப்படுகின்றன. இந்த அமைப்பு முறை பிற்காலச் சோழர் காலத்திய நில அளவையை ஒத்துக் காணப்படுகின்றது. நில அளவையில் ஈடுபட்ட உயர் அதிகாரிகளில் இருந்து கயிறு பிடித்த கடைநிலை ஊழியர் வரையான செய்திகள் சோழர்காலத்தில் இருந்துள்ளதற்கான வரலாற்றுக் குறிப்புகள் காணப்படுகின்றன. அதுபோலவே தஞ்சாவூர் மாவட்ட ஓலை ஆவணங்கள் மற்றும் புதுக்கோட்டை மாவட்ட ஓலை ஆவணங்களில் நில அளவைகள் நடந்துள்ளதை அறியமுடிகின்றது.

மேலும் ஆவணங்கள் மாவட்டங்களின் பெயர்களில் அமைந்திருப் பதற்கான காரணத்தை அறிய வேண்டும் என எண்ணந் தோன்றும். அவற்றிற்கான விளக்கம் பின்வரும் செய்திகளின் வாயிலாக அறியலாம். செங்கல்பட்டு மாவட்ட ஓலை ஆவணங்கள் தஞ்சாவூர் மாவட்ட ஓலை ஆவணங்கள், புதுக்கோட்டை மாவட்ட ஓலை ஆவணங்கள், செங்கோட்டை ஆவணங்கள் என அழைக்கப்படுவதற்கான முதற்காரணம் இவைகள் அந்தந்த மாவட்ட ஆட்சியர் அலுவலகத்திலிருந்து தஞ்சை தமிழ்ப் பல்கலைக் கழகத்திற்குக் கிடைத்துள்ளமையாலும் கிடைத்த பகுதிகளைச் சுற்றியுள்ள செய்திகளைப் பற்றிய குறிப்புகள் காணப்படுவதாலும் அந்தந்த மாவட்டங்களின் பெயர்கள் ஆவணங்களுக்கு இடப்பட்டுள்ளன. மேலும் இதற்குச் சான்றாகத் தஞ்சாவூர் மாவட்ட ஓலை ஆவணங்களில் உள்ள செய்தியமைப்பைப் பார்க்கும்போது

பட்டுக்கோட்டை தாலுகா, அறந்தாங்கி மாகாணம், கொடுக்காவயல், சுரோத்திரியம் 1225 பசலி நாள்முதல் பயிமாஷ் நிலமளவு கணக்கு, 1816 ஆம் வருசம் மே மாதம் 28-ந்தேதி

பயிமாஷ் திருவையாத்து தாலுகா நாட்டுக்கணக்கு வெங்கப்பய்யன் மேற்படி கிராமம் காரணம் வீரய்யப் பிள்ளை கிராமமிராசு அறியாநாதய்யன் குடிமிராசு, அசல்கிராமமிராசு நான்குடி அன்னாச்சாரியார் நாவினிவயல் குடிமிராசு ராமநாதய்யன் சேர்வைக்காரன் ஆக கிராமபேர்வழி 2 தாலுகா முத்திரைசேவுகன் பட்டுக்கோட்டை 38 ஆம் நம்பர் நாராயணய்யங்கோன் நிலமளவு வெட்டியான் பெரியான் தோத்தன், ஆக பேர்வழி 10 இவர்கள் ருசுவதியால் கம்பனி முத்திரை போட்ட பனிரெண்டடி கோலால் சவுக்கம் 1க்கு குழி 1 ஆக குழி 2000க்கு வேலி 1. (கட்டு-2, ஏடு-1) எனச் செய்திகள் தொடர்ந்து எழுதப்பட்டுள்ளன. இதுபோலவே புதுக்கோட்டை மாவட்ட ஓலை ஆவணங்களும் இந்த முறையில் எழுதப்பட்டு செய்திகளைக் கூறுகின்றன. ஆனால் ஒவ்வொரு மாவட்ட ஓலை ஆவணங்களிலும் செய்திகளின் அமைப்பு மாறுபட்டு காணப்படுகின்றன.

ஆவணச் சுவடிகளைப் படிப்பதில் படியெடுப்பதில் ஏற்படும் சிக்கலும் தீர்வுகளும்

ஓலை ஆவணங்கள் மிகுந்த சிதைவுற்ற நிலையிலே காணப்படுகின்றன. மேலும் ஓலை ஆவணங்கள் பராமரிக்கப்படாமலும் எண்ணெய் பூசப்படாமலும் இருப்பதால் அவற்றைப் பெயர்த்து எழுதுவது மிகவும் சிக்கலான ஒன்றாகும். மேலும் பூச்சிகள் அரிக்கப்பட்டு ஓலைகள் மிகவும் ஒடிந்த நிலையிலும் பூச்சிகளால் அரிக்கப்பட்ட சுவடிகள் ஒன்றோடு ஒன்று ஒட்டிக் கொண்ட நிலையிலும் காணப்படுவதால் இவைகளைப் பிரித்துக் கையாள்வது மிகவும் சிக்கலான ஒன்றாகும். இந்த ஆவணங்களில் சில சங்கிலித் தொடர்போல எழுதப்பட்டுள்ளதால் முறையான பயிற்சியில்லாமல் படிப்பதோ படியெடுப்பதோ இயலாத ஒன்று. மாவட்டத்திற்கு மாவட்டம் குறியீடுகளும், எழுத்துமுறைகளும் மாறுபட்டும் வேறுபட்டும் காணப்படுகின்றன. செங்கல்பட்டு மாவட்ட ஆவணங்களில் உள்ள செய்திகள் நீளவாக்கில் எழுதப்படாமல் ஒன்றன்பின் ஒன்றாக கட்டம் கட்டமாக நிரலணி பத்தியமைப்பில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் மற்ற ஆவணங்களில் பத்திரப்பதிவுகள் போலச் சங்கிலித் தொடராக எழுத்துக்கள் வீச்செழுத்தில் எழுதப்பட்டுள்ளன.

தரவுகள் பதிவு செய்யும் முறை

தலைப்பு ஏடுகள் முதலில் அது அமைந்துள்ள சீமை, மாகாணம் எழுதப்பட்ட ஆண்டு, மாதம், தேதி, தமிழிலும் ஆங்கிலத்திலும் கொடுக்கப்பட்டு ஏட்டெண் இரண்டு பக்கங்களுக்கும் தனித்தனி எண்கள் கொடுக்கப்படாமல் இரண்டு பக்கத்திற்கும் சேர்த்து ஏட்டின் முதல்பக்கத்தில் எண் கொடுக்கப் பட்டுள்ளது. செங்கல்பட்டு மாவட்ட ஆவணங்களில் செய்திகள் எழுதப்பட்டு முடிக்கும்போது யாரால் எழுதப்பட்டது என்பதை வெளிப்படுத்தும் வகையில் ஊர் கணக்கு முருகன் என எழுதியவர் கையெழுத்துப் போடப்பட்டிருக்கும். ஆனால் தஞ்சாவூர், புதுக்கோட்டை மாவட்ட ஓலை ஆவணங்கள், மற்றும் செங்கோட்டை ஆவணங்களில் எழுதியவர் கையெழுத்து சாட்சி கையெழுத்து என ஐந்திற்கும் மேற்பட்டோர் கையெழுத்து போட்டுள்ளதை அறியமுடிகிறது.

வேற்றுமொழிகளின் கலப்பு

ஆவணச்சுவடிகளில் அதிகம் வேற்றுமொழிகளின் தாக்கம் நிறைந்துள்ளன. இலக்கியச்சுவடிகளில் காணப்படும் தெளிவான எழுத்து, மொழித் தெளிவுகள் ஆவணச்சுவடிகளில் காணப்படுவதில்லை. தமிழ் எழுத்துடன் வடமொழி எழுத்தான கிரந்த எழுத்துகள் அதிகமாக கூட்டெழுத்திலே எழுதப்பட்டுள்ளன. தஞ்சாவூர் மாவட்ட ஓலை ஆவணச் சுவடிகளில் ஆங்கிலேயருக்கு எழுதப்பட்ட சில கடிதங்கள் காணப்படுகின்றன. அதேபோலத் தஞ்சாவூர் மராத்திய தமிழ் ஆவணங்களில் எழுதப்பட்ட கடிதங்களும் உள்ளன. இவை இரண்டிலும் பயன்படுத்தப்பட்ட வார்த்தைகள் வாக்கிய அமைப்புகள் ஒரே மாதிரியாகக் காணப்படுகின்றன. இவற்றைக் கொண்டு அக்கால மக்களின் கல்வி நிலை மற்றும் வாழ்க்கை நிலையை அறிய துணைபுரியும் வகையில் உள்ளன. தமிழ் எழுத்துடன் கிரந்த எழுத்துகளை கலந்து எழுதியுள்ளனர். கடிதங்கள் அனைத்தும் பேச்சுவழக்கில் உள்ளது போல் காணப்படுகின்றன.

> திருக்காட்டுப்பள்ளி கில்லெதார பிளதுறாவு குமாறன ஆனந்தறவு ஷி கிராமத்தில் தான வூ சிலாகளுக்கு இருகக்ா சருவமானனிய வியாசசியததுககாக முனனாலெ குடுபபடடது போக பாககி ஆதாதவுகளின நகலகள முத்திரை கடுதாசியில கொடுககவெணுமெனறு துறையவறகளிடததில குடுதது இணடாறசாசி வநத 129 நி° பிடடிஷன படிககி
>
> ரிகாறடடு பறிசொதிததததில பிடடிஷனா அபெக்ஷிககா தஸதா வெஜிகளஅகபபடவிலலை. ஆகையால ஷி பிடடிஷன பயிததுடன வாபஸ அனுபபபடடிருககிறது.
>
> 1861 கி
> சபடமபறமீ 282
>
> R.Krishna Rao
> off. Serkhel
> கட்டு-7 பக்-2

பின்ஷன்	-	பென்ஷன்
பிட்டிஷன்	-	பெட்டிஷசன்
அசிஷ்ட்டாண்டு	-	அசிஸ்டெண்டு
அபிசு	-	ஆபிஸ்
சரட்டுபிட்டு	-	சர்ட்டிபிகேட்
மெஸ்த்தர்	-	மேஸ்த்தர்
றோகாகள்	-	ரோக்காக்கள்
பிந்துறாவு	-	பிந்துராவு
ஆனந்தறாவு	-	ஆந்தராவூ
அரமனை	-	அரன்மனை
சிவர்	-	சுவர்

ஆக்கிட்டிங்கு கலெக்குடர், தெஸ்தாவெஜி- நோட்டிசு சற்கில், வாபஸ் யாதி அற்ஜி பிறாது போன்ற வார்த்தைகள் பேச்சு வழக்கிலும் பிழையாகவும்

பிறமொழிகள் அதிகம் இடம் பெற்றுள்ளதையும் அறியமுடிகிறது. ஓலைச்சுவடிகளில் காணப்பெறும் பொதுவான எழுத்தமைதியே எல்லா ஆவணங்களிலும் குறிப்பாக ஓலை ஆவணங்கள் மற்றும் தாள் ஆவணங்களில் காணப்படுகின்றன.

காலுக்கும் ரகரத்திற்கும் வேறுபாடு காணப்படவில்லை.

பணடாரம் - பண்டாரம்

சுபாருவு - சுப்பாராவு

மெய்யெழுத்துகளுக்குப் புள்ளியில்லா நிலை எல்லாச்சுவடிகளிலும் காணப்படுகின்றன. குறில் நெடில் வேறுபாடுகள் காணப்படவில்லை. இடம் பொருள்களைக் கொண்டு நாம்தான் குறில் நெடிலாக மாற்றிப்படிக்கவேண்டும்.

எ (எ-7) (2-தேதி) 7 ந்தேதி

எ- 7 என்ற நம்பரைக் குறிப்பது 2-ந்தேதியைக் குறிப்பது அதே போல அளவைகளில் (எ-7) என்பது நம்பரையும் (2-படி) 2 படி என்ற அளவையும் குறிப்பதாகும்.

(எ-7) தேதி -2)

(எ-7) (உ -படி) படியையும்

எள்ளு என்னும் தானியத்தைக் குறிக்கும் சுருக்கக் குறியீடு ஆகும்.

இதில் பொருள் புரிவது என்பது மாதம் தேதி வரும் இடங்களில் இந்தக் குறியீடு வரும். அளவைகள் என்று பார்க்கும் இடங்களில் எ 7 படி என்ற குறியீடு வரும் என்பதையும் தானியங்கள் பற்றிய செய்திகள் வரும் இடங்களில் எ எள்ளுக்கான குறியீடு இவை என்பதையும் புரிந்து படிக்கவேண்டும்.

குறியீடுகளையும் கூட்டெழுத்துக்களையும் தெளிவாக தெரிந்து கொண்டால் எந்தவகை ஆவணமாக இருந்தாலும் எளிதில் படிக்கலாம். சில ஆவணச் சுவடிகள் சங்கிலித் தொடர்போல எளிதில் புரிந்து கொள்ளமுடியாத அளவில் எழுதப்பட்டிருக்கும் ஆனால் அவற்றைப் படிக்கும்போது முக்கியத் தகவல்களைப் புரிந்துகொள்ளும் வகையில் ஏதாவது குறிப்புகள் கிடைக்கும். அவற்றைக்கொண்டு நாம் பொருள் விளங்கிக் கொள்ளலாம். சான்றாக (சாரங்கபாணி கோயில் ஆவணங்கள் - கும்பகோணம்)

ஆவணச் சுவடிகள் பதிப்பிக்கப்படவேண்டியவை

பொதுவாக இன்றைய காலகட்டத்தில் ஓலை ஆவணமாக இருந்தாலும் தாள் ஆவணமாக இருந்தாலும் அதைப் பற்றிய ஆய்வுகளை செய்யுமாறு ஆசிரியர்கள் மாணவர்களை ஊக்கப்படுத்தினாலும் மாணவர்கள் இதுபோன்ற ஆய்வுகளைச் செய்வதற்கு முன்வருபவர்கள் மிகவும் குறைவாகவே உள்ளனர். ஆனால் நூற்றுக்கும் மேற்பட்ட ஆய்வியல் நிறைஞர் மற்றும் முனைவர் பட்டம் பெறுபவர்கள் ஆய்வுச் செய்வதற்கான தகவல்கள் ஆவணச் சுவடிகளில் காணப்படுகின்றன. அரசியல் சமயம்,

சமுதாயம், கல்விநிலை, பொருளாதாரம், மொழியியல் தொடர்பான செய்திகள் நிறைந்தவையாக ஓலை மற்றும் தாள் ஆவணச்சுவடிகள் காணப்பட்டாலும் கேட்பாரற்ற நிலையிலேயே உள்ளன. ஒரு நாட்டின் சமுதாய வளர்ச்சியைக் கொண்டே அந்நாட்டின் முன்னேற்றத்தைத் துல்லியமாக அறியமுடியும். சமுதாயம் என்பது சாதியை அடிப்படையாகக் கொண்டது எனப் பலர் எண்ணுகிறார்கள். ஆனால் சாதி என்பது சமுதாயத்தின் ஒரு பிரிவு மட்டுமே என்பதை உணர வேண்டும். சமுதாயம் என்பது மக்களின் வாழ்க்கை நிலை கல்வி நிலை பொருளாதார ஏற்றத்தாழ்வு இவைகளை மையமாகக் கொண்டது ஆகும். 18, 19 ஆம்நூற்றாண்டைச் சேர்ந்த செய்திகள் ஆவணச்சுவடிகளில் அதிகம் காணக்கிடைக்கின்றன.

இலக்கியங்களைப் பற்றிய ஆய்வுகளை மேற்கொள்பவர்கள், நூல்வெளியிடுபவர்கள் இன்றைய நிலையைப் பார்க்கவேண்டுமானால் பெரும்பான்மையோர் தமிழ்சுவடிகளை ஒப்பிட்டோ அல்லது மேலோட்டமாக பார்த்தே செய்ததற்கான அடிக்குறிப்பு எந்த நூல்களிலும் காணப் படுவதில்லை. தமிழில் புலமைவாய்ந்தவர்களே இவ்வாறு இருக்கும்போது புள்ளியில்லாமல் வடமொழிச் சொற்கள் மற்றும் பிறமொழிச் சொற்கள் கலந்த ஆவணச் சுவடிகளைப் படிக்க எவரும் முன்வருவார்கள். ஆகையினால் ஆவணச் சுவடிகளைப் பதிப்பிக்கும்போது அதில் உள்ள செய்திகளை அதாவது மூலத்தில் எவ்வாறு உள்ளதோ அதே நிலை மாறாமல் நூல்வடிவில் கொண்டுவரவேண்டும் அதற்கான விளக்கக் குறிப்புகளைக் கண்டுபிடித்து நூலில் சேர்க்கவேண்டும். தமிழ்ப் பல்கலைக்கழகத்தில் உள்ள ஓலைச் சுவடித்துறையில் உள்ள செங்கற்பட்டு மாவட்ட ஆவணச்சுவடிகளில் மட்டுமே ஆங்கிலத்தில் படியெடுக்கப்பட்டு சென்னையில் உள்ள ஆவணக்காப்பகத்தில் வைக்கப்பட்டுள்ளன. மற்ற ஆவணச்சுவடிகள் படியெடுக்கப்படாதவை என்பது குறிப்பிடத்தக்கது. ஆகையினால் ஆவணச் சுவடிகளின் பதிப்பு பின்வரும் சந்ததியினர்கள் பயன்கொள்ளும் வகையில் அமையுமாறு செய்வதே கற்றறிந்தோரின் சிறந்த பணியாகும்.

துணைநூல்கள்

1. செங்கற்பட்டு மாவட்ட ஓலை ஆவணங்கள், தமிழ்ப் பல்கலைக்கழக ஓலைச்சுவடித் துறை, தஞ்சாவூர்.
2. தஞ்சாவூர் மாவட்ட ஓலை ஆவணங்கள், கட்டு-1, பக். 2, ஓலைச்சுவடித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
3. புதுக்கோட்டை மாவட்ட ஓலை ஆவணங்கள், கட்டு-4, பக். 7, ஓலைச்சுவடித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
4. சாரங்கபாணி கோயில் ஆவணங்கள், கட்டு-2, பக். 7, ஓலைச்சுவடித் துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
5. மராத்தியர் காலத் தமிழ் ஆவணங்கள், மூட்டை எண்.7, அரிய கையெழுத்துச் சுவடித்துறை, தமிழ்ப் பல்கலைக்கழகம், தஞ்சாவூர்.
6. வாழ்வியற் களஞ்சியம், தொகுதி-7, பக். 644, தமிழ்ப் பல்கலைக்கழக வெளியீடு.

நாயக்கர் கால ஓலை ஆவணங்கள்

முனைவர் கோ.உத்திராடம்

விசயநகரப் பேரரசு தொடர்ந்த வெற்றிகளால் விஜயநகர ஆட்சி தென்னிந்தியா முழுவதும் பரவியதால் நிர்வாக வசதிக்காக நிலப்பரப்பு பல பகுதிகளாகப் பிரிக்கப்பட்டது. அப்பகுதிகளை ஆள்வதற்காக நாயக் அல்லது அமர நாயக் என்பவர்கள் நியமிக்கப் பட்டனர். தங்கள் பகுதிக்கு முழு அதிகாரம் பெற்றவர்களாகவிருந்த இந்த அமர நாயக்கர்களே பின்னர் நாயக்கர்கள் என்ற பட்டத்துடன் முழுச்சுதந்திரம் பெற்று அரசர்களாக மாறினர். மைசூர், இக்கேரி, மதுரை, தஞ்சை, செஞ்சி, வேலூர் ஆகியன விசயநகரப் பேரரசின் பகுதிகளாகப் பிரிக்கப்பட்டன. இதில் மதுரை நாயக்கர், தஞ்சை நாயக்கர், செஞ்சி நாயக்கர், வேலூர் நாயக்கர் ஆகியவர் தமிழகத்திலிருந்த அமர நாயக்கர்களாவர்.

மதுரை நாயக்கர் அரசபரம்பரையினர் கி.பி.1529 முதல் கி.பி.1736 வரை ஏறத்தாழ 207 ஆண்டுகள் மதுரை நாட்டைச் சிறப்பாக ஆட்சி செய்தனர். விசுவநாத நாயக்கர் முதலாக மீனாட்சி அரசி இறுதியாகப் பதிமூன்று பேர்கள் ஆண்டனர். தஞ்சாவூரைத் தலைமைப் பீடமாக அமைத்துக்கொண்டு செவ்வப்ப நாயக்கர், அச்சுதப்பநாயக்கர், இரகுநாதநாயக்கர், விஜயராகவ நாயக்கர் என நால்வரும் விசயநகரப் பேரரசின் கட்டுப்பாட்டின் கீழ் தொடர்ச்சியாகச் சுமார் 140 ஆண்டுகள் ஆட்சி செய்தனர். தஞ்சை, மதுரை இவற்றில் நாயக்கர் மன்னர் ஆட்சி ஏற்படுவதற்கு முன்பே கி.பி.1464 இல் செஞ்சியில் நாயக்கர் ஆட்சி ஏற்பட்டு கி.பி.1648 வரையில் நிலைத்திருந்தது. விஜயநகரப் பேரரசர் கிருஷ்ணதேவராயர், அச்சுததேவராயர் காலத்தில் செஞ்சி வையப்ப நாயக்கர் 'அடப்பம்' என்ற பதவியில் இருந்தசெய்தியும், அடப்பம் வையப்ப நாயக்கர் கிருஷ்ணதேவராயர் நலத்திற்காகத் திருப்பதி வேங்கடப்பெருமாள் திருக்கோயிலுக்கு அறக்கொடை வழங்கியதும் திருப்பதி கல்வெட்டில் கூறப்பட்டுள்ளன (A.R.E., 299 of 1912). வேலூர் நாயக்க மன்னர்கள் கி.பி.1595 முதல் 1604 வரை ஆட்சி செய்தனர். அவர்களின் சின்னபொம்மு நாயக்கர் மற்றும் லிங்கம நாயக்கர் ஆகியோர் வேலூரைத் தலைநகரமாகக் கொண்டு ஆட்சி செய்தனர். வேலூரை ஆட்சி செய்த வீரப்ப நாயக்கனும் சின்ன பொம்மு நாயக்கனும் விசயநகர அவையில் சிறப்புற்றிருந்தனர். செஞ்சி நாயக்கர்கள் அவர்கள் மேல் ஆதிக்கம் செலுத்திவந்துள்ளனர்.

ஓலை ஆவணங்கள்

நம் நாட்டில் எழுதப்படு பொருளாக ஓலையே மிகுதியாகப் பயன்படுத்தப்பட்டுள்ளது. இவ்வோலை பயன்பாட்டிற்கு வருவதற்கு முன்னர் 'பபைரஸ்' என்னும் கோரைப் புல்லைப் பல நாடுகளிலும் எழுதப் பயன்படுத்தினர். பபைரஸ் விரைவில் அழிந்து விடுவதாலும் நம் நாட்டில் பனையோலை மிகுதியாகக் கிடைக்கப் பெற்றமையாலும் ஓலைச் சுவடியில் இலக்கணம், இலக்கியம், சோதிடம் ஆகிய நூல்கள் எழுதப்பட்டுள்ளன. ஆவணங்கள், பதிவேடுகள் ஆகியன குறைந்த அளவிலேயே ஓலைச் சுவடியில் எழுதப்பட்டுள்ளன. ஆனால் ஆவணங்களை முதலில் ஓலையில் எழுதிய பின்னரே கல்வெட்டிலும் செப்பேட்டிலும் பொறித்து வைத்தனர் என்பதை,

> *மூல ஆவணங்கள் ஓலையில் எழுதப்படும் அதற்குச் சரியான படிகள் கல்லிலும் செப்பேட்டிலும் வெட்டப்படும்*
> (தென்னிந்தியக் கல்வெட்டு, தொகுதி-5, எண்.426).

என்ற குறிப்பின் மூலம் அறியலாம்.

கல்வெட்டுகளுக்கும் செப்பேடுகளுக்கும் மூலங்களாகத் திகழ்பவை பனையோலையில் எழுதப்பெற்ற செய்திகளே. அரசர் ஆணை, அலுவலர் கட்டளை, ஊர் சபைகளின் முடிவுகள், புலவர்களின் கவிதைகள், தனிநபர் குறிப்புகள் போன்ற அனைத்துச் செய்திகளும் ஓலைச் சுவடியில் எழுதப்பெற்றன. ஓலை எழுதுகின்ற அரசு அலுவலர் திருமந்திரவோலை, ஓலை நாயகம் ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டு வந்துள்ளனர். நாயக்கர் காலத்தில் இராயசம் என்னும் அலுவலர் ஓலை எழுதும் பணியை மேற்கொண்டுள்ளார்.

> உலகில் பதிவு செய்யப்பட்டுள்ள சுமார் இருபதினாயிரம் ஓலைச் சுவடிகளைப் பொருள்வாரியாகப் பகுப்பாய்வு செய்த மு.கோ.இராமன் என்பவர் வரலாற்றுச் சுவடிகள் ஐந்து சதவீதம் உள்ளன என்றும் அவ்வரலாற்று ஆவணச் சுவடிகள் பெரும்பாலும் அச்சாகாமல் இருக்கின்றன என்றும் சுட்டிக் காட்டுகிறார். (எ.சுப்பராயலு, செ.இராசு,(பதி.). தமிழ்க் கல்வெட்டியலும் வரலாறும், பக்.202-203)

ஆவணங்களின் பயன்பாட்டைப் பற்றி,

> ஆவணங்கள் என்பன நடைமுறை நிகழ்வுகளின் பதிவுகள் ஆகும். பல்துறை ஆய்வுகட்குப் பயன்படும் இவ் ஆவணங்கள் அவ்வக்காலத்தின் சூழல், மொழி, வரலாறு,

பண்பாடு, பொருளாதாரம் ஆகியவற்றைச் சமுதாயத்தின் ஒட்டுமொத்தச் சார்புடன் வெளிப்படுத்துவன. ஆவணங்கள் கல்வெட்டு, செப்பேடு, ஓலை மற்றும் தாள்சுவடி போன்ற பல வடிவங்களில் கிடைக்கின்றன. இடைக்காலம் (History of Medieval Age) வரையிலான வரலாற்றை அறிய உதவும் மூலச் சான்றுகளாகக் கல்வெட்டுகளும் செப்பேடுகளும் திகழ்தல் போலப் பிற்கால வரலாற்றை (History of Modern Age) அறிய உதவும் மூலசான்றுகளாக ஓலை மற்றும் தாள்சுவடி ஆவணங்களும் விளங்குகின்றன என்று தி.புஷ்கலா குறிப்பிடுகிறார். (ம.சா.அறிவுடைநம்பி, (பதி.ஆ), காகிதச்சுவடி ஆய்வுகள், ப.362).

வரலாறு, சமூகம் தொடர்பான ஓலை ஆவணங்கள் பெரும் பாலும் சிறு சுவடிகளாகவும் தனி ஓலைகளாகவும் கிடைக்கின்றன. இவ்வோலைகளில் ஓரங்களை அதிகம் வெட்டாமலும் ஓலை நறுக்கப்படாமலும் நீண்ட அளவில் பயன்படுத்தியுள்ளனர். தனி ஓலைகளைப் பயன்படுத்தும்போது அவற்றின் முதுகு நரம்புகளைக் கிழிக்காமல் இரட்டை ஓலையாகப் பயன்படுத்தியுள்ளனர். சுவடி வடிவில் உள்ள ஆவணங்கள் அரியதாகவே கிடைக்கின்றன.

நாயக்கர் கால ஓலை ஆவணங்கள்

நாயக்கர் கால ஓலை ஆவணங்கள் ஏழு கிடைத்துள்ளன. இவ்வாவணங்கள் சமயம், சமூகம், நட்புறவு, ஒப்பந்தம் ஆகிய நான்கு வகைகளில் அமைந்துள்ளன. முத்துவீரப்ப நாயக்கர் காலத்தில் இரு நாட்டாரிடையே ஏற்பட்ட பிணக்கை மன்னர் தீர்த்தயை முறை ஓலைச் சுவடி ஒன்று கூறுகிறது (R.Nagaswamy, Studies in Ancient Tamil Law and Society, pp.90-97). மதுரை நாயக்கர் கால ஓலை ஆவணமாகத் திருநாராயணபுரம் ஓலைச்சுவடி கிடைத்துள்ளது. இவ்வோலைச் சுவடியில் விசயநகர மன்னர்களைப் புகழ்பாடும் வாசகங்களும், விசயநகர மன்னர் பெயர்களும், மதுரை நாயக்கர் அரசு வரிசைமுறையும் குறிப்பிடப் பட்டுள்ளன. இச்சுவடி விசயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் திருநாராயணபுரம் ஸ்ரீவேதநாயகி சமேத வேதநாராயண சுவாமிக்குத் திருவிளையாட்டம் வழிபாட்டிற்காகப் பூதானம் (நிலதானம்) அளிக்கப் பட்டதை விவரிக்கிறது. மேலும் ஓலையின் இறுதி ‘ஸ்ரீவிசைய ரெங்க கிருஷ்ணமுத்தி வீரசொக்கனாத நாயக்கர் கையியெளுத்து’ விஷ்ணுபுராண வசனம் ஆகியன எழுதப்பட்டுள்ளது. நிலங்கள் நஞ்சை, புஞ்சை, நத்தம், படுகை, காடு, திட்டு திடல், தரிசு ஆகிய பெயர்களில் அழைக்கப்பட்டதை,

செந்த நஞ்சை புஞ்சை நத்தம் படுகை திட்டுதிடல் மாவடை
மரவடை சிலதொரு பாசாணம்

(தென்னிந்தியக் கோயிற் சாசனங்கள், பாகம்-1, எண்.799)

என்ற திருநாராயணபுரம் ஓலைச்சுவடிக் குறிப்பைக் கொண்டு அறியமுடிகிறது.

அதலைக் கிராமம் எஸ்.வி.பி.நடராசன் அவர்களிடம் உள்ள சுவடியில் மதுரை விசயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் கட்டையன் என்பவனை ஏல முறையில் அடிமையாக விற்பனைச் செய்ததை குறிப்பிடுகிறது (ஆவணம், இதழ்-18, ப.122) தைலர் வரலாற்றுச் சுவடி, நாயக்க மன்னர்கள் சிவன், திருமால் கோயில்களில் தொண்ணூற்றாறு கோபுரம் திருப்பணி செய்ததையும் மதுரையில் தெப்பகுளம், புதுமண்டபம் ஆகியவற்றைக் கட்டியதையும் தளவாய் இராமப்பய்யன் இராமநாதபுரம் சேதுபதிகளிடம் சண்டை செய்ததையும் விவரிக்கிறது (எஸ்.வையாபுரிப்பிள்ளை, சிற்றிலக்கியத் திரட்டு, ப.866). முதலியார் ஓலை ஆவணம் திருமலை நாயக்கர் காலத்தில் மணக்குடி, பெரும்பற்று நாட்டார்களுக்குப் பாசன மேல்வாரம் வழங்கத் தென்வீதி நாட்டார்கள் நீட்டு (ஆவணம்) எழுதிக்கொடுத்ததைத் தெரிவிக்கிறது (எஸ்.வையாபுரிப்பிள்ளை, சிற்றிலக்கியத் திரட்டு, ப.870).

ஏலமுறையில் அடிமை விற்பனை

ஊரில் பலர் முன்னிலையில் பொதுவாக ஏலம்விட்டு நிலத்தையோ, பொருளையோ விற்பனை செய்யும் முறையைக் கல்வெட்டில் காணலாம். மனிதனை விலைபேசி விற்று அதற்காக எழுதிப் பதிவு செய்யும் ஆவணங்கள் ஆள் ஓலை, ஆள்விலைப் பிரமாணம் என்று குறிப்பிடப்படுகின்றன. ஓர் அடிமையை ஏலத்தின் மூலம் விற்பனை செய்தமை மதுரை அதலைக் கிராமத்தில் கிடைத்த ஓலைச் சுவடியில் பதிவாகியுள்ளது.

மதுரை மாவட்டம், வாடிப்பட்டி வட்டம் அதலைக் கிராமம் எஸ்.வி.பி.நடராசன் அவர்களிடம் உள்ள சுவடியில் மதுரை விசயரங்க சொக்கநாத நாயக்கர் காலத்தில் அதலைக் கிராமத்தில் இருந்த காவல்கார மணியன் வீரணன் சேர்வைக்காரன் மகன் சுப்பிரமணிய சேர்வைக்காரனுக்கு அதே ஊரிலிருக்கும் தீண்டப்படாத இனத்தைச் சேர்ந்த பறைவயிரன் மகன் கட்டையன் என்பவன் மகனான பெரியகருப்பனை அடிமையாக ஏல விற்பனை மூலம் விலை கூற, அதற்கு விலையாகக் கலியுக ராமன் புதுமின்னல் பணம் முப்பது, ஊசி கிரந்தம் பணம் ஒன்று ஆக முப்பத்தொரு பணம் பெற்றுக்கொண்டு

பெரியகருப்பனை அடிமை சாசன முறி எழுதிக் கொடுத்துள்ளனர். ஏல விற்பனையின் போது இருந்த நாட்டாண்மை, சாட்சிகள் போன்றோர் பெயர்கள் ஓலை ஆவணத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதை,

> ஸ்ரீமுக வருசம் ஆவணி மாதம் 23ந் தேதி அதனை யிலிருக்கும் காவல்கார மணியன் சேருவைக்காரன் மகன் குமார யிருளப்ப சேறுவைக்காரன் மேற்படி குமாரன் முத்திருளாண்டி சேருவைகாறன் மேற்படி குமாரன் சோனை சேருவைகாரன் மேற்படி குமாரன் வீரணன் சேருவைகாரன் மகன் சுப்பிரமணியன் சேருவை காறனுக்கு மேற்படி யூரிலிருக்கும் தீண்டாதாரில் பறைவயிரன் மகன் வயிறன் மேற்படி மகன் கட்டையனேன் அடிமைவிலைக் கிரைய சாதனமெழுதிக் குடுத்தபடி அடிமைவிலைக் கிரைய சாதனமாவது யென்மகன் பெரியகருப்பனை அடுமைவிலைக் கிரையமாகக் கொள்வாராரோ வென்று நான் முற்கூற அவர்கள் கொற்வதற்கிசைந்து கொள்வோமென்று பிற்கூற எமக்கிசைந்த எதிர்மொழி மொழிந்து மறுமொழிகேட்டு உறுமொழி பேசி தம்மில் பொருந்திய அதனை மகாணக்கோன் மகன் வெங்கணக்கோன் நாட்டாண்மை ராமலிங்கம் பிள்ளை மகன் சங்கறநாயகம் பிள்ளை தச்சவீரபுத்திரனாசாரி பட்டகுறிச்சி நாட்டாமை குறடிக்குடும்பன் ராயக்குடும்பன் அளைமடைச் சவுரிக்குடும்பன் தோட்டி கட்டையன் மகன் நொண்டிச் சாம்பான் வலைவீசி அடைச்சான் வயிரன் முன்பாக கரைஏற்றி நிற்செயித்து அன்னடகம் விளங்கும் கலியுக ராமன் புதுமின்னல் பணம் 30 ஊசி கிரந்தம் பணம் ஒண்ணு ஆக பணம் முப்பத்தொரு பணமும் காட்டி ஏற்றி கயிலறப் பற்றிக் கொண்டபடியினாலே விலை தீர்த்து விலை பிரமாணம் செய்து குடுத்தேன். கட்டையன் மகன் பெரிய கறுப்பனை விலைப்பிரமாணமாய் அடுமை சாதனமுறி எழுதிக் குடுத்தேன் கல்லுங்காவேரியும் புல்லும் பூமியும் உள்ளவரை சந்திர சூரிய பிரமையுள்ள வரைக்கும் ஆண்டு அனுபவித்து கொள்வாராகவும் யிப்படிகி ஆண்டு கொண்டு மக்கன் சீதனம் விக்கவிலை செய்து கொள்ளச் சொந்த அடிமையாக ஆண்டனுபவித்து கொள்வார்களாகவுமென்று என்ராசியினாலே வீறணன்

சேருவைகாரன் மகன் சுப்பிரமணியன் சேருவைக்
காரனுக்கு அடுமை விலைகிரைய சாதனம் எழுதிக்
குடுத்தேன் வயிரன் சாம்பான் மகன்
கட்டையனேன்யிதுக்கு சாட்சி நாட்டாண்மை சங்கர
நாயகம் பிள்ளை வெங்கணிக்கோன் கணக்குச்
சுப்பிரமணிய பிள்ளை தச்ச வீரபத்திரனாசாரி மண்டைச்
சவுரிக் குடும்பன் தோட்டி கட்டையன் மகன் நொண்டி
பட்டகுறிச்சி நாட்டாமை ராயக் குடும்பன்
குரழசக்குடும்பன் பாப்பாகுடி தோட்டி தேத்தான் மகன்
சங்கிலி யிவர்களறிய எழுதினது உடந்தைக்குளம்
நாட்டாண்மை அழகியசிங்க யிந்தப்படிக்கி தற்குறி
கட்டையன் அதனை நாட்டாண்மை சங்கரநாயகம் சாட்சி
அறிவேன் வெங்கணக்கோன் சாட்சி அரிவேன் கோணல்
அழகப்ப ஆசாரி சாட்சி அரிவேன் தோட்டி காவணன்
மகன் அடைக்கன் சாட்சி அரிவேன் தச்சமுகனாசாரி

(ஆவணம், இதழ்-18, பக்.122-124)

அதில் காவல்காரன் மணியன் சேர்வைக்காரன், குமார இருளப்ப சேர்வைக்காரன், முத்திருளாண்டி சேர்வைக்காரன், சோணை சேர்வைக்காரன், வீரணன் சேர்வைக்காரன், சுப்பிரமணியன் சேர்வைக்காரன் ஆகிய உறவுமுறையினர் பெயர்கள் எழுதப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

பொன்னோலை ஆவணம்

தஞ்சை இரகுநாத நாயக்கரின் பொன்னோலை ஆவணம் ஒன்று கோபன்ஹேகன் (ஹாலந்து) ஆவணக் காப்பகத்தில் இருப்பதை இரா.நாகசாமி கண்டறிந்தார். இரகுநாத நாயக்கர் டென்மார்க் மன்னர் நான்காம் கிருஸ்டியன் (Christian-IV) என்பவருக்கு எழுதிய நட்புறவுக் கடிதம் பனையோலை போன்ற வடிவமைப்பில் அமைந்த பொன்னாலான நீண்ட தகட்டில் தமிழில் எழுதப்பட்டுள்ளது. இக்கடிதத்துடன் இரண்டு பீதாம்பரம், புருசூர் துப்பட்டி ஒன்று, படாங்க பச்சவடம் இரண்டு எழுத்துப்பட்டி நான்கு, சமதாடு இரண்டு, தோப்பாகத்தி ஒன்று சிங்க உருவம் உள்ள கட்டாரி ஒன்று, சூகக்கடாரி ஒன்று, சிங்கரம் நாலு ஆகிய பொருட்களை அன்பளிப்பாக அனுப்பப்பட்டுள்ளதை,

தரங்காம்பாடி என்று ஒரு கரதுறையும் கட்டளை இட்டு அந்த தேசத்துக்கு மிளகு அலப்பமான படியாலே மிளகு கொண்டு குடுப்பிச்சு ரூலங்கலப்பை கற்பித்தாரை பறங்கியற் சில்லரை பண்ணினதுக்கு அவர்களுக்குத் தக்க புத்தி சொல்லிவித்து பன்னீராயிரம் பொன் அவராதம் வாங்கி தங்கள் வகை கப்பல் வழி போகவேண்டாம் என்று கட்டளை

இட்டு சென்னரலை அனுப்பி ரூலங்கலப்பை கற்பித்தாரை இங்கு தலமாக குடி இருக்கத் தக்கதாக கட்டளை இட்டபடியாலே அவர் இங்கே தலமாக இருக்கிறார் அந்த தேசம் என்றும் இட்டு அனுப்பி அந்த தேசத்தில் உண்டான அபூறுவமான வஸ்துக்களும் அடிக்கடி எற்றி வித்து அனுப்பும்படி செய்யவும் இப்போ உடுகரை பேதமற நடக்கவேணும் ஆனபடியாலே அந்த தேசத்தாரை இங்கே வந்து முடி இருக்கத் தக்கதாகவும் பெரிய பீதாம்பரம் இரண்டும் புருசா் துப்பட்டி ஒன்றும் படாங்கப் பச்சவடம் இரண்டும் எழுத்து துப்பட்டி நாலும் கட்டுவித்து சமதாடு இரண்டும் தோப்பாகத்தி ஒன்றும் சிககடாரி ஒன்றும் சூகக் கடாரி ஒன்றும் சிங்கரம் நாலும் அனுப்பினோம் வரப்பாத்துக் கொள்ளும்படி செய்யவும் இந்தச்சேதி காரியப் பேர் தின்மார்க் ராசாவினவர்களுக்கு அறிக்கை செய்யவும் உ (ஸ்ரீரகுனாத -என்று தெலுங்கில் கையொப்ப மிடப்பட்டபட்டுள்ளது (R.Nagaswamy, Tarangampadi, pp.21-22).

தெலுங்கில் எழுதப்பட்ட வெள்ளி ஏடு ஒன்று விசயராகவ நாயக்கர் காலத்தில் நாகப்பட்டினத்தை டச்சுக்காரர்களின் வணிகக் களமாக மாற்றி கி.பி.1658 ஆம் ஆண்டு 29ஆம் நாள் ஒப்பந்தம் எழுதிக் கையொப்பமிட்டுக் கொடுத்ததைத் தெரிவிக்கிறது (The Nagapatam grant from the Batavia Museum, K.A.Nilakandha Sastry, M.A., Proceeding of the Indian Historical Recards Commission, Vol.XIV,Art.39,p.42,1937)

ஆவணங்களின் தன்மை

ஆவணங்கள் எழுதுவோரால் ஏற்படும் பிழைகள் மலிந்தும், கொச்சைச் சொற்களும், பேச்சு நடையும், வட்டார வழக்குச் சொற்களும், குறியீட்டுச் சொற்களும் கலந்தும் காணப்படுகின்றன. எழுத்துக்கள் ஒன்றோ டொன்று பின்னிப்பிணைந்து வீச்செழுத்தாகவும் சுருக்கெழுத்துக்களும் குறியீடுகளும் கலந்து எழுதப்பெற்றுள்ளன. குறில், நெடில் வேறுபாடு இன்றியும், மெய்கள் புள்ளி இல்லாமலும் ர, ா், ர ஆகியவை ஒரே மாதிரியாக எழுதப்பட்டும் ந - ண, ன - ல, ள - ழ, ர-ற வேறுபாடு இன்றியும் க, சு, த, தம்முள் மயங்கியும் காணப்படுகின்றன. நாயக்கா் காலத்தில் கிடைக்கப்பெற்ற ஆவணங்கள் அனைத்தும் ஒரு பொதுத் தன்மையைப் பெற்றிருந்தன என்று கூறமுடியாது. ஆவணங்கள் இடம், பொருள், அரசியல், காலம் ஆகிய நிலைகளில் மாறுபட்டுக் காணப்படு கின்றன. ஒவ்வொரு காலத்திலும் நிலவி வந்த அரசியல், சமுதாயம், பொருளாதாரச் சூழல் ஆகியன ஆவணங்களின் தன்மைகளை மாற்றி அமைத்தன. கல்வெட்டுகள், செப்பேடுகள், ஓலைச் சுவடிகள் ஆகியன வற்றில் சில ஒற்றுமைகள் இருந்தாலும் பல கூறுகள் வேறுபட்டே காணப்படுகின்றன.

சுவடி நாடகப் பதிப்பு

பா. மனோன்மணி

சுவடி வகைகளுள் ஒன்றான அரிய கையெழுத்துச் சுவடியின் நாடகப் பதிப்பு குறித்தும், அதன் பயன் மற்றும் தேவை குறித்தும் இக்கட்டுரை ஆராய்கிறது.

உலகச் சுவடி வரலாற்றில் ஓட்டுச் சுவடி, எலும்புச் சுவடி, மூங்கிற் சுவடி எனப் பலவகைச் சுவடிகள் பழமையுடையதாகக் கண்டெடுக்கப்பட்டு உலக அருங்காட்சியகங்களில் பாதுகாக்கப்பட்டுவருகின்றன. அவ்வகையில் தமிழகத்தின் சுவடிப் பயன்பாட்டின் பழமையை இலக்கியங்களே முன்னிறுத்துகின்றன. தாழம் பூவின் தோட்டில் பித்திகையின் முகையாகிய எழுத்தாணி கொண்டு செம்பஞ்சுக் குழம்பில் தோய்த்து எழுதப்பட்ட மடலை இளங்கோவடிகள் குறிப்பிடுகிறார். தாமரை இலையின் பின்புறத்தில் நகத்தால் கீறி, தன் காதல் உணர்வை வெளிப்படுத்துவாள் சகுந்தலை. "பூவா ரடிச்சுவடு என்மேல் பொறித்துவை" என்று சிவபெருமானிடம் வேண்டி நிற்பார் திருநாவுக்கரசர். நூலகத்தைச் "சுவடிச்சாலை" என்று அழைப்பார் பாரதிதாசன். இவையாவும் கருத்துப் பரிமாற்றத்திற்காகக் காலந் தோறும் இருந்து வரும் சுவடிப் பதிப்பின் பழமையையும் வளர்ச்சி முறையினையும் விளக்கும் சொல்லாடல்கள் என்பது புலனாகும். அவ்வகையில் பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்திலிருந்துதான் இன்று பதிப்பிற்குப் பயன்படுத்தப்பட்டு வரும் காகிதத்தின் பயன்பாடு தமிழகத்தில் பரவலாகப் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இந்நிலையில் 1823 முதல் 1874 வரை வாழ்ந்து விவாதத்திற்கு உட்பட்டு வெற்றி கண்ட உன்னதப் படைப்பான திருவருட்பாவை நல்கிய இராமலிங்க அடிகள் நான்கு திருமுறைகளை ஓலைச்சுவடியிலும், இரண்டு திருமுறைகளைக் காகிதச் சுவடியிலும் எழுதியதாகக் "சுவடி ஆய்வு நெறிமுறைகள்"(ப.4) எனும் நூலில் குறிப்பிடுவார் ம.சா.அறிவுடைநம்பி. இது இலக்கியப் படைப்புகள் ஓலைச்சுவடியிலிருந்து காகிதச் சுவடிக்கு மாறிய வரலாற்றுக்கால நிகழ்வினைப் பறைசாற்றுவதாகும்.

பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதி முதல் பலரும் தமது படைப்புகளைக் காகிதங்களின் வழிப் படைத்து வருகின்றனர். அவ் வகையில் கைகளால் காகிதத்தில் எழுதப்பட்ட பழம்(தொடக்க கால) படைப்புகள் அடங்கிய சுவடிகளைத்தான் 'காகிதச்சுவடி' என்று குறிப்பிடுவர். காகிதச் சுவடியின் தொடக்க காலப் படைப்புகளைப் பாதுகாக்கும் முயற்சியின் ஒரு பகுதியாகத் தமிழ்ப் பல்கலைக்கழகச் சுவடித்துறையில் அரிய கையெழுத்துச் சுவடிகளைக் கள ஆய்வின் மூலம் சேகரித்துப் பாதுகாத்து வருகிறது.

சுவடித்துறை எனும் தனித்துறை தமிழகத்தில் பல இடங்களிலும் உள்ள நிலையில் அரிய கையெழுத்துச் சுவடித் துறை தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் மட்டுமே உள்ளது குறிப்பிட வேண்டிய ஒன்று. காகிதச் சுவடிகளை மீட்டெடுக்கும் முயற்சியில் இப்பல்கலைக்கழகம் செய்த பணி போற்றுதற்குரியது. பலர் தானாகவே முன்வந்தும், பேராசிரியர்களால் கள ஆய்வு மேற்கொள்ளப்பட்டும் இப்பல்கலைக்கழகத்தில் பல அரிய பனை ஓலைச் சுவடிகள், கையெழுத்துச்சுவடிகள், கையடக்க நோட்டுச்சுவடிகள், கடிதங்கள், பஞ்சாங்கம் எனப் பல தரப்பட்ட சுவடிகள் சேகரிக்கப்பட்டுள்ளன. இதில் மதுரை மாவட்டம் வேம்பத்தூரைச் சார்ந்த பா.தியாகராசன் "அக்கோயிலில் தம்மிடம் உள்ள சுவடிகளைத் துணி மூட்டையில் கட்டி இறைவன் திருமுன்னர் வைத்தார். ஊரிலுள்ள பெரியவர்களை யெல்லாம் வரவழைத்து எல்லார் முன்னிலையிலும் சிறப்பு வழிபாடு செய்து அச்சுவடிகளை வழங்கினார்"(ப.142) என்று களப்பணியாளர் ம.சா.அறிவுடைநம்பி "சுவடி ஆய்வு நெறிமுறைகள்" எனும் நூலில் குறிப்பிடுவதன் வழி சுவடிகளை வழங்குவதில் தகவலாளிகளின் அர்ப்பணிப்புத்திறன் எத்தகையதாக இருந்தது என்பதை அறிந்து கொள்ளமுடிகிறது.

சேகரித்ததைச் சேகரித்த வண்ணம் விட்டிடாது அவற்றைப் பாதுகாக்கும் பணியும் பதிப்பிக்கும் பணியும் இப்பல்கலைக்கழகத்தால் சிலகாலம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இதில் அரிய கையெழுத்துச்சவடித் துறை கையெழுத்துச் சுவடிகளைப் பாதுகாப்பதற்கு மேற்கொண்ட உத்தி வித்தியாசமானதும், மாணவர்கள் பழமையை அறிந்து கொள்ளச் செய்வதுமாக அமைந்திருந்தது. அஃதாவது ஆய்வியல் நிறைஞர் பட்டத்திற்காகப் பயிலும் மாணவர்கள் பட்டப்படிப்பின் ஒரு பகுதியாக ஆய்வேட்டினை எழுதிச் சமர்ப்பிக்க வேண்டும் எனும் நிலையில் அப்பொழுது துறைத்தலைவராக இருந்த ம.சா.அறிவுடைநம்பியின் அறிவுரையின் கீழ் சில ஆய்வாளர்கள் சில காகிதப்பிரதியில் அழியும் நிலையிலிருந்த நாடகங்களைப் படியெடுத்து ஆய்வாகச் சமர்ப்பித்துள்ளனர். இது பழமையைப் பாதுகாக்கும் முயற்சிகளில் ஒரு பகுதி. இவ்வாறு செய்வதன் வழி அறிவியல் ஆய்வுகளைப்போல் இதுவும் பதிப்பிப்பது எப்படி? என்பதைச் செய்முறைக்கு உட்படுத்தி அறிந்துகொள்ள வாய்ப்பளிக்கும் ஆய்வாக அமைந்திருந்ததும் விளங்கிக் கொள்ள முடிகிறது.

சுவடிகளைக் காகிதத்தில் எழுத்தாக்கும் முயற்சி பதினெட்டாம் நூற்றாண்டிலேயே தொடங்கப்பட்டதாயினும் சுவடிப்பிரதிகள் யாவையும் புதுவதாகப் பதிப்பிக்கும் முயற்சி இன்னும் முற்றுப் பெறவில்லை என்றே சொல்லவேண்டும். ஏனெனில் பதிப்புத்துறை என்பது பல்வேறு வடிவங்களில் தொடர்ந்து நிகழும் ஒரு நிகழ்துறை. இதன் பணி ஓயாது. அவ்வகையில் தமிழ்ப்பல்கலைக்கழகத்தில் சேகரித்து வைக்கப்பட்டுள்ள சில சுவடிகளே ஆய்வாளர்களால் பதிப்பிக்கப்பட்டுள்ளதும், பல சுவடிகள் பதிப்பிக்காமல்

கிடப்பிலேயே உள்ளதும் குறிப்பிட வேண்டிய ஒன்று. பாதுகாப்புக்கருதி ஒப்படைக்கப்பட்டவை புதுவதாகப் பதிப்பிக்கப்படாமல் அழிய நேரிடின் அச்சுவடிகளைக் கொடுத்தவர்களின் நோக்கம் பயனற்றதாகும்.

அவ்வகையில் 1999-2006ஆம் ஆண்டு வரை பத்திற்கும் மேற்பட்ட ஆய்வாளர்களால் இருபதிற்கும் மேற்பட்ட கையெழுத்துச்சுவடி நாடகங்கள் பதிப்பிக்கப்பட்டுள்ளன. ஒவ்வொரு ஆய்வாளரும் இரண்டு இரண்டு காகிதச் சுவடி நாடகங்களைப் படியெடுத்து உரிய முறையில் பதிப்பித்துள்ளனர். இவ்வாறு ஆய்வாளர்கள் வழி பதிப்பிக்கப்பட்டு சிறப்பாக இயங்கி வந்த இத்துறை சில காலங்களிலே நின்றுவிட்டது. இன்று அரிய கையெழுத்துச் சுவடித்துறை எனும் தனித்துறை இப்பல்கலைக்கழகத்தில் உயிரற்ற நிலையில் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கதும் இழப்பிற்குரியதுமாகும்.

கோட்பாட்டடிப்படையில் ஆய்வுகள் நிகழ்ந்து வரும் இன்றைய சூழலில் தமிழ் மொழிக்குள் புதைந்து கிடக்கும் அழியும் நிலையில் உள்ள சுவடிப் படைப்புகளை மீட்டெடுப்பதும் இன்றைய தேவையாகிறது. அவை ஆய்வேடுகளாகப் பட்டத்திற்கு ஒப்புவிக்கும் நிலையில் ஆய்வுலகின் ஒரு கூறாகப் பதிப்புத்துறையைக் கருதுவதற்கும் வாய்ப்பினை ஏற்படுத்துகிறது. மீட்டெடுக்கப்பட்ட படைப்புகளின் முக்கியத்தவத்தை மீட்டெடுக்கப்பட்ட நாடகப் படைப்புகளின் பொருண்மைகளை ஆராய்வதன் வழியே அதன் அடிப்படைத் தேவைகளைத் தெற்றென விளங்கிக் கொள்ளமுடியும். ஆய்வின் வழியாகவோ பிற முயற்சிகளின் வழியாகவோ மூலத்தில் உள்ள பிரதிகளைப் பதிப்பிக்கப்பெற்ற படைப்பாக உயிர்ப்புறச் செய்வது மறைந்த கலைஞர்களுக்கு மதிப்பூட்டுவதாக அமையும். அதுமட்டுமன்றி ஊடகத்தின் வழி பொருளாதாரத்தை மையமிட்டு இன்று இயங்கி வரும் நாடகத்துறையின், முன்னோடிகளாய், பொருள் நோக்கமின்றி மக்களின் அக மகிழ்ச்சியை மட்டுமே கருத்தில் கொண்டு நாடகங்கள் பல நிகழ்த்தி வறுமையிலேயே வாழ்ந்து விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்டு ஒதுக்கப்பட்ட(மறைந்து போன) படைப்பாளர்களையும் படைப்புகளையும் இதன் வழி வெளிக்கொணரமுடியும்.

இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலகட்டத்தில் நாடகத்துறையில் சிறந்து விளங்கியவர் அவ்வை.தி.க.சண்முகம். இக்கலையின் முக்கியத்துவம் குறித்து இவர் கூறும் வரையறை கவனிக்கத்தக்கதாகும். "நாடகம் கலைக்கரசு; நாட்டின் நாகரிகக் கண்ணாடி; பாமரர்களின் பல்கலைக்கழகம். உணர்ச்சியைத் தூண்டிவிட்டு, உள்ளத்தில் புதைந்து கிடக்கும் அன்பையும் அறிவையும் தூய்மையையும் வெளிப்படுத்தி, மக்களைப் பண்படுத்தும் மகத்தான கலை"(ப.15) என்பது இவர்தம் கூற்று. மேலும், "நாட்டை அகத்தில் கொண்டது நாடகம். அதாவது, நாட்டின் சென்ற காலத்தையும் நிகழ்காலத்தையும் வருங்காலத்தையும் தன் அகத்தே காட்டுவதால் நாடு-அகம் - நாடகம் என்று பெயர் பெற்றிருக்கிறது. நாடு-அகம். அதாவது அகம்-நாடு: உன்னுள் நோக்கு: உன்னை யுணர்: அகத்தை நாடு, என்றெல்லாம் பலவிதமாக

அறிஞர்கள் இதற்குப் பொருள் கூறுவார்கள். சுருக்கமாகச் சொல்லவேண்டுமானால் நாடகம் 'உலக நிகழ்ச்சிகளைக் காட்டும் கண்ணாடி' என்பது முற்றிலும் பொருந்தும்''(ப.15) என்று இவர் கூறுவது நாடகத்தின் செம்மாந்த நிலையை அறிந்து கொள்ளத்துணை நிற்பதாகிறது.

நாடகசாலையை யொத்த நல்ல கலாசாலை
யொன்று நீடுலகில் உண்டோ நிகழ்த்து

என்று நாடகக் கலையின் வளர்ச்சிக்கு ஊக்கம் தரும் அடிகளைப் பாடுவார் கவிமணி தேசிகவிநாயகம் பிள்ளை.

கண்டு மகிழும் நாடகங்கள் இலக்கிய வடிவான நூல் வடிவில் எழுதப்பட்டாலும், அவற்றையும் 'காட்சி நூல்கள்' என்றே அறிஞர்கள் குறிப்பிடுகின்றனர். அவ்வகையில் படிக்க எழுதப்பட்ட முதல் நாடக நூலாக மனோன்மணீயம் சிறந்து விளங்குகிறது. இது படிப்பதற்கான நாடகம், இது நடிப்பதற்கான நாடகம் என எழுதப்பட்ட வழக்காறு இடைக்காலத்தில் சுந்தரம்பிள்ளையின் காலகட்டத்தில் தோன்றிய ஒன்று. இவரைத் தொடர்ந்து நடிப்பதற்கு மட்டுமன்றிப் படிப்பதற்கெனவும் நாடக நூல்களை எழுதத் தொடங்கினர். எந்த ஒரு நாடகப் பிரதியும் நடிக்கப்படும் பொழுதே அது முழுமை பெறும் என்பது அறிஞர்களின் வாதம். அவ்வகையில் படிப்பதற்கென எழுதப்படும் நாடகங்கள் நடிக்கும் நாடகத்தினின்று விலகி நிற்பதாகக் கருதப்படுவது இயல்பு. பாரதிதாசனின் பிசிராந்தையார், பாரதியின் பாஞ்சாலிசபதம், இன்குலாபின் ஔவை போன்றவை படைக்கப்பட்ட நாடகங்களாயினும் இன்று பல மேடைகளில் நடிக்கப்பட்டு வருவது குறிப்பிடத்தக்கது.

நாடகங்கள் தொடக்க காலகட்டத்தில் செய்யுள் நடையில் எழுதத்தொடங்கி இன்று உரை நடையிலும் எழுதப்பட்டு வருகின்றன. உரைநடை கலந்து எழுதும் மரபு இன்று தோன்றிய ஒன்று அல்ல. சிலப்பதிகாரக் காலம் முதலே இருந்துவரும் வழக்கு. அவ்வகையில் தற்கால ஆசிரியர்களுள் சிலர் நாடகங்களைச் செய்யுள் வடிவில் படைத்துள்ளது குறிப்பிடத்தக்கது. குறிப்பாகப் புலவர் பழனியின் 'அனிச்ச அடி', கரந்தைப் புலவரும் பேராசிரியருமான பாலசுந்தரனாரின் 'புலவர் உள்ளம்', 'புரவலர் உள்ளம்', 'வேள்வி எவ்வி' போன்றன செய்யுள் வடிவில் எழுதப்பட்டு படிக்கவும் மேடையில் நடிக்கவும் ஏற்றவகையில் உள்ளதாகச் சுட்டுவார் அ.தட்சிணாமூர்த்தி. எனவே நாடகத்தினைப் புரிந்து கொள்வதற்கு எவ்வகை நடையும் பொருந்துவதாகும் என்பது இங்குப் பெறப்படுகிறது. இவற்றைத் தொடர்ந்து காகிதச்சுவடியாகக் கிடைத்துள்ள நாடகங்கள் 24, கீர்த்தனைச் சுவடி ஒன்று, பாடல் ஒன்று, பையடக்க நோட்டு அளவிலுள்ள காகிதச்சுவடிகள் 26 எனத் தமிழ்ப் பல்கலைக்கழக அரிய கையெழுத்துச் சுவடித்துறையில் பல சுவடிகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

ஆய்வாளர்களால் பதிப்பிக்கப்பட்ட நாடகத்தின் ஆசிரியர் வி.வை.துரைசாமி பத்தர் ஆவார். இவரது மகன் துரைபாவாடைசாமியின்

நாடகங்களும் கையெழுத்துச் சுவடித்துறையில் உள்ளது. வி.வை.துரைசாமி பத்தர் தம் நாடகத்தை வசனம், செய்யுள், பேச்சு வழக்கு என்ற நிலையில் படைத்துள்ளார். அதுமட்டுமன்றி இவர் எழுதிய ரேணுகை சரிதம் எனும் நாடகம் நடிப்பதற்காகவன்றிப் பாடுவதற்கும் படிப்பதற்கும் எழுதப்பட்டுள்ளது. இதனை இந்நாடகத்தின் முடிவில் ஆசிரியர் "மாரியம்மன் சரித்திறத்தை திருவதியில் வாழும் வன்யகுல சிரோன்மணியாகிய தாண்டவறாய பூசி கவியார் பாடினார் யிந்தக் கதையை படித்த பேரும் கேட்ட பேரும் சாலோக சாமீப சாயுச்சிய மென்னும் நாலாம் பதம் சேர்த்து வாழக் கடவது"(ப.188) என்று குறிப்பிடுவதன் வழி அறியமுடிகிறது. எனவே ஒரு நாடகம் என்பது பத்தொன்பதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் பொது இடங்களில் நடிப்பதற்கு மட்டுமன்றிப் படிப்பதற்கும், பாடுவதற்கும் படைக்கப்பட்டதை வி.வை. துரைசாமிபத்தரின் படைப்பின் வழி அறிந்துகொள்ள முடிகிறது.

என்று பிறந்தது என்று வரையறுத்துச் சொல்ல முடியாத அளவிற்குக் காலப் பழமையுடைய கலை, நாடகக் கலை. "தமிழ் நாடக வளர்ச்சியிலே எத்தனையோ பெரியவர்கள் பங்கு பெற்றிருக்கிறார்கள். நாடக இலக்கியம் என்பது படித்துமட்டும் வளரும் இலக்கியமல்ல: கண்களால் பார்த்தும் மகிழக் கூடிய இலக்கியமாகும். எனவே, அச்சிலே வெளிவந்துள்ள நாடக நூல்களின் அளவைக் கொண்டுமட்டும் அதன் வளர்ச்சியைக் கணக்கிட முடியாது. பரம்பரை பரம்பரையாக அரங்கிலே ஆடிவந்துள்ள நாடகங்களின் வளர்ச்சியையும் அளவுகோலாகக் கொண்டு பார்த்தால் நமக்கு உண்மை விளங்கும்" என்று கூறும் அவ்வை. தி.க.சண்முகத்தின் கூற்று சுவடிப் பதிப்பு நாடகத்தின் தேவையை முன்நிறுத்துவதாக இங்கு புரிந்து கொள்ளப்படுகிறது. இதன்வழி ஒருவாறு பரம்பரை பரம்பரையாகக் கூத்து நிகழ்த்தியோரின் வாழ்வையும் படைப்புகளையும் மீட்டெடுத்து நாடகத்துறையின் வளர்ச்சிக்கு மேலும் வித்திடல் வேண்டும் என்பது உறுதிப்படுத்தப்படுகிறது. இவ்வகையில் இரண்டு தலைமுறையாகத் தொடர்ந்து நாடகத்தை நிகழ்த்திய பெருமை வி.வை.துரைசாமி பத்தருக்கும் அவரது மகனார் துரைபாவாடை சாமிக்கும் உரித்தாகும்.

அவ்வகையில் ஆய்வின் வழி பதிப்பிக்கப்பட்ட வி.வை.துரைசாமி பத்தரின் நாடகப் புலமையினையும், அவற்றின் சிறப்புத் தன்மையினையும் இரண்டு ஆய்வாளர்களின் நான்கு நாடகப் பதிப்பின் வழி இப்பகுதி ஆராய்கிறது.

1. வாலி மோக்ஷ நாடகம்
2. ரேணுகை சரித நாடகம் (பதிப்பித்த ஆய்வாளர் - கோவி.ஜெகதீஸ்வரி)
3. கூலிக்குத் தாலி கட்டும் சௌந்தரி கல்யாண நாடகம்
4. பத்தாம் போர் நாடகம் (பதிப்பித்த ஆய்வாளர் – கு.லெனின்)

என்பன ஆய்வாளர்களால் பதிப்பிக்கப்பட்ட நாடக நூல்களுள் நான்கு நூல்கள் ஆகும். இந்நான்கு நாடகங்களையும் எழுதியவர் வி.வை. துரைசாமி பத்தர் ஆவார். "தமிழனுக்கென்று சில பண்புகள் இருக்கின்றன; நாகரிகம் இருக்கிறது; மரபு இருக்கிறது. இவற்றையெல்லாம் ஆழ்ந்து படித்துத் தெரிந்து கொண்ட அறிவாளிகள் தாம் நாடகம் எழுதவேண்டும்"(ப.153) என்று கூறுவார் அவ்வை தி.க.சண்முகம். இக்கூற்றோடு வி.வை.துரைசாமிபத்தரின் படைப்புகளைக் காணும் பொழுது இவர் நாடகத்துறையில் கற்றுத்துறைபோனவர் என்பது விளங்குகிறது. இவர் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இறுதியில் தோன்றி இருபதாம் நூற்றாண்டின் தொடக்க காலம் வரை வாழ்ந்தவர். 1882ஆம் ஆண்டில் பிறந்த இவர் நாடகக் கலைஞராகவும் விளங்கியவர். பல நாடகங்களை இவரே எழுதியும் அவற்றுள் நடித்தும் கலைத் தொண்டாற்றியுள்ளார். 30.06.1914ஆம் ஆண்டில் பிறந்த இவரது மகன் துரைபாவாடைசாமி பத்தரும் தந்தை வழி நாடகங்களை நிகழ்த்தியுள்ளார். இவர் தம் பன்னிரண்டாம் வயது முதல் தெருக்கூத்துக் கலையை நிகழ்த்தியுள்ளார். தனது 69ஆவது வயது வரை நடிகராகவே வாழ்ந்து 23.02.1986 ஆம் ஆண்டில் 72 வயதில் தன் இன்னுயிர் நீத்துள்ளார். இவ்விருவரும் எழுதிய படைப்புகளைத் துரைபாவாடைசாமியின் மகன்களுள் ஒருவரான பா.சிவசண்முகம் என்பவரால் தமிழ்ப்பல்கலைக்கழகத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. அவை வழங்கப்பட்டதற்கான நோக்கப் பின்னணி துன்பியல் தன்மையதாகும். இதனைக் களப்பணி வழி சுவடிகள் யாவற்றையும் பெற்றுவந்த ம.சா.அறிவுடைநம்பி "சுவடி ஆய்வு நெறிமுறைகள்" எனும் நூலில் குறிப்பிட்டுள்ளது அறியத்தக்கது. "தங்கள் இல்லத்தில் உள்ள சுவடிகளைத் தமிழ்ப் பல்கலைக்கழகத்திற்கு அளிக்க முடிவு செய்து துறைக்கு 14.04.1988இல் மடல் எழுதினார். இம்மடலில் வறுமை நிலையில் வாடும் தங்களின் விதவைத் தாய்க்கு உதவும் வகையில் ஏதாவது ஒரு தொகையைக் கொடுத்துச் சுவடிகளை எடுத்துக் கொள்ளும்படி வேண்டியிருந்தார். அதன்படி இவ்விதவைத் தாய்க்கு உதவி செய்யும் நோக்கில் 04.09.1988 அன்று இவர் இல்லத்திற்குக் களப்பணி மேற்கொள்ளப்பட்டது."(ப.145) இவர்கள் கடலூர் வில்வநகரில் திரௌபதி அம்மன் கோயிலின் பின்புறம் ஓலையால் வேய்ந்த குடிசையில் குடியிருந்துள்ளனர். இங்கு பா.சிவசண்முகம் அவர்களால் 6 ஓலைச்சுவடிகள், 57 அச்சு நூல்கள், 26 பஞ்சாங்கம், 125 காகிதச்சுவடிகள், துரைபாவாடைசாமியின் உருவப்படம் போன்றவை பா.சிவசண்முகத்தால் கொடுக்கப்பட்டுள்ளது.

வி.வை.துரைசாமி பத்தர் எழுதிய நாடகத்தின் புற வடிவத்தின் தன்மை குறித்து இனி ஆராயப்படுகிறது. 'துரைசாமி பத்தர் எழுதிய நாடகங்கள் நான்கும் 21 செ.மீ நீளமும் 17 செ.மீ அகலமும் உள்ள காகிதச் சுவடியிலே காணப்படுகிறது. ஒவ்வொரு நாடகமும் சராசரியாகப் பக்கத்திற்கு 15 முதல் 23 வரிகளை உடையனவாக உள்ளன. நான்கு நாடகங்களும் கையெழுத்துப் பிரதிகளாக உள்ளன. ஆசிரியர் சில

இடங்களில் கூட்டெழுத்து முறையைப் பயன்படுத்தியுள்ளார்.' இவையாவும் ஆய்வாளர்கள் தந்துள்ள சுவடிகுறித்த தரவுகளாகும். நான்கு நாடகங்களுள் தனித்தனியாகக் குறிப்பிட வேண்டியத் தரவுகளும் உண்டு. அவை ஆய்வாளர்கள் குறிப்பிட்டுள்ள தரவுகளை அடியொற்றிப் பின்வருமாறு நிரல்படுத்தப்படுகிறது,

1. வாலி மோக்ஷ நாடகம் (பதிப்பித்த ஆய்வாளர் - கோவி.ஜெகதீஸ்வரி)

   இந்நாடகத்தில் சுவடியின் தொடக்கத்தில் தலைப்பை அடுத்து, கணபதி துணை என எழுதப்பட்டுள்ளது. விக்கினர் துதியோடு நாடகம் தொடங்கப்படுகிறது. 'யாப்பின் அடிப்படையி ல் சீர் பிரித்து எழுதவேண்டியுள்ளது. காகிதப்புத்தக வடிவில் அமைந்துள்ளது. நாடகத்தின் எழுதப்பட்ட மொத்தப் பக்கங்கள் 40. நாடகம் முழுமைபெறவில்லை.' எவ்வகை மையினால் எழுதப்பட்டது என்பதை ஆய்வாளர் குறிப்பிடவில்லை. இந்நாடகத்தில் இராமன், சீதை, சூர்ப்பணகை, வாலி, சுக்கிரீவன், அனுமன், தாரை, லெட்சுமணன், இராவணன் என ஒன்பது கதாபாத்திரங்கள் இடம் பெறுகின்றன. இந்நாடகம் முழுமையில்லாததால் எப்பொழுது எழுதப்பட்டது என்ற குறிப்பு கிடைக்கப்பெறவில்லை.

2. ரேணுகை சரித நாடகம் (பதிப்பித்த ஆய்வாளர் - கோவி. ஜெகதீஸ்வரி)

   இந்நாடகச் சுவடியின் தொடக்கத்தில் தலைப்பினை அடுத்து 'உ' எனும் குறியிட்டுத் தொடங்கப்பட்டுள்ளது. 'இதுவும் யாப்பின் அடிப்படையில் சீர் பிரித்து எழுத வேண்டியுள்ளது. காகிதப் புத்தக வடிவில் அமைந்துள்ளது. இந்நாடகத்தின் எழுதப்பட்ட மொத்தப் பக்கங்கள் 33. நாடகம் முழுமையாக உள்ளது.' எவ்வகை மையினால் எழுதப்பட்டது என்பதை ஆய்வாளர் குறிப்பிடவில்லை. செமதக்கினி முனிவர், ரேணுகை, நாரதர், சிவன், பார்வதி, திருமால், லெட்சுமி, பிரம்மன், சரஸ்வதி, பரசுராமன், ரேணுகாம்பாள், காசிராஜன் எனப் பன்னிரண்டு கதாபாத்திரங்கள் இடம்பெறுகின்றன. இந்நாடகம் எழுதிய காலத்தைப் "பரிதாபி இ பங்குனி மீ 21 உ வியாழக்கிழமை யெழிதி முடிவு பெற்றது"(ப.188). என்று ஆசிரியரே சுவடியின் நிறைவில் குறிப்பிடுகிறார்

3. கூலிக்குத் தாலி கட்டும் சௌந்தரி கல்யாண நாடகம் (பதிப்பித்த ஆய்வாளர் – கு.லெனின்)

   சுவடியின் தொடக்கத்தில் 'கடவுள் துணை' என எழுதப்பட்டுள்ளது. வினாயகர் துதியோடு நாடகம் தொடங்குகிறது. தொடங்கும் இந்நாடகத்தின் சுவடி சாதாரண நீலநிற மையினால் ஆசிரியரால் எழுப்பட்டுள்ளது. சுவடி நல்ல நிலையில் உள்ளது. இந்நாடகத்தின் எழுதப்பட்ட மொத்தப் பக்கங்கள் 58. நாடகம் முழுமையாக உள்ளது. நற்குணறாஜன், நாறாயண சாஸ்திரி, ஜெயலெட்சுமி, பாலகுரு சாஸ்திரி, மந்திரி, அன்புஜம், சௌந்தரி, சோமசுந்தரன்

என எட்டுக் கதாபாத்திரங்கள் இந்நாடகத்தில் இடம்பெறுகின்றன. இந்நாடகம் எழுதப்பட்ட காலத்தை “ருத்ரோத்தாரி வருஷம் ஆவணி மீ 2 உ சனிக்கிழமை காலை 8 மணிக்கு எழுதி முடிந்தது” என்று ஆசிரியர் நாடகத்தின் நிறைவில் குறிப்பிடுகிறார். அதுமட்டுமன்றி “இதை எடுத்து வாசித்து பார்த்துவிட்டு கடைசியில் துரைசாமி பத்தர் கையிலே கொடுத்து விடவேண்டியது. அப்படி தவறினால் போலீஸார் வசம் ஒப்பிக்கப்படும்”(ப.147) என்று எச்சரிக்கையும் விடுகிறார். இது நாடகத்தின் பாதுகாப்பு முக்கியத்துவத்தையும், அக் காலத்தில் இக்கலைமீதான திருட்டுத்தனம் மலிந்திருந்ததையும் சுட்டுவதாகிறது.

4. பத்தாம் போர் நாடகம் (பதிப்பித்த ஆய்வாளர் – கு.லெனின்)

சுவடியின் தொடக்கத்தில் ‘இராமஜெயம்’ என எழுதப்பட்டுள்ளது. வினாயகர் துதியோடு நாடகம் தொடங்குகிறது. இந்நாடகத்தின் சுவடி கடுக்காய் மையால் தயாரிக்கப்பட்ட கருப்புமையால் எழுதப்பட்டுள்ளது. சுவடியின் ஒரு சில காகிதங்கள் உடையும் நிலையில் உள்ளது. இந்நாடகத்தின் மொத்தப்பக்கங்கள் 48. ஒரு சில சுவடிகளில் புள்ளி இல்லாமல் உள்ளது. நாடகம் முழுமையாக உள்ளது. துரியோதனன், சகுனி, கர்ணன, வீஷ்மர் அல்லது பீஷ்மர், கங்கை, தருமன், கிருஷ்ணன், துஷ்டத்தாமன், அர்ச்சுனன், சிகண்டி எனப் பத்து கதாப்பாத்திரங்கள் இந்நாடகத்தில் இடம்பெறுகின்றனர். இந்நாடகம் எழுதப்பட்ட காலத்தை “காளத்தி வருஷம் ஆனி 17 உ நாயித்துகிழமை இரவு 9 மணி யெழிதி முடிந்தது” என்று குறிப்பிடுகிறார். இதிலும் மேற்குறிப்பிட்ட நாடகத்தைப் போல்“இதை யெடுத்தவர் வாசித்துப் பார்த்து யாரிடத்தில் யாரிடத்தில் நாடகம் யிருக்க வேண்டியதோ அன்னவரிடத்தில் உடனே கொடுத்து விட்டு மருவேலை பார்க்க வேண்டியது”(ப.198) என்று எச்சரிக்கப்படுகின்றனர். இது போன்று கூறுவன எல்லாம் நாடகத்திற்கான ஓம்படைக்கிளவியாக புரிந்து கொள்ளமுடிகிறது.

இவரது நான்கு நாடகங்களும் கவி, தரு, வசனம் என்ற அமைப்பில் அமைந்துள்ளது. கவி என்பது நான்கு வரி தாளத்தில் அமைந்த இசைப்பாடல்களாகவும், தரு என்பது தொகையறா நிலையில் தாளத்தில் அமையாத இசைப்பாடல்களாகவும், வசனம் என்பது பேச்சு வழக்கிலான உரை நடையிலும் அமைக்கப்பட்டுள்ளன. (இந்நாடகங்களின் நடை அமைப்பை விளக்கியுரைத்தவர் நாடகத்துறைத் தலைவர் கரு.அழ.குணசேகரன் ஆவார்)

இந்நான்கு நாடகங்களையும் எழுதிய வி.வை.துரைசாமி பத்தர், இவை மட்டுமல்லாது மேலும் 24 கையெழுத்துச் சுவடிகளையும், 27 கையடக்க நோட்டு நாடகங்களையும் எழுதியுள்ளார். இவரது படைப்புப்

பட்டியல் மட்டுமல்லாது கிடைத்த அனைத்துக் கையெழுத்துச் சுவடிகளின் பட்டியலையும் ம.சா.அறிவுடைநம்பி தம் "சுவடி ஆய்வு நெறிமுறைகள்" எனும் நூலில் விரிவாகத் தந்துள்ளார்.

நாடகக் கலையின் இமயமாகப் பாராட்டப்படும் சங்கரதாஸ் சுவாமிகள் உள்ளிட்டோர் முதலில் நிகழ்த்தியது அபிமன்யு, பவளக்கொடி, சதியனுசுயா, பிரகலாதன், வள்ளி திருமணம் போன்ற பல புராண நாடகங்கள் என்பது குறிப்பிடற்குரியது. அவ்வகையில் வி.வை.துரைசாமி பத்தரின் காலகட்டத்தில் மேற்குறிப்பிட்ட நாடகங்கள் புராண இதிகாசங்களை அடியொற்றி இருப்பதில் வியப்பொன்றும் இல்லை. இங்கு புராண நாடகங்கள் எழுதுவதற்கான தேவை என்ன என்பது குறித்த வினா எழுவது இயல்பு. இவ்வினாவிற்கு விடையளிக்கும் முகமாக அவ்வை தி.க. சண்முகத்தின் கூற்று அமைகிறது. "புராண இதிகாசங்கள் என்பதற்காகவே நாம் எந்த நாடகக் கதைகளையும் ஒதுக்க வேண்டியதில்லை. அப்படி ஒதுக்கித் தள்ளத் தொடங்குவோமானால் நமக்குப் பழைய சிறப்பென்றோ பெருமையென்றோ சொல்லுவதற்கு ஒன்றும் இல்லாமற் போய்விடும் என்பதைப் பணிவோடு சொல்லிக்கொள்ள விரும்புகிறேன்"(ப.132) என்பது அக்கூற்று. இங்கு புராண இதிகாசக் கதைகள் தொடர்ந்து நடிக்கப்பட முக்கிய காரணமாக அமைவது பழம்பெருமையின் மரபுக் கடத்தலுக்காக என்பது தெளிவு. இங்ஙனம் இவர் கூற மற்றொரு காரணமும் உள்ளது. அது 'புராண இதிகாசக் கதைகளிலே சொல்லப்படும் பேருண்மைகள் அறிவுரைகள் இன்று நடைபெறும் சில முற்போக்கு நாடகங்களிலே கூடக் காணப்படுவதில்லை'(ப.136) என்பதாகும். இருபதாம் நூற்றாண்டின் தொடக்க கால கட்டச்சூழலை மையமாகக் கொண்டு இவர் இக்கூற்றைச் சொல்லியிருப்பினும் இன்றும் புராண, இதிகாச நாடகங்கள் முன்னணி தொலைகாட்சி ஊடகங்களின் வழி புதுப்புது சாதனங்களின் துணைக்கொண்டு பழமையின் வடிவம் மாறாது நாடகமாக ஒளிபரப்புகிறது. இது புராணவகை நாடகங்களின் மறுக்க முடியாத ஆழ்ந்த அறக்கருத்துக்களின் தாக்கத்தின் விளைவால் நிகழ்வதாகும். இராமாயணம், மகாபாரதம் போன்ற மாபெரும் படைப்புகள் இதற்குச் சான்றுபகரும். எனவே மரபுசார்ந்த சூழலில் வளர்ந்த வி.வை.துரைசாமி பத்தரின் மேற்குறிப்பிட்ட நாடகங்கள் மட்டுமன்றி மற்ற நாடகங்களும் புராண இதிகாசங்களை அடியொற்றி எழுதப்பட்டுள்ளதில் வியப்பொன்றும் இல்லை. அதுமட்டுமன்றிச் சான்றுக்கு சுட்டப்பட்ட நாடகங்கள் நான்கும் பேருண்மைகளையும் நல்ல அறிவுரைகளையும் தாங்கி நிற்பது கற்கும் தோறும் புலனாகும். புராணங்களில் சொல்லப்பட்டது போலவே இவர்தம் நாடகங்களை நடிப்பதற்கான, படிப்பதற்கான அமைப்பில் படைத்துள்ளாரே அன்றிப் புதுவதான முயற்சிகளை மேற்கொள்ளவில்லை என்பது குறிப்பிடத் தக்கது. தலைப்பைக் கொண்டே இந்நாடகங்கள் குறிப்பிட விழையும் பேருண்மைகளையும் அறிவுரைகளையும் உணர்ந்து கொள்ள முடியும். நாடகத்துறையில் இவர் செய்த புதுமை காலத்திற்கு ஏற்ப நடிப்பை

வெளிப்படுத்தும் நடையமைப்பாகும். ஆனால் இவர்தம் மகன் துரை பாவடைசாமியின் நாடகங்களிலேயே புதுமைகள் நிகழ்த்தப்பட்டுள்ளமை அறியவேண்டிய ஒன்று.

எனவே இவர்களைப் போன்ற படைப்பாளர்களின் படைப்புகள் மீட்டெடுக்கப்பட வேண்டும். பத்தொன்பதாம் இருபதாம் நூற்றாண்டில் வாழ்ந்து விளிம்பு நிலைக்குத் தள்ளப்பட்ட படைப்புகளையும் படைப்பாளர்களையும் இதனால் உலகிற்கு இணங்காட்ட முடியும். ஒரு குறிப்பிட்ட காலப் படைப்பாளர்களின் இயங்கு நிலையை அறிந்து கொள்ள இதுபோன்ற ஆய்வுகள் துணைநிற்கும். எனவே மேலும் பல அரிய கையெழுத்துச்சுவடிகள் சேகரிக்கப்பட்டும், சேகரிக்கப்பட்டவை பாதுகாக்கப்பட்டும் ஆய்வுகள் நிகழ்த்தப்படுதல் நலமான நாடக வரலாற்றை அறிந்துகொள்ள உறுதுணையாகும் என்பது இக்கட்டுரையின் முடிபாகிறது.

துணைநூல்கள்

1. அறிவுடைநம்பி.ம.சா, சுவடி ஆய்வு நெறிமுறைகள், அ.கிரிஜா (கருமணி பதிப்பகம்), புதுச்சேரி, 2013.
2. அறிவுடைநம்பி.ம.சா, ஏட்டிலக்கியம், கருமணி பதிப்பகம், புதுச்சேரி, 2008.
3. சண்முகம்.தி.க, நாடகக்கலை-1, அவ்வை பதிப்பகம், சென்னை, நான்காம் பதிப்பு 1981.
4. தட்சிணாமூர்த்தி.அ. தமிழர் நாகரிகமும் பண்பாடும், யாழ் வெளியீடு, சென்னை, மறுபதிப்பு 2008.
5. கோவி. ஜெகதீஸ்வரி, "வாலி மோக்ஷ நாடகம், ரேணுகை சரித நாடகம் சுவடிப் பதிப்பு", ஆய்வியல் நிறைஞர் ஆய்வேடு, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2006.
6. கு.லெனின், "கூலிக்குத் தாலி கட்டும் சௌந்தரி கல்யாண நாடகம், பத்தாம் நாள் போர் நாடகம் சுவடிப் பதிப்பு", ஆய்வியல் நிறைஞர் ஆய்வேடு, தமிழ்ப்பல்கலைக்கழகம், தஞ்சாவூர், 2006.

உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம்

சென்னை - 600 113

அண்மை வெளியீடுகள்

அறிஞர்கள் பார்வையில் பேரறிஞர் அண்ணா	
அறிஞர் அண்ணா - மொபசான் சிறுகதைகள் - ஒப்பாய்வு	145.00
இராசேந்திர சோழன் வெளியிட்ட எசாலம் செப்பேடுகள்	160.00
கடலடியில் தமிழர் நாகரிகம்	55.00
படைப்பு நெறிமுறைகள்	55.00
Comparative Studies in Literary Cultures	150.00
Sangam Classics : New Perspectives	100.00
கடற்பொறியியற் கலைச்சொற்கள் (குறுங்கலைக்களஞ்சியம்)	105.00
அரங்கியல் நோக்கில் கபிலர் பாடல்களில் காணலாகும் கதைமாந்தர்கள்	150.00
சங்க இலக்கியத்தில் சமூக ஆய்வுகள்	100.00
தமிழ் வாழ்க்கை வரலாற்றியலக்கியம்	55.00
கவிஞர் குலோத்துங்கனின் மானுடயாத்திரை காவிய வானில் புதிய தாரகை	170.00
தமிழ் நாடக வகையும் வரலாறும்	45.00
வா.செ.கு.என்ற ஆளுமையாளர்	110.00
உ.வே.சா.வின் குறுந்தொகை உரைத்திறன்	50.00
மருதத்தில் மக்கள் வாழ்வியல்	45.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 1 பாயிரம் - 1	40.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 4 எழுத்தியல் - 2	85.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 2 பாயிரம் - 2	140.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 6 உயிரீற்றுப்புணரியல் - 1	75.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 7 உயிரீற்றுப்புணரியல் - 2	125.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 8 மெய்யீற்றுப்புணரியல்	160.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 9 உருப்புணரியல்	160.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 12 வினையியல்	95.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 13 பொதுவியல் - 1	190.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 16 இடைச்சொல்லியல்	140.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 17 உரிச்சொல்லியல்	90.00
நன்னூல் உரைவளம் - தொகுதி - 18 தொல். நன்னூல்	55.00
பண்டைத் தமிழ் எழுத்துக்கள் (ம.ப.)	120.00
வல்லம் புராணம்	65.00
இதழியல் உலகம்	200.00
தமிழும் தமிழ்க் கற்பித்தலும்	120.00
படைப்பிலக்கியம் - விளம்புநிலை மக்கள் ஆய்வுநோக்கு	60.00
பழந்தமிழும் கிளைமொழிகளும்	100.00
உலக மொழிகளில் தமிழ்ச்சொற்களும் இலக்கணச்கூறுகளும்	65.00
அரசகுலச் சான்றோர் வரலாறும் மதுரைக்காஞ்சியும்	85.00
பெயரியல்	115.00
தமிழ் இகலாம் உருவாக்கமும் திருக்குர் ஆன் தமிழ் வாசிப்பும் ஆய்வியல் சிந்தனை	55.00
தலித் அறம்	
பொதுவுடைமை இயக்க இதழ்கள்	
தமிழில் இதழியல்	270.00

T177 R005K

751 சுவடி பதிப்புகளில் உரைவேறுபாடுகள் Rs.140/-